[illegible]

[illegible]

# [illegible]

## [illegible] 6

[illegible]

[illegible]

# கிறிஸ்துவின் வாழ்வு, 6

## டேவிட் ரோப்பர்

ஒப்பீடு

77. நமது கொடுத்தலை இயேசு உற்றுநோக்குகின்றபோது (மாற்கு 12:41-44; லூக், 21:1-14)
78. ““வேளை வந்தது”
(யோவா. 12:20-36, 46-48)
79. ஆயத்தமாகுதல்
(மத் 25:1-46; 26:1-5, 14-20; மாற். 14:1,2, 10-8 ; லூக்.22:1-18, 24-30; யோவா 13:1
80. கர்த்தருக்காக எல்லாவற்றிலும் தங்களை அபாயத்திற்குள்ளாக்குதல்
(மத். 25:14-30)
81. ஒருபோதும் மறக்கக் கூடாத இருவ
(மத். 26:21-29, 31-35; மாற். 14:18-25, 27-31; லூக். 22:19-23, 31-38; யோவா. 13:2-38; 1கொரி. 11:23-26)
82. கடைசி நிமிட ஏற்பாடுகள்
( யோவா. 15:1-12)
83. கர்த்தருக்காக கனிகொடுத்தல்
(யோவா. 15:1-12)
84. யூதேயாவில் உறக்கமின்மை
(மத். 26:30, 36-38; மாற். 14:26, 32-53, 55-65; லூக். 22:39-54, 63-65; யோவா. 18:1-14, 19-24)
85. தோட்டத்தில்
(மத்.26:30, 36-46: மாற்.14:26, 32-42: லூக்.22:39-46: யோவா.18:1, 4, 11)
86. “இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?”
(மத்.26:58, 69-75: 27:1,2, 11-14: மாற். 14-54, 66-72: 15:1-5: லூக்.22:54ஆ-62, 66-71: 23:1-7: யோ. 18:15-18, 25-38)
87. எல்லாரும் விடையளிக்க வேண்டிய ஒரு கேள்வி
(மத்.27:15-31அ: மாற். 15:6-20அ: லூக். 23:8-25: யோவா.18:39, 40: 19:1-16)
88. உங்கள் தீர்ப்பு என்ன?
(இயேசுவை விசாரனை செய்த நிகழ்ச்சிகள்)
89. வெற்றியா அல்லது துன்பமா?
(மத்.27:3-10, 31ஆ-35, 37-39: மாற். 15:20ஆ-29: லூக்23:26-33, 38: யோவா. 19:17-22: அப். 1:18, 19)
90. சிலுவையில் தொங்கிய கள்ளன் பற்றிய விஷயம் என்ன?
(மத். 27:38-44: லூக். 23:39-43)

படிப்பு உதவிகள்

# ஒப்பீடு

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*

A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக்கா 1:1-4).*

B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*

C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*

D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*

E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*

F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*

G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியாயிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*

H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*

I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*

J. *இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).*

K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).*

L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).*

M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*

N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*

O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).*

P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*

A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).*

B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*

A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*

B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப்படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*

C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*

D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*

E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*

F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*

A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*

1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*

B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*

C. *யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு மாறுதல்.*

1. *கடந்து செல்லுதலுக்கான காரணங்கள் (மத். 4:12; மாற். 1:14; லூக். 3:19, 20; யோவா. 4:1-3).*
2. *சமாரியாவில் நடந்த சம்பவம் (யோவா. 4:4-42).*
3. *கலிலேயா வந்து சேருதல் (லூக். 4:14; யோவா. 4:43-45).*

D. *கலிலேயாவில் இயேசுவின் போதனை பற்றிய ஒரு பொதுவான விவரம் (மத். 4:17; மாற். 1:14, 15; லூக். 4:14, 15).*

E. *கானாவூரில் இரண்டாவது அற்புதம் (யோவா. 4:46-54).*

F. *கலிலேயாவின் கப்பர்நகூமுக்கு மாறுதல் (மத். 4:13-16).*

G. *நான்கு மீனவர்களை அழைத்தல் (மத். 4:18-22; மாற். 1:16-20; லூக். 5:1-11).*

H. *கப்பர்நகூமில்: ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவிபிடித்த ஒருவரைக் குணமாக்குதல் (மாற். 1:21-28; லூக். 4:31-37).*

I. *கப்பர்நகூமில்: பேதுருவின் மாமியும் மற்றவர்களும் குணமாக்கப்படுதல் (மத். 8:14-17; மாற். 1:29-34; லூக். 4:38-41).*

J. *கலிலேயாவில்; இயேசுவின் முதல் போதனை மற்றும் குணமாக்குதலின் பயணம் (மத். 4:23-25; மாற். 1:35-39; லூக். 4:42-44).*

K. *கலிலேயாவில்: ஒரு தொழுநோயாளியைக் குணமாக்குதல் - மற்றும் அதன் விளைவாக உணர்வெழுச்சி ஏற்படுதல் (மத். 8:2-4; மாற். 1:40-45; லூக். 5:12-16).*
L. *கப்பர்நகூமுக்குத் திரும்புதல்: திமிர்வாதம் கொண்ட ஒருவரைக் குணமாக்குதல் (மத். 9:2-8; மாற். 2:1-12; லூக். 5:17-26).*
M. *கப்பர்நகூமுக்கு அருகில்: மத்தேயுவை அழைத்தல் (மத். 9:9; மாற். 2:13, 14; லூக். 5:27, 28).*

V. *இரண்டாம் பஸ்காவில் இருந்து மூன்றாம் பஸ்கா வரை.*
A. *இயேசு, சப்பாணியாயிருந்த ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி அச்செயலைத் தற்காத்தார் (யோவா. 5:1-47).*
B. *இயேசு, ஓய்வுநாளில் கதிர்கொய்த தமது சீஷர்களைத் தற்காத்தார் (மத். 12:1-8; மாற். 2:23-28; லூக். 6:1-5).*
C. *இயேசு, சூம்பின கையுடைய ஒரு மனிதரை ஓய்வுநாளில் குணமாக்கி தற்காத்தார் (மத். 12:9-14; மாற். 3:1-6; லூக். 6:6-11).*
D. *இயேசு, கலிலேயாக் கடலுக்கு அப்பால் திரளான கூட்டத்தாரைக் குணமாக்கினார் (மத். 12:15-21; மாற். 3:7-12).*
E. *ஜெபத்திற்குப் பின்பு இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்தார் (மத். 10:2-4; மாற். 3:13-19; லூக். 6:12-16).*
F. *மலைப் பிரசங்கம்.*
1. *அறிமுகக் கூற்றுக்கள் (மத். 5:1, 2; லூக். 6:17-20).*
2. *பாக்கிய வசனங்கள்: மேசியாவின் பிரஜைகளுக்கான வாக்குத்தத்தங்கள் (மத். 5:3-12; லூக். 6:20-26).*
3. *மேசியாவின் பிரஜைகளினுடைய செல்வாக்கு (மற்றும் பொறுப்புகள்) (மத். 5:13-16).*
4. *மேசியாத்துவ பழைய ஏற்பாட்டு போதனைக்கும் - மற்றும் பழைய ஏற்பாட்டு போதனை பற்றி மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களுக்குள்ள உறவு (மத். 5:17-48; லூக். 6:27-30, 32-36).*
5. *மதரீதியான செயல்கள் காட்சிக்காக அல்ல ஆனால் இருதயத்தில் இருந்தே வருவதாயிருக்க வேண்டும் (மத். 6:1-18).*
6. *பரலோக பொக்கிஷங்களின் பாதுகாப்பானது பூமிக்கு உரிய பெருங்கவலைகளுடன் நேர்மாறாக ஒப்பிடப்பட்டது (மத். 6:19-34).*
7. *தீர்க்கப்படுதல் பற்றிய போதனை (மத். 7:1-6; லூக். 6:37-42).*
8. *ஜெபத்தைப் பற்றிய போதனை (மத். 7:7-11).*

9. பொன் விதி (மத். 7:12; லூக். 6:31).
10. இரண்டு வழிகள் - மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத். 7:13-23; லூக். 6:43-45).
11. முடிவுரையும் பயன்பாடும் (கட்டுபவர்கள் இரண்டு பேர்) (மத். 7:24-29; லூக். 6:46-49).

G. நூற்றுக்கு அதிபதியொருவரின் வேலையாள் குணமாகுதல் (மத். 8:1, 5-13; லூக். 7:1-10).

H. ஒரு விதவையின் மகன் உயிருடன் எழுப்பப்படுதல் (லூக். 7:11-17).

I. யோவான் ஸ்நானனுக்குப் பதில் அளித்தல் (மத். 11:2-30; லூக். 7:18-35).

J. இயேசுவின் பாதங்கள் அபிஷேகம் செய்யப்படுதல் (லூக். 7:36-50).

K. கலிலேயாவில் இரண்டாவது பயணம் (லூக். 8:1-3).

L. தேவதூஷணக் குற்றம் சாட்டப்படுதல்கள் (மத். 12:22-37; மாற். 3:20-30; லூக். 11:14-23).

M. அடையாளம் தேடுபவர்கள் (மத். 12:38-45; லூக். 11:16, 24-26, 29-36).

N. இயேசுவின் குடும்பம் (மத். 12:46-50; மாற். 3:31-35; லூக். 8:19-21; 11:27, 28).

O. உவமைகளின் முதல் மாபெரும் தொகுப்பு.
1. நிகழ்வுவேளையும் அமைவும் (மத். 13:1-3; மாற். 4:1, 2; லூக். 8:4).
2. விதைப்பவன் உவமையும் விளக்கமும் (மத். 13:3-23; மாற். 4:3-25; லூக். 8:5-18).
3. மறைவான வளர்ச்சியின் உவமை (மாற். 4:26-29).
4. களைகளின் உவமை (மத். 13:24-30).
5. கடுகு விதை, புளித்தமா ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:31-35; மாற். 4:30-34).
6. களைகளின் உவமை விளக்கப்படுதல் (மத். 13:36-43).
7. பொக்கிஷம், முத்து ஆகியவற்றின் உவமைகள் (மத். 13:44-46).
8. மீன்பிடி வலையின் உவமை (மத். 13:47-53).

P. புயலை அமர்த்துதல் (மத். 8:18, 23-27; மாற். 4:35-41; லூக். 8:22-25).

Q. அசுத்த ஆவி பிடித்த இருவரைக் குணமாக்குதல் (மத். 8:28-34; 9:1; மாற். 5:1-21; லூக். 8:26-40).

R. பாவிகளுடன் உண்ணுதல் (மற்றும் உபவாசித்தல் பற்றிய உரை) (மத். 9:10-17; மாற். 2:15-22; லூக். 5:29-39).

S. யாவீருவின் மகளை உயிர்ப்பித்தல் (மற்றும் பெரும்பாடு உள்ள ஒரு பெண்ணைக் குணமாக்குதல்) (மத். 9:18-26; மாற். 5:22-43; லூக். 8:41-56).

T. *பார்வையற்றவரையும் அசுத்த ஆவி பிடித்தவரையும் குணமாக்குதல் (மற்றும் விமர்சிக்கப்படுதல்) (மத். 9:27-34).*

U. *நாசரேத்தூருக்கு வருதல் (மற்றும் புறக்கணிக்கப்படுதல்) (மத். 13:54-58; மாற். 6:1-6; லூக். 4:16-31).*

V. *கலிலேயாவுக்கு இயேசுவின் மூன்றாம் பயணம் (மற்றும் பன்னிருவருக்கு அறிவுறுத்துதல்) (மத். 9:35-38; 10:1-42; 11:1; மாற். 6:6-13; லூக். 9:1-6).*

W. *இயேசுவின்மீது ஏரோதுவின் ஆர்வம் (மற்றும் யோவான் ஸ்நானனின் மரணம் பற்றிய விவரம்) (மத். 14:1-12அ; மாற். 6:14-29; லூக். 9:7-9).*

X. *ஏரோதுவின் ஆளுகைப் பகுதியில் இருந்து இயேசு விலகிச் செல்லுதல் (மற்றும் திரும்பி வருதல்).*

1. *பன்னிருவர் திரும்பி வருதலும் கலிலேயாக் கடலின் கிழக்குக் கரைப் பகுதிக்குப் போய் ஓய்வெடுத்தலும் (மத். 14:12ஆ, 13; மாற். 6:30-32; லூக். 9:10; யோவா. 6:1).*
2. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 14:13-21; மாற். 6:33-44; லூக். 9:11-17; யோவா. 6:2-14).*
3. *தண்ணீரின்மீது நடத்தல் (மத். 14:22-36; மாற். 6:45-56; யோவா. 6:15-21அ).*

Y. *ஜீவ அப்பம் பற்றி இயேசுவின் உரை (மற்றும் பேதுருவின் அறிக்கை) (யோவா. 6:21ஆ-71).*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை.*

A. *மூன்றாவது பஸ்கா (யோவா. 6:4; 7:1ஐக் காணவும்).*

B. *பாரம்பரியத்தை மதிக்கவில்லை என்று கடிந்து கொள்ளப்படுதல் (மத். 15:1-20; மாற். 7:1-23).*

C. *ஏரோதுவின் எல்லைப் பகுதியிலிருந்து விலகிச் செல்லுதல் (மத். 15:21; மாற். 7:24).*

D. *பெனிக்கியா (அல்லது கானானிய) பெண் ஒருத்தியின் மகளைக் குணமாக்குதல் (மத். 15:22-28; மாற். 7:25-30).*

E. *ஏரோதுவின் எல்லையைத் தவிர்த்தல் (மத். 15:29; மாற். 7:31).*

F. *காது கேளாதவர் உட்படப் பலரைக் குணமாக்குதல் (மத். 15:30, 31; மாற். 7:32-37).*

G. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (மத். 15:32-39அ; மாற். 8:1-9).*

H. *ஏரோதுவின் எல்லைப் பகுதியில் இருந்து இன்னொரு விலகிச் செல்லுதல்.*

1. *கலிலேயாவில்: இயேசுவின் விரோதிகளால் இன்னொரு தாக்குதல் - அதைத் தொடர்ந்து*

*இன்னொரு பின்வாங்குதல் (மத். 15:39ஆ-16:12; மாற். 8:10-21).*

2. *பெத்சாயிதாவில்: பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (மாற். 8:22-26).*
3. *பிலிப்புச் செசரியாவின் அருகில்: நல்ல அறிக்கை (மத். 16:13-20; மாற். 8:27-30; லூக். 9:18-21).*
4. *பிலிப்புச் செசரியாவின் அருகில்: இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்பட்டது (மத். 16:21-28; மாற். 8:31-38; லூக். 9:22-27).*
5. *பிலிப்புச் செசரியாவின் அருகில் (எர்மோன் மலைமீது?): மறுரூபமாகுதல் (மத். 17:1-13; மாற். 9:2-13; லூக். 9:28-36).*
6. *அசுத்த ஆவிபிடித்த ஒரு பையனைக் குணமாக்குதல் (மத். 17:14-21; மாற். 9:14-29; லூக். 9:37-43).*
7. *கலிலேயாவுக்குத் திரும்புதல் (இயேசுவின் மரணம் மீண்டும் முன்னுரைக்கப்பட்டது) (மத். 17:22, 23; மாற். 9:30-32; லூக். 9:43-45).*

I. *தேவாலய வரியைப் பற்றிய கேள்வி (மத். 17:24-27).*

J. *சிறுபிள்ளையைப் போலிருத்தலின் அவசியத்தைப் பற்றிப் போதித்தல் (மத். 18:1-14; மாற். 9:33-50; லூக். 9:46-50).*

K. *கலிலேயாவில் கடைசி போதனை: சகோதரர்களுக்கு இடையில் பிரச்சனைகள் (மத். 18:15-35).*

L. *யூதேயாவுக்கு ஊழியம் திருப்பப்படுதல் (யோவா. 7:1; மத். 19:1 ஆகியவற்றைக் காணவும்).*

1. *இயேசு தமது சகோதரர்களால் கூடாரங்களின் பண்டிகைக்குச் செல்லும்படி வற்புறுத்தப்படுதல் (யோவா. 7:2-9).*
2. *இயேசு எருசலேமுக்கு அந்தரங்கமாகச் செல்லுதல் (லூக். 9:51-56; யோவா. 7:10).*
3. *வழியில்: சீஷத்துவம் பற்றிப் போதித்தல் (லூக். 9:57-62; மத். 8:19-22ஐக் காணவும்).*

M. *எருசலேமில்: கூடாரங்களின் பண்டிகை.*

1. *பண்டிகையின் நடுவில்: தேவாலயத்தில் போதித்தல் (யோவா. 7:11-36).*
2. *பண்டிகையின் கடைசி நாளில்: ஜீவத் தண்ணீர் பற்றிப் போதித்தல் (யோவா. 7:37-52).*
3. *பண்டிகைக்குப் பின்பு: கூடுதல் போதனை.*
    a. *விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண் (யோவா. 7:53-8:11).*
    b. *வெளிச்சம் மற்றும் இருள் பற்றிய போதனை (யோவா. 8:12-59).*
    c. *உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய பார்வையற்ற*

தன்மைகள் பற்றிய போதனை (யோவா. 9:1-41).
  d. நல்ல மேய்ப்பன் மற்றும் கூலியாட்கள் பற்றிய போதனை (யோவா. 10:1-21).

N. யூதேயாவில் பிந்திய கால ஊழியம்.
  1. இயேசுவும் எழுபது பேர்களும் (லூக். 10:1-24).
  2. இயேசுவும் ஒரு நியாய சாஸ்திரியும் (நல்ல சமாரியனின் உவமை) (லூக். 10:25-37).
  3. இயேசு, மரியாள் மற்றும் மார்த்தாள் (லூக். 10:38-42).
  4. இயேசுவும் அவரது சீஷர்களும் (ஜெபத்தின்மீதான போதனை) (லூக். 11:1-13).
  5. இயேசுவும் ஒரு பரிசேயரும் (லூக். 11:37-54).
  6. இயேசுவும் திரளான கூட்டத்தாரும் (லூக். 12:1, 13, 54; 13:1 ஆகிய வசனங்களைக் காணவும்).
     a. மாய்மாலம் பற்றிய போதனை (லூக். 12:1-12).
     b. பொருள்முதல்வாதம் பற்றி போதனை (லூக். 12:13-34).
     c. விழித்திருத்தல் பற்றிய போதனை (லூக். 12:35-48).
     d. வரவிருந்த துன்பம் பற்றிய போதனை (லூக். 12:49-59).
     e. மனந்திரும்புதல் பற்றிய போதனை (லூக். 13:1-9).
  7. இயேசுவும் வியாதிப்பட்டிருந்த ஒரு பெண்ணும் (ஓய்வுநாள் பற்றி வாக்கு வாதம்) (லூக். 13:10-21).

O. பிரதிஷ்டையின் பண்டிகை (லூக். 13:22; யோவா. 10:22).
  1. அவரது விரோதிகளுடன் முரண்பாடு தொடருதல் (யோவா. 10:23-30).
  2. அவரைக் கொலை செய்யும் முயற்சிகள் தொடருதல் (லூக். 10:31-39).

P. பெரேயாவில் ஊழியம்.
  1. “யோர்தானுக்கு அப்பால்” இயேசுவின் ஊழியம் (மத். 19:1, 2; மாற். 10:1; யோவா. 10:40-42; ஐக் காணவும்).
  2. இயேசு கேள்வி கேட்கப்பட்டு எச்சரிக்கப்படுதல் (லூக். 13:23-35).
  3. இயேசு, பரிசேயர் ஒருவரின் வீட்டிற்கு அழைக்கப்படுதல் - மற்றும் விருந்துகள் பற்றி ஏற்புடைய மூன்று பாடங்கள் (லூக். 14:1-24).
     a. தாழ்மையின் பாடம் (லூக். 14:7-11).
     b. சுயநலமின்மையின் பாடம் (லூக். 14:12-14).
     c. மாபெரும் விருந்து பற்றிய உவமை (லூக். 14:16-24).
  4. இயேசு திரளான கூட்டத்தாரால் பின்பற்றப்படுதல் - மற்றும் முக்கியமான ஒரு பாடம் (லூக். 14:25-35).

5. இயேசு, ஆயக்காரர்களாலும் பாவிகளாலும் பின்பற்றப்படுதல் - மற்றும் ஒரு பாடத்தைப் போதிக்க மனதைத் தொடும் மூன்று கதைகள்/உவமைகள் (லூக். 15:1-32).
    a. காணாமற் போன ஆடு (லூக். 15:3-7).
    b. காணாமற் போன காசு (லூக். 15:8-10).
    c. காணாமற் போன மகன் (லூக். 15:11-32).
6. இயேசு தமது சீஷர்களின் துணையுடன் செல்லுதல் - மற்றும் அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமையிலிருந்து வலிவார்ந்த ஒரு பாடம் (லூக். 16:1-13).
7. இயேசு பரிசேயர்களால் கவனிக்கப்படுதல் - மற்றும் லாசரு, ஐசுவரியவான் "உவமையில்" இருந்து தெளிவான ஒரு பாடம் (லூக். 16:14-31).
8. பலவகைப் போதனைகள் (லூக். 17:1-10).

Q. பெத்தானியாவுக்கு.
1. லாசருவை எழுப்புதல் (யோவா. 11:1-46).
2. சனதெரீனின் கட்டளை (யோவா. 11:47-53).

R. பலஸ்தீனத்தில் கடைசிப் பயணம்.
1. எப்பிராயீமில் ஓய்வு (யோவா. 11:54).
2. சமாரியா கலிலேயா ஊடாக (லூக். 17:11ஆ).

S. எருசலேமுக்குக் கடைசிப் பயணம் (லூக். 17:11அ).
1. பத்து தொழுநோயாளிகளைக் குணமாக்குதல் (லூக். 17:12-19).
2. இராஜ்யத்தைப் பற்றிப் போதித்தல் (லூக். 17:20-37).
3. ஜெபம் பற்றிய உவமைகள்.
    a. விடாமுயற்சியான விதவையின் உவமை (லூக். 18:1-8).
    b. பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் உவமை (லூக். 18:9-14).
4. திருமணமுறவு பற்றிய கேள்விகள் - மற்றும் திருமணம் பற்றிய போதனை (மத். 19:3-12; மாற். 10:2-12).
5. பிள்ளைகள் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதல் - மற்றும் பிள்ளையைப் போலிருத்தல் பற்றிய போதனை (மத். 19:13-15; மாற். 10:13-16; லூக். 18:15-17).
6. நித்திய ஜீவனைப் பற்றிய ஒரு கேள்வி - மற்றும் செல்வங்கள்மீதான போதனை (செல்வந்தனான இளம் அதிகாரியைப் பற்றிய கதை) (மத். 19:16-26; மாற். 10:17-27; லூக். 18:18-27).
7. பலன்கள் பற்றிய கேள்வி - மற்றும் தேவனுடைய ஆசீர்வாதங்கள் பற்றிய போதனை (மத். 19:27-30; மாற். 10:28-31; லூக். 18:28-30), திராட்ச தோட்டத்தில்

வேலையாட்களைப் பற்றிய உவமையும் அடங்கும் (மத். 20:1-16).

8. வரவிருந்த அவரது மரணம் பற்றி சீஷர்களுக்கு அவரது முன்னெச்சரிக்கை (மத். 20:17-19; மாற். 10:32-34; லூக். 18:31-34).
9. ஊழியத்துவம் பற்றி அவரது சீஷர்களுக்குப் போதித்தல் (மத். 20:20-28; மாற். 10:35-45).
10. பர்த்திமேயுவையும் அவரது கூட்டாளியையும் பார்வையின்மையிலிருந்து குணமாக்குதல் (மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43).
11. சகேயுவை பொருளாசையிலிருந்து இரட்சித்தல் (லூக். 19:1-10).
12. தமது சீஷர்களைத் திருத்துதல் - மினாக்கள் (அல்லது "இராத்தல்களின்") உவமை (லூக். 19:11-27).

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்.

A. வெள்ளிக்கிழமை பிற்பகல்: பெத்தானியாவுக்கு வருதல் (யோவா. 11:55-12:1).

B. சனிக்கிழமை மாலை: பெத்தானியாவில் ஒரு விருந்து (மத். 26:6-13; மாற். 14:3-9; யோவா. 12:2-11).

C. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்: எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் (மத். 21:1-11; மாற். 11:1-11; லூக். 19:29-44; யோவா. 12:12-19).

D. திங்கட்கிழமை: அத்திமரத்தை சபித்தல், தேவாலயத்தைச் சுத்திகரித்தல், பார்வையற்றவரையும் கால் ஊனமானவரையும் குணமாக்குதல் (மத். 21:12-19; மாற். 11:12-19; லூக். 19:45-48; 21:37, 38).

E. செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்."

1. அறிமுகம்: காய்ந்துபோன அத்திமரம் (மத். 21:20-22; மாற். 11:20:26).
2. அதிகாரத்துவம் பற்றிய கேள்வி:
   a. கேள்வியும் இயேசுவின் பதிலும் (மத். 21:23-27; மாற். 11:27-33; லூக். 20:1-8).
   b. அவரது பதிலில் ஒரு பகுதி: மூன்று உவமைகள்.
      (1) இரண்டு மகன்கள் பற்றிய உவமை (மத். 21:28-32).
      (2) பொல்லாத குத்தகைக்காரர்கள் பற்றிய உவமை (மத். 21:33-46; மாற். 12:1-12; லூக். 20:9-19).
      (3) அரசர் மகனின் திருமண விருந்து பற்றிய உவமை (மத். 22:1-14).
3. கேள்விகளின் வரிசைத் தொடர்:

a. வரிசெலுத்துதல் பற்றிப் பரிசேயர்களும் ஏரோதியர்களும் கேள்வி கேட்டல் (மத். 22:15-22; மாற். 12:13-17; லூக். 20:20-26).
b. உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர்கள் கேள்வி கேட்டல் (மத். 22:23-33; மாற். 12:18-27; லூக். 20:27-39).
c. பிரதான கட்டளையைப் பற்றி ஒரு நியாயசாஸ்திரி கேள்வி கேட்டல் (மத். 22:34-40; மாற். 12:28-34; லூக். 20:40).
d. "கிறிஸ்து"வைப் பற்றி இயேசு கேட்கின்றார் (மத். 22:41-46; மாற். 12:35-37; லூக். 20:41-44).

4. வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள்மீது கிறிஸ்துவின் சாபம் (மத். 23:1-39; மாற். 12:38-40; லூக். 20:45-47).
5. ஒரு விதவையின் காணிக்கை (மாற். 12:41-44; லூக். 21:1-4).
6. திரளான கூட்டத்தாருக்கு ஒரு உரை.
   a. இயேசு புறஜாதியாரால் தேடப்படுதல் (யோவா. 12:20-22).
   b. இயேசுவுக்கு வரவிருந்த மரணம் - யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்ற இருதிறத்தாருக்குமானது (யோவா. 12:23-36).
   c. இயேசு யூதர்களால் புறக்கணிக்கப்படுதல் (யோவா. 12:37-50).
7. எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை பற்றி அப்போஸ்தலர்களுக்கு உரை.
   a. விளக்கங்களும் வினாக்களும் (மத். 24:1-3; மாற். 13:1-4; லூக். 21:5-7).
   b. எருசலேமின் அழிவு பற்றிய போதனை.
      (1) எருசலேமின் அழிவுடன் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் (மத். 24:4-14; மாற். 13:5-15; லூக். 21:8-19).
      (2) எருசலேமின் அழிவுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகள் (மத். 24:15-35; மாற். 13:14-31; லூக். 21:20-36).
   c. இரண்டாம் வருகை பற்றிய போதனை.
      (1) பொதுவான போதனை.
         (a) இரண்டாவது வருகை அறிவிக்கப்படாததாக இருத்தல் (மக். 24:36-41; மாற். 13:32).
         (b) தயாராக நிலைத்திருத்தலின் அவசியம் (மத். 24:42-51; மாற். 13:33-37).
      (2) உவமைகளும் தொடர்பான போதனையும்:

(a) *பத்துக் கன்னிகைகள் (மத். 25:1-13).*

(b) *தாலந்துகள் (மத். 25:14-30).*

(c) *செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் (மத். 25:31-46).*

F. *புதன்கிழமை: புயலுக்கு முன் அமைதி.*

1. *இயேசு: ஆயத்தமாகுதல் (மத். 26:1, 2; யோவா. 13:1).*
2. *சனதெரீன்: சூழ்ச்சி செய்தல் (மத். 26:3-5; மாற். 14:1, 2; லூக். 22:1, 2).*
3. *யூதாஸ்: காட்டிக்கொடுத்தல் (மத். 26:14-16; மாற். 14:10, 11; லூக். 22:3-6).*

G. *வியாழக்கிழமை: பஸ்காவுக்கு ஆயத்தம் செய்தல் (மத். 26:17-19; மாற். 14:12-16; லூக். 22:7-13).*

H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள்.*

1. *கடைசி இராப்போஜனம்.*
   a. *பஸ்கா ஆசரிக்கப்படுதல் (மத். 26:20; மாற். 14:17, 18; லூக். 22:14-18).*
   b. *வாக்குவாதம் கடிந்துகொள்ளப்படுதல் (லூக். 22:24-30).*
   c. *தாழ்மை செயல்விளக்கப்படுத்தப்படுதல் (யோவா. 13:2-20).*
   d. *காட்டிக்கொடுத்தல்/மறுதலித்தல் ஆகியவை முன்னுரைக்கப்படுதல் (மத். 26:21-25, 31-35; மாற். 14:18-21, 27-31; லூக். 22:21-23, 31-38; யோவா. 13:21-38).*
   e. *கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல் (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26).*
   f. *அப்போஸ்தலர்கள் உற்சாகப்படுத்தப்படுதல் மற்றும் எச்சரிக்கப்படுதல் (யோவா. 14:1-16:33).*
   g. *பிதாவிடம் மன்றாடுதல் (யோவா. 17:1-26).*
2. *கெத்செமனே தோட்டம் (மத். 26:30, 36-46; மாற். 14:26, 32-42; லூக். 22:39-46; யோவா. 18:1).*
3. *காட்டிக் கொடுக்கப்படுதல் மற்றும்  கைதாகுதல் (மத். 26:47-56; மாற். 14:43-52; லூக். 22:47-53; யோவா. 18:2-11).*
4. *யூதர்களால் “விசாரிக்கப்படுதல்” (முதல் மற்றும் இரண்டாம் நிலைகள்):*
   a. *முதல் நிலை: அன்னாவினால் சோதிக்கப்படுதல் (யோவா. 18:12-14, 19-23).*
   b. *இரண்டாம் நிலை: காய்பா மற்றும் சனதெரீன் சங்கத்தாரால் ஆக்கினைத் தீர்ப்பிடப்படுதல் (மத். 26:57, 59-68; மாற். 14:53, 55-65; லூக். 22:54அ,*

*63-65; யோவா. 18:24).*

5. *பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (மத். 26:58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54ஆ-62; யோவா. 18:15-18, 25-27).*
6. *யூதர்களால் "விசாரிக்கப்படுதல்" (மூன்றாம் நிலை): சனதெரீன் சங்கத்தாரால் தண்டனை விதிக்கப்படுதல் (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1; யோவா. 18:28).*
7. *ரோமர்களால் விசாரிக்கப்படுதல்:*
   a. *முதல் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (குற்றம் அறியாதவராகக் காணப்படுதல்) (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:2-7; யோவா. 18:28-38).*
   b. *இரண்டாம் நிலை: ஏரோது அந்திப்பாவுக்கு முன்பாக (குற்றம் இல்லாதவராகக் காணப்படுதல்) (லூக். 23:8-12).*
   c. *மூன்றாம் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (மரண தண்டனை விதிக்கப்படுதல்) (மத். 27:15-31அ; மாற். 15:6-20அ; லூக். 23:13-25; யோவா. 18:39-19:16).*
8. *யூதாஸின் மரணம்: தற்கொலை (மத். 27:3-10; அப். 1:18, 19).*
9. *இயேசுவின் மரணம்: சிலுவையில் அறையப்படுதல்.*
   a. *சிலுவைக்குப் பயணம் (மத். 27:31ஆ-34; மாற். 15:20ஆ-22; லூக். 23:26-33; யோவா. 19:17).*
   b. *சிலுவையில் முதல் மூன்று மணி நேரங்கள் (தொடங்கினது) (மத். 27:3-10, 31ஆ-35, 37-39; மாற். 15:20ஆ-29; லூக். 23:26-33, 38; யோவா. 19:17-22; அப். 1:18, 19).*

---

*யூதர்களின் காலக்கணக்கீட்டின்படி, இந்த நாளானது சூரியன் மறைவின் போது தொடங்கிற்று. நாம் வியாழக்கிழமை இரவு என்று கருதுவது யூதர்களுக்கு வாரத்தின் ஆறாவது நாளாக இருந்தது. இந்த நாள் பஸ்காவை ஆசரித்தலுடன் தொடங்கி இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுதலுடன் முடிந்தது.

*77*

# நமது கொடுத்தலை இயேசு உற்றுநோக்குகின்றபோது

## மாற். 12:41–44; லூக். 21:1–4, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*வேதாகமத்தின் வசனங்களில் ஆறில் ஒரு பகுதியானது ஏதாவது ஒரு வகையில், கொடுத்தல் என்பதை எடுத்துரைக்கின்றன என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[1] அது உண்மையாக உள்ளதா என்பது எனக்குத் தெரியாது, ஆனால் இந்தப் பாடக்கருத்தின்மீது வேதாகமம் அதிகம் கூறுகிறது என்பது எனக்குத் தெரியும்: "... 'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகள்" (அப். 20:35); "... உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி. 9:7); "கிறிஸ்து நமக்காகத் தம்மை ... ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்த[ார்]" (எபே. 5:2அ). வின்ஸ்ட்டன் சர்ச்சில் என்பவர் ஒருமுறை, "நாம் பெறுபவற்றைக் கொண்டு பிழைப்பை ஏற்படுத்திக் கொள்ளுகின்றோம், ஆனால் நாம் கொடுப்பவற்றைக் கொண்டு ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொள்ளுகின்றோம்" என்று கூறினார்.[2]*

*கொடுத்தல் பற்றிப் பேசுவதற்குத் தேவன் தயங்காதிருந்தார், ஆனால் சில பிரசங்கியார்கள் தயங்குகின்றனர். கொடுத்தல் மீதான பிரசங்கமானது நமக்குப் பிரியமான பிரசங்கங்களின் பட்டியலில் இருப்பதில்லை. கொடுத்தல் பற்றிய எடுத்துரைப்புக்கள் உங்களை சங்கடப்படுத்தும் என்றால், தனது பிழைப்புக்கென்று வைத்திருந்த எல்லாவற்றையும் கொடுத்திருந்த ஒரு விதவையைப் பற்றி நாம் படிக்கையில் புரண்டு நெளியத் தயாராகுங்கள்.*

### தேவாலயத்தில் கொடுத்தல்களை இயேசு உற்றுநோக்கினார்

இயேசு மரித்த வெள்ளிக்கிழமைக்கு முந்திய செவ்வாய்க்கிழமை ஒரு சக்தி தீர்ந்த நாளாக இருந்தது. நாள் முழுவதும் கர்த்தர், தம்மைத் தந்திரத்தில் அகப்படுத்த மீண்டும் மீண்டும் முயற்சி செய்த தமது விரோதிகளுடன் சொற்களின் போரில் ஈடுபட்டிருந்தார்.

நமது படிப்பு தொடங்குகையில் கிறிஸ்து, தேவாலயத்தின் காணிக்கைப்

பெட்டிகள் இருந்த இடமான பெண்களின் மண்டபத்தில் ஓய்வெடுத்திருந் தார் (மாற். 12:41).[3] தேவாலயத்தின் இந்தப் பகுதியில் அவர் இதற்குமுன்பு போதித்திருந்தார் (யோவா. 8:20). எதெர்ஷெய்ம் அவர்களின் கூற்றுப்படி, "காணிக்கைப் பெட்டி" என்பது அந்த மண்டபத்தில்[4] அமையப்பெற்றிருந்த எக்காள வடிவிலான[5] பதிமூன்று பெட்டிகளைக் கொண்டதாக இருந்தது. ஒவ்வொரு பெட்டியும் எபிரெய உயிரெழுத்து ஒன்றினால் அடையாள மிடப்பட்டிருந்தது, அவை ஒவ்வொன்றிலும் போடப்பட்ட பணம் தேவாலயப் பணிகள் ஒவ்வொன்றிற்காகவும் (பலிகள், பராமரிப்பு, இன்னும் பிற) பயன்படுத்தப்பட்டது. இவைகள் மனப்பூர்வமான காணிக்கைகளாக இருந்தன. பண்டிகை நாட்கள் போன்ற விசேஷ நிகழ்ச்சிகளின்போது, மனப்பூர்வமான காணிக்கைகளைக் கொடுப்பதற் கென்று பலர் வந்தனர்.

இயேசு, "காணிக்கைப் பெட்டிக்கு எதிராக உட்கார்ந்[திருந்தார்]" (மாற். 12:41அ). அந்த வேளையில் அவர் மாத்திரம் அங்கிருந்தார்.[6] அவர் ஓய்வில்லாமையைத் துய்த்திருந்தார் என்பதில் ஐயமில்லை. அவர் சற்று நேரம் கண்களைத் தாழ்த்தி (ஒருவேளை தமது கண்களை மூடியும்) இருந்தார் என்பது உறுதி, ஆனால் பின்பு "அவர் கண்ணேறிட்டுப் பார்த்[தார்]" (லூக். 21:1அ).

அவர், "ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்" (மாற். 12:41ஆ). அது என்ன? மக்கள் என்ன கொடுத்தனர் என்று அவர் பார்த்தாரா?[7] நான் கொடுக்கும்போது எனது இடது கை செய்வது என்ன என்பதை எனது வலது கை அறியக் கூடாது என்று நான் நினைத்தேன் - எனது வலது புறத்தில் இருப்பவரும் எனது இடது புறத்தில் இருப்பவரும் கூட இதை அறியக்கூடாது.[8] நான் எவ்வளவு கொடுக்கின்றேன் என்பது எனது தலையில் உள்ள முடிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைப் போன்றே அண்டத்தின் இரகசியங்களில் ஒன்றாக நிலைத்திருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்.[9] இருந்தபோதிலும், கர்த்தர் அங்கு உட்கார்ந்து, "ஜனங்கள் காணிக்கைப் பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக் கொண்டிருந்தார்" என்று வேத வசனப்பகுதி அறிவிக்கிறது.

"போடுகிறதை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை யானது "எறிந்துகொண்டிருந்ததை" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். KJV வேதாகமம், "மக்கள் காணிக்கைப் பெட்டிக்குள் பணத்தை எறிந்து கொண்டிருந்ததை" என்று கூறுகிறது. முன்னதாகக் கிறிஸ்து, மக்கள் தங்களது கொடுத்தல்களை காட்சிப்படுத்திக் கொண்டிருந்தனர் என்று கூறியிருந்தார் (மத். 6:2). ஒருவேளை, அந்தத் தனிநபர்கள் தங்கள் நாணயங் களை பெட்டிக்குள் வீசுகின்றபோது அது கேட்கக்கூடிய வகையில் ஒலியெழுப்புவது எப்படி என்று கற்றிருந்திருக்கலாம்.[10]

கர்த்தர், "ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள்" என்று கண்டார் (மாற். 12:41இ). அதில் தவறு எதுவுமில்லை. சிறுக விதைக் கின்றவர்கள் சிறுக அறுப்பார்கள் மற்றும், பெருக விதைக்கின்றவர்கள் பெருக அறுப்பார்கள் என்று பவுல் கூறினார் (2 கொரி. 9:6).

பின்பு இயேசு, இருதயத்தைத் தொட்ட பின்வரும் காட்சியைக் கண்டார்: "ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்" (மாற். 12:42). விதவைகள் என்பவர்கள், சமூகத்தில் மிகவும் தற்காப்பற்ற, உதவியற்ற பிரிவாகக் கருதப்பட்டனர். விதவைகளைப் பராமரித்து பாதுகாத்தல் பற்றித் தேவன் விசேஷித்த பிரமாணங்களைக் கொடுத்திருந்தார் (யாத். 22:22; உபா. 24:19-21; 26:12, 13; 27:19).[11] பெரும்பாலான விதவைகள் ஏழைகளாய் இருந்தனர்; இந்த வரலாற்றில் வரும் விதவை "ஏழையாக" இருந்தாள் என்று மாற்குவும் லூக்காவும் குறிப்பாகப் பெயரிடுதல் என்பது இவள் ஏழையிலும் ஏழையாக இருந்தாள் என்று சுட்டிக்காண்பிக்கலாம்.

கிறிஸ்து கவனித்துக் கொண்டிருக்கையில், இந்த விதவை இரண்டு சிறிய செப்புக் காசுகளைப் போட்டாள். இவள் "இரண்டு துட்டுக்களை" போட்டாள் என்று KJV கூறுகிறது. சிந்தைகளில் பலவகை தன்மையில், இந்த வரலாறு எப்போதுமே "விதவையின் துட்டுக்கள்" என்றே நினைக்கப் படும்.

"இரண்டு செப்புக் காசுகள்" அல்லது "துட்டுக்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை *lepta* என்பதாகும், இது *lepton* என்பதன் பன்மை வடிவமாக உள்ளது. லெப்டன் என்பது தாமிரத் தினாலான ஒரு சின்னஞ்சிறிய யூத நாணயம் ஆகும்; *lepton* என்ற வார்த்தை "மெல்லிய, சிறிய அல்லது மென்மையான" என்று அர்த்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் லெப்டன் என்ற ஒரு நாணயம் மாத்திரமே யூத நாணயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "ஒரு துட்டுக்குச் சரியான" இரண்டு லெப்டாக்கள் என்று வேத வசனம் குறிப்பிடுகிறது. "துட்டு" என்று மொழிபெயர்க்கப் பட்ட கிரேக்க வார்த்தையான *quadrant* என்பது ஒரு சிறிய ரோம நாணயமாகும். ஒரு குவாட்ரன்ட் என்பது (சாதாரணத் தொழிலாளியின் ஒரு நாள் கூலியான; மத். 20:2) ஒரு தினேரியத்தில் அறுபத்து நான்கில் ஒரு பகுதியாகும்.[12] விதவையின் இரண்டு சிறிய செப்பு நாணயங்கள் எவ்வளவு மதிப்புடையதாக இருக்கும் என்பதைக் கணக்கிடுவதற்கு, உங்கள் பகுதியில் சாதாரணத் தொழிலாளியின் ஒரு நாள் கூலியை முப்பத்து இரண்டால் வகுத்துக் கணக்கிடுங்கள்.[13] சாதாரணத் தொழிலாளி தனது கூலியைக் கொண்டு கைக்கும் வாய்க்குமாகவே வாழமுடியும் என்பதைச் சிந்தையில் கொள்ளுங்கள்.[14] இந்த விதவை, ஒரு தொழிலாளியின் ஒரு நாள் கூலியில் மிகச் சிறிய பகுதியின் அளவையே கொண்டிருந்தாள்.

கிறிஸ்து, இந்தப் பெண்ணைக் கவனித்துக் கொண்டிருக்கையில், "என்னைப் பின்பற்றுபவர்கள் இதைக் காண வேண்டியது அவசியம்" என்று அவர் நினைத்திருப்பார் என்பது உறுதி.[15] அவர் தமது சீஷர்களைத் தமது பக்கமாக அழைத்து (மாற். 12:43அ), "காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே [இந்த வார்த்தையானது, அவர் மிகவும் தனிச்சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சிலவற்றைக் கூறவிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது] உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மாற். 12:43ஆ). கிரேக்க வார்த்தைக் கட்டமைப்பானது, எஞ்சிய மற்றெல்லாரும்

ஒன்றுகூடிப் போட்டிருந்ததை விட அதிகமாக இவள் கொடுத்தாள் என்று சுட்டிக்காண்பிக்கிறது.[16] மனிதர்களின் நிலைப்பாட்டிலிருந்து காணுகையில், இவளது காணிக்கையானது அற்பமானதாக இருந்தது; ஆனால் தேவனுடைய நிலைப்பாட்டில் இருந்து காண்கையில், அது விலைமதிப்பற்றதாக இருந்தது. இவளது மிகச் சிறிய நாணயங்கள் தேவனுடைய கண்களுக்கு வைரங்களை விட அதிக மதிப்பு வாய்ந்ததாக இருந்தது.

இந்த விதவை மிகச்சிறிய தொகையை மட்டுமே கொடுத்திருந்திருக்கலாம், ஆனால் இவளது "வரம்பு மீறிய பெருந்தன்மையானது" ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் அளவாக, தியாக நிறைவுடன் கொடுத்தலை ஊக்கப்படுத்தியுள்ளது. யாரோ ஒருவர், "இந்த விதவையின் துட்டுக்கள் ஆண்டிற்கு இருமுறை நான்கு சதவிகித வட்டியைப் பெறும்படி 'எருசலேமின் முதல் தேசீய வங்கியில்' இட்டு வைக்கப்பட்டிருந்தால், இன்றைய நாளில் அந்த நிதியானது, ரூபாய் 2064000000000000000000 (இரண்டாயிரத்து அறுபத்து நான்கைத் தொடர்ந்து இருபது பூஜ்யங்கள்) ஆகியிருக்கும்!" என்று கணக்கிட்டுள்ளார்.[17] [இங்கு டாலர் மதிப்பில் உள்ளதை இந்திய ரூபாய் மதிப்புக்கு மாற்றிக் கூறப்பட்டுள்ளது.] நான் அந்தத் தொகையைக் கணக்கிட்டுச் சரிபார்க்கத் திட்டமிடவில்லை - ஆனால் விதவையின் உதாரணமானது பல இலட்சக்கணக்கான, பல கோடிக்கணக்கான பணத்தைக் கொடுக்கும்படி ஏவியுள்ளது என்று நான் அறிவேன். பர்ட்டன் காஃப்மன் என்பவர் பல ஆண்டுகளுக்கு முந்திய பின்வரும் உதாரணம் ஒன்றைப் பகிர்ந்து கொண்டார்:

> நியூயார்க் நகரமானது, விடுதலையின் நினைவாக உள்ள பார்த்ஹோல்டின் சிலையை வைக்கத் தாங்கு கோபுரம் கட்டுவதற்காகவும், அதன் மேடையின் கட்டுமானத்திற்காகவும் அந்த நகரில் வந்து குடியேறிய ஏழை மக்கள் மத்தியில், நிதிதிரட்டும் முகாம் ஒன்றை நடத்திற்று. முகாம் முதலில் உற்சாகமின்றியே நடைபெற்றது, ஆனால் ஒரு ஏழைப் பெண் தனது படுக்கையை பதிமூன்று டாலர்களுக்கு (சுமார் ஐநூற்று ஐம்பது ரூபாய்களுக்கு) விற்று அந்தப் பணத்தைக் கொடையாக அளித்த பின்பு, அந்த நிகழ்ச்சியால் ஏவப்பட்ட மக்கள் விரைவாகப் பதில்செயல் செய்து, தேவைக்கு அதிகமாகவே கொடுத்தனர். இதே போன்றுதான், இவ்வசனப் பகுதியில் வரும் ஏழை விதவை பல சபைக் கட்டிடங்களைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் அநேக விதங்களிலும் உலகம் முழுவதிலும் பெருநிதியை எழுப்பினாள்.[18]

தொடர்ந்து இயேசு, "அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து, தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததையெல்லாம் போட்டு விட்டாள்" என்றார் (மாற். 12:44). கொடுக்கப்பட்ட கொடையைத்தான் மனிதர்கள் பார்க்கின்றனர்; கொடுக்கப்பட்ட கொடைக்குப் பின்னால் எஞ்சியுள்ளது என்னவென்று தேவன் காண்கின்றார். செல்வந்தர்களின் காணிக்கை அவர்களுக்கு எந்த விலையுமாகவில்லை; விதவையின் காணிக்கையோ ஒவ்வொன்றையும்

விலை செலுத்தியதாக இருந்தது. யாராவது ஒருவர் அவ்வப்போது, "விதவையின் காணிக்கையளவே நான் கொடுக்க முடியும்" என்று கூறுவதை நாம் கேட்கின்றோம். நீங்கள் கொடுப்பது உங்களிடம் உள்ள எல்லாமுமாக இல்லாதவரை, நீங்கள் "விதவையின் காணிக்கையைக் கொடுக்கின்றேன்" என்று கூறாதீர்கள். [காணிக்கை கொடுத்தபின்பு] உங்களிடம் ஏதேனும் மீதியிருந்ததென்றால், உங்கள் காணிக்கை இந்த விதவையின் காணிக்கை யுடன் ஒப்பிடத் தக்கதாக இருப்பதில்லை.

இந்த விதவையின் முடிவு ஞானமானதாக இருந்ததா அல்லவா என்று மனிதர்கள் விவாதித்து இருக்கின்றார்கள். நீங்களும் நானும் இவளிடத்தில் பின்வருமாறு கூறி இவளை நிறுத்த முயற்சி செய்யலாம்: "நீங்கள் மிகவும் அதிகமாய்க் கொடுக்கின்றீர்கள்! நீங்கள் தேவாலய நிதிக்கென்று கொடுப் பதற்காகப் பட்டினிகிடக்க வேண்டும் என்று தேவன் உங்களிடத்தில் எதிர்பார்ப்பதில்லை! கொடுக்க வேண்டும் என்ற உங்கள் மனவிருப்பத்தை அவர் பாராட்டுவார், ஆனால் இதில் ஒரு பகுதியை உங்களுக்காக வைத்துக் கொள்ளுங்கள்!" இருப்பினும் கர்த்தர், இவளது அன்பின் கொடையைப் பாராட்டினார். ஒரு விஷயம் நிச்சயமானதாக உள்ளது: இந்த ஏழை விதவை அடுத்த நாளில் தனது தேவையைத் தேவன் கவனித்துக் கொள்வார் என்று அவர்மீது நம்பிக்கையாயிருந்தாள் (மத். 6:33).[19]

மனதைத் தொடும் இந்த வரலாற்றின் மூலம், பல பாடங்கள் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன:[20]

- ஏழையோ, செல்வந்தரோ அல்லது நடுத்தர வர்க்கத்தினரோ யாவரும் கொடுக்க வேண்டும்.
- கொடுத்தல் என்பதை, நம்மிலிருந்து மாறுபட்ட வகையில் தேவன் கண்ணோக்குகின்றார்.
- நமது கொடுத்தல் தியாகம் நிறைந்ததாக இருக்க வேண்டும்.
- நமது கொடுத்தலானது, பொன்னில் அல்ல ஆனால் தேவன்மீதே நமது நம்பிக்கை உள்ளது என்பதைப் பிரதிபலிக்க வேண்டும்.

இருப்பினும், இயேசு இந்த விதவையைக் கவனித்துக் கொண்டிருந்தது போலவே நம்மையும் கவனித்துக் கொண்டிருக்கின்றார் என்ற ஒரு கருத்தையே நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

## நமது கொடுத்தல்களை இயேசு இன்னமும் உற்றுநோக்குகின்றார்

தேவன் ஒவ்வொன்றையும் உற்றுநோக்குகின்றார் என்று பல வசனப்பகுதிகள் நமக்குக் கூறுகின்றன, அதாவது அவர் எங்கும் நிறைந்தவராகவும் எல்லாம் அறிந்தவராகவும் இருக்கின்றார்:

> ... கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது (2 நாளா. 16:9அ).

*மனுஷனுடைய வழிகள் கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவனுடைய வழிகளெல்லாவற்றையும் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார் (நீதி. 5:21).*

*கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது (நீதி. 15:3).*

*அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு மிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபி. 4:13).*

தேவன் கண்ணோக்குகின்றவற்றில் நமது கொடுத்தலும் உள்ளது. அது இருக்க வேண்டியபடி இருக்கிறதா இல்லையா என்பதை அவர் அறிகின்றார். அவர் அனனியா மற்றும் சப்பீராள் ஆகியோரின் மாய்மால மான கொடுத்தலைக் கண்ணோக்கினார், அதில் அவர் பிரியமற்றவராக இருந்தார் (அப். 5:1-11). அவர் மக்கெதோனியர்களின் தியாகம் நிறைந்த கொடுத்தல்களைக் கண்ணோக்கினார், அதில் அவர் பிரியமாயிருந்தார் (2 கொரி. 8:1-5). பவுல் பின்வருமாறு எழுதினார்:

*பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி. 9:6, 7).*

கர்த்தர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தேவாலயத்தில் கொடுத்தலை நுட்பமாக ஆராய்ந்து பார்த்தார், மற்றும் அவர் இன்னமும், “பரலோகத்தில் காணிக்கைப் பெட்டிக்கு எதிரே அமர்ந்துகொண்டு நம்மைக் கண்ணோக்கிக் கொண்டிருக்கின்றார்.”[21] காணிக்கை சேகரிக்கப்பதில் உதவும்படி கேட்டுக்கொண்ட ஒரு பிரசங்கியாரைப் பற்றி நான் படித்திருக் கின்றேன். அவர் காணிக்கைத் தட்டை மக்களிடம் நீட்டுகையில், அவ்வப் போது ஒரு காணிக்கையை கையில் எடுத்துப் பற்றிக் கொண்டு அதை நெருக்கமாக உற்றுநோக்குவார்.[22] [அவர் இவ்வாறு செய்ததினால்] காணிக்கை சேகரிக்கப்படும்போது, பலர் சங்கடப்பட்டதையும் அநேகர் கோபம் அடைந்ததையும் நீங்கள் கற்பனை செய்ய முடியும். பிரசங்கியார் பிரசங்க மேடைக்கு அடியெடுத்து வைத்துச் சென்று, “இந்த ஒரு வேளையில் உங்கள் காணிக்கைகளை நான் ஆய்வு செய்ததால் அது உங்களில் சிலருக்குக் கலக்கம் ஏற்படுத்தியுள்ளது. நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு முறையும் கர்த்தர் உங்கள் காணிக்கைகளை ஆய்வுசெய்கின்றார் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா? அவர் அவ்வாறு செய்யும்போது, அவர் என்னத்தைக் காண்கின்றார்? அவர் சந்தோஷமாய் இருக்கின்றாரா? அல்லது அவர் கவலையாய் இருக்கின்றாரா?” என்று கூறினார்.

கிறிஸ்து நமது கொடுத்தல்களை உற்றுநோக்கும்போது, அவர் என்னத்தைக் காண்கின்றார்? அந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில்,

உங்களுக்காக நானோ அல்லது எனக்காக நீங்களோ பதில் அளிக்க முடியாது. தேவன் பகுதியில் மட்டுமின்றி விகிதத்திலும் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார் என்பதை, நாம் படித்துள்ள வரலாறு வெளிப்படுத்துகிறது. அவர் கொடையை மாத்திரமல்ல, ஆனால் அதைக் கொடுப்பவரையும் கண்ணோக்கிப் பார்க்கிறார். நாம் எவ்வளவு கொடுக்கின்றோம் என்பதைப் பற்றியும் மற்றும் நம்மிடத்தில் எவ்வளவு எஞ்சியுள்ளது என்பதைப் பற்றியும்கூட அவர் அக்கறையுள்ளவராக இருக்கின்றார்.

நான் கொடுக்கும்போது, அதில் தியாகம் எதுவும் உள்ளடங்கி யிருக்கிறதா? நான் கொடுக்கின்றபோது எதையாவது விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறதா? எந்த சந்தோஷத்தையாவது? எந்த வசதிகளையாவது? தனது பிழைப்புக்கென்று வைத்திருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்ட அந்த விதவையின் பக்கத்தில், எனது கொடைகள் மங்கியவைகளாக உள்ளன.

தங்களுடைய எல்லாவற்றையும் கொடுத்தவர்களைப் பற்றி நாம் அறிந்துள்ளோம்:[23] தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையானவை கிடைக்கக் கூடும்படிக்கு, வாழ்வின் அவசியமானவைகளின்றியே வாழ்கின்ற தாய்மார்கள்,[24] மற்றவர்களுக்காகத் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்த ஆண்களும் பெண்களும்,[25] மற்றவர்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுவதற்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்திருந்த சுவிசேஷ ஊழியர்கள். ''நான் என்ன கொடுத்திருக்கின்றேன்?'' என்பதுதான் "விதவையின் துட்டுக்கள்" என்ற வரலாற்றிலிருந்து எழக்கூடிய சங்கடப் படுத்தும் கேள்வியாக உள்ளது.

பவுல் ஃபிரைஹ்லிங் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இந்த ஏழை விதவை, தான் கொடுத்ததை அல்லது தான் எவ்வாறு கொடுத்தாள் என்பதை எவரொருவராவது எப்போதாவது காண்பார்கள் என்று ஒருபோதும் அறியவில்லை என்பது நிச்சயம். இவள் தனது வாழ்வை முற்றிலுமாக வாழ்ந்து முடித்திருந்தாள், இவள் மகிமையிடத்திற்கு வந்தபோது மாத்திரமே தேவனுடைய குமாரனாலேயே வரவேற்கப்பட்டாள், மற்றும் இவள் "தனது ஏழ்மையின் செப்பு நாணயத்தை அவர் முத்தமிட்டு நித்தியத்தின் பொன்னாக்கியதை" கண்டறிந்தாள்.[26]

## முடிவுரை

கர்த்தருக்கு எல்லாவற்றையும் கொடுத்தல் என்பது, சுயத்தைக் கொடுத்தலில் இருந்து தொடங்குகிறது. மெக்கெதோனியர்களின் தியாகம் நிறைந்த கொடையைப் பற்றி, "முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கு ... ஒப்புக்கொடுத்தார்கள்" என்று பவுல் கூறினார் (2 கொரி. 8:5). நீங்கள் உங்களையே தேவனுக்கு அன்பினால் விசுவாசத்தினால் மற்றும் கீழ்ப்படிதலினால் இன்னும் கொடுத்திராதிருந்தால், எந்த தியாகமும் மிகப் பெரியதல்ல என்ற அளவுக்குக் கர்த்தர்மீது அன்புகூர்ந்த ஏழை விதவையினால் ஏவப்பட்டவர்களாயிருங்கள். சில வேளைகளில் நாம் பாடுகின்ற

*பின்வரும் பாடல் வரிகளைப்பற்றி நினைத்துப் பாருங்கள்:*

> *இயேசுவுக்கே ஒப்புவித்தேன்*
> *யாவையும் தாராளமாய்*
> *என்றும் அவரோடே தங்கி*
> *நம்பி நேசிப்பேன் மெய்யாய் ...*
> *நேசரட்சகா நான் யாவையும்*
> *ஒப்புவிக்கிறேன்.*[27]

*எல்லாவற்றையும் ஒப்புவித்து இன்றே அவரிடம் வாருங்கள்!*[28]

---

*குறிப்புகள்*

[1]*இது, "கொடுத்தல்" என்ற வார்த்தை இந்த வசனங்கள் எல்லாவற்றிலும் காணப்படுகிறது என்று அர்த்தப்படுவதில்லை, ஆனால் ஏதோ ஒரு வழியில், பல வசனங்கள் தேவன் சிலவற்றை நமக்குக் கொடுத்தது அல்லது நாம் தேவனுக்குக் கொடுப்பது மற்றும் பிறவற்றைக் குறிப்பிடுகின்றன.* [2]*இரண்டாம் உலகப் போரின்போது மகா இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக இருந்த சர்ச்சில் என்பவர் மாபெரும் பேச்சாளர் என்று புகழ் பெற்றிருந்தார்.* [3]*காணிக்கைப் பெட்டியானது பெண்களின் முற்றத்தில் இருந்தது என்று பெரும்பாலான கல்வியாளர்கள் நம்புகின்றனர்.* [4]Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah*, New Updated Version (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 741. *பணம் சேகரிப்பதற்கென்று தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த பெட்டியொன்றின் உதாரணத்திற்கு, 2 இராஜாக்கள் 12:9ஐக் காணவும்.* [5]*ஒவ்வொரு பெட்டியும் அடிப்பகுதி அகலமான பாகமாயிருந்தது என்பது எனது புரிந்துகொள்ளுதலாக உள்ளது. அடிப்பகுதியில் இருந்து மேல்பகுதிக்கு வரவர அது படிப்படியாகச் சிறுத்து இருந்தது. மேல்பகுதியில் இருந்த ஒரு திறப்பின் வழியாக நாணயங்கள் போடப்பட்டன.* [6]*ஒரு கணத்தில் அவர் தமது சீஷர்களைத் தம்மிடம் அழைத்தார் என்பதால் (மத். 12:43), அவர்கள் அந்தப் பகுதியிலேயே வேறு எங்காவது இருந்திருக்க வேண்டும்.* [7]*இந்த வாக்கியமும் இதற்கு முந்திய வாக்கியமும் மற்றும் இதைத் தொடர்ந்து வரும் அடுத்த இரண்டு வாக்கியங்களும் எதிர்மறை இலக்கண வாக்கியங்களாய் இருக்கும்படி நோக்கங் கொள்ளப்பட்டுள்ளது.* [8]*இது மத்தேயு 6:3க்கு ஒரு குறிப்பாக உள்ளது. அந்த வசனம் பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 2" என்ற புத்தகத்தில் காணவும்.* [9]*இது மத்தேயு 10:30க்கு ஒரு குறிப்பாக உள்ளது.* [10]*இதற்கு மறுபுறத்தில், "எறிதல்" என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப் பட்டது என்ற உண்மையில் தனிச்சிறப்பு எதுவும் இராதிருக்கலாம். விதவையின் கொடுத்தல் செயலை விவரிக்க இதே மாதிரியான கிரேக்க வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது (மத். 12:42).*

[11]*அதே வகையான அக்கறை புதிய ஏற்பாட்டிலும் பிரதிபலிக்கிறது (அப். 6:1-6; யாக். 1:27ஐக் காணவும்).* [12]*நான்கு குவாட்ரன்ட்கள் = ஒரு அஸ்ஸாரியன்; பதினாறு அஸ்ஸாரியன்கள் = ஒரு தினேரியம்.* [13]*மொழிபெயர்ப்புகளும் விளக்கவுரையாளர்களும் இதன் மதிப்பை, "ஒரு துட்டு," "ஒரு ரூபாயின் மிகச் சிறிய பகுதி" மற்றும் இது போன்ற சொற்றொடர்களால் விளக்கியுரைக்க முயற்சி செய்கின்றனர். நீங்கள் வாழும் இடத்தில் உள்ள பொருளாதாரத் தரத்துடன்*

இதனை ஒப்பிடுதல் என்பது அதிக அர்த்தம் நிறைந்ததாக இருக்கிறது. [14]இந்தக் காரணத்தினால்தான், ஒரு சாதாரணத் தொழிலாளிக்கு ஒவ்வொரு நாளின் முடிவிலும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறிற்று. [15]மாற்கு சுவிசேஷத்தைப் பொறுத்தமட்டில், இயேசு அவ்வப்போது தமது சீஷர்களின் கவனத்தைப் பெறுவதற்குச் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டார் (மாற். 3:13; 6:7; 8:1, 34; 10:42). [16]லூக்கா 21:3ல் the Living Bible என்ற வேதாகமம், "எஞ்சிய யாவரும் சேர்ந்து கொடுத்த எல்லாவற்றைக் காட்டிலும்" என்று இதைப் பொழிப்புரைக்கிறது. [17]Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations: Signs of the Times* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 1156. [18]James Burton Coffman, *Commentary on Mark* (Abilene, Tex.: ACU Press, 1975), 240-41. [19]இந்தக் கருத்தைப் பற்றி எவ்வளவாகக் கலந்துரையாடலாம் என்பதை நீங்கள் தீர்மானிக்கக்கூடும். நாம் நல்ல முடிவைப் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார், ஆனால் சிலவேளைகளில், சுயத்தை மையங்கொண்ட தன்மையானது "செய்வதற்கு நடைமுறைச் சாத்தியமான விஷயம்" என்ற முகமூடியுடன் வருகிறது. [20]இந்தச் சிந்தனைகளைத் தேவைக்கேற்ப நீங்கள் விரித்துரைக்கலாம்.

[21]Paul P. Fryhling, *Prelude to the Cross and Other Sermons* (Grand Rapids, Mich.: Baker Book House, 1965), 132. [22]நீங்கள் இதை முயற்சி செய்யும்படி நான் பரிந்துரைப்பதில்லை. யாரோ ஒருவர் செய்தார் என்று சொல்லி நீங்கள் இதன் கருத்தை விளக்க முடியும். அத்துடன் நீங்கள், "அதை இன்று நான் செய்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் எவ்வாறு உணருவீர்கள்?" என்பதையும் கூடுதலாகக் கூறலாம். [23]உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குச் செய்தித் தொடர்பளிக்கும் உதாரணங்களைப் பயன்படுத்துங்கள். [24]அமெரிக்காவில், திருப்பயணிகள் இருந்த முதல் குளிர்காலத்தின்போது, இறந்துபோன மனைவியர்களும் தாய்மார்களும் இதற்கு அமெரிக்க வரலாற்றின் உதாரணமாக இருக்கின்றனர். வரலாற்றாளர்களின் கூற்றுப்படி, அவர்களில் பலர் தங்கள் குடும்பத்திற்கு முதலிடம் கொடுத்ததால் இறந்து போயினர். [25]சகப் படைவீரர்களைக் காப்பாற்றுவதற்காக கை வெடிகுண்டு ஒன்றின்மீது விழுந்த படைவீரர் ஒருவரின் உதாரணத்தை நீங்கள் தரமுடியும். [26]Fryhling, 131. [27]Judson W. Van DeVenter, "All to Jesus I Surrender," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [இந்தப் பாடல், ஆங்கிலத்தில் பாடப்படும் அதே இராகத்தில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பாடப்பட்டு வருகிறது. அதன் வரிகளையே இந்தப் பாடத்தில் நான் கொடுத்துள்ளேன். இதைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார் என்பது எனக்குத் தெரியவில்லை - மொ.ர்.] [28]கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு, அவர்கள் எவ்வாறு கிறிஸ்தவராக முடியும் என்பதை கூறுவதற்கும் (மாற்கு 16:15, 16; அப். 2:38; கலா. 3:26, 27), தவறு செய்கின்ற கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் கர்த்தரிடத்தில் எவ்வாறு திரும்ப முடியும் என்று கூறுவதற்கும் (அப். 8:22; யாக். 5:16) நீங்கள் விரும்புவீர்கள்.

# “வேளை வந்தது”

## யோவா. 12:20-36, 46-48,

## ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*“இன்னும் ஒரு பிரசங்கம் மாத்திரமே நான் பிரசங்கிக்க வேண்டியிருந்தால்” என்ற தலைப்பில் பிரசங்கிக்கும்படி நான் பல வேளைகளில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றேன்.[1] ஒருமுறைக்கும் மேலாக நான் என்னையே, “இது என் கடைசிப் பிரசங்கம் என்று உண்மையிலேயே நான் அறிந்தால், எதைப் பற்றி நான் பிரசங்கிப்பேன்?” என்று கேட்டிருக்கின்றேன். அந்தக் கேள்வியை நான் கேட்டுக்கொள்ளும் ஒவ்வொரு வேளையிலும், நான் மாறுபட்ட முடிவு ஒன்றைக் கொண்டிருந்துள்ளேன். ஏனென்றால், எனது தேர்ந்து கொள்ளுதலானது எதிர்பார்க்கப்படும் மக்கள் கூட்டத்தின் தேவைகள் மற்றும் அந்த வேளையில் எனது மனநிலை ஆகியவற்றைச் சார்ந்திருக்கின்றது.*

*யோவான் 12ல் நாம், இயேசுவின் வெளிப்படையான கடைசி உரையாக,[2] சிலுவையில் அவரது ஏழு வாக்கியங்களைக் கேட்பதற்கு முன், கூட்டத்தார் கேள்விப்பட்ட அவரது கடைசி வார்த்தைகளாக இருந்தவற்றைக் கொண்டுள்ளோம். “இன்னும் ஒரு பிரசங்கம் மாத்திரமே நான் பிரசங்கிக்க வேண்டியிருந்தால்” என்ற தலைப்பு இயேசுவுக்குக் கொடுக்கப் பட்டிருந்தால், அவர் என்ன கூறியிருப்பார்? ஒருவேளை அந்தக் கேள்விக்கு யோவான் 12:20-36 வசனப்பகுதியானது பதில் அளிக்கிறதாக உள்ளது எனலாம்.*

*அது கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய கடைசி வாரத்தின் செவ்வாய்க் கிழமையாக இருந்தது. இயேசு தேவாலயத்தில் போதித்துக் கொண்டிருந்த போது,[3] புறஜாதியாரில் சிலர் அவரைக் காண வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். இந்த வரலாறு, “பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சிலர் கிரேக்கர் இருந்தார்கள்” என்று தொடங்குகிறது (யோவா. 12:20). இவர்கள் யூதமார்க்கத்தைத் தழுவியவர்களாக இருக்கலாம், ஆனால் அநேகமாக இவர்கள் கொர்நேலியுவைப் போல் “தேவனுக்குப் பயந்த”வர்களாக[4] இருந்திருக்க வாய்ப்புள்ளது (அப். 10:1, 2): உண்மையான தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருந்த, ஆனால் இன்னும் யூதராவதற்குரிய செயல்முறையில் யூதமார்க்கத்து அமையாதவர் களாயிருந்த புறஜாதியார்.[5]*

*“அவர்கள் கலிலேயா நாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்பு வினிடத்தில் வந்து ...” (யோவா. 12:21அ). கிரேக்கர்கள் பிலிப்புவிடம் வந்தது*

ஏன் என்று நமக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. ஒருவேளை பிலிப்பு கிரேக்கப் பெயர் கொண்டிருந்ததால் இவர்கள் அவரிடம் வந்திருக்கலாம்.[6] ஒருவேளை இவர்களும்கூடப் பெத்சாயிதா[7] ஊரில் இருந்து வந்திருந்ததால் இவர்கள் அவரிடம் வந்திருக்கலாம். ஒருவேளை இயேசுவின் சீஷர்களில் பிலிப்புவே, இவர்கள் முதலில் எதிர்கொண்டவராக இருந்திருக்கலாம்.

இவர்கள், " 'ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்' என்று அவனைக் கேட்டுக் கொண்டார்கள்" (யோவா. 12:21ஆ). இவர்கள் இயேசுவைப் பற்றி எவ்வாறு அறிந்தார்கள்? ஒருவேளை இவர்கள், சில நாட்களுக்கு முன்பு அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது அங்கிருந் திருக்கலாம். ஒருவேளை இவர்கள், அவர் புறஜாதியாரின் மண்டபத்தில் போதித்ததைக் கேட்டிருந்து, அவரை இன்னும் சிறப்பாக அறிய விரும்பி இருக்கலாம்.[8] அவர்கள், "கேட்டுக் கொண்டார்கள்" என்று வேத வசனப் பகுதி கூறுகிறது. மூலவசனத்தில் இந்த வார்த்தைக் கட்டமைப்பு, அவர்கள் தங்கள் கோரிக்கையில் விடாப்பிடியாய் இருந்தனர் என்று சுட்டிக் காண்பிக்கிறது.

பிலிப்பு என்ன செய்வதென்று நிச்சயமில்லாதவராய் இருந்தார். புறஜாதியாரிடத்திற்குப் போகவேண்டாம், ஆனால் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" மாத்திரம் போங்கள் என்று கிறிஸ்து பன்னிருவருக்குக் கூறியிருந்தார் (மத். 10:5, 6). பிலிப்பு [தமது] நண்பர் ஒருவரின் உதவியை நாடினார்:[9] "பிலிப்பு வந்து, அதை அந்திரேயா வுக்கு அறிவித்தான்" (யோவா. 12:22அ). பின்பு, "அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்" (வ. 22ஆ).

கிரேக்கர்களின் வேண்டுகோளுக்குக் கிறிஸ்து இணங்கினாரா அல்லவா என்று நமக்கு கூறப்படவே இல்லை. எல்லா விவரங்களையும் நமக்குக் கொடுப்பதற்காக இன்றி, யோவான் 12ன் கடைசிப்பகுதியில் உள்ள இயேசுவின் வார்த்தைகளுக்கு ஒரு பின்னணியைக் கொடுப்பதற்காகவே யோவான் இவ்வரலாற்றைப் பதிவு செய்தார். எவ்வகையிலும், கர்த்தர் தமது பதிலை (வ. 32ஐக் காணவும்) கொடுத்தபோது, அவர், அந்தக் கிரேக்கர்களை யும் - மற்றும் நாம் உட்பட மற்ற எல்லாப் புறஜாதியாரையும் - தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது உறுதி.

அந்திரேயாவும், பிலிப்புவும், கிரேக்கர்களின் விருப்பத்தை இயேசு விடம் கூறியபோது அவர், "வேளை வந்தது" என்று பதில் அளித்தார் (வ. 23). கர்த்தர் இந்தச் சொற்றொடரைக் கொண்டு, அவரது வெளிப்படை யான கடைசி எடுத்துரைப்பாயிருக்கக் கூடியதை அறிமுகப்படுத்தினார். இந்த வேளை வரையிலும் அவர், "அவருடைய வேளை இன்னும் வரவில்லை" என்று கூறியிருந்தார் (யோவா. 7:30; யோவா. 2:4; 7:6; 8:20ஐக் காணவும்); இப்போது அது வந்திருந்தது (யோவா. 13:1ஐக் காணவும்).

"வேளை வந்தது" என்று இயேசு கூறியபோது, அவர் தமது மரணத்தையே முதலாவதாக தம் சிந்தையில் கொண்டிருந்தார் (யோவா. 12:24); ஆனால் வேத வசனப்பகுதியானது அதன் தொடர்பான பல சிந்தனைகளைத் தொடுகிறது. இந்தக் காரணத்தினாலேயே, "வேளை வந்தது" என்பதன் மீதான நமது படிப்பு பல்வேறு வகையான

தலைப்புக்களை எடுத்துரைத்து முடிக்கும். இருப்பினும் சிலுவை என்பதே எப்போதும் மையக் கருத்தாக இருக்கும்.

## சிலுவை மற்றும் ஒப்புவித்தல் ஆகியவற்றிற்கான வேளை (வ. 23-26)

**சிலுவை (வ. 23, 24)**

கிறிஸ்து, "மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான[10] வேளை வந்தது" என்று கூறித் தமது பிரசங்கத்தைத் தொடங்கினார் (வ. 23). "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடர் மேசியாவைக் குறிப்பிட்டது (தானி. 7:13). "கிறிஸ்து மகிமைப்படும்படியான வேளை வந்தது" என்று இயேசு கூறினார். அவர் தமது மரணத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தார் (யோவா. 12:24), ஆனால் அவர் கல்லறைக்கு அப்பால் உயிர்த்தெழுதலையும் பரத்துக் கேறுதலையும் காணக்கூடியவராயிருந்தார்.

இயேசுவின் வார்த்தைகள் கூட்டத்தினரை அநேகமாக உணர்வெழுச்சி அடையச் செய்திருக்கலாம். அவர்களின் சிந்தைகளில், "மகிமைப்படுதல்" என்ற வார்த்தையானது, மேசியாவின் அரசியல் ரீதியான ராஜ்யத்தை அமைத்தல் என்பதைக் குறிப்பிட்டிருக்கலாம். அவர்கள் ஒரு சில நாட்களுக்கு முன்பு கிறிஸ்து நகருக்குள் சென்ற வெற்றிப் பிரவேசத்தின் போது அவர் மகிமைப்படுத்தப்படுவார் என்று எதிர்பார்த்திருந்தனர், ஆனால் சில காரணங்களினால், அவர்களின் எதிர்பார்ப்புகளை அவர் நிறைவேற்றாதிருந்தார். கடைசியாக, இப்போது அவர் மகிமைப்படுதலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் அநேகமாக, ரோமர்களுக்கு எதிராகக் கிறிஸ்து தமது அரியணையை ஸ்தாபித்தலுக்கான முகாமைத் தொடங்குதலின் கால அட்டவணையை அறிவிப்பார் என்று மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்திருக்கலாம். நீண்ட காலத்திற்குப் பின்பு கடைசியாக, நித்தியத்திற்கான எக்காள முழக்கம் ஒலிக்கப்பட்டு, பரலோக சேனைகள் அணிவகுத்து நின்றது, வெற்றி கண்ணுக்கெட்டிய தொலைவில் இருந்தது என்பதே அவர்களின் அழுத்தமான எண்ணமாக இருந்தது! இராணுவ யுக்திகளுக்குப் பதிலாக, மரித்தல் என்பதைப் பற்றிக் கிறிஸ்து பேசத் தொடங்கியபோது அவர்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும்!

கர்த்தர் ஒரு எளிய ஆனால் வல்லமை நிறைந்த விவரிப்பைப் பயன் படுத்தினார்: "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு கிறேன், கோதுமைமணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (வ. 24). ஒரு அலமாரியில் விதை ஒன்றை வையுங்கள், அது பெருகாது; அது "தனியாகவே இருக்கும்." நிலத்தில் விதையை விதைத்து அதைப் போஷியுங் கள், அது "மரிக்கும்" (அதாவது, அது உருவழிந்து தனது அடையாளத்தை இழக்கும்) - ஆனால் இந்த "மரணம்" அதை "மிகுந்த பலனைக் கொடுக்கக்" கூடியதாக்கும். அது நூறு மடங்காக, அறுபது மடங்காக அல்லது முப்பது

மடங்காகப் பெருகும் (மத். 13:8). இந்த விவரிப்பில் இயேசுவே விதையாக இருக்கின்றார். அவர் மரிக்கவில்லையென்றால், அவர் தமது ஜீவனைக் காத்துக் கொள்வார், ஆனால் அவரால் மற்றவர்களை ஆசீர்வதிக்க முடியாது. புதிய ஜீவனை இருக்கும் நிலைக்குக் கொண்டு வருவதற்கு, அவர் மரணம் அடைதல் என்பதுதான் ஒரே வழியாக இருந்தது.

***ஒப்புவித்தல் (வ. 25, 26)***

கிறிஸ்து தொடர்ந்து, "தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" என்று கூறினார் (வ. 25). இவ்விடத்தில் பயன்படுத்தப்படும் விதத்தில், "வெறுக்கிறவன்" என்பது "குறைவாய் நேசிக்கிறவன்" என்று அர்த்தப்படுகிறது; நாம் கர்த்தருடைய சித்தத்தைச் செய்தலை நேசிப்பதைக் காட்டிலும் குறைவாகவே நமது ஜீவனை நேசிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இந்தப் பிரசங்கம், முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரைகளால் நிறைந்துள்ளது: "நீங்கள் உங்கள் ஜீவனை நேசித்தால் அதை இழந்துபோவீர்கள்"; "நீங்கள் உங்கள் ஜீவனை வெறுத்தால், அதைக் காத்துக்கொள்வீர்கள்"; "மரித்தல் என்பது தான் வாழ்வதற்கு ஒரே வழியாக உள்ளது."

இயேசு தமது வார்த்தைகளை முதலில் தமக்கே நடைமுறைப் படுத்தினார்: அவர் தமது நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால், தேவனுடைய திட்டங்களில் அவர் மதிப்புடையவராய் இருக்க வேண்டு மென்றால், அவர் மரிக்க வேண்டியதாயிருந்தது. அவர் தமது வார்த்தை களை நமக்கும் நடைமுறைப் படுத்துவார். நாம் தேவனுக்கு மதிப்புடைய வர்களாய் இருக்க வேண்டுமென்றால், நாமும் கூட "மரிக்க" வேண்டும். ஆதிக் கிறிஸ்தவர்களில் பலர் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருப்பதற்காக, உடல்ரீதியாக மரிக்க வேண்டியிருந்தது (வெளி. 2:10). அவ்வகையான தியாகத்தைச் செய்யும்படி நாம் அழைக்கப்பட்டிரா திருப்பினும்கூட, நாம் இன்னமும் "சுயத்திற்கு மரிக்க" வேண்டியுள்ளது. பவுல், "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்; ... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று எழுதினார் (கலா. 2:20அ).

இயேசு தொடர்ந்து பிரசங்கிக்கையில், அவர் தமது சிந்தனையைப் பெருக்கி, "மரித்தலுக்கான" மனவிருப்பத்துடன் இருப்பதற்கு வல்லமை நிறைந்த தூண்டுதலைக் கொடுத்தார்: அவருக்கு ஊழியம் செய்தல். அவர், "ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் ..." என்று தொடங்கினார் (யோவா. 12:26அ). நாம் கர்த்தருக்குச் சுயநலமற்ற ஊழியத்தில் ஒப்புவித் தலுடன் இருப்பதன் மூலம் நமது ஜீவனை "வெறுப்பதை" காண்பிக்கின் றோம். அந்த ஒப்புவித்தலை மேற்கொள்ள மனதாயிருக்கிறவர் "என்னைப் பின்பற்றக்கடவன்" என்று இயேசு கூறினார் (வ. 26ஆ). அவரது அடுத்த கூற்றானது, இவ்வகையான உறுதிப்பாட்டைத் தகுதியுடையதாக மேற்கொள்ளுவதில் கிடைக்கும் பலன்கள் மீது கவனம் செலுத்திற்று. அவர், "நான் எங்கே இருக்கிறேனோ[11] அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்"

*என்று கூறினார் (வ. 26இ). (அந்தச் சிந்தனையைக் கிறிஸ்து பிற்பாடு யோவான் 14:1-3ல் விரிவாக்கினார்.) பின்பு அவர், "ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" என்று கூடுதலாகக் கூறினார் (யோவா. 12:26ஈ). தேவனாலேயே கனம்பண்ணப் படுதலைக் கற்பனை செய்து பாருங்கள்! பவுல், "அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்று கூறினார் (2 கொரி. 4:17)!*

## போராட்டம் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றிற்கான வேளை (வ. 27-30)

**போராட்டம் (வ. 27)**

*மரித்தலைப் பற்றிப் பேசுவதற்கு இயேசு தயங்காதிருந்தார், ஆனால் அது, அவர் அந்த விஷயத்தைச் சந்தோஷமானதாகக் கண்டார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. மரணத்தை எதிர்கொள்ளுதல் என்பது நமக்குச் சுலபமானதாக இருப்பதில்லை, அது கர்த்தருக்கும் கூடச் சுலபமானதாக இருந்ததில்லை. அவர் நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்ட இயந்திர மனிதனாக இருந்ததில்லை. அவர் மாம்சமும் இரத்தமும் உடையவராயிருந்தார்; நாம் மனம் புண்படுவதுபோன்றே அவரும் மனம் புண்பட்டிருந்தார்.*

*கிறிஸ்து, "... கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கடவது" என்று ஜெபித்த கெத்செமனேத் தோட்டத்துக் காட்சியை (மத். 26:39) யோவான் பதிவு செய்யவில்லை.[12] இருப்பினும் அவர் கெத்செமனே தோட்டத்திற்குச் செல்லுமுன்பாக இயேசுவின் ஆத்துமாவுக் குள் இருந்த நிலை பற்றிய குறிப்பு ஒன்றை நமக்குத் தந்தார். கர்த்தர், "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது" என்று கூறினார் (யோவா. 12:27அ).* The New English Bible *என்ற வேதாகமத்தில்* "my soul is in turmoil" *("என் ஆத்துமா கலவரம் அடைந்திருக்கிறது") என்றுள்ளது. பயங்கரமான விஷயங்கள் எதிர்கொண்டிருந்தன: உடல்ரீதியான மரணத்தின் பெருந்துன்பம் மற்றும் ஆவிக்குரிய மரணத்தின் (தேவனை விட்டுப் பிரிந்திருத்தலின்) பெருந்துன்பம் ஆகியவற்றுடன் கூடுதலாக, சிலுவையின் வெட்கக்கேடு, சாத்தானுடன் ஆவிக்குரிய போராட்டமும் (12:31), மற்றும் பதினைந்து நூற்றாண்டுக் காலமாக போஷிக்கப்பட்டிருந்த தேவனுடைய மக்களால் புறக்கணிக்கப்படுதல் என்ற மனவலியும் இருந்தன.*

*இவையெல்லாவற்றின் வெளிச்சத்தில் இயேசு, "நான் என்ன சொல்லு வேன்?" என்று கேட்டார் (வ. 27ஆ). அதாவது, "நான் எந்த விஷயத்திற்காக ஜெபிக்க வேண்டும்?" அவர், "பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும்" (வ. 27இ) என்று ஜெபிக்க வேண்டுமா? இல்லை.[13] அவர், "ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்" என்றார் (வ. 27ஈ). அவர் "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" வந்திருந்தார் (லூக். 19:10). அவர் மரிப்பதற்காகவே பூமிக்கு வந்திருந்தார் (பிலி. 2:7, 8).*

**உறுதிப்பாடு (வ. 28-30)**

இயேசு கீழ்ப்படிதலின் பின்வரும் வார்த்தைகளை உரைத்தார்: “பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்” (வ. 28அ). அவர் வாழ்நாள் முழுவதிலும் கீழ்ப்படிதலினால் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தி யிருந்தார் (யோவா. 17:4ஐக் காணவும்); அதை, இன்னும் அவர் தமது மரணத்தினால் மகிமைப்படுத்துவார்.

அந்த வேளையில் எதிர்பாராத விஷயம் ஒன்று நடைபெற்றது: “அப்பொழுது ... ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று” (யோவா. 12:28இ). இயேசுவின் ஊழியத்தின்போது, தேவன் மூன்றுமுறை வானத்தி லிருந்து பேசினார்: அவர் ஞானஸ்நானம் பெற்றபோது (மத். 3:17), அவர் மறுரூபமடைந்தபோது (மத். 17:5), மற்றும் இந்த வேளையில் அந்த சத்தம், “[எனது நாமத்தை] மகிமைப்படுத்தினேன். இன்னமும் மகிமைப்படுத்து வேன்” என்று கூறிற்று (யோவா. 12:28ஆ). தேவனுடைய நாமம் இயேசுவின் வாழ்வில் மகிமைப்படுத்தப்பட்டிருந்தது; இப்போது அது சிலுவையினால் மகிமைப்படுத்தப்படும்.

என்ன நடந்தது என்பது பற்றிய கருத்தில் மக்களிடையே பிரிவினை உண்டாகுமளவுக்குக் கூட்டமானது வானத்திலிருந்து வந்த அறிவிப்பினால் திகைப்படைந்தது. ‘‘அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக் கேட்ட ஜனங்கள்: ‘இடிமுழக்கமுண்டாயிற்று’ என்றார்கள். வேறுசிலர்: ‘தேவதூதன் அவருடனே பேசினான்’ என்றார்கள்” (வ. 29). நாம் கேட்பதற்குத் தயாராக இருக்கின்றவற்றை மட்டுமே நாம் கேட்கின்றோம் என்ற உண்மை நமக்கு நினைவூட்டப்படுகிறது. எடுத்துக்காட்டாக, நமது காதுகள் கேட்க முடியாத சத்தங்கள் காற்று மண்டலத்தில் நிறைந்துள்ளன. இருப்பினும் நாம் ஒரு வானொலியை இயங்கச் செய்து ஒரு நிலையத்திற்கு அதை இசைவிக்க முடிந்தபின்பு, வார்த்தைகளையோ அல்லது இசையையோ கேட்கின்றோம். இயேசுவுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவர்களில் பலர் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்குத் தயாரான நிலையில் இருந்ததில்லை; அவர்களுக்கு அது ஒரு “இடிமுழக்கம்” என்பதாக - அதிகமான சத்தம் என்பதாக மட்டும் - இருந்தது. அதுபோலவே, இன்றைய நாட்களிலும் பலர் இயற்கையிலோ (ரோமர் 1:20) அல்லது வேதாகமத்திலோ (எபி. 1:1, 2) தேவனுடைய சத்தத்தைக் “கேட்பதற்குத்” தயாராக இருப்பதில்லை.

எழுத்தாளரான யோவானைப் போன்றே, சிலர் அந்த சத்தத்தைக் கேட்டு அதைப் புரிந்துகொண்டனர். அருகில் இருந்தவர்களிடம் (விசேஷ மாக அப்போஸ்தலர்களிடம்) திரும்பிய இயேசு, “இந்தச் சத்தம் என்னி மித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று” என்றார் (யோவா. 12:30). இந்தச் சொல்விளக்கமானது, அநேகமாக, “என்னிமித்தம் மட்டுமின்றி, உங்கள் நிமித்தமாகவும்’’ என்று அர்த்தப்படுவதாக இருக்கலாம்.[14] பிதாவினால் ஏற்படுத்தப்பட்ட இந்த உறுதிப்பாடு, குமாரனை வரவிருந்த அவரது சோதனைகளுக்கு/விசாரணைக்குட்படுதல்களுக்கு நிச்சயமாகவே பலப்படுத்திற்று, ஆனால் அது, எதிர்கொண்டு வரவிருந்த இயேசுவின் இலக்கு, தேவனுடைய கால அட்டவணையின்படியானதாக இருந்தது என்று சீஷர்களை இணங்க வைக்கும்படியாகவே வடிவமைக்கப் பட்டிருந்தது.

# வெற்றிகொள்ளுதல் மற்றும் மாற்றம் ஆகியவற்றிற்கான வேளை (வ. 31-33)

***வெற்றிகொள்ளுதல் (வ. 31)***

*இயேசு சிலுவையில் மரிக்கும் வேளையில் குறிப்பிடத்தக்க பல விஷயங்கள் நடைபெறவிருந்தன. எடுத்துக்காட்டாக, அது ஒரு வெற்றியின் வேளையாக, பொல்லாங்கான சக்திகளின்மீது பெறும் வெற்றியின் வேளையாக இருக்கும். அது தோல்வியின் தருணமாக இருப்பது போலக் காணப்படும், ஆனால் அது உண்மையில் வெற்றிமுழுக்கத்தின் வேளையாக இருக்கும்.*

*இயேசு, ''இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின்[15] அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்" என்றார் (வ. 31). "இந்த உலகத்தின் அதிபதி" என்பது சாத்தானைக் குறிக்கிறது (யோவா. 14:30; 16:11ஐக் காணவும்). சிலுவை என்பது சாத்தானுடனான இறுதி நிலை யுத்தமாக இருக்கும். இன்றைய நாட்களில், நன்மை தீமை ஆகியவற்றிற்கிடையில் கற்பனையான, மாயாவாத யுத்தம் பற்றிப் பலர் பேசுகின்றனர் (இது அடிக்கடி "அர்மெகதோன் யுத்தம்" என்று குறிப்பிடப்படுகிறது), ஆனால் அந்த இறுதி நிலையான யுத்தம் சிலுவையில் நடைபெற்றது என்று வேதாகமம் கூறுகிறது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளான வர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும்" அவர் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் என்று கூறினார் (எபி. 2:14, 15). சாத்தான் இன்றைக்கும் செயல்படுகின்றவனாகவே இருக்கின்றான் (1 பேது. 5:8), ஆனால் நம்மீதான அவனது பற்றுதலான பிடிப்பு முறிக்கப்பட்டுள்ளது; அவன் தோற்கடிக்கப்பட்ட ஒரு விரோதியாக இருக்கின்றான் (யாக். 4:7).*

***மாற்றம் (வ. 32, 33)***

*பாவத்தின் மீதான வெற்றி என்பதே சிலுவையில் பெறப்படவிருந்த மிக முக்கியமான வெற்றியாக இருக்கும் (2 கொரி. 5:21; எபே. 1:7). இயேசுவைக் காண விரும்பிய கிரேக்கர்களை அவர் தமது பிரசங்கத்தில் ஒருக்காலும் மறக்காதிருந்தார். இப்போது அவர், தமது மரணமானது யூதர்களுக்கு மட்டுமானதாக இராமல் எல்லா மனிதர்களுக்குமானதாக இருக்கும் என்று எடுத்துரைத்தார்: "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவா. 12:32).*

*"உயர்த்தப்பட்டிருத்தல்'' என்ற சொற்றொடரானது மேன்மைப் பட்டிருத்தல் என்பதைக் குறிப்பதற்கு புதிய ஏற்பாட்டில் மற்ற இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 தீமோ. 3:6; யாக். 4:10), ஆனால் இது யோவான் சுவிசேஷத்தில் எப்பொழுதுமே கர்த்தருடைய மரணத்தைக் குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 3:14; 8:28). நமது*

வேத பாடப்பகுதியின் அடுத்த வசனமானது, "தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறிப்பிடும்படி இப்படிச் சொன்னார்" என்பதை வெளிப்படுத்துகிறது (யோவா. 12:33).[16] அவர் கல்லெறியப்பட்டோ அல்லது யூதர்கள் நிறைவேற்றும் கொலைத் தண்டனையின் வேறு எந்த முறையினாலோ மரிக்கமாட்டார்; மாறாக, அவர் ரோமர்களின் சிலுவையில் "உயர்த்தப்படுவார்."

அது நடைபெறும்போது, அவர் "எல்லாரையும்" தம்மிடத்தில் இழுத்துக் கொள்ளுவார்: அதாவது யூதர்களையும் புறஜாதியார்களையும். அவர் இவ்விருதிறத்தாரையும் ஒரே சரீரமாக ஒன்றாக்குவார். பவுல் பிற்பாடு பின்வருமாறு எழுதினார்:

> எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இரு திறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியார்களையும்] ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்ட திட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியார்களையும்] தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் [யூதர்களையும் புறஜாதியார்களையும்] ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார் (எபே. 2:14-16).

"ஒரே சரீரம்" என்பது சபையாக உள்ளது (எபே. 1:22, 23; கொலோ. 1:18).

இயேசு மக்களை ஓட்ட மாட்டார் அல்லது தள்ள மாட்டார் அல்லது பலவந்தம் பண்ணமாட்டார், ஆனால் அவர்களை அவர் *இழுத்துக் கொள்ளுவார்* என்பதைக் கவனியுங்கள். சிலுவையும் அது பிரதிநிதித்துவப் படுத்தும் அன்பும்தான் தேவனுடைய இழுக்கும் வல்லமையாக உள்ளது (யோவா. 3:16; ரோமர் 5:8). சூரிய ஒளியானது புதிய செடியைப் பூமியிலிருந்து மென்மையாக இழுப்பதுபோலவே, கிறிஸ்துவின் அன்பு மனிதர்களை அவரிடத்திற்கு மென்மையாக இழுக்கிறது.[17]

## குழப்பம் மற்றும் அறைகூவல் ஆகியவற்றிற்கான வேளை (வ. 34-36, 46-48)

### குழப்பம்

இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்ள மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதில் வியப்பெதுவும் இல்லை; அவர்கள் புரிந்துகொள்ள முயற்சி செய்யவில்லை என்பதே பரிதாபகரமானதாக இருந்தது. அவர்கள், "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் [நியாயப்பிரமாணத்தில்[18]] சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம்" என்று பதில் அளித்தனர் (வ. 34அ). இதைப் பழைய ஏற்பாட்டின் வேத வசனப்பகுதி எதுவும் கூறுவதில்லை, ஆனால் மேசியா ஒரு நித்திய ராஜ்யத்தில் என்றென்றும் அரசாளுவார் என்று பழைய

ஏற்பாடு போதிக்கிறது (ஏசா. 9:7; எசே. 37:25; தானி. 7:14ஐக் காணவும்). மேசியா/கிறிஸ்து "என்றென்றைக்கும்" இருத்தல் என்பது ஒன்றுதான் அவர் இதைச் செய்யக்கூடிய ஒரே வழியாக இருந்தது என்று யூதர்கள் முடிவு செய்தனர்.

அவர்கள், "... மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டியதென்று எப்படிச் சொல்லுகிறீர்?" என்று கேட்டனர் (யோவா. 12:34ஆ). "உயர்த்தப் படுதல்" என்ற சொற்றொடர் சிலுவையில் அறையப்படுதலை குறித்தது என்று அவர்கள் புரிந்துகொண்டனர் என்பது தெளிவு, ஆனால் இது மேசியாவைப் பற்றிய அவர்களின் முன்கருத்துக்களுக்குப் பொருந்த வில்லை. அவர் எப்படி மரித்தும் ஆளுகை செய்யமுடியும்? இயேசு "மனுஷ குமாரன்" என்ற சொற்றொடரைத் தங்களுக்குப் பழக்கமற்ற ஏதோ ஒரு கருத்தில் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவுசெய்தனர். அவர்கள், "இந்த மனுஷ குமாரன் யார்?" என்று கேட்டார்கள் (வ. 34இ). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீர் மேசியாவைப் பற்றிப் பேசுகின்றீரா, அல்லது நீர் வேறு யாரைப் பற்றியாவது பேசுகின்றீரா?" என்று அவர்கள் கேட்டனர்.

**அறைகூவல் (வ. 35, 36, 46-48)**

அவர்களின் கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் அளிப்பதற்கு மாறாக, மறைமுகமாகப் பதில் அளித்தார்: உண்மையில் அவர், உலகத்திற்கு "ஒளி"யாக இருக்கின்றார் என்று குறிப்பிட்டவரே "மனுஷகுமாரன்" என்று பதில் அளித்தார் (வ. 35; 8:12; 9:5ஐக் காணவும்). இருப்பினும், தமது உரையைக் கேட்டவர்கள் மேசியாவைப் பற்றிய விவரிப்பான பட்டப் பெயர்களை வகைப்படுத்தக் கூடியவர்களாயிருக்க வேண்டும் என்பது அவரது சிந்தையில் மேலோங்கியிருந்த எண்ணமல்ல. மாறாக, அவர்கள் தம்மை மேசியா என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமே என்றே அவர் விரும்பினார்.

இவ்வேளையானது அநேகமாக, இந்த மக்கள் விசுவாசிக்கும்படி அவர்களை வற்புறுத்துவதற்கு அவரது தனிப்பட்ட வகையிலான கடைசி வாய்ப்பாக இருந்திருக்கலாம். பல வேளைகளில் நான் ஒரு மக்கள் கூட்டத்திற்கு, அவர்களில் சிலருடன் பேசுவதற்கு இனி ஒருபோதும் இன்னொரு வாய்ப்பைக் கொண்டிருக்க மாட்டேன் என்று அறிந்த நிலையில் பிரசங்கித்திருக்கின்றேன். பொறுப்பு [என்னை] மூழ்கடிக்கக் கூடியதாக இருந்தது. நான் என்ன கூறமுடியும்? நான் என்ன கூறவேண்டும்?

அந்தக் கணத்தின் அவசரத்தன்மை என்பதே கிறிஸ்துவின் வேண்டு கோளில் வலியுறுத்தமாக இருந்தது. அவர், "இன்னும் கொஞ்சக் காலம் ஒளி உங்களிடத்தில் இருக்கும்" என்றார் (12:35அ). முன்பே அவர் தம்மை "உலகிற்கு ஒளி" என்று அடையாளப்படுத்தியிருந்தார் (9:5). அவர் தமது மரணத்திற்கு முன்பு இந்த மக்களிடத்தில் இன்னும் ஒரு சில நாட்களே இருப்பார். ஆகையால் அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்: "இருளில் நீங்கள் அகப்படாதபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில்

நடவுங்கள்; இருளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று அறியான்" (12:35ஆ). அவர்கள் தம்மைக் கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளு மாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்: "ஒளி உங்களோடிருக்கையில் ... ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்" (வ. 36ஆ). அவர்கள் அவரில் விசுவாசமாயிருந்தால், அவர்கள் "ஒளியின் பிள்ளைகளாயிருப்பார்கள்" (வ. 36ஆ). அவர்கள் அவரது ஒளியின் பிரதிபலிப்புகள் ஆவார்கள்.

அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தால் என்னவாகும்? இந்த அத்தியாயத்தின் கடைசிப்பகுதியைக் கண்ணோக்குகையில், ஒளியைப் புறக்கணித்தலின் பரிதாப நிலையை நாம் காண்கின்றோம். அங்கு இயேசு பின்வருமாறு கூறினார்:

> என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராத படிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன். ஒருவன் என் வார்த்தை களைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந் தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (வ. 46-48).

யோவான், இந்தப் பிரசங்கம் பற்றிய தமது விவரத்தை, "இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு மறைந்தார்" என்று கூறி முடித்தார் (வ. 36இ). கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நமது வரைக்குறிப்பு சரியானதாக இருந்ததென்றால், அவர் தமது சீஷர்களுடன் அங்கிருந்து "புறம்பே புறப்பட்டு," ஒலிவ மலையின் சரிவுகளுக்குச் சென்றார் (மத். 24:1, 3). இருப்பினும், "எங்கே" என்பது முக்கியமல்ல: முக்கியமானது எதுவென்றால் அவர் புறப்பட்டுச் சென்று அவர்களை விட்டு "மறைந்தார்" என்பதே முக்கியம். வாய்ப்பிற்கான அவர்களின் நாள் கடந்து சென்றிருந்தது.

## முடிவுரை

கர்த்தரின் "கடைசிப் பிரசங்கத்திற்கு" மக்கள் எவ்வகையான பதில்செயலைக் கொண்டிருந்தனர்? யூதர்களின் மத்தியில் மேலோங்கி யிருந்த அவிசுவாசத்தை யோவான் 12ன் கடைசிப் பகுதி (வ. 37-50) வலியுறுத்துகிறது. மக்களைப் பதில்செயல் செய்யும்படி நான் வற்புறுத்தி, அவர்கள் அதைச் செய்யாதபோது நான் எவ்வளவு கவலையாய் இருக்கின் றேன் என்பதை நான் அறிவேன்; இயேசுவின் உரையைக் கேட்டவர்களின் மத்தியில், பதில்செயலில் இருந்த குறைபாடு அவரது இருதயத்தை உடைத்தது என்பது உறுதி.

இருப்பினும் இப்போது, நாம் சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த வேண்டியுள்ளது.[19] நாம் இயேசுவை மதிக்கின்றோமா? நாம் சிலுவையை மதிக்கின்றோமா? சிலுவை இயேசுவுக்கு எவ்வளவு *விலையாயிற்று* என்பதை நாம் மதிக்கின்றோமா (வ. 27)? இந்தப் பொழுதின் அவசரத்தை நாம் புரிந்துகொள்ளுகின்றோமா? உங்கள் பதில்செயலுக்கான

*"வேளை வந்துள்ளது." நீங்கள் கர்த்தரிடத்தில் வருவது அவசியமாயிருந்தால், அதை இப்போதே செய்யும்படி நான் உங்களை வேண்டுகின்றேன்.*

---

*குறிப்புகள்*

*[1]பொதுவாக நான் ஒரு பகுதியின் உள்ளூர் சபையின் பிரசங்க முகாம்களின் போது பிரசங்கிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படும்போது, தலைப்புக்கள் கருத்தாகத் தெரிவிக்கப்படுகின்றன. [2]முன்பே குறிப்பிடப்பட்டபடி, கிரேக்கர்களுடனான இந்த நிகழ்ச்சி எப்போது நடைபெற்றது என்று நம்மால் உறுதியாகக் கூற இயலாது. [3]இயேசு பெண்களின் மண்டபத்தில் இருந்திருக்கலாம். நமது வரைக்குறிப்பில் இந்த வரலாற்றிற்கு முன்பு விதவையின் இரண்டு நாணயங்கள் பற்றிய வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சி, பெண்களின் மண்டபத்தில் வைக்கப் பட்டிருந்த காணிக்கைப் பெட்டியினருகில் நடந்தது (லூக். 21:1). பெண்களின் மண்டபத்திற்குள் புறஜாதியார் வரமுடியாது. இது, இந்த வரலாற்றில் கிரேக்கர்கள் இயேசுவைக் காண விரும்பிய விவரத்துடன் பொருந்துகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இயேசு தாம் இருந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு, கிரேக்கர்கள் அவரைக் காணமுடிவதற்கு முன்பு புறஜாதியாரின் மண்டபத்திற்குச் சென்றிருப்பார். [4]புதிய ஏற்பாட்டில் - யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் உட்பட - பலர் ''தேவனுக்குப் பயந்திருந்ததாக'' கூறப்படுகின்றனர். ஆனால் இந்த வார்த்தைகள் இன்னும் யூதர்களாகாதிருந்த, விசுவாசமுள்ள புறஜாதியாருக்கு ஒரு விசேஷித்த கருத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன. [5]"யூத மார்க்கத்தமைந்தவர்" என்ற சொற்றொடரானது proserchomai என்ற கிரேக்க வார்த்தையுடன் தொடர்புடையதாக உள்ளது, இது pros (''க்கு'' அல்லது ''நோக்கி'') என்ற முன்னிடைச் சொல்லை erchomai ("வருதல்") என்ற வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்டது. புதிய ஏற்பாட்டில், இது யூதத்துவத்திற்கு "வந்து" அதைத் தழுவிக் கொள்ளும் புறஜாதியாரைக் குறிக்கிறது. யூதமார்க்கத்தமைந்தவராகுதலில் மூன்று மடங்கான சடங்கு உள்ளடங்கிற்று: (1) ஆணாயிருந்தால், விருத்தசேதனம்; (2) சாட்சிகளின் முன்னிலையில் சுய-ஞானஸ்நானம் (முழுக்காட்டிக் கொள்ளுதல்); மற்றும் (3) (தேவாலயம் நிற்கும் வரை) ஒரு பலி செலுத்துதல். விருத்தசேதனம் தேவை என்று கூறப்பட்டதால் ஆண்களைவிட அதிகமான அளவில் பெண்கள் மனம்மாறினர். [6]"பிலிப்பு" என்பது "குதிரையை நேசிப்பவர்" என்று அர்த்தப்படுகிற கிரேக்கக் கூட்டுவார்த்தையின் சுருக்கச் சொல்லாக உள்ளது. [7]இரண்டு பெத்சாயிதாக்கள் இருந்தன. ஒன்று கலிலேயாக்கடலின் மேற்குப் பகுதியில் கப்பர்நகூமுக்கு அருகில் இருந்தது (மாற். 6:45). இன்னொன்று உண்மை யில் பெத்சாயிதா-ஜூலியஸ் என்று அழைக்கப்பட்டது, இது கடலின் வடகிழக்கில் இருந்த ஒரு கிராமமாக இருந்தது. பிலிப்பு அநேகமாகக் கப்பர்நகூமுக்கு அருகில் இருந்த பெத்சாயிதாவில் வாழ்ந்திருக்கலாம், ஆனால் அவர் அடிப்படையில் புறஜாதியாரின் பகுதியாக இருந்த கலிலேயாக் கடலின் கிழக்குப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம். [8]தொடக்க கால சபை வரலாற்றாளரான ஈசுபியஸ் அவர்கள், சீரியா நாட்டின் அரசனால் இயேசுவுக்கு ஒரு அகத் தொண்டு அளிப்பதற்காகக் கிரேக்கர்கள் அனுப்பப்பட்டனர் என்று ஏவுதல் பெற்றிராத பாரம்பரியமொன்று கூறியதாக குறிப்பிட்டார் - ஆனால் இது நிரூபணமற்ற கூற்றாக உள்ளது. [9]பிலிப்புவும் அந்திரேயாவும் ஒரே ஊரில் இருந்து வந்தவர்களாய் இருந்தனர் (யோவா. 1:44). [10]"மகிமை" என்பது கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய யோவானின் விவரத்தின் பிற்பகுதியில் பிரதானமான ஆய்வுப் பொருளாக உள்ளது. நீங்கள்*

*வாசிக்கும்போது அதைக் கவனியுங்கள்.*

*[11]இயேசு பரலோகத்தில் இருப்பார் (2 கொரி. 5:8; பிலி. 1:23; வெளி. 21:3ஐக் காணவும்). [12]அந்தக் காட்சி, முன்னதாக எழுதியிருந்த ஒப்பீட்டு சுவிசேஷ எழுத்தாளர்களால் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டிருந்தது. [13]யோவான் 12:27ல் உள்ள ''ஆகிலும்'' என்ற வார்த்தையானது alla என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்த்த சொல்லாக உள்ளது, இது ஒரு* adversative*ஆக உள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் அநேகமாக, ''ஆகிலும்'' என்பதை விட பலமான வார்த்தையொன்று தேவைப்படலாம்.* RSV*யில்* "No" *என்றுள்ளது. [14]இது ஒரு சில வார்த்தைகளால் கூறப்படாத ஆனால் புரிந்துகொள்ளப்படக் கூடிய பேச்சுருவகமான ''வாக்கியச் சொல்லெச்சம்'' என்று அழைக்கப்படுகிறது. [15]இவ்விடத்தில் "முறைமை" என்ற அடிப்படை அர்த்தம் கொண்ட kosmos என்ற கிரேக்க வார்த்தை, ''உலகம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வசனத்தில், இது அண்டத்தையல்ல, ஆனால் பூமியையே குறிக்கிறது. குறிப்பாக இது, பாறைகள் மற்றும் மரங்கள் போன்ற உலகப் பொருட்கூறுகளையல்ல, மாறாக "உலக அமைப்புமுறை"யைக் குறிப்பிடுகிறது. [16]யோவான் 12:32ல் உள்ள* "if" *[ஆங்கில வேதாகமத்தில்* "when I am lifted up" *என்றுள்ளது, ஆனால் தமிழ் வேதாகமத்தில் "நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது" என்றுள்ளது] என்ற வார்த்தையானது [தமிழில் உள்ளதுபோல்] ''போது'' என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது: ''நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது ...'' அவருக்கு வரவிருந்த சிலுவை மரணத்தில் ஐயம் எதுவும் இருந்ததில்லை (அடுத்த வசனத்தைக் காணவும்). [17]காந்தம் ஒன்றின் இழுக்கும் தன்மை இங்கு பயன்படுத்தக்கூடிய இன்னொரு ஒப்புவமையாக உள்ளது. [18]"நியாயப்பிரமாணம்" என்பது இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளபடியாக, பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களை மட்டுமல்ல, ஆனால் பழைய ஏற்பாடு முழுவதையும் குறிப்பதாக உள்ளது. [19]நீங்கள் இந்த நடைமுறைப் பயன்பாட்டை உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பொருந்தும்படி விரித்துரைக்க விரும்பலாம். நீங்கள் வசனம் 25, 26ல் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட அறைகூவல்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்பலாம்: "நாம் மரிக்கத் தயாராக இருக்கின்றோமா இல்லையா என்பதை நாமே முடிவு செய்ய வேண்டும். நாம் நமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புவிக்கத் தீர்மானிக்க வேண்டும். நாம் அவரது அறைகூவலின் நிபந்தனைகளிடத்தில் வரவேண்டும்!" நீங்கள் உங்கள் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துகையில், உங்கள் உரையைக் கேட்பவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாத வரையிலும் அவரைப் "பின்பற்ற" தயாராக இருப்பதில்லை என்று அவர்களுக்குக் கூற விரும்புவீர்கள். இது கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் உண்மையற்றுப் போயுள்ள கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் (மாற். 16:15, 16; அப். 2:38; 8:22, 23; யாக். 5:16).*

*79*

# ஆயத்தமாகுதல்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #33*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*
- E. *செவ்வாய்க்கிழமை: "கேள்விகளின் பெரியநாள்" (தொடர்ச்சி).*
  - 7. *எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை பற்றி அப்போஸ்தலர்களுக்கு உரை (தொடர்ச்சி).*
    - c. *இரண்டாம் வருகை பற்றிய போதனை (தொடர்ச்சி).*
      - *(2) உவமைகளும் தொடர்பான போதனையும்:*
        - (a) *பத்துக் கன்னிகைகள் (மத். 25:1-13).*
        - (b) *தாலந்துகள் (மத். 25:14-30).*
        - (c) *செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் (மத். 25:31-46).*
- F. *புதன்கிழமை: புயலுக்கு முன் அமைதி.*
  - *1. இயேசு: ஆயத்தமாகுதல் (மத். 26:1, 2; யோவா. 13:1).*
  - *2. சனதெரீன்: சூழ்ச்சி செய்தல் (மத். 26:3-5; மாற். 14:1, 2; லூக். 22:1, 2).*
  - *3. யூதாஸ்: காட்டிக்கொடுத்தல் (மத். 26:14-16; மாற். 14:10, 11; லூக். 22:3-6).*
- G. *வியாழக்கிழமை: பஸ்காவுக்கு ஆயத்தம் செய்தல் (மத். 26:17-19; மாற். 14:12-16; லூக். 22:7-13).*
- H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள்.*
  - *1. கடைசி இராப்போஜனம்.*[1]
    - a. *பஸ்கா ஆசரிக்கப்படுதல் (மத். 26:20; மாற். 14:17, 18; லூக். 22:14-18).*
    - b. *வாக்குவாதம் கடிந்துகொள்ளப்படுதல் (லூக். 22:24-30).*

### அறிமுகம்

ஆயத்தமாகுதலின், முன்னதாகவே தயாராக இருத்தலின் முக்கியத்துவத்தை நம்மில் பலர் ஒப்புக்கொள்ளுகின்றோம். ஒரு பணியானது பெரியதாக இருந்தாலும் அல்லது சிறியதாக இருந்தாலும், ஒரு நோக்கமானது பாராட்டத் தக்கதாக இருந்தாலும் அல்லது கேள்விக்குரியதாகக் கூட இருந்தாலும்,[2] ஆயத்தமாகுதல் என்பது உதவிகரமானதாக உள்ளது.

ஈசாப் என்பவர் எழுதிய எறும்பு - வெட்டுக்கிளி கதையின் நீதியை நம்மில் பலர் ஒப்புக்கொள்பவர்களாய் இருப்போம்: "நாளைய தேவைகளுக்கு இன்றே தயாராக இருப்பது ஞானமுள்ளதாக இருக்கிறது."[3] ஆயத்தமாகு தலைப் பற்றி வேதாகமத்தில் ஏராளமாகக் கூறப்பட்டுள்ளது: நோவா பேழையை ஆயத்தம் செய்தார் (எபி. 11:7); யோவான் ஸ்நானன் கிறிஸ்து வுக்கு வழியை ஆயத்தப்படுத்தினார் (ஏசா. 40:3; மல்கி. 3:1; மத். 3:3); இயேசு நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் செய்கின்றார் (யோவா. 14:1, 2; மத். 25:34; எபி. 11:16ஐக் காணவும்).

நமது இந்தப் படிப்பானது [பாடமானது] நம்மை, [கிறிஸ்துவின் ஊழிய நாட்களின் கடைசி வாரத்தில் வந்த] செவ்வாய்க்கிழமையின் முடிவில் இருந்து அவர் மரித்த வெள்ளிக்கிழமையின் தொடக்கத்திற்கு எடுத்துச் செல்லுகிற ஒரு மாறுதல் ஏற்படுத்தும் பாடமாக உள்ளது. இந்தப் பாடத்தினூடே ஆயத்தமாகுதல் - தயாராகுதல் என்ற ஆய்வுக் கருத்து இழையோடும்.

## இரண்டாம் வருகைக்கு[4] ஆயத்தமாகுதல் (மத். 25:1-46)

முந்திய பாடத்தில் நாம், மத்தேயு 24:36ல் இயேசு தமது இரண்டாம் வருகை மற்றும் காலத்தின் முடிவு ஆகியவற்றைப் பற்றி சீஷர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கத் தொடங்கியிருந்தார் என்று கருத்துத் தெரிவித்து இருந்தோம் (24:3ஆ). அவரது பதிலானது, அவரது மறுவருகை யின் காலத்தைப் பற்றி எவரொருவரும் அறிய முடியாது (மத். 24:36-41) என்றும், எனவே அவரைப் பின்பற்றுபவர்கள் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் (25:42-51) என்றும் வலியுறுத்திற்று. ஆயத்தமாக நிலைத்திருத்தல் என்பதன் மீதான வலியுறுத்தமானது மத்தேயு 25ம் அத்தியாயம் முழுவதிலும் தொடருகிறது.

#### பத்துக் கன்னிகைகள் (வ. 1-13)

இந்த அத்தியாயம் பத்துக் கன்னிகைகள் பற்றிய உவமையுடன் தொடங்குகிறது.[5] இந்தக் கன்னிகைகள் மணவாளனின் வருகைக்காகக் காத்திருந்தனர் (வ. 1).[6] மணவாளன் வந்து சேர்ந்த பின்பு, திருமண விருந்து என்ற வைபவம் இருக்கும். வரவேற்புக் குழுவினர் என்ற வகையில் இந்தப் பெண்கள், மணமகனின் வழியில் ஒளியூட்டுவதற்கு விளக்குகளை[7] எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

எதிர்பார்த்த வேளையில் மணமகன் வரவில்லை. இதன் விளைவாக, விளக்குகளில் எண்ணெய் தீர்ந்து போக ஆரம்பித்தது. கன்னியர்களில் ஐந்து பேர் "புத்தியுள்ளவர்கள்" என்று குறிப்பிடப்பட்டனர் ["wise" (KJV) அல்லது "prudent" (NASB)], இவர்கள் கூடுதலாக எண்ணெய் கொண்டு வந்திருந்தனர் (வ. 4). மற்ற ஐந்து பேர் "புத்தியில்லாதவர்கள்"[8] என்று குறிப்பிடப்பட்டனர், இவர்கள் கூடுதலாக எண்ணெய் கொண்டு வந்திருக்கவில்லை, எனவே இவர்கள் கூடுதலான எண்ணெய் வாங்குவதற்குச் சென்றனர் (வ. 3, 10).

அவர்கள் சென்றபோது, மணவாளன் வந்தார் மற்றும் அங்கிருந்த யாவரும் விருந்திற்காக வீட்டினுள் சென்றனர். புத்தியில்லாத கன்னிகைகள் திரும்பி வந்தபோது, கதவு அடைத்துத் தாழிடப்பட்டு இருந்ததைக் கண்டனர். அவர்கள் ஆயத்தமாக இராததால், [திருமண] வைபவ நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதைத் தவற விட்டனர்.[9]

"புத்தியுள்ள" ஐந்து கன்னிகைகள் தங்கள் எண்ணெயை மற்ற ஐவருடனும் பகிர்ந்து கொள்ளாதது ஏன் என்று நாம் வியப்படையலாம். இதற்கான பதிலானது இந்த உவமையின் நடைமுறைப் பயன்பாட்டில் காணப்படுகிறது: மணவாளனாகிய (மத். 9:15; யோவா. 3:29ஐக் காணவும்) கிறிஸ்து வரும்போது, பகிர்ந்து கொள்ளப்படும் ஆயத்தமாகுதல் எதுவும், இராது. நான் உங்களை ஆயத்தப்படுத்த இயலாது, நீங்கள் என்னை ஆயத்தப்படுத்த இயலாது. "ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:12).

இயேசு இந்த உவமையைப் பின்வரும் அறைகூவலுடன் முடித்தார்: ''மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்'' (மத். 25:13).

***தாலந்துகள் (வ. 14-30)***

பத்துக் கன்னிகளின் உவமையைத் தொடர்ந்து தாலந்துகளின் உவமை இருந்தது (வ. 14-30). கன்னிகைகளின் உவமை, கிறிஸ்துவின் மறுவருகைக்காக மக்கள் காத்திருக்கும் *நிலையைச்* சித்தரிக்கையில், தாலந்துகளின் உவமை, நாம் காத்திருக்கையில் *ஊழியம் செய்ய* வேண்டும் என்பதைத் தெளிவாக்குகிறது.

தாலந்துகளின் உவமை என்பது, எருசலேமுக்குச் சென்ற பயணத்தின் முடிவுக்கு அண்மையில் பேசப்பட்டதான இராத்தல்களின் (மினாக்களின்) உவமை போன்றதாகவே உள்ளது (லூக். 19:11-27), ஆனால் இதன் வலியுறுத்தம் மாறுபட்டதாக உள்ளது. இராத்தல்களின் உவமையானது, ராஜ்யத்தை நிலைநாட்டுதல் என்பது உடனடியானதாக இராது என்பதை, இயேசுவின் உரையைக் கவனித்தவர்களுக்கு நினைவூட்டிற்று, தாலந்துகளின் உவமையானது, கர்த்தருக்கு உண்மை நிறைந்த ஊழியக்காரனாக இருத்தலின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

தாலந்துகளின் உவமையில், ஒரு எஜமானர் தமது உடைமைகளைத் தமது மூன்று ஊழியக்காரர்களிடத்தில் ஒப்புவித்தார்:[10] அவர் ஒரு ஊழியக்காரரிடத்தில் ஐந்து தாலந்துகளையும், ஒருவரிடத்தில் இரண்டு தாலந்துகளையும் மற்றும் கடைசி ஊழியக்காரரிடத்தில் ஒரு தாலந்தையும் கொடுத்தார். நாம், "talent" என்ற வார்த்தையை "திறமை'' என்பதை அர்த்தப்படுத்துவதற்கே அதிகமாகப் பயன்படுத்துகின்றோம், ஆனால் அந்த நாட்களில், இது ஒரு பண அலகாக இருந்தது - இது ஏராளமான பணமாக இருந்தது. ஐந்து தாலந்து கிடைக்கப் பெற்ற மனிதரும் இரண்டு தாலந்து கிடைக்கப் பெற்ற மனிதரும் தங்கள் எஜமானரின் பணத்தை, இன்னும் அதிகப் பணம் சம்பாதிப்பதற்குப் பயன்படுத்தினர். ஒரு தாலந்து பெற்ற மனிதரோ, தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை இழந்துபோவோமோ

என்று பயந்து, தமது தாலந்தைப் பூமிக்குள் புதைத்து வைத்தார். எஜமானர் திரும்ப வந்தபோது, முதல் இரண்டு ஊழியக்காரர்கள் பலன் அளிக்கப் பட்டனர், அதே வேளையில் மூன்றாவது ஊழியக்காரர் தண்டிக்கப்பட்டார்.

மீண்டுமாக, ஆயத்தமாக நிலைத்திருத்தலின் அவசியம் என்பதே செய்தியாக உள்ளது - அத்துடன் பின்வரும் சிந்தனை கூடுதலாகத் தரப் பட்டுள்ளது: கிறிஸ்துவின் ஊழியத்தில் செயல்முனைப்புடன் இருத்தல் என்பதே கிறிஸ்துவின் மறுவருகைக்கு ஆயத்தமாயிருப்பதற்கான ஒரே வழியாக உள்ளது. அவர் நமக்குக் கொடுத்திருக்கிற வரங்களை அவரை மகிமைப்படுத்துவதற்காக உபயோகப்படுத்த வேண்டும்.

**செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் (வ. 31-46)**

இயேசுவின் உரையானது, அவரது மறுவருகை பற்றிய வரைவளவை யான சித்தரிப்புடன் முடிவு அடைகிறது. கிறிஸ்து, உலகப் பிரகாரமான, அரசியல் ரீதியான ஒரு ராஜ்யத்தை அமைப்பதற்காக மறுபடியும் திரும்பி வருவார் என்றும், அதன் பின்பு அவர் பூமியில் ஆயிரம் ஆண்டு காலம் அரசாளுவார் என்றும் சிலர் போதிக்கின்றனர். ஆயினும், இயேசு தமது மறுவருகையைத் தொடர்ந்து உடனடியாக நியாயத்தீர்ப்பு இருக்கும் என்று சுட்டிக்காண்பித்தார் (வ. 31, 32).[11]

இயேசுவின் நாட்களில் இருந்த மேய்ப்பர்கள், செம்மறி ஆடுகளை வெள்ளாடுகளில் இருந்து பிரித்ததுபோலவே, நியாயத்தீர்ப்பில் கர்த்தர் மனிதர்களைப் பிரிப்பார். செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் ஒன்றாகவே புல்மேய விடுதல் என்பது பழக்கமாக இருந்தது, ஆனால் நாளின் முடிவில் அவற்றைப் பிரித்து விடுவார்கள். மேய்ப்பரைப் பற்றிய இந்த உருவகத்தினால், சிலர் இதை "செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடு கள் ஆகியவற்றின் உவமை" என்று அழைக்கின்றனர். இருப்பினும், இது "ஒரு கதையாக மட்டும்" இருப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். நியாயத்தீர்ப்பு உண்மையானது, மற்றும் அது நிச்சயமானது (எபி. 9:27; அப். 17:31).

தாலந்துகளின் உவமை, எஜமானருக்கு ஊழியம் செய்தலின் முக்கியத்துவத்தைப் போதிக்கிறது. இவ்வசனப்பகுதி நாம் ஊழியம் செய்யக்கூடிய வழிமுறையொன்றின் உதாரணங்களைத் தருகிறது - நிர்ப்பாக்கியமானவர்களுக்கு உதவுவதினால்: பசியுற்ற, நிர்வாணமான,[12] வியாதியுள்ள மற்றும் சிறைப்பட்ட மக்களுக்கு உதவுதல். சகசீஷர்களுக்கு உதவுதல் என்பதன்மீது வலியுறுத்தம் உள்ளது (மத். 25:40),[13] ஆனால் எல்லா மக்களுக்கும் உதவுதல் என்பதன்மீது நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப் படக்கூடும் (கலா. 6:10ஐக் காணவும்).

மத்தேயு 25ன் நியாயத்தீர்ப்புக்கான அடிப்படையானது, நாம் போதிப்பதில் எவ்வளவு ஆரோக்கியமாய் இருக்கின்றோம் என்பதாக இராமல், செயல்பாட்டில் நாம் எவ்வளவு அன்புள்ளவர்களாய் இருக்கி றோம் என்பதாகவே உள்ளது என்று சுட்டிக்காண்பிப்பதில் சிலர் உவகை அடைகின்றார்கள். நாம் இவ்வசனப் பகுதியை, போதனையிலும் வாழ்வி

லும் சரியாக இருத்தலின் அவசியத்தைக் காண்பிக்கிற மற்ற வேத வசனப் பகுதிகளிலிருந்து (எடுத்துக்காட்டாக, தீத்து 2:1; யாக். 1:27ஆ) தனிமைப் படுத்தி விடாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிலருடைய தர்க்கத்தைப் பயன்படுத்துகையில், இயேசுவின்மீதான விசுவாசம் அல்ல ஆனால் நாம் செயல்களில் நல்லவர்களாயிருக்கின்றோமா இல்லையா என்பதே நியாயத்தீர்ப்புக்கு அடிப்படையாக இருக்கிறது - ஏனென்றால் மத்தேயு 25:31-46ல் கிறிஸ்துவின்மீது விசுவாசம் என்பது குறிப்பிடப்பட வில்லை என்று நினைத்துப் பார்க்க இயலாத முடிவை நாம் அடையக்கூடும்.

அதே வேளையில், இந்த வசனங்கள் ஒழுக்கரீதியாகத் தூய்மையாகவும் உபதேச ரீதியாகச் சரியாகவும் இருத்தல் என்பது மாத்திரமே போதுமான தல்ல என்ற கருத்தையும் வலியுறுத்துகின்றன. நமது தேவபக்தியானது தன்னையே பிறருக்கு உதவுவதில் செயல்விளக்கப்படுத்த வேண்டும் (யாக். 1:27அ). "தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (1 யோவா. 4:20ஆ); ‘‘ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக். 4:17).

கிறிஸ்துவின் மறுவருகைக்காக ஆயத்தமாயிருத்தல் என்பது எவ்வளவு முக்கியத்துவமானதாக உள்ளது? ஆயத்தமாயிராதவர்கள் ‘‘நித்திய ஆக்கினை அடையப் போவார்கள்" அதே வேளையில் ஆயத்தமாயிருப் பவர்கள் "நித்திய ஜீவனை அடையப் போவார்கள்" (மத். 25:46). சிலர், நீதிமான்கள் என்றென்றும் உள்ள ஆசீர்வாதங்களுக்குள் செல்லுகையில், துன்மார்க்கர் இல்லாது நிர்மூலமாக்கப்படுவார்கள் என்று உறுதிப்படுத்து கின்றனர். இருப்பினும், மத்தேயு 25:46 வசனமானது, பரலோகம் இருக்கும் வரை நரகமும் "நிலைத்திருக்கும்" என்று போதிக்கிறது.[14] நாம் கர்த்தரின் மறுவருகைக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும்!

## பாடுகளுக்கு ஆயத்தமாகுதல் (மத். 26:1-5, 14-16; மாற். 14:1, 2, 10, 11; லூக். 22:1-6; யோவா. 13:1)

**இயேசு: முன்னுரைத்தல் (மத். 26:1, 2; யோவா. 13:1)**

எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை ஆகியவை பற்றிய கிறிஸ்துவின் பிரசங்கம் (மத். 24 மற்றும் 25), அவரும் அவரது அப்போஸ்தலர் களும், நாளின் பணிக்குப் பின்பு - ஒலிவ மலைச் சரிவுகளில் ஓய்வெடுக்கை யில் நடைபெற்றது (மத். 24:3). இந்த உரையாடல் அநேகமாக செவ்வாய்க் கிழமையின் முடிவின்போது தொடங்கி சூரியன் மறைவிற்குப் பின்பும் - இது யூதர்களின் நாள் கணக்கின்படி, அடுத்த நாளாக இருக்கும் - தொடர்ந் திருக்கலாம். இந்தக் கணக்கீட்டின்படி, அந்த உரைக்குப் பின்பு உடனடியாக இயேசு பேசிய வார்த்தைகள் பஸ்கா பண்டிகைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அதாவது புதன்கிழமையன்று உரைக்கப்பட்டன (மத். 26:2). அந்த

வார்த்தைகள், ஒரு குறுகிய காலத்தில் அவர் மரிக்கவிருந்தார் என்பதற்கு இன்னொரு நினைவூட்டுதலாக இருந்தன (மத். 26:1, 2; மத். 20:17-19உடன் ஒப்பிடவும்).

கிறிஸ்துவால் கூறப்பட்ட அந்தச் சுருக்கமான கூற்றுக்கு அப்பால், புதன்கிழமையின் பெரும்பாகத்தையோ அல்லது வியாழக்கிழமையின் முதல் பாகத்தையோ அவர் எவ்வாறு செலவிட்டார் என்பதற்கு பதிவு எதையும் நாம் கொண்டிருப்பதில்லை.[15] அது புயலுக்கு முந்திய அமைதியாக இருந்தது. வெள்ளிக்கிழமைக்கு முந்திய மணிவேளைகளில், கர்த்தரின் சிந்தை அமைவுக்குள்ளாக ஒரு உட்கண்ணோட்டத்தை யோவான் 13:1 வசனம் நமக்குத் தருகிறது: "பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்." புதன் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் இயேசு தாம் அன்பு வைத்திருந்த சீஷர்களை ஆயத்தமாக்குவதில் தொடர்ந்து செயல்பட்டிருப்பார் என்பதில் ஐயமில்லை. மேலும் அவர் நிச்சயமாகத் தமது பிதாவுடன் உரையாடியிருப்பார் மற்றும் சமீபித்திருந்த பாடுகளுக்காக அநேகமாக ஓய்வு எடுத்திருப்பார்.[16] அவர் கல்வாரிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

**சனதெரீன்: சூழ்ச்சிசெய்தல் (மத். 26:3-5; மாற். 14:1, 2; லூக். 22:1, 2)**

கிறிஸ்து ஓய்வெடுத்து இருக்கலாம், ஆனால் அவரது விரோதிகள் ஓய்ந்திருக்கவில்லை. புதன்கிழமையன்று (மாற். 14:1), சனதெரீன் சங்கத்தார், பிரதான ஆசாரியரான காய்பா என்பவரின் (மத். 26:3) அரண்மனை முற்றத்தில் இரகசியமாகக் கூடினர்.[17] இயேசுவைக் கொலைசெய்ய வேண்டும் என்று முடிவு மேற்கொள்ளப்பட்டிருந்த முந்திய கூட்டத்திற்கு காய்பா தலைமை வகித்திருந்தார் (யோவா. 11:47-53; வ. 49ஐக் கவனிக்கவும்). செவ்வாய்க்கிழமையன்று, ஆலோசனைச் சங்கத்தார் "வார்த்தைகளின் யுத்தத்தில்" இயேசுவைச் சிறுமைப்படுத்தும் முயற்சியில் தோல்வியுற்றியிருந்த நிலையில், அவர் மரித்தாக வேண்டும் என்ற தங்களின் தீர்மானத்தில், சங்கத்தார் முன் எப்போதைக் காட்டிலும் அதிகத் தீர்மானமாக இருந்தனர். அவரைப் பகற்பொழுதில் வெளியரங்கமாக பிடித்துச் செல்ல அவர்கள் பயந்தனர் என்பதே பிரச்சனையாக இருந்தது (லூக். 22:2ஆ-வைக் காணவும்), மற்றும் அவர் இரவில் எங்கு தங்கிக் கொண்டிருந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாததால், அவரைத் தனிப்பட்ட வகையில் சென்று பிடிக்க இயலாதிருந்தது. அவரைப் பிடிப்பதற்கு முன் பண்டிகை முடிய வேண்டும் என்பதற்காக அவர்கள் காத்திருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

***யூதாஸ்: காட்டிக் கொடுத்தல் (மத். 26:14-16; மாற். 14:10, 11; லூக். 22:3-6)***

*சனதெரீன் சங்கத்தாரின் இக்கட்டான நிலைமையானது அவர்கள் எதிர்பார்த்திராத ஒரு வகையில் தீர்த்து வைக்கப்பட்டது: இயேசுவின் அப்போஸ்தலர்களில் ஒருவன் ஒரு தீர்வைக் கொண்டு வந்தான். "அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசாரியருக்குக் காட்டிக்கொடுக்கும்படி அவர்களிடத் திற்குப் போனான்" (மாற். 14:10). யூதாஸ், மற்ற அப்போஸ்தலர்களிடத்தில் ஏதேனும் சாக்குப்போக்குச் சொல்லிக் கிளம்பியிருப்பான் என்பது உறுதி. ஆலோசனைச் சங்கத்தார் எங்கு கூடிவந்தனர் என்பதை அவன் எவ்வாறோ கண்டறிந்தான். அங்கு சென்றவுடன், "நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?" என்று அவன் கேட்டான் (மத். 26:15அ).*

*அவன் "பிரதான ஆசாரியர்களிடத்திலும் சேனைத் தலைவர்களிடத் திலும் போய், அவரைக் காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களோடே ஆலோசனை பண்ணினான்" (லூக். 22:4). இயேசுவின் கால அட்டவணையைக் குறித்து யூதாஸ் நன்கு அறிந்திருந்தபடியால் (யோவா. 18:2ஐக் காணவும்), அவன் அவர்களை இரவில் வழிநடத்த முடியும். பின்பு அவர் "ஜனக்கூட்டமில்லாத வேளையில்" பிடிக்கப்படக்கூடும் (லூக். 22:6). நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட இந்தத் திருப்பம் குறித்துச் சனதெரீன் சங்கத்தார் களிப்படைந்தனர் (மாற். 14:11அ; லூக். 22:5). சந்தோஷமாக "அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்" (மத். 26:15ஆ).*

*யூதாஸின் பொல்லாங்கான செயல், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு உரைக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது (சக. 11:12).[18] வெள்ளிக்காசுகள் என்பவை சேக்கல்கள் (அல்லது சேக்கல்களுக்குச் சமமான சேட்டர்கள்) என்பவையாய் இருந்தன என்று கல்வியாளர்கள் பலர் நம்புகின்றனர்.[19] ஒரு சேக்கல் (அல்லது சேட்டர்) என்பது சுமார் நான்கு தினேரியங்கள் மதிப்புடையதாக இருந்தது. இந்த அதிகாரிகள் சரியானவர் களாய் இருந்தனர் என்றால், "முப்பது வெள்ளிக்காசுகள்" என்பது ஒரு சாதாரணத் தொழிலாளி நான்கு மாதங்களில் சம்பாதிக்கக் கூடிய தொகையைக் குறித்தது.[20] இது "ஒரு அடிமைக்கு நிர்ணயிக்கப்பட்ட தோராயமான விலையாக இருந்தது."[21]*

*முப்பது வெள்ளிக்காசுகள் என்பது கர்த்தர் பிடிபட்ட பின்பு யூதாஸ் பெற்றுக் கொள்ளவிருந்த தொகைக்கு ஒரு முன்பணமாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. மாற்கு 14:11ன்-படி, ஆலோசனைச் சங்கத்தார், "அவனுக்குப் பணங்கொடுப்போம் என்று வாக்குத்தத்தம் பண்ணினார்கள்." லூக்கா சுவிசேஷ விவரத்தின்படி, அவர்கள் "அவனுக்குப் பணங்கொடுக்க உடன்பட்டார்கள்" மற்றும் "அதற்கு அவன் சம்மதித்தான்" (லூக். 22:5, 6). முப்பது வெள்ளிக்காசுகள் என்பது முன்பணமாக மட்டுமே இருந்திருந்தால், இது "அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்" (மத். 26:16) என்ற அந்த அப்போஸ்தலனின் விடா*

முயற்சியை விளக்கப்படுத்த உதவியாயிருக்கும்.[22]

யூதாஸின் காட்டிக்கொடுத்தல் “வரலாற்றின் பொருள்விளங்காச் செயல்களில் ஒன்று” என்று அழைக்கப்பட்டுள்ளது.[23] அந்த இருளான நாளில் இருந்தே, ஏன்? என்ற கேள்வியுடன் மனிதர்கள் போராடிக் கொண்டுள்ளனர். யூதாஸின் பேராசை என்பதே அடிப்படை நோக்கமாயிருந்தது என்று வேதவசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (மத். 26:14, 15; யோவா. 12:6ஐக் காணவும்). இந்த அப்போஸ்தலன் ஒரு சில நாட்களுக்கு முன்னதாக இயேசுவின் கடிந்துகொள்ளுதலில் இருந்து அதிகம் எரிச்சல் அடைந்திருக்கலாம் (யோவா. 12:4-8). இவன் அநேகமாக, இயேசு தமது பிரபலத் தன்மையை அவர் முதலீடு செய்யத் தவறியதினால் ஏமாற்றம் அடைந்திருக்கலாம்.[24] H. I. ஹெஸ்ட்டர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> எருசலேமில் இயேசுவின் ராஜ்யம் பற்றி இவன் ஏற்கனவே அவநம்பிக்கை கொண்டிருந்தான். பொருளாதாரப் பயன்பாட்டைப் பொருத்தவரைக்கும் அது ஒரு உருக்குலைவு என்பதை அவன் உணர்ந்திருந்தான் என்பதில் ஐயமில்லை. இயேசுவுடன் இருப்பதால் தனக்குக் கொஞ்சமே ஆதாயம் கிடைக்கும் என்பதை இவன் உணர்ந்தறிந்தான் ... . அந்தச் செயல்முயற்சி தகர்ந்து போகும் நிலையில் இருந்ததால் இவன் அநேகமாக, இப்போது செய்யக் கூடியதில் இருந்து மிகச் சிறந்த இலாபம் பெறலாம் என்று மதி மயங்கியிருக்கலாம்.[25]

சிலர் யூதாஸிற்குக் களங்கமற்ற நோக்கங்கள் இருந்தன என்று குறிப்பிட முயற்சி செய்துள்ளனர்,[26] ஆனால் இவனது நோக்கங்கள் தூய்மையானவைகளாய் இருந்ததென்றால், சாத்தான் இவனது வாழ்வைக் கட்டுப்படுத்தியிருக்க முடியாது. “யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்” என்று கூறப்பட்டுள்ளது (லூக். 22:3; யோவா. 13:27யும் காணவும்).[27] இவ்வசனங்கள், சாத்தான் யூதாஸை மறுக்கமுடியாத சில வகையில் பிடித்திருந்தான் என்று அர்த்தப்படுத்துவதில்லை (யாக். 4:7ஐக் காணவும்). மாறாக, “சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டி[னான்]” (யோவா. 13:2).[28] சாத்தான் நமது மனங்களில் - நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளைச் சூழ்ச்சியாய்க் கையாளும்படியான - சிந்தனைகளை இடுகிறது போலவே யூதாஸின் இருதயத்திலும் அந்தக் கருத்தை இட்டான். பிசாசானவன் யூதாஸின் மீது செல்வாக்குச் செலுத்த முடிந்தது ஏன்? ஏனென்றால் வஞ்சிக்கிறவனின் கட்டுப்பாட்டிற்கு, இந்த அப்போஸ்தலன் தன்னையே திறந்து கொடுத்தவனாக விட்டிருந்தான்.

ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன, இயேசு மற்றும் அப்போஸ்தலர்களிடத்திற்கு யூதாஸ் திரும்பி வந்தான்.[29] புறம்பாகக் காண்கையில் இவன் முன்னிருந்தது போலவே இருந்தான்;[30] ஆனால் உள்ளாக, ஒரே ஒரு சிந்தனை மாத்திரமே அவன் மனதை நிறைத்திருந்தது: “ஆலோசனைச் சங்கத்தாருடனான எனது ஒப்பந்தத்தை நான் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?” “அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்” (மத். 26:16).

## பஸ்காவுக்கு ஆயத்தமாகுதல் (மத். 26:17-20; மாற். 14:12-18அ; லூக். 22:7-18, 24-30)

(நமது காலக் கணக்கீட்டின்படி) புதன்கிழமை இரவில் இயேசு "இந்தப் பூமியில் கடைசி முறையாக தலை சாய்த்திருந்தார். வியாழக்கிழமை காலையில் அவர் மீண்டும் ஒருக்காலும் உறங்காதிருக்கும்படி விழித்தெழுந்தார்."[31] பஸ்காவுக்கு முந்தின நாளான வியாழக்கிழமையானது, "புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் முதல் நாள்" என்று அறியப்பட்டது (மத். 26:17; மாற். 14:12; லூக். 22:7), ஏனென்றால் அந்த நாளின் போதுதான் விசேஷ விருந்திற்கான ஆயத்தம் ஏற்படுத்தப்பட்டது.[32] இந்த நாளில், (யூதர்களின் நாள் கணக்கு முறைமையின்படி, வெள்ளிக்கிழமை) சூரியன் மறைவுக்குப் பின்பு புசிக்கப்பட வேண்டியதாக இருந்த விருந்தை முன்னெதிர்பார்த்து, "பஸ்காவை [ஆட்டுக்குட்டியை] பலியிட வேண்டிய புளிப்பில்லாத அப்பப் பண்டிகை" வந்தது (லூக். 22:7; மாற். 14:12).

### பஸ்கா ஆயத்தமாக்கப்பட்டது (மத். 26:17-19; மாற். 14:12-16; லூக். 22:7-13)

சீஷர்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்து, "பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர்?" என்று கேட்டனர் (மத். 26:17). இயேசு, பேதுருவையும் யோவானையும் ஆயத்தம் பண்ணுவதற்கு அனுப்பினார் (லூக். 22:8; மாற். 14:13ஐக் காணவும்), அவர்களுக்கு வழக்கத்திற்குமாறான அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்: "நீங்கள் நகரத்திற்குள்ளே போங்கள்; அங்கே தண்ணீர்க்குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்" (மாற். 14:13அ). ஆண்களல்ல ஆனால் பெண்களே தண்ணீர்க் குடங்களை வழக்கமாகச் சுமந்து செல்வார்கள் என்பதால், இந்த மனிதனைச் சுலபமாகக் கண்டறிய முடிந்திருக்கும். அந்தத் தனிநபரைப் பின்பற்றி, "அவன் எந்த வீட்டிற்குள் பிரவேசிக்கிறானோ அந்த வீட்டு எஜமானை நோக்கி: 'நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே' என்று போதகர் கேட்கிறார்' என்று சொல்லுங்கள்" என்று கிறிஸ்து அந்த இரண்டு சீஷர்களிடத்திலும் கூறினார் (மாற். 14:13ஆ, 14; மத். 26:18ஐக் காணவும்).

இயேசு எங்கிருக்கின்றார் என்பதை யூதாஸ் சனதெரீன் சங்கத்தாருக்கு அன்று மாலை வரையிலும் வெளிப்படுத்தக் கூடாதபடிக்குக் கிறிஸ்து சுற்றி வளைக்கும் இந்தச் செயல்முறையைப் பயன்படுத்தினார் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இல்லையென்றால் - கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல், "மாபெரும் பிரியாவிடை உரை" (யோவா. 14-16), கர்த்தருடைய ஜெபம் (யோவா. 17), மற்றும் கெத்செமனே தோட்டத்தில் நடந்தவை ஆகிய - பல திறவுகோல் நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காது. (ஒரு மனிதன் தண்ணீக் குடம் சுமந்து செல்லுதல் தொடங்கி) நிகழ்ச்சிகளின் இவ்வரிசை முறையை இயேசு முன்னதாகவே ஏற்பாடு செய்திருந்தாரா? அல்லது அவர் தமது தெய்வீக முன்னறிவைப் பயன்படுத்தினாரா? இதைப்

பற்றி நமக்குக் கூறப்படவில்லை.

அந்த வீட்டின் எஜமானர், ''விஸ்தாரமான மேல்வீட்டறையை'' பேதுருவுக்கும் யோவானுக்கும் காண்பிப்பார் என்று அவர்களுக்கு இயேசு தெரிவித்தார் (மாற். 14:15அ). ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாற்றின் படி, இந்த "மேல்வீட்டில்" தான் பிற்பாடு பெந்தெகொஸ்தே நாட்களுக்கு முன்னதாக அப்போஸ்தலர்கள் தங்கியிருந்தனர் (அப். 1:12, 13) எனப் படுகிறது. சிலர், இந்த வீடு யோவான் மாற்குவின் தாயாருடைய சொந்த வீடாக இருக்கலாம் என்று யூகிக்கின்றனர் (அப். 12:12). இந்த வீடு கர்த்தருடைய சீஷர் ஒருவருடையதாக இருந்தது என்பது உறுதி (மத். 26:18ஐக் காணவும்); இதற்கு அப்பால் வேத வசனம் நமக்கு எந்தத் தகவலையும் தருவதில்லை.

இரண்டு அப்போஸ்தலர்களுக்கும், அந்த அறையானது "கம்பளம் முதலானவைகள் விரித்து ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும்" என்று உறுதி யளிக்கப்பட்டது (மாற். 14:15ஆ). இந்த அறையானது சுத்தப்படுத்தப்பட்டு, மேஜை மற்றும் தரைவிரிப்புக்கள் சரியாக அமைக்கப்பட்டு, விருந்தினர்கள் கால்களைக் கழுவுவதற்கு எல்லாம் தயாராக வைக்கப்பட்டிருக்கும் (யோவா. 13:3-5ஐக் காணவும்). ஒருவேளை சடங்காச்சாரமான புளியாத அப்பம் கூட ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டிருக்கலாம் (யாத். 12:15ஐக் காணவும்).[33]

பேதுருவும் யோவானும், "தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு" விருந்திற்கு ஆயத்தம் பண்ணத் தொடங்கினர் (மாற். 14:16). ஏராளமான வேலைகள் செய்யப்பட வேண்டியதாக இருந்தது: ஏற்கனவே ஒரு ஆட்டுக்குட்டி வாங்கப்படாதிருந்தால், அது வாங்கப்பட்டாக வேண்டும்[34] - அது பழுதற்றதாக இருக்க வேண்டும் (யாத். 12:5). அந்த ஆட்டுக்குட்டி யைச் சடங்காச்சாரத்துடன் கொல்லுவதற்கு அதைத் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்கு சீஷர்கள் அதைக் கொல்ல, ஒரு ஆசாரியர் அதன் இரத்தத்தை பலிபீடத்தில் ஊற்றுவதற்காகப் பிடிப்பார். பலிபீடத்தில் தகனிப்பதற்காக அதன் உறுப்புக்களில் சில பகுதிகள் எடுக்கப்பட்ட பின்பு (லேவி. 3:3-5ஐக் காணவும்), அதன் இறந்த உடலானது உரிமையாளரிடத் தில் ஒப்படைக்கப்படும். பின்பு அந்த ஆட்டுக்குட்டியின் மாம்சம் நெருப்பி னால் சுடப்பட வேண்டும் (யாத். 12:8). விருந்து தயாரிப்பின்போதோ அல்லது விருந்தின்போதோ, அதன் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படாத படி அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் (யாத். 12:46; எண். 9:12).[35] பஸ்கா உணவிற்கான மற்ற பொருட்களும் வாங்கித் தயாரிக்கப்பட வேண்டியிருந்தது, அவற்றில் பின்வருபவை உள்ளடங்கியிருந்தன:[36]

- புளிப்பில்லாத அப்பம் (யாத். 12:8, 18-20; 13:6, 7; 34:18, 25; லேவி. 23:6; எண். 9:11; 28:17), "சிறுமையின் அப்பம்" (உபா. 16:3, 8).
- திராட்ச ரசம் (மத். 26:27, 29ஐக் காணவும்). இயேசுவின் நாட்களில் இந்தச் சடங்காச்சாரத்தில் யாத். 6:6, 7ன் நான்கு வாக்குத்தத் தங்களைக் குறிக்கும் வகையில் நான்கு பாத்திரங்களில்[37] திராட்ச ரசம் பயன்படுத்தப்பட்டது.
- எகிப்திய அடிமைத்தனத்தின் கசப்பை நினைவுகூரும் வகையில்,

கசப்பான கீரைகள் (யாத். 12:8; எண். 9:11).

- எகிப்தில் இஸ்ரவேல் ஜனங்கள் செங்கற்களைச் செய்யப் பயன் படுத்திய களிமண்ணை நினைவுகூரும் வகையில்,[38] பழங்களும் கொட்டைகளும் நசுக்கப்பட்டு அத்துடன் காடி அல்லது திராட்ச ரசம் சேர்த்துச் செய்யப்பட்ட கெட்டியான களிபோன்ற தோய்க்கும் உணவுப்பொருள்.[39]

### பஸ்கா ஆசரிக்கப்பட்டது (மத். 26:20; மாற். 14:17, 18அ; லூக். 22:14-18)

ஆயத்தம் செய்யப்பட்டிருந்த அவ்விடத்திற்கு, சூரியன் மறைவதற்குச் சற்றே முன்னதாக இயேசு, "பன்னிருவரோடுங் கூட ... வந்தார்" (மாற். 14:17). ரபீத்துவப் போதனையின்படி, ஒவ்வொரு ஆட்டுக்குட்டியும் பத்திற்குக் குறையாத மற்றும் இருபதுக்கு அதிகப்படாத நபர்களால் உண்ணப்பட வேண்டும்.[40] மேல்வீட்டில் பதிமூன்று பேர், சுடப்பட்ட இந்த ஆட்டுக்குட்டியைக் கைகளினால் எடுத்து உண்ணக்கூடிய வகையில் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துப் பகிர்ந்து கொண்டிருப்பார்கள்.[41]

பஸ்கா உணவு வைத்துப் பரப்பி அமைக்கப்பட்ட தாழ்ந்த மேஜையின் முன்பாக இயேசு சாய்வாக அமர்ந்தார் (மத். 26:20; மாற். 14:18அ; லூக். 22:14).[42] அவரது வலது புறத்தில் யோவான் (யோவா. 13:23) ஒருவேளை அவரது இடதுபுறத்தில் யூதாஸ்,[43] மற்றும் எஞ்சிய சீஷர்கள் மேஜையைச் சுற்றிலும் இங்கும் அங்குமாக அமர்ந்தனர். அவரது கண்கள் அன்பினால் ஒளிர்ந்து கொண்டிருந்தது (யோவா. 13:1, 34ஐக் காணவும்). அவர், "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப்[44] புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய ராஜ்யத்திலே இது நிறைவேறு மளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லு கிறேன்" என்றார் (லூக். 22:15, 16).

பஸ்காவானது "தேவனுடைய ராஜ்யத்திலே நிறைவேறும்" என்று கூறியபோது கிறிஸ்து எதை அர்த்தப்படுத்தினார்? பஸ்கா என்பது இயேசுவின் பலியினுடைய ஒரு மாதிரியாக இருந்தது என்று வழக்கமாக நாம் நினைக்கின்றோம், அது அவ்வாறே இருந்தது (1 கொரி. 5:7; யோவா. 1:29, 36; 1 பேது. 1:18, 19; எபி. 9:14; வெளி. 5:6, 12ஐக் காணவும்). இருப்பினும் கர்த்தர், பஸ்காவானது "தேவனுடைய ராஜ்யத்தில் நிறைவேறும்" என்று கூடுதலாகக் கூறினார். யூதர்கள் பஸ்காவை, கடந்த கால விடுதலை என்பதாக மட்டும் இன்றி, எதிர்கால விடுதலையின் உத்தரவாதமாகவும் நினைத்தனர். அந்தச் சிந்தனையின்மீது கட்டி எழுப்பிய கிறிஸ்து, மேசியாத்துவ ராஜ்யத்தில் அந்த விடுதலை வரும் என்று சுட்டிக் காண்பித்தார்.

சபை என்பதே இராஜ்யமாக உள்ளது (மத். 16:18, 19), இது கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட மக்களின் அமைப்பாக [சரீரமாக] உள்ளது (எபே. 1:22, 23; 2:16; 5:23, 25). யூதர்களின் பஸ்கா, எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் விடுதலையானதை நினைவுகூர்ந்தது போலவே, நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய பலியின் மூலமாக, தேவன் "இருளின்

அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கித் தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்துக்கு உட்படுத்தி[னார்] …" (கொலோ. 1:13). பஸ்கா பண்டிகையானது சபை என்ற "தேவனுடைய ராஜ்யத்தில் தனது இறுதியான நிறைவேற்றத்தைக் கொண்டுள்ளது."[45]

இந்த விருந்தை இது தேவனுடைய ராஜ்யத்தில் நிறைவேறிய பின்பு மீண்டும் உண்ணப் போவதாக இயேசு கூறினார். "உண்ணுதல்" என்பது "பங்கேற்றல்" அல்லது "பங்கு பெறுதல்" என்று அர்த்தப்படும்படி உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. யூதர்களின் சிந்தனையில், மேசியாவின் வருகை மற்றும் அவரது ராஜ்யம் என்பது ஒரு விருந்துடன் கொண்டாடப்பட வேண்டியதாக இருந்தது (ஏசா. 25:6-8; லூக். 13:29; 22:30ஐக் காணவும்). ராஜ்யம் உலகப் பிரகாரமானதாக இல்லாததால் (யோவா. 18:36) விருந்தும் உலகப்பிரகாரமானதாக இருப்பதில்லை. மேசியாத்துவ விருந்தொன்றிற்கான நம்பிக்கைகளின் இறுதியான நிறைவேற்றம் பரலோகத்தில் இருக்கும் (வெளி. 19:7-9); ஆனால் இந்த வாழ்விலேயே கூட, நம்மில், ராஜ்யத்தில்/சபையில் இருக்கின்றவர்கள் ஒரு ஆவிக்குரிய விருந்தை மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம். நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் விருந்தில் கிறிஸ்து, காணப்படாத பங்கேற்பாளராக இருக்கின்றார் (எபே. 1:3; வெளி. 3:20; மத். 18:20).

விருந்தின் தொடக்கத்திற்கு அண்மையில், இயேசு திராட்ச ரசம் நிறைந்த பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் கூறி, பன்னிருவரிடத்தில், "நீங்கள் இதை வாங்கி, உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள்" என்றார் (லூக். 22:17). இது கர்த்தருடைய பந்தியில் ஏற்படுத்தப்பட்ட திராட்ச ரசமல்ல; அது பந்தியின் கடைசியில் வருவதாயிருந்தது (லூக். 22:20ஐக் காணவும்). இது பஸ்கா சடங்கில் பயன்படுத்தப்பட்ட பல பாத்திரங்களில் முதலாவதாக இருந்தது. பின்பு கிறிஸ்து முன்பு உரைத்திருந்த கூற்றைத் திரும்பவும் கூறினார்: "தேவனுடைய ராஜ்யம் வருமளவும் நான் திராட்சப் பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக். 22:18). ராஜ்யம்/சபை என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று வந்தது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, கர்த்தருடைய வார்த்தைகள், நாம் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற ஆவிக்குரிய விருந்தில் அவர் பங்கேற்றல் என்ற பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தன. இருப்பினும், அடுத்த பாடத்தில் நாம் காணப்போகின்றபடி, கர்த்தருடைய பந்தியில் நமது பங்கேற்பு என்பது பற்றி இயேசுவின் வார்த்தைகள் விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தன.

**பஸ்கா இடைமறிக்கப்பட்டது (லூக். 22:24-30)**

சமாதானம் மற்றும் அன்பு என்ற சூழ்நிலையில் விருந்து தொடங்கிற்று, ஆனால் அது விரைவில் எந்த சீஷர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர் என்ற பழைய வாக்குவாதம் பற்றிய நினைவூட்டுதலினால் நிலைகுலைக்கப்பட்டது (வ. 24; மாற். 9:34; லூக். 9:46ஐக் காணவும்).[46] ஒருவேளை, இந்த

விவாதமானது ராஜ்யத்தைப் பற்றிய குறிப்பிடுதலினால் தூண்டப்பட்டிருக்கலாம். ஒருவேளை இது அமர்வுமுறை ஏற்பாடுகளினால் தொடங்கப்பட்டிருக்கலாம். காரணம் எதுவாக இருப்பினும், சிறுபிள்ளைத்தனமான, சுயநலமான, மற்றும் தகுதியாயிராத இந்தச் சச்சரவு இயேசுவின் இருதயத்தை உடைந்து போகச் செய்திருக்க வேண்டும். மீண்டும் அவர் மிகவும் பொறுமையுடன் தமது ராஜ்யத்தில் பெரியவராயிருக்கும் தன்மை என்பது, பதவி நிலையின் அடிப்படையில் அல்ல, ஆனால் ஊழியத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும் என்பதைத் தமது சீஷர்களுக்கு நினைவுபடுத்தினார் (லூக். 22:25-27; மத். 18:1-5; 20:25-28; 23:10-12ஐக் காணவும்).

அவர்மீது அவர்கள் கொண்டுள்ள பற்றுறுதி மறக்கப்படாது என்று அவர்களுக்கு அவர் உறுதியளித்தார். அவர் கடந்து சென்றிருந்த சோதனை வேளைகளில் அவர் சார்பில் நின்றதற்கு அவர்களுக்குப் பலன் அளிக்கப்படும் (லூக். 22:28). அவர்கள் அவரது ராஜ்யத்தில்/சபையில் வலிவார்ந்த பங்கைப் பெற்றிருப்பார்கள் (வ. 29; 1 கொரி. 12:28ஐக் காணவும்) மற்றும் அவருடன் நெருங்கிய, தனிப்பட்ட ஒரு உறவை தொடர்ந்து மகிழ்வுடன் அனுபவிப்பார்கள் (லூக். 22:30அ). அவர்கள் எந்நாளும் அவரோடு அரசாளுவார்கள் (வ. 30ஆ).[47]

## முடிவுரை

இயேசு தமது சீஷர்களிடம் ஊழியம் செய்யும்படி வெறுமனே கூறிக்கொண்டிருக்கவில்லை; அவர்களின் பாதங்களைக் கழுவியதின் மூலம் அவர், தாழ்மையான ஊழியத்தை அவர்களுக்குச் செயல்விளக்கப் படுத்தினார் (யோவா. 13:2-20). நமது அடுத்த பாடத்தில், நாம் அந்த நிகழ்ச்சியைப் பற்றியும் கடைசி இராப்போஜனத்தின் தொடர்பான மற்ற விஷயங்களையும் படிப்போம். கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல் என்பது ஒரு முக்கியமான விஷயமாயிருக்கும்.

இந்தப் பாடத்தை நாம் முடிக்கையில், ஆயத்தம் செய்தல் என்ற ஆய்வுக் கருத்துக்குத் திரும்புவோம். கர்த்தர் ஒரு நாளிலே திரும்ப வருவார்; அது இன்றாகக் கூட இருக்கக்கூடும் (மத். 24:36, 42-44). நீங்கள் ஆயத்தமாக இருக்கின்றீர்களா?

---

குறிப்புகள்

[1]"கடைசி இராப்போஜனம்" என்பது மேல்வீட்டில் நடைபெற்ற பஸ்கா விருந்து மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகளுக்குப் பாரம்பரியமாக உள்ள பெயராகும். இது இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்பு அவர் தமது சீஷர்களுடன் உண்ட கடைசி உணவாக இருந்தது. [2]சனதெரீன் சங்கத்தார் இயேசுவைக் கொலை செய்ய ஆயத்தமாகியதை நாம் காண்போம். [3]Quoted in *Bartlett's Familiar Quotations, Expanded Multimedia Edition* (Time Warner Electronic Publishing, 1995). ஈசாப் என்பவர் ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதப்படுகிற கிரேக்க நாடோடிக் கதாநாயகனாக

இருந்தார். அவர் விலங்குகளின் கதைகள் பலவற்றை எழுதியதற்காக மதிக்கப்படுகின்றார். [4]முன்பே குறிப்பிடப்பட்டபடி, *parousia* என்பது இயேசுவின் இரண்டாம் வருகைக்கான கிரேக்க மொழியின் தொழில்நுட்ப வார்த்தையாக உள்ளது. [5]இந்த உவமையில் உள்ள ''கன்னிகைகள்'' என்ற வார்த்தையானது அநேகமாக, இளமையான, திருமணமாகாத பெண் வேலைக்காரிகளைக் குறிக்கிறதாக இருக்கலாம். RSVயில் "maidens" என்றுள்ளது. NRSVயில் "bridesmaids" என்றுள்ளது. அந்த நாட்களில், இளமையான, திருமணமாகாத யூதப் பெண்ணாக இருத்தல் என்பது அடிப்படையில் கன்னிப் பெண்ணாக இருத்தல் என்பதன் ஒரு பொருட்பல சொல்லாக இருந்தது. [6]இந்தக் கன்னிகைகள் மணமகளின் இல்லத்தில், மணமகனின் வருகைக்காகக் காத்திருந்து இருக்கலாம், ஆனால் இவர்கள், மணமகனின் வீட்டில் மணமகளுடன் மணமகன் வருவதற்காகக் காத்திருந்தனர் என்பதே பெரும்பாலும் ஏற்புடையதாக உள்ளது. [7]இவைகள் திரிகளுடன் கூடிய சிறிய மண்விளக்குகளாக இருந்திருக்கலாம், இப்படிப்பட்டவைகளே அந்த நாட்களில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன (மத். 5:15ஐக் காணவும்). இருப்பினும், ஊர்வலத்தில் வழியை ஒளியூட்ட அதிகம் தகுதியாகப் பயன்படும் தீப்பந்தங்கள் என்பதையே இயேசு சிந்தையில் கொண்டிருந்தார் என்று சிலர் நினைக்கின்றனர். (அமெரிக்காவில் ஒரு ''தீப்பந்தம்'' என்பது ஒரு குச்சியின் ஒரு முனையில் பழந்துணிகள் சுற்றி எரிக்கப்படுவதாக உள்ளது, இது கைமின்விளக்கு அல்ல.) [8]"Five were wise, and five were otherwise" என்று ஒரு பிரசங்கியார் கூறினார். [9]மத்தேயு 25:12ல் ''அறிதல்'' என்ற வார்த்தையானது (வேதாகமத்தில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவது போன்றே) ''சாதகமான அறிவு'' என்ற கருத்திலேயே பயன்படுத்தப்படுகிறது. எஜமானர், அவர்களை *யார்* என்று அறிந்தார், ஆனால் அவர்கள் கொண்டாட்டத்தில் பங்கேற்கும் உரிமைகொண்டுள்ளனர் என்பதை ஒப்புக்கொள்ளாதிருந்தார் (மத்தேயு 7:23உடன் ஒப்பிடவும்). [10]இந்த உவமை பற்றிய விவரமான படிப்பு ஒன்றுக்கு, அடுத்து தொடங்கும் ''ஒவ்வொன்றையும் கர்த்தருக்காகப் நஷ்டமென்று எண்ணுதல்" என்ற பிரசங்கத்தில் காணவும்.

[11]சிலர், மத்தேயு 25:31-46ஐக் குறிப்பிட்டு, "இனங்களின் மீதான நியாயத்தீர்ப்பு" என்பது மற்ற நியாயத்தீர்ப்புகளுக்கு நேர்மாறானதாக இருக்கும் என்று கூறி, பல்வேறு நியாயத்தீர்ப்புகள் உள்ளன என்று போதிக்கின்றனர். ஆனால் வேதாகமம் ஒரே ஒரு நியாயத்தீர்ப்பின் நாள் மாத்திரமே உள்ளது என்று போதிக்கிறது (எபி. 9:27ஐக் காணவும்). [12]"நிர்வாணம்" என்ற வார்த்தை [தமிழில் "வஸ்திரம் இல்லாது இருந்தேன்" என்றுள்ளது], வேத வசனங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவது போன்றே இவ்விடத்திலும், போதுமான அளவு உடை உடுத்தியிராமையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. [13]சிறையில் இருந்தவர்கள் அநேகமாகத் தங்களின் விசுவாசத்தினிமித்தம் கைது செய்யப்பட்டிருக்கலாம். இவ்விடத்தில் நீங்கள் சற்றே நிதானித்து, நீங்கள் ஒரு சகோதரருக்கு/சகோதரிக்கு உதவும்போது அல்லது அவரைத் தவறாக நடத்தும் போது, இயேசுவுக்கே உதவுகின்றீர்கள் அல்லது அவரையே தவறாக நடத்துகின்றீர்கள் என்ற கருத்தை எடுத்துரைக்க விரும்பலாம் (மத். 25:40, 45; அப். 9:4ஐக் காணவும்). [14]மத்தேயு 25:46ல், ("நித்தியம்" அல்லது ''என்றென்றைக்கும் உள்ள'' என்பதற்கான கிரேக்க வார்த்தையாகிய) இதே வார்த்தை ''தண்டனை'' மற்றும் ''ஜீவன்'' ஆகிய இரண்டையும் விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தண்டனை என்றென்றைக்கும் இராது என்றால், ஜீவனும் என்றென்றைக்கும் இராது. இதற்கு நேரெதிராக, ஜீவன் என்றென்றைக்கும் உள்ளது என்றால் தண்டனையும் என்றென்றைக்கும் உள்ளது. [15]முன்பே குறிப்பிடப்பட்டபடி, சில ஒப்பீடுகள், நாம் செவ்வாய்க் கிழமையன்று நடந்தவை என்று குறிப்பிட்டுள்ள சில நிகழ்ச்சிகளைப் புதன்கிழமை காலை வேளைக்குத்

*திருப்பியுள்ளன. ஒரு சிலர், பெத்தானியில் நடைபெற்ற இராவிருந்து (மரியாள் அபிஷேகித்த நிகழ்வுடன் சேர்ந்தது) நிகழ்ச்சியை புதன் கிழமையன்று நடந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர், ஆனாலும் யோவான் அது ஒரு சில நாட்களுக்கு முன்பு நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார் (யோவா. 12:1, 2, 12).* [16]*பிற்பாடு அவர் வியாழக்கிழமை காலையில் இருந்து தமது மரணம் வரையிலும் 36 மணி நேரங்களுக்குத் தூக்கமின்றியிருப்பார்.* [17]*இயேசுவின்மீது பட்சமாயிருந்த (நிக்கொதேமு மற்றும் அரிமத்தியாவூர் யோசேப்பு போன்ற) ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்படாது இருந்திருக்கலாம்.* [18]*இந்தப் புத்தகத்தில் "வெற்றியா அல்லது துன்பமா" என்ற இனிவரும் பாடத்தில் மத்தேயு 27:9க்கான குறிப்புகளைக் காணவும்.* [19]D. H. Wheaton, "Money," in *The Illustrated Bible Dictionary,* Part 2, ed. N. Hillyer (Downer's Grove, Ill.: InterVarsity Press, 1980), 1022. [20]*யூதாஸ் தொடக்கத்தில் பெற்றுக்கொண்ட பணம் எவ்வளவு என்பதை, உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்வதற்கு உதவுமாறு, உங்கள் பொருளாதாரச் சூழலில் ஒரு சாதாரணத் தொழிலாளி நான்கு மாதங்களில் எவ்வளவு சம்பாதிக்க முடியும் என்று கணக்கிடுவதற்கு நீங்கள் விரும்பலாம்.*

[21]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1453. See Exodus 21:32: This was the price of a gored servant. [22]*இருப்பினும், யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுகளை மட்டுமே பெற்றுக் கொண்டான் என்பது கவனிக்கப்பட வேண்டும் (மத். 27:3, 5ஐக் காணவும்).* [23]B. S. *டீன் அவர்களின் "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும்.* [24]*இயேசுவின் போக்குவரத்துப் பற்றி அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது தனது குடியுரிமைக் கடமை என்று யூதாஸ் நினைத்ததாகக் கூடக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது (யோவா. 11:57ஐக் காணவும்). இது யூதாஸ் தனது மனச்சாட்சிக்குத் தடவிக் கொண்ட கலிக்கமாக இருந்திருக்கலாம், ஆனால் "எவ்வளவு?" என்ற அவனது கேள்வியானது குடியுரிமைக் கடமை கொண்ட குடிமகனின் கேள்வியாக இருப்பதில்லை.* [25]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 195. [26]*எடுத்துக்காட்டாக, யூதாஸ், இயேசுவை அவரது (உலகப்பிரகாரமான, அரசியல் ரீதியான) ராஜ்யத்தை அமைப்பதற்கு வலியுறுத்தும்படி அவரை அச்சுறுத்த மாத்திரம் விரும்பினான் என்று சிலர் கூறியுள்ளனர். யூதாஸ் தனது நடவடிக்கைகளின் எல்லா விளைவுகளையும் முன்கண்ணோக்காதிருந்தான் என்பது உண்மைதான் (மத். 27:3-5), ஆனாலும் வேதாகமத்தில் எவ்விடத்திலும் அவன் காட்டிக் கொடுத்ததற்கு மாண்புமிகுந்த நோக்கங்கள் எதையும் குறிப்பிடுவதில்லை. இதைப் பற்றிய பிற குறிப்புகளை, இந்தப் புத்தகத்தில் காணவும்.* [27]*முன்னதாக இவனை, "பிசாசு" என்று இயேசு அழைத்திருந்தார் (யோவா. 6:70).* [28]*சாத்தான் ஒரு மனிதனின் இருதயத்தை "நிரப்பி" அவனைப் பொய்யுரைக்க வைத்த இன்னொரு உதாரணத்திற்கு அப். 5:3, 4ஐக் காணவும்.* [29]*நாம் காணப்போகின்றபடி, யூதாஸ் பஸ்கா விருந்திற்காக மேல்வீட்டிற்கு இயேசு மற்றும் பிற அப்போஸ்தலர்களுடன் சென்றான்.* [30]*யூதாஸின் மாற்றமில்லாத் தோற்றம், தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளில் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. யூதாஸ் என்ன செய்திருந்தான் என்பதை இயேசு அறிந்திருந்தார், ஆனால் மற்ற சீஷர்களுக்குச் சந்தேகம் ஏற்படவில்லை.*

[31]B. S. *டீன் அவர்களின் "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும்.* [32]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 644. [33]*பஸ்கா விருந்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள், வீட்டின் உரிமையாளரால் ஏற்கனவே வாங்கி வைக்கப்பட்டிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது.* [34]*Mishnah*

(Pesahim 9.5)ல் குறிப்பிடப்பட்டபடி மூன்று நாட்களுக்கு முன்பாகவே ஆட்டுக்குட்டியை வாங்கியிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. [35]இந்த விவரம், சிலுவையில் இயேசுவின் எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்பட வில்லை என்ற உண்மையுடன் பிணைக்கப்பட்டுள்ளது (யோவா. 19:31-36). [36]இயேசுவின் நாட்களில் பஸ்கா என்பது பற்றிய தகவலானது, அதைப் பற்றிய பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள், அந்தக் காலத்திலிருந்து பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதான [இயேசுவின்] சமகாலத்திய யூதத்துவ போதனை மற்றும் யோஸிப்பஸ் என்பவரின் எழுத்துக்கள் ஆகியவற்றிலிருந்து வருகிறது. விருந்தில் பயன்படுத்தப்பட்ட இந்தப் பொருட்கள் *Mishnah* (Pesahim 10.1, 3-5)ல் விவரிக்கப் படுகின்றன. [37]Alfred Edersheim, *The Life and Times of Jesus the Messiah*, New Updated Version (Peabody, Mass.: Hendrickson Publishers, 1993), 809, 817. மற்ற எழுத்தாளர்கள் மூன்று அல்லது ஐந்து பாத்திரங்கள் என்று இந்த எண்ணிக்கையை இடுகின்றனர். [38]Edersheim, 809, n. 19. [39]அப்பத்துண்டுகள் பிய்க்கப்பட்டு, இந்தக் களிபோன்ற தோய்க்கும் உணவுப் பொருளில் தொட்டு வாய்க்குள் போட்டுக் கொள்ளப்பட்டன. இது யோவான் 13:26ல் குறிப்பிடப்பட்ட உணவுப்பொருளாக இருக்கலாம் அல்லது இராதிருக்கலாம். [40]Marvin R. Wilson, "Passover," *International Standard Bible Encyclopedia*, gen. ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1939), 3.677. This teaching is given in the Babylonian Talmud (Pesahim 64b).

[41]உணவு உண்பதற்கு (கத்திகள், முள்கரண்டிகள் அல்லது கரண்டிகள் போன்ற) பாத்திரங்கள் பயன்படுத்தப்படவில்லை. [42]லியொனார்டோ டா வின்ஸி என்பவர் தீட்டிய கடைசி இராப்போஜனம் (1495-98) என்ற சித்திரமானது, கிறிஸ்து வாழ்ந்தபோது பலஸ்தீனத்திலிருந்த உணவு உண்ணும் ஏற்பாடுகளையல்ல, ஆனால் இந்த ஓவியர் வாழ்ந்த நாட்களில் இத்தாலியிலிருந்த உணவு உண்ணும் முறைகளையே சித்தரிக்கிறது. [43]இயேசு, தோய்க்கப்பட்ட அப்பத்துண்டு ஒன்றை, நெருக்கமாக அமர்ந்திருந்த ஒருவருக்குக் கொடுத்திருக்க வாய்ப்புள்ளது (மத். 26:23; யோவா. 13:26; இந்தப் புத்தகத்தில் உள்ள கலந்துரையாடலைக் காணவும்). [44]இயேசு தமது சீஷர்களுடன் இந்தப் பஸ்கா உணவை உண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் (மத். 26:18; மாற். 14:14; லூக். 22:11), இந்த உணவு பஸ்கா விருந்தாக இருந்ததில்லை, ஆனால் அதற்கு முந்திய இரவில் உண்ணப்பட்ட உணவாக இருந்தது என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இதற்கு ஆதரவாகப் பயன்படுத்தப்படும் வசனப் பகுதி யோவான் 13:1 என்பதாக உள்ளது, இது இராப் போஜனத்திற்கான காலத்தைக் குறிக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர். இருப்பினும், தக்க வசனங்கள் எல்லாவற்றையும் ஆழ்ந்து சிந்திக்கும் போது, யோவான் 13:1 வசனம் பஸ்காவுக்குச் சற்றே முன்னதாக காலவேளையைக் குறிப்பதாகவே காணப்படுகிறது, அதே வேளையில் வசனம் 2ல் தொடங்கிதான், பஸ்கா உணவைப் பற்றியே பேசப்படுகிறது. [45]Richard Rogers, *The Life of Christ and His Teaching* (Lubbock, Tex.: Sunset International Bible Institute External Studies Department, 1995), 84. [46]லூக்கா இந்த விவாதத்தை அன்று மாலை பிற்பகுதியில் நடந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். நான் இதை, இவ்விடத்தில், நமது அடுத்த பாடம் தொடங்கும் இடமான, பாதங்களைக் கழுவும் நிகழ்ச்சிக்கு இயல்பாக வழிநடத்தும் இவ்விடத்தில் வைத்துள்ளேன். கடைசி இராப்போஜனம் பற்றிய நாள் வரிசை அறைகூவல்களில் சில அந்தப் பாடத்தில் (விசேஷமாக குறிப்புகளில்) கலந்துரையாடப்படும். [47]அவர்கள் பன்னிரு சிங்காசனங்களில் அமர்ந்து இஸ்ரவேலை நியாயந் தீர்ப்பார்கள் என்று இதற்கு முன்னதாக இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மத். 19:28).

*80*

# கர்த்தருக்காக எல்லாவற்றிலும் தங்களை அபாயத்திற்குள்ளாக்குதல்

## மத்தேயு 25:14-30, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*கிறிஸ்து போதித்தவற்றில் பெரும்பாலானவை அவர் பேசுவதை முதலில் கேட்டவர்களைத் திகைக்க வைப்பதாகவும் அதிர்ச்சியூட்டுவதாகவும் கூட இருக்கின்றன. தாலந்துகளின் உவமையிலும் விஷயம் இப்படியாகவே இருந்திருக்கும்.*

*இயேசுவின் மறுவருகைக்காக அவரது சீஷர்கள் காத்திருக்கையில், அவர்கள் வேலைமும்முரமாக நிலைத்திருக்க வேண்டும் என்று அவர்களுக்குப் போதிப்பதற்காக இயேசு அந்த உவமையை உரைத்தார்.*[1] இது ஆவியானவரின் வழிநடத்துதலினால் பதிவு செய்யப்பட்டது, ஏனென்றால் அப்போஸ்தலர்களுடன்கூட கர்த்தருடைய சீஷர்கள் யாவரும் இதைப் பற்றி நினைவூட்டப்பட வேண்டும். சபை நிலைநாட்டப்பட்டு முப்பது அல்லது அதற்குச் சற்றேக் குறைவான ஆண்டுகள் கழித்து மத்தேயு தமது சுவிசேஷ விவரங்களை எழுதினார். உணர்வெழுச்சியூட்டக்கூடிய நிகழ்ச்சிகள் அப்போதும் நடந்துகொண்டிருந்தன.[2] ஆனால் இரண்டாம் தலைமுறைக் கிறிஸ்தவர்களை உண்டாக்குவதற்குப் போதுமான காலம் கடந்திருந்தது. அநேகமாக, சில சபைகள் தங்கள் தொடக்க கால வைராக்கியத்தை இழந்திருந்து, வாரத்திற்கு வாரம் உயிர்நிலையில் இருத்தல் என்பதில் ஆறுதல் பெற்று அமைந்திருக்கலாம் (வெளி. 3:15ஐக் காணவும்). தாலந்துகளின் உவமையானது முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு ஒரு எழுப்புதல் அழைப்பாக இருப்பதை நோக்கங்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட செய்தியானது இருபத்தியோராம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கும் அவசியமானதாக உள்ளது.

நன்கு பழக்கமான இந்தக் கதையை மீண்டும் நாம் புதிதாய்க் காண்பதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன், இது நாம் முதல் நூற்றாண்டு என்ற கண்ணாடியின் வழியாகக் கண்டு, ஒருவேளை இதற்கு முன்பு நாம் கண்டிராத அறைகூவலை இதில் நாம்

காணவேண்டும் என்றும் நான் விரும்புவேன். ஆபத்தானவற்றை மேற்கொள்ளுதல் பற்றி நீங்கள் எவ்வாறு உணருகின்றீர்கள்? மிகவும் ஆபத்தான உலகப்பிரகாரமான இடர்ப்பாடுகள்[3] மற்றும் நிதிநிலை இடர்ப்பாடுகள் ஆகியவற்றை மேற்கொள்பவர்களைக் குறித்து நீங்கள் பாராட்டலாம் - அல்லது ஒருவேளை, என்னைப் போல் நீங்கள் உங்கள் தலையை அசைத்து, மக்கள் ஏன் இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்கின்றனர் என்று வியப்படையலாம். இருப்பினும் நாம் அவ்வகையான அபாயங்களை மேற்கொள்ளுதலைப் பற்றி உணருகின்றோம், நம்மில் பெரும்பான்மையானோர் நமது அன்றாட வாழ்வில் அபாயங்களைக் குறைத்தலை விரும்பித் தேர்ந்துகொள்ளுகின்றோம். முடிந்த அளவுக்குப் அபாயத்திலிருந்து விடுதலையாகியிருக்கும் ஒரு இருப்பை நாம் விரும்புகின்றோம். விஷயம் அதுவாக இருக்கையில், கர்த்தருக்காக அபாயத்திற்குள்ளாகுதல் என்ற கருத்து மகிழ்வளிப்பதாக இராதிருக்கலாம். இருந்தபோதிலும், இந்த உவமை, நாம் நமது எஜமானருக்குப் பிரியமாயிருப்பதற்கு அதைச் செய்ய வேண்டும் என்று போதிக்கிறது.

இடர்பாடானவைகளைச் செய்ய மனவிருப்பமற்று இருந்த தனிநபரான, ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன்மீது நாம் கவனம் செலுத்துவோம்.

## பொறுப்பு மற்றும் அபாயங்கள்
## *(வ. 14, 15)*

இந்த உவமையானது, ஒரு எஜமானர் தமது ஊழியக்காரர்களிடத்தில் பிரதானமான அபாயங்கள் உள்ளடங்கிய பொறுப்புகளைக் கொடுத்தல் என்பதில் தொடங்குகிறது. பரலோக ராஜ்யம்,[4] ''புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, ...'' என்று இயேசு கூறினார் (வ. 14அ). KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் ''ஊழியக்காரர்'' என்றுள்ளது, ஆனால் கிரேக்க மொழியிலான மூலவசனத்தில் “அடிமைகள்”[5] என்பதற்கான வார்த்தை உள்ளது. இவர்கள் “அவனது சொந்த அடிமைகளாக” இருந்தனர்; இவர்கள் அவனுக்குரியவர்களாக இருந்தனர்; அவன் இவர்களைச் சொந்தமாகக் கொண்டிருந்தான்.

இந்த உவமையிலிருந்து அதிகபட்சமான செயல்விளைவைப் பெறுவதற்கு, நாம் நம்மையே தேவனுடைய அடிமைகளாக, அவருக்குரியவர்களாகக் கண்ணோக்க வேண்டியது அவசியமாக உள்ளது. பவுல் “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” என்று எழுதினார் (1 கொரி. 6:19, 20).[6] “ஞானஸ்நானத்தின் நீர்மக்கல்லறையில் இருந்து ஒருவர் வெளிவரும்போது, அவர் ‘நீங்கள் உங்களுடையவரல்ல. *நீங்கள் ஒரு விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளீர்கள்*’ என்று தெளிவாய்க் குறிக்கப்பட்டுள்ள

*நுழைவாயிலுக்கு மேலான ஒரு ஐக்கியத்திற்குள் பிரவேசிக்கின்றார்."[7]*

பொறுப்பு

*புறத்தேசத்துக்குச் செல்லத் தயாராக இருந்த மனிதர் தமது அடிமைகளை அழைத்து, "தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்தார்" (மத். 25:14ஆ).[8] இப்படிப்பட்டது அசாதாரணமான நிகழ்ச்சியாக இருந்ததில்லை. ரோமப் பேரரசில், பெரும்பான்மையான வேலைகள் அடிமைகளாலேயே செய்யப்பட்டன. அடிமைகளுக்கு பொறுப்பு வாய்ந்த பதவிகள் அடிக்கடி தரப்பட்டன.*

*"[இம்மனிதர், அடிமைகளில்] ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும்,[9] ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்[தார்]" (வ. 15அ). இன்றைய நாட்களில் நாம், "தாலந்து" என்ற வார்த்தையை "திறமை"[10] என்பதற்கான ஒரு பொருட் பல சொல்லாகப் பயன்படுத்துகின்றோம், ஆனால் அந்த நாட்களில் இது பணத்தின் ஒரு அலகாக இருந்தது - இது பணத்தின் ஒரு சிறு பகுதியல்ல, ஆனால் நாணயங்கள் அல்லது தங்கக்கட்டிகள் ஆகியவற்றினால் எடை நிர்ணயிக்கப்படும் விலை உயர்ந்த உலோகத்தின் ஒரு குறிப்பிட்ட மதிப்பாக இருந்தது.[11] இந்த மூன்று அடிமைகளுக்கும் கொடுக்கப்பட்ட தாலந்துகளின் மிகச் சரியான மதிப்பை நாம் நிச்சயமாக அறியாத நிலையில் இருக்கின்றோம். "கிரேக்க ரோமத் தாலந்து ... காலத்திற்குக் காலம் மாறுபட்ட நிலையில் 26.4 கிலோகிராம் (58 பவுண்டுகள்) முதல் 37.8 கிலோ கிராம் (83 பவுண்டுகள்) வரை எடையுள்ளதாக இருந்தது."[12] மேலும், தாலந்து தங்கத்தால் ஆனதா அல்லது வெள்ளியால் ஆனதா என்பதைப் பொறுத்து, அதன் மதிப்பும் மாறிற்று.[13] மத்தேயு 25ல் உள்ள தாலந்திற்கு மிகப் பொதுவாகக் குறிப்பிடப்படுகிற மதிப்பு, ஆறாயிரம் தினேரியங்கள் என்பதாக உள்ளது.[14] இந்த மதிப்பீடு மிகச் சரியானது என்ற யூகத்தில் - மற்றும், ஒரு தினேரியம் என்பது ஒரு நாளில் ஒரு சாதாரண உழைப்பாளி ஈட்டுகின்ற ஊதியம் (மத். 20:2) என்பதைக் கருத்தில் கொண்டு - காண்கையில், ஒரு தாலந்து என்பது ஒரு திறமையற்ற உழைப்பாளி இருபது ஆண்டுகளில் சம்பாதிக்கக்கூடிய பணத்திற்குச் சமமாயிருந்தது!*

*ஆகையால், முதலாம் அடிமைக்கு, ஒரு சாதாரணத் தொழிலாளி நூறு ஆண்டுகளில் சம்பாதிக்கக் கூடிய பொருள் தரப்பட்டது! இரண்டாவது அடிமைக்கு, அப்படிப்பட்ட தொழிலாளி நாற்பது ஆண்டுகளில் சம்பாதிக்கக்கூடிய பொருள் தரப்பட்டது! மூன்றாவது அடிமை, ஒரு தொழிலாளி இருபது ஆண்டுகளில் சம்பாதிக்கக் கூடிய பொருளைப் பெற்றான்! இந்தத் தாலந்துகளின்மீது குறிப்பிட்ட ஒரு மதிப்பை இடுவதற்கு முயற்சி செய்யாமல், இவைகள் நம்மில் பெரும்பான்மையானவர்கள் ஒரே சமயத்தில் எப்போதாவது பார்த்திருக்கக் கூடிய பணத்தைவிட எவ்வளவோ அதிகமானவையாயிருந்தன என்று கூறுவது போதுமானதாக உள்ளது.[15]*

*எஜமானர், "அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக" கொடுத்தார் (மத். 25:15அ).[16] எவரொருவருக்கும், அவர் கையாளக்கூடியதற்கு அதிகமானது தரப்படவில்லை, மற்றும் எவரொருவருக்கும், அவர் மேலாண்மை*

செய்யக்கூடியதற்கும் குறைவானது தரப்படவில்லை. "அவர்கள் யாவரையும் சம அளவில் பெறுபவர்களாக்குதல் என்பது முற்றான அநீதியாயிருந்திருக்கும். ஐந்து தாலந்துகள் என்பது, ஒரு தாலந்தைப் பெற்ற மனிதனின் திறமையைப் பொறுத்தமட்டில் பொறுக்கக் கூடாத சுமையாக இருந்திருக்கும், ஐந்து தாலந்துகளைப் பெற்ற மனிதன், ஒரே ஒரு தாலந்தினால் அறைகூவல் விடப் பட்டிருக்க மாட்டார்."[17]

ஒவ்வொருவரும் *சிலவற்றைப்* பெற்றிருந்தனர் என்பதை நான் சுட்டிக் காண்பித்தாக வேண்டும். உண்மையில், ஒவ்வொருவரும் மாபெரும் தொகையைப் பெற்றிருந்தனர்.[18] நீய்ல் லைட்ஃபூட் அவர்கள், "எவரொருவரும் வெறும் பைகளுடன் எஜமானரின் அறையைவிட்டுப் புறப்படவில்லை" என்று குறிப்பிட்டார்.[19] சிலர், தாங்கள் "தாலந்து எதுவுமற்ற" தனிநபர்களாய் இருப்பதாகக் குறிப்பிடும் துடுக்குத்தனம் கொண்டுள்ளனர் என்று அறிந்துள்ள காரணத்தினால் நான் இதைக் குறிப்பிடுகின்றேன். நான் கூறுவது என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடிந்தால்,[20] நீங்கள் "தாலந்து எதுவுமற்ற" நபராக இருப்பது இல்லை. வாழ்வில் உங்களால் பணியாற்ற முடிந்தால், இடத்திற்கு இடம் செல்ல முடிந்தால், ஒருவேளை நீங்கள் ஒரு வேலையைப் பற்றிக்கொண்டு இருந்தால், நீங்கள் "தாலந்து எதுவுமற்ற" தனிநபராக இருப்பதில்லை. நீங்கள், திறமைகள், நேரம், வாய்ப்புக்கள், ஒருவேளை ஒரு சில உடைமைகள்கூட உள்ளவராக இருக்கின்றீர்கள். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவராக - பரிபூரணமாக ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள்.[21]

தேவனுடைய கொடைகளைப் பெற்றவர் என்ற வகையில் நீங்கள், அந்தக் கொடைகள் ஒரு அறைகூவலை உள்ளடக்கியிருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையில் தேவன் நம்மிடத்தில், "எனக்குரியவர்கள் என்ற வகையில் நீங்கள் இவற்றை எனது ஊழியத்தில் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றீர்கள். இவற்றை நான் உங்களிடம் ஒரு குறுகிய காலத்திற்கே ஒப்புவிக்கின்றேன். அந்த வேளையில், நீங்கள் இவற்றை என்னிமித்தம் பலன் கொடுக்கப் பயன்படுத்த வேண்டும்" என்றே கூறுகின்றார். எஜமானர் ஒரு கொடையைப் பொழிகின்றபோது, அதனுடன் ஒரு பொறுப்பு இணைக்கப்பட்டுள்ளது.

#### அபாயங்கள்

இருப்பினும், இந்த உவமையில் வரும் எஜமானர் தமது உடைமைகளைத் தமது அடிமைகளிடத்தில் ஒப்புவித்தபோது, அந்த உடைமைகள் கனத்த பொறுப்பு என்பதைக் காட்டிலும் அதிகமானவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தின; அவைகள் தீவிரமான அபாயங்களை மேற்கொள்ளுதலையும் பிரதிநிதித்துவப் படுத்தின. ரபீத்துவ எழுத்துக்களின்படி, ஒரு எஜமானர் பொருட்களை ஒரு அடிமையினிடத்தில் ஒப்புவித்துச் சென்றால், அந்த அடிமை அந்தப் பொருட்களைத் தனது பயன்பாட்டிற்கு உட்படுத்தியது குறித்துக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதாயிருந்தது. எஜமானர் திரும்ப வரும்போது, அந்த அடிமை குறைவான பொருட்களைக் கொண்டிருந்தால், அவர் அந்த [தொகை] மாறுபாட்டை ஈடுகட்ட

வேண்டியதாயிருந்தது. அந்த அடிமை அவ்வாறு செய்ய இயலாதிருந்தால், சிறையில் இடப்படுவார். அந்த அடிமை தனது உக்கிராணத்துவத்தைத் தவறாகப் பயன்படுத்தியிருந்தார் என்று வெளிப்பட்டால், அவர் கொலை செய்யப்படவும் கூடும்.

தேவன் உங்களிடம் கொடுத்துள்ளவற்றை - உங்கள் திறமைகளை, உங்கள் நேரங்களை, உங்கள் உடைமைகளை, உங்கள் வாய்ப்புக்களை - பயன்படுத்துவதில் ஏற்படும் இடர்பாடுகளை மேற்கொள்ளுதல் அடங்கியுள்ளது. தவறு செய்கின்ற ஒரு இடர்ப்பாடு, விமர்சிக்கப்படுதல் என்ற ஒரு இடர்ப்பாடு, மற்றும் தோல்வி என்ற இடர்ப்பாடு கூட உள்ளது.

## பதில்செயல் மற்றும் கலகம்
## *(வ. 15-19)*

**பதில்செயல்**

*எஜமானர் "பிரயாணப்பட்டுப் போன" பின்பு (வ. 15இ), "உடனே[22] ஐந்து தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக் கொண்டு வியாபாரம் பண்ணி, வேறு ஐந்து தாலந்துகளைச் சம்பாதித்தான்" (வ. 16). அவன் நேரத்தை வீணாக்கவில்லை; தனது எஜமானர் புறப்பட்டுச் சென்றவுடன், அவன் தனக்குக் கொடுக்கப்பட்டவற்றைப் பயன்படுத்தினான். அவன் தாலந்துகளை எவ்வாறு பயன்படுத்தினான் என்பதை நான் துல்லியமாக அறிவதில்லை. அவன் ஒரு வியாபாரத்தைக் கையகப்படுத்தியிருக்கலாம். ஒருவேளை அவன் திறந்தவெளிச் சந்தையில் எவற்றையேனும் வாங்கி விற்றிருக்கலாம். இருப்பினும் அவன் தனது வர்த்தகத்தைச் செய்து, அதிகமாக ஐந்து தாலந்துகளை சம்பாதித்தான். ஆகையால் ஐந்து தாலந்து களைப் பெற்ற மனிதன் தனது பொறுப்பை நிறைவேற்றினான். "அப்படியே, இரண்டு தாலந்தை வாங்கியவனும், வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்" (வ. 17).*

**கலகம்**

*அது நம்மை ஒரு தாலந்தைப் பெற்ற மனிதனிடத்தில் கொண்டு வருகிறது: "ஒரு தாலந்தை வாங்கினவனோ, போய், நிலத்தைத் தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்" (வ. 18). பார்வை யிலிருந்து எஜமானர் மறைந்த உடனேயே, இம்மனிதன் அநேகமாகத் தனது தோட்டத்திற்குச் சென்று, ஒரு ஆழமான குழியை வெட்டி, அதில் பணத்தைப் போட்டு, குழியை மூடியிருக்கலாம். அப்படிப்பட்ட வழக்கம் அசாதாரணமானதாக இருந்ததில்லை.[23] இன்றைய நாட்களில் நாம் கொண்டுள்ளது போன்ற வங்கிகள் அன்றைய நாட்களில் இருந்ததில்லை; மக்கள் அடிக்கடி தங்கள் பணத்தைப் பத்திரப்படுத்த மறைத்து வைத்தனர்.[24]*

*சிலரின் கண்களில் இந்த ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் ஞானமும் மதிநுட்பமும் உள்ளவனாகக் காணப்படுவதை அறிந்தால் நீங்கள் திகைப் படையலாம். ரபீக்களும் தங்கள் உவமைகளைக் கூறியிருந்தனர்,*

அவர்களின் உவமைகளில் ஒன்று பின்வருமாறு இருந்தது:

> செல்வந்தனான ஒரு மனிதன் நீண்ட பயணம் மேற்கொள்ளவிருந்தான். அவன் தனது வேலைக்காரர்களில் இருவரை அழைத்து, "எனது சொத்துக்களை நான் உங்கள் கைகளில் விட்டுச் செல்லுகின்றேன்" என்று கூறினான். அவன் அதை இரண்டாகப் பிரித்து, தனது வேலைக்காரர்களுக்குக் கொடுத்துச் சென்றான். அவன் பயணத்தில் இருக்கையில், வேலைக்காரர்களில் ஒருவன் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த சொத்துக்களை [வியாபாரத்தில்] முதலீடு செய்து எல்லாவற்றையும் இழந்து நின்றான். ஆனால் இன்னொரு வேலைக்காரனோ தான் பெற்றுக் கொண்டதைத் தனது எஜமான் திரும்பி வரும் வரையிலும் ஒளித்து வைத்திருந்தான். இவ்விதமாய் அவன் தனது எஜமான் திரும்பி வந்தபோது தன்னிடம் கொடுக்கப்பட்ட எல்லாவற்றையும் திருப்பிச் செலுத்த முடிந்தது. எஜமான் அந்த வேலைக்காரனைப் புகழ்ந்து தனது வீட்டின்மீது பொறுப்பாளியாக நியமித்தான். ஆனால் எஜமானுடைய பணத்தைத் தொலைத்திருந்தவனோ மரண தண்டனை விதிக்கப்பட்டான்.[25]

இயேசுவின் போதனை, அவரது உரையைக் கேட்டவர்களில் சிலரைத் திகைக்கச் செய்வதாக, அதிர்ச்சியூட்டுவதாகக் கூட இருக்கும் என்று முன்னதாக நான் கூறியிருந்தேன். அவரது உவமையானது ஏறக்குறைய ரபீக்களின் உவமைக்கு நேரெதிரானதாக இருக்கிறது. பணத்தைப் புதைத்து வைத்த வேலைக்காரனுடைய பட்டமான "நாயகன்" என்பதைக் கர்த்தர் எடுத்துவிட்டு அவனுக்குப் "போக்கிரி"[26] என்று பெயரிட்டார்.

எஜமான் "வெகுகாலம்" வெளிச் சென்றிருந்தார் (வ. 19). அந்தக் காலம் முழுவதிலும் இந்த ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் என்ன செய்திருப்பான் என்று நீங்கள் யூகிக்கின்றீர்கள்? நிச்சயமாக அவன் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த பணத்தைக்கொண்டு வர்த்தகம் செய்யவில்லை; அது தரையில் குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருந்தது. அவன் தனது நேரத்தை எவ்வாறு செலவிட்டான் என்று நான் அறிவதில்லை, ஆனால் இதை நான் அறிகின்றேன்: அவன் தனது எஜமானுக்கு ஊழியம் *செய்து கொண்டிருக்கவில்லை.*

ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் செய்திருந்த தவறு என்ன என்பதைப் பற்றி நாம் தெளிவான கருத்து கொண்டிருப்போமாக: அவன் அநீதியான உக்கிராணக்காரனைப்போல் (லூக். 16:1) பணத்தைப் பாழாக்கிப் போடவில்லை. அவன் அதை, ஊதாரி மகனைப் போல் (லூக். 15:13) தேவபக்தியற்ற வாழ்க்கை வாழ்வதில் வீணாக்கிவிடவில்லை. அவன் அநியாயமான உக்கிராணக்காரனைப் போல் (மத். 18:24) பத்தாயிரம் தாலந்துகள் கடனில் மூழ்கி விடவில்லை. அவன் தான் கொண்டிருந்ததைப் *பயன்படுத்தத் தவறிவிட்டான்* என்பதே அவன் செய்த எல்லாமுமாக இருந்தது.[27] நான் ஒரு இளம் பிரசங்கியாராக இருந்தபோது, "மூன்று எளிய பாடங்களில் உங்கள் ஆத்துமாவை இழந்துபோவது எப்படி?" என்ற தலைப்பில், இந்த உவமையின்மீது ஒரு பிரசங்கத்தைக் கொண்டிருந்தேன். பின்வருவதே எனது முடிவுரையாக இருந்தது: *ஒன்றுமே செய்யாதிருத்தல்* என்பதே, உங்கள்

ஆத்துமாவை இழந்துபோவதற்குச் சுலபமான வழியாக உள்ளது. இதற்கு விசேஷித்த திறமைகளோ அல்லது முயற்சிகளோ எதுவுமே தேவை இல்லை. எவரொருவரும் இதைச் செய்ய முடியும் - மற்றும் அநேகர் இதையே செய்கின்றனர்.

## பலன்கள் மற்றும் "காரணங்கள்" (வ. 19-25)

**பலன்கள்**

"வெகுகாலமான பின்பு," அந்த எஜமான் திரும்பி வந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான் (வ. 19). நீங்களும் நானும் தேவனுடைய உக்கிராணக்காரர்களாய் இருக்கின்றோம், மற்றும் ஒரு நாளிலே நமது எஜமானர் திரும்பி வருவார் (அப். 1:11; 1 தெச. 4:16; அப். 17:31). அப்போது நாமும்கூட நமது உக்கிராணத்துவத்தைப் பற்றிக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருக்கும் (ரோமர் 14:12; 2 கொரி. 5:10; 1 கொரி. 4:2ஐக் காணவும்).

ஐந்து தாலந்துகளைப் பெற்றுக்கொண்ட மனிதனே முதலாவது கணக்காய்வு செய்யப்பட வேண்டியவனாயிருந்தான். அவன் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆவலுள்ளவனாக இருந்திருக்கலாம். அவன், "ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன்" என்று சொன்னபோது (மத். 25:20) அவனது முகத்தில் இருந்த புன்சிரிப்பை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. எஜமான், "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று பதில் அளிக்கையில் (வ. 21அ) அவரது முகத்திலும் புன்முறுவல் பூத்திருக்கும் என்பது நிச்சயம்.

இந்த அடிமையை எஜமானர் எவ்வாறு குறிப்பிட்டார் என்று கவனியுங்கள். அவர், "நல்லது, புத்திசாலித்தனமும் வெற்றியும் நிறைந்த ஊழியக்காரனே" என்று கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக அவர் அவனை, "உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று பாராட்டினார். நாம் யாவருமே புத்திசாலிகளாய் இருக்க முடியாது; நம்மில் பலர் ஒருக்காலும் வெற்றி (உலகம் இவ்வார்த்தையைப் பற்றிக் கணக்கிடுகிறபடி) நிறைந்தவர்கள் ஆகமாட்டோம்; ஆனால் நாம் யாவரும் "உத்தமமும் உண்மையும் நிறைந்தவர்களாய்" இருக்க முடியும். கர்த்தர் நம்மிடத்தில் கொடுக்கின்ற யாவற்றையும் நாம் யாவருமே எடுத்து அதைக் கொண்டு நம்மால் முடிந்த அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட முடியும். அதைத்தான் அவர் கேட்கின்றார்.[28]

இது, ஒரு எஜமானர் ஒரு அடிமையிடம் பேசியதாக இருந்தது என்பதைச் சிந்தையில் வைக்கவும். இந்த அடிமை அவரது உடைமையாயிருந்தான்; அவர் இந்த அடிமைக்கு எதுவும் கடன்பட்டிருந்தது இல்லை, "உனக்கு நன்றி" என்றுகூடக் கூறத்தேவையில்லை. ஒரு அடிமை தனது எஜமானுக்குக் கீழ்ப்படிந்திருக்கும்போது, அவன் [அடிமை], "நான் அப்பிரயோஜனமான ஊழியக்காரன்; நான் செய்ய வேண்டியதை மாத்திரம்

*செய்தேன்" என்று கூறவேண்டும் என்று உரைத்திருந்தார் (லூக். 17:10ஐக் காணவும்). இந்த உவமையில், எஜமானுடைய பெருந்தன்மையான பதிலுரையானது அம்மனிதரின் பண்பைப் பற்றிய சில விஷயங்களை நமக்குக் கூறுகிறது. அவர் மற்றவர்களைக் குறித்து நியாயமானவராகவும் அக்கறையுள்ளவராகவும் இருந்தார்; அவர் பாராட்டவும் வெகுமதி அளிக்கவும் வாய்ப்புக்களை எதிர்நோக்கியிருந்தார் என்பது உறுதி.*

*முதலில் அவர், ஐந்து தாலந்தைப் பெற்ற மனிதனிடத்தில், "கொஞ்சத்திலே[29] உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக[30] வைப்பேன்" என்று கூறினார் (மத். 25:21ஆ).* The New English Bible *என்ற வேதாகமம்,* "You have proved trustworthy in a small way; I will now put you in charge of something big" *("நீ ஒரு சிறுவழிமுறையில் உன்னை நம்பத் தகுந்தவன் என்று நிரூபித்தாய், இப்போது நான் உன்னைப் பெரிய விஷயங்களுக்குப் பொறுப்பாளராக்குவேன்") என்று கூறுகிறது. பின்பு அவர், ஐந்து தாலந்தைப் பெற்ற மனிதனிடத்தில், "உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்றார் (வ. 21இ). இது எஜமான் திரும்பி வந்ததினால் நடைபெற்ற வைபவத்தில் பங்கேற்பதைக் குறிக்கலாம். இது எஜமானுடைய உணவு மேஜையில் பந்தியமர்வதற்கான ஒரு அழைப்பாக இருக்க முடியும்.[31] இப்படிப்பட்ட மரியாதை என்பது விடுதலையாக்கப்படுதல் என்பதை உள்ளடக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.[32]*

*வரிசையில் அடுத்து, இரண்டு தாலந்தைப் பெற்ற மனிதன் இருந்தான். அவனும்கூடக் கணக்கு ஒப்புவிப்பதில் மகிழ்ச்சியாய் இருந்தான்: "ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு, இதோ வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன்" என்றான் (வ. 22). இவனுக்குக் கொடுக்கப்படும் பலன், இவனைக் காட்டிலும் மூன்று தாலந்தை அதிகமாய்ச் சம்பாதித்தவனுக்குக் கொடுக்கப்பட்ட பலனில் இருந்து மாறுபட்டதாக இருக்கும் என்று நாம் எதிர்பார்த்திருக்கலாம், ஆனால் அவன் அதே பாராட்டையும் அதே பலனையும் பெற்றான். வேதாகமம் ஒத்த தன்மையுள்ள பல வசனங்களைக் கொண்டிருப்பதில்லை,[33] ஆனால் வசனம் 21 மற்றும் 23 ஆகியவை மிகச் சரியாக ஒரே மாதிரியாக உள்ளன. ஐந்து தாலந்தைப் பெற்ற மனிதனைப் போலவே, இரண்டு தாலந்தைப் பெற்ற மனிதனும் தன்னால் முடிந்த அளவு சிறப்பாகச் செய்திருந்தான் - அது ஒன்றுதான் எஜமான் கேட்டுக் கொண்ட விஷயமாக இருந்தது. அவனுக்கும், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (வ. 23) என்று கூறப்பட்டது.*

*கர்த்தருக்காக எந்த இடர்ப்பாட்டையும் மேற்கொள்ள மனவிருப்பமாயிருக்கிற எவரும் வெற்றியாளராகவே இருக்கின்றார். நீங்கள் செய்யும்படிக்குத் தேவன் எதையேனும் கொண்டுள்ளார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? அதைச் செய்வதற்கு நீங்கள் அஞ்சுகின்றீர்களா? தோல்வியடைந்து விடுவோமோ என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களா? எப்படியும் அதைச் செய்யுங்கள். நீங்கள் "வெற்றியடைகின்றீர்களா" அல்லது "தோல்வியடை*

கின்றீர்களா" என்பது சார்புநிலையில் முக்கியமற்றதாக உள்ளது. நீங்கள் உங்களால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதே முக்கியமானதாக உள்ளது. பின்பு கர்த்தர் உங்களிடத்திலும், "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று கூறுவார்.

**"காரணங்கள்"**

கடைசியில், ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தான். அவன் அநேகமாகப் பின்னால் தயங்கி நின்று, இந்தக் கணத்தைக் குறித்துப் பயந்திருப்பான். இருப்பினும் கடைசியில், "ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து, 'ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்' என்றான்" (வ. 24). எஜமானுடைய பண்பைப் பற்றிய இந்தக் குற்றச்சாட்டு, அந்த நாட்களில் இருந்த விதைத்தல் மற்றும் அறுத்தல் என்பவற்றின் செயல்முறைகளின் அடிப்படையில் அமைந்திருந்தது. வயல்களுக்கிடையில் வேலிகள் இருந்ததில்லை; வயல் நிலங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்திருந்தன. விதையானது கையினால் விதைக்க (தெளிக்க)ப் பட்டது. எஜமானை ஒரு "முரட்டுத்தனமான முட்டியைக் கொண்ட மனிதன்"[34] என்றும் அவன், "எனது விதைகளில் சில எனது அயலானுடைய நிலத்தில் விழுந்திருக்கலாம், எனவே நான் என்னுடைய எல்லாவற்றையும் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவனுடைய நிலத்தில் பல அடிகள் தூரத்திற்கு அறுப்பேன்" என்றும் நியாயப்படுத்துபவனாக இந்த அடிமை சித்தரித்தான்.

இந்த அடிமை, தனது எஜமானை பொருளாசை, கஞ்சத்தனம், நியாயமற்ற தன்மை மற்றும் நேர்மையற்றதன்மையும் கூடக் கொண்ட மனிதன் என்று குற்றம் சாட்டினான். அது ஒரு நியாயமான மதிப்பீடா யிருந்ததா? ஒரு தாலந்து பெற்ற மனிதனின் வார்த்தைகளை, எஜமானின் பண்பைப் பற்றி நாம் முன்பு கண்ட விஷயங்களுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள்: உண்மைத் தன்மையைப் பாராட்டவும் மற்றும் வெகுமதி அளிக்கவும் சிந்தையும் விருப்பமும் கூடக் கொண்டவராய் இருந்த ஒருவர். கர்த்தருக்காக இடர்ப்பாட்டை மேற்கொள்வதற்கு மனவிருப்பமின்மையின் அபாயம் என்பது, நாம் தேவனுடைய பண்பைப் பற்றிக் கேள்வி கேட்க வழிநடத்தக்கூடும். நாம், அவரை அன்புகூருகின்ற, பரிவிரக்கமுள்ள ஒரு பிதா என்று நினைப்பதற்குப் பதிலாக, அவர் ஏற்றுக் கொள்ளத்தகாத சட்டங்களை ஏற்படுத்துபவர், வேலையை வற்புறுத்தும் எஜமானர், வெறிபிடித்த கொடுங்கோலர் என்றெல்லாம் நினைக்கத் தொடங்குவோம்.

ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன், "ஆகையால், நான் பயந்து" என்றும் கூடுதலாகக் கூறினான் (வ. 25அ). பயம் நிறைந்தவர்கள்மீது நாம் பரிதாபப் படுகின்றோம். நாம் யாவருமே சில விஷயங்களுக்குப் பயப்படுகின்றோம்.[35] இருப்பினும், எப்போதும், "நான் எஜமானர்மீது நம்பிக்கை வைக்காத படியினால் பயப்படுகின்றேனா?" என்று நம்மையே நாம் கேட்டுக் கொள்வது அவசியமாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 21:8ல்,

இழந்துபோகப்படுபவர்கள் பற்றிய பட்டியலைத் தேவன் கொடுத்தபோது, அவர் அந்தப் பட்டியலை, "பயப்படுகிறவர்களும்" என்று தொடங்கினார்.[36]

அந்த அடிமை, "நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்'' என்றான் (வ. 25அ, ஆ). அவன் அநேகமாகத் தோல்வியை நினைத்துப் பயந்திருக்கலாம். அவன் அநேகமாக, இரண்டு மற்றும் ஐந்து தாலந்துகளைப் பெற்றவர்களைப்போல் தான் செயல்பட முடியாது என்று பயந்திருக்கலாம்.[37] அவன் தனது எஜமானைப் பிரியப்படுத்த முடியாது என்று தான் பயந்திருந்ததைத் தெளிவாக எடுத்துரைத்திருந்தான். உண்மையில் அவன், "நான் ஒரு வெற்றியற்ற சூழ்நிலையில் இருந்தேன் ... எனவே நான் ஒன்றும் செய்யாதிருந்தேன்" என்று கூறினான்.

அந்த மனிதன் தன்னைத் தவிர ஒவ்வொருவர்மீதும் பழிசுமத்தினான். நாம் வாழ்வின் தொடக்கத்திலேயே பிறர்மீது பழிசுமத்தக் கற்றுக்கொள்ளுகின்றோம். (இரண்டு பையன்கள் ஒருவன் மற்றவனை நோக்கிக் கையை நீட்டி, "இவன்தான் அதைச் செய்தான்" என்று கூறுவதை நான் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.) சிலர் தங்கள் குறைபாடுகளுக்குத் தங்கள் பெற்றோர்மீது பழிசுமத்துகின்றனர். சிலர் சமுதாயத்தின்மீது பழிசுமத்துகின்றனர். சிலர் தேவன்மீது கூடப் பழிசுமத்துகின்றனர். உங்கள் தவறுகளுக்காகப் பழிசுமத்துவதற்கு நீங்கள் யாரையேனும் காணவிரும்பினால், [முகம்பார்க்கும்] கண்ணாடியே அதற்கு மிகச் சிறந்த இடமாயிருக்கும்.

ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த, இப்போது அழுக்காகியிருந்த, சீர்குலைந்து போயிருந்த, காறல் நெடிவீசிய, விலையுயர்ந்த உலோகத்தை எடுத்து நீட்டினான். அவன், தனது எஜமான் இனி எதையும் எதிர்பார்க்கக் கூடாது என்ற வகையில், ''இதோ, உம்முடையதை வாங்கிக் கொள்ளும்" என்றான் (வ. 25இ).

## பதில்செயல் மற்றும் விளைவுகள் (வ. 26-30)

**பதில்செயல்**

நாம் இந்த வரலாற்றின் கவலைமிகுந்த முடிவுக்கு வந்துள்ளோம். அந்த மனிதனிடம் எஜமானர், "பொல்லாதவனும் சோம்பனுமான[38] ஊழியக்காரனே'' என்றார் (வ. 26அ). அவர் மற்ற இரண்டு அடிமைகளையும் ''உத்தமமும் உண்மையுமுள்ளவர்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார். இவனையோ அவர், ''பொல்லாதவன்'' என்றும் ''சோம்பன்'' என்றும் அழைத்தார்.

அவர் தொடர்ந்து, "நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே" (வ. 26ஆ) என்றார்.[39] அவர் தமது பண்பு பற்றிய அந்த மனிதனின் மதிப்பீட்டை ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக அவர், "உனது சொந்த வார்த்தைகளே உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கின்றன. ஏனென்றால், நீ என்னை அந்த

வகையில் கண்ணோக்கியிருந்தால், அதற்குள்ளாகவே, நீ எதையாகிலும் செய்ய வேண்டும் என்பதற்குப் போதிய அளவு ஊக்குவித்தல் இருந்திருக்க வேண்டும்" என்றே கூறினார்.

எஜமானர், "அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது; அப்பொழுது, நான் வந்து என்னு டையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே"[40] என்று கூறினார் (வ. 27). வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், "குறைந்தபட்சம், நீ இந்தப் பணத்தை முதலீடு செய்திருக்க வேண்டியதாயிருந்தது" என்று அவர் கூறினார்.[41] "காசுக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "வங்கிக்காரர்கள்" மற்றும் "மேஜை மனிதர்கள்" என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடும்.[42] இன்றைய நாட்களில் நாம் கொண்டுள்ளது போல் அன்றைய நாட்களில் வங்கிகள் எதுவும் இருந்ததில்லை என்று நாம் முன்னதாகக் குறிப்பிட்டிருந்தாலும், பெரும்பாலான சந்தையிடங்களில், நாணயங்கள் குவிக்கப்பட்ட மேஜையின் முன்பாக "காசுக்காரர்" ஒருவர் அமர்ந்திருந்தார், ஒரு விலைக்கு அவர் பணத்தை மாற்றுச் செய்வார்[43] அல்லது அதைக் கடனாகத் தருவார். அவர் வைப்புத் தொகைகளை ஏற்றுக் கொண்டு அவற்றின்மீது வட்டி தருவதாகவும் வாக்களிப்பார்.[44] கணநேரக் கவனிப்பில், தனது மேஜையை நகர்த்திச் சென்றுவிடக்கூடிய ஒரு மனிதரிடத்தில், ஒருவருடைய பணத்தை ஒப்புவித்தல் என்பது ஆபத்தான பணியாக இருந்தது; ஆனால் உண்மையில் எஜமானர், "ஒன்றும் செய்யாதிருப்பதை விட, அதுகூட எவ்வளவோ மேலானதாக இருந்திருக்கும்" என்றே கூறினார்.

**விளைவுகள்**

அருகிலிருந்த வேலைக்காரர்களிடத்தில் திரும்பிய எஜமான், "அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள்" என்றார் (வ. 28). இயேசு பின்வரும் விளக்கத்தை கூடுதலாகக் கூறினார்: "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப் படும்" (வ. 29).

"ஒரு நிமிடம் பொறுங்கள்! அது நியாயமானதல்லவே! குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ், அதிகம் கொண்டுள்ளவர்களிடத்திலிருந்து எடுத்து குறைவாகக் கொண்டுள்ளவர்களுக்குக் கொடுத்தல் என்பது சரியானதாக இருக்கலாம். ஆனால் இந்த ஏழை மனிதன் ஒரே ஒரு தாலந்து மாத்திரமே வைத்திருந்தான். இதை எடுத்து, ஏற்கனவே பத்துத் தாலந்தை வைத்திருப்பவனுக்குக் கொடுக்க வேண்டியது ஏன்? அது நியாயமே அல்ல!" என்று ஒருவர் கூறக்கூடும். இதை நீங்கள் நியாயம் என்று நினைத்தாலும் நினைக்காதிருந்தாலும், இது அண்டத்தின் பின்னல் வேலைக்குள் கட்டியெழுப்பப் பட்டுள்ள ஒரு கொள்கையாக உள்ளது - இது இந்த உவமைக்குள், இயேசு உட்செருகிய கொள்கையாக உள்ளது. இது, "செயலிழந்து போகுதலின் விதி" என்று அழைக்கப்பட்டுள்ளது. நாம் எளிய சொற்றொடர்களைப் பயன்படுத்துவோமாக: "இதனைப்

பயன்படுத்துங்கள் அல்லது இதனை இழந்து போங்கள்." உங்கள் தசைகளை நீங்கள் பயன்படுத்தாவிட்டால், அவைகள் செயலிழந்துபோகும். உங்கள் இயற்கையான திறன்களை நீங்கள் பயன்படுத்தாவிட்டால், அவைகளை நீங்கள் இழந்துவிடுவீர்கள். நீங்கள் கற்றறிந்த திறமைகளை நீங்கள் பயன்படுத்தாவிட்டால், அவற்றை நீங்கள் மறந்து விடுவீர்கள். இந்தக் கொள்கையானது வாழ்வின் ஒவ்வொரு வட்டாரத்திலும் நடைமுறையில் உள்ளது. ஒரு நட்புறவைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அது பாடுபடுவதாயிருக்கும் [மறந்து போகப்படும்]. ஒரு திருமண வாழ்வைப் புறக்கணித்துவிட்டால், அது அழிவுக்குள்ளாகும்.

ஒருவர் தமது ஆவிக்குரிய வரங்களைப் புறக்கணிக்கும்போது, இறுதி விளைவு என்னவாகிறது? வசனம் 30ல் உள்ளதைக் காட்டிலும் அதிகக் கவலைமிகுந்த வார்த்தைகள் வேறெதுவும் இருப்பதில்லை: "பிரயோஜன மற்ற[45] ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப் போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்." ஒரு தாலந்தைப் பெற்றிருந்த மனிதன் "பொல்லாதவன்" என்றும் "சோம்பன்" என்றும் குறிப்பிடப்பட்டிருந்தான்; இப்போது அவன், "பிரயோஜன மற்றவன்" என்று அழைக்கப்பட்டான். நம்மில் பெரும்பாலானவர்கள், "பிரயோஜனமற்றவன்" என்று அழைக்கப்படுவதற்கு மாறாக "பொல்லாத வன்" என்றும் "சோம்பன்" என்றும் பெயரிடப்படுவதைத் தேர்ந்து கொள்வோம். இருந்தபோதிலும் ஒருவர், கர்த்தருக்கென்று தமது திறமைகள் மற்றும் வாய்ப்புக்களை பயன்படுத்துவதிலிருந்து பயமானது தம்மைத் தடைசெய்ய அனுமதித்தால் அவர் பிரயோஜனமற்றவராகின்றார்.

## முடிவுரை

ஒரு கணம், யாரோ ஒருவர் உங்கள் முன்பு ஒரு கனத்த கறுப்பான கோடு ஒன்றை வரைந்து, "இதுவே உங்கள் ஆவிக்குரிய இடர்ப்பாட்டின் கோடாக உள்ளது. நீங்கள் இப்போதே அதைக் கடந்து வரவேண்டுமென்று உங்களுக்கு நான் அறைகூவல் விடுக்கின்றேன்!" என்று கூறுவதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.[46] கர்த்தருக்காக நீங்கள் இன்னும் மேற்கொள்ள வேண்டிய இடர்ப்பாடுகள் என்ன என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். சிலருக்கு அந்தக் கறுப்புக்கோடு கிறிஸ்தவராவதைக் குறிக்கிறது.[47] இயேசுவைப் பின்பற்றுவதில் இடர்ப்பாடுகள் உள்ளடங்கி யுள்ளன என்று அவரே தெளிவாக்கியுள்ளார் (லூக். 9:57-62). நீங்கள் நண்பர்களை அல்லது குடும்பத்தை இழந்துபோகக்கூடும் (மத். 10:36); சில நாடுகளில் நீங்கள் உங்கள் உயிரையும் இழக்கக் கூடும் (வெளி. 2:10). மற்றவர்களுக்கு, அந்தக் கறுப்புக்கோடு, முதன்முதலாகத் திறமைகளையும் திறன்களையும் பயன்படுத்துவதால் ஏற்படும் இடர்பாடுகளையும் உள்ளடக்கியதாகக் குறிக்கிறது: வெளிப்படையான ஜெபத்தை வழிநடத்துதல், ஒரு வகுப்பில் போதித்தல், ஒரு பாடலை நடத்துதல், ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கித்தல். இது எஜமானருக்கு முழு நேரத்தையும் ஒப்புக்கொடுத்த வாழ்விற்காக "எல்லாவற்றையும் விட்டுவிடுதல்" என்ற

இடர்ப்பாட்டையும் குறிக்கலாம். இன்னும் மற்றவர்களுக்கு, அந்தக் கறுப்புக்கோடு, நண்பர்கள், அயலகத்தவர்கள் மற்றும் குடும்பத்தவர்கள் ஆகியோருக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதலைக் குறிக்கிறது. வசனத்தைப் பகிர்ந்துகொள்ள நீங்கள் முயற்சிக்கையில், நீங்கள் நட்புறவுகளையும் உறவுமுறைகளையும் இடர்ப்பாட்டிற்கு உட்படுத்துகின்றீர்கள். அந்தக் கறுப்புக்கோடானது இடர்ப்பாடுகளின் எந்த எண்ணிக்கையையும் குறிக்கக் கூடும். உங்களுக்குள்ள இடர்ப்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ளுகையில், அந்த இடர்ப்பாட்டை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று தேவன் *எதிர்பார்க்கின்றார்* என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களால் முடிந்த அளவு செயல்படுகின்றவராக இருக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

கர்த்தர் மறுபடியும் வருகையில் அவர், "நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசி" என்று கூறுவாரா (மத். 25:21)? அல்லது அவர், "பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே ..."; "பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" என்று கூறுவாரா (வ. 26, 30)? அப்பொழுது அவர் கூறவிருப்பது, இப்பொழுது நீங்கள் செய்வதைச் சார்ந்திருக்க முடியும்.

## குறிப்புகள்

இந்த எடுத்துரைப்பில் நான் தாலந்துகளின் உவமையின் மீதான, "மூன்று சுலபமான பாடங்களில் உங்கள் ஆத்துமாவை இழந்துபோவது எப்படி?" என்று அழைக்கப்பட்ட ஒரு பிரசங்கத்தைக் குறிப்பிட்டுள்ளேன். அந்த "மூன்று சுலபமான பாடங்கள்" பின்வருமாறு: (1) உங்கள் தாலந்துகளைப் புதைத்து வையுங்கள், (2) அவைகளைப் பயன்படுத்தப் பயப்படுகின்றவர்களாய் இருங்கள், (3) ஒன்றுமே செய்யாதிருங்கள். இந்த உவமையைத் தொடக்க இடமாகப் பயன்படுத்துகிற இன்னொரு பிரசங்கத்தை நான் கொண்டுள்ளேன், அது தனிநபர் ஊழியத்தின்மீதான, "நான் பயமடைந்திருந்தேன்" என்ற தலைப்புள்ள பிரசங்கமாக இருக்கிறது.

---

குறிப்புகள்

[1]நீங்கள் மத்தேயு 25ன் திறவுகோல் பாகங்களை மறுகண்ணோட்டமிடவும். தாலந்துகளின் உவமையானது [முந்திய] பாடத்தில் கலந்துரையாடப்பட்டது போல் ஆயத்தமாயிருத்தல் என்ற சிந்தனைக்கு எவ்வளவாய்ப் பங்களிக்கிறது என்று காண்பிக்கவும் விரும்பலாம். [2]இவ்வேளையில், பவுல் சிறையிலிருந்து விடுதலையான பின்பு தமது நிறைவுப் பயணங்களை மேற்கொண்டிருக்கலாம் மற்றும் பிற கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைப் பரவச் செய்து கொண்டிருந்தார்கள். [3]உங்கள் உரையைக் கேட்பவர்கள் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய, உடல்ரீதியான

அபாயங்களின் உதாரணங்களைக் கொடுங்கள். உலகில் நான் வாழும் பகுதியில், இந்தப் பட்டியலில், bungee-jumping, hang-gliding, shooting the rapids on a river and parachuting போன்றவை உள்ளடங்கலாம். [4]KJVயில், மத்தேயு 25:14ல் "the kingdom of heaven" என்பது சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. மத்தேயு 25:1 வசனம் அநேகமாக - பத்துக் கன்னிகைகளின் உவமைக்கு மட்டுமின்றி, தாலந்துகளின் உவமைக்கும் - ஒரு அறிமுகமாக இருக்க நோக்கங்கொண்டிருக்கலாம். மத்தேயு 25:1, ''பரலோக ராஜ்யம் ... ஒப்பாயிருக்கும்'' என்று தொடங்குகிறது. [5]இங்கு பயன்படுத்தப்பட்ட வார்த்தையானது, ''அடிமை'' என்பதற்கான கிரேக்க மொழியின் பன்மை வார்த்தையாக (*doulos*) உள்ளது. [6]நாம் அவருடைய இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்டவர்களாக (அப். 20:28), அந்த இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களாக ("மீண்டும் வாங்கப் பட்டவர்களாக") இருக்கின்றோம் (1 பேது. 1:18, 19). [7]Avon Malone, "The Characteristics of a Good Steward," *The Preacher's Periodical* (July 1983): 11-13. [8]இந்த மூன்று அடிமைகளிடத்திலும் அந்த எஜமான் தமது உடைமைகள் முழுவதையும் ஒப்படைத்தாரா இல்லையா என்பது பற்றிக் கல்வியாளர்கள் கலந்துரையாடுகின்றனர். வசனம் 14ன் மொழிநடையானது அவ்வாறு விளக்கப் படுத்தப்பட முடியும். இதற்கு மறுபுறத்தில் அவர் அவ்வாறு செய்திருந்தால், அவர்களில் இரு அடிமைகள் "அநேகத்தின் மேல்" அதிகாரிகளாக வைக்கப்பட்டது என்பது எதைக் குறிக்கிறது (வ. 21, 23)? அதிர்ஷ்டவசமாக, இந்த விவரங்கள் உவமையின் செய்திக்கு ஒன்றும் சம்மந்தப்படாதவையாக உள்ளது. [9]''தாலந்துகள்'' என்பது மத்தேயு 25:15ல் காணப்படுகின்ற *talanta* என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. [10]வார்த்தைகளின் தோற்றம் பற்றிப் படிக்கும் ஒரு சிலர், "திறமை" என்பதைக் குறிக்கும் வகையில் "தாலந்து" என்பதை நாம் பயன்படுத்துதல், தாலந்துகளின் உவமையில் கண்டறியப்படக்கூடும் என்று நம்புகின்றனர்.

[11]தாலந்து என்பதன் பண அலகு மத்தேயு 18ல் அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமையிலும் பயன்படுத்தப்பட்டது, அது "பதினாயிரம் தாலந்து" என்று உரைத்தது (வ. 24). அந்த உவமையின் கடனைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட தொகையானது எவரொருவரும் திருப்பிச் செலுத்த இயலாத தொகையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. [12]E. M. Cook, "Weights and Measures," *International Standard Bible Encyclopedia*, rev., gen, ed. James Orr (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 4:1055. [13]அது செம்பினால் ஆன தாலந்தாகவும் இருந்திருக்கக் கூடும். [14]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8, gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1984), 516; Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part 2* (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 135. [15]சில வெளியீடுகள், இந்தத் தாலந்துகளின்மீது, நூற்றாண்டுகள் இல்லையென்றாலும் பல பத்தாண்டுகளுக்கு முந்தியவைகளாக, செல்லத் தகாதவைகளாக உள்ள பணமதிப்பை இடுவதற்கு முயற்சி செய்கின்றன. அவ்வாறு குறிப்பிடப்பட்ட தொகை மதிப்புகள் பெரும்பாலும் நகைக்கத்தக்க அளவுக்கு மிகவும் குறைவானவைகளாக உள்ளன. [16]"ஒவ்வொருவரின் தேவைக்குத் தக்கதாக ஒவ்வொருவருக்கும் தரப்பட வேண்டும்" என்று வெளிப்படுத்தப்பட்ட மார்க்ஸின் கண்ணோட்டமல்ல ஆனால் ''ஒவ்வொருவரின் திறமைக்கு தக்கதாக'' ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதே சொத்துக்களைப் பிரித்தலுக்கான உண்மையான தராதரமாக உள்ளது (James Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968], 401). [17]Ibid. [18]ஒரு தாலந்து என்பதும்கூட மிகவும் மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. அது போன்றே, இன்றைய

நாட்களில் "ஒரு தாலந்து" கொண்டுள்ள தனிநபர், தமது ஒரே "தாலந்தும்" முக்கியமானது என்று உணர்ந்தறிய வேண்டும். அவர் ஒருவர் மாத்திரமே அந்த வரத்தைக் கொண்டவராக இருக்கலாம். அவர் அதைப் பயன் படுத்தாவிட்டால், தேவையான சில பணிகள் செய்யப்படாமல் போகலாம் அல்லது அதைச் செய்யத் தகுதியற்ற சிலரால் அது செய்யப்பட வேண்டியிருக்கலாம். [19]Neil R. Lightfoot, *The Parables of Jesus*, Part 2 (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 78. [20]ஒரு பிரசங்கத்தில் நான், "நான் கூறுவதை உங்களால் கேட்க முடிந்தால்" என்று கூறுவேன்.

[21]எபேசியர் 4:8 மற்றும் ரோமர் 12:6-8 ஆகிய வசனப் பகுதிகள் தேவனால் பொழிந்தருளப்பட்ட ஆவிக்குரிய வரங்கள் சிலவற்றைப் பற்றிப் பேசுகின்றன. [22]KJV வேதாகமத்தில் வசனம் 16ல் "உடனே" என்ற வார்த்தை இல்லை, ஆனால் பழைய வேத வசனப்பகுதிகள் பலவற்றில் இந்த அர்த்தம் கொண்ட கிரேக்க வார்த்தை உள்ளடங்குகிறது. [23]Lewis, 135. [24]கடந்த காலத்தில், அரிசி டப்பாவிற்குள்ளோ, படுக்கும் மெத்தைக்குக் கீழோ அல்லது ஒரு தகர டப்பாவில் போட்டு தரையில் புதைத்து வைத்தோ பணத்தைப் பாதுகாத்த யாராவது ஒருவரைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளீர்களா? அப்படியென்றால், இதை ஒரு விவரிப்பாகப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம். [25]Peterman; Robert H. Mounce, *New International Biblical Commentary: Matthew* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 234. [26]உங்கள் உரையைக் கேட்பவர்கள் கடந்த ஆண்டின் "B" western movies என்ற திரைப்படங்களை அறிந்திருந்தால், நீங்கள் "கிறிஸ்து இந்த நபரின் தலையில் இருந்த வெள்ளைத் தொப்பியை எடுத்துவிட்டு, இவனுக்கு ஒரு கறுப்புத் தொப்பியைப் போட்டுவிட்டார்" என்று கூறமுடியும். [27]எந்த ஒரு உவமையும் சாத்தியமான ஒவ்வொரு சூழ்நிலையையும் தொட முடியாது. இந்த உவமையில் ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் தனது தாலந்தைப் பயன்படுத்தாமல் இருந்தான். உண்மை வாழ்க்கையில், ஐந்து தாலந்துகளைப் பெற்றவனோ அல்லது இரண்டு தாலந்துகளைப் பெற்றவனோ, பெரும்பாலும் தமது தாலந்துகள் எல்லாவற்றையும் பயன்படுத்துவதில்லை. இது மிக அதிகமாக வஞ்சனையுள்ளதாக இருக்கக்கூடும்: ஐந்து தாலந்துகளை பெற்ற ஒருவர் தமது தாலந்துகளில் நான்கை மாத்திரமே பயன்படுத்தினால், அவர் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்பவர் போல் தோற்றம் அளிக்கக்கூடும். [28]எந்த ஒரு உவமையும் ஒவ்வொரு சூழ்நிலையையும் கூறிமுடிப்பதில்லை என்பதற்கு இங்கு இன்னொரு உதாரணமுள்ளது. இந்த உவமையில், ஐந்து தாலந்து மற்றும் இரண்டு தாலந்து ஆகியவற்றைப் பெற்ற இருவரும் (உலகம் வெற்றி என்று தீர்மானிக்கின்ற வகையில்) வெற்றி நிறைந்தவர்களாக இருந்தனர், ஆனால் தேவன் நமக்கு அளிக்கின்ற தாலந்துகளைப் பயன்படுத்த முயற்சி செய்கின்றபோது எப்போதுமே விஷயம் இதுபோன்று இருந்துவிடுவதில்லை. தேவன் நமக்கு ஒப்புவித்துள்ளவற்றில் நாம் உண்மை நிறைந்தவர்களாக இருக்கும்போது அவர் நம்மை "வெற்றி நிறைந்தவர்கள்" என்று எண்ணுகின்றார். [29]இராத்தல்களின் உவமையில் உள்ளது போன்றே, "கொஞ்சத்திலே" என்பது ஒரு சார்பு நிலைச் சொற்றொடராக உள்ளது: "கொஞ்சம்" என்பது அவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட இருந்தவற்றுடன் ஒப்பீடான நிலையில் அவ்வாறு இருந்தது. [30]KJVயில் "மீது அதிகாரியாக்குவேன்" என்றுள்ளது, இது சற்றுப் பலமானதாக இருக்கலாம். மூலவசனத்தில், "நான் உன்னை ... மீது அமைப்பேன்" என்றுள்ளது.

[31]அடிமையல்லாத ஒருவருக்குத் தரப்பட்ட இவ்விதமான கனத்தின் உதாரணம் ஒன்றுக்கு 2 சாமுவேல் 9:10ஐக் காணவும். நீதிமொழிகள் 17:2ஐயும் காணவும். [32]Lightfoot, 80; Richard C. Trench, *Notes on the Parables of Our Lord* (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1953), 279. [33]ஒன்றுபோல் வரும் வசனங்களுக்கு லூக்கா 13:3

*மற்றும் 13:5 ஒரு உதாரணமாக உள்ளது. நீதிமொழிகள் 14:12 மற்றும் 16:25 ஆகியவை இன்னொரு உதாரணமாக உள்ளது.* [34]Olaf M. Norlie, *The New Testament: A New Translation* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1961). [35]*நீங்கள் உதாரணங்களைத் தர விரும்பலாம்.* [36]NASB*யில் "கோழைத்தனமுள்ளவன்" என்றுள்ளது.* [37]*மக்கள் சில வேளைகளில், "இந்த [அல்லது] அந்த நபரைப் போல் நான் செய்ய முடியாவிட்டால், நான் ஒன்றுமே செய்யமாட்டேன்" என்று தர்க்கம் செய்கின்றனர்.* [38]*சோம்பேறித்தனத்தையும் சும்மாயிருப்பதையும் வேதாகமம் கண்டனம் பண்ணுகிறது (நீதி. 6:6; 31:27; பிர. 10:18; 1 தீமோ. 5:13 ஆகிய வசனங்களைக் காணவும்).* [39]RSV*வேதாகமம் இந்தக் கூற்றிற்குப் பின்பு ஒரு கேள்விக்குறியை இட்டுள்ளது, இது "ஆகவே, இதுதான் நீ என்னைப்பற்றிக் கொண்டுள்ள கண்ணோட்டமா?" என்று அர்த்தப்படுகிறது.* [40]KJV*வேதாகமத்தில்* "interest" *என்பதற்குப்பதில்* "usury" *என்றுள்ளது. இன்றைய நாட்களில்* "usury" *என்ற வார்த்தையானது மோசமான எடுத்துரைப்பு அர்த்தம் கொண்டுள்ளது, இந்த அர்த்தம் கிரேக்க வசனத்தில் காணப்படுவதில்லை; இப்பொழுது* "usury" *என்பது "அதிகமான அல்லது சட்டத்திற்குப் புறம்பான வட்டி" என்று அர்த்தப்படுகிறது.* [*தமிழ் நாட்டில் இதைக் "கெந்து வட்டி" அல்லது "மீட்டர் வட்டி" என்று கூறுகின்றோம்.*]

[41]*பழைய ஏற்பாட்டில் சக யூதரிடம் வட்டி வாங்குதல் என்பது தடை செய்யப்பட்டுள்ளதால் (யாத். 22:25; லேவி. 25:35-37; உபா. 23:19, 20; சங். 15:5ஐக் காணவும்), உவமையின் இந்த விவரமானது கல்வியாளர்கள் சிலரைக் கவலை யடையச் செய்துள்ளது. இருப்பினும் புறஜாதியாரிடம் வட்டி வாங்குவதைப் பிரமாணம் தடை செய்யவில்லை (உபா. 23:20). நாம் அநேகமாக இதை ஒரு முக்கிய மற்ற விவரமாகக் கருதவேண்டும். ஒரு உவமையில் ஒரு விவரத்தை இயேசு பயன் படுத்துதல் என்பது அதை அவர் அங்கீகரித்தார் என்று அர்த்தப்படுத்த அவசிய மில்லை (லூக். 16:8; 18:2ஐக் காணவும்).* [42]*மத்தேயு 25:27ல் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "மேஜை" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் (trapedza) இருந்து வந்துள்ளது. இவ்வார்த்தையின் ஒரு வடிவமானது மத்தேயு 21:12, மாற்கு 11:15 மற்றும் யோவான் 2:15 ஆகிய வசனங்களில் காசுக்காரர்களின் மேஜை என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [43]KJV*யில் "வங்கி" அல்லது "வங்கியாளர்" என்பதற்குப் பதிலாக "காசை மாற்றுபவர்" என்ற வார்த்தை உள்ளது.* [44]*இன்றைய நாட்களில் உள்ள வங்கிகள் போல், இவர் மற்றவர்களின் பணத்திற்குத் தாம் கொடுக்கும் வட்டியைவிட அதிகமான வட்டியை அதைக் கடனாகக் கொடுப்பதில் இருந்து பெற்று அதன்மூலம் பயனடைந்தார்.* [45]KJV*யில்* "unprofitable" *(இலாபமற்ற) என்றுள்ளது. அர்த்தம் ஒன்றுதான்.* [46]*கறுப்புக்கோடு வரைதல் என்ற விவரிப்பானது பீட்டர்மேன் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது.* [47]*நீங்கள் இதை ஒரு பிரசங்கமாகப் பிரசங்கித்தால், மக்கள் கிறிஸ்தவராகுதல் எவ்வாறு என்று (மாற். 16:15,16; அப். 2:38) அவர்களிடம் கூற நீங்கள் விரும்புவீர்கள்.*

*81*

# ஒருபோதும் மறக்கக் கூடாத இரவு

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #34*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*

H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*

1. *கடைசி இராப்போஜனம் (தொடர்ச்சி).*

c. *தாழ்மை செயல்விளக்கப்படுத்தப்படுதல் (யோவா. 13:2-20).*

d. *காட்டிக்கொடுத்தல்/மறுதலித்தல் ஆகியவை முன்னுரைக்கப்படுதல் (மத். 26:21-25, 31-35; மாற். 14:18-21, 27-31; லூக். 22:21-23, 31-38; யோவா. 13:21-38).*

e. *கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்படுதல் (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26[1]).*

### அறிமுகம்

இது ஒருபோதும் மறக்கக் கூடாத இரவாக இருந்தது. இந்த இரவானது, மேல்வீட்டில் இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்கா உணவைப் புசித்த நிகழ்ச்சியுடன் தொடங்கிற்று. இது கெத்செமனே தோட்டத்தில் ஜெபத்துடன் தொடர்ந்தது. இந்த இரவின் நிகழ்ச்சிகள், பிரதான ஆசாரியரின் அரண்மனையில் இயேசுவைப் போலியாக விசாரணை செய்த விஷயத்துடன் முடிவடைந்தது. இந்தப் பாடம் பஸ்கா விருந்தை உண்டது தொடர்பான நிகழ்ச்சிகளின் முதல் பாகத்தைக் கூறிமுடிப்பதாயிருக்கும். நினைவுகூரத்தக்க இந்த இரவின் நிகழ்ச்சிகள் பற்றிய மிகச் சரியான வரிசைமுறைமையை நாம் நிச்சயமாகக் கூற இயலாது.[2] பின்தொடரும் வரிசைமுறைமையானது இந்த நிகழ்ச்சிகளை அடுக்கிக்கூறும் ஒரு வழிமுறையாக உள்ளது.[3]

# விளைவை ஏற்படுத்தும் செயல்பாடு
# *(யோவா. 13:2-20)*

*முந்திய பாடமானது, யார் பெரியவன் என்று அப்போஸ்தலர்கள் வாக்குவாதம் செய்த நிகழ்ச்சியுடன் முடிவடைந்தது (லூக். 22:24). அந்த வாக்குவாதமானது இந்த உணவு வேளையின்போது ஒரு தனித்த நிகழ்ச்சியைத் தூண்டியிருக்கலாம்.*

> *... இயேசு ... போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவா. 13:3-5).*

*அந்த நாட்களில், விருந்தினர் ஒருவர் வீட்டிற்குள் வருகையில் அவரது பாதங்களைக் கழுவுதல் என்பது பொதுவான உபசரிப்பாக இருந்தது. இந்த விருந்தோம்பும் செயலானது வருகின்றவரின் பாதங்களை ஆறுதல் படுத்திற்று ஆனால் இது நடைமுறைப் பகுதி ஒன்றையும் கொண்டிருந்தது. மக்கள் கால்களில் மிதியடிகளை அணிந்துகொண்டு அழுக்கான நடை பாதைகளில் நடந்து வந்தனர். அவர்கள் உண்பதற்குச் சாய்ந்தமர்ந்தபோது, ஒரு விருந்தினரின் பாதங்கள் இன்னொரு விருந்தினரின் முகத்திலிருந்து தொலைவில் இராது.*

*பஸ்கா உணவை உண்பதற்கு ஆயத்தமாகுதலில், அப்போஸ்தலர்கள் ஏற்கனவே அநேகமாகக் குளித்திருப்பார்கள் (வ. 10ஐக் காணவும்); ஆனால் அவர்கள் மேல்வீட்டின் கதவைக் கடந்து, நடந்து வருகையில், அவர்களின் பாதங்கள், அவர்கள் நடந்து வந்த தூசிமிகுந்த சாலையிலிருந்து [பெற்ற அசுத்தங்களினால்] அழுக்காகி இருந்திருக்கும். பாதங்களைக் கழுவுவதற்குத் தேவையான யாவும் அங்கே கிடைத்தது (வ. 4, 5), ஆனால் பெரியவனாயிருப்பது யார்? என்பது பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த அந்த மனிதர்கள் தங்கள் சகசீஷர்களின் அழுக்கான பாதங்களைக் கழுவ மனவிருப்பமற்று இருந்தனர். அது வேலைக்காரர்களால் செய்யப்பட வேண்டிய பணியாக அல்லவா இருந்தது!*

*முன்னதாக இயேசு, தமது ராஜ்யத்தில் பெரியவனாயிருத்தல் என்பது பதவியின் அடிப்படையில் அல்ல ஆனால் ஊழியத்தின் அடிப்படையிலேயே இருந்தது என்று அவர்களுக்குத் தகவல் அறிவித்திருந்தார். அவர், "நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப் போல் இருக்கிறேன்" என்று கூறியிருந்தார் (லூக். 22:27). இந்த வேளையில், அவர் ஊழியம் செய்தல் என்பது எதனை அர்த்தப்படுத்திற்று என்று - ஒரு ஊழியக்காரன் செய்யும் அற்பமான வேலையைச் செய்தலினால் - விவரித்தார். அவர்களின் பாதங்களை அவர் கழுவினார்.*

*பாதங்கள் கழுவப்பட்டவர்களின் மத்தியில் யூதாஸ் இருந்தான் என்ற உண்மையானது, வேத வசனப் பகுதியில் விசேஷித்த கவனத்தைப் பெறுகிறது (யோவா. 13:2, 10, 11, 18, 19). இவ்வாறு கர்த்தர், "உங்கள்*

*சத்துருக்களைச் சிநேகியுங்கள்" மற்றும் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்*[4] *என்பது, எதனை அர்த்தப்படுத்துகிறது என்று செயல்விளக்கப்படுத்தினார் (மத். 5:44, 45; ரோமர் 12:20ஐக் காணவும்).*

*கிறிஸ்து சீஷர்களின் பாதங்களைக் கழுவி முடித்தபின்பு, அவர் தமது உதாரணத்தைச் சீஷர்கள் பின்பற்றும்படி அறைகூவல் விடுத்தார் (யோவா. 13:14-17). இது, அவர் பாதங்களைக் கழுவும் நிகழ்ச்சியை நமது ஆராதனையின் ஒரு பாகமாக நிகழ்த்தப்பட வேண்டிய ஒரு சடங்காக ஏற்படுத்தினார் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை.* J. W. *மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *இயேசு பாதங்களைக் கழுவுதலை நியமிக்கவில்லை; அவர் அதை ஏற்கனவே நாட்டில் இருந்த நன்கு அறியப்பட்ட ஒரு பழக்க வழக்கமாகக் கண்டு, அதைத் தாழ்மையான ஊழியத்தின் ஆவியைக் காண்பிக்கும் தகுதிமிக்க ஒரு வழிமுறையாக மாத்திரம் பயன்படுத்தினார் ... . விருந்தோம்புதல் அல்லது உபசரித்தல் என்ற செயல் வகையிலான, பாதங்களைக் கழுவுதல் என்பது மேற்கு நாடுகளின் மக்களிடையில் ஒரு பழக்கவழக்கமாக ஒருக்காலும் இருந்ததில்லை, மற்றும் கிறிஸ்துவின் இந்த வார்த்தைகளினால் இதைத் தழுவிக் கொள்ளுதல் என்பது அவரது அர்த்தத்தை முற்றிலும் தவற விடுதலாக உள்ளது.*[5]

*ஜான்* F. *கார்ட்டர் அவர்கள், "புதிய ஏற்பாட்டு சபைகளில் எதுவும் [பாதம் கழுவுதல்] என்பதை ஒரு சடங்காக எப்போதாவது செயல்படுத்தியதற்கான ஆதாரம் எதுவும் இல்லை" என்று குறிப்பிட்டார். அவர், "சபை வரலாற்றில் இப்படிப்பட்ட பழக்கத்தைப் பற்றிய மிகத் தொடக்க காலக் குறிப்பிடுதலானது கி.பி. 306ல், ஸ்பெயின் நாட்டின் எல்விரா என்ற இடத்தில் இருந்த மூப்பர்களின் ஆலோசனைக் கூட்டத்தின் ஆணைகளில் உள்ளது, அதில் இந்தப் பழக்கம் கண்டனம் பண்ணப்பட்டது."*[6] H. I. *ஹெஸ்டர் அவர்கள், "இவ்விடத்தில் இயேசு, கர்த்தருடைய பந்தியைப் போன்று ஒரு ஆசரிப்பை நிலைநாட்டவில்லை, ஆனால் ஆவியின் உண்மையான கீழ்ப்படிதல் பற்றிய பொருளறிபாடம் ஒன்றைக் கொடுத்தார்" என்று கூறினார்.*[7]

*கிறிஸ்து, அப்போஸ்தலர்களின் பாதங்களில் இருந்த அழுக்கைக் குறித்து அடிப்படையில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை; அவர்களின் இருதயங்களில் இருந்த சுயநலமிக்க பேரார்வம் பற்றி அவர் அதிக கவலை கொண்டிருந்தார். இந்த நிகழ்ச்சியானது, அவர் யூதாஸைச் சென்றடைவதற்கான கடைசி முயற்சியாக இருந்திருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கர்த்தரால் யூதாஸின் பாதங்களைக் கழுவ முடிந்தது, ஆனால் யூதாஸின் இருதயம் அசுத்தத்துடன் நிலைத்திருந்தது என்பது கவலைக்குரியதாக இருந்தது (13:27).*

# திகைக்க வைக்கும் அறிவிப்புகள்
# *(மத். 26:21-25, 31-35; மாற். 14:18-21, 27-31; லூக். 22:21-23, 31-38; யோவா. 13:18, 19, 21-38)*

**யூதாஸைப் பற்றிய அறிவிப்பு *(மத். 26:21-25; மாற். 14:18-21; லூக். 22:21-23; யோவா. 13:18, 19, 21-30)***

கிறிஸ்து சீஷர்களின் பாதங்களைக் கழுவுகையில், தாம் காட்டிக் கொடுக்கப்படப் போவதாக - தமக்கு நெருக்கமான ஒருவரால் காட்டிக் கொடுக்கப்படப் போவதாக - திகைக்க வைக்கும் அறிவிப்பை ஏற்படுத்தினார். வேத வசனம் நிறைவேற்றப்படும் என்று அவர் கூறினார்: "என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" (யோவா. 13:18; சங். 41:9ஐக் காணவும்). "கிழக்கு நாடுகளில் இருவர் ஒன்றாய்க் கூடிப் புசித்தல் என்பது நட்புறவின் உடன்படிக்கையை அல்லது வாக்குறுதியை மறைமுகமாய் உணர்த்திற்று.[8] ஆனால் யூதாஸ், இயேசுவின் விரோதிகளிடத்தில் ஒரு கிரயத்திற்கு அவரை [காட்டிக்] கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருந்த பின்பும்கூட, அவன் தன் எஜமானருடைய இந்தப் பரிசுத்த உணவில் அமைதியாகப் பங்கேற்றான்."[9]

கிறிஸ்து [தாம்] காட்டிக் கொடுக்கப்படுதலைப் பற்றி "அது நடக்கும்போது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று அப்போஸ்தலர்களுக்குக் கூறினார் (யோவா. 13:19). இதைப் பற்றி முன்னதாகக் கூறினார் என்ற உண்மையானது அவர் தெய்வீகத்துவம் வாய்ந்தவர் என்பதை மறுஉறுதிப்படுத்தும். அது, காட்டிக்கொடுத்தலானது அவரது திட்டங்களைத் திகைக்க வைத்து அல்லது இடைமறித்து அவரைப் பிடிக்கவில்லை என்பதை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதினால் அவர்களின் விசுவாசத்தைப் பாதுகாப்பதாகவும் அமையும்.

இயேசு பேசுகையில், "[அவர்] ஆவியிலே கலங்கி[னார்]" (யோவா. 13:21அ). என்ன பயங்கரமான விஷயங்கள் முன் வந்துகொண்டிருந்தன என்பதைச் சீஷர்கள் அறியாதிருந்தனர், ஆனால் அவைகளைப் பற்றிக் கிறிஸ்து தெளிவாக அறிந்திருந்தார். அவர் அப்போஸ்தலர்களின் பக்குவக் குறைபாடு பற்றிக் கவலை கொண்டவராகவும் இருந்தார். மற்றும், யூதாஸின் சூழ்ச்சி குறித்தும் அவரது இருதயம் உடைந்துபோக வேண்டியிருந்தது.

பன்னிருவருரிடத்திலும் இயேசு வெளிப்படையாகப் பேசினார்: "... உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" (யோவா. 13:21ஆ; மத். 26:21ஐக் காணவும்). அவர்கள் திகைப்படைந்தனர் (யோவா. 13:22) மற்றும் "... நம்மில் யார் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்" (லூக். 22:23). "அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: 'ஆண்டவரே, நானோ, நானோ?' என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள்"[10] (மத். 26:22). அவர்கள் அநேகமாக, "தங்களில் ஒருவர் தெரியாத்தனமாகச் செய்யப்போகும் சில காரியமானது அவர் தமது

*விரோதிகளால் எடுத்துச் செல்லப்படுதலை விளைவிக்கும் என்று அவர் அர்த்தப்படுத்தினார் என்றே நினைத்தனர்.”[11] ஆகையால் ஒவ்வொருவரும், “நான் நிச்சயமாக அதைச் செய்ய மாட்டேன்!” என்று கூறினர்.*

*இயேசுவின் வலது புறத்தில் இருந்த யோவான், “ஆண்டவரே, அவன் யார்?” என்று கேட்டார் (யோவா. 13:23-25[12]). “இயேசு பிரதியுத்தரமாக: ‘நான் இந்தத் துணிக்கையைத் தொய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ,[13] அவன்தான்’ என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்” (யோவா. 13:26; மத். 26:23ஐக் காணவும்).*

*சுட்டிக்காட்டப்பட்ட அந்தச் செயலுக்குப் பின்பு, குற்றம் செய்யவிருந் தவனின் அடையாளம் எல்லாருக்கும் உறுதியாயிற்று என்று ஒருவர் நினைக்கலாம். இருப்பினும் அது எல்லா சீஷர்களுக்கும் தெளிவாகவில்லை (யோவா. 13:28, 29). அநேகமாக, யூதாஸ் உயர்வாக மதிக்கப்பட்டு இருந்திருக்கலாம். யூதேயாவிலிருந்து வந்த ஒரே அப்போஸ்தலன் என்ற வகையில், இவன் ஒருவேளை மற்றவர்களை விட உயர்ந்த கல்விகற்றவனாக இருந்திருப்பான். இவன் அவர்களின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதினால் கனப்படுத்தப்பட்டிருந்தான் (யோவா. 13:29; யோவா. 12:6ஐயும் காணவும்). அவர்களுடைய குழுவினருக்காக, தானம் வழங்கும் முக்கியப் பொறுப்பை அவன் கொண்டிருந்தான் (யோவா. 13:29). ஒருக்காலும் கர்த்தரைக் காட்டிக்கொடுக்காத ஒரு சீஷர் இருப்பாரென்றால், அது யூதாஸாகவே இருக்கவேண்டும் என்ற அவர்களில் பலர் நினைத்திருக்க வாய்ப்புள்ளது.*

*இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும், அப்போஸ்தலர்களில் பெரும்பான்மையானவர்கள் புரிந்துகொண்டிருக்கவில்லை, ஆனால் அவற்றை யூதாஸ் புரிந்துகொண்டிருந்தான். எஞ்சியவர்களுடன் அவன் மாய்மாலமாக, “ரபீ, நானோ?” என்று கேட்டான் (மத். 26:25அ), மற்றும் கிறிஸ்து “நீ சொன்னபடிதான்”[14] என்று பதில் அளித்தார் (மத். 26:25ஆ). யூதாஸின் சூழ்ச்சி இவ்விதமாக வெளிப்படுத்தப்பட்டதில் அவன் மிகவும் அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும்; ஆனால் அது அவனை மனங்குலையச் செய்ததா என்பது உறுதியாய்த் தெரிவதில்லை. காற்றடிக்கும்படி வைக்கப் பட்ட சேறானது இறுகிவிடுவது போலவே, இயேசுவினால் வெளிப்படுத்தப் பட்ட நிலையில் யூதாஸின் இருதயம் இன்னும் அதிகமாய்க் கடினமாயிற்று (யோவா. 13:27அ[15]).*

*யூதாஸிடத்தில் கிறிஸ்து, “நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய்” என்று கூறினார் (யோவா. 13:27ஆ). அந்த இரவில் இயேசு நிறைவேற்ற வேண்டியிருந்தவைகள் அதிகமாக இருந்தபடியால், தம்மைக் காட்டிக் கொடுப்பவனை முன்னதாக விட்டுவிடுவதற்கு அவர் விரும்பாதிருந்தார். இப்போதோ, எஞ்சியுள்ளவற்றைச் செய்யப் போதுமான காலம் இருந்தது என்று அறிந்த நிலையில் அவனை அவர் தாராளமாக விடுவிக்கலாம். “அவன் [யூதாஸ்] … உடனே புறப்பட்டுப் போனான்;[16] அப்பொழுது இராக் காலமாயிருந்தது”[17] (யோவா. 13:30).[18]*

*யூதாஸின் சூழ்ச்சியான செயல்களைத் தற்காப்பதற்குச் சிலர் முயற்சி*

செய்துள்ளனர்,[19] ஆனால் கிறிஸ்து, "... எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்" என்றார் (மத். 26:24; மாற். 14:21ஐக் காணவும்). மெக்கார்வீ அவர்கள், "இயேசுவின் வார்த்தைகள் யூதாஸிற்கு [அவனது செய்கைக்கு] மழுப்பலான விளக்கம் கொடுப்பவர்களின் வாய்களை அடைக்கின்றன. நியாயாதிபதி இவ்விதமாக ஆக்கினைத் தீர்ப்புத் தரும்படி பேசுகின்றபோது, [அவனது செய்கையை] இலேசானதென்று வாதிட யார் முன்வருவார்?" என்று எழுதினார்.[20]

**பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்களைப் பற்றிய அறிவிப்புகள் (மத். 26:31-35; மாற். 14:27-31; லூக். 22:31-38; யோவா. 13:31-38)**

யூதாஸ் புறப்பட்டுச் சென்ற பின்பு ஏதோ ஒரு வேளையில் (யோவா. 13:31அ),[21] இயேசு மற்ற அப்போஸ்தலர்களிடத்தில் திரும்பினார். அவர் மகிமைப்படுத்தப்படுதல்[22] பற்றி உரைத்தார் (யோவா. 13:31ஆ, 32), மற்றும், "பிள்ளைகளே,[23] இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனே கூட இருப்பேன்" என்று உரைத்தார் (யோவா. 13:33அ). அவர் செய்வதற்கு அதிகமானவற்றையும் அவற்றைச் செய்வதற்குக் கொஞ்சக் காலத்தையும் கோண்டிருந்தார்!

அவர் முன்பு உரைத்திருந்த வார்த்தைகளை மீண்டும் கூறினார் (யோவா. 13:33ஆ; யோவா. 7:33, 34; 8:21 ஆகியவற்றைக் காணவும்), பின்பு அவர், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறினார் (யோவா. 13:34). இது பிறரை அன்புகூரவேண்டும் என்ற கட்டளையாக இருந்ததினால் மாத்திரம் "ஒரு புதிய கட்டளையாக" இருந்த தில்லை; அந்த ஆணையானது பல நூற்றாண்டுகள் பழமையானதாக இருந்தது (லேவி. 19:18ஐக் காணவும்). மாறாக, இது இயேசு தமது சீஷர்கள் மீது கொண்டிருந்த அதே வகையான அன்பாயிருக்க வேண்டும் என்று அவர் கூறியதினால் ஒரு புதிய கட்டளையாக இருந்தது: "நான் உங்களில் அன்பா யிருந்தது போல!" அத்துடன் அவர், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ள வர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்றும் கூறினார் (யோவா. 13:35). நீங்கள் எந்த அளவு அக்கறையுள்ளவர்களாய் இருக்கின்றீர்கள் என்று மக்கள் அறியும் வரையிலும், நீங்கள் எவ்வளவு அறிந்திருக்கின்றீர்கள் என்பது பற்றி அவர்கள் அக்கறை கொள்வதில்லை என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

"இன்னும் கொஞ்சக் காலம் நான் உங்களுடனேகூட இருப்பேன்" (யோவா. 13:33அ) என்ற வார்த்தைகளைத் தேர்ந்துகொண்ட பேதுரு, "ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்?" என்று கேட்டார் (யோவா. 13:36அ). அதற்குக் கிறிஸ்து, "நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக் கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய்" என்று பதில் அளித்தார் (யோவா. 13:36ஆ). இயேசு தாம் மரிப்பதைப் பற்றிப் பேசுவதைப் பேதுரு

புரிந்து கொள்ளவில்லை. அந்த அப்போஸ்தலர்: "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்றான் (யோவா. 13:37).

இயேசு, "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு[24] கேட்டுக்கொண்டான்" (லூக். 22:31) என்று பதில் அளித்தபோது அவரது குரலில் இருந்த மென்மைத்தன்மையை என்னால் கேட்க முடிகிறது. மாசுகளை நீக்குவதற்குப் பெண்கள் மாவினைப்[25] புடைப்பதுண்டு; அப்போஸ்தலர்களுக்குள்[26] இருந்த மாசுகளை வெளிப்படுத்தி அவர்களைச் சாத்தான் தனக்கென்று தவறாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர்களைப் "புடைத்துக்" கொண்டிருந்தான். அவன் ஏற்கனவே ஒருவனை [யூதாஸை]க் குற்றமுள்ளவனாகக் கொண்டிருந்தான் (யோவா. 13:2, 27); அவன் இன்னும் அதிகமானவர்களை விரும்பினான்.

சாத்தான், நடத்துனரும் பேச்சாளருமான பேதுருவை விசேஷித்த வகையில் இலக்கு வைத்திருப்பான். இதனை அறிந்த இயேசு பேதுருவினிடத்தில், "நானோ, உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணமாக்கப்பட்டபின்பு[27] உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்றார் (லூக். 22:32). அதற்கு அந்த அப்போஸ்தலர், "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்!" என்று மறுத்துரைத்தார் (லூக். 22:33). கிறிஸ்து ஒருவேளை தமது தலையை [எதிர்மறையாய்] அசைத்து, "எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ?" என்று கேட்டார் (யோவா. 13:38அ). அவர் கவலையுடன், "பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (லூக். 22:34).[28]

மற்றப் பத்துப் பேரிடம் திரும்பிய கர்த்தர், "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்றார் (மத். 26:31; சக. 13:7ஐக் காணவும்). இயேசு கூடுதலாக, "ஆகிலும் நான் உயிர்த்தெழுந்தபின்பு, உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்" என்றார் (மத். 26:32). கலிலேயாவைக் குறித்த இந்த வாக்குத்தத்தத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள் (மத். 28:7, 10, 16; யோவா. 21:1ஐக் காணவும்). இயேசு உயிர்த்தெழுந்தபின்பு, ஒரு மேய்ப்பன் சிதறிப்போன தனது மந்தையை ஒன்றுகூட்டுவதுபோல் கலிலேயாவில்[29] தமது சீஷர்களை ஒன்றுகூட்டுவார்.

பேதுரு, இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தார். அவர், "உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று அறிவித்தார் (மத். 26:33). கர்த்தர் மீண்டும் பேதுருவிடம், "இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத். 26:34). "அதற்குப் பேதுரு நான் உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று

உறுதியாய்ச் சொன்னான்” (மாற். 14:31அ). “சீஷர்கள் எல்லாரும் அப்படியே சொன்னார்கள்” (மத். 26:35ஆ).

எதிர்வந்து கொண்டிருந்த கடினமான வேளைகளுக்கு அப்போஸ்தலர்கள் ஆயத்தமாயிருக்கவில்லை என்பது தெளிவு.[30] இயேசு, ஏசாயா 53:12ல் இருந்து மேற்கோள் காண்பித்துத் தாம் மரிக்கவிருப்பதை மீண்டுமாக உறுதிப்படுத்தினார் (லூக். 22:37). அவர் தமது சீஷர்களை, தாம் முன்பு அவர்களை வெளியில் அனுப்பியபோது அவர்கள் பெற்றிருந்த சாதகமான வரவேற்பை எதிர்காலத்தில் எதிர்பார்க்க முடியாது என்று எச்சரிக்கை செய்தார் (லூக். 22:35, 36; மத். 10; லூக். 10:1-16ஐக் காணவும்).

அவர்கள் எதிர்காலத்திற்குத் தயாராயிருக்கும்படி அவர்களுக்கு அவர் அறிவுறுத்துகையில், பட்டயம் ஒன்றை வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார் (லூக். 22:36). சீஷர்கள் அதை உண்மையான பட்டயம் என்று நினைத்தவர்களாய், தங்களிடம் இரண்டு பட்டயங்கள் இருந்தன என்று கூறினார்கள்; இயேசு அது போதும் என்றார் (லூக். 22:38). பன்னிரெண்டு மனிதர்களைப் பாதுகாப்பதற்கு இரண்டு பட்டயங்கள் போதாதவைகளாயிருந்தபடியால், அது அவர்களுக்கு, கிறிஸ்து நேரடியாகப் பேசவில்லை என்பதற்கான குறிப்பு ஒன்றைக் கொடுத்திருக்க வேண்டும்.[31] இருப்பினும் அவர்கள் - வரவிருந்த அவரது மரணத்தைப் பற்றி அவர் கூறியிருந்தவற்றைப் புரிந்து கொள்ளத் தவறியது போலவே - அவரது [இந்த] வார்த்தைகளையும் புரிந்துகொள்ளத் தவறினார்கள் (லூக். 22:49-51ஐக் காணவும்).

## மனக்கிளர்ச்சியூட்டும் ஏற்பாடு (மத். 26:26-29; மாற். 14:22-25; லூக். 22:19, 20; 1 கொரி. 11:23-26)

பஸ்கா விருந்து முடிவை நெருங்குகையில்,[32] இயேசு எல்லாக் காலத்திலும் மிகவும் நீடித்திருக்கிற ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தினார்: கர்த்தருடைய இராப்போஜனம்.[33] “அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து” (மத். 26:26அ; மாற். 14:22; லூக். 22:19ஐக் காணவும்), இது பஸ்காவின்போது பயன்படுத்தப்பட்ட புளிப்பில்லாத அப்பமாக இருந்தது. “ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: ‘நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்’ என்றார்” (1 கொரி. 11:24).

“இது என்னுடைய சரீரமாயிருக்கிறது” என்று இயேசு கூறியபோது, அவர் பேச்சின் உருவகம் ஒன்றைப் பயன்படுத்தினார்,[34] இது, நாம் யாராவது ஒருவருக்கு ஒரு புகைப்படத்தைக் காண்பித்து, “இவர்கள் எனது பேரக் குழந்தைகள்” என்று கூறும்போது நாம் பயன்படுத்துகின்ற அதே பேச்சின் உருவகமாயுள்ளது. அப்பமானது, ரோமச் சிலுவையில் விரைவில் தொங்கவிருந்த இயேசுவின் சரீரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று என்று அவர் கூறினார்.

“அவர் அந்தப்படியே பாத்திரத்தையும்[35] எடுத்து” (1 கொரி. 11:25அ).

இது ‘‘திராட்ச ரசம்’’ நிறைந்த பாத்திரமாயிருந்தது (மத். 26:29). “ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: ‘நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;[36] இது பாவமன்னிப்புண்டாக்கும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய[37] என்னுடைய இரத்தமாயிருக்கிறது’ என்றார்” (மத். 26:27, 28; மாற். 14:24; லூக். 22:20ஐக் காணவும்). இந்தக் கூற்றை ஏற்படுத்தியதில் இயேசு, தமது சித்தத்தின்படி செய்கிறவர்களின் பாவங்களுக்கு மன்னிப்பை பெற்றுத்தருதல் என்பதே தமது மரணத்தின் அடிப்படை நோக்கமாக இருக்கும் என்பதை வெளிப் படுத்தினார் (1 கொரி. 15:3; எபே. 1:7ஐக் காணவும்).

பன்னிருவருக்கும் அவர், ‘‘என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்” என்று அறிவுறுத்தினார் (1 கொரி. 11:25ஆ). பின்பு அவர், “இது முதல் இந்தத் திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (மத். 26:29). ஏற்கனவே குறிப்பிட்டபடி, சபை என்பதே ராஜ்யத்தின் பூமிக்குரிய வெளிப்பாடாக உள்ளது. சபையானது கர்த்தருடைய இராப் போஜனத்தில் பங்கேற்கும்படி கூடிவருகிற ஒவ்வொரு வேளையிலும், அது கிறிஸ்துவுடன் விருந்தை மேற்கொள்ளுகின்றது. பவுல், “நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக் கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கிய மாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிற படியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்” என்று எழுதினார் (1 கொரி. 10:16, 17).

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது, கிறிஸ்துவின் மறுவருகை வரையிலும் தொடரவேண்டிய ஒரு நிலையான நினைவுசின்னமாக இருக்க வேண்டும் என்று அவர் நோக்கங்கொண்டார் (1 கொரி. 11:26). தொடக்க கால சபையார் வாரத்தின் முதல்நாள்தோறும் இந்த நினைவு விருந்தில் பங்கேற்றனர்,[38] அந்த நடைமுறையானது இன்றைய தினம் வரையிலும் தொடருகிறது.

## முடிவுரை

“ஒருபோதும் மறக்கக் கூடாத இரவின்” ஒரு சில மணிநேரங்களை நாம் கவனித்துள்ளோம்.[39] நமது அடுத்த பாடத்தில், யோவான். 14-16ல் இயேசுவின் பிரியாவிடை உரையையும் யோவான் 17ல் அவரது பரிந்து பேசும் ஜெபத்தையும் பற்றி நாம் படிக்கையில் நினைவுகூரத்தக்க அந்த இரவைப் பற்றிய நமது ஆய்வை நாம் தொடருவோம். இந்தப் பாடமானது இந்த நாளை, உங்களுடைய வாழ்க்கையில் “ஒருபோதும் மறக்கக்கூடாத ஒரு நாளாக’’ ஆக்குவதில் உங்களுக்கு உதவியிருக்கிறது என்று நான் நம்புகின்றேன்.

குறிப்புகள்

[1]1 கொரிந்தியர் 11:23-26 வசனப்பகுதியானது கர்த்தருடைய இராப் போஜனத்தை இயேசு ஏற்படுத்தியதன் மிக முழுமையான விவரமாக இருப்பதால், அது இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கிறது. 1 கொரிந்தியர் 11:23-26 வசனப்பகுதி யானது அநேகமாக, முதன் முதலில் இதைப்பற்றி எழுதப்பட்ட ஏவுதல் பெற்ற விவரமாக உள்ளது. 1 கொரிந்தியர் நிருபம் 50களில் எழுதப்பட்டது, ஒப்பீட்டு சுவிசேஷ விவரங்கள் அநேகமாக 60களில் எழுதப்பட்டன. [2]சுவிசேஷ விவரங்களை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், நிகழ்ச்சிகளின் வரிசை முறையில் அவை மிகவும் மாறுபடுவதை நீங்கள் காண்பீர்கள். அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளபடி, நாளாகம வரிசைமுறைமை என்பது இந்த எழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில் உயர்முன்னு ரிமை கொண்டிருந்ததில்லை. அதிர்ஷ்டவசமாக, மிகச் சரியான வரிசை முறைமை என்பது முக்கியமற்றதாக உள்ளது. [3]குறிப்புகளில் நாம் சாத்தியக்கூறாகவுள்ள சில மாறுபாடுகளைக் கவனிப்போம். [4]இயேசு யூதாஸின் பாதங்களைக் கழுவிய வேளையில், யூதாஸ்மீது சந்தேகம் கொள்ளாதிருந்த சீஷர்கள் இந்தப் பாடத்தைக் கண்டிருக்க மாட்டார்கள். ஆனால் நம்மால் அதை இன்றைய நாட்களில் காணமுடிகிறது. [5]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 650. [6]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 285-86. பாதம் கழுவுதல் என்பது "சபையின் ஆசரிப்பாக" இருப்பதை ஒருக்காலும் நோக்கங்கொண்டதில்லை என்று முடிவு செய்வதற்கு மூன்று காரணங்களைக் கொடுத்தார். அவர் Albert Henry Newmanனின், *A Manual of Church History* (Philadelphia: American Baptist Publications Society, 1904), 1:140 என்ற புத்தகத்தைக் குறிப்பிட்டார். [7]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 197. [8]இதைப் பற்றிய பல குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, வெளிப்படுத்தின விசேஷம் 3:20ஐக் காணவும். [9]Carter, 287-88. [10]மூலவசனமானது, "ஆண்டவரே, அது நானோ?" என்று மொழிபெயர்க்கப்பட முடியும் (KJV மற்றும் தமிழ் வேதாகமங்களில் காணவும்), ஆனால் கிரேக்க மொழியில் இந்தக் கேள்வியின் வடிவமானது ஒரு எதிர்மறைப் பதிலை மறைமுக மாக உணர்த்துகிறது. NASB வேதாகமத்தில் "நிச்சயமாக நான் இல்லை, ஆண்டவரே" என்றுள்ளது.

[11]Carter, 288. [12]யோவான், "இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன்" என்று எழுதியபோது, அவர் தம்மைக் குறித்தே பேசினார் என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் நம்புகின்றனர். [13]மெக்கார்வீ அவர்களின் கூற்றுப்படி, அப்பத்தைத் தோய்த்து அதை விருந்தினருக்குக் கையளித்தல் என்பது மரியாதையின் அடையாளமாக இருந்தது (McGarvey and Pendleton, 653). [14]"நீயே அதைச் சொன்னாய்" என்பது உறுதிப்படுத்தும்படி பதில் அளிப்பதற்கு வலிவார்ந்த ஒரு வழிமுறையாக இருந்தது (மத். 26:64ஐக் காணவும்). நான் வாழும் இடத்தில் இதற்கு ஒப்பான, "*You* said it, not me!" என்ற ஒரு சொல்விளக்கத்தை நாங்கள் கொண்டுள்ளோம் [தமிழ்நாட்டில், "நீ தானே அதைச் சொன்னாய்!" என்று நாம் கூறுகின்றோம்]. [15]முன்னதாக, "யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான், அவன் பிரதான ஆசாரியர்களிடத்தில் போய்" என்று கூறப்பட்டது (லூக். 22:3, 4). இவ்விடத்தில், மீண்டும் சாத்தான் அவனுக்குள் "புகுந்தான்" என்று கூறப்பட்டுள்ளது. இயேசுவின் வார்த்தைகள் மற்றும் செயல்களினால் யூதாஸ் அந்தக் கணத்திற்குத் தூண்டப்பட்டிருக்கவும், ஆனால் பின்பு அவன் தன்னைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்திருக்கவும் சாத்தியம் உள்ளது. [16]அவன் "விருந்திற்கு" உணவுப் பொருட்கள் வாங்கச் சென்றான் என்று சிலர் யூகித்தனர் (யோவா. 13:29). ஒருநாள்

பஸ்கா விருந்தைத் தொடர்ந்து புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் ஒரு வார அளவிலான விருந்து வந்தது. பிந்திய விருந்திற்கு ஆயத்தம் பண்ணுவதற்காக யூதாஸ் சென்றான் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். [17]"இந்தச் சொல்விளக்கமானது, … . நாளின் வேளையைக் குறிப்பதாக மட்டுமே இருப்பினும், ஏறக்குறைய எல்லா விளக்கவுரையாளர்களுமே, இதன் தனிப் போக்கான சக்தியை உணருகின்றனர் … [ஹென்றி] அல்ஃபோர்டு அவர்கள், "இரவு வேளையாயிருந்தது என்ற இந்தச் சொல்விளக்கத்தில், பயங்கரம் நிறைந்த கருத்து இருந்தது என்று நான் [ஃபிரெடரிக் B.] மெயர் அவர்களுடன் சேர்ந்து உணருகின்றேன்" என்று கூறுகின்றார் (McGarvey and Pendleton, 654). [18]லூக்கா சுவிசேஷ விவரமானது, கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பின்பு யூதாஸ் குற்றம் உணர்த்தப்பட்டான் என்று குறிப்பிடுகிறது (லூக். 22:19-23), மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்கள், அந்த நினைவுகூருதல் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பு அவன் குற்றம் உணர்த்தப்பட்டான் என்று கூறுகின்றன (மத். 26:25, 26; மாற். 14:21, 22). நமது பாடத்தில், இயேசு யூதாஸை வெளிப்படுத்திய பின் விரைவிலேயே அவன் புறப்பட்டுச் சென்றான் என்ற யூகத்தில் மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் வரிசைமுறைமை பின்பற்றப்படுகிறது. [19]இந்தப் புத்தகத்தில் "ஆயத்தமாகுதல்" என்ற பாடத்தில் காணவும். [20]McGarvey and Pendleton, 653.

[21]இயேசுவைப் பேதுரு மறுதலிப்பார் என்பதை இயேசு எப்போது முன்னுரைத்தார் என்பது தெளிவற்றதாக உள்ளது. லூக்காவும் யோவானும் இந்த முன்னுரைத்தலை (லூக். 22:34; யோவா. 13:38) இயேசுவும் மற்றவர்களும் மேல்வீட்டை விட்டுப் புறப்படுமுன்பு (லூக். 22:39; யோவா. 14:31இ) உரைத்ததாகக் குறிப்பிடுகின்றனர். மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்களின்படி, இது அவர்கள் மேல்வீட்டை விட்டுப் புறப்பட்ட பின்னர் நடைபெற்றது (மத். 26:30-34; மாற். 14:26-30). நான் "ஏதோ ஒரு வேளையில்" என்று மாத்திரம் குறிப்பிட்டுள்ளேன். இந்த முன்னுரைத்தலானது வலியுறுத்தம் செய்யும் நோக்கத்திற்காக இருமுறை கூறப்பட்டிருக்கச் சாத்தியக்கூறுள்ளது, அதாவது மேல்வீட்டை விட்டுப் புறப்படும் முன்னர் ஒருமுறையும் பின்னர் ஒருமுறையும். விஷயம் இதுவாக இருந்தபோதிலும்கூட, முன்னுரைத்தல்களின் ஒத்ததன்மையானது அவைகளை ஒரே வேளையில் படிக்க அனுமதிக்கிறது. [22]இது அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் உருவகக் குறிப்பாக இருந்தது (யோவா. 7:39; 12:16, 23, 28 ஆகிய வசனங்களைக் காணவும்). [23]நாம் அறிந்த வரையில், இந்த ஒருமுறைதான் இயேசு, பிரியத்தின் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார். இது யோவானுக்கு மிகவும் பிடித்தமான வார்த்தையாயிற்று (1 யோவா. 2:1, 12, 28; 3:7, 18; 4:4; 5:21). [24]வேதாகமத்தின்படி, சாத்தான் வரையறைக்குட்பட்டவனாக, தேவன் அனுமதிப்பவற்றை மாத்திரம் செய்யக்கூடியவனாக இருக்கின்றான் (யோபு 1 மற்றும் 2 அத்தியாயங்களைக் காணவும்). இது ஒரு "கொழுமையான" பாடக் கருத்தாக உள்ளது (எபி. 5:12-14); இதைப் பற்றிய கலந்துரையாடலுக்கு உங்கள் சொந்த முடிவைப் பயன்படுத்தவும். [25]நம்மில் பலர், பெண்கள் மாவைப் புடைத்தல் பற்றிய விரிவான நினைவுகளைக் கொண்டுள்ளோம், ஆனால் உரையைக் கேட்பவர்களில் இளைஞர்களாய் இருப்பவர்களுக்கு விளக்கம் தேவைப்படலாம். மாவுகள் இப்போது ஆயத்த நிலையில் பிளாஸ்டிக் பாக்கெட்டுகள் அல்லது முன்தயாரிப்பான மாவுக்கலவைகள் இன்னும் மேன்மையான உறைகளில் கிடைக்கும் இந்த நாட்களில் உலகில் நான் வாழும் பகுதியில் புடைத்தல் என்பது பல வீடுகளில் கடந்தகால நிகழ்ச்சியாக உள்ளது. [26]லூக்கா 22:31ல் உள்ள "உங்களை" என்பது கிரேக்க மொழியிலும் பன்மைச் சொல்லாகவே உள்ளது. [27]KJVயில் "மாற்றப்பட்ட" என்றுள்ளது. மாற்றம் என்பது ஒரு மாறுதலாக, ஒரு விஷயம் இன்னொன்றாகத் "திரும்புதல்" என்பதாக

உள்ளது. தமிழில் இது "நீ குணப்பட்ட பின்பு" என்றுள்ளது. "நீ குணப்பட்ட பின்பு" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியதில், இயேசு பேதுருவின் வீழ்ச்சி அவரது [பேதுருவின்] முடிவாயிராது என்பதில் தமக்கிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினார். [28]மத்தேயு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் சேவல் ஒருமுறை மட்டும் கூவுதல் என்று குறிப்பிட்டுள்ளனர் (மத். 26:34; லூக். 22:34; யோவா. 13:38), மாற்கு, சேவல் இருமுறை கூவுதல் என்று குறிப்பிட்டுள்ளார் (மாற். 14:30). ஒரு எழுத்தாளர் ஒரு விஷயத்தைப் பற்றி இரண்டு என்றும் இன்னொரு எழுத்தாளர் அதே விஷயத்தை ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ள மற்ற சில வசனப்பகுதிகளில் போலவே (எடுத்துக்காட்டாக, மத்தேயு 20:30 மற்றும் லூக்கா 18:35), இந்த மாறுபாடு முக்கியமற்றதாக உள்ளது. இதில் முரண்பாடு எதுவும் இருப்பதில்லை: நீங்கள் இரண்டைக் கொண்டுள்ளபோது, ஒன்றையும் கொண்டுள்ளீர்கள். மாற்கு மற்ற எழுத்தாளர்களின் கூற்றுக்கு ஒரு கூடுதல் விவரத்தை மாத்திரம் கொடுத்துள்ளார். இந்த மாறுபாடு, கிறிஸ்துவைப் பேதுரு மறுதலித்ததின் விவரத்தைப் பற்றிப் படிக்கையில் மீண்டும் கண்ணோக்கப்படும். [29]ஐந்நூறு பேர்களுக்கு இயேசு ஒரே முறையில் தரிசனமானது (1 கொரி. 15:6) அநேகமாகக் கலிலேயாவில் நடந்திருக்கலாம். [30]நான் வாழும் இடத்தில், அவர்கள் "மறுப்பில்" இருந்தனர் என்று நாங்கள் கூறுவோம்.

[31]இயேசு இதற்கு முன்பு, சுவிசேஷத்தினிமித்தமாக எழும் விரோதத்தைக் குறிப்பதற்கு "பட்டயம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருந்தார் (மத். 10:34). அவர், தமது அப்போஸ்தலர்கள் எதிர்கொள்ளவிருந்த சிரமங்களுக்கு அவர்களை ஆயத்தப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தார். [32]அந்த மாலைப்பொழுதில் இயேசு இராப்போஜனத்தை, மிகச் சரியாக எப்போது ஏற்படுத்தினார் என்பது தெளிவற்றதாக உள்ளது. மத்தேயுவும் மாற்குவும் ''அவர்கள் போஜனம் பண்ணுகையில்'' என்று எழுதியுள்ளனர் (மத். 26:26; மாற். 14:22). பவுல், "போஜனம் பண்ணின பின்பு" என்று குறிப்பிட்டுள்ளார் (1 கொரி. 11:25). இது பஸ்கா உணவு வேளையின் முடிவுக்கு அண்மையிலோ அல்லது முடிவிலோ ஏற்படுத்தப்பட்டது என்பது உறுதி. [33]கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்டது பற்றி அதிகமான விவரத்திற்கும், அத்துடன் இந்த நினைவு உணவு பற்றிய கூடுதல் தகவல்களுக்கும், தொடர்ந்து வருகிற ''என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்'' என்ற பிரசங்கத்தில் காணவும். [34]இந்தப் பேச்சின் உருவகமானது, "ஒப்புவமை" என்று அழைக்கப்படுகிறது. ஒப்புவமை என்பது ஒரு விஷயமானது இன்னொரு விஷயத்துடன், "போல" அல்லது "ஆக" என்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தாமல் சுருக்கமாக ஒப்பிடப்படும் பேச்சின் சாதாரண உருவகமாக உள்ளது. வேதாகமத்தில் ஒப்புவமைகள் நிறைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, இயேசு ஏரோதுவை நரி என்று அழைத்தார் (லூக். 13:31, 32). அவர் ஏரோதுவை நரியைப் *போன்றவர்* என்று கூறவில்லை (அவ்விதமான கூற்று, உவமையணி எனப்படும்), ஆனால் அவர் [ஏரோது] ஒரு நரியாக *இருந்தார்* (இது ஒரு ஒப்புவமையாகும்) என்றே கூறினார். [35]இது பஸ்கா விருந்தின் மூன்றாவது பாத்திரம் என்று சிலர் யூகிக்கின்றனர், இது யாத்திராகமம் 6:6, 7ன் மூன்றாவது வாக்குத்தத்தத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பாரம்பரியமாக நினைவூட்டிற்று: "நான் உங்களை விடுவித்து." பழைய ஏற்பாட்டின் அந்த வாக்குத்தத்தத்தின் வார்த்தை அமைப்பானது கர்த்தருடைய இராப்போஜனத்துக்கு ஏற்புடையதாக உள்ளது, ஆனால் "போஜனம் பண்ணின பின்பு" இயேசு பாத்திரத்தை எடுத்தார் என்ற பவுலின் கூற்றைக் (1 கொரி. 11:25) கருத்தில் கொள்ளுகையில் இது நான்கு பாத்திரங்களில் மூன்றாவதாக இருந்தது என்ற கருத்துடன் ஒப்புரவாகுதல் கடினமாக உள்ளது. [36]KJVயில் "Drink ye all of it" என்றுள்ளது. இது, "இந்தப் பாத்திரத்தைக் காலிசெய்யுங்கள்" என்று

அர்த்தப்படுவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, NASB சுட்டிக் காண்பிக்கிறபடி, "All of you drink of it" என்றே அர்த்தப்படுகிறது. [37]பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகள் (ஏற்பாடுகள்) இரண்டுமே இரத்தம் சிந்துதலினாலேயே நிவிர்த்திக்கப்பட்டன (எபி. 9:18, 20, 22; 10:29ஐக் காணவும்). [38]அடுத்து வரும் "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற பிரசங்கத்தில் உள்ள கலந்துரையாடலைக் காணவும். [39]பஸ்கா உணவு சாதாரணமாக இரண்டு அல்லது மூன்று மணிநேரங்களில் முடிவடைந்தது.

*82*

# கடைசி நிமிட ஏற்பாடுகள்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #35*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*
- H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*
  - *1. கடைசி இராப்போஜனம் (தொடர்ச்சி).*
    - f. *அப்போஸ்தலர்கள் உற்சாகப்படுத்தப்படுதல் மற்றும் எச்சரிக்கப்படுதல் (யோவா. 14:1-16:33).*
    - g. *பிதாவிடம் மன்றாடுதல் (யோவா. 17:1-26).*

### அறிமுகம்

*1977ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், எனது குடும்பமும், நானும், ஆஸ்திரேலியாவின் மகா சிட்னியில் உள்ள மெக்குயரி சபையுடன் பத்து ஆண்டுகளாக ஊழியத்தில் ஈடுபட்டபின்பு, அமெரிக்கா திரும்புவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தோம்.[1] அது மிகுந்த உலைச்சலுள்ள காலமாக இருந்தது: நாங்கள் செய்வதற்கு ஏராளமானவற்றைக் கொண்டிருந்தோம், பல ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன! அது கண்ணீர் நிறைந்த வேளையாக இருந்தது: நாங்கள் குடும்பத்துடனும் பழைய நண்பர்களுடனும் மறுபடியும் இணைந்திருத்தலை முன்னெதிர் நோக்கிக் கொண்டிருந்தோம், ஆனால் எங்களுக்கு மிகவும் அதிகமாய் அர்த்தப்பட்ட புதிய நண்பர்களைப் பின்விட்டுச் செல்லுதல் பற்றி நாங்கள் மிகவும் கவலையாயிருந்தோம். அது அக்கறையின் காலமாக இருந்தது: சபையில் இருந்த பலர் புதுக் கிறிஸ்தவர்களாயிருந்தனர், அவர்களின் ஆவிக்குரிய நலன் பற்றி நாங்கள் பயமும் கலக்கமும் அடைந்திருந்தோம். போதனை, திட்டமிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றினால் அந்த நாட்கள் நிறைக்கப் பட்டிருந்தன.*

*இணை கருத்து என்பது அதன் முழுமை நிலையிலிருந்து வெகுதொலை வில் உள்ளது, ஆனால் எங்களது சூழ்நிலையானது, இயேசுவின் மரணம் அருகில் நெருங்குகையில் அவரால் எதிர்கொள்ளப்பட்ட சூழ்நிலைக்கு ஏதோ ஒரு வகையில் ஒத்ததாக இருந்தது. நாம் படிக்கவிருக்கின்ற வேத வசனப்பகுதியில், அவர் தமது சீஷர்களிடத்தில், தாம் செல்லுவதற்கான வேளை வந்திருந்தது என்று வலியுறுத்தினார் (யோவா. 14:2, 3, 12, 19, 28, 30; 16:7, 16, 28; 17:1, 13; 13:33ஐக் காணவும்). ஒரு கருத்தில், யோவான் 14-17 அத்தியாயங்கள், இயேசு "கடைசி நிமிட ஏற்பாடுகளை" மேற்கொண்டிருக்கையில் அவரைச் சித்தரிக்கின்றன. வேதபாடப் பகுதி*

யானது அப்போஸ்தலர்களுக்கு "மாபெரும் பிரியாவிடை உரை"யில் தொடங்கி (அதிகாரங்கள் 14-16) கர்த்தருடைய பரிந்துபேசும் ஜெபத்துடன் முடிகிறது (அதிகாரம் 17).

யோவான் 14-17ஐப் போதுமான அளவு விரித்துரைத்து முடிக்க இயலாத எனது திறமைக்குறைவை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். இது மாபெரும் வசனப்பகுதிகள் நிறைந்துள்ள, யோவான் சுவிசேஷத்தில் இருக்கும் மாபெரும் பகுதிகளில் ஒன்றாகும். H. I. ஹெஸ்டர் அவர்கள் இந்த அதிகாரங்களை, "கிறிஸ்தவ விசுவாசத்தின் வளம்மிகுந்த புதையல்களில் ஒன்று" என்று அழைத்தார்.[2] ஜான் F. கார்ட்டர் அவர்கள், "இந்த மதிப்பு வாய்ந்த வாய்மொழிகளில் ... அன்பான சீஷர் நமக்கு, சுவிசேஷங்களில் வேறெங்கும் காணப்பட முடியாததான, கர்த்தராகிய இயேசுவின் உணர்வுப்பூர்வமான வாழ்வுக்குள்ளாக ஒரு உட்கண்ணோட்டத்தைக் கொடுத்துள்ளார்" என்று கூறினார்.[3] F. லாகார்டு ஸ்மித் அவர்கள், "இயேசு பேசுகின்ற ஒவ்வொரு வார்த்தையும், இயேசு தாம் தொடங்கிய ஊழியத்தை முடிக்கும்படி இந்த மனிதர்களை விட்டுச் சென்றதில் உணர்ந்த சுமையைப் பிரதிபலிக்கின்றன" என்று எழுதினார்.[4]

இந்த மாபெரும் அத்தியாயங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துதல் என்பது மட்டுமே நான் ஒரு பாடத்தில் செய்யக்கூடிய எல்லாமுமாக உள்ளது. பின்பு நீங்கள் அவற்றின்மீது மறுகண்ணோட்டமிட ஒரு வாழ்வுக் காலத்தைச் செலவிட்டு அவற்றின் சத்தியங்களால் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கலாம். வசனத்திற்குப் பின் வசனம் படித்தல் என்பதை - அல்லது பிரிவுக்குப் பின் பிரிவாக உட்கண்ணோட்டமிடுதல் என்பதைக் கூட - முயற்சி செய்தலுக்கு மாறாக நான் இங்கு கூறிமுடிக்கப்பட்டுள்ள ஆய்வுப் பொருட்களில் சிலவற்றை முக்கியப்படுத்திக் காண்பிப்பேன். ஒரு பயணத் திற்கு ஆயத்தம் செய்யத் தேவையான ஏற்பாடுகள்மீது கவனம் செலுத்துதல் என்பதே எனது அணுகுமுறையாக இருக்கும். நான், எனது குடும்பத்தார் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்படுதலுக்கும் இயேசு உலகத்தை விட்டுப் புறப்படுதலுக்கும் இடையில் இணைவுகளைக் கருத்தாகத் தெரிவிப்பேன்.

நாம் யோவான் 14-17ஐ ஆய்வுசெய்கையில், இயேசு முதலாவதாக மற்றும் மிகமுன்னதாகத் தமது அப்போஸ்தலர்களுக்கு உரையாற்றினார் என்பதை உங்கள் சிந்தையில் வைத்துக்கொள்ளுங்கள். இவ்வசனங்களில் பலவற்றிற்குப் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும், ஆனால் நாம் அந்த மனிதர்களுக்கு மட்டும் தனிப்பட்ட வகையில் தரப்பட்ட வாக்குத்தத்தங்களை (எடுத்துக்காட்டாக, 14:26 போன்ற பகுதி களை) நமக்கு உரிமைகோரிக் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

## பரிவுடன் உற்சாகமூட்டுதல்

விட்டுச் செல்லுதல் என்பது ஒவ்வொருவருக்குமே கடினமானதாக உள்ளது. விட்டுச் செல்லுதலைப் பற்றிக் கிறிஸ்து பேசுகையில், சீஷர்கள் வருத்தத்தினால் நிறைந்தனர் (யோவா. 16:6). ஆகையால், "மாபெரும்

பிரியாவிடை உரையானது'' உற்சாகமூட்டுதலின் வார்த்தைகளோடு தொடங்கிற்று: "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (14:1அ). பிற்பாடு இயேசு, "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம்[5] நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக'' என்று கூறினார் (14:27; 16:33ஐக் காணவும்). இந்த உரையானது, ஆறுதல்படுத்தவும் பலப்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட வார்த்தைகளினால் நிறைந்துள்ளது. அப்போஸ்தலர் களுக்குக் கர்த்தர் தமது அன்பை (15:9, 12) உறுதிப்படுத்தி, அவர்களை "சிநேகிதர்கள்" என்று அழைத்தார் (15:15). அவர்கள் அந்த வேளையில் கவலையுடன் இருந்தாலும், அவர்களின் துக்கம் சந்தோஷமாக மாறும் என்று அவர் வாக்குத்தத்தம் செய்தார் (16:20-22; 15:11ஐக் காணவும்).

உற்சாக மூட்டும் இந்த வார்த்தைகளை இயேசு பேசுகையில், அவர் தாம் உயிருடனிருக்க இன்னும் ஒரு சில மணிநேரங்களே இருந்தன என்பதைத் துடிதுடிப்புடன் அறிந்திருந்தார் (14:30; 16:20, 32; 17:1ஐக் காணவும்). இருந்தபோதிலும், அவர் தமது அப்போஸ்தலர்களின்மீது அக்கறை கொண்டவராக இருந்தார். கர்த்தருடைய சுயநலமின்மை மற்றும் பிறர்மீது அக்கறையுடைய தன்மை ஆகியவை என்னை ஏவுகிறது.

## தீவிரமான விளக்கம்

புறப்படுதல் பற்றிய ஒரு அறிவிப்பு ஏற்படுத்தப்படுகிறபோது, "நீங்கள் ஏன் போகவேண்டும்?" என்பதுதான் அடிக்கடி கேட்கப்படுகிற கேள்வியாக உள்ளது. எங்களிடத்தில் அந்தக் கேள்வி கேட்கப்பட்டது. எனவே நாங்கள் எங்கள் காரணங்களைப் பகிர்ந்துகொண்டோம். எங்களுடைய மகள்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டிய வயதை அடைந்திருந்தனர், அவர்கள் கிறிஸ்தவப் பள்ளியொன்றுக்குச் செல்ல வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம்; எனது மனைவியின் தாயார் தனது பிந்திய எழுபது வயதுகளில் இருந்தார், அவர்களின் எஞ்சிய ஒரு சில ஆண்டுகளில் நாங்கள் அவருக்கு அருகாமையில் இருக்க வேண்டும் என்று உணர்ந்தோம்.[6]

கிறிஸ்துவும், தமது புறப்படுதல் அவசியமாயிருந்தது ஏன் என்று தமது சீஷர்களுக்குத் தகவல் அறிவித்தார். முதலாவது, அவர் பூமிக்கு வந்திருந்த பின்பு, அவர் தமது பிதாவினிடத்திற்குத் திரும்பச் செல்லும் திட்டம் எப்போதுமே இருந்தது (14:28; 16:5, 28). அந்த வேளையில், அவர் தமது முந்திய மகிமையை மீண்டும் அடைவார் (17:5). சீஷர்களிடத்தில் இயேசு, ''நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள்'' என்று கூறினார் (14:28).

இருப்பினும் கிறிஸ்து, தமது புறப்படுதல் என்பது அப்போஸ்தலர் களுக்கு எவ்விதத்தில் பயன் தரும் என்பதைப் பிரதானமாக வலியுறுத்தி னார். அவர்களிடத்தில் அவர், "ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்" என்று கூறினார் (யோவா. 14:2). மற்றும் அவர், தமது

சீஷர்களிடத்தில், தாம் அவர்களுக்கு, பூமியிலிருந்து செய்வதைக் காட்டிலும் அதிகமானவற்றைத் தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்து செய்யக்கூடும் என்றும் தகவல் அறிவித்தார். இதை அவர், அவருடைய நாமத்தினாலே ஜெபித்தல் பற்றிப் பேசியதின்மூலம் செய்தார். அதுவரைக்கும், ஜெபமானது இயேசுவின் நாமத்திலே ஏறெடுக்கப்படாதிருந்தது (யோவா. 16:24); ஆனால் அவர் தமது பிதாவினிடத்திற்குத் திரும்பிய பின்பு, அவர், அவர்களுக்கு மத்தியஸ்தராவார் (1 தீமோ. 2:5); அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்காகப் பரிந்து பேசுவார் (ரோமர் 8:34; எபி. 7:25; 9:24; 1 யோவா. 2:1). எதிர் காலத்தில் அவர்கள், அவருடைய நாமத்தினாலே கேட்கும் எல்லா விஷயங் களும் அவர்களுக்கு அருளப்படும்[7] என்று அவர் வாக்குத்தத்தம் செய்தார் (யோவா. 14:13, 14; 15:16; 16:23, 24).

இயேசு ஏன் புறப்பட்டுக் கொண்டிருந்தார் என்பதை அவர் விளக்கப்படுத்துகையில், பரிசுத்த ஆவியானவர் வரக்கூடும்படிக்குத் தாம் செல்ல வேண்டியிருந்தது என்பது அவரது முதன்மையான சிந்தனையாக இருந்தது. அவர், “நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்;[8] நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்'' என்று கூறினார் (16:7). ஒரு சில வசனங்களுக்குப் பின்பு கிறிஸ்துவானவர், இந்த ''தேற்றரவாளன்'' என்பவரை “ஆவியானவர்” என்று அடையாளப்படுத்தினார் (16:13). மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக யோவான் ஸ்நானன், தான் தண்ணீரினால் ஆன ஸ்நானம் கொடுத்ததாகவும், ஆனால் மேசியா பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்றும் கூறியிருந்தார் (மாற். 1:8). அந்தப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் இரண்டு மாதங்களுக்கும் குறைவான காலத்தில் வரவிருந்தது (அப். 1:5, 8; 2:1-4, 33). ஆகையால் இயேசு, ஆவியானவருடன் அப்போஸ்தலர்கள் கொள்ளவிருந்த புதிய உறவுமுறை பற்றி அவர்களுக்கு தொடக்கநிலை விளக்கம் தருதல் என்பது சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்கும் என்று நினைத்தார். பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைப் பற்றிச் சுவிசேஷ விவரங்கள் முழுவதிலும் கூறப்பட்டுள்ள எல்லாவற்றைக் காட்டிலும், யோவான் 14-17ல், அதிகமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆவியானவரை அனுப்புதல் என்ற பாடக்கருத்தானது, இந்தப் பாடத்தில் ஒரு தனியான பிரிவுக்குத் தகுதியானதாக உள்ளது (அடுத்துள்ள பிரதான பிரிவைக் காணவும்), ஆனால் இந்த வேளையில் 16:7ல் இருந்து இந்த வார்த்தைகளை மீண்டும் வாசியுங்கள்: “நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்.” இது 14:12ல் உள்ள கிறிஸ்துவின் குறிப்பிடத்தக்க வாக்குத்தத்தத்துடன் பிணைபட்டிருக்கலாம்: “... நான் என் பிதாவினிடத் திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.” அப்போஸ்தலர்கள் இயேசுவைக் காட்டிலும் பண்பில் பெரிய கிரியைகளை(அற்புதங்களை)ச் செய்யவில்லை,[9] ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் பெரிய கிரியைகளைச் செய்திருக்கலாம் (அப்.

5:12ஐக் காணவும்).[10] அவர்கள் இந்தக் கிரியைகளை ஆவியானவரின் வல்லமை மூலமாகவே செய்தனர் (அப். 1:8; ரோமர் 15:19ஐக் காணவும்). கிறிஸ்துவின் புறப்படுதல் இதைச் சாத்தியமாக்கும் என்று அவர் கூறினார்.

## பெலப்படுத்தும் ஆறுதல்

எனது குடும்பம் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்படுகையில், எங்களுக்குப் பதிலாக ஆட்கள் வந்து கொண்டிருந்தனர் என்று மெக்குயிரி சபையிடத்தில் கூறியதன்மூலம், நாங்கள் அவர்களை உற்சாகப்படுத்த முடிந்தது: டேல் மற்றும் ஷீலா ஹார்ட்மேன் மற்றும் அவர்களின் குடும்பத்தார் விரைவில் வந்து சேரவிருந்தனர். இதே போன்று, இயேசு தமது சீஷர்களைத் "திக்கற்றவர்களாக" விட்டுவிடுவதில்லை என்று அவர்களுக்கு அவர் உறுதியளித்தார் (யோவா. 14:18), ஏனெனில் அவர் ஒரு பதில் நபரை அனுப்பினார்: அவரே பரிசுத்த ஆவியானவராக இருந்தார். அவர், "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறோரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" என்று கூறினார் (14:16). இயேசு அவர்களின் தேற்றரவாளனாக இருந்திருந்தார்; இப்போது அவர், ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அனுப்புவார். கிறிஸ்து அவர்களுடன் மூன்று ஆண்டுகள் மாத்திரமே இருந்திருந்தார், ஆனால் இந்தப் புதிய தேற்றரவாளனோ அவர்களுடன் "என்றென்றைக்கும்"[11] இருப்பார்.

பரிசுத்த ஆவியானவர், [KJVயில் "Godhead"], "தேவத்துவம்" என்று அழைக்கப்படுவதன் ஒரு பகுதியாக இருக்கின்றார் (அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9).[12] அவர் "திரித்துவம்"[13] என்றழைக்கப்படுவதில் ஒரு நபராக இருக்கின்றார், இதில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் உள்ளனர் (மத். 28:19). யோவான் 14:16ல் இம்மூவருமே தனித்தனி ஆளுமைத் தன்மை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்: "நான் [குமாரன்] பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறோரு தேற்றரவாளனை [பரிசுத்த ஆவியானவரை] அவர் [பிதா] உங்களுக்குத் தந்தருளுவார்." பரிசுத்த ஆவியானவர் என்பவர் பலருக்கு, தேவத்துவத்தில் மிகவும் புதிரான நபராக இருக்கின்றார். பிதாவானவரே ஆவியாக இருக்கின்றார் (யோவா. 4:24), மற்றும் அவர் பரிசுத்தராக இருக்கின்றார் (1 பேது. 1:15). ஆகையால், பிதாவானவரைப் பற்றி நீங்கள் என்னவெல்லாம் கருத்துக் கொண்டிருக்கின்றீர்களோ, அந்தப் புரிந்து கொள்ளுதல் யாவற்றையும் பரிசுத்த ஆவியானவருக்கு மாற்றுங்கள், நீங்கள் தூரமாய்த் தவறுக்குச் சென்றுவிடமாட்டீர்கள்.

தேவத்துவத்தில் உள்ள மூவரும் இயல்பிலும் வல்லமையிலும் சமமான வர்களாய் இருந்தாலும், பணி மற்றும் பொறுப்பு ஆகியவற்றில் சில பிரிவினை உள்ளது என்பது உறுதி. எடுத்துக்காட்டாக, பரிசுத்த ஆவி யானவர் வேத வசனங்களின் ஏவுதலுக்கென்று மதிப்பளிக்கப்பட்டுள்ளார்

(2 பேது. 1:21; மாற். 12:36; அப். 1:16; 4:25ஐக் காணவும்). யோவான் 14-16 அத்தியாயங்கள், தொடக்க கால சபையில் இவரது ஊழியம் பற்றிய உட்கண்ணோக்கை நமக்குத் தருகின்றன. இந்த அத்தியாயங்களில் உள்ள திறவுதோல் வசனப்பகுதிகள் பற்றிய ஒரு ஆய்வு இவ்விடத்தில் முறையான தாக உள்ளது.

*யோவான் 14:16, 17அ:* ஏற்கனவே காணப்பட்டபடி, இயேசு "வேறொரு தேற்றரவாளனை" அனுப்புவதாகத் தமது அப்போஸ்தலர் களிடம் கூறினார். "தேற்றரவாளன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "அழைத்தல்" என்பதற்கான பெயர்ச்சொல் வடிவ வார்த்தையையும் (*kaleo*) "உடன்" என்று அர்த்தப்படும் முன்னிடைச் சொல்லையும் (*para*) இணைத்துப் பெறுகிற "paraklete" (*parakletos*)[14] என்ற வார்த்தையாக உள்ளது. இது, உதவுவதற்கு அல்லது துணையிருப்பதற்கு "உடனாக அழைக்கப்பட்டவர்" என்பதைக் குறிப்பிடுகிறது. "Helper" (NASB, NKJV), "Comforter" (KJV), "Counselor" (NIV, RSV) and "Advocate" (NRSV) என்றெல்லாம் பல்வேறு வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இந்தக் கிரேக்கச் சொற்றொடரின் அர்த்தத்தை உண்மையில் வெளிப் படுத்தும் தனித்த வார்த்தை எதுவும் ஆங்கில மொழியில் இருப்பதில்லை.[15] இந்த உதவியாளர்/தேற்றரவாளர்/ஆலோசகர்/பரிந்துரையாளர் என்பவரை "சத்திய ஆவியானவர்" என்று இயேசு அடையாளப்படுத்தினார். இவர் எல்லா சத்தியத்தையும் வெளிப்படுத்தியதாலும் சத்தியத்தை மாத்திரம் பேசியதாலும் இவ்வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டார் (14:26; 17:17ஐக் காணவும்).

*யோவான் 14:17ஆ:* உலகமானது (அதாவது, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள மறுத்த உலக அமைப்பு) ஆவியானவரைக் காண, அறிய அல்லது பெற்றுக் கொள்ளத் தகுதியுடையதாக இருந்ததில்லை. இதற்கு மறுபுறத்தில், அப்போஸ்தலர்கள் தங்கள் விசுவாசம், உண்மைத் தன்மை ஆகியவற்றினால் இதற்குத் தகுதியானவர்களாய் இருந்தனர். கடந்த காலத்தில் பரிசுத்த ஆவியானவர் அவர்களோடே இருந்திருந்தார்;[16] வெகுவிரைவில் அவர், அவர்களுக்குள்ளாக இருப்பார்.[17] இந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றம் ஐம்பது நாட்களுக்குப் பின்பு, யூதர்களின் பெந்தெகொஸ்தே பண்டிகை யன்று வந்தது (அப். 2:1-4, 33).

*யோவான் 14:26:* இயேசு சீஷர்களுக்கு பல விஷயங்களைப் போதித் திருந்தார், ஆனால் தாம் கூறியவற்றில் அதிகமானவற்றை அந்த சீஷர்கள் நினைவில் வைத்திருந்ததில்லை என்பதை அவர் அறிந்திருந்தார். அவர்களுக்கு கூடுதல் தகவல்களும் தேவைப்பட்டன; ஆனால் இவற்றில் சிலவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கு அவருக்கு நேரம் இருக்கவில்லை (14:30), மற்றும் சிலவற்றைப் பெற்றுக்கொள்ள அவர்கள் இன்னும் ஆயத்த மாகவில்லை (16:12). பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அப்போஸ்தலர் கள் அறியவேண்டும் என்று தேவன் விரும்புகின்ற ஒவ்வொன்றையும் அவர்களுக்கு அவர் வெளிப்படுத்துவார். இந்த வெளிப்படுத்துதலில் கிறிஸ்து அவர்களுக்கு முன்பு போதித்திருந்தவற்றை நினைப்பூட்டுதலும் அடங்கும்.

*யோவான் 15:26:* இயேசுவுக்குச் சாட்சிகூறுதல் என்பது பரிசுத்த

ஆவியானவரின் ஊழியம் பற்றிய பிரதானமான வலிவார்ந்த கருத்தா யிருக்கும் (16:14ஐக் காணவும்). சூரியன் பூமியை ஒளியூட்டுவதுபோல், கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் உயர்த்துதல் என்பதே ஆவியான வருடைய வெளிப்படுத்துதலின் அடிப்படை நோக்கமாக இருந்தது (மற்றும் இருக்கிறது) (1 கொரி. 2:2; 15:1-4ஐக் காணவும்).[18]

*யோவான் 16:7-14:* பரிசுத்த ஆவியானவர் வரும்போது, அவிசுவாச மான உலகத்திற்குச் சில விஷயங்களையும் அப்போஸ்தலர்களுக்குச் சில விஷயங்களையும் அவர் செய்வார்: (1) அவர் "பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்." பரிசுத்த ஆவியானவர், பூமியின் நெடுஞ்சாலைகளிலும் துணைச்சாலைகளிலும் ஆவியின் வடிவில் மிதந்து கொண்டு இருப்பதினால் உலகத்தைக் "கண்டித்து உணர்த்த மாட்டார்."[19] மாறாக அவர், தாம் ஏவுகின்ற வசனத்தினால் பாவிகளைக் கண்டித்து உணர்த்துவார் (17:20). (2) அவர் அப்போஸ்தலர்களைச் "சகல சத்தியத்திற்குள்ளாகவும்" வழிநடத்து வார், தாம் பேசும்படி பிதாவானவர் கூறியவற்றை மாத்திரம் அவர் பேசுவார்.[20] "சகல சத்தியம்" என்பது அப்போஸ்தலர்களுக்கு வெளிப் படுத்தப்பட்டு எழுதி வைக்கப்பட்டது,[21] நாம் இன்றைய நாட்களில் இந்த சத்தியத்தைப் புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் கொண்டுள்ளோம். தேவன் நமக்கு அருளிய வெளிப்பாடு நிறைவடைந்துள்ளது; கூடுதலான வெளிப்பாடு என்பது தேவையற்றதாக உள்ளது (யூதா 3; 2 பேது. 1:3; கலா. 1:6-9ஐக் காணவும்).

## திருப்தியளிக்கும் உறுதிக்கூற்று

நாங்கள் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்பட்டபோது, எங்களுக்குப் பதிலாட்கள் வந்துகொண்டிருந்தார்கள் என்று மெக்குயரி சபை உறுப்பினர் களுக்கு கூறியதுடன், நாம் மீண்டும் ஒரு நாளில் - இந்த வாழ்வில் இல்லா விட்டாலும், அடுத்த வாழ்வில் - சந்திப்போம் என்பதை உறுதிப் படுத்தினோம். பல ஆண்டுகளுக்குப் பின்பு, நாங்கள் எங்கள் ஆஸ்திரேலியப் பயணத்தை முதன்முதலில் திரும்பவும் மேற்கொண்டு எங்களது நண்பர்கள் பலருடன் மறுபடி இணைதலை மகிழ்வுடன் அனுபவித்தோம். இயேசு தமது சீஷர்களை விட்டுப் பிரிய ஆயத்தமாகுகையில், அவர் மீண்டும் அவர்களுடன் இருக்கப் போவதாக வாக்களித்தார் (எடுத்துக்காட்டாக, யோவா. 14:3; 16:22ஐக் காணவும்). யோவான் 14-16ல், கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களிடத்தில் திரும்பி வருதல் பற்றிக் குறைந்தது மூன்று கருத்துக்களில் பேசினார்.[22]

- அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அவர் பரத்திற்கேறுவதற்கு முன்பு, அவர்களுடன் அவர் நாற்பது நாட்கள் அளவாக இருப்பார். இந்த உண்மையானது 16:16-22ல் அடிப்படை வலியுறுத்தம் பெற்றிருப்பதாகக் காணப்படுகிறது.[23]
- அவர் பரத்திற்கேறிய பின்பு, அவர் தமது சீஷர்களுடன் ஆவிக்குரிய வகையில் இருப்பார் (மத். 18:20; 28:20). இந்த சத்தியத்தை இயேசு,

ஆவியானவரின் வருகையுடன் பிணைத்தார் (யோவா. 14:18, 23). "கிறிஸ்துவின் ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரின் குறிப்புப் பெயர்களில் ஒன்றாக உள்ளது (ரோமர் 8:9; பிலி. 1:19; 1 பேது. 1:11).

- ஒரு நாளிலே (இரண்டாம் வருகையில்), அவர் தமக்குச் சொந்தமானவர்களை உரிமைகோருவதற்குத் திரும்ப வருவார். இந்த வாக்குத்தத்தம்தான் யோவான் 14:3ல் இயேசுவின் சிந்தையில் மிக முன்னதாக இருந்தது.

## தனிச் சிறப்பான அறிவுறுத்துதல்

நாங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து புறப்படத் தயாராகுகையில், பின்வரும் கேள்வியைப் பற்றி நான் ஜெபத்துடன் ஆழ்ந்து சிந்தித்தேன்: "எனது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு நான் விட்டுச் செல்ல வேண்டிய அறிவுறுத்துதல் என்ன?" நான் கூறியதை எவரொருவராவது நினைவில் வைத்துள்ளனரா இல்லையா என்பதை நான் அறிவதில்லை, ஆனால் நான் ஒரு அர்த்தம் நிறைந்த செய்தியை உரைக்க முயற்சி செய்தேன். இயேசு தமது மரணத்திற்கு முந்திய இரவில் தமது சீஷர்களுடன் பகிர்ந்து கொள்வதற்குப் பல சத்தியங்களைக் கொண்டிருந்தார். அவர் கூறியவற்றில் அதிகமானவற்றை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்த முடியும். உண்மையில் அவர் பின்வருமாறு கூறினார்:

(1) *"நீங்கள் என்னுடன் ஒரு சரியான உறவுமுறையைப் பராமரிப்பது அவசியமாக உள்ளது."* யோவான் 15ம் அத்தியாயம் திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் என்ற ஒப்புவமையுடன் தொடங்குகிறது.[24] கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில், "நானே திராட்சச் செடி,[25] நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார் (வ. 5). திராட்சச் செடியின் வழியாக அதன் கொடிகளுக்கு உயிர்கொடுக்கும் உரச்சத்துக்கள் பாய்வதுபோல், நமது ஆவிக்குரிய வாழ்வானது ஆண்டவரிடத்தில் இருந்தே வருகிறது. இயேசுவின் வார்த்தைகளை உங்கள் சிந்தையில் அடிக்கோடிடுங்கள்: ''என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.'' கிறிஸ்து இல்லாமல் நம்மால் சிலவற்றைச் செய்ய முடியாது; கிறிஸ்து இல்லாமல் நம்மால் கொஞ்சத்தைச் செய்ய முடியாது; இயேசு இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்யக்கூடாது. நாம் அவருக்கு நெருக்கமாக இருத்தல் என்பது அத்தியாவசியமானதாக உள்ளது. கிறிஸ்துவின் பின்பற்றாளர்கள் எவ்வளவு சுலபமாய்ச் சிதறடிக்கப்பட முடியும் என்பதை அவர் அறிந்தார் (16:32; மத். 26:31ஐக் காணவும்). அவர்களை அவர், தம்மிலும் தமது அன்பிலும் நிலைத்திருக்கும்படி வேண்டிக் கொண்டார் (யோவா. 15:4-7, 9, 10). நமது வேத பாடப் பகுதியில், அவருடன் ஒரு சரியான உறவைப் பராமரிக்க, நடைமுறைக்கேற்ற இரண்டு ஆலோசனைகளை அவர் கொடுத்தார்.

நாம் நமது விசுவாசத்தைப் பெலப்படுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். யோவான் 14ம் அத்தியாயம், விசுவாசத்தின்மீது ஒரு வலியுறுத்தத்துடன் தொடங்குகிறது: "... தேவனிடத்தில் விசுவாசமாயிருங்

கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (வ. 1).[26] சற்றுப்பின்பு, இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று கூறினார் (14:6). பின்பு அவர் பின்வரும் உரிமைகோருதலைக் கூடுதலாகக் கூறினார்: "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" (14:9). இந்த மாபெரும் சத்தியங்களை நாம் விசுவாசிக்கின்றோமா? ஆண்டவருடன் ஒரு சரியான உறவு முறையைப் பராமரிக்க நாம் விரும்பினால், பலமான விசுவாசத்திற்குப் பதிலுக்கு ஈடாக ஏதொன்றும் இருப்பதில்லை.[27]

அவரைப் பின்பற்றுபவர்கள் அவரது வசனத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார். கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தை அவரது வசனத்திலிருந்து பிரிக்க முடியாது. அந்த வசனத்தி லிருந்தே விசுவாசம் வருகிறது (17:20; ரோமர் 10:17ஐக் காணவும்). இயேசுவின் வசனத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். அவர் தமது சீஷர்களிடத்தில், "... என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்றார் (15:7). மீண்டுமாக அவர், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" என்றார் (14:23; 14:15, 24; 15:10, 14ஐக் காணவும்). அவர் தமது பின்பற்றாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்குத் திட்டவட்டமான உதாரணங்களைக் கொடுத்தார். எடுத்துக்காட்டாக, நாம் கனிநிறைந்த வாழ்வை வாழவேண்டும் (15:8, 16)[28] மற்றும் நமது விசுவாசத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.[29]

(2) "நீங்கள் ஒருவர் மற்றவருடன் சரியான உறவுமுறையைப் பராமரிப்பது அவசியமாக உள்ளது." ஆண்டவருடன் ஒரு சரியான உறவு முறையைப் பராமரிப்பதற்கு, நாம் ஒருவர் மற்றவருடனும் ஒரு சரியான உறவுமுறையைப் பராமரிக்க வேண்டும் (1 யோவா. 4:20ஐக் காணவும்). அப்போஸ்தலர்கள் துண்டாடப்பட்டுக் கிடந்தனர் (லூக். 22:24); ஒன்றா யிருத்தல் என்பதே பொல்லாங்கின் கொலைவெறிக்குத் தப்பிப் பிழைப் பதற்கான அவர்களின் ஒரே நம்பிக்கையாக இருந்தது (17:11; 17:20-23ஐயும் காணவும்).

அன்பு என்பதே ஒருமைப்பாட்டிற்கான திறவுகோலாக உள்ளது. இயேசு தமது கடைசி உரையில் அன்பைப் பற்றிக் கூறுவதற்கு அதிகம் கொண்டிருந்தார்: தேவன் அவர்மீது அன்புகூர்ந்திருந்தார் (15:9), அவர் தேவன்மீது அன்புகூர்ந்திருந்தார் (14:31), இயேசு சீஷர்கள்மீது அன்புகூர்ந் திருந்தார் (15:9, 12), மற்றும் அவர்கள் அவர்மீது அன்புகூர வேண்டியவர் களாய் இருந்தனர் (14:15, 21, 23, 28). அவர்கள் ஒருவருக்கொருவர் அன்புகூர வேண்டியவர்களாயும் இருந்தனர். அவர் ஏற்கனவே அவர் களிடத்தில், தாம் அவர்கள்மீது அன்புகூர்ந்தது போல் அவர்கள் ஒருவர்மீது ஒருவர் அன்புகூர வேண்டும் என்று அறைகூவல் விடுத்திருந்தார் (13:34). இப்போது அவர் மீண்டுமாக, "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னு டைய கற்பனையாயிருக்கிறது" என்றார் (15:12; 15:17ஐயும் காணவும்).

அவர் அன்புகூர்ந்தது போல் அன்புகூர வேண்டும் என்பதில் அவர் அர்த்தப் படுத்தியது பற்றி எவ்விதமான தவறான புரிந்துகொள்ளுதலையும் தவிர்ப்பதற்காக, அவர் "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை"[30] என்றும் கூடுதலாகக் கூறினார் (15:13). சற்று நேரத்தில், அவர்களுக்காக அவர் தமது ஜீவனை - சிலுவையின்மீது - ஒப்புக்கொடுக்கவிருந்தார்.

## உறுதியான எச்சரிக்கைகள்

ஆஸ்திரேலியாவிலிருந்து நாங்கள் புறப்படுவதற்கான நேரம் நெருங்கிய போது, நாங்கள் சென்ற பின் தவறாகக் கூடிய ஒவ்வொன்றைப் பற்றியும் நினைக்க நான் முயற்சி செய்தேன். என்னால் எதிர்காலத்தை முன்னதாகக் கண்ணோக்க இயலவில்லை, எனவே நான், பிற்பாடு எழும் பிரச்சனை களைப் பற்றி முன்னெதிர்பார்ப்பற்றவனாக இருந்தேன், ஆனால் குறைந்த பட்சம் அந்தச் சபையை ஆயத்தப்படுத்த நான் முயற்சி செய்தேன். இயேசுவால் எதிர்காலத்தை முன்கண்ணோக்க முடிந்தது, எனவே அவர் தமது சீஷர்களுக்குத் தகுந்த எச்சரிக்கைகளைக் கொடுக்க முடிந்தது. அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் காத்திருந்த உபத்திரவம் பற்றி விசேஷக் கவனித்தலைக் கொடுத்தார். இந்த வேளை வரைக்கும், உலகத்தின் வெறுப்புணர்வு அவர்மீது கவனம் குவித்திருந்தது (15:18, 24); ஆனால் அவர் சென்றபின்பு, அந்த வெறுப்புணர்வு அவர்கள்மீது மாற்றப்படும் (15:20; 17:14-18ஐக் காணவும்). அவர் தமது அப்போஸ்தலர்களை, "அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்"[31] என்று எச்சரித்தார் (16:2). சோதனைகள் வரும் போது, அவர்கள் "இடறலடையாதபடி" காப்பதற்கே அவர் இவையெல்லா வற்றையும் அவர்களுக்கு முன்னுரைத்தார் (16:1; வ. 4ஐக் காணவும்). அவர் பின்வரும் ஊக்கமூட்டுகின்ற வார்த்தைகளையும் கூடுதலாகக் கூறினார்: "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன் கொள்ளுங் கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (16:33).

## சுயநலமற்ற பரிந்துபேசுதல்

ஆஸ்திரேலியாவில் எங்கள் கடைசி மணிவேளைகளில், தேவன் எங்கள் சகோதர சகோதரிகளுடன் இருக்க வேண்டும் என்று நாங்கள் ஊக்கமாய் ஜெபித்தோம். நாங்கள், "God be with you till we meet again"[32] என்று பாடிய போது, எனது மனைவியின் கண்களில் கண்ணீர் துளிர்ந்து வந்து கொண்டிருந்தது. யோவான் 17ல் உள்ள இருதயத்தை அசைக்கும் ஜெபத்துடன் இயேசு தமது சீஷர்களுடன் [பிரிவுசொல்லும்] வேளையை முடித்தார். இராபர்ட் கல்வெர் அவர்கள் இந்த ஜெபத்தை, "மனித வரலாற்றுக் குறிப்புக்களில் பரலோகத்துடனான பூமியின் மிக நெருக்கமான உரை" என்று அழைத்தார்.[33] வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், "யோவான் 17ம் அத்தியாயம் ... சுவிசேஷப் பதிவேட்டின் மகா பரிசுத்த ஸ்தலமாக உள்ளது

... . குமாரனாகிய தேவன் பாவிகளை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவிருந்த வேளையில் தமது பிதாவுடன் உரையாடியதைக் கேட்கும் சிலாக்கியத்தை நாம் பெற்றுள்ளோம்!" என்று எழுதினார்.[34]

யோவான் 17ல் உள்ள ஜெபம் மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது. முதலாவது, இயேசு தமது பிதாவுடன் தமக்குள்ள உறவைப் பற்றி ஜெபித்தார் (வ. 1-5). தம்மை மகிமைப்படுத்த வேண்டும் என்பதுதான் அவர் தமக்காகக் கேட்ட ஒரே விஷயமாக இருந்தது (வ. 2, 5; வ. 24; 12:23, 24, 27, 28 ஆகியவற்றைக் காணவும்). இரண்டாவது, கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்காக ஜெபித்தார் (17:6-19; வ. 24-26ஐயும் காணவும்). தேவன் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் (வ. 11, 15), அவர்களைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் (வ. 19) மற்றும் அவர்கள்மீது அன்புகூர வேண்டும் (வ. 26) என்று அவர் கேட்டுக் கொண்டார். கடைசியாக இயேசு, அப்போஸ்தலர்களின் வார்த்தையினால் தம்மை விசுவாசிப்பவர்களுக்காக ஜெபித்தார் (வ. 20-23). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் உங்களுக்காகவும் எனக்காகவும் ஜெபித்தார். என்ன ஒரு அற்புதமான சிந்தனை! உலகத்தார் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக விசுவாசிகள் "ஒன்றாயிருக்கும்படி" அவர் ஜெபித்தார் (வ. 21, 23). கிறிஸ்துவின்மீது பற்றுறுதி கொண்டுள்ளதாக உரிமைகோருபவர்களின் பிரிவினையான நிலையைக் காட்டிலும் அதிகமாக, உலகளாவிய சுவிசேஷ ஊழியத்துவத்திற்குத் தீவிரமான தடையாக இருப்பது வேறெதுவும் இல்லை.

## முடிவுரை

இயேசுவின் கடைசி நிமிட ஏற்பாடு பற்றிய மற்ற அம்சங்களும் குறிப்பிடப்படலாம். எடுத்துக்காட்டாக, எனது குடும்பம் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்படத் தயாராகுகையில், எங்கள் நண்பர்களும் நாங்களும் ஒருவர் பிறரை மறவாதிருக்கும்படி படங்களையும் மற்ற நினைவுப் பொருட்களையும் பரிமாறிக் கொண்டோம். கிறிஸ்து இதே போன்ற ஒன்றை, கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தியதன் மூலமாகச் செய்தார் (லூக். 22:19; 1 கொரி. 11:24, 25).

## குறிப்புகள்

வசனப் பகுதிகளை, பல்வேறு தலைப்புக்களாக வகைப்படுத்துதல் என்பது யோவான் 14-17க்கான இன்னொரு அணுகுமுறையாக இருக்கும்: உதாரணமாக, அன்பு, கீழ்ப்படிதல், கனிதருதல், பரிசுத்த ஆவியானவர் மற்றும் உலகத்துடன் நமது உறவுமுறை போன்றவை. "மேல்வீட்டுச் செய்தி" என்பது சாத்தியமான இன்னொரு தலைப்பாக உள்ளது. இதற்கு முக்கியமான துணைக்கருத்துக்களாக, "அன்பைப் பற்றிய செய்தி," "கீழ்ப்படிதலைப் பற்றிய செய்தி" முதலியன உள்ளன. "முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்" (யோவா. 13:1ஐக் காணவும்) என்பது இந்த அதிகாரங்களுக்குச் சாத்தியமான இன்னொரு தலைப்பாக உள்ளது. NIV வேதாகமம், "அவர் ... அவர்களிடத்தில் தமது அன்பின் முழு அளவைக் காண்பித்தார்"

என்று கூறுகிறது. இந்த அணுகுமுறை பயன்படுத்தப்பட்டால், இயேசு தமது அன்பைக் காண்பிப்பதற்காக, மதிப்பு வாய்ந்த அந்தக் கடைசிக் கணங்களில் தமது சீஷர்களுக்கு என்ன செய்தார் என்பதை வலியுறுத்துங்கள். நீங்கள், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (யோவா. 14:1) என்ற தலைப்பின் மீதும் பிரசங்கிக்கலாம், இதில் நீங்கள் இந்த அத்தியாயங்களில் உள்ள ஆறுதல் தரும் வசனப்பகுதிகளை முக்கியத்துவப் படுத்தலாம்.

யோவான் 14-17ன் பிரசங்கத்துவச் சாத்தியக்கூறுகள் ஏறக்குறைய எண்ணிறந்தவையாக உள்ளன. நீங்கள், யோவான் 14:1-6, 15:1-11 மற்றும் 17:1-26 போன்ற மாபெரும் வசனப்பகுதிகளின்மீது பிரசங்கிக்கக் கூடும். யோவான் 15ஐ வேதபாடப் பகுதியாகப் பயன்படுத்தும் பிரசங்கம் ஒன்று இந்தப் புத்தகத்தில் "கர்த்தருக்காகக் கனிகொடுத்தல்" என்ற பாடத்தில் தொடங்குகிறது. நீங்கள், யோவான் 14:6 மற்றும் 16:8 போன்ற தனிப்பட்ட வசனங்களின்மீதும் பிரசங்கிக்க முடியும். முழு அத்தியாயங்களும், பரிசுத்த ஆவியின் மீதான எடுத்துரைப்பு போன்ற தலைப்பு ரீதியான பிரசங்கங்களுக்குத் தொடக்க இடங்களை அளிக்கின்றன.

---

குறிப்புகள்

[1]இந்தத் தனிப்பட்ட விவரிப்பைத் தழுவியமைக்க நீங்கள் விரும்பலாம். ஒருவேளை நீங்கள் ஓரிடம் விட்டுச் செல்வதற்கு முன்னர் செய்த ஏற்பாடுகளைப் பற்றி நீங்கள் நினைக்கக்கூடும். பிரதானமாக ஒரு இடம் விட்டுப் பெயர்தலுக்கு முன்பு சாதாரணமாகச் செய்யக் கூடிய ஏற்பாடுகளை மாத்திரம் விவரித்தல் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது. [2]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 199. [3]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 292. [4]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1462. [5]உலகம் தருகிற "சமாதானம்" என்பது சாதகமான சூழ்நிலைகளைச் சார்ந்ததாக உள்ளது, எனவே அது தற்காலிகமானதாக உள்ளது. இயேசுவின் சமாதானமானது சாதகமான சூழ்நிலைகளைச் சார்ந்ததாக இருப்பதில்லை - அது உள்ளிருந்து வருகிறது - ஆகவே அது நீடித்திருக்க முடியும். [6]உண்மை நடப்பில் இவர் 99 வயது வரையிலும் வாழ்ந்தார்! [7]இந்த வாக்குத்தத்தமானது, தேவன் ஆசீர்வதிக்கக் கூடிய வகையிலான வாழ்வை வாழ்தல் மற்றும் (1 யோவா. 3:22), "அவருடைய சித்தத்தின்படி கேட்டல்" (1 யோவா. 5:14) என்பவற்றின்மீதான நிபந்தனை கொண்டதாக உள்ளது. "இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல்" என்பதன்மீதான வலியுறுத்தமானது புதிய ஏற்பாட்டில் தொடர்ந்து கூறப்படுகிறது (எபே. 5:20; கொலோ. 3:17 ஆகியவற்றைக் காணவும்). இது, ஒரு ஜெபத்தின் முடிவில் "இயேசுவின் நாமத்திலே" என்று கூறும் வார்த்தைகளை விட அதிகமானதாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக, இயேசுவின் நாமத்தில் ஜெபித்தல் என்பது, கிறிஸ்து யார் என்பதையும், அவர் எங்குள்ளார் என்பதையும், அவரால் நமக்கு என்ன செய்ய முடியும் என்பதையும் பற்றிய புரிந்துணருதலை உள்ளடக்குகிறது. ஜெபம் என்பது நமக்காகப் பரிந்து பேசுகின்ற ஒருவர்மீதான நமது விசுவாசத்தை, நமது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறதாக உள்ளது. [8]பரிசுத்த ஆவியானவர் வருவதற்கு முன்பு இயேசு ஏன் செல்ல வேண்டியிருந்தது என்பதைப் பற்றி அவர் விளக்கப்படுத்தவில்லை. முன்னதாக யோவான் சுவிசேஷத்தில் "இயேசு இன்னும்

மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை" என்று அப்போஸ்தலர் எழுதியிருந்தார் (யோவா. 7:39). ஏதோ காரணத்திற்காக, பரிசுத்த ஆவியானவர் அருளப்படுவதற்கு முன்பு, இயேசு மரித்து, உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனிடத்திற்கு எழுந்தருளிச் செல்ல வேண்டியிருந்தது. ஒருவேளை, சுவிசேஷத்தின் மையக்கருத்துக்களான, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பவை (சுவிசேஷத்தின் மையக்கருத்தான உண்மைகள்; 1 கொரி. 15:1-4) கொண்ட பூரண சுவிசேஷத்தை வெளிப்படுத்த அவ்வேளையில் ஆவியானவர் வரக்கூடாதிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம். [9]"ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல" (யோவா. 13:16). [10]"பெரிய கிரியைகள்'' என்பது சுவிசேஷத்தைப் போதித்தல் மற்றும் ஆயிரக்கணக்கானவர்களின் மனந்திரும்புதல் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். சந்தர்ப்பப் பொருளில், "அற்புதங்கள்" என்பதே "கிரியைகள்" என்பதற்கான மிக இயல்பான அர்த்தமாக உள்ளது, ஆனால் இயேசு வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்தி இருக்கலாம், இது "நான் பெரிய கிரியைகளை[அற்புதங்களை]ச் செய்துள்ளேன், ஆனால் நீங்கள் ஆத்துமாக்களை மனமாற்றுகின்றபோது, அது நான் செய்த எல்லா அற்புதங்களைக் காட்டிலும் பெரிய [அதிக முக்கியத்துவம் வாய்ந்த] கிரியையாக இருக்கும்" என்று சுட்டிக் காண்பித்திருக்கலாம்.

[11]பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் எஞ்சிய வாழ்நாளில் அவர்களோடு கூட இருப்பார், மற்றும் அவர் உலக முடிவு வரையிலும் கிறிஸ்தவர்களுடன் கூட இருப்பார். [12]"தேவத்துவம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது தேவனாக இருப்பதன் நிலை அல்லது பண்புகளைக் குறிக்கிறது. NASB வேதாகமத்தில் இவ்வார்த்தை, "the Divine Nature" அல்லது "Deity" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [13]''திரித்துவம்'' என்பது ''மூவர் ஒருவராயிருத்தல்" என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தையாக உள்ளது. இந்த வார்த்தை பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் பற்றிப் பேசுவதற்கு ஒரு வசதியான வார்த்தையாக உள்ளது. [14]புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில் யோவான் மட்டுமே இந்த வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். இதை அவர் யோவான் 14-16ல் (14:16, 26; 15:26; 16:7) பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதற்கும், 1 யோவான் நிருபத்தில் (1 யோவா. 2:1) இயேசுவைக் குறிப்பதற்கும் பயன்படுத்துகின்றார். [15]இவ்விடத்தில் பயன்படுத்தப்படுகின்ற மொழிபெயர்ப்புகள், the New American Standard Bible, the New King James Version, the King James Version, the New International Version, the Revised Standard Version and the New Revised Standard Version என்ற வேதாகமங்களாக உள்ளன. [16]அவர்கள் "பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருந்த" (லூக். 4:1) இயேசுவின் பிரசன்னத்தில் இருந்தனர், மற்றும் அவர், ஆவியானவரால் தமக்கு அளிக்கப் பட்டிருந்த வல்லமையை அவர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தார் (மத். 10:8). [17]பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவருக்குள்ளும் இருக்கின்றார் (அப். 2:38; 2 தீமோ. 1:14), ஆனால் அவர் அப்போஸ்தலர்களுக்குள் இருந்த அதே வகையில் [கிறிஸ்தவர்களுக்குள்] இருப்பதில்லை. அவர்கள் ஆவியானவரால் அற்புதமாக நிரப்பப்பட்டனர் (அப். 2:4; 5:12ஐக் காணவும்). [18]சிலருக்கு பரிசுத்த ஆவியானவர் ''அறியப்படாத அளவில்'' இருக்கின்றார் என்பதற்கு, அவரது வருகையின் நோக்கம் அவரை வெளிப்படுத்துதல் அல்ல என்பதே காரணமாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் ஆவியானவரைக் குறித்துப் பல குறிப்புகள் உள்ளன, ஆனால் பிதா மற்றும் குமாரன் ஆகியோரைக் குறித்து நாம் முழுமையான வெளிப்பாட்டைக் கொண்டிருப்பதில்லை. ஆவியானவரைப் பற்றிப் புதிய ஏற்பாடு கூறுவதென்ன என்பதைப் படிப்பதில் மதிப்புள்ளது, ஆனால் ஆவியானவர் தாமே தம்மையும் தமது கிரியைகளையும், பிதா மற்றும் குமாரன் ஆகியோருக்கு மேலாக

*உயர்த்துவதில்லை என்பதையும் அவர் வலியுறுத்தம் செய்கின்றவற்றையே நாமும் வலியுறுத்த வேண்டும் என்பதையும் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.* [19]Adapted from Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 362. [20]*யோவான் 16:13ல்* KJV *வேதாகமம், "அவர் தம்மைக் குறித்து ஒன்றும் பேசமாட்டார்'' என்று கூறுகிறது. அந்தச் சொற்றொடரமைப்பானது, ஆவியானவர் தம்மைக் குறித்து ஏதொன்றும் பேசமாட்டார் என்ற மனப்பதிவை விட்டுச் செல்லக்கூடும், ஆனால் விஷயம் இதுவல்ல (குறிப்பு 19ஐக் காணவும்). "அவர் தமது சுய தூண்டுதலில் ..." என்பது இவ்வேத வசனப்பகுதியின் அர்த்தத்தை மிகச் சரியாகத் தருவதாக உள்ளது.*

[21]*"வேத வாக்கியங்கள்" என்பது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகளைக் குறிக்கிறது (2 பேது. 3:15, 16ஐக் காணவும்).* [22]*கொடுக்கப்பட்ட குறிப்பில் இயேசு சிந்தையில் கொண்டிருந்த கருத்து என்ன என்று கூறுவது எப்போதுமே சுலபமாயிருப்பதில்லை.* [23]*இவ்வசனப்பகுதியில் (16:25ஐக் காணவும்) இயேசு வேண்டுமென்றே ஒளிவுமறைவாயிருந்தார், ஆனால் அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பிந்திய தரிசனங்களைப் பற்றிப் பேசினார் என்ற கண்ணோட்டமானது ''சற்றுக்காலம்'' என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தியமைக்கு மிகச் சிறப்பாகப் பொருந்துகிறது (16:16-19).* [24]*யோவான் 15:1-8 பற்றிய விரிவாக்கப்பட்ட விளக்கம் மற்றும் நடைமுறைப் பயன்பாட்டிற்கு, இந்தப் புத்தகத்தில் "கர்த்தருக்காகக் கனிகொடுத்தல்'' என்று தொடங்குகின்ற பிரசங்கத்தில் காணவும்.* [25]*இது யோவான், சுவிசேஷத்தில் உள்ள "நானே" என்ற ஏழு கூற்றுக்களில் கடைசியானதாக உள்ளது.* [26]NIV*யில்,* "Trust in God; trust also in me" *என்றுள்ளது.* [27]*யோவான் 14-17ல் விசுவாசம் பற்றிய மற்ற வசனப்பகுதிகளுக்கு, 16:30, 31; 17:8, 20, 21 ஆகியவற்றைக் காணவும்.* [28]*''கனிகொடுத்தல்'' என்ற சொற்றொடரின் அர்த்தம் குறித்து, இந்தப் புத்தகத்தில் ''கர்த்தருக்காகக் கனிகொடுத்தல்" என்று தொடங்குகின்ற பிரசங்கத்தில் காணவும்.* [29]*இயேசு தாம் இந்த உலகத்தில் அனுப்பப்பட்டது போலவே தமது அப்போஸ்தலர்களையும் அனுப்பினார் என்ற உண்மையின்மீது யோவான் 14-17ல் வலியுறுத்தம் உள்ளது (17:3, 8, 18, 21, 23) - எனவே அவர்கள் அவரைப் பற்றிச் சாட்சி அளிக்கமுடியும் (15:27). இருப்பினும், அவர்களை உலகிற்கு அனுப்பிய கட்டளையானது நமக்கும் நடைமுறைப் படுவதால், நமக்கும் இந்த நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்த முடியும் (இந்தப் பாடத்தொடரின் பிற்பகுதியில் மத். 28:18-20ஐப் பற்றிய கலந்துரையாடலில் காணவும்).* [30]*இயேசுவின் அன்பு இந்தக் கோட்பாட்டையும் விஞ்சியது - ஏனெனில் அவர் தமது விரோதிகளுக்காகவும்கூடத் தமது ஜீவனைக் கையளித்தார் (ரோமர் 5:8-10).*

[31]*இதற்கு சவுல்/பவுல் ஒரு உதாரணமாக உள்ளார். அவர் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியபோது (அப். 8:1, 3; 9:1, 2), தாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதாக நினைத்தார் (அப். 26:9; கலா. 1:13, 14).* [32]These are the first words of a song by Jeremiah E. Rankin, "God Be with You," *Songs of Faith and Praise*, com. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [33]Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 237. [34]Wiersbe, 367.

*83*

# கர்த்தருக்காகக் கனிகொடுத்தல்

## யோவா. 15:1-12, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

மேல்வீடு, பஸ்கா விருந்து, நெருங்கிக் கொண்டிருந்த சிலுவை, சீஷர்களை ஆயத்தப்படுத்துவதன் அவசியம் - இவை யாவும் யோவான் 14-16ல் உள்ள இயேசுவின் இணையற்ற பிரியாவிடை உரையின் காட்சி யமைவாக இருந்தது. அந்த உரையின்போது, கர்த்தர், திராட்சச் செடி மற்றும் அதின் கிளைகள் என்பதன்மீது அறைகூவல் விடுக்கும் ஒரு செய்தியை எடுத்துரைத்தார்.

கிறிஸ்து இந்த உருவகத்தைப் பயன்படுத்தும்படி அவரை ஏவியது எது என்பது பற்றிக் கல்வியாளர்கள் யூகம் செய்துள்ளனர். ஒருவேளை அது, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பயன்படுத்தப்பட்ட திராட்ச ரசமாக இருக்கலாம். ஒருவேளை அந்த வீட்டில் வளர்ந்திருந்த ஒரு திராட்சச் செடியை ஜன்னல் வழியாகக் காணமுடிந்திருக்கலாம். உரையின் கடைசிப் பகுதியை இயேசு பேசுமுன்பு அவர்கள் மேல்வீட்டை விட்டுப் புறப் பட்டிருந்தால் (யோவா. 14:31ஐக் காணவும்), அந்தச் சிறு குழுவினர் ஒரு திராட்சத் தோட்டத்தைக் கண்டிருக்கலாம். அவர்கள், பொன்னால் செய்த திராட்சக் கொடி மற்றும் திராட்சப் பழக்குலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்த தேவாலயத்தைக் கடந்து சென்றிருக்கக் கூடும். கிறிஸ்து, பழைய ஏற்பாட்டிலிருந்து, பழக்கமான உருவகம் ஒன்றைப் பயன்படுத்த விரும்பியிருக்கக் கூடும் (சங். 80; ஏசா. 5; எரே. 2). திராட்சச் செடி என்பது எல்லாரும் புரிந்துகொள்ளக்கூடிய உருவகமாக இருந்ததால் இயேசு இந்த உருவகத்தைப் பயன்படுத்தியிருக்கலாம்.

இயேசு அந்த உருவகத்தைப் பயன்படுத்தியது ஏன்? என்பதை விட, தமது விவரிப்பில் அவர் நிறைவேற்றும்படி நம்பிக்கையாயிருந்தது எது? என்பதே மிக முக்கியமான கேள்வியாக உள்ளது. விரைவில் அவர் இந்தப் பூமியை விட்டுப் புறப்படுவார். அவரது ஊழியத்தை அவரது சீஷர்கள் தொடர்ந்து செய்ய வேண்டியிருக்கும். இதை அவர்கள் எவ்வாறு செய்யக்கூடும் என்பதை அவர்கள் புரிந்துகொள்வது அவசியமாயிருந்தது. அதுவே கர்த்தருடைய வார்த்தைகளுக்குப் பின்னணியாக உள்ளது:

*நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக் காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திரா விட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப் போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப் பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக் கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னு டைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.*

*நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரி லொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனை யாயிருக்கிறது. ... நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன் (யோவா. 15:1-12, 16).*

இவ்வார்த்தைகள் தொடக்கத்தில் அப்போஸ்தலர்களிடம் பேசப் பட்டன, இவைகள் அவர்களுக்கு விசேஷித்த தனிக்குறிப்புகளைக் கொண்டிருந்தன (15:16ஐக் கவனிக்கவும்). இருப்பினும் வசனம் 1 முதல் 12 வரையுள்ள செய்தியின் இருதயம் போன்ற மையப்பகுதியானது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் நடைமுறைப் படுத்தப்படக்கூடும்.

இவ்வசனங்களினூடாக மூன்று மாபெரும் ஆய்வுக்கருத்துகள் உள்ளன: (1) தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுதல், (2) தேவனுக்கென்று கனிகொடுத்தல் மற்றும், (3) தேவனுடைய அன்பில் நிலைத்திருத்தல். முக்காலியின் மூன்று கால்கள்போல், இந்த ஆய்வுக்கருத்துக்கள் ஒன்றை

யொன்று தாங்குகின்றன. இந்தப் பிரசங்கம், இந்த ஆய்வுக் கருத்துக்களில் இரண்டாவதாக உள்ள - கனிகொடுத்தல் என்ற - கருத்தின்மீதும் கனி கொடுத்தலின் குறிப்பான ஒரு அம்சத்தின்மீதும் கவனம் செலுத்தும்.[1]

## கனிகொடுத்தலின் உண்மை நிலை

இவ்வசனப் பகுதி முழுவதிலும், திராட்சச்செடியிலுள்ள கிளைகள் ஒரு நோக்கம் கொண்டுள்ளது, கனி கொடுத்தல் என்பதே அந்த நோக்கமாக உள்ளது என்பதே அடிப்படையில் அமைந்துள்ள கருத்தாக உள்ளது (வ. 2, 4, 5, 8). திராட்சத் தோட்டக்காரர் ஒருவர், [கனிகொடுத்தல் என்ற] நோக்கத்தை நிறைவேற்றத் தவறுகின்ற ஒரு கொடி இருப்பதை நியாயப் படுத்த இயலாது. கனிதராத கொடிகள், கனிநிறைந்துள்ள கொடிகளி டமிருந்து சத்துக்களை எடுத்துக்கொள்ளுவதால், அவைகள் திராட்சச் செடியிலிருந்து வெட்டப்படுகின்றன (வ. 2, 6). அதுபோலவே, கிறிஸ்தவர் கள் என்ற வகையில் நாம் ஒரு நோக்கம் கொண்டவர்களாக இருக்கின் றோம்: அது கனிதருதல் என்ற நோக்கமாகும். இயேசு, "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷரா யிருப்பீர்கள்" என்றார் (வ. 8). கனிகொடுத்தல் என்பது விருப்பத் தேர்வாக இருப்பதில்லை. கனிகொடுத்தல் என்பது கிறிஸ்தவ நடவடிக்கைகளின் பிற்சேர்கையாக இருப்பதில்லை. கனிகொடுத்தல் என்பது நமது நோக்கமாக உள்ளது; இதுவே கிறிஸ்துவைப் பின்பற்றுவது பற்றிய எல்லாமுமாக உள்ளது. நாம் கனிகொடுக்கவில்லையென்றால், நமது இருப்பிற்கான காரணத்தை நாம் இழக்கின்றோம்.

நாம் கொடுக்க வேண்டிய ''கனி'' என்பது எது? ''கனி'' என்ற சொற்றொடரைப் புதிய ஏற்பாடு பல்வேறு வழிகளில் பயன்படுத்துகிறது.[2] யோவான் 15ன் "கனி" என்பது "ஆவியின் கனி" என்பதாகச் சிலர் நம்புகின்ற னர். பவுல், "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" என்று எழுதினார் (கலா. 5:22, 23அ). இத்துடன், நமது வாழ்வில் நாம் கிறிஸ்து வைப்போன்ற பண்புகளை மேம்படுத்தும்போது ''கனிகொடுத்தல்'' என்பதற்கான கட்டளையை நாம் நிறைவேற்றுகின்றோம் என்பதைச் சிலர் வலியுறுத்துகின்றனர். ''கனி'' என்ற சொற்றொடர், கர்த்தருக்கென்று வாழ்தல் மற்றும் ஊழியம் செய்தல் என்பவற்றின் நேர்மறையான விளைவுகள் எல்லாவற்றையும் குறிப்பிடக்கூடும் என்று மற்றவர்கள் சுட்டிக் காண்பிக்கின்றனர். பவுல், "கிறிஸ்து எனக்கு ஜீவன் … சரீரத்தில் பிழைத் திருக்கிறதினாலே என் கிரியைக்குப் பலனு[கனியு]ண்டாயிருப்பதால்" என்று கூறினார் (பிலி. 1:21, 22அ). KJVயில் "இது என் பிரயாசத்தின் பலன்[கனி]" என்றுள்ளது.

மறு உற்பத்தி என்பதும் அந்த மறு உற்பத்தியின் விளைவு என்பதும், வேதாகமத்தில், "கனி" என்ற வார்த்தையின் பொதுவான பயன்பாடுகளில் ஒன்றாக உள்ளது (ஆதி. 1:11; லூக். 1:42). ஆப்பிள் மரத்தின் கனி, ஆப்பிள் பழமாக உள்ளது, ஆரஞ்சு மரத்தின் கனி ஆரஞ்சுப் பழமாக உள்ளது, ஒரு

கிறிஸ்தவரின் “கனி” என்பது இன்னொரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும் என்று யாரோ ஒருவர் குறிப்பிட்டார். உலகப்பிரகாரமான வட்டாரத்தில், மனிதகுலத்திற்கு, ‘‘பலுகிப்பெருகிப் பூமியை நிரப்புங்கள்’’ என்று கூறப்பட்டது (ஆதி. 1:28; ஆதி. 9:1, 7ஐயும் காணவும்). இதேபோன்ற ஒரு அறைகூவல் ஆவிக்குரிய உலகிலும் காணப்படுகிறது. பவுல், பின்வருமாறு எழுதினார்:

> அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் (ரோமர் 7:4).

ரோமர் 7:4ல் “கனி” என்று சொற்றொடர் ஒரு பொதுவான வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம், ஆனால் திருமண விவரிப்பு, பிள்ளைகள் - ஆவிக்குரிய பிள்ளைகள், அதாவது புதிய கிறிஸ்தவர்கள் - என்ற “கனியை” கருத்தாகத் தெரிவிக்கிறது. பவுல் தாமேகூட, ரோமாபுரி சபையாருக்கு எழுதியபோது இவ்வகையான கனிதருதலைப் பற்றிப் பேசியிருக்கலாம். அவர், “புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை [கனியை] அடைந்தது போல உங்களுக்குள்ளும் சில பலனை [கனியை] அடையும் படிக்கு” (ரோமர் 1:13) அவர்களைச் சந்திக்க விரும்பியதாகக் கூறினார்.

யோவான் 15ன் “கனி”யைப் பொறுத்தமட்டில், அதில் குறிப்பிடப் பட்டுள்ள சாத்தியக்கூறுகளுக்கிடையில் நாம் தேர்ந்து கொள்ளுதல் என்பது அவசியமாக உள்ளதா? நாம், நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் ஆவியின் கனியை மேம்படுத்திக் கொள்ளாமலேயே கிறிஸ்துவைப் போன்ற பண்புகளை மேம்படுத்திக்கொள்ள முடியுமா? இழந்துபோகப்பட்டவர் களைச் சென்றடையாமலேயே நாம் கிறிஸ்துவைப் போலிருந்து ஆவியின் கனியினால் நிரப்பப்பட முடியுமா? இயேசு, “இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே” தாம் வந்ததாகக் கூறினார் (லூக். 19:10), மற்றும் நாம், “அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற” வேண்டியவர்களாக இருக்கின்றோம் (1 பேது. 2:21). ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படும்படிக்கு நாம் நமது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்தறிய வேண்டும்.

அந்த நடைமுறைப் பயன்பாட்டைச் சிந்தையில் கொண்டவர்களாக, பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: திராட்சச் செடி கனிதருவதில்லை, அது கொடிகளின் பணியாக உள்ளது. திராட்சச் செடியானது, கொடிகள் தங்களின் பணியைச் செய்யக்கூடியவைகளாக்குகிறது. ஆனால் கொடிகள் தாமே கனிகளை உற்பத்தி செய்ய வேண்டும். கொடிகள் கனிகளைத் தராதிருந்தால், கனிகளே இராது. நீங்களும் நானும், இழந்துபோகப் பட்டவர்களை அடையத் தவறினால், எவரொருவரும் இரட்சிக்கப்பட மாட்டார்கள்.

புதிய ஏற்பாட்டில், ஒருவர் தம் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல் என்பது, கிறிஸ்தவராக இருப்பதன் இயல்பான விளைவு என்ற வகையில் அது அதிகமாகக் கட்டளையிடப்படவில்லை. நம்மில் பெரும்பாலானவர்

கள், மத்தேயு சுவிசேஷத்தின்படியாகப் பிரதான கட்டளையை நன்கு அறிந்துள்ளோம்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து" (மத். 28:19). "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், எல்லா இனத்தவரையும் சீஷராக்குங்கள்"[3] என்பது அந்த வசனத்தின் நேரடியான தரவழைப்பாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீங்கள் சென்றுகொண்டிருக்கையில் (அல்லது, நீங்கள் செல்லுகையில்), நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் போதியுங்கள்" என்று இது அர்த்தப்படுகிறது. எருசலேம் சபையானது உபத்திரவத்தினால் சிதறடிக்கப்பட்டபோது, சரியாக இதுதான் நடந்தது.

> ... அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள் ... .
> சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள் (அப். 8:1, 4).

நாம் எதைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம் என்பதை, நாம் புரிந்து கொண்டிருந்தால், பகிர்ந்துகொள்ளுதல் என்பது நமக்கு இயல்பானதாக இருக்க வேண்டும். நாம், இயேசுவின்மீது நமக்குள்ள விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்; நாம் நற்செய்தியாகிய சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம். சமீபத்தில் திருமண நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட இளம் பெண்ணிடம், அவளது திருமண நிச்சயதார்த்த மோதிரத்தைக் காண்பிக்கும்படி கெஞ்சத்தேவையில்லை. அவள் தனது மோதிரத்தை ஒவ்வொருவரிடத்திலும் காண்பித்தல் என்பது அவளுக்கு இயல்பான காரியமாக உள்ளது. புதிதாய்த் தந்தையாகியுள்ள ஒருவர் தனது குழந்தையைப் பற்றிப் பிறரிடத்தில் சொல்லும்படி தூண்டப்பட வேண்டியதில்லை - மற்றும் நீங்கள் நிச்சயமாகவே, ஒரு பாட்டியிடத்தில் அவளது புதிய பேரக்குழந்தையின் புகைப்படத்தைக் காண்பிக்கும்படி அவளைக் கட்டாயப்படுத்தத் தேவையிருக்காது. அந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது அவர்களுக்கு இயல்பான விஷயமாக இருக்கும். துன்பம் நிறைந்துள்ள இவ்வுலகத்தில், உலகமானது நற்செய்திக்காகப் பசியுடன் இருக்கிறது.[4] நாம் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கொண்டுள்ளோம்! அந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது நமக்கு எவ்வளவாக இயல்பான விஷயமாக இருக்க வேண்டும்!

சிலர், "எப்படி? நான் எனது விசுவாசத்தை எப்படிப் பகிர்ந்துகொள்ள முடியும்? மற்றவர்களை இயேசுவுக்காக ஆதாயப்படுத்துதல் என்ற கருத்தில் நான் எப்படிக் கனிகொடுக்க முடியும்?" என்று கேட்கலாம். அது எப்படி என்று இவ்வசனப் பகுதி, நமக்குக் கூறுவதில்லை; பகிர்ந்துகொள்ளுதல் அவசியமானது என்று மட்டுமே இது சுட்டிக்காண்பிக்கிறது. நமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுவதற்கு டஜன் கணக்கில், ஏன் நூற்றுக்கணக்கில் செய்முறைகள் இருக்கின்றன. நாம் ஒவ்வொருவருமே மாறுபட்டவர்களாக இருக்கின்றோம்; ஒருவருக்குப் பணிக்கு உதவுகிற ஒரு செயல் இன்னொரு

வருக்குப் பணிக்கு உதவாமல் போகலாம்.[5] நீங்கள் பயன்படுத்துகின்ற செய்முறை எதுவாக இருப்பினும், அது வாழ்வு மற்றும் போதனை ஆகிய இரண்டையும் உள்ளடக்குவதாக இருக்க வேண்டும். பவுல் இவ்விரண்டு காரணிகளையும் பிலிப்பியர் 2:14-16ல் இணைத்தார்.

> … கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

*(1) வாழ்வு.* நீங்கள் நேர்மறையாகவும் எதிர்மறையாகவும், உண்மை நிறைந்த கிறிஸ்தவ வாழ்வை வாழ வேண்டும். நேர்மறையாக, நீங்கள் ஒரு நல்ல வாழ்வை வாழ்ந்து, மற்றவர்களை நேசித்து உதவ வேண்டும். எதிர்மறையாக, நீங்கள் சுத்தமாக நிலைத்திருப்பதற்குப் பொல்லாங்கை உங்கள் வாழ்வில் இருந்து வெளியே இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் போதனைக்கு இசைந்த ஒரு வாழ்வை நீங்கள் நடத்தவில்லையென்றால், எவரொருவரும் உங்கள் போதனையைக் கவனிக்க மாட்டார்கள்.[6]

*(2) போதனை.* உங்கள் வாழ்வு எவ்வளவு நல்லதாக இருப்பினும், நீங்கள் சுவிசேஷத்தைப் போதிக்கவும் வேண்டும். சிலர், தாங்கள் சத்தியத்தின்படி வாழ்கின்ற வரையிலும், சத்தியத்தைப் போதிக்கத் தேவையில்லை என்று நினைக்கின்றனர். நீங்கள் இயேசுவைக் காட்டிலும் மேன்மையானவர்களாய் இருக்கின்றீர்களா? அவரே தமது வாழ்வினால் மாத்திரம் கனிதர முடியாதிருந்ததே. அவர் சத்தியத்தை வாழ்ந்தார், ஆனால் அவரும் போதிக்க வேண்டியிருந்ததே. போதனை என்பது கடிதங்களினால், கைப்பிரதிகளினால், துண்டுப்படங்களினால் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளினால் அல்லது முகமுகமாய்ச் சந்திப்பதினால் நிறைவேற்றப் படலாம். நீங்கள் எவ்வாறு பிறருக்குப் போதிக்கின்றீர்கள் என்பதல்ல, ஆனால் நீங்கள் அவர்களுக்குப் போதிக்கின்றீர்களா என்பதே முக்கியமானதாக உள்ளது.

பின்வரும் சிந்தனைக்குத் திரும்ப என்னை அனுமதியுங்கள்: யோவான் 15ன்படி, கனிகொடுத்தல் என்பதே கிறிஸ்தவராயிருத்தலின் எல்லாமுமாக உள்ளது. கொடிகள் என்ற வகையில் நமது பணிப்பொறுப்பின் முக்கியத்துவத்தை நாம் நம்பி ஏற்றுக்கொண்டால், கனிகொடுப்பதற்கான வழிமுறையை நாம் கண்டறிந்து செயல்படுத்துவோம்.

## கனிகொடுத்தலின் உறவுமுறை

இயேசு இல்லாமல் நாம் கனிகொடுக்க இயலாது என்பதே கனிகொடுத்தல் பற்றிய கிறிஸ்துவின் போதனையில் பிரதான வலியுறுத்தமாக உள்ளது. வசனம் 4, "என்னில் நிலைத்திருங்கள்" என்ற வார்த்தை

களுடன் தொடங்குகிறது.

திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள ஒட்டுறவு பற்றி நாம் விஞ்ஞானப்பூர்வமாக ஒரு விரிவுரையைக் கொடுக்கக் கூடும். நாம் உணவுப்பரிமாற்றத்தின் செய்கை பற்றிப் பேசக் கூடும்: திராட்சச் செடியின் வேர்கள் மண்ணிலிருந்து ஈரத்தையும் சத்துக் களையும் தனது கொடிகளுக்கு மாற்றுகிறது. நாம் ஒளிச்சேர்க்கை பற்றி கலந்துரையாடக்கூடும்: இலைகளின் பச்சயத்தின் [chlorophyll[7]]மீது சூரிய ஒளியின் செய்கை. இருப்பினும், இது தோட்டக் கலையின்மீதான ஒரு பாடமாக இன்றி உறவுமுறையின் மீதான ஒரு பாடமாக உள்ளது. நீங்கள் உணவுப்பரிமாற்றம் மற்றும் ஒளிச்சேர்க்கை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளாதிருக்கலாம், ஆனால் பின்வருவதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும்: கொடியானது செடியுடன் இணைந்திருக்கும்போதுதான் உயிர் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் கொடி எவ்வளவுதான் வளர்ந்திருப் பினும், அது எவ்வளவு நீளமான அல்லது பருமனான கொடியாக இருப் பினும், அது எவ்வளவு பச்சையாக அல்லது ஆரோக்கியமாகத் தோற்றம் தந்திருப்பினும் அல்லது அது எவ்வளவு கவர்ச்சிகரமானதாக இருப்பினும், அந்தக் கொடியானது திராட்சச் செடியுடன் இணைந்திராவிட்டால், அது செத்ததாக உள்ளது.

இதே விஷயமானது, கிறிஸ்துவுடனான நமது உறவுமுறைக்கும் உண்மையானதாக உள்ளது: நமது ஆவிக்குரிய வாழ்விற்கு வளர்ச்சிக்கும் அவர் இன்றியமையாதவராக இருக்கின்றார். நாம் அவருக்குள் ஞானஸ் நானம் பெறுகின்றோம் (ரோமர் 6:3-6; கலா. 3:26, 27). நாம் அவருக்குள் ஒரு புது சிருஷ்டியாக இருக்கின்றோம் (2 கொரி. 5:17). ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் அவருக்குள் உள்ளன (எபே. 1:3). நாம் அவருக்குள் மீட்பைக் கொண்டுள்ளோம் (கொலோ. 1:13, 14).

நம்மில் சிலர் நாம் ஆதாயப்படுத்த வேண்டிய அளவுக்கு ஆத்துமாக் களை ஆதாயப்படுத்தாமல் இருப்பது ஏன்? நாம் ஏன் நமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுவதில்லை? நாம் ஏன் ஆவிக்குரிய முறையில் வளருவ தில்லை? என்றும் நாம் ஏன் தேவபக்தியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்வ தில்லை? என்றும் நாம் ஏன் சபைக்கு வருவதில் உண்மைத்தன்மையுடன் இருப்பதில்லை? என்றும் கூடக்கேட்க முடியும். இந்தக் கேள்விகள் யாவற்றிற்கும் பதிலானது ஒரே மாதிரியானதாக உள்ளது: கிறிஸ்துவுடனான நமது உறவு சரியானதாக இருப்பதில்லை. இயேசு, “ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்” என்று கூறினார் (யோவா. 15:5ஆ). அந்த உறவுமுறை சரியானதாக இருந்தால், நாம் கனிகொடுப்போம்.

உறவுமுறை என்பதே திறவுகோலாக உள்ளது. ஒரு தனிப்பட்ட விவரிப்பைப் பயன்படுத்த என்னை அனுமதியுங்கள். எனது சிந்தனை யானது, நான் மிகவும் களைப்புற்றிருந்த, எனது பணி அட்டவணைகள் மிகவும் நிறைந்திருந்த மற்றும் நான் எனது நிதிநிலை சார்ந்த கட்டுப்பாடுகள் பற்றிக் கவலைகொண்டிருந்த ஒரு நாளை நோக்கிப் பின்செல்லுகிறது. எனது மகள்களில் ஒருத்தி என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு

“அப்பா, எனக்கு உதவி தேவை! எனக்கு உண்மையிலேயே உதவி தேவை!” என்று துடிப்புடன் கூறினாள். நான், “எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது” என்று கூறவில்லை. நான், “எனக்கு நிறைய வேலை இருக்கிறது” என்று கூறவில்லை. நான், “என்னிடத்தில் பணம் இல்லை” என்று கூறவில்லை. நான், ‘‘உனக்குத் தேவையானதை எப்படித் தருவது என்று எனக்குத் தெரியவில்லை” என்று கூடக் கூறவில்லை. எப்படி என்று எனக்குத் தெரியா விட்டால், எப்படி என்று அறிந்த யாரேனும் ஒருவரை நான் கண்டறிவேன். ஏதாவது ஒரு வழியில் நான் எனது மகளுக்கு உதவி செய்வேன். ஏன்? ஏனென்றால் நாங்கள் ஒரு விசேஷித்த உறவுமுறையைக் கொண்டுள்ளோம்.

“இயேசுவுடன் நாம் எவ்வகையான உறவுமுறையைக் கொண்டுள்ளோம்?” என்பதே இந்த வேளையின் கேள்வியாக உள்ளது. அதாவது, நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ளோமா?; ஆம் என்றால், இப்போது நாம் அவருக்காக வாழ்கின்றோமா? யோவான் தமது முதல் நிருபத்தில், இயேசுவுக்குள் நிலைத்திருத்தலை தனிப்பட்ட, சொந்தமான அடிப்படையாக வைத்தார். அவருக்குள் நிலைத்திருக்கின்றவர் அவர் நடந்தது போலவே தாமும் நடப்பார் (1 யோவா. 2:6), தமது சகோதரரை அன்புகூருவார் (2:9, 10), மற்றும் பாவம் நிறைந்த வாழ்வுப் பாணியைத் தொடராதிருப்பார் (3:6) என்று அவர் கூறினார். நாம் இயேசுவுடன் ஒரு சரியான உறவு முறையைக் கொண்டிருந்தால், கனிகொடுப்பதற்கான ஒரு வழிமுறையை நாம் கண்டறிவோம்.

யோவான் 15:1-12 வசனங்கள், கனிகொடுப்பவராயிருக்கத் தவறுதலின் விளைவுகள் பற்றித் தீவிரமான சில கூற்றுக்களை எடுத்துரைக்கிறது. வசனம் 2ல் இயேசு, “என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்’’ என்று கூறினார். வசனம் 6, ‘‘அக்கினியில் போடுகிறதை” பற்றிப் பேசுகிறது. இருப்பினும் இவ்வசனப் பகுதியானது, நாம் ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக இல்லாத காரணத்தினால் அல்லது பிறவழிகளில் கனிகொடாதிருக்கும் காரணத்தினால் நாம் நரகத்திற்குச் செல்வோம் என்று கூறுவதில்லை. மாறாக, இது நாம் இயேசுவுடன் ஒரு சரியான உறவுமுறையைக் கொண்டிராததால் நாம் இழந்துபோகப் படுவோம் என்றே போதிக்கிறது. வசனம் 6ஐ மீண்டுமாகக் கண்ணோக்குங்கள்: ‘‘ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம்.”

தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளாத சிலர் ஒரு காரணத்தைக் கண்ணோக்குகின்றனர்: அவர்கள், “நான் வெட்கப்படுகின்றேன்” அல்லது “மக்கள் ஆர்வமாயிருப்பதில்லை” அல்லது “நான் ஒரு நல்ல போதகனல்ல” அல்லது “எனக்குப் போதிய அளவு தெரியாது” அல்லது “எனக்கு நேரமில்லை” என்று கூறுகின்றனர். அவர்கள் உறவுமுறையைத் தேடவேண்டிய வேளையில் ஒரு காரணத்தைத் தேடுகின்றனர். பவுல், ‘‘என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு” என்று எழுதினார் (பிலி. 4:13).

## கனிகொடுத்தலுக்குத் தேவையானவைகள்

கனிகொடுத்தலின் இருதயம் போன்ற மையப்பகுதியை, உண்மையான திராட்சச் செடியுடன் நமது உறவுமுறையை நிலைநாட்டியுள்ள நிலையில் நாம், இப்போது கனிகொடுத்தலுக்கு நடைமுறையில் தேவையானவைகள் சிலவற்றைக் கண்டறிவதற்காக வேத வசனப்பகுதியைக் கண்ணோக்குவோம். சுவிசேஷத்துவக் கனிகொடுத்தல் - அதாவது பிறருடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் - என்பதற்கு சொல்வன்மையுள்ள நாவு, ஒரு நல்ல விற்பனையாளராக உள்ள திறமை[8] அல்லது குறிப்பிடத்தக்க அளவு ஞானம் ஆகியவை தேவை என்று சிலர் நினைக்கின்றனர். இவ்வேத வசனப் பகுதியானது இவைகளைப் பற்றி ஏதொன்றும் கூறுவதில்லை. மாறாக இது, நான்கு முன் தேவைகளைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.

*(1) கீழ்ப்படிதலுள்ள ஒரு ஆவி.* தேவன் திராட்சத்தோட்டக்காரராக இருக்கின்றார் (யோவா. 15:1) - அவர் திராட்சத் தோட்டத்தை உரிமை கொண்டுள்ளார். அவர் கனிகொடுக்கின்ற கொடிகளையும் சுத்தம் செய்கின்றார் (வ. 2). நாம் யாவருமே கழிக்கப்பட வேண்டிய சில மோசமான குணங்களைக் கொண்டுள்ளோம்! நான் எப்போதுமே அவருக்கும் இயேசுவுக்கும் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும். கிறிஸ்து, "நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" என்று கூறினார் (வ. 10).

*(2) பெருமுயற்சியுள்ள ஒரு சிந்தை.* இயேசு தமது சீஷர்களிடத்தில், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் (வ. 3). "சுத்தம்" என்ற கிரேக்க வார்த்தை "சுத்தம் பண்ணுகிறார்" என்பதில் உள்ள அதே கிரேக்க வார்த்தையில் இருந்தே வருகிறது (வ. 2). அவருடைய வசனமே தேவனுடைய "சுத்தமாக்கும் கருவிகளில்" ஒன்றாக இருக்கிறது. பதினொருவரிடத்தில் கிறிஸ்து, "... என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று கூறினார் (வ. 7).

கனிகொடுத்தலுக்கு, தேவனுடைய வசனத்தைப் பற்றிய - விசேஷமாக சுவிசேஷத்துவக் கனிகொடுத்தல் பற்றிய - அறிவு இன்றியமையாததாக உள்ளது. வேதாகமப் படிப்பும் ஆத்தும ஆதாயமும் ஒன்றிணைந்து செல்லுகின்றன. நான் உண்மையிலேயே வசனத்தை அறிந்திருந்தால், நான் அதைப் பகிர்ந்து கொள்ள விரும்புவேன்; நான் அதைப் பகிர்ந்து கொண்டால், அதை இன்னும் அதிகமாய்க் கற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணருவேன். இயேசு, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று கூறினார் (மத். 5:6). கடின வேலையைப் போல் வேறு எதுவும் உணவிற்குச் சுவையூட்டுவதில்லை, கர்த்தருக்காக வேலை மும்முரமாயிருத்தல் - விசேஷமாக, சத்தியத்தைப் பகிர்ந்துகொள்ளும் விஷயங்களில் வேலை மும்முரமா

யிருத்தல் என்பதைப் போன்று தேவனுடைய வசனத்தின் "சுவையை" மேம்படுத்துவது வேறு எதுவும் இல்லை.

*(3) ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு இருதயம்.* நாம் இயேசுவுடன் நிலைத்திருக்க நம்மையே ஒப்புக்கொடுக்க வேண்டும். யோவான் 15ல் அவரது செய்தி "என்னில் *நிலைத்திருங்கள்*" என்பதாகவே உள்ளது (வ. 4). வசனம் 7ல் அவர், "நீங்கள் என்னில் *நிலைத்திருந்தால்*" நீங்கள் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களைப் பெறுவீர்கள் என்று கூறினார். கர்த்தருடன் நமது உறவுமுறையானது பல வகைகளில், திராட்சச் செடியுடன் கொடிகளுக்குள்ள உறவுமுறை போன்றதாக உள்ளது என்று நாம் கவனித்துள்ளோம். இருப்பினும், ஒரு வகையில் ஒப்பீட்டின் அம்சம் முறிபடுகிறது: கொடிகள் செடியுடன் இணைந்திருக்கலாமா இல்லையா என்பதற்குத் தெரிவு ஒன்றையும் கொண்டிருப்பதில்லை - ஆனால் நாம் அந்தத் தெரிவைக் கொண்டுள்ளோம்.

வேதாகமம் விசுவாசியின் பாதுகாப்புள்ள நிலைபற்றிப் போதிக்கிறது, ஆனால் விசுவாச விலக்கத்தின் சாத்தியமற்ற தன்மைப் பற்றிப் போதிப்பதில்லை. யோவான் 15, நான் திராட்சச் செடியுடன் இணைந்த பின்னும்கூட, நீக்கப்படவும் "அக்கினியில் போடப்படவும்" கூடும் என்று போதிக்கிறது. நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நான் கர்த்தருக்குள் *நிலைத்திருக்க* வேண்டும். நியாயத்தீர்ப்பின் நாளில் நான் எனது ஞானஸ்நானச் சான்றிதழை[9] எடுத்துக்கொண்டு, "பாருங்கள், நான் இன்ன நாளில் ஞானஸ்நானம் பெற்றேன். என்னை நீங்கள் உள்ளே அனுமதிக்க வேண்டும்" என்று கூறமுடியாது. ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்கு இன்றியமையாததாக உள்ளது, ஆனால் கர்த்தருக்குள் நிலைத்திருத்தல் என்பதும் இன்றியமையாததாக உள்ளது (வெளி. 2:10). "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பெற்றிருத்தல் (ரோமர் 6:3, 4; கலா. 3:26, 27) மட்டுமின்றி, "கிறிஸ்துவுக்குள்" *நிலைத்திருத்தல்* (ரோமர் 3:24; 6:11, 23; 8:1, 39; 2 கொரி. 2:14; பிலி. 4:7, 19; 1 தெச. 4:16) என்பதும் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

*(4) தீர்மானமுள்ள ஒரு எண்ணப்போக்கு.* வளருதல் என்பதே கொடிகளின் இயல்பாக உள்ளது. அவைகள் வளருவதை விட்டொழிக்கும்போது அவைகள் இறந்துவிடுகின்றன. யாரோ ஒருவர், "மரத்தின் நுனியில் புதுத்தளிர்கள் இல்லையென்றால், அதன் வேரை மரணம் தாக்கியுள்ளது" என்று எழுதினார். நீங்களும் நானும், தேவனுடைய உதவியுடன் கிறிஸ்தவர்களாக வளருவோம் என்று தீர்மானித்துக் கொள்ளுதல் அவசியமாக உள்ளது. விசேஷமாக, கனிகொடுக்கும் விஷயத்தில் நம் வளருதல் அவசியமாக உள்ளது. யோவான் 15 "கனி"யைப் பற்றிப் பேசுகிறது (வ. 2), ஆனால் அது "மிகுந்த கனிகளை"ப் பற்றியும் (வ. 5, 8) "அதிக கனிகளை"ப் பற்றியும் (வ. 2) கூடப்பேசுகிறது.

## கனிகொடுத்தலின் விளைவுகள்

இந்தப் பிரசங்கத்தை முடிக்கும் வேளையில், கனிகொடுத்தலின் நேர்மறையான விளைவுகள் சிலவற்றைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.[10]

*நாம் ஆவிக்குரிய வகையில் வளருவோம்.* நாம் சுத்தப்படுத்தப்பட்டவர்களாய் இருப்போம்; நாம் "மிகுந்த கனிகளை" (வ. 5, 8) மற்றும் "அதிக கனிகளை"க் கொடுப்போம் (வ. 2). இந்தப் பிரசங்கம் சுவிசேஷத்துவக் கனிகொடுப்பதன்மீது கவனம் குவித்துள்ளது. ஆவிக்குரிய வளர்ச்சியைக் காட்டிலும் ஆத்தும ஆதாயத்துடன் நெருக்கமாக உறவுபட்டுள்ள கிறிஸ்தவ நடவடிக்கை எதையும் நான் அறிவதில்லை.

*நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கப்படும்* (வ. 7). உங்கள் ஜெபவாழ்வு இருக்க வேண்டிய முறைப்படி இல்லையென்றால், இயேசுவுடனான உங்கள் உறவைப் பரிசீலனை செய்து, நீங்கள் கனிகொடுக்கின்றீர்களா இல்லையா என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்.

*தேவன் மகிமைப்படுத்தப்படுவார்* (வ. 8). திராட்சத் தோட்டம் அவருடையது என்பதையும் அவரே திராட்சத் தோட்டக்காரராக இருக்கின்றார் என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கொடிகள் கனிகொடுக்கின்றபோது, அவர் மகிமைப்படுத்தப்படுகின்றார்.

*நாம் நம்மை இயேசுவின் உண்மையான சீஷர்களாகக் காண்பிப்போம்* (வ. 8).

*நாம் சந்தோஷம் கொண்டிருப்போம்* (வ. 11). பவுல், தாம் மனம் மாற்றியவர்களைத் தமது "சந்தோஷமும் கிரீடமுமானவர்கள்" என்று அழைத்தார் (பிலி. 4:1). யோவான், தமது "பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம்" தமக்கு இல்லை என்று கூறினார் (3 யோவா. 4).

*ஆத்துமாக்கள் -* நம்முடைய மற்றும் பிறருடைய ஆத்துமாக்கள் - *இரட்சிக்கப்படும்!*

## முடிவுரை

நான் ஒரு செயல்துடிப்புள்ள சபையில் அங்கம் வகிக்க விரும்புகின்றேன். மகிழ்வுடனும் வேலை மும்முரத்துடனும் இருக்கும் கிறிஸ்தவர்களுடன் இருத்தல் என்பது எவ்வளவு மெய்சிலிர்ப்புள்ளதாக இருக்கிறது! இருந்தபோதிலும், கர்த்தருடைய சபையாய் இருக்கவேண்டிய வகை பற்றிய கண்ணோக்கை மறந்துபோகும் அளவுக்கு, "திட்டங்களின்" திரளான எண்ணிக்கையில் நாம் அதிகமாய் ஈடுபட்டு விடுவதைக் குறித்து நான் பயம் கொண்டுள்ளேன். சிலவேளைகளில் நாம் தேவனுக்கென்று கனிகொடுக்கவே இருக்கின்றோம் என்ற நமது இருப்பிற்கான உண்மையான காரணத்தின்மீதான நமது கண்ணோக்கை இழந்து விடுகின்றோம். கனிகொடுத்தலுக்குப் பதிலுக்கு ஈடாக எதுவும் இருப்பதில்லை. நாம் யாவரும் தேவனுக்கென்று கனிகொடுப்பவர்களாய் இருக்க அவரே நமக்கு உதவுவாராக![11]

குறிப்புகள்

[1]ஆத்தும ஆதாயம் என்பதே இந்தப் பிரசங்கத்தின் வலியுறுத்தமாக இருக்கும், ஆனால் இந்த எடுத்துரைப்பை ஆவிக்குரிய கனிகொடுத்தல் அல்லது கிறிஸ்துவைப் போல வாழ்தலின் அவசியம் என்பவற்றிற்கேற்பத் தழுவிக் கொள்ள முடியும். [2]"கனி" என்ற வார்த்தை பல பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. இதை, நீங்கள் இன்னொரு நபருடைய வாழ்வில் காண்பவற்றை (மத். 3:10; 7:16-20); உண்மைத் தன்மையின் விளைவை, பலன்தரும் கிறிஸ்தவ வாழ்வை (எபே. 5:9; பிலி. 1:11; கொலோ. 1:10; எபி. 12:11; யாக். 3:17, 18) அல்லது விடுவிக்கப்பட்ட முயற்சிக்கான விளைவு அல்லது பலன் என்பதை (யோவா. 4:36; 12:24)க் குறிப்பிடப் பயன்படுத்த முடியும். "முதல் கனிகள் [பலன்கள்]" (ரோமர் 8:23; 1 கொரி. 15:20, 23; 16:15) என்பது, கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவைகளாயிருந்த (விளைவின் முதல்) பலன்கள் பற்றிய பழைய ஏற்பாட்டு குறிப்பின் அடிப்படையில் அமைந்த பேச்சு உருவகமாக உள்ளது. [3]Alfred Marshall, *The Interlinear Greek-English New Testament*, 2d ed. (London: Samuel Bagster and Sons, 1958), 136. [4]நீங்கள் பேசுகின்ற வேளையில் தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்களில் ஆதிக்கம் செலுத்தும் "மோசமான" செய்திகளைப் பற்றிக் குறிப்பிடலாம். [5]இந்தப் பத்தியை நீங்கள் பிரசங்கிக்கும் இடத்தில் செய்யப்படுபவற்றிற்கு ஏற்றாற்போல் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். ஒரு குறிப்பிட்ட முறையை நீங்கள் விரும்பித் தேர்ந்துகொண்டால், அதைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறுங்கள். சுவிசேஷ அறிவிப்பின் ஒரு சில முறைமைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி நீங்கள் ஒரு வகுப்பு நடத்தவிருப்பதாகக் கூட அறிவிக்கலாம். [6]இவ்விடத்தில் நான் ஒரு தனிப்பட்ட விவரிப்பைக் கூடுதலாகக் கூறுவதுண்டு: நான் எனது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு, "முடிவளருதலை உத்தரவாதப்படுத்தும் ஒரு மருந்தை விற்பதில் நான் மிகவும் சிரமப்படுவேன்." [7]"பச்சயம்" என்பது "பச்சை" என்று அர்த்தப்படுகிற ஒரு கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. இது இலைகளில் உள்ள பச்சை நிறத்தைக் குறிப்பிடுகிறது. [8]அமெரிக்காவில் நான், "Some of us couldn't sell a seat on the fifty-yard line at the Super Bowl for fifty cents!" என்று கூடுதலாகக் கூறுவதுண்டு. [9]எனது சொந்த ஞானஸ்நானத்திற்கு நான் இவ்விதமான பதிவேடு எதையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் நான் ஊழியம் செய்துள்ள சபைகளில், முழுக்காட்டப்படும் ஒவ்வொருவருக்கும் ஞானஸ்நானச் சான்றிதழ் கொடுப்பதை நடைமுறையாக ஏற்படுத்தியுள்ளோம். நீங்கள் வாழும் பகுதியில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை என்றால், இவ்வாக்கியத்தை அதற்கேற்பத் தழுவி யமைத்துக் கொள்ளவும். [10]குறிப்பிட்ட வசனப்பகுதிகள் வாசிக்கப்பட்டு, அந்தப் பிரிவுகள் வேறு வகையில் விரித்துரைக்கப்படக்கூடும்.

[11]நீங்கள் அழைப்பை விடுக்கும்போது, மனம் வருந்தும் விசுவாசி கிறிஸ்து வுக்குள் ஞானஸ்நானம் பெறுதலின் அவசியத்தை - மற்றும் அதன்பின்பு கிறிஸ்து வுக்குள் நிலைத்திருத்தலை - வலியுறுத்த விரும்புவீர்கள். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டிராத எவரொருவரையும் அல்லது கர்த்தரினின்று விழுந்துபோயுள்ள எவரொருவரையும் பதில்செயல் செய்யும்படி ஊக்கப்படுத்துங்கள்.

*84*

# யூதேயாவில் உறக்கமின்மை

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #36*

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).

H. வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).

2. கெத்செமனே தோட்டம் (மத். 26:30, 36-46; மாற். 14:26, 32-42; லூக். 22:39-46; யோவா. 18:1).
3. காட்டிக் கொடுக்கப்படுதல் மற்றும் கைதாகுதல் (மத். 26:47-56; மாற். 14:43-52; லூக். 22:47-53; யோவா. 18:2-11).
4. யூதர்களால் "விசாரிக்கப்படுதல்" (முதல் மற்றும் இரண்டாம் நிலைகள்):
   a. முதல் நிலை: அன்னாவினால் சோதிக்கப்படுதல் (யோவா. 18:12-14, 19-23).
   b. இரண்டாம் நிலை: காய்பா மற்றும் சனதெரீன் சங்கத்தாரால் ஆக்கினைத் தீர்ப்பிடப்படுதல் (மத். 26:57, 59-68; மாற். 14:53, 55-65; லூக். 22:54அ, 63-65; யோவா. 18:24).

## அறிமுகம்

நீங்கள் எப்போதாவது உறக்கமற்று இரவைக் கழித்து இருக்கின்றீர்களா? ஒருவேளை நீங்கள் ஏக்கத்தினால் அல்லது பய உணர்வினால் அல்லது வேதனையினால் நிறைந்து தூக்கம் வராத நிலையில் இருந்து இருக்கலாம். நான் உறக்கமற்ற சில இரவுகளைக் கொண்டிருந்துள்ளேன் - மற்றும் நீங்களும் அநேகமாக அவ்வாறான இரவுகளைக் கொண்டிருந்து இருக்கலாம். இயேசு தமது மரணத்திற்குச் சற்று முன்னதாக, உறக்கமற்ற இரவு ஒன்றைக் கொண்டிருந்தார். அவரது சீஷர்கள் ஒரு மணி அல்லது அதற்குச் சற்றேக் குறைவான நேரம் ஆழ்ந்து உறங்கியிருக்கலாம் (மத். 26:40), ஆனால் அவர் அவ்வாறு உறங்கவில்லை. அந்த இரவின் முதல் பகுதியில், இயேசுவின் சிந்தனைகள் உறக்கத்திற்கு இசைந்தவைகளாக இருக்கவில்லை; அந்த இரவின் கடைசிப் பகுதியில், அவரது விரோதிகள் அவரை உறங்க அனுமதிக்கவில்லை.

நமது முந்திய பாடம் யோவான் 14-17ன் மீதானதாக இருந்தது. அந்த அத்தியாயங்களில் அவர் கலந்துரையாடிய ஒவ்வொரு தலைப்பின்போதும், கர்த்தர் இருந்த இடம் பற்றி மிகச் சரியாக நாம் அறிவது இல்லை. அத்தியாயம் 14ன் கடைசியில் இயேசு, "இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள்" என்றார் (வ. 31ஆ). இது, அவரும் அவரது சீஷர்களும் அந்த வேளையில் மேல்வீட்டை விட்டுப் புறப்பட்டனர், அத்தியாயம் 15, 16 மற்றும் 17ல் உள்ள விஷயங்கள், அவர்கள் கெத்செமனே தோட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் பேசப்பட்டன என்று சுட்டிக் காண்பிக்கலாம்.[1] இதற்கு மறுபுறம், இயேசு, "போவோம் வாருங்கள்" என்று கூறியபின்பு, அவர்கள் புறப்படுவதற்கு முன்பு சற்றே தாமதித்து இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. (ஒருமுறை என்னிடம் வந்த விருந்தினர்கள் "நாங்கள் போகவேண்டும்" என்று கூறிய பின்பு ஒருமணி நேரம் தாமதமாகப் புறப்பட்டார்கள்.) இருப்பினும், ஏதோ ஒருவேளையில் கிறிஸ்துவும் பதினொருவரும் மேல்வீட்டை விட்டு, கெத்செமனே தோட்டத்தை நோக்கிச் செல்லப் புறப்பட்டனர் (மத். 26:30, 36).[2]

இயேசுவின் விரிவான உரைகள் முடிக்கப்பட்டிருந்தன. இந்த வேளையில் இருந்து, சுவிசேஷ விவரங்களின் எழுத்தாளர்கள் பிரசங்கத் துவங்களுக்குப் பதிலாக வரலாற்றின்மீது அக்கறையாயிருந்தனர்.[3] இருந்த போதிலும், இயேசுவின் சிலுவை மரணத்திற்கு முன்னான கடைசி மணி வேளைகளில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை அதிகமாக உள்ளன.

## பாழாக்கும் பெருந்துக்கம் (மத். 26:30, 36-46; மாற். 14:26, 32-42; லூக். 22:39-46; யோவா. 18:1, 2)

மேல்வீட்டின் நிகழ்ச்சி ஒரு பாடலுடன் முடிவுபெற்றது: "அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு, ... புறப்பட்டுச் சென்றார்கள்" (மத். 26:30; மாற். 14:26ஐக் காணவும்). பாரம்பரியமாக, பஸ்கா விருந்தானது, "ஹல்லெல்[4] சங்கீதங்களை (சங். 115-118) பாடுதலுடன் முடிவடைந்தது."[5] ஹல்லெல் சங்கீதங்களை ஏவிய தேவத்துவத்தில் கிறிஸ்துவும் ஒரு பாகமாக இருந்தபடியால் (2 பேது. 1:21), ஒரு பாடல் எழுத்தாளர் தாம் சொந்தமாக இயற்றியவற்றைத் தாமே பாடிக் கொண்டிருந்தார். இயேசுவும் அப்போஸ்தலர்களும் தேவனிடம் தங்கள் குரலை உயர்த்தியதை உங்கள் மனதில் காணுங்கள்; காற்றினால் முரடுபட்ட ஆண்குரல்கள் துதியில் ஒன்று கலந்ததைக் கேளுங்கள். அவர்கள் பாடிய பாடல் அநேகமாக, "கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது" (சங். 118:1) என்று தொடங்கும் கடைசி ஹல்லெல் சங்கீதமாக இருந்திருக்கலாம். "சிலுவையின் நிழலானது கிறிஸ்துவின் துதியில் இருந்த ஆவியை அணைத்துப் போடவில்லை."[6]

எஜமானர் தமது அப்போஸ்தலர்களுடன், குறுகலான தெருக் களினூடே நடந்து, நகரத்தின் வாயில்களின் வழியாகச் சென்று, கெதரோன்

பள்ளத்தாக்கைக் கடந்து,[7] ஒலிவ மலையின் சரிவுகளை நோக்கிச் செல்லத் தொடங்கினார் (யோவா. 18:1; லூக். 22:39). அங்கே அவர்கள் "கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு"[8] வந்தார்கள் (மத். 26:36; மாற். 14:32ஐக் காணவும்), இது "இயேசு தம்முடைய சீஷருடனே கூட அடிக்கடி" போயிருந்த "தோட்டமாக" இருந்தது (யோவா. 18:1, 2; லூக் 21:37ஐக் காணவும்). கெத்செமனே இருந்த இடம் என்று பாரம்பரியமாக வழங்கப் படும் இடமானது பொன்வாயிலுக்கு நேர் கிழக்கு திசையில் அரை மைலுக் கும் குறைவான தூரத்தில் உள்ளது - இது மதில்களால் சூழப்பட்டிருந்த, எழுபது சதுர கெஜங்கள் பரப்பளவுடைய தோட்டமாயிருந்தது, இதில் கரணைகள் கொண்ட ஒலிவ மரங்கள் எழுபத்து ஐந்து அல்லது அதற்குச் சற்றேக் குறைவான எண்ணிக்கையில் இருந்தன.[9] "கெத்செமனே" என்பது (எபிரெயு அல்லது அரமாயிக் மொழியிலிருந்து தழுவப்பட்ட) கிரேக்க மொழி வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, இது "எண்ணெய் பிழியும் இடம்" என்று அர்த்தப்படுகிறது. இது ஒலிவ மலைக்கு அந்தப் பெயரைக் கொடுத்த ஒலிவ மரங்களின் விளைவைப் பயன்படுத்திய எண்ணெய் பிழியும் இடமாக இருந்தது (அல்லது இருந்திருந்தது) என்பது உறுதி.

கிறிஸ்து தமது சீஷர்களில் எட்டுப்பேரை (மத். 26:36ஐக் காணவும்), "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள்" என்று புத்திகூறி (லூக். 22:40) விட்டுச் சென்றார். பின்பு அவர் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை அழைத்துக்கொண்டு (மத். 26:37அ; மாற். 14:33அ), நிழல்களினூடே முன் சென்றார்.[10] எதிர் வந்துகொண்டிருந்த உடல் ரீதியான மற்றும் ஆவிக்குரிய பெருந்துக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டு, அவர் "திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" (மாற். 14:33ஆ). அவர் தமது மூன்று நண்பர்களிடத்தில், "என் ஆத்துமா ... துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்" என்று கூறினார் (மத். 26:38).

அவர் தோட்டத்திற்குள் இன்னும் சற்றுத் தூரம் சென்று, பின்பு "முகங்குப்புற விழுந்து,[11] என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று கூறி ஜெபித்தார் (மத். 26:39அ; மாற். 14:35, 36; லூக். 22:42). "இந்தப் பாத்திரம்" என்ற சொற்றொடரானது அவரது மரணம் மற்றும் அத்துடன் சுமத்தப்படும் யாவற்றையும் குறித்தது. பின்பு அவர், "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்றும் கூடுதலாகக் கூறினார் (மத். 26:39ஆ).

அவர் பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானிடம் திரும்பி வந்து, அவர்கள் தூங்கக் கண்டார் (மத். 26:40). அவர், "ஒருமணி நேரம் நீ[ங்கள்] விழித்திருக்கக் கூடாதா?" (மாற். 14:37ஆ) என்று கேட்கையில் அவரது குரலானது ஏமாற்றத்தினால் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கிறிஸ்து, தோட்டத்தின் மையப்பகுதிக்குத் திரும்பிச் சென்று ஜெபிக்கத் தொடங்கினார்: "என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபம்பண்ணினார் (மத். 26:42). அவர்

எழுந்து மூன்று சீஷர்களிடத்தில் திரும்பவும் சென்றார் - மீண்டும் அவர்கள் தூங்கக் கண்டார் (மத். 26:43). அவர்கள் விழித்திருக்கக் கூடாதா என்று கேட்டபோது,[12] அவர்கள் "தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள்" (மாற். 14:40ஆ). விழித்திருப்பதற்குத் தங்களிடத்தில் திறனற்று இருந்ததினால் அவர்கள் சங்கடப்பட்டிருக்க வேண்டியிருந்தது மற்றும் எவ்வாறு மன்னிப்புக் கேட்பது என்பதை அவர்கள் அறியாது இருந்தனர். மாற்கு, "அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்கம் அடைந்திருந்தபடியால்" என்று குறிப்பிட்டார் (மாற். 14:40அ), அதே வேளையில் லூக்கா, "அவர்கள் துக்கத்தினாலே[13] நித்திரை பண்ணி[னார்கள்]" என்று விளக்கப்படுத்தினார் (லூக். 22:45).

இந்தக் காட்சியை நீங்கள் உங்கள் மனதில் சித்தரிக்கும்போது, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோர், கிறிஸ்து அவர்களை விட்டுச் சென்ற உடனே தூங்குவதற்குக் கீழே படுத்துவிட்டதாக நினைக்க வேண்டாம். மாறாக, அவர்கள் தூக்கத்துடன் போராடி ஆனால் அந்தப் போரில் தோற்றுப்போனவர்களாகக் காணுங்கள், கடைசியில் அவர்கள் தரையில் பலமாய் விழுந்துபோகும் வரையிலும், அவர்களின் கண்ணிமைகள் கனத்துக் கொண்டிருந்தன. ஆம், அவர்கள் விழித்திருந்திருக்க வேண்டும், ஆனால் அவர்கள் உடல்ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் சக்தி தீர்ந்து போயிருந்தனர் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

மூன்றாவது முறையாக அவர்களை விட்டுச் சென்ற இயேசு ஜெபத்தில் வீழ்ந்தார்: "அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்; அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக். 22:44). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "அவர் ... பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து" என்று கூறினார் (எபி. 5:7அ). அவரது ஜெபங்களுக்குப் பதிலாக, "வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (லூக். 22:43).[14]

மூன்றாம் முறையாகக் கிறிஸ்து தமது சீஷர்களிடத்தில் திரும்பியபோது, அவரது உள்ளான குழப்பம் ஒழிந்துபோயிருந்தது. அவர் தமது சீஷர்களிடத்தில், "இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்;[15] இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது.[16] என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ, வந்துவிட்டான் ..." என்றார் (மத். 26:45, 46).

## கொடூரமான கைது செய்யும் நிகழ்ச்சி (மத். 26:47-56; மாற். 14:43-52; லூக். 22:47-53; யோவா. 18:2-11)

கிறிஸ்து இதைப் பேசிக்கொண்டிருக்கையிலேயே, ஒரு ஜனக்கூட்டமானது - ஒருவேளை நூற்றுக்கணக்கான மனிதர்களைக் கொண்ட கூட்டமானது - தோட்டத்தில் குவிந்தது (மத். 26:47அ; மாற். 14:43அ; லூக்.

22:47அ). இந்தக் கொலைகாரக் கும்பலானது யூதாஸினால் வழிநடத்தப் பட்டது.[17]

மற்ற சீஷர்கள் உறங்கிக் கொண்டு இருந்திருக்கலாம், ஆனால் யூதாஸ் உறங்காதிருந்தான். அவன் சனதெரீன் சங்கத்தாருடன் செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக, அவர்களை எஜமானரிடத்தில் வழிநடத்த வேண்டியிருந்தது (அப். 1:16ஆ-வைக் காணவும்). ஒருவேளை அவன் முதலில் மேல்வீட்டில் ஆய்வு செய்திருக் கலாம். கடைசியில் அவன், கிறிஸ்துவின் விரோதிகளை, அவனுடனும் மற்ற அப்போஸ்தலர்களுடனும் இயேசு அடிக்கடி போயிருந்த இடமான ஒலிவ மலையின் அடிவாரத்திற்கு வழிநடத்திச் சென்றான் (யோவா. 18:2).

யூதாஸ் "பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பர்களும் - அதாவது சனதெரீன் சங்கத்தார்[18] அனுப்பிய திரளான ஜனங்களுடன்" இருந்தான் (மத். 26:47; மாற். 14:43). இந்தக் கும்பலில், "தேவாலயத்துச் சேனைத் தலைவர்களும்" "பிரதான ஆசாரியர்களால் அனுப்பப்பட்ட" ஊழியக் காரரும் இருந்தனர் (லூக். 22:52; யோவா. 18:3). இவர்கள் தேவாலயத்தில் யூதப் பாதுகாப்புப் படையின் தலைவர்களாய் இருந்தனர்[19] இந்தப் படையானது ஆலோசனைச் சங்கத்தாரால் பராமரிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவில் ரோமப் போர் வீரர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தது தான் ஒருவேளை மிகவும் வியப்புக்கு உரியதாக இருந்திருக்கும். சனதெரீன் சங்கத்தார், [இயேசுவை] கைது செய்வதில் தங்களுக்கு உதவும்படி ரோமர்களை அழைத்திருந்தனர் என்பது உறுதி.[20] யோவான் சுவிசேஷத்தின் படி, கிறிஸ்துவைப் பிடிக்க வழிநடத்தியவர்களில் "போர்ச் சேவகரும் ஆயிரம் போர்ச் சேவகருக்குத் தலைவனும்" (யோவா. 18:12; வ. 3ஐக் காணவும்) இருந்தனர். ரோமச் சேனையொன்று சாதாரணமாக அறுநூறு போர்வீரர்களைக் கொண்டிருக்கும்.[21] இவ்வளவு பேர்கள் கிறிஸ்துவைப் பிடிக்க வந்திருப்பார்கள் என்று கூற வாய்ப்பில்லை; ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் உள்ள "திரளான ஜனங்கள்" (மத். 26:47) தோட்டத்திற்கு வந்தனர் என்ற கூற்றின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, அநேகமாக பலநூறு படையணிவீரர்கள் அங்கு இருந்திருக்கலாம். இவர்களும் மற்றும் கூட்டத்தில் இருந்த மற்றவர்களும் "பட்டயங்கள் மற்றும் தடிகள்" போன்ற "ஆயுதங்களை" எடுத்துக்கொண்டு வந்திருந்தனர் (யோவா. 18:3; மத். 26:47, 55; மாற். 14:43, 48; லூக். 22:52).[22]

ஒரு மனிதரைக் கைது செய்வதற்கு இவ்வளவு பேர் ஏன் அனுப்பப் பட்டனர்? ஒருவேளை அவர்களுக்கு, அவர் "கைது செய்யப்பட முடியாத மனிதர்" என்று கூறப்பட்டு இருந்திருக்கலாம் (யோவா. 7:30, 44; 10:39). அற்புதங்களைச் செய்பவர் என்ற வகையில் அவரது நற்பெயரைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர் என்பதில் ஐயமில்லை; அவர் ஒரு வார்த்தையைக் கொண்டு அத்திமரத்தைப் பட்டுப்போகச் செய்ய முடிந்திருந்தது என்று கூட அவர்கள் கேள்விப்பட்டு இருந்திருக்கலாம் (மத். 21:19ஐக் காணவும்). காரணம் எதுவாக இருந்தாலும், அது பொருத்த மில்லாத ஒரு காட்சியாக இருந்தது: ஆயுதம் தரித்திருந்த நூற்றுக்கணக்கான மனிதர்கள், பிறரை ஒருக்காலும் துன்புறுத்தியிராத, மறுகன்னத்தைத்

திருப்பிக் காட்டுமாறு தமது சீஷர்களுக்குப் போதித்திருந்த ஒருவரைப் பிடித்துச் செல்ல வந்திருந்தனர் (மத். 5:39).

யூதாஸ் இயேசுவை அடையாளப்படுத்தக் கூடுவதற்கு ஒரு சைகையை முன்னேற்பாடு செய்து வைத்திருந்தான்: அவன், ஒரு சீஷன் தனது குருவை வாழ்த்துவதுபோல் எஜமானரின் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்துவான் (மத். 26:48; மாற். 14:44). அப்படிப்பட்ட பாசாங்கு எதையும் கிறிஸ்து நீக்கிப் போட்டார். அவர், "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார் (யோவா. 18:4). அவர்கள், "நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம்" என்று கூறிய போது, அவர் தைரியமாக, "நான்தான்" என்று பதில் அளித்தார் (யோவா. 18:5).

அவர் அதைக் கூறியபோது, அவரைப் பிடிக்கவிருந்தவர்கள் "பின்னிட்டுத் தரையில் விழுந்தார்கள்" (யோவா. 18:6). அவர்கள் சுருண்டு விழுந்தது என்பது கர்த்தருடைய தெய்வீக வல்லமையின் செயல்விளக்கமாக இருக்கலாம். பெரும்பாலும், இது அவரது தெய்வீக பிரசன்னத்தின் திகைக்க வைக்கும் மறுசெயலாக இருந்தது.[23] G. ஹால் டோட் அவர்கள், "அவர்கள் மலைத்தவர்களாக, வெட்கமடைந்தவர்களாக, மற்றும் அவருக்கு முன்பாகப் பாதுகாப்பற்றவர்களாக உணர்ந்தனர். அவரது பரிசுத்தத்தின் வெண்மையான ஒளியானது அவர்களுடைய ஆத்துமாக்களுக்குள் ஒரு குற்ற உணர்வைக் கொண்டு வந்தது ... அவர்கள் அவரைப் பிடிக்கலாம் என்று எதிர்பார்த்திருந்தனர், ஆனால் அவர்தாம் அவர்களைப் பிடித்திருந்தார்."[24]

உடன்பாடற்ற அந்தக் கும்பலை அதன் நோக்கப் பணிக்குக் கிறிஸ்து மறுபடியும் அழைக்க வேண்டியிருந்தது. மீண்டும் அவர், "யாரைத் தேடுகிறீர்கள்?" என்றார். அவர்கள் "நசரேயனாகிய இயேசுவை" என்று திரும்பவும் பதில் கூறினார்கள் (யோவா. 18:7). இயேசு, "நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே" என்று கூறினார் (யோவா. 18:8அ). பின்பு அவர் பதினொருவரையும் சுட்டிக்காண்பித்து, "என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப் போகவிடுங்கள்" என்றார் (யோவா. 18:8ஆ). அவர் தமது சுயபாதுகாப்பு பற்றி அக்கறையில்லாமல் இருந்திருக்கலாம், ஆனால் அவர் தமது சீஷர்களின் நலன் பற்றி அக்கறையாய் இருந்தார்.

கர்த்தர் தம்மை இருமுறை அடையாளப்படுத்தி இருந்ததால், யூதாஸ் முன்னேற்பாடு செய்திருந்த சைகையானது கொஞ்ச நோக்கமே கொண்டிருந்தது - ஆனால் அந்த முன்னாள் சீஷன் தனது பணத்தை சம்பாதிக்கத் தீர்மானமாயிருந்தான். அவன் "இயேசுவிடத்தில் வந்து: 'ரபீ, வாழ்க' என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்" (மத். 26:49). அவர் அதற்கு, "சிநேகிதனே,[25] என்னத்திற்காக வந்திருக்கிறாய்?" என்றார் (மத். 26:50அ).

யூதாஸ் இனம்புரியாத அச்சவுணர்வுடன் இயேசுவை அணுகியதைக் கூட்டத்தார் கவனித்திருக்கலாம்: அற்புதங்களைச் செய்பவர் என்ன செய்வார்? இருப்பினும், அழிவுக்குரிய விஷயம் எதுவும் யூதாசுக்கு நடந்திராததைக் கண்டபோது, அவர்களின் தைரியம் திரும்ப வந்தது. அவர்கள் முன்னோக்கி அடியெடுத்து வைத்து, "இயேசுவின்மேல்

கைபோட்டு" (மத். 26:50ஆ), "அவரைக் கட்டி[னார்கள்]" (யோவா. 18:12).[26] அந்தக்கணம் தொடங்கி, இயேசுவின் மரணம் வரையிலும், அவரது கரங்கள் அரிதாகவே விடுவிக்கப்பட்டவையாக இருந்திருக்கும்: அவரது கரங்கள் பொதுவாகக் கயிறுகளினாலோ அல்லது ஆணிகளினாலோ கட்டுப்படுத்தப் பட்டிருக்கும் (மாற். 15:1; யோவா. 18:12; 20:25).

இயேசுவின் சீஷர்கள், அவருடன் மரிப்பதற்குத் தங்கள் மன விருப்பத்தை உறுதிப்படுத்தியிருந்தனர் (மாற். 14:31). இப்போது, அவர்கள் தங்களின் அவ்வாக்குறுதியை நன்கு காத்துக்கொள்ளத் தயாராக இருந்தனர் (லூக். 22:49). பேதுரு தமது பட்டயத்தை உருவி,[27] "பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை[28] வலதுகாதற வெட்டினான்" (யோவா. 18:10). இந்த அப்போஸ்தலர் அநேகமாக அந்த வேலைக்காரனின் தலையைத் துண்டிக்கும் நோக்கங் கொண்டிருந்திருப்பார் - ஆனால் அந்த மனிதன் நழுவிக் கொண்டான். யாரோ ஒருவர், "பேதுரு ஒரு பட்டயம் வீசுபவராக இருப்பதை விட ஒரு மீனவராக இருத்தலில் திறமையுடன் விளங்கினார்" என்று கூறினார்.

இயேசு விரைவாகச் செயல்பட வேண்டியிருந்தது, இல்லையென்றால் ஒரு கலகம் வரக்கூடும். தோட்டத்து மண்ணானது பேதுரு மற்றும் பிற சீஷர்களின் இரத்தத்தினால் நனைக்கப்பட்டிருக்கும். பேதுருவினிடத்தில் கர்த்தர், "இம்மட்டில் நிறுத்துங்கள்!"; "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" என்று உரத்துக் கூறினார் (லூக். 22:51அ; மத். 26:52). ஆவிக்குரிய யுத்தங்கள், சரீரப்பிரகாரமான ஆயுதங்களுடன் நடத்தப்படுவதில்லை (2 கொரி. 10:3, 4; யோவா. 18:36ஐக் காணவும்). பேதுருவின் நோக்கங்கள் நல்லவைகளாய் இருந்தன, ஆனால் "அவர் தவறான ஆயுதத்தை, தவறான வேளையில், தவறான நோக்கத்திற்காக, தவறான உள்நோக்கத்துடன் பயன்படுத்தினார்."[29]

தற்காப்பு தேவையென்றால், பட்டயவீரராக இருக்கவிருந்த மனிதரை விடப் பலம் நிறைந்த அதிக ஆதாரமூலங்களை இயேசு கொண்டிருக்க முடியும். அவர் பேதுருவினிடத்தில், "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?" என்று கேட்டார் (மத். 26:53). முழுபலம் வாய்ந்த ஒரு லேகியோன் என்பது ஆறாயிரம் போர்வீரர்களைக் கொண்டிருந்தது. அவரைக் கைது செய்ய வந்த சில நூறுபேர்களுடன் தற்காப்புப் போரில் ஈடுபடுவதற்கு, எழுபத்து இரண்டாயிரம் தூதர்கள் என்பவர்கள் தேவைக்கு மிகவும் அதிகமானவர்களாகவே இருப்பார்கள்![30]

கிறிஸ்துவும் பதினொரு சீஷர்களும் சேர்ந்து மொத்தம் பன்னிருவராக இருந்தபடியால், அவர் "பன்னிரண்டு" என்ற எண்ணிக்கையைப் பயன் படுத்தினார் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது: அதாவது அவர்களில் ஒவ்வொருவரையும் பாதுகாக்க ஒரு லேகியோன் தூதர்கள். அநேகமாக இந்த எண்ணிக்கையானது மூழ்கடிக்கச் செய்யும் படையைச் சித்தரித்தலை மட்டும் நோக்கங்கொண்டிருக்கலாம். இதற்கு முன்பு கர்த்தர் ஏற்படுத்தி

யிருந்த ஒரு கருத்தையே அவர் இவ்விடத்திலும் ஏற்படுத்தினார்: எந்த ஒரு மனிதனும் அல்லது மனிதர்களின் குழுவும் தமது ஜீவனைத் தம்மிடத்திலிருந்து எடுப்பதற்கு வல்லமையோ அல்லது ஆதாரமூலமோ பெற்றிருப்பதில்லை; மாறாக அவர் தமது சுயாதீனமான சித்தத்தின்படியாகவே அதை ஒப்புக்கொடுப்பார் (யோவா. 10:17, 18; கலா. 2:20ஐக் காணவும்).[31]

பேதுருவைக் கடிந்து கொண்ட பின்பு, இயேசு கட்டப்பட்டிருந்த தமது கரங்களினால்,[32] காயமடைந்திருந்த வேலைக்காரனின் காதைத் தொட்டு "அவனைச் சொஸ்தப்படுத்தினார்"[33] (லூக். 22:51ஆ). அவரது நடவடிக்கையானது சாத்தியக்கூறுள்ள வகையில் கலகம் வெடிக்கும் சூழ்நிலையை அமர்த்திப்போட்டது. அது கர்த்தர் தமது மரணத்திற்கு முன்பு நிகழ்த்திய கடைசி அற்புதமாக இருந்தது.

கிறிஸ்து, தம்மைப் பிடித்தவர்களிடம் திரும்பி, "ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப்பட்டு வருகிறதுபோல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்தீர்களே. நான் தினந்தோறும் தேவாலயத்தில் உங்களுடனே கூட இருக்கையில் நீங்கள் என்னைப் பிடிக்கக் கை நீட்டவில்லை; இதுவோ உங்களுடைய வேளையும் அந்தகாரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது" என்றார் (லூக். 22:52, 53). இந்தக் கூற்றில் உள்ள கடைசி வார்த்தைகள், "இது வெற்றிக்கான உங்கள் தருணமாக உள்ளது, இது அந்தகாரத்தின் வல்லமை வெற்றி பெற்றது போலத் தோன்றுகிற வேளையாக உள்ளது" என்று அர்த்தப்படுகின்றன.[34] NIV வேதாகமத்தில், "இது அந்தகாரம் ஆளுகைசெய்கிற - உங்கள் வேளையாக இருக்கிறது" என்றுள்ளது.

இந்த வேளையில், இயேசுவின் சீஷர்களுக்கு, உடல்ரீதியான யுத்தம் எதுவுமிராது என்ற உண்மை தெளிவாகி இருந்திருக்க வேண்டும். அவர்கள் தடைப்பட்டவர்களாக, சலிப்புற்றவர்களாக மற்றும் திகைப்புற்றவர்களாகக் கிறிஸ்துவைவிட்டு, அவர் முன்னுரைத்திருந்தபடியே ஓடிப்போனார்கள் (மத். 26:56; வ. 31ஐக் காணவும்). கைது செய்த குழுவினரைப் பிற்பாடு பேதுருவும் யோவானும் "தூரத்திலே" பின்பற்றினார்கள் (மத். 26:58; மாற். 14:54; லூக். 22:54; யோவா. 18:15ஐக் காணவும்); ஆனால் நடைமுறை நோக்கங்கள் யாவற்றிலும், கிறிஸ்து தனிமையாயிருந்தார். (ஆயினும் உண்மையில் அவர் தனிமையிலிருக்கவில்லை, ஏனெனில் பிதாவானவர் அவரோடிருந்தார் [யோவா. 16:32].)

மாற்கு சுவிசேஷ விவரமானது ஒரு இளைஞனைப் பற்றிய வினோதமான ஒரு குறிப்பைக் கூடுதலாக எடுத்துரைக்கிறது, அம்மனிதன் ஒரு துப்பட்டியை மாத்திரம் போர்த்துக்கொண்டிருந்தான், அவனை அவர்கள் பிடிக்கச் சென்றபோது, அவன் தன் துப்பட்டியைப் போட்டுவிட்டு, நிர்வாணமாய் அவர்களை விட்டு ஓடிப்போனான் (மாற். 14:51, 52). இந்த இளைஞன் [சுவிசேஷத்தை எழுதிய] மாற்குவேதான் என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் யூகிக்கின்றனர்.[35] ஒருவேளை இது, மாற்கு சுவிசேஷ விவரத்தின் உண்மைத் தன்மைக்குச் சாட்சியம் அளிப்பதற்கான அவருடைய வழியாக இருந்திருக்கலாம்; அவர், "நான் அங்கு இருந்தேன், மற்றும் நான் அதை அறிந்துள்ளேன்" என்று மறைமுகமாய் உணர்த்துவதை நோக்கங்

கொண்டிருக்கலாம். ஒருவேளை, உண்மையில் "சீஷர்களை மிகக் கடுமை யாக நியாயந்தீர்க்காதீர்கள். நீங்கள் அங்கிருந்திருந்தால் நீங்களும் ஓடிப் போயிருப்பீர்கள். எனக்குத் தெரியும், ஏனென்றால் நான் அவ்வாறு செய்தேன்" என்று கூறுதல் மாற்குவின் நோக்கமாக இருந்திருக்கலாம்.

## வீணான பொய்க்குற்றம் சாட்டுதல் (மத். 26:57, 59-68; மாற். 14:53, 55-65; லூக். 22:54அ, 63-65; யோவா. 18:12-14, 19-24)

தோட்டத்தில் கிறிஸ்து கைது செய்யப்பட்டபோது, அநேகமாக அது நள்ளிரவு அல்லது அதற்கு மேற்பட்ட வேளையாக இருந்திருக்கும்.[36] அவர் கட்டப்பட்டவராக, எருசலேமின் இருளும் குறுகலுமான தெருக்கள் வழியே கூட்டிச் செல்லப்பட்டார். அவர்கள் "முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்" (யோவா. 18:13அ).[37]

இயேசு யூதர்கள் முன்னிலையிலும் பின்பு ரோமர்கள் முன்னிலையிலும் விசாரிக்கப்பட்டார். ஒவ்வொரு "விசாரணையும்" மூன்று படிநிலைகளில் அமைந்திருந்தது. இவ்விரண்டுமே நியாயத்தைக் கேலிக் கூத்தாக்கியபடி யால் நான் ''விசாரணை'' என்ற வார்த்தையை மேற்கோள் குறிக்குள் இட்டுள்ளேன். யூத ''விசாரணையில்,'' குற்றம் அல்லது குற்றமற்ற தன்மையைத் தீர்மானிக்க முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. யூதர்களின் தலைவர்கள் ஏற்கனவே இயேசுவே மரணத்திற்குத் தீர்ப்பிட்டிருந்தனர் (யோவா. 11:47-53; மத். 26:4; மாற். 14:1ஐக் காணவும்); நீதி என்பதல்ல ஆனால் நியாயப்படுத்திக் கொள்ளுதல் - தாங்கள் ஏற்கனவே ஒத்துக்கொண்டிருந்த முடிவை நியாயப்படுத்திக் கொள்ளுதல் - என்பதே இயேசுவை அவர்கள் "விசாரித்ததின்" நோக்கமாக இருந்தது (மத். 26:59; மாற். 14:55ஐக் காணவும்).

அன்னாவினால் விசாரிக்கப்படுதல் என்பதே யூத "விசாரணை"யின் முதல் படிநிலையாக இருந்தது.[38] அன்னா "பிரதான ஆசாரியனாகிய காய்பா வுக்கு மாமனாயிருந்தான்" (யோவா. 18:13ஆ). அன்னா, "ரோம ஆளுநரான வலேரியுஸ் கிரேட்டஸ் என்பவரால் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு முன்பு, கி.பி. 6-15வரை, அவரே பிரதான ஆசாரியராக இருந்தார்.''[39] நியாயப்பிரமாணத்தின்படியாக, பிரதான ஆசாரியரின் பதவி என்பது அவரது வாழ்நாள் முழுவதிலும் இருந்தது என்பதால், அன்னாதான் உரிமை நிறைந்த பிரதான ஆசாரியர் என்று அந்த வேளையிலும் பலரால் கருதப்பட்டார்.[40] நமது ஆய்வுக்குக் கீழுள்ள வேத வசனப் பகுதிகளில், அன்னா மற்றும் காய்பா ஆகிய இருவருமே "பிரதான ஆசாரியர்" என்று குறிப்பிடப்படுகின்றனர் (யோவா. 18:13, 19, 22, 24; அப். 4:6ஐக் காணவும்).[41] லூக்கா, "அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியராயும் இருந்தகாலத்தில்" என்று எழுதியிருந்தார் (லூக். 3:2).

கிறிஸ்து முதலில் அன்னாவினிடம் அழைத்துச் செல்லப்பட்டது ஏன் என்று நாம் நிச்சயமாக அறிவதில்லை. முன்னாள் பிரதான ஆசாரியருக்கு

மரியாதை செலுத்துவதற்காக அவர் [இயேசு] அவரிடத்தில் [அன்னாவினிடத்தில்] அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம். அந்த முதிய மனிதர் இயேசுவைக் காண்பதற்குத் தாம் கொண்டிருந்த ஆர்வத்தை (ஏரோது வெளிப்படுத்தியிருந்தது போல், லூக். 23:8) வெளிப்படுத்தியிருக்கலாம். சூழ்ச்சித் திறன் கொண்ட அந்த அரசியல்வாதி, இயேசுவுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை வடிவமைக்க உதவக்கூடும் என்று இயேசுவின் விரோதிகள் நினைத்திருக்கலாம். ஒருவேளை இது சனதெரீன் சங்கத்தார் ஒன்றுகூடி வந்துகொண்டிருக்கையில், நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிடும் செயலாகவும் கருதப்பட்டிருக்கலாம்.[42]

அன்னா, இயேசுவினிடத்தில் "அவருடைய சீஷரைக் குறித்தும் போதகத்தைக் குறித்தும்" (யோவா. 18:19) தெளிவற்ற கேள்விகளுடன் விசாரணையைத் தொடங்கினார். கிறிஸ்து, "நான் வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன், ஜெப ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் ..." (யோவா. 18:20) என்று பதில் அளித்தார்.[43] இயேசு, "நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே" (யோவா. 18:21) என்று கூறிய போது, அவர் அங்கிருந்த சிலரைச் சுட்டிக்காண்பித்திருக்கலாம்.

இந்த வேளையில், "சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: 'பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது' என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்" (யோவா. 18:22). இது அந்த நாளிலே கிறிஸ்து சகித்திருக்க வேண்டிய உடல்ரீதியான துன்புறுத்துதலின் தொடக்கமாக மாத்திரமே இருந்தது. இயேசு, "நான் தகாத விதமாய்ப் பேதினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய்?" என்று பதில் அளித்தார் (யோவா. 18:23). கர்த்தர் கரத்தினால் தற்பாதுகாத்தலைத் தடைசெய்தார் ஆனால் நாவினால் தற்பாதுகாத்தலைத் தடை செய்யாதிருந்தார் என்று மார்ட்டின் லூத்தர் சுட்டிக்காண்பித்தார்.[44]

அடுத்ததாக, யூதர்களின் "விசாரணையின்" இரண்டாம் படிநிலைக்காக, "அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்டவராக அனுப்பினான்" (யோவா. 18:24).[45] காய்பாவின் வீடு, அன்னாவின் வீட்டருகே இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.[46] யோவான், காய்பாவை "ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே" என்று அடையாளப்படுத்தினார் (யோவா. 18:14; 11:49-52ஐக் காணவும்).

"பிரதான ஆசாரியனும்; பிரதான ஆசாரியரும் மூப்பர் வேதபாரகர் எல்லாரும்" - ஆதாவது, "ஆலோசனைச் சங்கம் முழுமையும்" - "கூடி வந்திருந்தார்கள்" (மாற். 14:53, 55), இவர்கள் காய்பாவின் அரண்மனையில் இருந்த (லூக். 22:54) ஒரு மேல்வீட்டில் கூடிவந்தார்கள் (மாற். 14:66ஐக் காணவும்). ஆலோசனை சங்கத்தினர், இயேசுவுக்கு மரணதண்டனை கொடுப்பதற்குச் சில அடிப்படைக் காரணங்களைக் கண்டறியும் நோக்கத்துடன், "ஒரு இரவு வேளைக் கூட்டத்திற்காக, குறைந்தபட்சம்,

சனதெரீன் சங்கத்தின் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான நபர்கள் ஒன்றுகூட்டப் பட்டனர்.'"[47]

கிறிஸ்துவின் விரோதிகள், "அவரிடத்தில் ஒரு தனிப்பட்ட தவறைக் கண்டறிவதற்காக, தங்களின் சொந்தமான தப்பெண்ணம் என்ற நுண்ணோக்கியுடன், அவரது 3 1/2 ஆண்டுகள் அளவான வாழ்வை ஆய்வு செய்திருந்தனர்" மற்றும் அவர்கள் "அவரிடத்தில் தவறெதுவும் கண்டதே யில்லை என்பதே முற்றான உண்மையாக இருந்தது."[48] இப்போது அவர்கள், "இயேசுவைக் கொலைசெய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி தேடினார்கள்; ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச் சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை" (மத். 26:59, 60அ; யாத். 20:16ஐக் காணவும்). அவர்கள் கருத்தொருமையான கதைகள் கூறும் சாட்சிகளாகக் குறைந்தது இரண்டு பேரைக் கண்டறிய வேண்டும் என்பதே பிரச்சனையாக இருந்தது (உபா. 17:6; 19:15), ஆனால் பொய்ச்சாட்சிகளும் கூட "ஒவ்வவில்லை" (மாற். 14:56).

கடைசியில், இரண்டு பொய்ச் சாட்சிகள் "வந்து, " 'தேவனுடைய ஆலயத்தை இடித்துப் போடவும், மூன்று நாளைக்குள்ளே அதைக் கட்டவும் என்னாலே ஆகும்' என்று இவன் சொன்னான்" என்றார்கள் (மத். 26:60ஆ, 61). ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னதாக, அடையாளம் வேண்டும் என்ற யூதர்களின் வேண்டுகோளுக்குப் பதிலுரையாகக் கிறிஸ்து, ''இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்'' என்று கூறியிருந்தார், அவர் ''தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்து'' அவ்வாறு கூறியிருந்தார் (யோவா. 2:19, 21). இருப்பினும் அவர், தாமே தேவாலயத்தை இடித்துப் போடுவதாகக் கூறியிருந்ததில்லை. இவ்விரு மனிதர்களும் பொய்யுரைத்தனர் - ஆனால் அவர்களின் பொய்ச்சாட்சியும்கூட ஒவ்வாமற்போயிற்று (மாற். 14:59).[49]

காய்பா மிகவும் சங்கடம் அடைந்திருக்க வேண்டும். அவர் சலிப்புற்ற வராக இயேசுவினிடத்தில் திரும்பி, "இவர்கள் உனக்கு விரோதமாகச் சாட்சி சொல்லுகிறதைக்குறித்து நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா?'' என்று கேட்டார் (மத். 26:62). கிறிஸ்து பதிலுரைக்கவில்லை, ஆனால் மேன்மை யான ஒரு அமைதி காத்தவராக நின்றார் (மத். 26:63அ; ஏசா. 53:7; அப். 8:32, 35; 1 பேது. 2:23ஐக் காணவும்).

பிரதான ஆசாரியர் மிகவும் சலிப்புற்ற நிலையில், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்'' என்றார் (மத். 26:63ஆ). "ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்பது ஒரு நபரை ஆணைக்குக் கீழாக வைப்பதற்கான யூதத்துவத் தராதரச் சூத்திரமாக இருந்தது.[50] NIVயில் "I charge you under oath" என்றுள்ளது.

இயேசு பதில் அளிப்பார் என்று காய்பா சிறிதளவே நம்பிக்கை கொண்டிருந்திருக்கலாம். அந்த சமூகத்தில், இன்று பல சமூகங்களில் உள்ளதுபோன்றே, குற்றம் சாட்டப்பட்டவர் தமக்கு எதிராகச் சாட்சி சொல்ல வற்புறுத்தப்படக் கூடாதிருந்தது. யூதத் தலைவருக்குக் கிறிஸ்து முன்பு பதில் அளித்திருக்கவில்லை; அவர் அமைதியாக இருப்பதற்கு உகந்த

நேரம் ஒன்றிருக்குமென்றால், அது இந்த நேரமாகவே இருந்தது. அவர் பேசுவதற்கு மறுத்தால், பிரதான ஆசாரியருக்கு விஷயம் ஒன்றுமிராது. மாபெரும் துன்பமான அந்த வேளையில், கர்த்தர் பேசினார். அவர் "நான் அவர்தான்" என்று பதில் அளித்தார் (மாற். 14:62அ).[51]

அவர், "அன்றியும், மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூடுதலாகக் கூறினார் (மத். 26:64ஆ; தானி. 7:13; சங். 110:1ஐக் காணவும்). அந்த வேளையில், இயேசு சிறுமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தார், ஆனால் சற்று குறுகிய காலத்தில் அவர் தமது பிதாவின் வலது பாரிசத்திற்கு திரும்பவும் சென்று சேருவார். பின்பு காய்பா அல்ல, அவரே [இயேசுவே] வல்லமையின் பதவியில் இருப்பார்!

பிரதான ஆசாரியர், இயேசுவின் பதிலுரையினால் பெருமிதம் கொண்டிருக்க வேண்டும், ஆனால் இவர் அதிர்ச்சியடைந்தவராகக் காட்சி யளித்தார். இவர் தமது உடைகளைக் கிழித்துக் கொண்டார் - இது ஆழ்ந்த பெருவருத்தத்தின் அடையாளச் செய்கையாக இருந்தது - மற்றும் "இவன் தேவதூஷணம் சொன்னான்; இனிச் சாட்சிகள் நமக்கு வேண்டியதென்ன?" என்று கூறினார் (மத். 26:65அ). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, தேவனுடைய நாமத்தைத் தூஷிப்பவர் மரணத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் (லேவி. 24:16). யூதத்துவப் பிரமாணத்தின்படி, இயேசு தேவதூஷணக் குற்றம் உடையவராய் இருக்கவில்லை,[52] ஆனால் காய்பா, சட்டப்பூர்வமான விளக்கங்களின்மீது ஆர்வங்கொண்டிருக்கவில்லை, இயேசு தாம், "தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக இருப்பதாக" ஒப்புக்கொண்டிருந்ததே போதுமானதாக இருந்தது, (இது அவர் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கின செயலாக இருந்தது; யோவா. 5:18ஐக் காணவும்) மற்றும் அவர் "மனுஷ குமாரன்" என்ற மேசியாத்துவச் சொற்றொடரைத் தமக்கே நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார். பிரதான ஆசாரியர், "இவன் தேவதூஷணம் சொன்னான்!" என்று சத்தமிட்டார்.

ஆலோசனைச் சங்கத்தாரிடம் காய்பா, "இதோ, இவன் தூஷணத்தை இப்போது கேட்டீர்களே. உங்களுக்கு என்னமாய்த் தோன்றுகிறது?" என்று கேட்டார் (மத். 26:65ஆ, 66அ). அதற்கு அவர்கள்: "மரணத்துக்குப் பாத்திரனாயிருக்கிறான்!" என்றார்கள் (மத். 26:66ஆ). இது சனதெரீன் சங்கத்தின் முறையான அறிவிப்பாக இருந்ததில்லை; அது சூரிய உதயத்திற்குச் சற்று பின் வரும் (லூக். 22:66-23:1ஐக் காணவும்). இருந்த போதிலும், அவர்கள் தாங்கள் விதித்த தண்டனையை நியாயப்படுத்த ஒரு வழியைக் கண்டதில் திருப்தியடைந்து இருந்தனர்.

ஆலோசனைச் சங்கத்தார், தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிய(தாக நினைத்திருந்த) நிலையில், அடைத்து வைக்கப்பட்டிருந்த தங்கள் வெறுப்பை விடுவித்தனர்: இயேசு கண்கள் கட்டப்பட்டார் (மாற். 14:65; லூக். 22:64ஐக் காணவும்). பின்பு சிலர், "அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: 'கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால்

எங்களுக்குச் சொல்லும்' என்றார்கள்" (மத். 26:67, 68).[53] "இயேசுவைப் பிடித்து வைத்திருந்த அதிகாரிகளும்" அவரை அறைந்து, அவரை அடித்து, அவரை ஏளனம் செய்தனர் (மாற். 14:65; லூக். 22:63, 64).[54] "மற்றும் அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்" (லூக். 22:65). இந்த விதமாக கிறிஸ்துவின் விரோதிகள் விடியற்காலம் வரைக்கும் காலத்தைப் போக்கினார்கள்.

## முடிவுரை

நீண்ட இரவு கடைசியில் முடிவை நெருங்கிற்று, ஆனால் ஒரு நீண்ட நாள் இன்னமும் முன்னதாக இருந்தது - அது இயேசுவின் மரணத்தை நிறைவேற்றி வைக்கும் நாளாக இருந்தது. பல கொடுமைகளும் அநீதிகளும் இன்னும் சகித்துக் கொள்ளப்பட வேண்டியிருந்தன. நமது அடுத்த பாடமானது, பேதுருவின் மறுதலித்தலில் தொடங்கி, கர்த்தர் இன்னும் "விசாரிக்கப்பட்ட" நிகழ்ச்சிகளின் வரலாற்றையும் எடுத்துரைக்கும்.

## குறிப்புகள்

''உறக்கமற்ற ஒரு இரவு'' என்பது இந்தப் பாடத்திற்கான ஒரு மாறுபட்ட தலைப்பாக இருக்கக் கூடும். இந்த வேத வசனப்பகுதிகளின் மற்ற அணுகுமுறைகளுக்கான கருத்துக்கள் பின்வருமாறு:

**இயேசுவைக் காட்டிக் கொடுத்தவன்**

இது யூதாஸின் குணம் பற்றிய ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்கக்கூடிய இன்னொரு இடமாக உள்ளது.

**தோட்டத்தில் இயேசுவின் பொழுதுகள்**

கெத்செமனே தோட்டம் பற்றிய ஒரு பிரசங்கம் - இதில் எடுத்துரைப்புப் பிரசங்கத்திற்கான குறிப்புகளும் உள்ளடங்குகிறது - இந்தப் பாடத்தைத் தொடர்ந்து தரப்பட்டுள்ளது. இயேசு தமது மரணத்தை நெருங்குகையில், தமது சீஷர்களின் துணைக்கு ஏங்கினார் என்ற கருத்தானது தனிமைத்துவம் மீதான ஒரு பிரசங்கத்திற்குத் தொடக்க இடமாகப் பயன்படக்கூடும். (''தனிமையை வெல்லுதல்'' என்பது சாத்தியமான ஒரு தலைப்பாக இருக்கிறது.)

**இயேசுவின் குணமாக்கும் கடைசி அற்புதம்**

மல்கூஸின் காது பற்றிய நிகழ்ச்சியானது, ஒருவர் முழுமையான சத்தியத்தை விரும்பினால், ஒரு பாடக் கருத்தின்மீது வேதாகமம் கூறுகின்ற எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ளுதலின் அவசியம் பற்றிய எடுத்துரைப்பிற்குத் தொடக்க இடமாகப் பயன்படுத்தப்படக்கூடும். (மல்கூஸின் காது பற்றிய பல்வேறு விவரங்கள் சுவிசேஷ விவரங்கள் சிலவற்றில் காணப்படுகின்றன, ஆனால் மற்ற புத்தகங்களில் காணப்படுவ

*தில்லை.) இந்தச் சிந்தனையானது, இரட்சிப்பின் நிபந்தனைகளைப் பற்றி வேதாகமம் கூறுகின்ற எல்லாவற்றையும் கருத்தில் எடுத்துக் கொள்ளுதல் குறித்த ஒரு பிரசங்கத்தை வழிநடத்தக்கூடும்.*

### ***இயேசுவின் விசாரணைகள்***

*இயேசுவை விசாரணை செய்த நிகழ்ச்சிகள் என்பது, நமது வேத வசனப் பகுதியானது தன்னையே ஒரு பிரசங்கத்துவ நடக்கைக்கு உட்படுத்தும் இன்னொரு தலைப்பாக உள்ளது.*

---

*குறிப்புகள்*

[1]*அத்தியாயங்கள் 15 முதல் 17 வரையுள்ள உருவகத்தின் சில பாகமானது, மேல்வீட்டிலிருந்து, கெத்செமனே தோட்டம் செல்லும் வழியில் இருந்த காட்சிகளால் ஏவப்பட்டது என்று சிலர் நம்புகின்றனர். (இந்தப் புத்தகத்தில் முன்புள்ள "கர்த்தருக்காக கனிகொடுத்தல்" என்ற பாடத்தில் காணவும்.) விஷயம் இவ்வாறு இருப்பினும் கூட, யோவான் 15-17ல் உள்ள எந்த வார்த்தைகளும் அவர்கள் நகருக்குள் இருந்தபோதே, அதாவது அவர்கள் கெதரோன் ஆற்றைக் கடப்பதற்கு முன்னதாகவே பேசப்பட்டன (யோவா. 18:1ஐக் காணவும்).* [2]*மாற்கு 14:26-32ன்படி, இயேசு சில வார்த்தைகளை, அவர்கள் மேல்வீட்டை விட்டுப் புறப்பட்ட நேரத்திற்கும், அவர்கள் கெத்செமனேயை அடைந்த நேரத்திற்கும் இடைப்பட்ட வேளையில் பேசியிருந்தார், ஆனால் அந்தச் சிறிய பயணத்தில் அவர் வேறு ஏதாவது வார்த்தைகளைப் பேசினாரா என்று நாம் அறிவதில்லை.* [3]*''பிரசங்கத்துவம்''* [homiletics] *என்பது பிரசங்கங்களைத் தயாரித்து எடுத்துரைத்தலைக் குறிக்கிறது.* [4]*"ஹல்லெல்" என்பது "துதி" என்பதற்கான எபிரெய வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.* [5]Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part 2,* The Living Word Commentary Series, ed. Everett Ferguson (Abilene, Tex.: ACU Press, 1976), 148. [6]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 685. [7]*கெதரோன் ஆறு எருசலேமின் கிழக்கு மதிலுக்கு இணையாக ஓடிற்று. இந்த புத்தகத்தில் உள்ள (இயேசுவின் கடைசி மணிவேளைகளின் பாதைகளாகக் கருத்துத் தெரிவிக்கப்படுபவை) எருசலேம் நகரின் வரைபடத்தைக் காணவும்.* [8]*கெத்செமனேயில் துக்கம் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, "தோட்டத்தில்" என்ற தலைப்பில், அடுத்து வரும் பிரசங்கத்தில் காணவும்.* [9]This sentence is adapted from H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 199. *தற்காலத்தில் வழிகாட்டிகள், அந்த ஒலிவ மரங்களின் கீழ்தான் இயேசு ஜெபித்தார் என்று உரிமைகோருகின்றனர், ஆனால் பழங்கால வரலாற்றாளர்களின் கூற்றுப்படி, ரோமாபுரியார் எருசலேமை முற்றுகையிட்டுப் பின்னர் அதை அழித்தபோது, அவர்களால் அந்த மரங்கள் யாவும் அழிக்கப்பட்டன. இருப்பினும், இன்றைய நாட்களில் அங்குள்ள மரங்கள் மிகவும் பழமையானவைகளாய் இருக்கின்றன என்பதும் உண்மையாகவே உள்ளது.* [10]*''அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் அப்புறம்போய் ..." (லூக். 22:41அ), கல்லெறி தூரம் என்பது எவ்வளவு தூரமாக உள்ளது? இது யார் கல்லை எறிகின்றார் என்பதைப் பொறுத்ததாக உள்ளது.* J. W. *மெக்கார்வீ அவர்கள், இந்த தூரத்தை 150 முதல் 200 அடிகள் வரையிலான தூரம் என்று மதிப்பிட்டார்* (McGarvey and Pendleton, 686).

[11]இயேசு ஒரு பெரிய பாறையினருகில் முழந்தாள்படியிட்டார் என்று ஒரு பழங்கால, ஏவுதல் பெற்றிராத பாரம்பரியம் கூறுகிறது. தோட்டத்தில் இயேசுவைப் பற்றி வரையப்பட்டவற்றில் நன்கு அறியப்பட்ட ஒரு சித்திரமானது கற்பனையான இந்தப் பாறையைச் சித்தரிக்கிறது. வேத வசனப் பகுதியின்படி, இயேசு தரையில் முகங்குப்புற விழுந்தார். [12]இயேசுவின் கேள்வி மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. [13]துக்கமானது மக்கள் சிலரின்மீது அந்த விளைவை ஏற்படுத்துகிறது. எல்லா வேளைகளிலும் தூங்க விரும்புதல் என்பது மனத்தளர்ச்சியின் பொதுவான நோய்க் குறியாக உள்ளது. [14]இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியம் ஆகியவற்றில் தூதர்கள் அடிக்கடி இணைவுகொண்டிருந்தனர். எடுத்துக்காட்டாக, அவரது பிறப்பின்போது, அவர்கள் பாடினர் (லூக். 2:13, 14) மற்றும் வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்பட்ட பின்பு அவர்கள் அவருக்கு ஊழியம் செய்தனர் (மத். 4:11). பிற்பாடு, அவர்கள் அவரது உயிர்த்தெழுதலை அறிவித்தனர் (மத். 28:2, 5, 6). [15]இந்த வாக்கியத்தின் முதல் பகுதியை "ஆகையால் நீங்கள் தூங்குங்கள்" என்றும் மொழிபெயர்க்க முடியும். இயேசு அவ்வாறு கூறினார் என்றால், அதன் அர்த்தமானது பின்வருமாறு இருக்கலாம்: "நீங்கள் உறங்கவும் உங்கள் ஓய்வை மேற்கொள்ளவும் இதுவரை நான் அக்கறை கொண்டு இருந்தேன், இப்போதோ எனக்கு ஆறுதல் மற்றும் உதவிக்கான வேளை முழுவதும் கடந்துபோயிற்று" (McGarvey and Pendleton, 688). [16]"வேளை" என்பது அவரது மரணத்திற்கான வேளையைக் குறிக்கிறது. இயேசு இந்த "வேளையை" நோக்கிப் படிப்படியாக அடியெடுத்து வைத்துச் சென்று கொண்டிருந்தார் (யோவா. 2:4; 7:30; 8:20; 12:23, 27; 13:1; 17:1ஐக் காணவும்). [17]கிறிஸ்து கைது செய்யப்படுதல் தொடர்பான நிகழ்ச்சிகளை ஒழுங்கு படுத்துவதற்குப் பல்வேறு முறைகள் உள்ளன. இந்தப் பாடத்தில் உள்ளது அவற்றில் ஒரு வழிமுறையாகும். [18]சனதெரீன் சங்கத்தின் பிரதிநிதிகளும் அங்கிருந்தனர் என்பது உறுதி (லூக். 22:52). யோவான், அந்தக் குழுவானது "பரிசேயர்களில்" இருந்து வந்திருந்தது என்று குறிப்பிட்டார் (யோவா. 18:3); சனதெரீன் சங்கத்தில் பரிசேயர்களின் சார்பாக ஒரு குழு இருந்தது (அப். 23:1, 6). [19]பழைய ஏற்பாட்டின்படி, இவ்வகையான கடமைகளை லேவியர்களே செய்ய வேண்டியிருந்தது; ஒருவேளை லேவியர்கள் இதில் இருந்திருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். [20]வலிவார்ந்த அழிவு நிகழ்ச்சிகள் எதையும் தணிப்பதற்காக ரோமச் சேவகர்கள் அடிப்படையாக எருசலேமில் இருந்தனர். பிரதான ஆசாரியர்கள் ரோமத் தளபதியையும் அவரது மனிதர்களையும் இந்த நிகழ்ச்சியில் ஈடுபடுமாறு இணங்க வைப்பதற்கு, அவரிடத்தில் இயேசுவைப் பற்றி ஒரு கதை சொல்லியிருக்க வேண்டும்.

[21][ஆங்கில வேதாகமத்தில்] யோவான் 18:12ல் "ரோமன்" என்ற வார்த்தை சாய்வெழுத்துக்களில் உள்ளது, இது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. இருப்பினும் யோவான், "cohort" என்பதற்கான கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தினார், இது ரோம இராணுவத்தினரால் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது. பத்து "cohort"கள் சேர்ந்து ஒரு லேகியோனுக்குச் சமமாயிருப்பார்கள், அல்லது இது ஆறாயிரம் படைவீரர்கள் கொண்ட தொகுதியாக இருக்கும். பண்டிகை நாட்களின்போது - கலகம் ஏதாவது எழும்பினால் அதை அமர்த்துவதற்காக - ரோமப்படை வீரர்களின் எண்ணிக்கை யானது படிப்படியாகக் கூட்டப்படும். இந்தப் படை வீரர்கள் தேவாலய வளாகத் தின் வடமேற்கு மூலையில் இருந்த அந்தோனியா கோட்டையில் முகாமிட்டு இருப்பார்கள். [22]பஸ்கா பண்டிகையானது முழு நிலா நாளில் நடைபெற்ற போதிலும்கூட, அவர்கள் பந்தங்களையும் [தீவட்டிகளையும்] (யோவா. 18:3) கூடக் கொண்டு வந்திருந்தனர். அவர்கள் ஒருவேளை, இயேசு தப்பி ஓட முயற்சி செய்வார்

என்றும், தோட்டத்தின் நிழல்களினூடே தாங்கள் அவரைத் தேட வேண்டியிருக்கும் என்றும் நினைத்திருக்கலாம். [23]அவரது தெய்வீகப் பிரசன்னமானது, தேவாலயத்திலிருந்து காசுக்காரர்களை விரட்ட இயேசுவுக்குப் பெலம் அருளியிருந்தது (மாற். 11:15; யோவா. 2:15). [24]G. Hall Todd, *The Gamblers at Golgotha* (Grand Rapids, Mich.: Baker Book House, 1958), 39. [25]"சிநேகிதனே" என்ற வார்த்தை முரண்பாடானதாக உள்ளது. இயேசு, யூதாஸ் தமக்குச் சிநேகிதனாயிருக்க வேண்டும் என்று ஏங்கினார், ஆனால் யூதாஸ் அவரது சிநேகிதத்தைப் புறக்கணித்து விட்டான். [26]இயேசுவைக் கைது செய்வதில் ரோமச் சேவகர்கள் தேவாலயத்துக் காவல் சேவகர்களுடன் ஒத்துழைத்தனர் (யோவா. 18:12), ஆனால் கைது செய்யும் குழுவினருடன் அவர்கள் எவ்வளவு நேரம் இருந்தனர் என்பது நிச்சயமாகத் தெரிய வில்லை. ஏதோ ஒருவேளையில், அவர்களின் பணி முடிந்ததும், அவர்கள் இயேசுவை யூதர்களின் பொறுப்பில் விட்டுச் சென்றிருக்க வேண்டும் (அப். 22:30ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்). [27]முன்னதாக, அப்போஸ்தலர்கள் இரண்டு பட்டயங்களை வைத்திருந்ததாகக் கூறினர் (லூக். 22:38); குறைந்தபட்சம் அவற்றில் ஒன்றாவது தோட்டத்திற்குள் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். [28]பிரதான ஆசாரியரின் வீட்டாருக்கு நன்கு பழக்கமான யோவான் (யோவா. 18:15, 16), அந்த அடிமையின் பெயர் மல்கூஸ் என்று குறிப்பிட்டிருந்தார். சிலர், மல்கூஸ் யார் என்பதை வாசகர்கள் அறிய வேண்டும் என்று யோவான் எதிர்பார்த்தார் என்றும், இது இறுதியில் மல்கூஸ் ஒரு கிறிஸ்தவரானார் என்று சுட்டிக்காண்பிக்கலாம் என்றும் யூகிக்கின்றனர். மேலும் யோவான் மாத்திரமே அந்தப் பட்டயத்தைப் பிடித்தவர் யார் என்று பெயர் குறிப்பிட்ட ஒரே எழுத்தாளராக இருக்கின்றார் - ஒருவேளை, அவர் தமது சுவிசேஷ விவரத்தை எழுதிய வேளையில் பேதுரு இறந்து போயிருந்தார் என்பதாலும், ரோமர்களின் கைகளில் அவர் [பேதுரு] மீண்டும் துன்புற வேண்டியிராது என்பதாலும் இதை அவர் குறிப்பிட்டிருக்கலாம். [29]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 162. [30]உண்மையில் ஒரு தூதன் போதுமானவராக இருந்திருப்பார்.

[31]இயேசுவானவர், தமது மரணம் வேத வாக்கியங்களின் நிறைவேற்ற மாயிருந்தது என்று மீண்டும் வலியுறுத்தினார் (மத். 26:54, 56). [32]இந்த நிகழ்ச்சியானது இயேசுவின் கைகள் கட்டப்படுவதற்கு முன்பு நடைபெற்றிருக்கலாம். விஷயம் அப்படியிருந்தால், இயேசு கட்டப்படாத கைகளால் தொட்டார். [33]இந்த குணமாக்குதல் பற்றிய - அதாவது, கர்த்தர் துண்டிக்கப்பட்ட அந்தக் காதை மீண்டும் பொருத்துவித்தாரா அல்லது என்ன நடைபெற்றது என்பது பற்றிய - விவரங்கள் நமக்குத் தரப்படவில்லை, ஆனால் விதிப்படியாக, குணமாக்கப் பட்டவர் தாம் அந்த ஊனத்தைப் பெறுவதற்கு முன்பிருந்த நல்ல நிலைக்கே திரும்பக் கொண்டு வரப்பட்டார். [34]இது குறுகிய காலமே வாழ்ந்த வெற்றியாக இருந்தது, இது வாரத்தின் முதல் நாளில் இயேசுவின் உயிர்த்தெழுதலினால் மூடப்பட்டது. [35]யோவான் தமது சுவிசேஷ விவரத்தில் தம்மை, சிலவேளைகளில் படர்க்கைச் சொல்லில் குறிப்பிட்டதை நாம் கண்டுள்ளோம்; மாற்குவும் இதே போன்று செய்திருக்கலாம். மாற்குவின் தாய் எருசலேமில் தங்கியிருந்தார்கள் (அப். 12:12, 25); முன்பே குறிப்பிட்டபடி, அவர்களின் வீடே கடைசி இராப்போஜனம் நடந்த இடமாயிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. இந்த இளைஞன், இயேசுவும் அப்போஸ்தலர்களும் மேல்வீட்டை விட்டுப் புறப்பட்டபோது அவர்களைப் பின்தொடர்ந்து சென்றானா அல்லது பிற்பாடு தோட்டத்திற்குச் சென்றானா என்பது தெளிவற்றதாக உள்ளது. யூதாஸ், கும்பலை முதலில் மேல்வீட்டிற்கு வழிநடத்திச் சென்றிருந்தால், மாற்கு அந்தக் கும்பலைப் பின்தொடர்ந்து கிறிஸ்து இருந்த இடத்திற்கு வந்திருக்கலாம். இந்த இளைஞன் ஏதாவது ஒரு வகையில்

*தன்னை இயேசுவின் சீஷன் என்று சுட்டிக்காண்பித்திருக்க வேண்டும், எனவே கும்பலானது "அவனைப் பிடித்தது" (மாற். 14:51).* [36]*இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் முடிவடையும் பஸ்கா விருந்து சூரியன் மறைவுக்குப் பின்பு (சுமார் 6:00 மணிக்கு) தொடங்கியிருந்தது. இதைத் தொடர்ந்து, யோவான் 14-17ல் உள்ள நீண்ட உரையும் ஜெபமும் வந்தன. பின்பு இயேசுவும் அவரது சீஷர்களும் கெத்செமனேக்குப் பயணப்பட்டனர், அங்கு கர்த்தர் சுமார் ஒருமணி நேரத்திற்கும் மேலாக ஜெபித்திருப்பார் என்பது உறுதி. யூதாஸுீம் அவனுடன் வந்த கூட்டமும் தோட்டத்திற்குள் சேர்ந்தபோது, நள்ளிரவு நேரமாகவோ அல்லது அதிகாலை 1:00 மணியாகவோ இருந்திருக்கலாம்.* [37]*அன்னாவிடம் இயேசு கூட்டிச் செல்லப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றி, யோவான் மாத்திரமே கூறுகின்றார். பல பத்தாண்டுகளுக்குப் பின்பு எழுதப்பட்ட யோவான் சுவிசேஷ விவரமானது, யூதர்களால் [இயேசு] "விசாரிக்கப்படுதல்" பற்றி, ஒப்பீட்டு சுவிசேஷங்களில் இருந்து பார்த்து எழுதாமல், அவற்றிற்குத் துணைக்கருத்துக்களை எழுதினார்.* [38]*இயேசுவிடம் மேற்கொள்ளப்பட்ட "விசாரணைகள்" பற்றிய சில அம்சங்கள் இந்த புத்தகத்தில் "உங்கள் தீர்ப்பு என்ன?" என்ற இனிவரும் பிரசங்கத்தில் கலந்துரையாடப்படும்.* [39]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1467. [40]*அன்னாவைப் பற்றிய சுருக்கமான குறிப்புகளுக்கு, "கிறிஸ்துவின் வாழ்வு, 1" என்ற புத்தகத்தில் காணவும்.*

[41]*"ஜனாதிபதி" போன்ற கனத்திற்குரிய பதவிப்பெயர்கள், அந்தத் தனிநபர் பதவியில் இல்லாத போதும்கூடப் பயன்படுத்தப்படுகின்றன.* [42]*கைது நிகழ்வின்போது, சனதெரீன் சங்கத்தின் பிரதிநிதிகள் இருந்தனர் என்பது உறுதி (லூக். 22:52), ஆனால் கைது செய்தல் முடிந்தபின்பு சிலர் தொடர்பு கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.* [43]*"இரகசியமாய் ஒன்றும் பேசவில்லை" என்ற இயேசுவின் கூற்றானது, அவர் தமது சீஷர்களுக்குத் தனிப்பட்ட வகையில் போதிக்காதிருந்தார் என்று அர்த்தப் படுத்துவதில்லை. அவர் அவர்களுக்குத் தனியாகப் போதித்தார் (மாற். 4:34; லூக். 10:23), ஆனால் அவரது தனிப்பட்ட போதனையானது வெளிப்படையான போதனைக்கு நேர்மாறானதாக இருந்ததில்லை. மற்றும், மறைத்து வைத்தல் என்பது, அவர் தனிப்பட்ட முறையில் போதித்ததன் நிறைவான நோக்கமாக இருந்ததில்லை (மத். 10:27ஐக் காணவும்).* [44]McGarvey and Pendleton, 695. *லூத்தர், மறுகன்னத்தைத் திருப்பிக்காட்டுதல் பற்றிய இயேசுவின் போதனையைத் தம் மனதில் கொண்டிருந்தார் (மத். 5:39).* [45]*பேதுரு மறுதலித்தது பற்றிய வரலாறானது, காய்பா முன்னிலையில் இயேசுவின்மீது பொய்க்குற்றம் சாட்டப்படுதலின் வரலாற்றுடன் ஒன்றுகலக்கப்படுகிறது; ஆனால், நமது நோக்கங்களுக்காக, நாம் காய்பாவின் முன் கிறிஸ்து என்ற வரலாற்றை முதலில் படித்துவிட்டு, பின்பு (அடுத்த பாடத்தின் தொடக்கத்தில்) பேதுரு மறுதலித்தது பற்றிப் படிப்போம்.* [46]*அன்னா மற்றும் காய்பா ஆகியோரின் வீடுகளுக்குப் பொதுவான ஒரு முற்றம் இருந்தது என்று சிலர் நினைக்கின்றனர். இருப்பினும், இவ்விரு வீடுகளும் ஒன்றுக்கொன்று தூரத்தில் இருந்தன என்பதைச் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்வு சுட்டிக்காண்பித்துள்ளது.* [47]Robert L. Thomas, ed., and Stanley N. Gundry, assoc. ed., *A Harmony of the Gospels* (Chicago: Moody Press, 1978), 329. *இது ஒரு சட்டவிரோதமான கூட்டமாக இருந்தது (இந்த புத்தகத்தில் "உங்கள் தீர்ப்பு என்ன?" என்ற பிரசங்கத்தில் காணவும்). (நிக்கொதேமு மற்றும் அரிமத்தியாவூர் யோசேப்பு போன்று [யோவா. 7:50; லூக். 23:50, 51]) ஆலோசனைச் சங்க உறுப்பினர்களில் இயேசுவுக்கு ஆதரவாயிருந்தவர்கள் யாரேனும் குறிப்பிட்ட இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கச் சாத்தியக்கூறு இல்லாதிருந்தது.* [48]Richard Rogers, *The Life of Christ and His Teaching* (Lubbock, Tex.: Sunset International Bible Institute External Stud-

ies Department, 1995), 95. [49]இயேசு, தேவாலயத்தைப் பற்றியல்ல, ஆனால் தமது சரீரத்தைப் பற்றிப் பேசினார் என்பதை, குறைந்தபட்சம், ஆலோசனைச் சங்கத்தின் சில உறுப்பினர்களாவது புரிந்துகொண்டிருப்பார்கள் (மத். 27:63ஐக் காணவும்). காரணம் எதுவாயிருப்பினும், இயேசுவை விசாரித்தபோது, அவர்கள் இந்தக் குற்றச்சாட்டைத் தேடவில்லை. இருப்பினும் பிற்பாடு, ஆலோசனைச் சங்கத்தின் முன்பாக ஸ்தேவான் இழுத்துக் கொண்டுவரப்பட்டபோது, சனதெரீன் சங்கத்தில் இதே கலந்துரையாடல் எழும்பிற்று (அப். 6:13, 14ஐக் காணவும்). [50]ஆகையால், காய்பாவுக்கு இயேசுவின் பதிலுரையானது, ஆணையின் கீழ் இருந்தது. இந்த உதாரணமானது ஆணையிடுதல்களுக்கு எதிரான இயேசுவின் போதனை (மத். 5:34) அரசாங்க ஆணைகளை உள்ளடக்கவில்லை என்பதை நாம் அறிய அனுமதிக்கிறது.

[51]இயேசுவின் பதிலை, “நீர் சொன்னபடிதான்” என்பதாக மத்தேயு பதிவு செய்தார் (மத். 26:64), இது “ஆம்” என்று சொல்வதற்கான ஒரு நயமிக்க முறையாக உள்ளது. இயேசு தாமே கிறிஸ்து (எதிர்பார்க்கப்பட்டிருந்த யூதத்துவ மேசியா) என்று இதற்கு முன்பே வெளிப்படையாக அறிக்கையிட்டிருந்தார் (யோவா. 5:17, 18; 10:30-39; மத். 22:41-46ஐக் காணவும்), ஆனால் பிரதான ஆசாரியர், இந்த உறுதிப்பாட்டைக் குறித்து சாட்சியத்தைக் கண்டறிதலோ - அல்லது குறைந்த பட்சம், ஒவ்வுகிற சாட்சியத்தைக் கூறும் சாட்சிகளைக் கண்டறிதலோ - இயலாது போயிற்று என்பது உறுதி. [52]“உங்கள் தீர்ப்பு என்ன” என்ற பிரசங்கத்தில் உள்ள கலந்துரையாடலைக் காணவும். [53]பழமையான விளையாட்டு ஒன்றில், சிறுபிள்ளை ஒன்றின் கண்கள் கட்டப்பட்டு, அது தன்னைத் தொடுவது யார் என்றோ அல்லது பேசுவது யார் என்றோ யூகிக்கும்படி கூறப்பட்டது. (நான் சிறுபையனாக இருந்தபோது, இதை நாங்கள், “Blind Man’s Bluff” என்று கூறுவதுண்டு.) அதே போன்ற [ஆனால்] அற்பமான ஆவியினால் பிறழ்வுபடுத்தப்பட்ட ஒரு விளையாட்டாகவே இயேசுவின் விரோதிகள் செய்த விஷயம் தோற்றம் அளிக்கிறது. [54]ஆலோசனைச் சங்கத்தார் இயேசுவைத் தவறாக நடத்தினர் என்ற மனப்பதிவை மத்தேயுவின் சுவிசேஷ விவரம் முன்விட்டுச் செல்லுகையில், லூக்கா சுவிசேஷமானது அதிகாரிகள்மீது பழிபோடுகிறது. மாற்குவின் சுவிசேஷ விவரமானது, இவ்விரு குழுவினருமே கர்த்தரைத் தவறாக நடத்தினர் என்று சுட்டிக்காண்பிக்கிறது. அதிகாரிகள் இயேசுவைத் தவறாக நடத்தியபோது, அவர்கள் அவர்மீது கொண்ட பயத்தை இழந்திருந்தனர் என்பது தெளிவு (யோவா. 18:6ஐக் காணவும்). சனதெரீன் சங்கத்தாரின் [இந்த] செய்கையை அவர்கள் பிற்பாடு ஸ்தேவானை நடத்திய விதத்துடன் (அப். 7:54, 57, 58) ஒப்பிட்டுப் பார்க்கவும்.

*85*

# தோட்டத்தில்

## மத். 26:30, 36–46; மாற். 14:26, 32–42; லூக். 22:39–46; யோவா. 18:1, 4, 11, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மீட்பின் வரலாற்றில் தோட்டங்கள் என்பவை பெரியதாய்த் தோன்றுகின்றன: நாம் பாவத்தின் தோட்டமான ஏதேன் தோட்டத்தை (ஆதி. 2:8, 17; 3); பெருந்துக்கத்தின் தோட்டமான கெத்செமனே தோட்டத்தை (யோவா. 18:1; மத். 26:36); இயேசு புதைக்கப்பட்டு பின்பு உயிர்த்தெழுந்த பெயரற்ற தோட்டத்தை, நம்பிக்கையின் தோட்டத்தை (யோவா. 19:41, 42; 20); மற்றும் பரதீசு[1] என்ற பலன்தரும் தோட்டத்தை (வெளி. 2:7ஐக் காணவும்)க் காண்கின்றோம். இந்தப் பிரசங்கம், இவற்றில் இரண்டாவதான கெத்செமனே தோட்டத்தைப் பற்றியதாக உள்ளது.*

*நாம், கெத்செமனேயில் இயேசு என்ற பாடக்கருத்தைப் படிக்கையில், நாம் நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்பதால் நமது மிதியடிகளைக் கழற்றிப் போட வேண்டும் என்ற மனக்கருத்து மேலோங்கி நிற்கிறது (யாத். 3:5ஐக் காணவும்).* D. W. *ஃபோர்டு அவர்கள் எனது மன உணர்வுகளை வெளிப் படுத்தினார்:*

> நான் [இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்] மனிதனாக இருக்கின் றேனா என்பதில் நான் சந்தேகம் கொள்ளுகின்றேன். சுவிசேஷப் பதிவேடுகள் முழுவதிலும் ... இருதயத்தை அசைக்கக் கூடியதாக உள்ள ... இந்தக் காட்சியைச் சித்தரிக்க என்னிடத்தில் சொல் திறமைகளை, ஆவிக்குரிய கூருணர்வை அல்லது இறையியல் உட்கண்ணோக்கை நான் கொண்டுள்ளேனா என்று நான் சந்தேகப் படுகின்றேன் ... . ஆனாலும் நான் என்ன செய்யக்கூடும்? நாம் இயேசு என்ற மனிதரிடத்தில் மிகவும் நெருங்கி வருகின்ற இந்த விஷயம் இங்கே உள்ளது, வேறு எங்கும் இல்லை. நான் கெத்செமனேயை விட்டு வெளியேறினால், இயேசுவை அவர் இருந்தவாறு காண்பிக்கத் தவறிவிடுவேன்.[2]

*நாம் இயேசுவைத் தோட்டத்தில் காணுகையில், சுவிசேஷப் பதிவேடு களில் மிக அரிதாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது [இன்னொரு] பகுதியை நாம் காண்கின்றோம்: அவரது ஊறுபடக்கூடிய மனிதத் தன்மை.[3] அவர் முழுமையும் தேவனாக இருந்தார், ஆனால் அவர் முழுமையும் மனிதனாகவும் இருந்தார். திரு அவதாரம் பற்றி நாம் ஆழ்ந்தறிய*

முடியாதவை பல உண்டு; ஆனால், அவ்வப்போது, கிறிஸ்துவின் தேவத்துவத்திற்கும் அவரது மனிதத்துவத்திற்கும் இடையில் இறுக்கம் இருந்திருக்க வேண்டும். இந்த இறுக்கமானது தோட்டத்தில் தவிர வேறு எங்கும் ஒருக்காலும் அதிகத் தெளிவாகக் காணப்பட்டதில்லை. கர்த்தர் தமது சீஷர்களிடத்தில், "ஆவி உற்சாகமுள்ளதுதான், *மாம்சமோ பலவீனமுள்ளது"* என்று கூறியபோது (மத். 26:41), அவர்களைக் குறித்து மட்டும் அவர் பேசவில்லை. அவர் தம்மைக் குறித்தும் பேசினார்.

பரலோகத்தில் இருந்து வந்ததில் கிறிஸ்து, "தம்மையே வெறுமையாக்கி ... *மனித சாயலானார்"* என்று பவுல் எழுதினார் (பிலி. 2:7). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு "இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு *எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது"* என்று கூறினார் (எபி. 2:17). இந்த எழுத்தாளர், கிறிஸ்து "தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகுதல்" என்பதை அவரது பாடுகளுடன் பிணைத்தார். "அவர் தாமே சோதிக்கப்பட்டுப் *பாடுபட்டதினாலே";* அவர் "[அவர்] எல்லா விதத்திலும் *நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்"* (2:18; 4:15). மாம்சத்தில் இயேசுவின் பாடுகள் என்பது சிலுவையில் அவரது மரணத்தை மட்டுமின்றி (1 பேது. 3:18), தோட்டத்தில் அவரது பாடுகளையும் உள்ளடக்கிறது. "அவர் *மாம்சத்தில் இருந்த நாட்களில்,* தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல் செய்து" (எபி. 5:7).

இயேசு பூமியில் இருக்கையில் அவரது மாபெரும் யுத்தம் தோட்டத்தில் தான் நடைபெற்றது என்று நான் நம்பி இணங்குகின்றேன். வனாந்தரத்தில் கிறிஸ்து பிசாசுடன் யுத்தம் செய்தார் (மத். 4:1-11) தோட்டத்தில் அவர் தமக்கெதிராக - தமது மனிதத்துவத்துடன் - யுத்தம் செய்தார். J. W. மெக்கார்வீ அவர்கள், "இயேசு தோட்டத்தில் நுழைந்தது முதல் அவர் சிலுவையில் மரித்தது வரை அவருக்குள் இருந்த மனிதத்துவமானது ஏறுமுகத்தில் இருந்தது; 'மனித வடிவில் காணப்பட்டிருந்ததில்' அவர் முழுமையும் மனிதத்துவத்திலேயே இந்தத் துன்பங்களைச் சகித்தார்"[4] என்று கூறியபோது, அவர் சரியாகவே இருந்தார் என்று நான் நம்புகின்றேன். இருப்பினும், நாம் இரகசியத்தின் வட்டாரம் ஒன்றில், - உபதேச விஷயங்களல்ல ஆனால் - அதிசயமும் பயபக்தியும் உள்ள வட்டாரம் ஒன்றில் நாம் பிரவேசிக்கின்றோம் என்பதை உணர்ந்தறிய வேண்டும்.[5]

## போராட்டத்தின் ஒரு அரங்கம்

நாம் தோட்டத்திற்குள் அடியெடுத்து வைக்கும்போது,[6] இது போராட்டத்தின் ஒரு அரங்கமாக இருந்தது என்று கூறுவதன்மூலம் தொடங்க என்னை அனுமதியுங்கள். இங்கு கர்த்தர் தமது மாபெரும் யுத்தத்தை என்று சொல்லக்கூடாதிருப்பினும், தமது மாபெரும் யுத்தங்களில் ஒன்றை மேற்கொண்டார்.

**பெருந்துன்பத்தின் ஒரு இடம்**

இயேசுவுக்கு, கெத்செமனே தோட்டம் பெருவருத்தத்தின் முதலாவது மற்றும் முன்னணியான இடமாக இருந்தது. இந்த சத்தியத்தின் முக்கியத்துவத்தின் காரணமாக, நாம் மற்ற இடங்களைக் காட்டிலும் இவ்விடத்தில் அதிக நேரத்தை எடுத்துக் கொள்வோம்.[7]

மத்தேயு 26:36ல் நாம், "அப்பொழுது, இயேசு அவர்களோடே [தமது அப்போஸ்தலர்களோடே], கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்து" என்று நாம் வாசிக்கின்றோம். "கெத்செமனே" என்ற வார்த்தை, "எண்ணெய் பிழியும் இடம்'' என்று அர்த்தப்படுகிறது. இந்தப் பெயரானது இந்த வேளைக்கு ஏற்புடையதாக இருந்தது: இந்த இடத்தில்தான், வரவிருந்த நிகழ்ச்சிகள் இயேசுவைக் கீழே போட்டு *அழுத்திப் பிழிந்தன*, சிலுவையின் நிழல் அவரை *நசுக்கிவிடுவதாக* அச்சுறுத்திற்று.

சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள், கர்த்தருடைய பெருந்துக்கத்தை வரைவளவான சொற்றொடர்களில் விவரித்தனர்: அவர், "துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" என்று மத்தேயு கூறினார் (மத். 26:37); அவர், "திகிலடையவும், மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" என்று மாற்கு எழுதினார் (மாற். 14:33). இயேசு தமது சீஷர்களிடத்தில், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவாகத் துக்கங்கொண்டிருக்கிறது" என்று கூறினார் (மத். 26:38). NIV வேதாகமத்தில், "My soul is overwhelmed" ["என் ஆத்துமா துக்கத்தில் மூழ்கிப்போயிருக்கிறது"] என்றுள்ளது. NLT வேதாகமத்தில், "My soul is crushed with grief ..." ["என் ஆத்துமா துக்கத்தினால் நசுக்கப்படுகிறது ...''] என்றுள்ளது. ''மரணத்துக்கேதுவாக'' என்ற சொற்றொடரானது கொல்கொதாவின் பெருந்துக்கத்தைக் குறிப்பதாக மட்டும் இருக்கவில்லை, ஆனால் அது கெத்செமனேயின் பெருந்துன்பத்தையும் குறிப்பதாயிருந்தது. AB வேதாகமத்தில், "I am almost dying of sorrow" ["நான் துன்பத்தினால் ஏறக்குறைய மரித்துக்கொண்டிருக்கின்றேன்"] என்றுள்ளது.

கிறிஸ்து தமது சீஷர்களை விட்டு அப்புறம் சென்று, தரையில் முகங்குப்புற விழுந்து ஜெபிக்கத் தொடங்கினார்: "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்"[8] (மத். 26:39). "பாத்திரம்" என்பது, அவருக்குக் காத்திருந்த உடல்ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் ஆவிக்குரிய பாடுகள் யாவற்றையும் குறித்தது.[9] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "அவர் ... பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து" என்று கூறினார் (எபி. 5:7).

இந்தக் காட்சியை லூக்கா பின்வருமாறு விவரித்தார்: "அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது" (லூக். 22:44). பஸ்கா பண்டிகையானது முன் வசந்த காலத்தில் வருகிறதாயிருந்ததால், அந்த இரவு நேரக் காற்று குளுமையானதாக, குளிரானதாகக்கூட இருந்திருக்கும் (யோவா. 18:18ஐக் காணவும்). அது வியர்வை இயல்பாக வரும் நேரமாக இருக்கவில்லை. எஜமானரின் முகத்தில் பொங்கிப் பெருகிய வியர்வையானது புறத்தில் இருந்த வெப்பநிலையினால் ஏற்படவில்லை,

அது அகத்தில் இருந்த கலக்கத்தினால் ஏற்பட்டது.

"இரத்தத்தின் பெருந்துளிகளாய்" என்ற சொற்றொடரைக் குறித்து விளக்கவுரையாளர்கள் வியப்படைகின்றனர். மிகவும் வெளித்தள்ளும் நிலையின் கீழ், முன்நெற்றியில் உள்ள இரத்தக்குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டு அது வியர்வை நாளங்களுக்குள் கலந்து, இரத்தமயமான திரவம் தோலின் வழியே துளித்துளியாக வெளியேறும் மருத்துவ நிலையானது மிகவும் அறிதானதாவே உள்ளது.[10] லூக்கா ஒரு மருத்துவர் என்ற வகையில், கர்த்தருடைய உள்ளான போராட்டத்தின் வலிவார்ந்த தன்மையை அடிக்கோடிடுவதற்கு இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை விவரித்திருக்க வாய்ப்புள்ளது. ஆங்கில வேதாகமத்தில் இச்சொற்றொடர், "like drops of blood" என்றுள்ளது. இதில் like என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம் இருப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது: ஆழமான ஒரு காயத்திலிருந்து இரத்தம் வெளியே பாய்வதைப் போல், இயேசுவின் முகத்திலிருந்து இரத்தம் வெளியே பாய்ந்து பூமியில் விழுந்தது.

சில எழுத்தாளர்கள், தோட்டத்தில் கிறிஸ்துவின் பெருந்துன்பத்தை, வரவிருந்த அவரது மரணம் பற்றிய அவரது முந்திய அமைதித் தன்மையுடன் ஒப்புரவாக்குவதில் சிரமம் கொண்டுள்ளனர். "அவர் மரித்தலைப் பற்றி,[11] தெளிவாகத் தெரியும் வகையில் மனக்கலக்கம் எதுவுமின்றி பேசியிருந்தார்" என்று அவர்கள் கூறுகின்றனர். நேர்மாறாகக் காணப்படுபவை பற்றித் தனிப்பட்ட முறையில் எனக்குப் பிரச்சனையெதுவும் இல்லை. முதலாவது, இயேசு தமது முந்திய அறிவிப்புகளை ஏற்படுத்தியபோது, அவர் எப்படிக் காணப்பட்டார் அல்லது அவரது குரல் எவ்வாறு இருந்தது என்பது பற்றி நமக்குக் கூறப்பட்டிருக்கவில்லை; அவரது குரலும் முகநாடியும், எழுதப் பட்ட பதிவேடுகள் சுட்டிக்காண்பிப்பதற்கும் அதிகமான செய்தியை எடுத்துரைத்திருக்கலாம்.[12] இரண்டாவது, இயேசு "தமது மாம்சத்தில்" ஏற்படவிருந்த மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்தார் என்று நான் நம்புகின்றபடியால், அந்த உண்மையான நிகழ்ச்சி நெருங்கி வருகையில் உயர்ந்தபட்சமான அவரது உணர்வுநிலையை நான் அடையாளம் காண முடிகிறது.

எடுத்துக்காட்டாக, நான் அறுவைச் சிகிச்சையை செய்துகொண்ட நேரங்களைப் பற்றி நான் நினைக்கின்றேன். எனக்கு அறுவைச் சிகிச்சை நடப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பாக, வரவிருந்த அந்நிகழ்ச்சியைப் பற்றி என்னால் அமைதியாகவும் பகுத்தறிவுடனும் பேச முடிந்திருந்தது. இருப்பினும், கடைசியாக, மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நேரம் வந்தபோது, எனது அமைதித் தன்மை ஆவியாகத் தொடங்கிற்று. இயேசுவின் பின்வரும் கூற்றானது எனக்கு புதிய அர்த்தத்தை ஆதாயப் படுத்துகிறது: "ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது!" அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவரிடத்தில், "இது அவசியமானது என்று நீங்கள் உண்மையிலேயே நினைக்கின்றீர்களா? இந்தப் பிரச்சனையைக் கவனிக்க நம்மால் மேற்கொள்ளக்கூடிய வேறு வழி எதுவும் இல்லை என்பது நிச்சயமா?" என்று கூறுவதை நானே கற்பனை செய்து கொள்வதில் எனக்குச் சிரமம் எதுவும் இருந்ததில்லை.

இயேசுவின் ஜெபத்தில் இருந்த "பாத்திரம்" என்பது அவரது உடல் ரீதியான, உணர்வு ரீதியான மற்றும் ஆவிக்குரிய துன்பம் என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அவருக்குக் காத்திருந்த ஒவ்வொரு வகையான துன்பத்தைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்: முதலாவது, உடல்ரீதியான துன்பம் இருக்கும்: முப்பது களின் வயதில் இருக்கும் ஒரு மனிதருக்கு, மரணம் என்பது கவர்ச்சிகர மானதாக இருக்க முடியாது, இது ஒரு இளைஞரின் வாழ்வில் தலையாய/ மிக முக்கியமான காலமாக உள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் ஒரு பணிநிலையைத் தொடங்கக்கூடிய வயதில், அவர் தமது பணியை முடிக்கவிருந்தார்.[13] அவர் சகிக்கவிருந்த மரணத்தின் வகை என்பது இதைக்காட்டிலும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது: சிலுவை என்பது, மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட சித்திரவதைக் கருவிகளிலேயே மிகவும் கொடூரமானது என்று அழைக்கப்பட்டிருந்தது. ஜான் கிப்ஸன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> அவர் தமது முதுகில் சவுக்கடியை உணருவார், தமது புருவங்களுக்கு மேலாக வைக்கப்பட்ட முள்முடியின் அழுத்தத்தினால் அவரது முகத்தில் இரத்தம் வழிந்தோடியிருக்கும், படைவீரர்கள் அவரது கரங்கள் மற்றும் பாதங்களினூடே ஆணிகளைச் செலுத்திய போது சதையானது கிழிக்கப்பட்டிருக்கும், பின்பு சிலுவையில் அறைதலின் பெருந்துன்பம் இருந்தது - இது ஒரு மெதுவான மற்றும் வாதனைப்படுத்துகிற மரணமாக இருந்தது ...[14]

கிறிஸ்து உணர்வுப்பூர்வமாகவும் துன்புற்றிருப்பார். கிப்ஸன் பின்வருமாறு தொடர்ந்தார்:

> அவர் தமது விரோதிகளினால் தமக்கேற்பட்ட அவமானத்தை, தமது நண்பர்களினால் கைவிடப்படுதலை, மற்றும் தாம் யாருக்காக உழைத்திருந்தாரோ மற்றும் யாருக்காகப் பயன்பட்டிருந்தாரோ, அந்த மக்களின் நன்றியின்மையைச் சகித்துக் கொள்ளும்படி அழைக்கப் பட்டிருப்பார். அவர் யூதத்தலைவர்களின் வெறுப்புணர்வை, யூதாஸின் சதியை, மக்களின் நிலையற்ற மனநிலையை, மற்றும் ஏளனமான மார்க்க நீதியை மற்றும் குடிமை நீதியை எதிர் கொண்டிருப்பார்.[15]

இயேசுவின் உணர்வுப்பூர்வமான பாடுகளில் சிலுவையுடன் தொடர்புடைய அவமானமும் உள்ளடங்கியிருந்தது. சிலுவையில் அறைதல் என்பது, "அடிமைகள், வேறு நாட்டவர்கள், புரட்சி செய்பவர்கள் மற்றும் கொடிய குற்றம் செய்பவர்கள் ஆகியோருக்கென்றே ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தது."[16] கிறிஸ்து, "அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்தார்'' என்று எபிரெயர் 12:2ம் வசனம் கூறுகிறது. ''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி ..." என்று பவுல் கூறினார் (கலா. 3:13).

இருப்பினும் உடல்ரீதியான அல்லது உணர்வு ரீதியான பாடு என்பது

இயேசுவின் மாபெரும் பாடாக இராமல், ஆவிக்குரிய பாடு என்பதே மாபெரும் பாடாக இருந்தது. இங்கு, டோனால்டு மில்லர் அவர்களின் கூற்றுப்படி, "நாம் நம் மீட்பின் இரகசியம் என்ற ஆழங்காண முடியாத ஆழங்களுக்கு கடந்து செல்லுகின்றோம்"[17] என்பதால், நாம் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். சிலுவையில் கிறிஸ்துவின் பெருந்துன்பத்தைப் பற்றி நாம் பேசமுடியும், ஆனால் நாம் அதை முற்றிலுமாகப் புரிந்துகொள்ள முடியாது. வேதவாக்கியங்கள் போதிப்பவற்றையே நாம் வலியுறுத்த முடியும்: இயேசு சிலுவையில் இருந்தபோது, [நமது] குற்றத்தை அவர் தம்மீது சுமந்தார், ஆகவே நமது பாவங்களுக்குத் தண்டனையையும் சுமந்தார் (ஏசா. 53:6; 2 கொரி. 5:21; 1 பேது. 2:24). பாவம் நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கிறது (ஏசா. 59:1, 2), மற்றும் "கர்த்தருடைய சந்நிதானத்தினின்றும் அவருடைய மகிமை பொருந்தின வல்லமையினின்றும்" அகற்றப்படுதல் என்பதே (2 தெச. 1:9; வ. 7-9ஐக் காணவும்) பாவத்திற்கு நிறைவான தண்டனையாக உள்ளது. நமது குற்றங்களை இயேசு சுமந்தபோது, அவரை விட்டுப் பிதாவானவர் தமது முகத்தைத் திருப்பிக் கொள்ளுவதைத் தவிர வேறு தெரிவு எதையும் கொண்டிருக்கவில்லை (மத். 27:46ஐக் காணவும்).

உடல்ரீதியான, உணர்வுரீதியான மற்றும் ஆவிக்குரிய இந்தத் துன்பத்திற்குத் தேவனுடைய குமாரன் செலுத்திய விலை பற்றி நீங்களும் நானும் ஒருபோதும் கற்பனை செய்தும் பார்க்க இயலாது. உலகம் ஜீவனைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அவர் மரிக்க வேண்டியிருந்தது. உலகம் ஒளியைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அவர் இருளில் மூழ்க வேண்டியிருந்தது.

இயேசு தோட்டத்தில் அதிகமான தைரியத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும் என்று சில எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். "மற்றவர்கள் மரணத்தை அதிகமான அமைதியுடன் எதிர்கொண்டிருந்தனர்" என்று இவர்கள் கூறுகின்றனர். குறைந்தது இரண்டு விளக்கவுரைகள் இங்கு அவசியமானவைகளாக உள்ளன: (1) உண்மையான தைரியம் என்பது பயக்குறைவினால் செயல்விளக்கப்படுத்தப்படுவதில்லை, ஆனால் பயம் நம்மை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் வேளையிலும்கூட, சரியானதைச் செய்வதினால் செயல்விளக்கப்படுத்தப்படுகிறது. (2) வேதனையையும் மரணத்தையும் பலர் எதிர்கொண்டிருந்த போதிலும், கர்த்தரைப் போல் வேறு எவரும் பெருந்துன்பத்தை எதிர்கொண்டதில்லை. கின்னஸ் உலக சாதனைகளின் பதிவேட்டுப் புத்தகமானது,[18] "சகித்துக் கொள்ளப்பட்டவற்றிலேயே மாபெரும் துன்பம்" என்ற ஒரு வகைப்பாட்டைக் கொண்டிருந்தது என்றால், அந்தப் பதிவின் அருகில் சிலுவையின் படம் ஒன்று இருக்கும்.

நீங்கள் உங்களையே எப்போதாவது, "பெருந்துன்பத்தின் இடத்தில்" இருந்ததாகக் கண்டதுண்டா? கர்த்தர் அங்கிருந்தார் - அவர் அதைப் புரிந்துகொள்ளுகின்றார் (எபி. 4:15).

**ஏமாற்றத்தின் ஒரு இடம்**

கெத்செமனே தோட்டம் என்பது இயேசுவுக்குப் பெருந்துன்பத்தின் இடமாக மட்டுமின்றி, ஏமாற்றத்தின் இடமாகவும் இருந்தது.

சட்டப்படியாக, கிறிஸ்துவின் நீட்டிக்கப்பட்ட ஜெப வேளையானது தனிமையில் நடத்தப்பட்டது (மாற். 1:35; மத். 14:23ஐக் காணவும்). ஆயினும் இந்த வேளையில், அவர் துணையின் அவசியத்தை உணர்ந்தார். (அறுவைச் சிகிச்சை பற்றிய எனது விவரிப்புக்குத் திரும்ப என்னை அனுமதியுங்கள்: "நான் அந்த அறுவைச் சிகிச்சையைப் பெற்றபோது, நான் நேசித்தவர்கள் என்னருகில் இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்.[19] நான் எதை அர்த்தப்படுத்துகின்றேன் என்பதை நீங்கள் அநேகமாகப் புரிந்துகொண்டிருப்பீர்கள் என்று நான் நினைக்கின்றேன்.'') கிறிஸ்து தோட்டத்திற்குள் சென்றபோது, "[அவர்] பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் தம்மோடே கூட்டிக்கொண்டு போ[னார்]" (மாற். 14:33). அவர்களிடத்தில் அவர், ''நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்'' என்று கெஞ்சினார் (மத். 26:38ஆ). அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் தூங்கிவிட்டார்கள். ஆம், அவர்கள் உடல்ரீதியாகவும் உணர்வுரீதியாகவும் சக்தி தீர்ந்து போயிருந்தனர் என்பதை நான் அறிவேன் - ஆனால் (மாற். 14:37ல் இயேசுவின் வார்த்தைகளைத் தழுவுவதென்றால்) அவர்கள் அவரோடுகூட ஒருமணி நேரம் விழித்திருக்கக் கூடாதிருந்ததா?

தோட்டத்தில் கிறிஸ்துவின்மீது ஏமாற்றம் தொடர்ந்து குவியலாயிற்று: அவர் ஆண்டுகள் சிலவற்றை பன்னிருவருடன் செலவிட்டிருந்தார், ஆனால் அவர்களில் ஒருவன் அவரைக் காட்டிக்கொடுத்தான். அவர் ஆண்டுகள் சிலவற்றை, ராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பைப் போதிப்பதில் செலவிட்டிருந்தார், ஆனால் இன்னமும் பேதுரு அதை மாம்சப்பிரகாரமான ஆயுதங்களால் தற்காக்கப்பட வேண்டிய அரசியல்ரீதியான ராஜ்யம் என்பதாகவே நினைத்துக்கொண்டிருந்தார். ஏமாற்றம் உள்ள இடத்தில் நீங்கள் எப்போதாவது உங்களைக் கண்டதுண்டா? இயேசு அங்கிருந்துள்ளார் - அவர் அதைப் புரிந்துகொள்ளுகின்றார்.

**கைவிடப்படுதலின் ஒரு இடம்**

தோட்டமானது கைவிடப்படுதலின் ஒரு இடமாகவும் இருந்தது. கிறிஸ்து தமது நண்பர்களின் துணையை விரும்பியபோது, அவர்கள் உறங்கினார்கள். கடைசியில், ''சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத். 26:56).[20] நீங்கள் உங்களைக் கைவிடப்பட்டதான இடம் ஒன்றில் எப்போதாவது கண்டிருக்கின்றீர்களா? இயேசு அங்கிருந்துள்ளார் - அவர் அதைப் புரிந்துகொள்ளுகின்றார்.

நாம் இங்கு நிறுத்தினால் நமது நேரம் நன்கு செலவிடப்பட்டிருக்கும். நாம் யாவருமே நமது கெத்செமனேக்களைக் கொண்டிருந்துள்ளோம். உண்மையில் உங்களில் சிலர் பெருவருத்தம், ஏமாற்றம் அல்லது கைவிடப்படுதல் என்ற தோட்டத்தில் இப்போது இருந்து கொண்டிருக்கலாம். நீங்கள் எதன் வழியாகக் கடந்து செல்லுகின்றீர்கள் என்பதை இயேசு அறிந்துள்ளார் என்பதை உணர்ந்தறிவது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது! அவர்

புரிந்துகொள்ளுகின்றார் மற்றும் பரிதபிக்கின்றார். "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங். 103:14). அவர் "நமது பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடியவராக இருக்கின்றார்"; அவர் "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப் பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபி. 4:15).

## வெற்றியின் ஒரு இடம்

இருப்பினும், இந்த வரலாறு இன்னும் அதிகமாக உள்ளது. கெத்செமனே தோட்டமானது, போராட்டத்தின் ஒரு அரங்கமாக மட்டுமின்றி, அது வெற்றியின் ஒரு இடமாகவும் இருந்தது. இங்கு கர்த்தர் தமது மாபெரும் வெற்றிகளில் ஒன்றை வென்றடைந்தார்.

**வேண்டுதலின் ஒரு இடம்**

கெத்செமனே தோட்டத்தின் எதிர்மறையான பக்கத்தைப் பார்த்துள்ள நிலையில், நாம் இப்போது அதன் நேர்மறையான பக்கத்திற்குத் திரும்பு வோமாக. முதலாவது, நாம் அந்தத் தோட்டமானது வேண்டுதலின் ஒரு இடமாக இருந்தது என்பதைக் கவனிக்க வேண்டும். இயேசு ஒரே ஒரு காரணத்திற்காகவே அந்தத் தோட்டத்திற்குச் சென்றார்: ஜெபிப்பதற்கு. அவர் தமது சீஷர்களிடத்தில், "நான் அங்கே போய் ஜெபம்பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்" என்று கூறினார் (மத். 26:36). கிறிஸ்து தமது வாழ்வின் முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு முன்பாகவும், அவை நடைபெறும்போதும் ஜெபிக்கும் வழக்கம் கொண்டிருந்தார்; இதற்கு அவர் இவ்விடத்தில் ஒரு விதிவிலக்கை ஏற்படுத்த மாட்டார்.

ஜெபத்தில் இயேசு பயன்படுத்திய ஒரு சொற்றொடரை நாம் காணும்போது, அவர் ஏன் ஜெபித்தார் என்பதற்கான உட்கண்ணோக்கு நமக்குத் தரப்படுகிறது - இது சுவிசேஷ விவரங்களில் வேறு எங்கும் காணப்படாத ஒரு சொற்றொடராக உள்ளது.[21] அவர், "அப்பா! பிதாவே!" என்று கூறினார் (மாற். 14:36). "Abba" என்பது "அப்பா" என்று அர்த்தப் படுகிற ஒரு அரமாயிக் வார்த்தையாக உள்ளது, ஆனால் அது ஒரு குழந்தை பயன்படுத்துகின்ற ஒரு வார்த்தையாக, அது கற்றுக்கொள்ளுகின்ற முதல் வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது. இது ஆங்கிலத்தில் ஒரு குழந்தை "da-da" அல்லது "pa-pa" என்றோ அல்லது தமிழில் ஒரு குழந்தை, "ப்பா" அல்லது "பா-பா" என்றோ கூறுவதுபோன்றதாக உள்ளது.[22] "Abba" என்ற வார்த்தை யானது நெருங்கியதன்மையை, தைரியத்தை மற்றும் ஒரு தொடர்பை மறைமுகமாய் உணர்த்துகிறது; இது பிதாவுடன் ஒரு விசேஷித்த உறவைக் காண்பிக்கிறது.

இயேசு தாம் ஜெபித்தது மட்டுமின்றி, தமது சீஷர்களையும் ஜெபிக்கும் படி ஊக்கப்படுத்தினார்: "அவ்விடத்தில் சேர்ந்தபொழுது அவர் அவர்களை நோக்கி: 'நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள்' " என்று சொன்னார் (லூக். 22:40). அவர் மரிக்கவிருந்தாலும், அவர் தமக்காக ஜெபிக்கும்படி அவர்களிடம் கேட்டுக்கொள்ளவில்லை, ஆனால் அவர்களுக் காக ஜெபித்துக் கொள்ளும்படி கூறினார். அவர்களை அவர், "நீங்கள்

சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்று தூண்டுதல் செய்தார் (மத். 26:41). அவர்களுக்கு முன்வந்து கொண்டிருந்த சோதனைகள் என்ன என்பதை அவர் அறிந்திருந்தார்; அவர்கள் வெற்றி பெற்று விளங்க வேண்டுமென்றால் அவர்களுக்கு ஜெபம் தேவைப்பட்டது.

நீங்கள் பெருவருத்தம், ஏமாற்றம் அல்லது கைவிடப்படுதல் என்ற கெத்செமனே தோட்டத்தில் இருக்கும்போது, அதை வேண்டுதலின் இடமாக்குங்கள்.[23] தேவனிடத்தில் நெருங்கிச் சேருதல் என்பது உதவிகர மாயிராத அளவுக்கு எந்தப் பிரச்சனையும் பெரியதாக இருப்பதில்லை.

### கீழ்ப்படிதலின் ஒரு இடம்

கெத்செமனே தோட்டமானது வேண்டுதலின் இடமாக இருந்ததுடன் கூடுதலாக, கீழ்ப்படிதலின் இடமாகவும் இருந்தது. (இது ஒரு திறவுகோல் சத்தியமாக உள்ளது.) இயேசு, ''என் சித்தத்தின்படியல்ல என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்" என்று கூறியிருந்தார் (யோவா. 6:38; எபி. 10:7, 9ஐக் காணவும்). அவர் தமது சீஷர்களுக்கு, "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கும்படி போதித்திருந்தார் (மத். 6:10). இப்போது, கடமையானது விருப்பத்துடன் மோதல் கொண்டிருந்த வேளையில், அவர் தமது சொந்தக் கட்டளையைப் பின்பற்றினார். "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்" என்று ஜெபித்த பின்பு, அவர் "ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று கூடுதலாகக் கூறமுடிந்தது (மத். 26:39).[24]

ஜெபம் என்பது விண்ணப்பம் செய்யும் பயிற்சியாக மட்டும் இருப்பதில்லை, அது ஒரு நிபந்தனைக்குட்பட்ட பயிற்சியாகவும் உள்ளது என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.[25] கிறிஸ்து ஜெபித்த ஒவ்வொரு முறையும், அவரது சித்தமானது அவரது பிதாவின் சித்தத்திற்கு மிகவும் நெருங்கியமைந்தது. முதலில் அவர், "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபித்தார் (மத். 26:39). இரண்டாவது முறை அவர், "இந்தப் பாத்திரத்தில் நான் பானம் பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபித்தார் (மத். 26:42). கடைசியில் அவர் தமது ஜெபத்தின் மூன்றாவது வேளைக்குப் பின்பு, "... பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?" (யோவா. 18:11) என்று கூறக் கூடியவராய் இருந்தார். கும்பலானது இயேசுவைக் கைது செய்தபோது, கயிறுகள் அல்ல ஆனால் தேவனுடைய சித்தமே அவரைத் தப்பித்தலில் இருந்து விலக்கி வைத்திருந்தது.

நீங்கள் அடுத்தமுறை உங்கள் கெத்செமனே தோட்டத்தில் இருக்கும் போது, ஜெபிப்பதற்கு மறந்து விடாதீர்கள். நீங்கள் ஜெபிக்கையில், "என்னு டைய சித்தத்தின்படியல்ல, ஆனால் உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' என்று கூறுங்கள் மற்றும் அதை அர்த்தப்படுத்துங்கள். தேவனுக்குக் கீழ்ப்படிதலானது சுமையை இலகுவாக்காத அளவுக்கு எந்தச்

*சுமையும் அதிக பாரமானதாக இருப்பதில்லை.*

**பெலப்படுத்துதலின் ஒரு இடம்**

*கடைசியாக, கெத்செமனே தோட்டமானது பலப்படுத்துதலின் ஒரு இடமாக இருந்தது என்ற கருத்தை நமது கவனத்திற்கு நான் கொண்டு வருவேன். இயேசு, ''விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்து … கேட்கப்பட்டு'' என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கூறினார் (எபி. 5:7). அவரது ஜெபத்திற்குப் பதிலுரையாக, "வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பெலப்படுத்தினான்"[26] (லூக். 22:43).*

*கிறிஸ்து தமது ஜெபத்தை முடித்த வேளையில், அவரது உள்ளான போராட்டங்கள் ஓய்ந்திருந்தன; அவர் முன்வந்து கொண்டிருந்த கடுமை யான வேளைக்கு ஆயத்தமாய் இருந்தார். "அவர் தாம் பின்னடைவு கொண்டிருந்த பாத்திரத்தை எடுப்பதற்குத் தமது கையை முன்வைத்தார்"[27] (யோவா. 18:11ஐக் காணவும்). "பிதாவின் கரத்திலிருந்து வந்த எதுவும், எவ்வளவு கசப்பாயிருந்தாலும், உலகத்தின் கரத்திலிருந்து வந்த எதைக் காட்டிலும், [அது எவ்வளவு இனிமையாயிருப்பினும்] மேன்மையானதாக உள்ளது."[28]*

*அவர் தமது சீஷர்களிடத்தில், "இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது. எழுந்திருங்கள் போவோம்'' என்றார் (மத். 26:45ஆ, 46ஆ). அவரைக் கைது செய்ய வந்தவர்கள், அவர் தப்பி ஓடுவார் என்று எதிர்பார்த்திருக்கலாம்; அதற்குப் பதிலாக அவர், தைரியமாய் அவர்களைச் சந்திக்க முன்னேறிச் சென்றார் (யோவா. 18:4ஐக் காணவும்).*

*அந்த வேளையிலிருந்து, "[கூட்டத்தில்] அவர் ஒருவரே அமைதியே வடிவெடுத்த நபராக இருந்தார் … அவர் எல்லாக் காட்சிகளிலும் நிதானத்துடனும், உள்ளமைதியுடனும் காலங்களினூடே அதிசயமாய் விளங்குகின்ற மேன்மையுடனும்/கண்ணியத்துடனும் கடந்து சென்றார்."[29] பலியாளாக* (victim) *இருப்பதற்குப் பதிலாக "அவர் வெற்றியாளராக* (victor) *இருந்தார்."[30] போராட்டத்தின் அரங்கில், கிறிஸ்து வெற்றியாளராக இருந்தார்.*

*நீங்கள் உங்கள் கெத்செமனேயில் இருக்கும்போது, பலத்திற்காகக் கர்த்தரை நோக்குங்கள். நீங்கள் சந்திப்பதற்குத் தேவனால் உதவ முடியாத அளவுக்கு எந்த ஒரு அறைகூவலும் அதிகம் மூழ்கடிக்கப்படக்கூடியதாக இருப்பதில்லை (1 கொரி. 10:13; எபி. 13:5).*

## முடிவுரை

*கெத்செமனே - அங்கு என்ன நடந்தது என்பதைப் போதுமான அளவுக்கு விவரிக்கவோ, அதிகம் குறைவாக[வேனும்] விளக்கப்படுத்தவோ நாம் வகை எதையும் கொண்டிருப்பதில்லை. அது ஒரு பெருவருத்தத்தின் இடமாக, ஏமாற்றத்தின் இடமாக, மற்றும் கைவிடப்படுதலின் இடமாக இருந்தது என்று நாம் அறிய முடிகிறது. இந்த உண்மைகளில் இருந்து, நாம்*

*சகிக்க வேண்டியவற்றை இயேசு அறிகின்றார் மற்றும் புரிந்து கொண்டுள்ளார் என்பதை நாம் கற்றுக்கொள்ளுகின்றோம். இருப்பினும், தோட்டம் என்பது வேண்டுதலின் இடமாகவும், கீழ்ப்படிதலின் இடமாக வும் மற்றும் பெலப்படுத்துதலின் இடமாகவும் இருந்தது. இந்த சத்தியங்கள், கீழ்ப்படிதல், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது வெற்றிக்கு வழியாக உள்ளது என்று நமக்குப் போதிக்கின்றன. நமது சித்தத்தைத் தேவனுடைய சித்தத்திற்கு இசைவிப்பது என்பதே நம்மில் எவரும் எப்பொழுதும் சந்திப்பவற்றிலேயே மிகவும் கடினமான பணியாக உள்ளது; ஆனால் இயேசு அவ்வாறுதான் தமது வெற்றியை அடைந்தார், மற்றும் நாமும் அவ்வாறுதான் நம்முடைய வெற்றியை அடைவோம்.*

*நமது சித்தங்களைக் கீழ்ப்படுத்துதல் பற்றிப் பேசுவதில், நீங்கள் கிறிஸ்தவராவதற்கும் உண்மையுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கும் கர்த்தருடைய கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருக்கின்றீர்களா அல்லவா என்று நான் கேட்டாக வேண்டும். நீங்கள் மனம் வருந்திய விசுவாசி என்ற வகையில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் (முழுக்காட்டுதல்) பெற்றிருக்கின்றீர்களா (மாற். 16:16; அப். 2:38; கலா. 3:26, 27)? நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நீங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றாரோ, அவ்வாறு வாழ்ந்திருக்கின்றீர்களா? நீங்கள் அவரிடம் திரும்பி வர வேண்டியது அவசியம் என்றால், அதை இன்றே செய்யுங்கள் (அப். 8:22; யாக். 5:16).*

*2001ன் வசந்த காலத்தில், பேரழிவை ஏற்படுத்தும் சூறாவளிக் காற்றுகள், நான் நன்கு அறிந்த பகுதியான மகா ஓக்லஹாமா நகரின் பகுதியில் தாக்கின. எனது மனைவியும் நானும் அங்கு வாழ்ந்திருந்தோம், மற்றும் அங்கு இன்னமும் எங்களுக்குக் குடும்பம் உள்ளது. சூறாவளிக்காற்று ஒரு மனிதரின் இல்லத்தை நோக்கிப் பேரிரைச்சலுடன் சென்றபோது, அம்மனிதர் "கர்த்தாவே, நான் இன்னும் தயாராகவில்லையே!" என்று கதறியதாகச் செய்தி அறிவிப்பாளர் ஒருவர் கூறினார். எந்த வேளையிலும் தாக்கக்கூடிய துன்பகரமான நிகழ்ச்சிக்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர் களா? இல்லையென்றால், தயவு செய்து அதைக் குறித்து இன்றே அக்கறை கொள்ளுங்கள்!*

## குறிப்புகள்

இது, கெத்செமனேயில் இயேசு என்ற கருத்தின்மீது உயர்வாக வடிவமைக்கப்பட்ட ஒரு பிரசங்கமாக உள்ளது. இது தானே, ஒரு காட்சி எடுத்துரைப்புக்கு வழிநடத்துவதாக உள்ளது - அது, வரைபடங்களின் வரிசைத் தொடராகவோ, ஓவர்ஹெட் புரொஜெக்டர் எடுத்துரைப் பாகவோ அல்லது ஒரு பவர் பாயின்ட் எடுத்துரைப்பாகவோ இருக்கலாம். 1988ல் ஹார்டிங் பல்கலைக்கழகத்தின் பிரசங்க முகாமில், ஜான் கிப்ஸன் அவர்களால் மிக எளிமையான ஆனால் மிகவும் மனதைத் தொடுகின்ற வகையில் ஒரு எடுத்துரைப்பு பயன்படுத்தப்பட்டது.[31] அவர் மூன்று பிரதான தலைப்புகளைக் கொண்டிருந்தார்: வருத்தம் (Sorrow), தனிமை

(Solitude), *மற்றும் கீழ்ப்படிதல்* (Submission). *கெத்செமனே வரலாறு ஒரு எடுத்துரைப்பு அணுகுமுறைக்கும் இயல்பானதாக உள்ளது: துணைப் பாடத்தைக் காணவும்.*

---

*குறிப்புகள்*

[1]*“பரதீசு” என்பது, “தோட்டம்,” “பூங்கா,” அல்லது “காடு” என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. இது பெரும்பாலும், “மகிழ்வளிக்கும் தோட்டம்” என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது.* (The *Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons Ltd., 1971], 302.) [2]D. W. Cleverley Ford, *Preaching Through the Life of Christ* (Peabody, Mass.: Hendrickson Publications, 1994), 76. [3]*இயேசு உடல்ரீதியான பசியை அனுபவித்தது (மத். 4:2; 21:18) மற்றும் தாகத்தை அனுபவித்தது (யோவா. 4:6; 19:28) போன்ற மற்ற ஒரு சில நிகழ்ச்சிகள் மனதிற்கு வருகின்றன; ஆனால் இந்த நிகழ்ச்சிபோல் வேறு எந்த நிகழ்ச்சியும் வடிவளவானதாக வெளிப்படுத்துவதாக இருப்பதில்லை.* [4]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 686-87. [5]*நாம் இரகசியத்தின் வட்டாரம் ஒன்றில் - இயேசுவின் தேவத்துவம் எதிர். அவரது மனிதத்துவம் - என்பதில் பிரவேசிப்பதால், மெக்கார்வீயின் கூற்றும் எனது கூற்றும் நேரெதிராக இருத்தல் என்பது அவசியமானதாக உள்ளது. சிலர் எங்கள் கருத்தை ஒப்புக்கொள்வார்கள்; சிலர் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இந்தக் குறிப்பிட்ட கருத்தில் நீங்கள் எங்களுடன் ஒத்துப்போகின்றீர்களா இல்லையா என்பது முக்கியமல்ல; உங்கள் சுய சிந்தித்தலைத் தூண்டுவதற்காகவே நான் இந்தக் கண்ணோக்கை முன்வைக்கின்றேன்.* [6]*இந்தப் பிரசங்கம் முந்திய பாடத்திற்குப் பின்பு பிரசங்கிக்கப்பட்டால், பின்னணித் தகவல் சிறிதளவு தேவைப்படும் அல்லது ஒன்றும் தேவைப்படாது. இயேசுவும் அவரது சீஷர்களும் தோட்டத்திற்குச் செல்லுதல் பற்றிய விவரங்களை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.* [7]*இதைப் பிரசங்கிப்பதில் நான் ஒரு புன்சிரிப்புடன், “எனவே உங்கள் கடிகாரங்களைப் பார்த்துக்கொண்டு, கவலைப்படத் தொடங்க வேண்டாம். எஞ்சிய பகுதியை நான் வெகுவிரைவில் முடித்துவிடுவேன்” என்று கூறுவதுண்டு.* [8]*நாம் அறிந்த வரையில், தோட்டத்தில் இந்த நிகழ்ச்சியானது, இயேசு மிகச் சரியாக இவ்வார்த்தைகளைப் பேசிய ஒரே வேளையாக உள்ளது, ஆனால் இந்தச் சிந்தனையானது இதற்கு முன்னதாகவே அவரது மனதில் கடந்திருந்தது (யோவா. 12:27, 28ஐக் காணவும்).* [9]*யூதேயாவில் உறக்கமின்மை என்ற முந்திய பாடத்தில் “பாத்திரம்” என்பது பற்றிய குறிப்புகளைக் காணவும்.* [10]*இந்த நிலையானது,* hematidrosis *அல்லது* hemohidrosis *என்று அழைக்கப்படுகிறது* (William D. Edwards, Wesley J. Gabel, and Floyd E. Hosmer, “On the Physical Death of Jesus Christ,” *Journal of the American Medical Association* (21 March 1986): 1456. A TV documentary on the life of Christ (December 2001) included a discussion of this phenomenon. *இலண்டன் நகரில் இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஒவ்வொரு நாளும் குண்டு வீசப்பட்ட வேளையில் வாழ்ந்த ஒரு பெண்ணைப் பற்றிய உதாரணம் கூறப்படுகிறது. ஒவ்வொரு குண்டு வெடிப்பின்போதும், அவளது நெற்றியிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்தது.*

[11]*மத்தேயு 16:21; 17:22, 23; 20:17-19.* [12]*இயேசுவின் முந்திய அறிவிப்புகளில் அவர் உண்மையில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொண்டிராத நிலையிலும் அது, அவரது சீஷர்களைக் கவலையால் நிரப்பிற்று (மத். 17:22, 23; லூக்.*

*18:31-34ஐக் காணவும்). ஒருவேளை அவர் கூறியது என்ன என்பதை விட அதிகமாக, அவரது மரணம் பற்றி அவர் பேசிய வழிமுறையானது அவர்களை அதிகமாகப் பாதித்திருக்கலாம். அவரது மரணம் பற்றிய அவரது முந்திய குறிப்புகளில் குறைந்தபட்சம், ஒன்றாவது, உள்ளான போராட்டத்தை மறைமுகமாய் உணர்த்தியிருக்கலாம் (யோவா. 12:27, 28ஐக் காணவும்).* [13]*அதாவது, அவர் தமது “பணியின்” (ஊழியத்தின்) பூமிக்குரிய பருவத்தை முடித்துக்கொள்வார்.* [14]John D. Gipson, “Agony in Gethsemane,” *Harding University Lectures* (1988), 155. [15]Gipson, 155. [16]Edwards, Gabel and Hosmer, 1458. *குற்றவாளிகளின் உடைகளை உரிந்து போடுதல் என்பது சிலுவையில் அறையப்படுதலில் கூடுதலாக இருந்த இன்னொரு வெட்கக்கேடாக இருந்தது: வேத வசனங்களில் நிர்வாணம் என்பது அடிக்கடி வெட்கக்கேட்டுடன் இணைவிக்கப்பட்டுள்ளது (ஏசா. 20:4; வெளி. 16:15; ஆதி. 2:25ஐ 3:8, 10உடன் ஒப்பிடவும்).* [17]Donald G. Miller, *Luke,* Layman’s Bible Commentary (Atlanta: John Knox, 1959), 155. [18]*The Guinness Book of Records* is a publishing listing of the current record holders for a wide range of activities. [19]*நீங்கள் அநேகமாக, ஒரு இடர்ப்பாடுமிகுந்த வேளையின்போது துணை யொன்றின் அவசியத்தை உணர்ந்தது பற்றிய தனிப்பட்ட விவரிப்பு ஒன்றை இவ்விடத்தில் பதிலுக்கு ஈடாகத் தரக்கூடும்.* [20]*அவர் தேவனால் கைவிடப்பட்டிருக்கவில்லை - ஆனால் இது இந்தப் பிரசங்கத்தின் பிற்பகுதியில் எடுத்துரைத்து முடிக்கப்படும்.*

[21]*யூதத்துவ இலக்கியத்தில், இயேசுவுக்கு முன்பு, தேவனை* “Abba” *என்று எவரேனும் அழைத்ததற்கான பதிவேடு எதுவும் இருப்பதில்லை.* “Abba” *என்ற வார்த்தை, நிருபங்களில் ரோமர் 8:15 மற்றும் கலாத்தியர் 4:6 ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது.* [22]*நீங்கள் வாழும் இடத்தில் “அப்பா” என்பதற்குக் குழந்தைகள் பயன்படுத்தும் ஒன்று அல்லது அதற்கு அதிகமான சொற்றொடர்களை நீங்கள் கொண்டிருக்கலாம்.* [23]*தொல்லையின் வேளைகளில் ஜெபித்தலுக்கான அவசியம் பற்றி அதிகமான தகவல்கள் இந்தப் பிரசங்கத்தில் கூட்டப்பட முடியும் மற்றும் வேண்டும். ஒருவேளை நீங்கள், கர்த்தரிடத்தில் ஜெபித்தது உங்களுக்கு மாபெரும் துன்ப வேளையில் பிழைத்திருக்க உதவிய வேளையொன்றைப் பற்றிக் கூறக்கூடும்.* [24]*இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கிக்கும்போது, இயேசுவின் கீழ்ப்படிதலின் வார்த்தைகள் பற்றிக் கூறுவதற்கு நான் அதிக விஷயங்களைக் கொண்டுள்ளேன்.* [25]Adapted from Rick Atchley, “Rematch in the Garden,” sermon preached at the Southern Hills church of Christ, Abilene, Texas, 25 March 1984. [26]*அந்தப் பாத்திரத்தை தேவன் அகற்றிப்போடவில்லை, ஆனால் அவர், இயேசுவுக்கு அதைத் தாங்குவதற்கான பலத்தைக் கொடுத்தார். நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது, அடிக்கடி, அவர் நமது சிரமங்களை அகற்றிப்போடுவதில்லை; அதற்குப் பதிலாக அவர், நமக்கு அவற்றைச் சுமப்பதற்கான பலத்தைத் தருகின்றார். இவ்வாறு அவர் நம்மை, இதே போன்ற சிரமங்களை எதிர்கொள்ளுகின்ற மற்றவர்களுக்கு உதவக்கூடியவர்களாக்குகின்றார் (2 கொரி. 1:4ஐக் காணவும்).* [27]Gipson, 158. [28]Atchley. [9]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 204. [30]Ibid.

[31]John D. Gipson, “Agony in Gethsemane,” *Harding University Lectures* (1988), 154-58.

*86*

# “இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?”

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #37*

VII. இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).
- H. வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).
  - 5. பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (மத். 26:58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54ஆ-62; யோவா. 18:15-18, 25-27).
  - 6. யூதர்களால் “விசாரிக்கப்படுதல்” (மூன்றாம் நிலை): சனதெரீன் சங்கத்தாரால் தண்டனை விதிக்கப்படுதல் (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1; யோவா. 18:28).
  - 7. ரோமர்களால் விசாரிக்கப்படுதல்:
    - a. முதல் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (குற்றம் அறியாதவராகக் காணப்படுதல்) (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:2-7; யோவா. 18:28-38).

### அறிமுகம்

இந்தப் பாடத்தில் நாம், இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகள் பற்றிய நமது படிப்பைத் தொடருகின்றோம். ஆளுநரான பிலாத்துவின் முன்னிலையில் கிறிஸ்து விசாரிக்கப்பட்டபோது, அந்த ஆளுநர் கூட்டத்தாரிடம், “... கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்?” என்று கேட்டார் (மத். 27:22). அந்தக் கேள்வியானது முதன்முதலில் ஒலிக்கப்பட்ட போது போலவே இன்றும் தகுதிவாய்ந்ததாகவே உள்ளது. இயேசுவைக் குறித்துக் கற்றுக்கொள்ளுகின்ற ஒவ்வொருவரும் அந்தக் கேள்விக்குப் பதில் அளித்தாக வேண்டும்.

அந்தக் கேள்விக்கு ஒரு சிலர் எவ்வாறு பதில் அளித்திருந்தனர் என்று நாம் ஏற்கனவே கண்டிருக்கின்றோம். எடுத்துக்காட்டாக, யூதாஸ் உண்மையில், “நான் அவரை விற்றுப்போடுவேன்!” என்று கூறினான். இன்றைய நாட்களில் சிலர் - புகழ், சந்தோஷம் அல்லது உடைமைகள் போன்ற சுயநல இலக்குகளுக்காக - இன்னமும் கர்த்தரை “விற்றுப்போட்ட”[1] குற்றத்தில் இருக்கின்றனர். சிலர் அவரை முப்பது வெள்ளிக்காசுகளை விடக்

கணிசமான அளவு குறைந்த தொகைக்கு "விற்றுப்" போட்டுள்ளனர்!

இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகள் பற்றிய நமது ஆய்வை நாம் தொடருகையில், "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு மற்றவர்கள் எவ்வாறு பதில் அளித்தனர் என்பதை அவ்வப்போது நான் குறிப்பிடுவேன். "கர்த்தரைக் குறித்து நான் என்ன செய்துள்ளேன்?" என்று ஒவ்வொரு நபரும் கேட்கும்படி அறைகூவல் விடுதலே எனது நோக்கமாக உள்ளது.

## பேதுருவின் மறுதலிப்பு
## (மத். 26:56-58, 69-75; மாற். 14:54, 66-72; லூக். 22:54-62; யோவா. 18:15-18, 25-27)

முந்திய பாடத்தில் நாம், தோட்டத்தில் இயேசுவின் ஜெபம், அவர் கைது செய்யப்படுதல் மற்றும் அவரை யூதர்கள் "விசாரணை" செய்ததின் முதல் படிநிலை ஆகியவற்றைப் பற்றிப் படித்தோம். இந்தப் பாடம் தொடங்குகையில், நாம் இயேசு கைது செய்யப்பட்ட நிகழ்ச்சிக்குத் திரும்புதல் அவசியமாக உள்ளது.

கிறிஸ்து கைது செய்யப்பட்டபோது, "சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத். 26:56). இருப்பினும், இயேசு இழுத்துச் செல்லப்பட்டபோது, பேதுருவும் யோவானும்,[2] அவரையும் அவரைப் பிடித்துக்கொண்டு போனவர்களையும், தூரத்திலே[3] பின்பற்றிச் சென்றனர், அந்த ஊர்வலம் பிரதான ஆசாரியரின் வீடு சென்று சேர்ந்தவரைக்கும் அவர்கள் இவ்வாறு பின்பற்றிச் சென்றனர் (மாற். 14:54; யோவா. 18:15; லூக். 22:54). பிரதான ஆசாரியரின் வீட்டாருக்கு அறிமுகமாகியிருந்த யோவான்,[4] முற்றத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டார் (யோவா. 18:15). சனகெரீன் சங்கம் கூடிய இடத்திற்கு நேர்கீழே அந்த முற்றம் இருந்தது (மாற். 14:65, 66ஐக் காணவும்). யோவானின் செல்வாக்கின் மூலமாக, பேதுருவும் அங்கு நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார் (யோவா. 18:16, 17ஐக் காணவும்).[5]

அந்த முற்றத்தின் மையத்தில், குளிரை விரட்டுவதற்காக ஒரு சிறிய கரிநெருப்பு மூட்டப்பட்டிருந்தது (யோவா. 18:18; லூக். 22:55). அவ்விடத்திற்கு உரியவர்போன்று நடிக்க முயற்சி செய்த பேதுரு, இயேசு கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியின் "முடிவைப் பார்க்கும்படி" நெருப்பின் அருகில் அமர்ந்தார்[6] (மத். 26:58). அங்கு குளிர்காய்ந்து கொண்டிருந்தவர்களில், எஜமானரைக் கைதுசெய்திருந்த "அலுவலர்களும்" இருந்தனர் (மாற். 14:54; யோவா. 18:18).

முன்னதாக அன்று மாலை வேளையில் இயேசு, தமது சீஷர்கள் தம்மைக் கைவிட்டு விடுவார்கள் என்று முன்னுரைத்திருந்தார் (மத். 26:31). பேதுரு, "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்று மறுத்துரைத்திருந்தார் (மத். 26:33). அவருக்குக் கர்த்தர், "இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு[7] முன்னே, நீ என்னை

மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று கவலையுடன் கூறியிருந்தார் (மத். 26:34).

மறுதலித்தல் எண் ஒன்றானது வருவதில் தாமதிக்காதிருந்தது.[8] பேதுருவை அனுமதித்திருந்த பெண் ஊழியக்காரி அவரிடம் வந்து, "நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா?" என்று கேட்டாள் (யோவா. 18:17அ). அநேகமாக அவளுடைய சந்தேகமானது, அவர் யோவானுடன் இருந்திருந்த உண்மையினால் எழுப்பப்பட்டிருக்கும். பேதுரு விரைவாக, "நான் அல்ல" என்று கூறினார் (யோவா. 18:17ஆ), ஆனால் இது அந்தப் பெண்ணை திருப்தியடையச் செய்யவில்லை. அவள், "அவனை உற்றுப் பார்த்து" (லூக். 22:56அ), நெருப்பைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களிடம், "இவனும் அவனோடிருந்தான்" என்று கூறினாள் (லூக். 22:56ஆ). அவள் இந்த அப்போஸ்தலரிடம், ''நீயும் நசரேயனாகிய இயேசுவோடே இருந்தாய்" என்றாள் (மாற். 14:67; மத். 26:69ஐக் காணவும்). "அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது"; "ஸ்திரீயே, அவனை அறியேன்"; "நான் அறியேன்; நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது" (லூக். 22:57; மாற். 14:68) என்று "எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்" (மத். 26:70).

அப்போஸ்தலர் துரிதமாக நெருப்பு இருந்த இடத்திலிருந்து புறப்பட்டு வாசல் மண்டபத்தை நோக்கிச் சென்றார் (மத். 26:71), அங்கு முகப்பில் இருந்த நிழலில்[9] நிற்க முடியும் என்று அவர் நம்பினார் (மாற். 14:68).[10] இருப்பினும் அந்த இளம் பெண், அவரைத் தொடர்ந்து வந்து, "இவன் அவர்களில் ஒருவன்" என்று கூறினாள் (மாற். 14:69). வேறொரு பெண் ஊழியக்காரி, "இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான்" என்று கருத்தொருமைப்பட்டுக் கூறினாள் (மத். 26:71; லூக். 22:58அ). "அவனோ: 'அந்த மனுஷனை நான் அறியேன்' என்று ஆணையிட்டு,[11] மறுபடியும் மறுதலித்தான்" (மத். 26:72; லூக். 22:58ஆ-வைக் காணவும்). அது மறுதலித்தல் எண் இரண்டாக இருந்தது.

நாம், "பேதுரு இயேசுவை மறுதலித்தது ஏன்?" என்று கேட்க நிற்பது அவசியமாக உள்ளது. இந்த மீனவர் சுலபமாய்ப் பயமுறுத்தப்படக் கூடியவராக இருந்தவரல்ல. இவர் தோட்டத்தில் தமது வீரத்தன்மையை நிரூபித்திருந்தார். இவர் இயேசுவின் எதிரிகளால் சுற்றிச் சூழப்படக்கூடிய இடமான, அரண்மனை முற்றத்திற்கு வந்ததில் தமது தைரியத்தை(அல்லது குறைந்தபட்சம் தமது மடத்துணிச்சலை)ச் செயல்விளக்கப்படுத்தியிருந்தார். மேற்கண்ட கேள்விக்கு நாம் நிச்சயத்தன்மையுடன் பதில் அளிக்க முடியாது, ஆனால் பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: பேதுரு குழப்பமுற்று இருந்திருக்க வேண்டும்; அவர் சந்தேகத்துடன் போராடிக்கொண்டும் இருந்திருக்கலாம். இயேசு கைது செய்யப்பட, விசாரணை செய்யப்பட மற்றும் மரணத்திற்கு உட்படுத்தப்பட முடியும் என்ற கருத்தானது, மேசியாவைப் பற்றிய அவரது முன்னுருவான கருத்திற்குப் பொருந்தி வரவில்லை (மத். 16:22) என்பது ஒரு விஷயமாக இருந்தது. அவர் அநேகமாக, தமது பட்டயத்தைப் பயன்படுத்துவதற்கு, தமது எஜமானர் ஏன் அனுமதிக்காதிருந்தார் என்பதைப் புரிந்து உணர்ந்து கொள்ள முடியாதிருந்தார் என்பது (மத். 26:52) இன்னொரு விஷயமாக இருந்தது.

சாதாரணமாக, சுய உறுதிவாய்ந்தவராக இருந்த இம்மனிதர், அரண்மனை முற்றத்தினுள் நடந்து சென்ற வேளையில், இவர் ஊறுபடக்கூடியவராக, மிகவும் ஊறுபடக்கூடியவராக இருந்தார்.[12]

அப்போஸ்தலர் தனியே விடப்பட்டு ஒருமணி நேரம் கடந்திருந்தது, ஆனால் பின்பு, "வேறொருவன் அவனைப் பார்த்து: 'மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான், இவன் கலிலேயன்தான்' என்று சாதித்தான்." அதற்குப் பேதுரு: "மனுஷனே, நீ சொல்லுகிறதை அறியேன்" என்றான் (லூக். 22:59, 60அ). அருகில் நின்றிருந்த சிலர், "மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது'' என்று கூறிச் சேர்ந்து கொண்டனர் (மத். 26:73). கலிலேயர்களின் வட்டாரமொழி வழக்கு வித்தியாசமானதாக இருந்தது: தங்கள் வார்த்தைகளில் அவர்கள் குழறுவதோடு, பல எழுத்துக்களை ஒன்றுபோலவே உச்சரித்து, மற்ற எழுத்துக்களை உச்சரிக்காமல் விட்டுவிடுவார்கள். அந்தக் கூட்டத்தில், மல்குஸுக்கு உறவினன் ஒருவன் இருந்தான் (யோவா. 18:10ஐக் காணவும்). அவன், ''நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காண வில்லையா?" என்று கேட்டான் (யோவா. 18:26). பேதுரு, "அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான்" (மத். 26:74அ). NIV வேதாகமம், "அவன் தன்னையே சபிக்கவும், அங்கிருந்த வர்களிடத்தில் ஆணையிடவும் தொடங்கினான்" என்று கூறுகிறது. அது மறுதலித்தல் எண் மூன்றாக இருந்தது.

இயேசு முன்னுரைத்திருந்தபடி - அவன் இப்படிச் சொன்னவுடனே "சேவல் கூவிற்று"[13] (லூக். 22:60ஆ; மத். 26:74ஆ; யோவா. 18:27ஆ-வைக் காணவும்). அந்த வேளையில், "கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார்" (லூக். 22:61அ). ஒருவேளை இயேசு ஒரு ஜன்னல் மூலமாகப் பேதுருவைக் கீழ்நோக்கிப் பார்த்திருக்கலாம். ஒருவேளை, அவர் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கூட்டிச் செல்லப்படுகையில், அவர் முற்றத்தைக்கடந்து சென்று, தமது பார்வையை அந்த அப்போஸ்தலர் மீது திருப்பியிருக்கலாம். கர்த்தருடைய பார்வையை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அது எத்தனை உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்: வருத்தம், இடித்துரைத்தல் ... ஆனால் அன்பும்கூட இருந்தது, எப்போதுமான அன்பு! இயேசு பேதுருவை நோக்கிப் பார்த்தபோது, அந்த அப்போஸ்தலர், "சேவல் கூவுகிறதற்கு[14] முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே ... நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான்" (லூக். 22:61ஆ, 62). காற்றினால் அடிபட்டிருந்த அவரது கன்னங்களின் வழியாகக் கண்ணீர் வழிந்தோடிற்று.

"இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு நாம் எப்போதாவது, ''நான் அவரை மறுதலிப்பேன்'' என்று கூறியிருக்கின் றோமா? கர்த்தருக்காகவும் அவரது வசனத்திற்காகவும் உறுதியாய் நிற்பதற்குப் பதிலாக, அமைதி காத்தல் என்பது சுலபமாக - மற்றும் பாதுகாப்பாக - இருந்த வசதியற்ற சூழ்நிலைகள் எதிலாவது நம்மை நாம் கண்டிருக்கின்றோமா?[15] இது ஒருபோதும் நடக்கமுடியாது என்று நினைக்

காதீர்கள்; பேதுரு விழுந்துபோக முடியுமென்றால், நாமும்கூட விழுந்து போக முடியும் (1 கொரி. 10:12ஐக் காணவும்).

இருப்பினும், பேதுருவின் வரலாறானது, தோல்வியே முடிவானதல்ல என்பதையும் அறிவிக்கிறது. அதைப் பற்றி நாம் பிந்திய ஒரு பாடத்தில் அதிகமாய்க் கூறுவோம்.

## சனதெரீன் சங்கத்தின் பழிப்புரை (மத். 27:1, 2; மாற். 15:1; லூக். 22:66-23:1)

இப்போது நாம் இயேசு விசாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் விவரத்திற்குத் திரும்புவோம். நாம் இவ்வாறு செய்கையில், "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு நாம் இன்னொரு பதிலைக் கண்டறி கின்றோம். சனதெரீன் சங்கம் உண்மையில், ''நாங்கள் அவரைப் பழித்துரைப்போம்!" என்று கூறிற்று.

காய்பாவின் வீட்டில் சனதெரீன் சங்கம், இரவு நேரத்தில் கூடிய தென்பது சட்டவிரோதமானதாக இல்லாதிருப்பினும், முறையற்றதாக இருந்தது.[16] ஒரு புதிய நாள் நெருங்கிக் கொண்டிருக்க (மாற். 15:1அ; லூக். 22:66ஐக் காணவும்), "அலுவலக ரீதியான" ஒரு கூட்டத்திற்காக, இயேசு ஆலோசனைச் சங்கத்தின் அறைக்குள்[17] கூட்டிச் செல்லப்பட்டார் (லூக். 22:66).

ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினர்கள்[18] இரு மடங்கான நோக்கங் கொண்டிருந்தனர். முதலாவது, அவர்களுக்கு, இரவுவேளையில் தண்டனை விதிக்கப்பட்டதற்கான முறைசார்ந்த உறுதிப்பாடு தேவைப்பட்டது. அவர்கள் மீண்டுமாக இயேசுவிடம், "நீ கிறிஸ்துவா? அதை எங்களுக்குச் சொல்" என்று கேட்டனர் (லூக். 22:67அ; மத். 26:63ஐக் காணவும்). அவர், "நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள். நான் உங்களிடத்தில் வினாவினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள்"[19] என்றார் (லூக். 22:67ஆ, 68). LB என்ற வேதாகமப் பொழிப்புரையில், "... நீங்கள் என்னை நம்ப மாட்டீர்கள் அல்லது எனது வழக்கை முன்னிறுத்த என்னை அனு மதிக்க மாட்டீர்கள்" என்றுள்ளது. இருப்பினும் அடுத்ததாக, இயேசு தம்மை "மனுஷகுமாரன்" என்ற பட்டப்பெயரால் குறிப்பிட்டார் (லூக். 22:69).[20] தெய்வீகத்துவத்திற்கான இயேசுவின் உரிமைகோருதலைக் கேட்ட ஆலோசனைச் சங்கத்தார் பொங்கியெழுந்தார்கள்: "அப்படியானால், நீ தேவனுடைய குமாரனா?" (லூக். 22:70அ). அவர், "நான் அவர்தான்"[21] என்று பதில் அளித்தார் (லூக். 22:70ஆ). அவர்கள் இன்முகத்துடன், "இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன?[22] நாமே இவனுடைய வாயினாலே கேட்டோமே" என்று வியப்புற்றுக் கூறினர் (லூக். 22:71).

இரண்டாவது விஷயம் ஒன்றும் தீர்க்கப்பட வேண்டியிருந்தது.[23] அவர்கள் இயேசுவைத் தேவதூஷணக் குற்றம்சாட்டி மரணத்திற்கு உட்படுத்தியிருந்தனர் (மத். 26:65, 66), ஆனால் அவர்களே அவருக்குச் சட்டப்படி தண்டனையை நிறைவேற்றக் கூடாதிருந்தது (யோவா. 18:31).[24] ரோம ஆளுநர், தேவதூஷணம் என்ற மதரீதியான குற்றச்சாட்டைப் பற்றி

அக்கறையெதுவும் எடுத்துக்கொள்ள மாட்டார் என்பதால், அவர்கள் அந்த அலுவலரின் மனதை ஈர்க்கக்கூடிய அரசியல்ரீதியான ஒரு குற்றச்சாட்டைக் கற்பனையாகப் புனைய வேண்டியதாக இருந்தது. இதை அவர்கள் செய்த பின்பு (லூக். 23:2ஐக் காணவும்), "அவர்களுடைய கூட்டத்தாரெல்லாரும் எழுந்திருந்து, அவரைக் கட்டி கொண்டுபோய், தேசாதிபதியாகிய பொந்திய பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்" (லூக். 23:1; மத். 27:2).[25]

"நாங்கள் அவரைப் பழித்துரைப்போம்" என்ற சனதெரீன் சங்கத்தின் பதிலானது இன்றைய நாட்களில் இன்னமும் கேட்கப்படுவது கவலைக் குரியதாக உள்ளது. ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினர்கள் போலவே, சிலர், இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்ற சாட்சியத் தைத் தீவிரமாகக் கருதுவதற்கு மனவிருப்பமற்று இருக்கின்றனர். அவர்களின் அவிசுவாசத்தில், அவர்கள் வேதாகமத்தில் அவரது வாழ்வு பற்றிக் காணப்படும் உண்மைகளை, கலிலேயாவில் இருந்து வந்த விவரண மற்ற, வறிய கல்வி பெற்ற, ஒரு நாடோடிப் பிரசங்கியார் என்ற அளவுக்கு வரும்வரை உரிந்துபோடுகின்றனர். அது போன்ற வண்ணமற்ற பண்புடைய ஒருவர் வரலாற்றின் ஓட்டத்தையே மாற்றக்கூடுமென்றால், அது தேவனை நம்பாதவர்கள் புறக்கணிக்கின்ற வேதாகமத்தின் அற்புதங்கள் எதைக் காட்டிலும் மாபெரும் அற்புதமாக உள்ளது! என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். நாம் யாவரும் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் நம்மில் எவரும் "நான் அவரைப் பழித்துரைப்பேன்" என்று கூறுவதினால் குற்றப்படாதிருக்கவும் நான் ஜெபிக்கின்றேன்.

## பிலாத்துவின் இக்கட்டான நிலை (மத். 27:11-14; மாற். 15:2-5; லூக். 23:1-7; யோவா. 18:28-38)

சனதெரீன் சங்கத்தின் பிரதிநிதிகள் இயேசுவைப் "பிலாத்துவினிடத் திற்குக்" கொண்டுபோனார்கள் (லூக். 23:1). பொந்திய பிலாத்து யூதேயா (லூக். 3:1) மற்றும் சமாரியா முழுவதற்கும் அப்போதைய ரோம ஆளுநராக இருந்தார்.[26] ஒரு ஆளுநர் என்ற வகையில் சமாதானத்தைக் காப்பதும் ரோமாபுரிக்கு வரிவசூலிப்பதும் அவரது முதன்மையான கடமைகளா யிருந்தன. அவர், "மக்களின் சொந்த அரசாங்கத்தின் மூலம் - இவ்விஷயத்தில் சனதெரீன் சங்கத்தின்மூலம் - மரணதண்டனை பெற்ற எவரொருவருக்கும் மரண தண்டனையை அங்கீகரித்துச் செயல்படுத்துவித்தல்" என்ற ருசியற்ற பொறுப்பையும் கொண்டிருந்தார்.[27]

எருசலேமில் பிலாத்துவின் தலைமையகம்[28] இருந்த, "பிரட்டோரியம்" என்று அழைக்கப்பட்ட இடத்திற்குத் தலைவர்கள் இயேசுவைக் கூட்டிக் கொண்டு செல்லுகையில், அது இன்னமும் மிகவும் அதிகாலை[29] வேளையாக இருந்தது (யோவா. 18:28அ). "பிரட்டோரியம்" என்பது இலத்தீன் மொழி யிலிருந்து எடுக்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.

[இது தமிழ் வேதாகமத்தில் "அரண்மனை" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.] இந்தச் சொற்றொடர், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ரோம ஆளுநரின் அலுவலகரீதியான வசிப்பிடத்தைக் குறிப்பிட்டது (அப். 23:35ஐக் காணவும்). ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, எருசலேமில் இருந்த பிரட்டோரியம் அந்தோனியா கோட்டையில் (இது அந்தோனியா அரண் என்றும் அறியப்பட்டிருந்தது) அமைந்திருந்தது, இது தேவாலய வளாகத்தின் வடமேற்கு மூலையில் அமைந்திருந்தது.[30] இன்றைய நாட்களில் சிலர், நகரத்தின் மேற்குப் பகுதியில் இருந்த மகா ஏரோதுவின் அரண்மனையில் பிலாத்து தங்கியிருந்திருப்பார் என்று நினைக்கின்றனர்,[31] ஆனால் இன்னும் மற்றவர்கள் இந்தப் பாரம்பரியமான இடத்தையே விரும்பிக் குறிக்கின்றனர். பாஸ்டியன் வேன் எல்டெரென் என்பவர், "அங்கிருந்த இறுக்கமான சூழ்நிலையானது பிலாத்துவை, பஸ்கா வேளையில் நடைபெறும் செயல்களின் மையமான தேவாலயத்திற்கு அருகில் இருத்தலைக் கேட்டுக்கொண்டிருந்தன, இது இயேசுவை விசாரித்த போது பிலாத்து அந்தோனியோ கோட்டையில் இருந்தார் என்ற கருத்தை ஆதரிப்பதாக உள்ளது" என்று கவனித்துள்ளார்.[32]

பிரட்டோரியம் என்பது புறஜாதியாரின் எல்லைப் பகுதியாக இருந்தது; யூத உயரதிகார வர்க்கத்தினர் "தீட்டுப்படாமல்[33] பஸ்காவைப் புசிக்கத் தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந் தார்கள்" (யோவா. 18:28ஆ). "பஸ்கா இராப்போஜனம்" முந்திய மாலை வேளையில் உண்ணப்பட்டிருந்ததால் (மத். 26:17-19; மாற். 14:12, 14, 16; லூக். 22:8, 11, 13, 15), இவ்விடத்தில் "பஸ்கா" என்று குறிப்பிடப்படுவது, எட்டுநாள் பண்டிகையின் தொடர்பாக உண்ணப்பட்ட மற்ற உணவு களைக் குறிப்பதாக இருக்க வேண்டும். மாய்மாலமான அந்தத் தலைவர் கள், குற்றமறியாத ஒரு மனிதனை ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தத் தயங்காதிருந்தனர், ஆனால் அவர்கள் "சடங்காச்சாரமான சுத்தமின்மை"யி னால் தங்களை இடர்ப்பாட்டிற்கு ஆளாக்கமாட்டார்கள் (யோவா. 18:28; NIV).

யூதத்துவப் பிரதிநிதிகள் ஒரு கைதியைக் கொண்டு வந்துள்ளனர் என்று பிலாத்து அறிந்தபோது, அவர்களிடத்திற்கு வெளியே சென்ற அவர், "இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள்?" என்று கேட்டார் (யோவா. 18:29).[34] முதலில் யூதத்தலைவர்கள் தங்கள் வேண்டுகோளினால் மாத்திரமே, ஆளுநர், இயேசுவை, மரணத்திற்குத் தீர்ப்பிட வைக்க முயற்சி செய்தனர் (யோவா. 18:30). யூதர்களுடன் ஒத்துழைத்தல் என்பது பிலாத்துவுக்கு ஆர்வமுள்ள விஷயமாகவே இருந்தது, ஆனால் அது மிகவும் அதிகம் கேட்பதாக இருந்தது. பிலாத்து, "இவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள்" என்று கூறியபோது (யோவா. 18:31அ), அவர் தமது கையை ஆட்டி யூதர்களைக் கலையச் செய்ததை என்னால் காணமுடிகிறது.

தலைவர்கள், ஆளுநரிடத்தில் இயேசுவைக் கொண்டு வரவேண்டி யிருந்தது ஏன் என்பதை விரைவிலேயே அவருக்குக் கூறினார்கள்: "ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை"

(யோவா. 18:31ஆ). யூதர்களுக்குச் சில சலுகைகள் அனுமதிக்கப்பட்டிருந்தன, ஆனால் "வாழ்வு மற்றும் மரணம் ஆகியவற்றின் உரிமையை ரோம அரசு தன்னகத்தே தக்கவைத்திருந்தது."[35] இந்தச் சூழ்நிலையானது இன்னவிதமாய் இயேசுவின் மரணம் இருக்கும் என்ற அவரது வார்த்தைகளைச் சாத்தியமாக்கிற்று என்று யோவான் சுட்டிக்காண்பித்தார் (யோவா. 18:32). யூதர்கள் மரண தண்டனையைக் கல்லால் எறிந்து நிறைவேற்றப் பிரியப்பட்டனர் (அப். 7:58ஐக் காணவும்), ஆனால் ரோமர்கள், சிலுவையில் அறைதலை விரும்பித் தேர்ந்து கொண்டனர். ஆலோசனைச் சங்கத்தினர் இயேசுவைப் பிலாத்துவினிடத்தில் கொண்டு போனபோது, இயேசு புறஜாதியாரின் கைகளினால், சிலுவையில் அறையப்பட்டு மரிப்பதாக அவரே கூறிய முன்னுரைத்தலை, அவர்கள் அறியாமலேயே நிறைவேற்றினார்கள் (யோவா. 12:32-34; மத். 20:18, 19; மாற். 10:33, 34ஐக் காணவும்).

"மரணம்" என்ற வார்த்தையானது ஆளுநரின் கவனத்தைக் கவர்ந்திருக்க வேண்டும்; இந்த வழக்கானது மரணத்திற்குரிய குற்றத்தை உள்ளடக்கியிருந்தது. அவர் கிறிஸ்துவை இன்னும் நெருக்கமாகக் காண்பதை நான் மனக்காட்சியில் காண்கின்றேன். ஆளுநர் ஒருவேளை இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க வேண்டும்.[36] கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது, அவர் (பிலாத்துவின் ஆளுகைப் பகுதியான) யூதேயா முழுவதிலும் இருமுறை விரிவாகப் பயணம் செய்திருந்தார்.[37] ஐந்து நாட்களுக்கு முன்பு அவர் ஆர்ப்பாட்டமாக எருசலேமுக்குள் பிரவேசித்திருந்தது - மற்றும் அதைத் தொடர்ந்து யூத அதிகாரிகளுடன் ஏற்பட்டிருந்த மோதல் ஆகியவை - நிச்சயமாகவே கவனிக்கப்படாமல் போயிருக்க மாட்டாது. பிலாத்துவினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த இராணுவப் படைகள், முந்திய இரவில் இயேசுவைக் கைது செய்ய உதவுவதற்குப் பணியமர்த்தப்பட்டிருந்தன. அந்த அதிகாரியின் சிந்தையில் ஓடிய எண்ணங்களை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "இம்மனிதன் யாராயிருக்கின்றான்?"

யூதத் தலைவர்கள், தாங்கள் திட்டமிட்டிருந்த மும்மடங்குக் குற்றச்சாட்டுகளைப் பிலாத்துவுக்கு முன்பாக அமைத்தனர்: "இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப் படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றஞ்சாட்டத் தொடங்கினார்கள்" (லூக். 23:2). இயேசு ஒரு ராஜாவாக இருந்தார் (மத். 2:2; 21:5; 27:11), ஆனால் இது ஒரு அரசியல்ரீதியான கருத்தின்படியல்ல, எனவே இந்த முறையீடுகளில் முதலாவதானது தவறாக வழிநடத்துவதாயிருந்தது, இரண்டாவதானது உண்மையற்றதாக இருந்தது (மத். 22:17-21) மற்றும் மூன்றாவதானது தெளிவற்றதாக இருந்தது. பின்னப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக இயேசு தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை - இது ஆளுநரை வியப்பில் ஆழ்த்தியது (மத். 27:12-14; மாற். 15:4, 5; ஏசா. 53:7ஐக் காணவும்).

பிலாத்து தமது அறைக்குள் சென்றார், இயேசு அவருக்கு முன்பாகக்

கொண்டு வரப்பட்டார் (யோவா. 18:33அ). இயேசு தம்மை ராஜா என்று உரிமைகோரினாரா இல்லையா என்ற குற்றச்சாட்டுதான் ஆளுநரைக் கவலைப்படச் செய்தது. பிலாத்து, "நீ யூதருடைய ராஜாவா?" என்று கேட்டார் (மத். 27:11அ; யோவா. 18:33ஆ-வைக் காணவும்). இதற்குக் கிறிஸ்து உடன்பாட்டுக் கருத்தில் பதில் அளித்தார்: "நீர் சொல்லுகிறபடி தான்" (மத். 27:11ஆ; மாற். 15:2; 1 தீமோ. 6:13ஐக் காணவும்).[38]

பின்பு இயேசு பிலாத்துவிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்: "நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்குச் சொன்னார்களோ?" (யோவா. 18:34). அவர் அநேகமாக, குற்றச்சாட்டின் ஆதாரமூலத்தை ஆழ்ந்து சிந்திக்கும்படி ஆளுநரிடம் கேட்டிருக்கலாம்.[39] இயேசு ரோமாபுரியின் அமைதிக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கின்றாரா இல்லையா என்பதை எவரொருவராவது அறியவேண்டு மென்றால், அவர் ஆளுநராகவே இருந்திருக்க வேண்டும். இதற்கு மறுபுறத்தில், இந்தக் குற்றச்சாட்டு யூதத்தலைவர்களிடம் தொடங்கி யிருந்தது என்றால், இந்தக் குற்றச்சாட்டைப் பற்றி சந்தேகப்பட வேண்டியதாக இருந்தது. சனதெரீன் சங்கமானது ரோமப் பேரரசின் நலனைக் குறித்து தனது அக்கறையுள்ள நிலையில் மிக அரிதாகவே அறியப்பட்டது.

குற்றச்சாட்டு யூதர்களிடத்திலிருந்து வந்தது என்பதைப் பிலாத்து ஒப்புக்கொண்டார், மற்றும் அவர் இயேசு யூதர்களை இவ்வாறு தூண்டும் படிக்கு, என்ன செய்திருந்தார் என்று விளக்கம் அளிக்கும்படி வற்புறுத்தி னார் (யோவா. 18:35). அந்தக் கேள்விக்குக் கிறிஸ்து பதில் அளித்தார், ஆனால் அவர் அந்த ரோம அதிகாரி புரிந்துகொள்ளும் வகையில் பதில் அளிக்கவில்லை. அவர், "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோவா. 18:36ஆ)[40] என்று கூறினார். அதுவே பிரச்சனையின் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது: இயேசு, யூதர்கள் எதிப்பார்த்திருந்தபடியாக, "இவ்வுலகத்தின்" அரசியல் ரீதியான, பட்டயம் சுழற்றும் அரசராக வந்திருந்ததில்லை, எனவே அவர்கள் அவரைப் புறக்கணித்திருந்தனர் (மத். 21:42).

இயேசுவின் இராஜ்யம் "இவ்வுலகத்திற்குரியதல்ல" என்பதற்கு அவர் நிரூபணம் கொடுத்தார்: "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் இராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" (யோவா. 18:36ஆ).[41] தடுமாறிய பிலாத்து, தமது கேள்வியை வேறு சொற்றொடர்கள் கொண்டு அமைத்துக் கேட்டார்: "அப்படியானால் நீ ராஜாவோ?" (யோவா. 18:37அ). கிறிஸ்து, "நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன்; இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்று பதில் அளித்தார் (யோவா. 18:37ஆ).

குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் நியாயாதிபதிக்கும் இடையில் நடந்த இந்தக் கருத்துப் பரிமாற்றத்தை பிலாத்துவுக்கு இயேசுவின் பிரசங்கம் என்ற

வகையில் நினைத்துப் பாருங்கள்: ஆளுநர் தம்மை யார் என்று ஆழ்ந்து சிந்திக்கும்படியான ஒரு வேண்டுகோளாகவும், பிலாத்து தமது வாழ்வை மாற்றி, இரட்சிப்படைவதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருந்தது. ஆனால், உலகப்பிரகாரமான இந்த ஆளுநர் கவலை தரத்தக்க வகையில், "சத்திய மாவது என்ன?"[41] (யோவா. 18:38அ) என்று கேட்டுவிட்டு வெளியே சென்று விட்டார். பிரான்சிஸ் பேக்கன் என்பவர், "சத்தியமாவது என்ன? என்று வேடிக்கையாகக் கேட்ட பிலாத்து, ஒரு பதிலுக்காக அங்கு தங்கியிருக்க வில்லை" என்று எழுதினார்.[42]

இயேசு யார் என்பதைப் பிலாத்து அறியாதிருந்தார், ஆனால் அவர் [இயேசு] மரணத்திற்கு ஏதுவான குற்றம் எதையும் செய்திருந்ததில்லை என்பதை அவர் [பிலாத்து] அறிந்திருந்தார். ஆளுநர் வெளியே சென்று தமது தீர்ப்பை அறிவித்தார்: "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" (யோவா. 18:38ஆ). பிலாத்து, தமது தீர்ப்பானது இயேசுவின் விரோதிகளை அமைதிப்படுத்தும் என்று நினைத்தால், அவர் அவர்களைப் பற்றித் தவறாக கணித்தார் என்றே ஆகிறது. [இயேசுவின்மீது] கலகம் செய்தார் என்ற குற்றச்சாட்டை அவர்கள் வலியுறுத்தியபோது, அவர்களின் குரல்கள் உரத்தவையாகவும் காதுகளைத் துளைப்பவையாகவும் ஆகியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை: "இவன் கலிலேயா நாடு தொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதேயா தேசமெங்கும் உபதேசம்பண்ணி, ஜனங்களைக் கலகப்படுத்துகிறான்" (லூக். 23:5).

அவர்களின் கூக்குரலானது பிலாத்துவுக்கு இக்கட்டான நிலையை முன்னிறுத்திற்று. ஒரு புறத்தில், அவர் இயேசு "குற்றமற்றவர்" என்று அறிவித்திருந்தார், எனவே அவர் இயேசுவை உடனே விடுதலை செய்திருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. இதற்கு மறுபுறத்தில், அவர் யூதர்களை இன்னும் அதிகமாக பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. பிலாத்து இந்த இக்கட்டான நிலையில் அகப்பட்டது எப்படி என்று புரிந்துகொள்வதற்குப் பின்னணி விஷயங்கள் சிலவற்றை நாம் அறிவது அவசியமாகிறது. சமாதானத்தைக் காத்துக்கொள்ளுதல் என்பது ஆளுநரின் மிகமுக்கியமான கடமைகளில் ஒன்றாக இருந்தது, ஆனால் யூதேயாவில் பிலாத்துவின் நிர்வாகமானது, மோதல்கள், கலகங்கள் மற்றும் இரத்தம் சிந்துதலினாலும் கூட குறிப்பிடப்பட்டிருந்தது (லூக். 13:1ஐக் காணவும்). இன்னும் ஒரு பிரதான கலகம் என்பது அவர் ரோமாபுரிக்குத் திரும்ப அழைப்பித்துக் கொள்ளப்படுவதற்கு காரணமாகக் கூடும். ஆகவே - சாத்தியமானால் - யூதர்களை மகிழ்ச்சியுள்ளவர்களாகக் காத்துக்கொள்ளுதல் என்பது பிலாத்துவுக்கு அரசியல் ரீதியான உபாயமாக இருந்தது.

இயேசுவைக் குறித்து ஒரு முடிவை மேற்கொண்டு அதில் நிலைத் திருத்தல் என்பதைக் கடினமானதாகக் கண்டறிந்த முதல் மனிதனாகவோ அல்லது கடைசி மனிதனாகவோ பிலாத்து இருந்ததில்லை. இன்றைய நாட்களில் பலர், கர்த்தரைக் குறித்துத் தாங்கள் நிலைப்பாடு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று அறிந்திருந்தும், சரியானதைச் செய்யும் தைரியத்தில் குறைவுபடுகின்றனர். அவர்கள், குடும்பத்தை, நண்பர்களை அல்லது சகவேலையாட்களைப் பகைத்துக் கொள்ள மனவிருப்பம் இல்லா

திருக்கின்றனர். இன்று எலியா உயிருடன் இருந்திருந்தால், தவறு செய்கின்ற இந்த மக்களிடத்தில் அவர் தமது அறைகூவலைப் பின்வருமாறு நீட்டித்து உரைப்பார்: "நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்? இயேசு கர்த்தரென்றால், அவரைப் பின்பற்றுங்கள்!" (1 இரா. 18:21ஐக் காணவும்).

இயேசு "கலிலேயா தொடங்கி" மக்களைக் கலகப்படுத்தினார் என்று யூதத் தலைவர்கள் சுட்டிக்காண்பித்திருந்தனர் (லூக். 23:5). அதைப் பிலாத்து கேட்டபோது, அவர் தமது இக்கட்டான நிலைக்கு ஒரு தீர்வைக் கண்டதாக நினைத்தார்: அவர் "இந்த மனுஷன் கலிலேயனா என்று விசாரித்து, அவர் ஏரோதின் அதிகாரத்துக்குள்ளானவர் என்றறிந்து [லூக். 3:1ஐக் காணவும்], அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை அனுப்பினான்" (லூக். 23:6, 7). இருப்பினும் நாம் காணப்போகிறபடி, பிலாத்து தமது பிரச்சனையைத் தீர்த்து வைக்கவில்லை, அதை நீட்டித்திருக்க மட்டுமே செய்தார். "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியிலிருந்து தப்ப முடியாது.

## முடிவுரை

இந்தப் பாடத்தின் இரண்டாவது பகுதியில் நாம், இயேசுவை ரோமர்கள் விசாரணை செய்தது பற்றிய நமது படிப்பை நிறைவு செய்வோம், ஆனால் கிறிஸ்துவை எதிர்கொண்ட ஒவ்வொருவரும் அவரைக் குறித்துத் தாம் செய்ய வேண்டியதை முடிவு செய்ய வேண்டியிருந்தது என்ற உண்மையை மனதில் பதியச் செய்யப் போதுமான அளவு கருத்துக்களை நாம் கண்டுள்ளோம். இந்தப் பாடத்தை நாம் முடிக்கையில், நீங்களும்கூட ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று நான் உங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கின்றேன். நீண்ட காலத்திற்கு முன்பு, கிறிஸ்து பிலாத்துவின் முன்னால் நின்றார் - நீங்கள் அவரது வாழ்வைப் பற்றிப் படித்திருப்பதால், உண்மையில் அவர் இப்போது உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கின்றார். "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு இப்பொழுதே நீங்கள் பதில் அளிக்க வேண்டிய வேளையாக உள்ளது.

*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*கேள்வி உங்களிடம் வருகிறது!*
*நீங்கள் அதற்கு பதில் ஒன்று தரவேண்டும்,*
*ஏதாவதொன்றை நீங்கள் செய்யவேண்டும்.*

*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*இது இரவும் பகலும் வருகிறது;*
*உயர்த்தப்பட்ட ஊடுருவப்பட்ட கரங்களுடன்*
*அவர் காத்திருக்கின்றார்[;] நீங்கள் கூறுவதென்ன?*

*அது என்னவாயிருக்கும்?*
*அது என்னவாயிருக்கும்?*
*உங்கள் பதில் என்னவாயிருக்கும்?*

*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*ஓ, உங்கள் பதில் என்னவாயிருக்கும்?*[43]

## குறிப்புகள்

பேதுரு இயேசுவை மறுதலித்தல் பற்றிய விவரமானது பல பிரசங்கங்களுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வாக்கெடுப்பின்படி, இந்த வரலாறு, வேதாகம மாணவர்களுக்கு மிகவும் பிரியமானதாக உள்ளது. பேதுரு கீழ்நோக்கிப் படியிறங்கிச் சென்றது, கர்த்தரை மறுதலித்தலை விளைவித்தது என்று காண்பித்தல் இந்த வரலாற்றிற்கான ஒரு அணுகுமுறையாக உள்ளது; இது அவர் மேல்நோக்கிப் படியேறி வந்ததினால் மறுபடியும் கட்டியெழுப்பப்பட்ட நிகழ்ச்சிகளுடன் நேரெதிராக ஒப்பிடப்படக் கூடும். பேதுருவின் மறுதலித்தலை யூதாஸின் காட்டிக் கொடுத்தலுடன் ஒப்பிடுதல் என்பது இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்தும் இன்னொரு வழிமுறையாக உள்ளது. பேதுருவின் மனந்திரும்புதல் (அவருக்கு மீட்பை விளைவித்தது), யூதாஸின் மனவருத்தத்துடன் (இது அவனது தற்கொலையை விளைவித்தது) நேரெதிராக ஒப்பிடப்படக்கூடும்.

---

குறிப்புகள்

[1]*"கர்த்தரை விற்றுப்போடுதல்" என்ற சொல்விளக்கமானது இயேசுவைக் காட்டிலும் வேறு ஏதாவது அதிக முக்கியமானதாக (மதிப்புடையதாக) உள்ளது என்று நினைத்தலையும் கர்த்தருக்கும் அவரது சித்தத்திற்கும் முன்னதாக வேறு எதையாவது வைத்தலையும் குறிக்கிறது. அமெரிக்காவில் நாங்கள், "*selling *out* someone*" என்ற காட்டிக்கொடுத்தலை குறிப்பிடுகிற தொடர்புச் சொற்றொடர் ஒன்றையும் கொண்டுள்ளோம்.* [2]*யோவான் 18:15-18ல் பெயர் குறிப்பிடப்படாத சீஷன், யோவானே என்று யூகிக்கப்படுகின்றார்.* [3]*நம்மில், பிரசங்கிப்பவர்கள் பேதுரு "தூரத்தில்" பின்பற்றியிருக்கக் கூடாது என்று அடிக்கடி குறிப்பிட்டுள்ளோம். அநேகமாக, பேதுரு பின்பற்றியிருக்கவே கூடாது. இயேசு தமது பின்பற்றாளர்கள் தம்மைப் பிடிப்பவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும் என்று சுட்டிக் காண்பித்திருந்தார் (யோவா. 18:8).* [4]*இவர் பிரதான ஆசாரியருக்கு அறிமுகமானவர் என்று யோவான் 18:15 கூறுகிறது; இவர் அந்த வீட்டாருக்கு அறிமுகமானவர் என்று வசனம் 16 சுட்டிக் காண்பிக்கிறது. ஒருவேளை யோவான், ஒரு வியாபாரப் பழக்கவழக்கத்தில் இந்த வீட்டாரை அறிந்திருக்கலாம். (கடந்த காலத்தில் அவர்களுக்கு இவர் நல்ல மீன்களை வழங்கியிருக்கலாம்.) அப். 4:5-7, 13 வசனங்களும், யோவானின் பின்னணி பற்றிய சில தகவல்களைக் காய்பா அறிந்திருந்தார் என்று சுட்டிக்காட்டுகின்றன.* [5]*முற்றத்தில் பேதுரு குளிர்காயச் சென்றபோது, யோவானுக்கு என்னவாயிற்று? ஒருவேளை, அந்த வீட்டாருக்கு யோவான் அறிமுகமானவராக இருந்தபடியினால், அவர் வீட்டினுள் அனுமதிக்கப்பட்டிருக்கலாம். அபாயத்தைக் கண்டு அவர் அங்கிருந்து சென்றிருக்கலாம் என்பது இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது.* [6]*பேதுரு "நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்" என்று யோவான் 18:25 கூறுகிறது. அவர் சற்று நேரம்*

நின்றுகொண்டும், பின்பு சற்று நேரம் அமர்ந்து கொண்டும் இருந்திருக்கலாம். [7]மாற்கு சுவிசேஷத்தின்படி, ''சேவல் இருமுறை கூவுமுன்'' என்று இயேசு கூறியிருந்தார் (மாற். 14:30). முரண்பாடு எதுவும் இருப்பதில்லை; மற்ற சுவிசேஷப் பதிவேடுகளில் உள்ள சேவல் கூவுதல் என்பது இரண்டாவது கூவுதலாக இருந்தது என்பது உறுதி. [8]மறுதலிப்புகளின் மிகச் சரியான வரிசை முறையை நாம் அறிவதில்லை. தொடருகிற எடுத்துரைப்பானது இவ்வரலாற்றை ஒழுங்கமைக்கும் ஒரு வழிமுறையாக உள்ளது. ஒவ்வொரு சுவிசேஷ விவரமும் மூன்று மறுதலிப்புகளையும் கூறுகின்றன, ஆனால் இவை யாவையும் ஒரே மறுதலிப்புகளைக் கூறுவதில்லை. அநேகமாக, ஒரே ஒரு மறுதலிப்பு என்று எண்ணப்படக்கூடிய பல மறுதலிப்புகள் துரிதமான வரிசையில் நடைபெற்றிருக்கலாம். [9]இது அநேகமாக கூரையிலிருந்து தொங்கும் முன்வளைவுகளைக் குறிப்பதாயிருக்கலாம். [10]மாற்கு 14:68ன் முடிவில், பிற்காலத்தியக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில், "அப்பொழுது சேவல் கூவியது" என்ற சொற்றொடர் கூட்டப்பட்டுள்ளது [தமிழ் வேதாகமத்தில் இவ்வாறே உள்ளது]. பேதுரு துன்புறுத்தப்படுதலின்போது இடைபாகம் ஒன்றில் ஏதோ ஒருவேளையில் சேவல் முதல்முறை கூவிற்று (மாற். 14:72ஐக் காணவும்).

[11]இந்த ''ஆணை'' என்பது அநேகமாக, நாம் வீணாக வழங்குதல் என்று அழைப்பதைக் குறிப்பிடுவதில்லை, ஆனால் யூதர்களால் பயன்படுத்தப்பட்ட முறைப்படியான ஆணைகளைக் குறிப்பிடுகிறது. அவர், தாம் கூறியது சத்தியமாக இருந்தது என்று ஆணையிட்டார். [12]சாத்தான் தொடர்ந்து அவரைப் "புடைக்கத்" தொடங்கினான் (இப்புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "ஒருபோதும் மறக்கக்கூடாத இரவு" என்ற பாடத்தில் லூக். 22:31க்கான விளக்கவுரையை காணவும்). [13]மாற்கு சுவிசேஷத்தில், "உடனே, சேவல் இரண்டாந்தரம் கூவிற்று" என்றுள்ளது (மாற். 14:72அ). [14]மாற்கு 14:72ஆ-வில், "சேவல் இரண்டு தரம் கூவுகிறதற்கு முன்னே ..." என்றுள்ளது. [15]கர்த்தரை மறுதலித்தல் பற்றி, மத்தேயு 10:33 மற்றும் 2 தீமோத்தேயு 2:12 ஆகிய வசனங்களைக் காணவும். [16]''உங்கள் தீர்ப்பு என்ன?'' என்ற தலைப்பிலான, இயேசுவின் விசாரணைகள் பற்றிய பிரசங்கத்தில் காணவும். [17]இயேசு இரவு வேளைக் கூட்டத்திற்குப் பின் ஆலோசனைச் சங்க அறைக்கு கூட்டிச் செல்லப்பட்டபடியால், அந்த அறையானது, பிரதான ஆசாரியரின் வீட்டில் இருந்து சற்றுத் தூரத்தில் இருந்தது என்பது தெளிவு. இருப்பினும், அந்த அறை மிகச் சரியாக எங்கிருந்தது என்பது குறித்து கருத்து வேற்றுமை நிலவுகிறது. கடந்தகாலத்தில், பெரும்பாலானவர்கள், இது தேவாலய வளாகத்தில் பெண்களின் மண்டபத்திற்கு அருகில் இருந்தது என்று நினைத்தனர், ஆனால் இப்பொழுது இது தேவாலயப்பகுதிக்கு வெளியில் இருந்தது என்று சிலர் நம்புகின்றனர். [18]"ஆலோசனைச் சங்கத்தாரனைவரும்" இருந்தனர் என்று மாற்கு குறிப்பிட்டார் (மாற். 15:1), இது நிக்கொதேமு மற்றும் அரிமத்தியாவூர் யோசேப்பு ஆகியோரையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் (யோவா. 7:50; லூக். 23:50, 51). அவ்விரு மனிதர்களும் அங்கிருந்திருப்பார்களேயானால், அவர்கள் மறுப்புக் கூறிக் குரல் எழுப்ப ஒரு வாய்ப்புப் பெற்றிருந்தனரா? அல்லது அவர்கள் பேசுவதற்கு முன்பாகவே முழு விஷயமும் விரைவில் முடித்து வைக்கப்பட்டதா? நாம் அறிவதில்லை. [19]மேசியாவைப் பற்றிப் பழைய ஏற்பாடு கூறுவதென்ன என்பது பற்றியும், தமது சொந்த வாழ்வும் ஊழியமும் அந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியது எப்படி என்பது பற்றியும் கேள்விகளை அவர் கேட்டிருக்க முடியும். இருப்பினும் அவர்கள் பதில் அளிக்க மறுப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார் (மத். 22:41-46அ). [20]"யூதேயாவில் உறக்கமின்மை" என்ற முன்புள்ள பாடத்தில் மத்தேயு 26:64ன் மீதான குறிப்புகளைக் காணவும்.

[21]*கிரேக்க வேத வசனத்தில், "நான் அவர்தான் என்று நீங்கள் கூறுகின்றீர்கள்" என்றுள்ளது, இது உறுதிப்படுத்துதலைச் சுட்டிக்காண்பிக்கும் எபிரெயச் சொல்விளக்கமாக உள்ளது.* [22]*ஆலோசனைச் சங்க உறுப்பினர்கள் தீவிரமாயிருந்தனர், ஆனால் அவர்களின் கூற்றைப் பற்றி நகைச்சுவையான விஷயம் ஒன்றுள்ளது: அவர்கள் சாட்சி எதையும் கொண்டிருந்ததில்லை. இயேசு சாட்சியளிக்காதிருந்தால், அந்தக் காலைவேளையில் அவர்கள் சாட்சி எதையும் கொண்டிருக்க மாட்டார்கள்.* [23]*வரலாற்றின் இந்தப் பகுதியில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அரசியல் ரீதியான குற்றச்சாட்டு ஒன்றை வடிவமைத்தல் என்பது ஆலோசனைச் சங்கத்தின் முன்னிருந்த பணியின் பிரதான விஷயமாக இருந்திருக்கலாம். இது அவர்கள் இயேசுவைப் பிலாத்துவின் முன்பாகக் கொண்டு போவதற்கு அவசியமானதாக இருந்தது.* [24]*பிற்பாடு, அவர்கள் ஸ்தேவானை, சட்டவிரோதமாகக் கல்லெறிந்து கொன்றனர் (அப். 6:8-7:60); ஆனால், இயேசுவின் விஷயத்தில் அவர்கள் சட்டபூர்வமாய்த் தோன்றுதல் என்பதைக் காத்துக்கொள்ள விரும்பினர்.* [25]*சில ஒப்பீடுகள், யூதாஸின் தற்கொலையை சனதெரீன் சங்கத்தின் முறையான உறுதிப்பாட்டிற்குப் பின் உடனடியாக உள்நுழைக்கின்றன, ஏனென்றால் மத்தேயு சுவிசேஷத்தில் இவ்விடத்திலேயே இது வைக்கப்பட்டுள்ளது (மத். 27:3-10). இருப்பினும், இவ்வரலாற்றில் சில விவரங்கள், இது பிற்பாடு நடந்திருக்கலாம் என்று சுட்டிக்காண்பிக்கின்றன. எடுத்துக்காட்டாக, சனதெரீன் சங்கத்தார், பிரட்டோரியத் தில் பிலாத்துவுடன் விவாதிப்பதற்குப் பதிலாகத் திரும்பவும் தேவாலயத்திற்கு வந்தனர் (வ. 5). ஆகையால், எனது ஒப்பீட்டில், இவ்வரலாறு, பிலாத்து இயேசுவுக்கு மரணதண்டனை அளித்த பின்பு வைக்கப்பட்டுள்ளது.* [26]*பொந்தியு பிலாத்து* [மற்றும் *இயேசுவின் மரணம்*] *என்ற அடுத்த பாடத்தில் காணவும்.* [27]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1470. [28]*ரோம ஆளுநரின் பலஸ்தீனத் தலைமையகங்கள் செசரியாவில் இருந்தன (அப். 23:33ஐக் காணவும்), ஆனால் பிலாத்து, அடங்காத யூதர்கள்மீது ஒரு கண் வைத்திருப் பதற்காக யூதர்களின் பண்டிகை நாட்களின்போது எருசலேமுக்கு வந்திருந்தார்.* [29]*சற்று நேரத்திற்குப் பின்பு, இயேசு பிலாத்துவின் முன்பு இருமுறையும், ஏரோதுவின் முன்பு ஒருமுறையும் கூட்டிக்கொண்டு போகப்பட்டிருந்த பிறகு, அது காலை சுமார் ஆறு மணியாயிருந்தது என்று யோவான் கூறினார். "எல்லாரும் விடையளிக்க வேண்டிய ஒரு கேள்வி" என்ற இனிவரும் பாடத்தில் (யோவான் 19:14ன் மீதான குறிப்புகளைக் காணவும்). சனதெரீன் சங்கத்தார் இயேசுவைப் பிலாத்துவினிடத்தில் அதிகாலைக்கு முன்பு அவசரமாய்க் கூட்டிச் சென்றிருக்க வேண்டும்.* [30]இப்புத்தகத்திலுள்ள "இயேசுவின் கடைசி மணிவேளைகளின் பாதைகளாகக் கருத்துத் தெரிவிக்கப்படுபவை" அடங்கிய எருசலேமின் வரைபடத்தை காணவும். மேலும், பாரம்பரியமான ''துக்கத்தின் வழி'' என்பது (Via Dolorosa) இந்த இடத்தில்தான் தொடங்குகிறது. யோசிப்பஸ் என்பவர் கோட்டையைப் பற்றி விளக்கியுரைக்கையில், ''அதன் நேர்த்தியான அமைப்பினால், அது ஒரு *அரண்மனையைப் போலக் காட்சியளித்தது" என்று கூறினார்* (Josephus *Wars of the Jews* 5.5.8).

[31]The question regarding the place of Pilate's residence is discussed in John McRay, Archaelogy and the New Testament (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 114-19. [32]B. VanElderen, "Praetorium," *International Standard Bible Encyclopedia*, rev., gen. ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 114-19. மேலும், யூதப் பண்டிகைகளின்போது, கூடுதலாக ரோமப்படை வீரர்கள் செசரியாவில் இருந்து கொண்டுவரப்பட்டனர் என்பதைக் கவனிக்கவும். இவர்கள், தேவாலயப் பகுதியில் ஏற்படும் கலகங்களை அடக்கத் தயாராயிருக்கும் வகையில்,

சாதாரணமாக, அந்தோனியோ கோட்டையில்தான் முகாமிட்டிருந்தார்கள் (அப். 23:31-35). மத்தேயு 27:27ன்படி, ‘‘போர்ச்சேவகரின் கூட்டம்’’ முழுவதும் “பிரட்டோரியத்தில்” இருந்தது. இது, அந்தோனியோ கோட்டையே பிரட்டோரிய மாயிருந்தது என்று சுட்டிக்காண்பிக்கலாம். [33]புறஜாதியாரின் தங்குமிடத்தில் இருப்பதினால் தீட்டாகுதல் பற்றி, அப். 10:28ல் காணவும். பல யூதர்கள், பண்டிகையில் பங்கேற்கும்படிக்குத் தங்களைச் சுத்திகரித்துக் கொள்ளுவதற்காக (யோவா. 11:55) ஒரு வாரம் முன்னதாகவே எருசலேமுக்கு வந்திருந்தனர். யூதத் தலைவர்கள், ‘‘சாதாரண’’ யூதர்களை விடத் தாங்கள் குறைவான உணர்வுடையவர்கள் என்று தோற்றமளிக்க விரும்பாதிருந்தனர். [34]ரோமர்கள் இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகளின் மிகச் சரியான வரிசை முறையை நாம் உறுதியாய்க் கூற இயலாது. இந்த வரிசை முறையானது சாத்தியமான ஒரு ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளது. [35]Theodor Mommsen, quoted in Bruce Corley, “Trial of Jesus,” *Dictionary of Jesus and the Gospels*, eds. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 850. யோவான் 18:31ஆ-வுக்கு, யூதரல்லாதவர் ஒருவர் தேவாலயத்தின் பரிசுத்த பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தால் என்பதே சாத்தியமான ஒரு விதிவிலக்காக இருந்தது. [36]பிலாத்துவின் மனைவியினுடைய வார்த்தைகள் (மத். 27:19), இயேசுவைப் பற்றிய சில முன்னறிவை மறைமுகமாக உணர்த்துகின்றன; பிலாத்துவின் மனைவி இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால், பிலாத்துவும் நிச்சயமாகவே கேள்விப்பட்டிருக்க வேண்டும். [37]பிந்திய கால யூதேய ஊழியத்தைப் பற்றி இப்புத்தகத்தின் துவக்கத்திலுள்ள ஒப்பீட்டில் காணவும். கலிலேயாவில் இயேசுவின் வெற்றியானது ஏரோதுவின் கவனத்தை ஈர்த்திருக்கும் (மத்.14:1; லூக். 9:7-9); யூதேயாவில் இயேசுவின் வெற்றியானது பிலாத்துவின் கவனத்தையும் ஈர்த்திருக்கும். [38]இயேசு, “அவை உமது வார்த்தைகளே தவிர, என்னுடையவைகள் அல்ல’’ என்று கூறியதாகச் சிலர் நம்புகின்றனர் ஆனால் அவரது பதிலானது, ‘‘ஆம்’’ என்று வெளிப்படுத்தும் நிலவரமான ஒரு எபிரெயச் சொல்விளக்கமாக இருந்தது. [39]யோவான் 18:34ல் இயேசுவின் கேள்வியானது பல்வேறு விளக்கங்களுக்கு இலக்காகியுள்ளது. இங்கு தரப்பட்டுள்ள விளக்கம் பெரும்பாலும் ஒத்துப்போவதாக உள்ளது. [40]இயேசுவின் ராஜ்யமானது, “இவ்விடத்திற்குரியதல்ல [அல்லது “இவ்வுலகத்திற்குரியதல்ல”] என்ற அவரது கூற்றானது, இயேசு பூமிக்குரிய ராஜ்யத்தை அமைக்க பூமிக்கு மறுபடியும் வருவார் என்று போதிக்கின்றவர்களின் கவலைக்குரிய ஆதாரமூலமாக உள்ளது. அவர்கள் இந்த எளிய கூற்றை விட்டு விலகியிருந்து விளக்கம் தர முயற்சி செய்கின்றனர்.

[41]பிலாத்துவின் கேள்வியானது, “வாஞ்சையான ஒரு விசாரணையாகக் கருதப் பட்டுள்ளது ... இந்த விசாரணையானது ... ஏளனம் செய்யும் ஒரு கேள்வியாகத் தளர்வடைந்தது ...” (J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 707). அந்தக் கேள்வியைக் கேட்பதற்குப் பிலாத்து என்ன நோக்கத்தைக் கொண்டிருப்பினும், பதில் அளிக்கத் தகுதி வாய்ந்தவரிடமிருந்து எந்தப் பதிலையும் கேட்பதற்கு அவர் [பிலாத்து] அங்கு நிலைத்திருக்கவில்லை (யோவா. 17:17ஐக் காணவும்). [42]Francis Bacon, “Essays [1625], Of Truth,” quoted in *Bartlett’s Familiar Quotations, Expanded Multimedia Edition* (Time Warner Electronic Publishing, 1995). [43]John Robinson, “What Shall It Be?” *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994).

*87*

# எல்லாரும் விடையளிக்க வேண்டிய ஒரு கேள்வி

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #38*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*

H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*

7. *ரோமர்களால் விசாரிக்கப்படுதல் (தொடர்ச்சி):*

b. *இரண்டாம் நிலை: ஏரோது அந்திப்பாவுக்கு முன்பாக (குற்றம் இல்லாதவராகக் காணப்படுதல்) (லூக். 23:8-12).*

c. *மூன்றாம் நிலை: பிலாத்துவுக்கு முன்பாக (மரண தண்டனை விதிக்கப்படுதல்) (மத். 27:15-31அ; மாற். 15:6-20அ; லூக். 23:13-25; யோவா. 18:39-19:16).*

### அறிமுகம்

*நமது முந்திய பாடம், இயேசுவை விசாரணை செய்த நிகழ்ச்சிகளின் கடைசிப் பாடத்தின் முதல் பகுதியாக இருந்தது. "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்பதே அதன் வலியுறுத்தமாக இருந்தது (மத். 27:22ஐக் காணவும்). இருவர் தங்களின் பதிலுரைகளில் வலிவார்ந்தவர்களா யிருக்கக் கண்டோம்: உண்மையில் பேதுரு, "நான் அவரை மறுதலிப்பேன்!" என்று கூறினார், சனதெரீன் சங்கத்தார், "நாங்கள் அவரைப் பழித்துரைப் போம்!" என்று கூறினார்கள். இருப்பினும் இன்னொருவர் இந்தக் கேள்வி யுடன் போராடிக் கொண்டிருந்தார்: பிலாத்து, "நான் அவரை விடுதலை செய்வேன்" என்று கூறவேண்டும் என்பதை அறிந்திருந்தார், ஆனால் அவர் தாம் அதைச் செய்தால் ஏற்படக்கூடிய அரசியல் ரீதியான கலவரங்களை நினைத்துப் பயந்தார். பாடத்தின் இந்த இரண்டாவது பகுதியை நாம் படிக்கையில், "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு மற்றவர்கள் எவ்வாறு பதில் அளித்தனர் என்று கவனிப்போம். நாம் பிலாத்துவின் கடைசி பதிலையும் காண்போம்.*

## ஏரோது: “நான் ஆர்வமுள்ளவனாக மாத்திரம் இருப்பேன்” (லூக். 23:5-11)

*நமது முந்திய பாடத்தின் முடிவில், பிலாத்து தமது இக்கட்டான நிலைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டதாக நினைத்தார். அவர், இயேசு கலிலேயாவிலிருந்து வந்தவர் என்று அறிந்தார் (வ. 5, 6), அது ஏரோது அந்திப்பாவின் ஆளுகைப் பகுதிக்குள் இருந்தது, எனவே “அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதுவினிடத்தில் அவரை அனுப்பினான்”[1] (வ. 7). இயேசுவை ஏரோதிடம் திருப்பியதின்மூலம் ஆளுநர் அநேகமாக இருமடங்கான ஒரு நோக்கத்தை நிறைவேற்ற நம்பிக்கையாய் இருந்திருக்கலாம்: தொல்லை பிடித்த பிரச்சனையொன்றைத் தம்மைவிட்டு நீக்கிப் போடுவார், மற்றும் தமக்கும், செல்வாக்குமிகுந்த அந்த ஆட்சியாளருக்கும் இடையில் உள்ள உறவுமுறைகளை மேம்படுத்திக் கொள்ளவும் செய்வார் (23:12ஐக் காணவும்).[2]*

*ரோமப் படை வீரர்கள் இயேசுவை ஏரோதுவிடம் கூட்டிச் சென்றனர்.[3] அவர்களுக்குப் பின்னால் “பிரதான ஆசாரியரும் வேதபாரகரும்” விடாப்பிடியாகச் சென்றனர் (வ. 10). ஊர்வலமானது ஏரோது தங்கியிருந்த இடத்திற்குச் சென்றபோது, அந்த அரசன் “மிகவும் சந்தோஷப்பட்[டான்]; ஏனெனில் ஏரோது இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க விரும்பினான்” (வ. 8அ; மத். 14:1; லூக். 9:7-9ஐக் காணவும்). இயேசுவைப் பார்ப்பதற்கோ அல்லது அவருடைய போதனையைக் கேட்பதற்கோ ஏரோது விருப்பமாயிருந்ததில்லை; அவர் [ஏரோது] வெறும் ஆர்வம் கொண்டிருந்தார். இயேசுவுக்கு அவருடைய ஆர்வத்தைத் திருப்திப்படுத்தும் விருப்பம் எதுவும் இல்லாதிருந்தது (மத். 7:6ஐக் காணவும்). அவரிடத்தில் ஏரோது கேள்வி கேட்டபோது, “அவர் மறுமொழியாக அவனுக்கு ஒன்றுஞ்சொல்லவில்லை” (லூக். 23:9; ஏசா. 53:7ஐக் காணவும்). இந்த அரசர் ஒரு மந்திர வித்தைக் காட்சியால் பொழுதைப் போக்கலாம் என்றும் நம்பிக்கை கொண்டிருந்தார் (லூக். 23:8ஆ) - ஆனால் கிறிஸ்து ஒருக்காலும், வற்புறுத்துதலின் பேரில் அற்புதங்களைச் செய்ததில்லை (மத். 12:38, 39; 16:1, 4ஐக் காணவும்). அவரது “அடையாளங்கள்” அதிகம் மும்முரமான நோக்கங் கொண்டிருந்தன.*

*இயேசு கோமாளித்தனம்* [play the fool[4]] *செய்ய மறுத்தபோது, ஏரோது தனது சொந்தப் பொழுதுபோக்கினைக் கண்டுபிடித்தார். விரைவிலேயே ஒரு சர்க்கஸ் நடப்பது போன்ற சூழ்நிலை உருவாயிற்று. ஒரு பக்கத்தில் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகர்களும், குற்றச்சாட்டுகளை உரக்கக் கூறிக்கொண்டிருந்தனர் (லூக். 23:10). அறையின் மையத்தில், கோமாளி போல் உடை உடுத்தப்பட்ட[5] இயேசு இருந்தார், இவ்வேளையில் அரசனும் அவரது படைவீரர்களும் அவரை[இயேசுவை]ச் சுற்றி வந்து கேலி பேசி ஆடினார்கள் (லூக். 23:11அ).[6] கடைசியில் அவர்கள் அந்தப் பிள்ளை விளையாட்டில் களைப்புற்றனர், ஏரோது “அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்திற்கு அனுப்பினான்” (லூக். 23:11ஆ).*

*துரதிர்ஷ்டவசமாக, இன்றைய நாட்களில் சிலர், இயேசுவின்மீது*

ஏரோது கொண்டிருந்ததை விட அதிகமான ஆர்வம் கொண்டவர்களாய் இருப்பதில்லை. அவர்கள் அவரைப் பற்றி வினோதமான ஆர்வமுடையவர் களாய் இருக்கின்றனர். கலந்துரையாடலானது ஒரு மேலோட்டமான நிலையில் காத்துக் கொள்ளப்பட்டிருக்கும் வரை, அவர்கள் அவரைப் பற்றி அதிகமாய்க் கற்றுக்கொள்ள மனவிருப்பமுள்ளவர்களாய் இருக்கின்றனர், ஆனால் அவர்கள், இயேசு உண்மையிலேயே யாராக இருக்கின்றார் என்பதைக் கண்டறிவதற்காக சுவிசேஷ விவரங்களை ஒருக்காலும் தீவிரமாக வாசித்துப் படிப்பதில்லை. அந்தக் காரணத்தினால், அவர்கள் அவரைத் தேவனுடைய குமாரன் என்று ஒருக்காலும் ஏற்றுக்கொள்வதோ அல்லது அவருக்குத் தங்கள் வாழ்வை ஒப்புவிப்பதோ இல்லை. ஒரு பழைய மரபுக் கூற்றானது, “ஆர்வமிகுதி பூனையைக் கொன்றது” என்று கூறுகிறது; இயேசுவின்மீது ஒருவர் கொண்டுள்ள ஆர்வமானது ஒருக்காலும் கவனம் குவிக்கப்படாதிருந்தால், அது அப்படிப்பட்டவரின் ஆத்துமாவைக் கொல்லவும்கூடும்.

## கும்பல்: “நாங்கள் அவரைச் சிலுவையில் அறைவோம்” (மத். 27:15-23; மாற். 15:6-14; லூக். 23:12-23; யோவா. 18:39-19:12)

பிலாத்து, இயேசுவை ஏரோதுவினிடத்தில் அனுப்பியதால் ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார்: அவர் அந்த அரசருடன் தம் உறவுமுறையை மேம்படுத்திக் கொண்டார் (லூக். 23:12). இருப்பினும், அவர் இன்னொரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவில்லை: இயேசுவைக் கையாளுவதில் அவர் இன்னமும் பொறுப்புக் கொண்டிருந் தார். இந்த ஆளுநர் அவரை [இயேசுவை] விடுதலை செய்வதற்குத் திரும்பவும் முயற்சி செய்தார்.

> பிலாத்து பிரதான ஆசாரியர்களையும் அதிகாரிகளையும் ஜனங் களையும் கூடிவரச் செய்து, அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப் பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை;[7] மரணத்துக் கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனைத் தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான் (லூக். 23:13-16).

பிலாத்து, இயேசுவை “குற்றமற்றவர்” என்று இரண்டாவது முறையாக அறிவித்தார். இது ஒரு கேள்வியைத் தூண்டுகிறது: பிலாத்து அவரைக் குற்றமறியாதவர் என்று கண்டறிந்தால், அவருக்குத் தண்டனையை முன்மொழிந்தது ஏன்? அந்த ஆளுநர், கிறிஸ்துவைச் சவுக்கால் அடிக்கச் செய்வதின்மூலம் யூதர்களைச் சமாதானப்படுத்தலாம் என்று நம்பிக்கையா யிருந்தார், அதன்மூலம் அவர் பின்பு இயேசுவை விடுதலை செய்யக்கூடும்

(லூக். 23:16; வ. 22ஐயும் காணவும்). லூக்கா 23:16ல் உள்ள "தண்டித்து" என்ற வார்த்தை, "போதித்து அல்லது பயிற்றுவித்து" என்ற முதன்மை அர்த்தத்தைக் கொண்டுள்ளது.[8] உண்மையில் பிலாத்து யூதத் தலைவர் களிடம், "நான் இந்த மனிதனுக்கு ஒரு பாடம் போதிப்பேன்!" என்றே கூறினார் (ABயில் காணவும்).

சவுக்கினால் அடிக்கப்படும் அறைதான் இந்தப் "பாடம்" செயல் படுத்தப்பட்ட "பள்ளி வகுப்பறையாக" இருந்தது (யோவா. 19:1; மத். 27:26; மாற். 15:15ஐக் காணவும்).[9] ரோமர்களின் சவுக்கடிக்கு உட்படுதல் பற்றிப் பின்வரும் விவரிப்பை J. W. ஷெப்பர்டு அவர்கள் கொடுத்தார்:

> சவுக்கு என்பது அநேக வார்கள் கொண்ட ஒரு சாட்டையாக இருந்தது, அந்த வார்கள் ஒவ்வொன்றிலும் காரீயத்தினால் ஆன கூர்முட்களுள்ள விதை வடிவத்திலான குண்டுகள் அல்லது எலும்பு களின் அல்லது முள்ளுகளின் கூர்மையான துண்டுகள் பொதியப் பட்டிருக்கும். குற்றவாளியின் உடைகள் களையப்பட்டு, அவரது முதுகு வளைந்த நிலையில் அவரது கைகள் ஒரு தூணில் கட்டப்பட்டு, [தண்டனை நிறைவேற்றுகின்ற] ஆறுபேரால் அவர் [சவுக்கினால்] அடிக்கப்படுவார், அவர்கள் வாதிக்கும் இந்தக் கருவிகளினால், கைதிக்கு ஏறக்குறைய மரணம் ஏற்படும் வகையில் கொடூரத்துடன் அவர்மீது தாக்குவார்கள். இரத்தக் குழாய்களும் சிலவேளைகளில் உள்ளுறுப்புகளும் வெளித்தெரியும்படி ஒவ்வொரு அடியும், நடுங்கும் சதையைக் கிழித்து உள்ளிறங்கும். அடிக்கடி இந்தச் சவுக்கடியானது முகத்தைத் தாக்கி, கண்களையும் பற்களையும் வெளித்தள்ளச் செய்யும். சவுக்கடி என்பது எப்போதும் மயக்கமடைதலிலும் சில வேளைகளில் மரணத்திலும்கூட முடியும்.[10]

இவ்வாறு இயேசு "தண்டிக்கப்பட்டார்." அவை போதுமானவையல்ல என்பதுபோல், பின்பு அவர் அந்த அடித்தல்களுக்குப் பொறுப்பேற்று இருந்தவர்களால் ஏளனம் செய்யப்பட்டார். போர்ச்சேவகர்கள், "முள்ளு களினால்[11] ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு அங்கியை[12] அவருக்கு உடுத்தி, யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்" (யோவா. 19:2, 3; மத். 20:19ஐக் காணவும்).

பிலாத்து, "இந்த மனிதனின் விரோதிகள், இயேசு கடந்து சென்றிருந்த தண்டனையின் விளைவைக் கண்ணோக்கும்போது, நிச்சயமாக இது அவர்களைச் சரிக்கட்டும்!" என்று நினைத்திருக்க வேண்டும். வெளியே சென்ற அவர், "நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டு வருகிறேன்" என்றார் (யோவா. 19:4அ). இயேசு கூட்டத்தின் முன்பாகக் கொண்டுவரப்பட்டார். அவரது தலையில் முள்முடி இருந்தது (யோவா. 19:5அ); அவரது முன்நெற்றியில் முள்ளுகள் குத்தியதால் அவரது முகத்தில் இரத்தம் வழிந்தோடிற்று. அவரது முதுகுப்பக்கம் கிழிந்துபோன முதுகில் வழியும் இரத்தத்தில் தோய்ந்த அங்கி இருந்தது. இயேசுவைச் சுட்டிக் காட்டி, பிலாத்து அவர்களை நோக்கி: "இதோ, இந்த மனுஷன்!" என்றான்

*(யோவா. 19:5இ).*[13]

*[இயேசுவை] சவுக்கினால் அடித்த நிகழ்ச்சியினால் யூதர்களின் இரத்த தாகம் தணிந்திருக்கும் என்று ஆளுநர் நினைத்தார், ஆனால் அவர் ஏமாற்றம் அடைந்தார். பிரதான ஆசாரியர்களும் அதிகாரிகளும், "சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும்!" என்று உரத்துக் கூவினர் (யோவா. 19:6அ). வெறுப்புடன், பிலாத்து, "அவரை சிலவையில் அறைய நீங்கள் அவ்வளவு தீர்மானமாய் இருந்தால், நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள் - ஏனென்றால் நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்"*[14] *என்றே கூறினார் (யோவா. 19:6அ-வைக் காணவும்). அவரது குரலில் அநேகமாக ஏளனம் இருந்திருக்கும், ஏனெனில் சிலுவையில் அறைதலைச் செயல்படுத்துவதற்கு ரோமர்கள் யூதர்களை அனுமதிப்ப தில்லை என்பதை அவர் அறிந்திருந்தார் - மற்றும் அவர்களும் அறிந்திருந்தனர்.*

*யூதத் தலைவர்கள் அச்சுறுத்தப்பட்டிருக்கவில்லை. அவர்கள் சற்றும் கடுமை தணியாமல் பிலாத்துவின்மீது வலியுறுத்தத்தை அதிகப்படுத்தினார்கள்: "எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின் படியே, இவன் சாகவேண்டும்" என்று கூறினர் (யோவா. 19:7).*[15] *வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "அவர் இராஜதுரோகக் குற்றம் அறியாதவர் என்று நீர் கண்டறிகின்றீரா இல்லையா என்பது எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை. அவர் மரிக்கவேண்டும் என்று நாங்கள் சொல்லுகின்றோம், மற்றும் நீர் அவருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும்!" என்றே அவர்கள் கூறினர்.*

*இயேசு தேவனுடைய குமாரனாயிருப்பதாக உரிமைகோரினார் என்று பிலாத்து கேள்விப்பட்டபோது (யோவா. 19:7), இது அவரை "அதிகமாய்ப் பயமடைய"ச் செய்தது (யோவா. 19:8). கிரேக்க மற்றும் ரோமத் தொல்கதைகளில், மனிதர்களின் வடிவை மேற்கொண்ட கடவுள்களைப் பற்றிய பல புராணங்கள் இருந்தன (அப். 14:11, 12ஐக் காணவும்). அவர் [பிலாத்து] தமது அறைக்குத் திரும்ப வந்து, இயேசுவை மீண்டும் ஒருமுறை தம்முன்பாகக் கொண்டு வரச் செய்தார். அவர் இயேசுவைப் பதட்டத்துடன் உற்றுநோக்கி, "நீ எங்கேயிருந்து வந்தவன்?" என்று கேட்டார் (யோவா. 19:9அ). வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், "நீ பூமியிலிருந்து வந்தாயா அல்லது - ஒலிம்ப்பஸ் மலை போன்ற கடவுள்கள் வாழும் இடங்களான - வானத்தில் இருந்து வந்தாயா?" என்று கேட்டார். "அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை" (யோவா. 19:9ஆ).*

*அவரைப் பதில் கூறும்படி பிலாத்து வலியுறுத்தினார்: "[விசாரணையின் இவ்வளவு தாமதத்திற்குப் பின்னும்கூட] உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா?" (யோவா. 19:10). பின்பு இயேசு பேசினார் - ஆனால் அவரது பதிலானது பிலாத்துவின் சிந்தையை விடுவிக்கவில்லை: "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோவா. 19:11அ).*

*இத்துடன் கிறிஸ்து கூடுதலாக, ''என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு [அதாவது, காய்பாவுக்கு] அதிக பாவமுண்டு" என்றும் கூறினார் (யோவா. 19:11ஆ). இயேசுவைப் பற்றி அறிவதற்குக் காய்பாவுக் குக் கொடுக்கப்பட்டிருந்த அதே வாய்ப்பு பிலாத்துக்குக் கொடுக்கப் பட்டிருந்ததில்லை (லூக். 12:48ஐக் காணவும்). மற்றும், காய்பாவைப் போல் இந்த ஆளுநர் வெறுப்பினால் தூண்டப்பட்டிருக்கவில்லை. பிலாத்து குற்றமற்றவராக இருந்ததில்லை (அப். 4:28ஐக் காணவும்), ஆனால் பிரதான ஆசாரியரும் (அவரது செல்வாக்கினால் தூண்டப்பட்டிருந்த யூதர்களும்) மாபெரும் குற்றத்தைச் சுமக்க வேண்டியிருக்கும் (அப். 2:23, 36; 3:13-15, 17; 5:28, 30; 7:52; 13:27, 28; 1 தெச. 2:14, 15ஐக் காணவும்).*

*இந்த உரையாடலில் இருந்து பிலாத்து, இயேசுவை விடுவிக்க வகை தேடும் தீர்மானத்துடன் வெளியே வந்தார் (யோவா. 19:12அ; லூக். 23:20ஐக் காணவும்). இயேசு, ரோமர்கள் அல்லது யூதர்கள் ஆகியோருடைய தராதரங்களின்படித் தவறு எதுவும் செய்திருந்ததில்லை, ஆனால் அதற்கு மாறாக, "பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக் கொடுத்தார்கள்"[16] (மாற். 15:9) என்பது அவருக்குத் தெளிவாயிற்று. கிறிஸ்து அடிக்கப்பட்டது யூதர்களை அமைதிப்படுத்தவில்லை, ஆனால் மற்ற வேறு வியுக்திகளும் இருக்க வேண்டும்.*

*என்ன செய்வதென்று ஆழ்ந்து சிந்தித்தவாறே, பிலாத்து திரும்பவும் வெளியே சென்றார்.[17] அங்கு ஒரு கூட்டம் காத்திருந்ததை அவர் கண்டார் (மாற். 15:8அ). இது இயேசுவின் மரணத்தை வேண்டிக் கொண்ட வெறியர் களின் ஒரு சிறு கூட்டமல்ல. இந்தக்கூட்டமானது ரோமர்களால் வழங்கப் பட்டிருந்த, பஸ்காவினிமித்தமான ஒரு விசேஷ சலுகையைக் கேட்பதற்கு வந்திருந்தது: ஒரு கைதியை விடுதலையாக்குதல் (மாற். 15:8; மத். 27:15; யோவா. 18:39).[18] அவர்கள் தங்கள் வேண்டுகோளை வெளியிடுகையில், இயேசுவை விடுவிப்பதற்குப் பிலாத்து இன்னொரு திட்டத்தைக் கண்டு பிடித்தார். யூதர்கள் விடுதலை செய்ய விரும்பும் குற்றவாளியைத் தேர்ந் தெடுத்தலைச் சாதாரணமாக ஆளுநர், யூதர்களுக்கே அனுமதித்து விடுவதுண்டு (மத். 27:15ஐ காணவும்). இந்த வேளையில் அவர்களின் தெரிவு செய்தலை அவர் இரு மனிதர்களுக்குள் மட்டுப்படுத்தி விடுவார்: வெறுக்கத் தக்க ஒரு குற்றவாளி மற்றும் இயேசு.*

*"அப்பொழுது, காவல்பண்ணப்பட்டவர்களில் பரபாஸ் என்னப்பட்ட பேர்போன ஒருவன் இருந்தான்"[19] (மத். 27:16). "பரபாஸ்" என்ற வார்த்தை யானது, "அப்பாவின் மகன்" - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "[என்] தந்தையின் மகன்" - என்று அர்த்தப்படுகிறது.[20] இவன், "நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்தான்" (லூக். 23:19ஆ). ஒருவேளை இவன், பிலாத்து தேவாலயத்து நிதிகளை, எருசலேமில் ஒரு தொட்டிப்பாலம் கட்டுவதற்குப் பயன்படுத்தியபோது எழுந்த கலகத்திற்குத் தலைவனாக இருந்திருக்கலாம்.[21] பரபாஸ் ஒரு கள்ளனாகவும் (யோவா. 18:40)[22] ஒரு கொலைகாரனாகவும்[23] (லூக். 23:19ஆ) இருந்தான். சரியான சிந்தையுடைய மக்கள் சமூகத்தில் பரபாஸைப் போன்ற மனிதர்களை விடுதலையாக்கித் திரிய விட அனு*

மதிக்க மாட்டார்கள் என்று பிலாத்து நினைத்திருக்கலாம்.

ஆளுநர் மக்களுக்குப் பின்வரும் வரையறுக்கப்பட்ட தெரிவு செய்தலைக் கொடுத்தார்: "எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்கள்? பரபாசையோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ?" (மத். 27:18ஆ; மாற். 15:9ஐக் காணவும்). ஆளுநர், பரபாசின்மீது தாம் கொண்டிருந்த வெறுப்புடன் கூடுதலாக, ஐந்து நாட்களுக்கு முன்பு இயேசு மகிழ்வுடன் அனுபவித்திருந்த புகழ்ச்சியையும் எண்ணியிருக்க வேண்டும்.[24]

எந்தத் தெரிவை மேற்கொள்வது என்று மக்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கையில், ஒருவேளை பிலாத்து, தமது யூத எதிராளிகளைச் சூழ்ச்சியினால் தாம் வென்றுவிட்டதாக நினைத்திருக்கலாம் - ஆனால் எந்த விதமான மனநிறைவும் விரைவிலேயே மறைந்து ஒழிந்தது. அவர் அங்கு அமர்ந்திருக்கையில்,[25] "அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி: 'நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம். அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்' என்று சொல்லச் சொன்னாள்"[26] (மத். 27:19). அது அந்த அதிகாரியை அதிகம் மனக்கலக்கம்/பயம் அடையச் செய்தது (யோவா. 19:8ஐக் காணவும்).

பிரதான ஆசாரியர்கள் மற்றும் மூப்பர்கள் கொண்டிருந்த, பிறரின் ஆவலைத் தூண்டி இணங்கச் செய்யும் வல்லமையைப்பற்றிப் பிலாத்து மிகவும் குறைவாக மதிப்பிட்டிருந்தார். அவர், பரபாசைக் குறித்துக் கூட்டத்தார் எவ்வாறு உணர்ந்தனர் என்பதையும் தவறாகக் கணக்கிட்டிருக்கலாம். பரபாஸ் என்பவன் வெறுக்கத்தக்க மனிதப் பிறவியாக இருந்த அதே வேளையில், வெறுக்கப்பட்டிருந்த ரோமர்களுக்கு எதிராக அவன் போராடியிருந்ததால், அந்தக் குற்றவாளி ஒரு உள்ளூர்க் கதாநாயகனாகியிருக்கலாம். எவ்வகையிலும், யூதத்துவத் தலைவர்கள், மக்களை "பரபாசை விட்டுவிடக் கேட்டுக் கொள்ளவும், இயேசுவைக் கொலை செய்விக்கவும்" இணங்க வைக்கக் கூடியவர்களாய் இருந்தனர் (மத். 27:20).

கூட்டத்தினர் தங்கள் முடிவை ஆளுநரிடம் தெரிவித்தபோது, அவர் அநேகமாக அதிர்ச்சியடைந்து மனக்கலக்கம் அடைந்திருக்க வேண்டும்: "ஜனங்களெல்லாரும் 'இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்' என்று சத்தமிட்டுக் கேட்டார்கள்" (லூக். 23:18; மத். 27:21ஐக் காணவும்). எச்சரிக்கையடைந்த பிலாத்து, நமது இரு பகுதிப் பாடத்தில் சித்தரிக்கப்பட்ட பின்வரும் கேள்வியைக் கேட்டார்: "அப்படியானால், கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" (மத். 27:22அ). அவர்கள், "அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்" என்று திரும்பவும் சத்தமிட்டனர் (மத். 27:22ஆ; மாற். 15:12, 13; லூக். 23:21ஐக் காணவும்).[27]

அவர்களின் நீதியின் உணர்வுக்கு வேண்டுகோள் விடுக்கப் பிலாத்து முயற்சி செய்தார். அவர், "மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: 'ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே' " என்று கூறினார் (லூக். 23:22; மாற்.

15:14ஆ-வைக் காணவும்). இருப்பினும், அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு நீதியைப் பற்றிய எவ்வித அக்கறையும் இல்லாதிருந்தது: "அவரைச் சிலுவையில் அறையவேண்டுமென்று அவர்கள் உரத்த சத்தத்தோடு கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்" (லூக். 23:23அ; மாற். 15:14ஆ-வைக் காணவும்).

தேவனுடைய மக்கள்,[28] தேவனுடைய குமாரனைப் புறக்கணித்தல் என்ற இருதயத்தை உடைக்கும் காட்சியை நாம் காண்கையில், இயேசுவைக் குறித்து, "நாங்கள் அவரைச் சிலுவையில் அறைவோம்!" என்று வேறு எவரும் ஒருக்காலும் சொல்லத் துணிந்ததில்லை என்று நாம் நினைக்கலாம். இருப்பினும், எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், விசுவாசத்தை விட்டு விலகிப் போகின்றவர்கள் ''தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகி[ன்றனர்]'' என்று எழுதினார் (எபி. 6:6). இயேசுவின் சீஷர் என்ற முறையில் நீங்கள் அவரை விட்டு எப்போதாவது திரும்பிச் செல்லும்படிக்கு சோதிக்கப்பட்டதுண்டா? நீங்கள் அவ்வாறு செய்தால், அவரது கரங்களிலும் பாதங்களிலும் நீங்கள் புதிதாக ஆணிகளைச் செலுத்துகின்றீர்கள் என்பதை அறியுங்கள். உலகத்தில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்படுகின்ற கிறிஸ்தவர்களைக் குறித்துப் பேதுரு, ''அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதா யிருக்கும்" என்று கூறினார் (2 பேது. 2:20; வ. 21, 22ஐக் காணவும்). உங்கள் செயல்களினால் ''நான் அவரைச் சிலுவையில் அறைவேன்!'' என்று ஒருபோதும், ஒருபோதும், ஒருபோதும் கூறாதீர்கள்.

## பிலாத்து: "நான் நடுநிலையாயிருப்பேன்" (மத். 27:24-31அ; மாற். 15:15-20அ; லூக். 23:23-25; யோவா. 19:12-16)

கும்பலானது இயேசுவைச் சிலுவையில் அறையும்படித் தொடர்ந்து கூச்சலிட்டுக் கொண்டிருக்கையில், ''அவர்கள் இட்ட சத்தம் மேற் கொண்டது'' (லூக். 23:23ஆ). இயேசுவின் மரணத்தைத் தவிர வேறு எதுவுமே யூதர்களைத் திருப்திப்படுத்தாது என்பது பிலாத்துவுக்கு அதிகம் அதிகமாய்த் தெளிவாயிற்று.

யூதத் தலைவர்கள், "இவனை விடுதலை பண்ணினால், நீர் இராயனுக் குச் சிநேகிதனல்ல; தன்னை இராஜாவென்கிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி'' (யோவா. 19:12ஆ) என்று சத்தமிட்டபோது, ஆளுநருக்குள் எஞ்சியிருந்த கொஞ்ச எதிர்ப்பும் இடிக்கப்பட்டது. அந்த வேளையில் திபேரியு என்பவர் இராயராக இருந்தார் (லூக். 3:1ஐக் காணவும்). திபேரியுவின் ஆட்சியினுடைய பிற்பகுதியானது "காரணமற்ற பொறாமை, சந்தேகம் மற்றும் கொடுமை'' ஆகிய குணங்களைக் கொண்டிருந்தது.[29] "Maiestas minuta அதாவது, மாநிலத்தைப் பாதுகாப்பதில் தவறினார்'' என்று குற்றம் சாட்டப்பட்டுப் பல அதிகாரிகள் (ரோமாபுரிக்குத்) திரும்பவும் அழைக்கப்பட்டனர்.[30] பிலாத்துவின்

பதவிநிலை மிகவும் இளைத்த நிலையில் இருந்ததால், அவர் தம்மீது யூதர்கள் முறைப்படியான ஒரு முறையீட்டுமனுவை [இராயரிடம்] முன்வைக்கும் இடர்ப்பாட்டை மேற்கொள்ள துணியவில்லை.[31]

ரோம அதிகாரத்துவத்தின் அடையாளமான நியாயாசனத்தில் அமர்ந்த பிலாத்து (யோவா. 19:13ஆ), இயேசுவைத் திரும்பவும் கூட்டத்தாருக்கு முன்பாகக் கொண்டுவரச் செய்தார் (யோவா. 19:13அ). அவர், "இதோ, உங்கள் ராஜா!" (யோவா. 19:14இ) என்றார். அவர்கள், "இவனை அகற்றும், அகற்றும், சிலுவையில் அறையும்'' என்று சத்தமிட்டார்கள் (யோவா. 19:15அ). அதற்குப் பிலாத்து, ''உங்கள் ராஜாவை நான் சிலுவையில் அறையலாமா?" என்று கேட்டார் (யோவா. 19:15ஆ). "பிரதான ஆசாரியர் பிரதியுத்தரமாக: 'இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை' என்று பதில் கூறினார்கள்" (யோவா. 19:15இ)!

வெறுப்பு என்பது சிந்தையை மூடிமறைத்து நியாயத்தீர்ப்பை அழித்து விடுகிறது என்பதற்கு எப்போதாவது நமக்கு ஒரு பரிபூரணமான ஆதாரம் தேவைப்பட்டால், அதற்கு இங்கு ஒரு உதாரணம் உள்ளது: "இராயனே யல்லாமல் வேறே ராஜா இல்லை?'' தேவன் இஸ்ரவேல் ஜனங்களை ஆள்பவராக இருக்கவில்லையா? (சங். 10:16; மத். 5:35)? அவர்களுக்கு ராஜாவாக இருக்கப்போகும் மேசியாவின் வருகைக்காக அவர்கள் காத்திருக்கவில்லையா? (சக. 9:9; மத். 21:5)? யூதத்துவ உயரதிகார வர்க்கத்தினர், தங்கள் குரோத உணர்வினால் பட்சிக்கப்பட்ட நிலையில், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பற்றிக் கொள்ளப்பட்டிருந்த பரிசுத்த மான சத்தியங்களைக் கைவிட்டனர்.

இந்த வேளை முழுவதிலும், கூட்டமானது, "அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்!" (மத். 27:23) என்று உச்சரித்துக் கொண்டிருந்தது, அது "ஒவ்வொரு ரோமனும் அச்சம் கொள்ளும் வகையில், பொங்கிப் பெருகும் இணைவிசையாக இருந்தது, ஏனென்றால் கலகம் என்பது அதன் இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தது."[32] யூதேயாவின்மீது பிலாத்து ஆளுகை செய்யத் தகுதியானவரா என்ற கேள்வியை எழுப்பக் கூடிய ஒரு கலகம் நிச்சயமாகவே எழும்பவிருந்தது. ஆளுநர் தமது பதவி மற்றும் குற்றமற்ற மனிதர் ஒருவரை விடுதலை செய்தல் ஆகிய இரண்டிற்கும் இடையில் ஒன்றைத் துரிதமாகத் தேர்ந்துகொள்ள வேண்டியிருந்தது. முடிவெடுப் பதற்கு வெகுநேரமாகவில்லை: அவர் இயேசுவைக் காப்பதற்கான எல்லா முயற்சிகளையும் கைவிட்டார் (மத். 27:24அ-வைக் காணவும்).

பிலாத்து, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவரும்படி கூறி, "தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: 'இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்; நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்'' (மத். 27:24இ). யூதர்களுக்கு இந்த அடையாளத்துவமான செய்கை நன்கு பழக்கமாயிருந்தது (உபா. 21:1-9; சங். 26:6; 73:13ஐக் காணவும்).[33] பிலாத்து, பொறுப்பில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தார்; ஆனால் ரோம ஆளுநர் என்ற வகையில் அவரது தீர்ப்பே இறுதியானது என்ற உண்மை இன்னமும் நிலைத்திருந்தது. அவர் தமது கைகளில் படிந்த அழுக்கைக் கழுவ முடிந்தது,

ஆனால் தமது இருதயத்தில் இருந்து குற்றத்தைக் கழுவ முடியாதிருந்தது.

"இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்வியைப் பொறுத்தமட்டில், பிலாத்து "நான் நடுநிலையாயிருப்பேன்" என்று பதில் அளிக்க முயற்சி செய்தார். இயேசுவைக் குறித்து எவரொருவரும் நடுநிலையாயிருக்க முடியாது என்பதே பிரச்சனையாக உள்ளது. கிறிஸ்து, "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" என்று கூறினார் (மத். 12:30அ). கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி முடிவெடுக்கத் தவறுதல் என்பது அவரைப் புறக்கணிக்கும்படி முடிவெடுத்தலாக உள்ளது. இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என்று தெளிவாய்க் கூறினார் (யோவா. 12:48). நீங்கள் கர்த்தரைக் குறித்து உங்கள் முடிவை மேற்கொள்ளும்போது நடுநிலையாக இருத்தல் என்பது ஒரு விருப்பத் தேர்வாக இருப்பதில்லை.

பிலாத்து, இயேசுவின் மரணம் குறித்துத் தமக்குக் குற்றமில்லை என்று உரிமைகோரிய பின்பு, அவர் கூட்டத்தை நோக்கி, "நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார் (மத். 27:24ஈ). அவர்கள், "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" என்று சொன்னார்கள் (மத். 27:25). அந்த வார்த்தைகளைக் கொண்டு, யூதர்கள் தேவனுடைய சொந்த குமாரனைக் கொன்ற குற்றத்தை என்றென்றைக்கும் தங்களுடையது என்று ஏற்றுக்கொண்டனர்.[34]

பிலாத்து, "ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவனாய்" (மாற். 15:15அ) "அவர்கள் கேட்டுக் கொண்டபடியே ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்புசெய்து, கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலில் போடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக்கொண்டபடியே விடுதலை யாக்கி"[னான்] (லூக். 23:24, 25அ). பின்பு அவர் இயேசுவை "சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்" (மத். 27:26ஆ).[35]

வரலாற்றை மாற்றும் இந்தத் தீர்ப்பு கூறப்பட்ட இடத்தை யோவான் குறிப்பிட்டார்: "தளவரிசைப்படுத்தின மேடையென்றும், எபிரெயு பாஷையில் கபத்தா[36] என்றும் சொல்லப்பட்ட இடத்திலே" (யோவா. 19:13இ).[37] இந்த அப்போஸ்தலர் [இந்தத் தீர்ப்புக் கூறப்பட்ட] நாளையும் குறிப்பிட்டார்: "அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்தநாளும்" (யோவா. 19:14அ). சந்தர்ப்பப் பொருளில் இந்தச் சொற்றொடரானது, எட்டு நாள் பண்டிகையான ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளைக் குறிக்கிறது (யோவா. 19:31; மாற். 15:42; லூக். 23:54ஐக் காணவும்). யோவான் அந்த நாளில் தீர்ப்புக் கூறப்பட்ட நேரத்தைக்கூடக் குறிப்பிட்டார்: "ஆறுமணி நேரமுமா யிருந்தது" (யோவா. 19:14ஆ). யோவான், ரோமர்களின் மணிக்கணக்கையே பயன்படுத்தினார் என்பது தெளிவு.[38] அந்தக் கணக்கீட்டின்படி, "ஆறுமணி நேரம்" என்பது காலை 6:00 மணியாக இருந்திருக்கும். யோவான், ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்தது என்று கூறியதால், அது சற்றுத் தாமதமான நேரமாக இருந்திருக்க முடியும், ஆனால் பிலாத்து கும்பலுக்கு ஒப்புக்கொடுத்த வேளையானது இன்னும் அதிகாலை நேரமாகவே இருந்தது.

பிலாத்து இயேசுவைச் சிலுவையில் அறையும்படி தமது படைவீரர் களிடம் ஒப்புக்கொடுத்தார். அவரைச் சிலுவையில் அறைவதற்கும் மரிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த இரு குற்றவாளிகளைச் சிலுவையில் அறைவதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய நேரம் எடுத்துக் கொண்டது (மாற். 15:25ஐக் காணவும்).[39] படைவீரர்கள் அந்த நேரத்தை தாங்கள் முன்பு தொடங்கியிருந்த கொடுமையான "விளையாட்டை" திரும்பச் செய்து நேரம் போக்கினர்.[40] இந்த வேளையில், "போர்ச் சேவகருடைய கூட்ட முழுவதும்" கர்த்தரைப் பழிப்பதிலும் ஏளனம் செய்வதிலும் கலந்து கொண்டது (மாற். 15:16-19; LB; மத். 27:27-30ஐயும் காணவும்).

கடைசியாக, தண்டனையை நிறைவேற்றுவதற்கு எல்லாம் தயாராயிற்று. படைவீரர்கள் "அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள்" (மத். 27:31).

## முடிவுரை

நமது இரு பகுதி பாடத்தில் நாம், "இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு பல பதில்களைக் கண்டுள்ளோம்:

- யூதாஸ்: "நான் அவரை விற்றுப்போடுவேன்."
- பேதுரு: "நான் அவரை மறுதலிப்பேன்."
- சனதெரீன் சங்கத்தார்: "நாங்கள் அவரைப் பழித்துரைப்போம்."
- ஏரோது: "நான் ஆர்வமாக மட்டும் இருப்பேன்."
- திரளான கூட்டத்தார்: "நாங்கள் அவரைச் சிலுவையில் அறைவோம்!"
- பிலாத்து: "நான் நடுநிலையாய் இருப்பேன்."

மக்கள் ஏன் இவ்விதமாய்ப் பதில் கொடுத்தனர்? யூதாஸ் பிசாசுக்கு இணங்கினான் (லூக். 22:3ஐக் காணவும்; யோவா. 13:27). பேதுரு பயத்திற்கு இணங்கினார் என்பது உறுதி. சனதெரீன் சங்கத்தார் விரோதம் மற்றும் தப்பெண்ணம் ஆகியவற்றிற்கு இணங்கினார்கள் (மாற். 15:10). ஏரோது தமது தேவபக்தியற்ற இயல்புக்கு இணங்கினார். திரளான கூட்டத்தார் தங்களை விடாது வற்புறுத்திய தலைவர்களுக்கு இணங்கினார்கள். பிலாத்து கூட்டத்தாருக்கு இணங்கினார் (மாற். 15:15).[41] துரதிர்ஷ்டவசமாக, இவர்களில் எவரும் தேவனுக்கு இணங்கியிருக்கவில்லை (ரோமர் 6:13).[42]

"இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய பதில் என்ன? உங்கள் ஆத்துமாவை இரட்சித்து உங்கள் வாழ்வை ஆசீர்வதிக்கக்கூடிய பதில் என்ன? பெந்தெகொஸ்தே நாளன்று, மூவாயிரம்பேர், உண்மையில் "நாங்கள் அவரை ஏற்றுக் கொள்வோம் - அவருக்குக் கீழ்ப்படிவோம்!" என்று கூறியபோது, அதுவே சரியான பதிலாக உரைக்கப்பட்டது (அப். 2:37, 38, 41).

"இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?" என்ற கேள்விக்கு நீங்கள் பதில் அளிக்க வேண்டிய வேளை வந்துள்ளது. நீங்கள் கர்த்தருக்கு உங்களை

இணங்கச் செய்வீர்கள், மறுபுறம் உங்கள் பதில் பெந்தெகொஸ்தே நாளன்று யூதர்கள் கொடுத்த பதிலாகவே இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின் றேன். அவரைத் தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொள்ளுங்கள் - அவரது சித்தத்தைச் செய்யுங்கள்!

## குறிப்புகள்

இயேசுவை விசாரித்த நிகழ்ச்சிகள் பற்றிய ஆய்வுப் பிரசங்கம் ஒன்று இந்த புத்தகத்தில் தொடங்குகிறது.

இந்த இடமானது பிலாத்துவின் பண்பு பற்றி ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிப்பதற்கு ஏற்ற இடமாக உள்ளது: "பொறுப்பை [பிறர்மீது] சுமத்த முயற்சி செய்த மனிதன்." இன்றைய நாட்களில் பலர் தங்கள் தவறுகள் மற்றும் பிழையான செய்கைகளுக்கு - தங்களைத் தவிர மற்ற ஒவ்வொரு வரையும், ஒவ்வொரு விஷயத்தையும் பழிசுமத்தி - பொறுப்பிலிருந்து "தங்கள் கைகளைக் கழுவி விட" முயற்சி செய்கின்றனர்: சமுதாயம், பெற்றோர்கள், வாழ்க்கைத் துணைவர்கள், மோசமான கூட்டாளிகள், மதுபானம், போதைப் பொருட்கள் இன்னும் பிற. இந்த இரு பகுதி பாடத்திலும் பிலாத்துவைப் பற்றிய துணைப்பாடத்திலும், இவரைப் பற்றிக் கணிசமான பாடக் கருத்துக்களை நீங்கள் காண்பீர்கள்.

நீயெல் போல்லார்டு அவர்கள் இந்த அதிகாரி பற்றிய பிரசங்கம் ஒன்றிற்கு வேறொரு அணுகுமுறையை மேம்படுத்தியுள்ளார்: "பிலாத்துவின் தவறுகள்."[43] அவர் நான்கு தவறுகளைக் குறிப்பிட்டார்: (1) பிலாத்து பொறுப்பைப் பிறரிடம் சுமத்த முயற்சி செய்தார் (லூக். 23:5-7), (2) அவர் பொல்லாங்குடன் உடன்பாடு செய்து கொள்ள நாடினார் (லூக். 23:13-16), (3) அவர் சூழ்நிலையிலிருந்து தமது கைகளைக் கழுவி விட முடியும் என்று நினைத்தார் (மத். 27:24), மற்றும் (4) அவர் விட்டுக் கொடுத்தார் (மத். 27:26). நீங்கள் இந்தப் பட்டியலுடன் இன்னும் சிலவற்றைக் கூட்டிக்கொள்ள முடியும்.

ஒரு கடைசிக் கருத்து இங்குள்ளது: "இதோ இந்த மனுஷன்!" (யோவா. 19:5) என்ற பிலாத்துவின் சொல்விளக்கம் (யோவா. 19:5), இயேசுவை உயர்த்தும் ஒரு பொதுவான பிரசங்கத்தை அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

---

குறிப்புகள்

[1]எருசலேமில் பண்டிகை வேளையில் அமைதியைக் காப்பதற்காகப் பிலாத்து அங்கிருந்தார்; ஏரோது யூதர்கள் கருத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுவதற்காக அங்கிருந்தார் என்பதில் ஐயமில்லை. [2]ஏரோது அந்திப்பாவுடன் நல்லுறவில் இருத்தல் பிலாத்துவுக்கு அனுகூலமாய் இருந்திருக்கும்: "அந்திப்பா கூறுவதை ... திபேரியு இராயர் காதுகொடுத்துக் கேட்டார் [Josephus, *Antiquities of the Jews* 18.2.3; 18.4.5]" (Bruce Corley, "Trial of Jesus," *Dictionary of Jesus and the Gospels*, eds. Joel B. Green and Scot McKnight [Downers Grove, Ill.: InterVarsity Press, 1992], 848). [3]அவர்கள் இயேசுவை

எங்கு கூட்டிச் சென்றனர் என்று நாம் உறுதியாய்க் கூற இயலாது. அரண்மனை அந்தோனியோ கோட்டையில் இருந்தது என்றால், ஏரோது அந்திப்பா அநேகமாக, நகரத்தின் மேற்குப் பகுதியில் தமது தந்தையால் கட்டப்பட்ட அரண்மனையில் தங்கியிருந்திருப்பார். பிலாத்துவின் அரண்மனை மகா ஏரோதின் அரண்மனையில் இருந்தது என்றால், ஏரோது அந்திப்பா எங்கே தங்கியிருந்தார் என்று கருத்து எதுவும் நமக்கில்லை. [4]பழங்காலத்து அரசர்கள், தங்களுக்கு வேடிக்கை காட்டுவதை மாத்திரம் முழுப்பொறுப்பாகக் கொண்டிருந்த மனிதர்களைப் பணிக்கமர்த்தியிருந்தனர். இந்த மனிதர்கள், “கோமாளிகள்” அல்லது “முட்டாள்கள்” என்று அழைக்கப்பட்டனர். வேடிக்கையான உடையணிந்த இம்மனிதர்கள், அரசரை மகிழ்விப்பதற்கு, நகைச்சுவைகள் கூறுதல், வேடிக்கையான பாடல்களை எழுதிப்பாடுதல், மற்றும் அற்பத்தனமான குறுநாடகங்களை நடித்தல் உட்படப் பல முறைமைகளைப் பயன்படுத்தினர். சிலர் எளிய மந்திர வித்தைகள் மற்றும்/அல்லது வேடிக்கை வித்தைகள் செய்தலில் கூட ஈடுபட்டனர். [5]லூக்கா 23:11ன் “மினுக்கான வஸ்திரம்’’ என்பது ஏரோது தூக்கியெறிந்த உடைகளில் ஒன்றாகவும் இருந்திருக்கலாம். இது இயேசுவைக் கனப்படுத்துவதற்கல்ல ஆனால் அவரைப் பரியாசம் பண்ணுவதற்காகவே அவருக்கு உடுத்துவிக்கப்பட்டது. [6]அப். 4:28ல் ஏரோது இயேசுவை நடத்திய விதத்தைக் குறித்துக் குற்றம் சாட்டப்பட்டார். [7]ஏரோது இயேசுவைக் கண்டனம் செய்யாமல் திரும்ப அனுப்பி வைத்து விட்டபடியால், அந்த அரசர் [இயேசுவின்மீதான] குற்றச்சாட்டுகளை ஒதுக்கிவிட்டார் என்பதே பிலாத்துவின் புரிந்துகொள்ளுதலாக இருந்தது. [8]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., “*paideuo,*” *Vine’s Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1996), 97. [9]சவுக்கால் அடிக்கப்பட்டது என்பது, யூதத் தலைவர்களை அமைதிப்படுத்த பிலாத்துவின் முயற்சிகளில் ஒன்று என்ற வகையில் இந்த வேளையில் நடைபெற்றதா அல்லது பிற்பாடு, மரணதண்டனை நிறைவேற்ற ஆயத்தச் செயல் என்ற வகையில், சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக நடைபெற்றதா என்பது தெளிவற்றதாக உள்ளது. [10]J. W. Shepard, *The Christ of the Gospels* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1939), 589. ரோமர்கள் சவுக்கால் அடிக்கும் நிகழ்ச்சி பற்றிய ஒரு வரைவளவையான விவரிப்பு, மருத்துவக் கண்ணோட்டத்தில் பின்வரும் புத்தகத்தில் தரப்பட்டுள்ளது: William D. Edwards, Wesley J. Gabel, and Floyd E. Hosmer, “On the Physical Death of Jesus Christ,” *Journal of the American Medical Association* (21 March 1986): 1457-58.

[11]பலஸ்தீனப் பகுதிகளில் இருந்த பல வகையான முட்செடிகளில் எதைக் கொண்டு இந்த கிரீடம் செய்யப்பட்டது என்பது நமக்குத் தெரியவில்லை. சிலர், இது இரண்டு அங்குல நீளமான முட்களைக் கொண்ட நீள முட்புதரின் சிறுகிளைகளினால் வடிவமைக்கப்பட்டது என்று நினைக்கின்றனர். எவ்வகையான முள்ளிலிருந்து செய்யப்பட்ட முள்முடியாயிருப்பினும், அது மிகவும் வேதனை நிறைந்ததாக உள்ளது - இதை நான், போதனையில் காட்சி உதவிப்பொருளாக முள்முடிகளைக் கையாண்டபோது கண்டறிந்துள்ளேன். [12]இது ஏரோதுவினால் இயேசுவின்மீது போடப்பட்ட “மினுக்குள்ள வஸ்திரமாக” இருந்திருக்கலாம். அல்லது இது ஒரு படைவீரனுக்குச் சொந்தமாயிருந்து, தூக்கியெறியப்பட்ட உடையாக இருந்திருக்கலாம். [13]பிலாத்து வழக்கமாக இயேசுவை, “இராஜா” என்ற சொற்றொடரினால் குறிப்பிட்டார் என்பதால் (மாற். 15:9, 12; யோவா. 18:39ஐக் காணவும்), இங்கு ‘‘மனுஷன்’’ என்ற சொற்றொடரின் பயன்பாடு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பிலாத்து யூதர்களிடத்தில், “பாருங்கள்! இவர் வேறு எந்த மனிதரையும் போன்றே இரத்தம் சிந்துகின்றவராகவே இருக்கின்றார்! இவர் உங்கள் கவலைக்குக் காரணமாயிருக்க வேண்டிய எவரொருவரும் அல்ல” என்று

கூறியிருக்கலாம். [14]கிரேக்க வசனப் பகுதியில், ‘‘நீங்களே’’ மற்றும் ‘‘நான்’’ என்பதற்கான வார்த்தைகள் வலிவார்ந்த நடையில் உள்ளன. [15]யூதத் தலைவர்கள் பிற்பாடு [இயேசுவின்மீது] சூழ்ச்சி செய்தார் என்ற குற்றச் சாட்டுடன் திரும்பி வந்தனர் (யோவா. 19:12); இருப்பினும், இந்த நேரத்தில் அவர்கள் அரசியல் ரீதியான குற்றச்சாட்டைக் கைவிட்டவர்களாய், தாங்கள் இயேசுவை ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்தியிருந்ததற்கான மனரீதியான (தேவதூஷணக்) குற்றச்சாட்டை மாத்திரம் குறிப்பிட்டனர். [16]இது வெற்றிப் பிரவேசத்தையும் செவ்வாய்க்கிழமையன்று தேவாலயத்தில் நடைபெற்ற வாக்குவாதங்களில் யூதத்தலைவர்களை இயேசு தோல்வியடையச் செய்ததையும் மறைமுகமாய்க் குறிப்பிட்டிருக்கலாம். [17]சற்று நேரத்திற்கு அவர் இயேசுவை பாதுகாப்புடன் உள்ளே விட்டுச் சென்றார் என்பது உறுதி (யோவா. 19:13ஐக் காணவும்). [18]பிலாத்து யூதர்களிடத்தில், ‘‘பஸ்கா பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை பண்ணுகிற ... வழக்கமுண்டே’’ என்று கூறினார் (யோவா. 18:39அ). இது, பிலாத்து இந்தப் பழக்கத்தைத் தொடங்கி வைத்ததில்லை என்று சுட்டிக் காண்பிப்பதாக இருக்கலாம், ஆனால் இது அவருக்கு முன்பிருந்த ஒரு ரோம அதிகாரியால் தொடங்கப் பெற்றிருக்கலாம். அந்த நாளில் இந்தப் பழக்கம் எருசலேமில் இருந்தது என்பதற்கு வரலாற்று ரீதியாகப் பதிவு எதுவும் இருப்பதில்லை, ஆனால் இன்றைய நாட்களிலும் கூட அரசியல் தலைவர்கள், நல்ல எண்ணத்தை ஆதாயப்படுத்தும் முயற்சியில் சிறைக் கைதிகளை விடுதலை செய்தல் என்பது சாதாரணமாக நடைபெறக் கூடிய விஷயமாகவே உள்ளது. [19]ஒரு பழங்காலக் கையெழுத்துப் பிரதியின்படி, அவனது முழுப்பெயர் “இயேசு பரபாஸ்” என்பதாக இருந்தது. இதனால்தான் பிலாத்து - ‘‘பரபாஸ்’’ என்று அழைக்கப்பட்ட ‘‘இயேசுவில்’’ இருந்து கர்த்தரை வித்தியாசப்படுத்துவதற்காக - “கிறிஸ்து என்னப்பட்ட இந்த இயேசுவை” என்று பேசினார். [20]“Abba” என்பதற்கான அர்த்தம்பற்றி இந்தப் புத்தகத்தில் “தோட்டத்தில்” என்ற முன்புள்ள பாடத்தில் காணவும்.

[21]பிலாத்துவைப் பற்றிய தகவலை இந்தப் புத்தகத்தில் பொந்தியு பிலாத்து [மற்றும் இயேசுவின் மரணம்] என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [22]“கள்ளன்” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது வன்முறையை மறைமுகமாய் உணர்த்துகிறது. NIVயில் “கள்ளனாயிருந்தான்” என்பதற்குப் பதில், “கலகத்தில் ஈடுபட்டிருந்தான்” என்றுள்ளது. இதே வார்த்தையானது இயேசுவைக் குறித்து சனதெரீன் சங்கத்தாரின் குற்றச்சாட்டிலும் உள்ளது. [23]கலகத்தின்போது ஒருவேளை அவன் ரோமப்படை வீரர்களைக் கொன்றிருக்கலாம். [24]வெற்றிப் பிரவேசத்தின்போது இயேசு கனப்படுத்தப்பட்டிருந்தார். [25]மத்தேயு 27:19ம் வசனமானது, அவர் ‘‘நியாயாசனத்தில்’’ அமர்ந்திருந்ததாகக் கூறுகிறது. ‘‘நியாயாசனம்’’ என்ற சொற்றொடர் *bema* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இவ்வார்த்தையானது, அதிகாரிகள் அறிவிப்புகளை எடுத்துரைக்க நிற்கும் உயர்ந்த இடம் ஒன்றைக் குறிக்கிறது. [26]மூடநம்பிக்கையுள்ள அவிசுவாசிகள் கனவுகளின் மூலம் மாபெரும் கருத்துக்களை உறுதி செய்கின்றனர், ஆனால் இது, நாமும் அவ்வாறு செய்ய வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதில்லை. அற்புதங்களின் நாட்களில், சிலவேளைகளில் தேவன் தமது மக்களுடன் செய்தித் தொடர்பு கொள்ளுவதற்குக் கனவுகளைப் பயன்படுத்தினார் (மத். 1:20; 2:12, 13, 19, 22) - ஆனால் அது தொடர்ந்து இனியும் நடைபெறுவதில்லை. மற்றும், பிலாத்துவின் மனைவியினுடைய கனவில் இயற்கைக்கு மேலான முகமையொன்றின் தாக்கம் இருந்தது என்று நம்புவதற்குக் காரணம் எதுவும் இருப்பதில்லை. அவள் இயேசுவை, “நீதிமான்” என்று அழைத்த உண்மையானது, அவரைப் பற்றிய முன்னறிவைச் சுட்டிக்காண்பிக்கிறது. ஒருவேளை அவள், ரோமப்

போர்சேவகர்கள் இயேசுவைக் கைது செய்யப் பணிக்கமர்த்தப்பட்டது பற்றி அறிந்திருக்கலாம், அவள் நீதிமானென்று அறிந்த ஒரு மனிதர் இவ்வாறு கைது செய்யப்பட்ட விஷயம் அவள் ஒரு இரவு நேர மனக்கவலை கொண்டிருக்கக் காரணமாயிருந்திருக்கலாம். [27]பிரசங்கிக்கும் பலர், கூட்டத்தார் வாரத்தின் முதல் நாளில் "ஓசன்னா!" என்று கூறியதாகவும், ஐந்து நாட்களுக்குப் பின்பு, "சிலுவையில் அறையும்!" என்று கூறியதாகவும் குறிப்பிட்டு, மக்களின் உறுதியற்ற மனநிலையை விவரித்துள்ளனர். மக்கள் உறுதியற்ற மனநிலையுள்ளவர்களாக, சுலபமாகக் கையாளப்பட/இயக்குவிக்கப்படக்கூடும் - ஆனால், எல்லா நியாயத்துடனும் காணுகையில், ஞாயிறன்று ஆரவாரமிட்ட கூட்டத்தில் இருந்தவர்கள் வெள்ளிக்கிழமையன்று இரத்த தாகத்துடன் இருந்த கூட்டத்தில் இருந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. பண்டிகைக்கு எருசலேமில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிவந்திருந்தனர். [28]ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாய் இருந்தனர். [29]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 717. [30]A. N. Sherwin-White, "Pilate, Pontius," *The International Standard Bible Encyclopedia*, rev., gen. ed. Geoffrey W. Bromiley (Grand Rapids. Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:868.

[31]பிலாத்துவின் பயங்கள் நன்கு வேரூன்றியவைகளாய் இருந்தன. ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்பு, அவர்மீது ஒரு முறையீடு வைக்கப்பட்டது, அவர் தமது பதவிலிருந்து நீக்கப்பட்டார். இந்தப் புத்தகத்தில் உள்ள பொந்தியு பிலாத்து [மற்றும் இயேசுவின் மரணம்] என்ற இனிவரும் துணைப்பாடத்தில் பிலாத்துவைப் பற்றிய குறிப்புகளைக் காணவும். [32]Walter Wangerin, Jr., *The Book of God: The Bible as a Novel* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1996), 801. [33]அமெரிக்காவில், நாங்கள் "I wash my hands of the matter" என்று கூறுவதை இன்னமும் பயன்படுத்துகின்றோம். தமிழ்நாட்டிலும் கூட, நாம் "அந்த விஷயத்தைக் கைகழுவி விட்டேன்" என்று இன்னமும் பயன்படுத்துகின்றோம். இது, "இதைக் குறித்து நான் எதுவும் செய்ய விரும்புவதில்லை" என்று அர்த்தப்படுகிறது மற்றும் "இதற்கப்பால் எது நடந்தாலும் அது எனது தவறல்ல" என்று மறைமுகமாக அர்த்தப்படுகிறது. [34]இந்த உண்மையானது வார்த்தைகளிலோ அல்லது செய்கைகளிலோ யூத இனத்திற்கு எதிரான கருத்தை நியாயப்படுத்துவதில்லை. ஏதாவது ஒரு வகையில், சில வேளைகளில் நம்மில் பலர் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்துள்ளோம் மற்றும் அவரை அவமானப்படுத்தியுள்ளோம் (எபி. 6:6ஐக் காணவும்). யூதர்களோ அல்லது புறஜாதியாரோ, யாராயிருப்பினும் நாம் அனைவருமே தேவனுடைய கிருபை தேவைப்படுகிற பாவிகளாயிருக்கின்றோம் (சந்தர்ப்பப் பொருளின்படி ரோமர் 3:23ஐக் காணவும்). [35]யோவான் 19:16ல், "அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான்" என்றுள்ளது. சந்தர்ப்பப் பொருளில், "அவர்களிடத்தில்" என்பது ஆசாரியர்களைக் குறிப்பிடுகிறது, ஆனால் யூத ஆசாரியர்கள் இயேசுவைச் சிலுவையில் அறையவில்லை. இந்தச் சொல்லாக்கமானது, பிலாத்து இந்தத் தலைவர்களின் மனவிருப்பத்திற்கு ஒப்புக்கொடுத்தான் என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. [36]"கபத்தா" என்றால் "உயர்த்தப்பட்ட இடம்" என்று அர்த்தப்படுகிறது. இது bema என்ற கிரேக்க வார்த்தையின் அதே அர்த்தம் கொண்டதாக உள்ளது. [37]அந்தக் கல்தளம் எங்கிருந்தது என்பதைத் தொடக்க கால வாசகர்கள் நன்கு அறிந்திருப்பார்கள், ஆனால் நம்மால் அதை உறுதியாய் அறிய இயலாது. அந்தோனியா கோட்டை இருந்த இடத்தில் ஒரு கல்தளம் இருந்ததைப் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் அடையாளப் படுத்தியுள்ளனர், ஆனால் "கல்தளம்" என்பது ஏரோதின் அரண்மனையில் இருந்தது

*என்று சிலர் நம்புகின்றனர் (பிரட்டோரியம் பற்றிய முந்திய கலந்துரையாடலில் காணவும்).* [38]*யோவான் சுவிசேஷ விவரமானது மற்ற மூன்று சுவிசேஷ விவரங்களை விடப் பல பத்தாண்டுகள் பிந்தி, எருசலேம் நகரத்தின் அழிவுக்குப் பிற்பாடு எழுதப்பட்டிருக்கலாம், எனவே அவர் ரோமர்களின் காலக்கணக்கீட்டைப் பயன்படுத்தியிருப்பார் என்பது தெளிவு. யூதக் கணக்கீட்டின்படி ஒரு புதிய நாளானது சூரியன் மறைவின்போது தொடங்கிற்று; ரோமர்களின் கணக்கீட்டின்படி, ஒரு புதிய நாளானது (இன்றைய நாட்களில் நாம் காலத்தைக் கணக்கிடுவதுபோல) நள்ளிரவில் தொடங்கிற்று. யூதக் கணக்கீட்டு முறையைப் பயன்படுத்திய மாற்கு, இயேசு மூன்றாம் மணிவேளையில் (மாற். 15:25) - அதாவது காலை 9:00 மணிக்கு சிலுவையில் அறையப்பட்டார் என்று கூறினார். யூதக் கணக்கீட்டு முறையைப் பயன்படுத்திய மத்தேயு, ஆறாம் மணிவேளை முதல் ஒன்பதாம் மணிவேளை வரை - அதாவது 12:00 மணி முதல் 3:00 மணிவரை - பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று என்று கூறினார் (மத். 27:45; மாற். 15:33; லூக். 23:44ஐக் காணவும்). அதற்குப் பின்பு இயேசு மரித்தார் (மத். 27:46-50; மாற். 15:34-37; லூக். 23:44-46). யோவான் கூறிய "ஆறாம் மணி" வேளை என்பது இந்த நாள் வரிசை அட்டவணையில் பொருந்துவதற்கு, அவர் ரோமர்களின் கணக்கீட்டு முறைமையைப் பயன்படுத்தினார் என்பது மாத்திரமே ஒரே வழியாக உள்ளது.* [39]*பிலாத்து இயேசுவுக்கு காலை சுமார் 6:00 மணியளவில் தீர்ப்பிட்டதால் (யோவா. 19:14ன் மீதான குறிப்புகளைக் காணவும்), இயேசுவுக்குத் தீர்ப்பிடுதல் மற்றும் அவர் சிலுவையில் அறையப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு சில மணி நேரங்கள் கடந்திருந்தன. இந்த நேரமானது அநேகமாக, அவசியமான தயாரிப்புப் பணிகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.* [40]*இந்த வேளையில் இவ்விளையாட்டில் ஒரு கோல் கூடுதலாகப் பயன்பட்டது, முதலில் இது ஒரு செங்கோல் என்ற வகையில் ஏளனமாய்ப் பயன்படுத்தப்பட்டது, பின்பு இது இயேசுவை அடிக்கப் பயன்படுத்தப்பட்டது (மத். 27:30).*

[41]*பல்வேறு வகையான வலியுறுத்தங்களுக்கு இணங்குதல் என்பதன் கருத்தானது,* Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary* vol. 1 (Wheaton, Ill.: Victor Books 1989), 101 *என்ற புத்தகத்தில் இருந்து வருகிறது.* [42]*பிற்பாடு, பேதுரு தேவனுக்கு இணங்கினார், மற்றும் பெந்தெகொஸ்தே நாளன்று கூடியிருந்த திரளான மக்கள் கூட்டத்தில் சிலரும் இணங்கினார்கள் - ஆனால் இந்தப் படிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்ட காலவேளையின்போது, இவர்களில் எவரும் அவ்வாறு இணங்கியிருந்ததில்லை.* [43]Neal Pollard, "Pilate's Mistakes," *Vigil* (November-December 2001): 53-54.

*88*

# உங்கள் தீர்ப்பு என்ன?

## இயேசுவை விசாரணை செய்த நிகழ்ச்சிகள்,[1] ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*நம்மில் இயேசுவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டவர்கள், அவரது சிலுவையை, உணர்ச்சிகளின் கலவையுடன் உற்றுப் பார்க்கின்றோம்: அவரது பாடுகளினிமித்தம் கவலை, ஆனால் நமது இரட்சிப்பினிமித்தம் மகிழ்ச்சி. முதல் நூற்றாண்டில், சராசரி நபர் சிலுவையை உற்று நோக்கிய போது, அவர் பெருந்துக்கத்தையும் கனவீனத்தையும் தவிர வேறு ஒன்றை யும் காணவில்லை (1 கொரி. 1:18; கலா. 3:13; எபி. 12:2 ஆகியவற்றைக் காணவும்). ரோமர்களின் சிலுவையில் மரித்த ஒருவர் மேசியாவாயிருக்க முடியும் என்ற கருத்தின்மீது ஏற்பட்டிருந்த ஆழமான தப்பெண்ணத்தை வெற்றிகொள்ளுதல் என்பது தொடக்க காலச் சுவிசேஷகர்களால் எதிர் கொள்ளப்பட்டிருந்த மாபெரும் அறைகூவல்களில் ஒன்றாக இருந்தது. பவுல் இந்த அறைகூவலைப் பற்றி எழுதினார்: "... நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1 கொரி. 1:23).*

*தண்டனை பெற்ற குற்றவாளி என்ற வகையில் இயேசு மரித்தார் என்ற உண்மையானது இன்னமும் சிலரது விசுவாசத்திற்குத் தடையாக உள்ளது. கிறிஸ்தவத்திற்கு எதிராளிகள், யூதர்களும் ரோமர்களும் ஆகிய இரு தரப்பினருமே இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தனர் என்ற உண்மையைச் சுட்டிக் காண்பிக்கின்றனர். ஒருவர் தமது நாட்களில் இருந்த மத மற்றும் அரசியல் என்ற இரண்டு நிறுவனங்களினாலும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கையில், அவர் உலகத்தின் இரட்சகராக இருக்கக் கூடும் என்று நினைப்பது நகைப்புக்குரியதாக உள்ளது என்று அவர்கள் வலியுறுத்து கின்றனர். நாம் இந்த மறுப்புக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுமென்றால், கிறிஸ்துவை விசாரணை செய்த நிகழ்ச்சிகளின்போது என்ன நடந்தது என்பதைப் பற்றி நாம் ஒரு தெளிவான புரிந்துகொள்ளுதலைப் பெறுதல் அவசியமானதாக உள்ளது.[2] குற்றமற்ற மனிதர் ஒருவருக்கு, மரண தண்டனை விதித்தல் எவ்வாறு சாத்தியமாயிற்று என்று நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.*

இந்தப் பிரசங்கத்தில் நாம், இயேசுவை யூதர்களும் ரோமர்களும் விசாரித்த நிகழ்ச்சிகளின் குறிப்பிட்ட அம்சங்களின்மீது கவனம் செலுத்து

*வோம்:*[3] *கர்த்தரை விசாரித்தவர்களின் நோக்கங்களை நாம் பரிசோதிப் போம். சட்டவிரோதமான செயல்முறைகளை நாம் மறைமுகமாய்ச் சுட்டிக்காண்பிப்போம். இந்த விசாரணைகள், இயேசு தேவனுடைய குமாரன் அல்ல என்று நிரூபிப்பதற்குப் பதிலாக, அவர் தேவனுடைய குமாரனாக இருப்பதை உண்மையில் நிரூபித்தன என்றும் நாம் காண்போம். இந்த பிரசங்கத்தை நாம் முடிப்பதற்கு முன்னர், இன்றைய நாட்களுக்கு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவோம்: இயேசு இன்னமும் பல இருதயங்களில் "விசாரணை" செய்யப்படுகின்றார். இப்போது அவர் உங்கள் இருதயத்திலும்கூட விசாரணை செய்யப்படலாம்; அவரைப் பற்றி நீங்கள் விசுவாசிக்க வேண்டியதென்ன என்பதை இன்னமும் நீங்கள் முடிவு செய்யாதிருக்கலாம். நீங்கள் உங்கள் தீர்ப்பை வழங்கும்படி அறைகூவல் விடப்படுவீர்கள்: [அவர்] குற்றவாளியா அல்லது குற்றம் அறியாதவரா? அவர் சட்டத்தை மீறியவரா அல்லது உங்கள் ஆண்டவரா?*

## முதல் நூற்றாண்டில் இயேசு விசாரணைக்கு உட்படுதல்

**தப்பெண்ணம் ஆதிக்கம் செலுத்துகிறது**
***(சனதெரீன் சங்கத்தார்)***

*சனதெரீன் சங்கத்தின் முன்பாக இயேசு "விசாரணை" செய்யப்பட்டதைக் கொண்டு நாம் தொடங்குவோம். யூதத் தலைவர்கள் நியாயத்தை நாடவில்லை, ஆனால் நியாயப்படுத்துதலை - ஒரு சில வாரங்களுக்கு முன்பு அடையப்பட்ட ஒரு முடிவை நியாயப்படுத்துதலை - நாடினர் (யோவா. 11:47-53, 57). "ஹார்வர்டு*[4] *பல்கலைக் கழகத்தின் பேராசிரியரும் புகழ்பெற்ற அமெரிக்க சட்டவல்லுநருமான (1846) [சைமன்] கிரீன்லீஃப் என்பவர், இயேசு கொலைசெய்யப்பட வேண்டும் என்று [யூதர்களால்] நடத்தப்பட்டது, சட்டப்பூர்வமான தண்டனை என்ற நடிப்பின் கீழ் செயல்பட்டதாயிருந்தது" என்று கருதினார்.*[5]

*சட்ட நடைமுறைகள் பற்றி நம்மில் மேலோட்டமான அறிவுமட்டும் கொண்டுள்ளவர்களுக்குக் கூட, இயேசுவை யூதர்கள் "விசாரணை" செய்ததென்பது ஒரு கேலிக்கூத்தாக இருந்தது என்பது தெளிவாய் இருக்க வேண்டியுள்ளது. காய்பா மற்றும் அவரது பின்பற்றாளர்களின் ஒருதலைப் பட்சமான எண்ணங்களை மத்தேயு வெளிப்படுத்தினார்: "பிரதான ஆசாரியரும் மூப்பரும் சங்கத்தார் யாவரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி தேடினார்கள். ஒருவரும் அகப்படவில்லை; அநேகர் வந்து பொய்ச்சாட்சி சொல்லியும் அவர்கள் சாட்சி ஒவ்வவில்லை" (மத். 26:59, 60அ). பொய்ச்சாட்சி கூறுதலின் பாவம் பற்றி மோசேயின் நியாயப்பிரமாணம் தெளிவாயிருந்தது (யாத். 20:16; உபா. 19:15-21ஐக் காணவும்).*

*சனதெரீன் சங்கத்தார் கிறிஸ்துவைப் பிலாத்துவின் முன்பு கொண்டு வந்த வகையிலும் அவர்களின் நேர்மையற்ற தன்மை தெளிவாக உள்ளது.*

*அவர்கள், தேவதூஷணம் என்ற மதரீதியான குற்றச்சாட்டில் (மத். 26:65, 66) இருந்து, கலகம் செய்தல் என்ற அரசியல் ரீதியான குற்றச்சாட்டிற்கு (லூக். 23:2) மாறினர். மற்றும், பிலாத்துவின் முன்பாக ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு யூதர்கள் விசாரணை செய்தபோது எவ்வித சாட்சியமும் முன்னிறுத்தப்பட்டிருந்ததில்லை. ரோமர்கள் விசாரணை செய்த நிகழ்ச்சி முழுவதிலும் (இது பிற்பாடு கலந்துரையாடப்படும்), ஆலோசனைச் சங்கத்தின் நடத்தையானது, சீரற்றதன்மைகள் நிறைந்ததாக இருந்தது:*

- *அவர்கள் இயேசுவின்மீது, தேவதூஷணக் குற்றம் சாட்டித் தீர்ப்பிட்டனர், பின்பு உண்மையில் அவர்கள் தாமே, யேகோவா தங்கள் ராஜா என்பதை மறுத்தனர் (யோவா. 19:15) - இது ஒரு தேவதூஷணமான கருத்தாக இருந்தது.*
- *அவர்கள் இயேசுவின்மீது, அவர் கலகங்களைத் தொடங்கிய நபராயிருந்தார் என்று குற்றம் சாட்டினர் (லூக். 23:5ஐக் காணவும்), பின்பு பிலாத்துவுக்கு நெருக்கடி தருவதற்காக அவர்கள் தாமே, ஒரு கலகத்தைத் தூண்டிவிட்டனர் (மத். 27:24).*
- *அவர்கள், இயேசு சூழ்ச்சி செய்திருந்த காரணத்தினால் அவரை விடுதலையாக்கக் கூடாது என்று கூறினர் (லூக். 23:2), பின்பு சூழ்ச்சி என்ற குற்றம் செய்திருந்த ஒரு மனிதனை [பரபாசை] விடுதலை செய்யும்படி வற்புறுத்திக் கேட்டனர் (மாற். 15:7, 11).*

*இருப்பினும், யூதத்துவச் சட்ட அமைப்பு என்பது பிரச்சனையாக இருந்ததில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்; விதிவசமான அந்த வெள்ளிக்கிழமையன்று, சட்டத்தைச் செயல்படுத்தியவர்களின் இருதயங் களில்தான் தவறு இருந்தது. யூதத்துவ சட்ட அமைப்பானது உலகத்தில் மனிதத்துவம் மிகுந்த சட்டங்களில் ஒன்று என்பதாக அங்கீகரிக்கப் பட்டிருந்தது. இஸ்ரவேல் ஜனங்களில் ஒருவரின் ஜீவன் என்பது ஒருவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு எவ்வளவு கொடுமையானதாக இருப்பினும், அந்த ஜீவனைக் காப்பதற்குத் தேவையான சட்டரீதியான முன்னெச்சரிக் கைகள் எல்லாவற்றையும் மேற்கொள்ள வேண்டிய அளவுக்கு மிகவும் மதிப்புடையதாகக் கருதப்பட்டது. இரண்டாம் நூற்றாண்டில், யூதத்துவச் சட்ட நடைமுறைகள் பற்றிய வாய்மொழிப் பாரம்பரியங்கள் யாவையும், மிஷ்னா[6] என்று அழைக்கப்பட்ட ஒரு தொகுதியாக எழுதப்பட்டன. இயேசு விசாரணை செய்யப்பட்டபோது, எந்த ஒழுங்குமுறை அமலில் இருந்தது என்பது பற்றிக் கேள்விகள் சில உள்ளன, ஆனால் அந்த வேளையில் சட்டப்பாதுகாப்புகள் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன என்று பலர் நம்புகின்றனர்:*

- *மரண தண்டனை விதிக்கப்பட வேண்டிய வழக்குகள் பகல் பொழுதில் மாத்திரம் விசாரிக்கப்பட வேண்டும் (மிஷ்னா, சனகெரீன் 4.1). இது நியாயத்தீர்ப்பில் சோர்வு மூளுவதைத் தவிர்ப்பதற்காக விதிக்கப்பட்டது.*
- *நியாயாதிபதிகள், குற்றம்சாட்டப்பட்டவரைக் குற்றவாளி என்று தீர்மானிப்பதற்கு ஒரு வழியைக் கண்டறிவதற்கு மாறாக, அவரை*

விடுதலை செய்வதற்கான ஒரு வழியையே ஊக்கமாய்க் கண்டறிய வேண்டும் (*மிஷ்னா, சனதெரீன் 4.1; 4.5; 5.4ஐக் காணவும்*).

- மரணதண்டனைக்கான வழக்கில் ஒன்றித்த வாக்கானது தண்டனை விதித்தல் என்பதை ஒன்றுமற்றதாக்கிவிடும் (*மிஷ்னா, சனதெரீன் 4.1*). ஒன்றித்த வாக்கு என்பது பகுத்தறிவுள்ள மனிதர்களின் அமைப்பினுடைய முடிவு என்பதற்குப் பதிலாக, ஒரு கும்பலின் செயல்பாடு என்பதைச் சுட்டிக்காண்பிக்கக் கூடும்.
- ஆலோசனைச் சங்கம் ஒரு மனிதனைக் குற்றவாளி என்று தீர்ப்பிட்ட அதே நாளில் அவனுக்குத் தண்டனை விதிக்கக்கூடாது (*மிஷ்னா, சனதெரீன், 4.1; 5.5*). அவர்கள் இல்லம் சென்று, தாங்கள் அடைந்த தீர்ப்புப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும்.
- தலைமை வகிக்கும் பிரதான ஆசாரியர், வழக்கைக் குறித்துத் தமது கருத்தை ஒலிக்கக்கூடாது, ஏனென்றால், அவரது செல்வாக்கானது இளம் உறுப்பினர்களை அலைபாயச் செய்யுமளவுக்கு பெரிதாக இருக்கக்கூடும் (*மிஷ்னா, சனதெரீன் 4.2*).[7]

இயேசுவை யூதர்கள் "விசாரணை" செய்த நிகழ்ச்சியானது இந்த அடிப்படைக் கோட்பாடுகள் யாவற்றையும் மீறியதாக இருந்தது:

- அவர் இரவு வேளையில் விசாரிக்கப்பட்டுக் குற்றமுள்ளவரென்று கண்டறியப்பட்டார் (மத். 26:57, 66; 27:1).
- அவர் குற்றமற்றவர் என்று நிரூபிப்பதில் அல்ல ஆனால் அவரைக் குற்றவாளி என்று கண்டறிவதில்தான் நியாயாதிபதிகள் ஆர்வம் கொண்டிருந்தனர் (மத். 26:59).
- இயேசுவுக்கு எதிராக ஆலோசனைச் சங்கத்தின் வாக்கானது ஒருமுகப்பட்டிருந்தது என்பது உறுதி (மாற். 14:64; லூக். 22:70, 71; மத். 27:1; மாற். 15:1; லூக். 23:1ஐக் காணவும்).[8]
- தீர்ப்பும் தண்டனையும் அதே இரவில் தரவழைக்கப்பட்டன (மத். 26:65, 66; 27:1).
- முதலில் பிரதான ஆசாரியர் தமது தீர்ப்பை உச்சரித்து, பின்பு அதை உறுதிப்படுத்தும்படி அவர் எஞ்சியிருந்தவர்களைக் கேட்டுக்கொண்டார் (மத். 26:65, 66).

யூதர்கள் இயேசுவை விசாரணை செய்தது பற்றிய வேதாகம விவரங்கள் நம்பத் தகுந்ததுமாய்[9] இருக்கின்றன என்று ஏற்றுக்கொள்ளப்பட்டால், சட்டவிரோதமானவைகள்[10] நடைபெற்றனவா என்பதல்ல - அப்படிப் பட்டவைகள் எத்தனை நடைபெற்றன என்பதே கேள்வியாக உள்ளது.[11] மேலே குறிப்பிடப்பட்டவைகள் தவிர, இந்தப் பட்டியலுடன் இன்னும் சிலவற்றையும் கூட்டமுடியும்:[12]

- விசாரணையானது பிரதான ஆசாரியரின் வீட்டில் முறையற்ற வகையில் நடத்தப்பட்டது (*மிஷ்னா, சனதெரீன் 11.2*).
- விசாரணையானது ஒரு பண்டிகை நாளில் நடத்தப்பட்டது (*மிஷ்னா, சனதெரீன் 4.1*).
- இயேசு தேவதூஷணம் பேசினார் என்ற அடிப்படையில் தண்டனை

விதிக்கப்பட்டார், ஆனால் அவரது கூற்றானது யூதத்துவச் சட்டக்கோட்பாட்டின்படி "தேவதூஷணம்" என்ற வகைப்பாட்டில் இருக்கவில்லை. சட்டப்பூர்வமான பாதுகாப்பை அளிப்பதற்காக, இரபீக்கள் அந்த வார்த்தைக்கு ஒரு குறுகிய விளக்கத்தை உருவாக்கி வைத்திருந்தனர். நியாயப்பிரமாணத்தின்படி, ''தேவதூஷணம்'' என்பது தேவனை சபித்தல் என்பதைக் குறிப்பிட்டது (லேவி. 24:15, 16); இரபீக்களைப் பொறுத்தமட்டில், குற்றம் சாட்டப்பட்டவர் தேவனுடைய நாமத்தைக் குறிப்பிட்ட வகையில் உச்சரித்திருந்தால் மட்டுமே அவர் குற்றவாளியாவார் (மிஷ்னா, சனதெரீன் 7.5).

யூதத்துவச் சட்ட அமைப்பில் பிரச்சனை இருந்ததில்லை, ஆனால் அதை செயல்படுத்தும் பொறுப்பு கொண்டிருந்தவர்களிடம்தான் பிரச்சனை இருந்தது என்று நான் மீண்டும் கூறுகின்றேன். இயேசு யூதர்களால் விசாரிக்கப்பட்டு குற்றவாளியென்று காணப்படவில்லை. மாறாக, அவர் குற்றவாளி என்று கருதப்பட்டு விசாரிக்கப்பட்டார். ஆலோசனைச் சங்கத்தின் முன்னிலையில் இயேசு விசாரிக்கப்பட்டது பற்றி கூறும் எந்த சுவிசேஷ விவரங்களும் பாரபட்சமற்ற முறையில் வாசிக்கப்பட்டால், அது இயேசு "குற்றவாளியல்ல!" என்ற தீர்ப்பையே ஏற்படுத்த வேண்டும்.

**அரசியல் மேலோங்கியிருத்தல்: பிலாத்து**

நாம் ரோமர்களின் விசாரணைக்குக் கடந்து செல்லுவோம். பிலாத்துவுக்கு முன்பாக இயேசு விசாரிக்கப்பட்ட நிகழ்ச்சியானது ரோம சட்டவியலின் சட்டப்பூர்வமான செயல்முறையாகத் தொடங்கிற்று. ரோமப் பேரரசுக்கு நியாயம் என்பது முக்கியமானதாக இருந்தது; " 'வானமே இடிந்து விழுந்தாலும், நியாயம் செய்யப்பட வேண்டும்' என்பதே ரோமர்களின் கொள்கையாக இருந்தது"[13] இப்படிப்பட்ட விஷயங்களில் அறிவார்ந்தவர்கள், ''பிலாத்துவின் முன்பாகக் கிறிஸ்து விசாரணை செய்யப்பட்ட நிகழ்ச்சியானது ஏறக்குறைய, ஆளுநரின் cognitio (ஆய்வினால்)ஆன மாகாணத்தின் சாதாரண விசாரணையில் இருந்த எல்லா அம்சங்களையும் கொண்டிருந்தது'' என்று நமக்குக் கூறுகின்றனர்.[14] அடிப்படைச் செயல் முறையானது பின்வருமாறு இருந்தது:

- ஆளுநரே வழக்கை விசாரணை செய்யும் பொறுப்புடையவராக இருந்தார்; சட்டவல்லுநர் எவரும் இருக்கவில்லை.
- ஆளுநர் குற்றச்சாட்டைக் கேட்டார்.
- ஆளுநர் குற்றவாளியை விசாரணை செய்தார்.
- ஆளுநர் ஆலோசகர்களைக் கலந்தாலோசித்தல் அவசியம் என்று உணர்ந்தால் அதைச் செய்தார்.
- ஆளுநரின் விசாரணை முடிந்தபின்பு, அவர் நியாயாசனத்தில் உட்கார்ந்து தீர்ப்பை வெளியிட்டார். ''ஒரு நீதிபதியானவர் நியாயாசனத்தில் அமர்ந்து மரணதண்டனைத் தீர்ப்பை வெளியிட வேண்டும் என்று ரோமர்களின் சட்டம் கேட்டுக் கொண்டது.''[15]

ரோமர்களுக்கு முன்பாக இயேசு விசாரணை செய்யப்பட்ட

*நிகழ்ச்சியின் தொடக்க நிலைகளில் பின்வரும் செயல்முறை பின்பற்றப் பட்டது:*

- *இயேசு பிலாத்துவிடம் ஒப்புவிக்கப்பட்டார் (மத். 27:2; மாற். 15:1; லூக். 23:1); விசாரணையின் நிலைப்பாட்டிற்கு ஆளுநரே முழுப்பொறுப்புக் கொண்டிருந்தார்.*
- *யூதத்தலைவர்கள் தங்கள் குற்றச்சாட்டுகளை ஆளுநரிடம் முறையிட்டனர் (யோவா. 18:29, 30; லூக். 23:2).*
- *பிலாத்து இயேசுவை விசாரணை செய்தார் (மத். 27:11; மாற். 15:2; லூக். 23:3; யோவா. 18:33-38).*
- *இயேசுவை ஏரோதுவிடம் அனுப்புதல் என்ற பிலாத்துவின் செய்கையானது இன்னொருவரின் கருத்தை நாடுதல் என்று விளக்கப்படுத்தப்படலாம் (லூக். 23:15ஐக் காணவும்).*
- *நியாயாசனம் என்பது பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது (மத். 27:19; யோவா. 19:13); பிலாத்து, ரோமாபுரியின் அலுவலகப் பிரதிநிதி என்ற வகையில் பேசினார். "பொந்தியு பிலாத்து [நியாயாசனத்தில்] அமர்ந்தபோது, அவரே ரோமாபுரியாக இருந்தார்."[16]*

*குறிப்பிடப்பட்ட செயல்முறைகளைப் பிலாத்து பின்பற்றவில்லை என்பது பிரச்சனையாக இருக்கவில்லை. அவர் தமது தீர்ப்பை வெளியிட்ட பின்பு, அதன் பின்னால் நிலைத்து நிற்கவில்லை என்பதே பிரச்சனையாக இருந்தது. அவர் இயேசுவைக் கேள்வி கேட்டபின்பு, குற்றம்சாட்டியவர் களிடம் திரும்பிச் சென்று, "இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" என்று அறிவித்தார் (லூக். 23:4; வ. 14ஐக் காணவும்).* NIV *வேதாகமத்தில்,* "I find no basis for a charge against this man" *["நான் இந்த மனிதனுக்கு எதிரான குற்றச்சாட்டிற்கு ஆதாரம் ஒன்றையும் காண வில்லை"] என்றுள்ளது. அந்த வேளையில், அவர் இயேசுவை விடுதலை செய்திருக்க வேண்டும்[17] - ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.*

*விசாரணையின் ஓட்டத்தில், இயேசு "குற்றமற்றவர்!" என்று பிலாத்து மீண்டும் மீண்டும் அறிவித்துக் கொண்டிருந்தார்:[18]*

> *"இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை" (லூக். 23:4).*
>
> *"... இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை" (லூக். 23:14).*
>
> *அவன் மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: "ஏன், இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்? மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே ..." (லூக். 23:22).*
>
> *... பிலாத்து ... மறுபடியும் யூதர்களிடத்தில் வெளியே வந்து: "நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் ..." என்றான் (யோவா. 18:38).*
>
> *பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: "நான் இவனிடத்தில் ஒரு*

குற்றமும் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே கொண்டுவருகிறேன்” என்றான் (யோவா. 19:4).

... அதற்குப் பிலாத்து: “... நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்” என்றான் (யோவா. 19:6ஆ).

“இரட்டை ஆபத்திற்கு[19]” எதிராகத் தடை என்பது நியாயத்தின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது. எளிமையாகக் கூறுவதென்றால், ஒரு நபர்மீது சாட்டப்பட்ட குற்றத்திலிருந்து விடுவித்த பிறகு அவரை அல்லது அவளை இரண்டாம் முறை விசாரிக்கக் கூடாது என்று “இரட்டை ஆபத்து” தொடர்புள்ள சட்டங்கள் கூறுகின்றன. பிலாத்துவுக்கு முன்பாக இயேசு விசாரணை செய்யப்பட்டதில், அவர் இரட்டை ஆபத்திற்கு மட்டுமின்றி, “மூன்று ஆபத்திற்கும்” மற்றும் அதற்கு அப்பாலும் உட்படுத்தப்பட்டார்.

பிலாத்து தமது முதல் தீர்ப்பான “குற்றமற்றவர்” என்பதை அமல்படுத்த தவறிய வேளையில் இருந்து, செயல்முறைகளில் நியாயம் மறைந்து போயிற்று. இயேசு மரிக்க வேண்டும் என்று சனதெரீன் சங்கத்தார் விரும்பியது ஏன் என்பதை ஆளுநர் அறிந்திருந்தார் (மத். 27:18; மாற். 15:10), ஆனால் இன்னமும் அவரை விடுதலை செய்யாதிருந்தார். கிறிஸ்து குற்றமற்றவர் என்பதை அவர் [பிலாத்து] அறிந்திருந்தார், ஆனால் அப்போதும் அவரை சவுக்கினால் அடிப்பித்தார். இயேசு மரணத்திற்குத் தக்க ஏதொன்றையும் செய்ததில்லை என்று அவர் [பிலாத்து] அறிந்திருந்தார், ஆனால் அப்போதும் அவரைச் சிலுவையில் அறையும்படி அனுமதித்தார்.

பிலாத்து அரசியல் ரீதியாகச் சூழ்நிலைக்குத் தக்கவாறு இவ்விதமாய்ச் செயல்பட்டார்[20] - ஆனால் அது இவ்விஷயத்தைச் சரியானதாக்குவதில்லை. யூதர்கள் வலியுறுத்துவதை அதிகரித்தபோது, “இயேசு ஒரு அலுவலரிடமிருந்து இன்னொரு அலுவலரிடத்தில், போக்குக் கூறமுடியாத அவசரத்துடன், துரிதமாய் கூட்டிச் செல்லப்பட்டார்”[21] இது கடைசியில் பிலாத்து அவரை “சிலுவையில் அறைய” ஒப்புக்கொடுத்த வரையிலும் நடைபெற்றது (மத். 27:26).

இயேசு பிலாத்துவினால் விசாரிக்கப்பட்டு குற்றமுள்ளவராகக் காணப்படவில்லை. மாறாக, அந்த ரோம ஆளுநர் அவரை குற்றமற்றவர் என்று மீண்டும் மீண்டும் அறிவித்தார். விசாரணைகள் மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் முழுவதிலும், இயேசுவுடன் தொடர்பு கொண்டவர்கள், அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தனர். அவரது விரோதிகள், அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தனர்.[22] பிலாத்துவும் அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தார். பிலாத்துவின் மனைவியும் அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தாள் (மத். 27:19). ஏரோதுவும் அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தார் (லூக். 23:15). அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸூம் அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தார் (மத். 27:4). இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்களில் ஒருவன் அவர் குற்றமற்று இருந்தார் என்று அறிந்தான் (லூக். 23:41). சிலுவையில் அறைதலுக்குப் பொறுப்பேற்றிருந்த நூற்றுக்கு அதிபதியும்கூட அவர்

குற்றமற்று இருந்தார் என்று அறிந்தார் (மத். 27:54; மாற். 15:39).

## இருபத்தோராம் நூற்றாண்டில் இயேசு விசாரணைக்கு உட்படுதல்

நாம் முதல் நூற்றாண்டில் இருந்து இருபத்தோராம் நூற்றாண்டிற்குக் கடந்து வருவோமாக. இயேசுவைக் குறித்து மற்றவர்களின் தீர்ப்பை நாம் கண்டுள்ளோம், ஆனால் இப்போது நான், "உங்கள் தீர்ப்பு என்ன?" என்று கேட்க விரும்புகின்றேன். இதற்கு மிக விரைவாகப் பதில் அளிக்காதீர்கள். நீங்கள் உங்கள் தீர்ப்பின் தனிச்சிறப்பை அறிந்து கொள்வது அவசியமாக உள்ளது.

ஒருவர், தமது கூற்றின் மறைமுகக் கருத்தை உணர்ந்தறியாமல், "குற்றமற்றவர் என்பதே எனது தீர்ப்பாக உள்ளது! இயேசு மரணத்திற்குப் பாத்திரர் அல்ல'' என்று பதில் அளிப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. நீங்கள் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்றும் உங்கள் வாழ்வின் ஆண்டவர் என்றும் ஏற்றுக்கொள்ள மனவிருப்பம் கொண்டவர்கள் ஆகாதவரைக்கும், உங்களால் அவரை ''குற்றமற்றவர்'' என்று சீர்பொருந்திய தன்மையுடன் உச்சரிக்க முடியாது.

நான் ஏன் அந்த உறுதிப்பாட்டை ஏற்படுத்துகின்றேன்? இயேசு யூதர்களாலும் ரோமர்களாலும் தீர்ப்பிடப்பட்டது ஏன் என்பதை மறுகண்ணோட்டமிடுங்கள். இயேசு தேவனுடைய குமாரனாக இருப்பதை அவர் ஒப்புக்கொண்டபோது, அவர் தேவதூஷணக் குற்றம் செய்ததாக யூதத் தலைவர்கள் உரிமைகோரினர் (மத். 26:63-66). இயேசுவின் தெய்வீகத் துவத்தை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமற்ற நிலையில் அவர்கள் அவரை "குற்றம் சாட்டப்பட்டவர்" என்ற நிலையில் இருப்பதாக முன் அனுமானம் கொண்டனர். இயேசு ஒரு இராஜாவாகத் தம்மை உரிமைகோரினார் என்பதே பிலாத்துவுக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டாக இருந்தது (லூக். 23:2), இது அவர் மறுக்காத குற்றச்சாட்டாக இருந்தது (மத். 27:11). இயேசு தம்மைத் தாமே யூதர்களின் ராஜாவாக்கிக் கொண்டார் என்பதுதான் அவர் ரோமர்களின் சிலுவையில் அறையப்படுவதற்கான "குற்றமாக'' இருந்தது (யோவா. 19:19-22ஐக் காணவும்). இயேசுவின் விரோதிகள், தெய்வீக அரசத்துவம் பற்றிய அந்த உரிமைகோருதலை மறுத்தனர்; அவர்கள் கண்களில் அவர், மரணத்திற்குப் பாத்திரரான ஒரு கலகக்காரராக மாத்திரம் தெரிந்தார்.

இவையெல்லாவற்றையும் மனதில் வைத்த நிலையில் நான் உங்களை, "உங்கள் தீர்ப்பு என்ன?" என்று கேட்கின்றேன். இயேசு தம்மைத் தேவனுடைய குமாரன் என்று உரிமைகோரிக் கொண்டபோது, அவர் தேவதூஷணக் குற்றம் செய்தார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? அல்லது நீங்கள் அவரைத் தேவனுடைய தெய்வீக குமாரன் என்று ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாக இருக்கின்றீர்களா? இயேசு அரசியல் ரீதியாகக் கலகமும் சூழ்ச்சியும் செய்தார் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? அல்லது நீங்கள் அவரை ஆவிக்குரிய வகையில், ''இராஜாதி இராஜாவும், கர்த்தாதி

கர்த்தாவு"மாக இருக்கின்றார் (வெளி. 19:16) என்று ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாக இருக்கின்றீர்களா? நீங்கள் அவருக்குக் கீழ்ப்பட்டவராக இருந்து, என்ன நேர்ந்தாலும் உங்கள் சித்தத்தை அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படுத்த மனவிருப்பமாக இருக்கின்றீர்களா (லூக். 6:46)? நீங்கள் இயேசுவைத் தேவனுடைய குமாரன் என்றும் உங்கள் வாழ்வின் ஆண்டவர் என்றும் ஏற்றுக்கொள்ள மனவிருப்பம் கொண்டவர்கள் ஆகாதவரைக்கும், உங்களால் அவரை "குற்றமற்றவர்" என்று சீர்பொருந்திய தன்மையுடன் உச்சரிக்க முடியாது என்று நான் மீண்டும் கூறுகின்றேன்.

இயேசுவின் சொந்த வாழ்வில் எதாவது பாவம் இருந்தது என்பதற்காக ரோமர்களின் சிலுவையில் அறையப்படவில்லை, ஆனால் மற்றவர்களின் வாழ்வில் உள்ள பாவங்களுக்காகவே அவர் சிலுவையில் அறையப் பட்டார்.[23] நீண்ட நாட்களுக்கு முன்பாக அந்த வெள்ளிக்கிழமையன்று, நியாயம் என்பது பொறாமை, அறியாமை மற்றும் உடன்பாடு என்பவற்றி னால் நெருக்கப்பட்டுப்போனது (மத். 27:18; அப். 3:17; மாற். 15:15ஐக் காணவும்). இவைகள் மற்றும் இதன் தொடர்பான பண்பினங்கள், உண்மையிலேயே இயேசு யாராக இருக்கின்றார் என்பதை மக்கள் அறியாதபடி அவர்களின் கண்களைப் பார்வையற்றுப் போகச் செய்கின்றன. சில மக்கள், அவரைப் பற்றி மற்றவர்கள் தங்களுக்குக் கூறியவற்றினால் தப்பெண்ணத்தை வளர்த்துக் கொண்டுள்ளனர். மற்றவர்கள், அவரைப் பற்றி வேதவாக்கியங்கள் போதிப்பதென்ன என்று அறியாமலேயே இருக்கின்றனர். இன்னும் அநேகர், பிலாத்துவைப் போல், "ஜனங்களைப் பிரியப்படுத்த மனதுள்ளவ[ர்களாய்]" (மாற். 15:15) இருப்பதால், அவரைப் பற்றி ஒரு நிலைப்பாடு கொள்வதற்கு மனதற்றவர்களாக இருக்கின்றனர்.

இயேசு சனதெரீன் சங்கத்தாரால் விசாரணை செய்யப்படுகையில், ஆலோசனைச் சங்கத்தாரின் மூடிய மனப்பாங்கை அவர் சுட்டிக் காண்பித்தார்: "நான் உங்களுக்குச் சொன்னாலும் [நான் கிறிஸ்துவாய் இருக்கிறேன் என்று] நம்பமாட்டீர்கள். நான் உங்களிடத்தில் வினா வினாலும் எனக்கு மாறுத்தரம் சொல்லமாட்டீர்கள்" (லூக். 22:67, 68). அவர்கள், இயேசுவின் உரிமைகோருதலைத் தீவிரமாய் விசாரிக்க விருப்பம் கொண்டிருந்ததில்லை. நீங்கள் அதைப் போல் இருக்கக்கூடாது என்று உங்களுக்காக நான் ஜெபிக்கின்றேன். கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நமது படிப்பானது நிச்சயமாகவே, இயேசு தாம் உரிமைகோரிய யாவுமாக உள்ளார் என்று நேர்மையான எந்த இருதயமும் நம்பி இணங்குவதற்குப் போதுமானதாக இருந்துள்ளன.[24] நீங்கள் இதற்கு முன்பு இயேசுவின்மீது உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யாதிருந்தால், இன்றைக்காவது அவரைப் பற்றிய உங்கள் தீர்ப்பானது "குற்றமற்றவர் - ஏனென்றால் இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நான் என் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கின்றேன்!" என்பதாக இருக்க வேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகவும் ஜெபமாகவும் உள்ளது (மத். 16:16ஐக் காணவும்).

## முடிவுரை

"இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்ற கேள்வியை நாம் கேட்டிருந்தோம். இது நீங்கள் ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டிய வேளையாக உள்ளது. ஆல்பெர்ட் சிம்ப்ஸன் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

*நண்பரற்று, கைவிடப்பட்டு, யாவராலும் காட்டிக் கொடுக்கப்பட்டு*
*பிலாத்துவின் அரண்மனையில் நின்று கொண்டிருக்கின்றார் இயேசு;*
*கேளுங்கள்! அந்த உடனடி அழைப்பின் அர்த்தம் என்ன!*
*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*

*இன்னமும் விசாரணையில் நிற்கின்றார் இயேசு,*
*நீங்கள் அவரைக் குறித்துத் தவறக் கூடும், நீங்கள் விரும்பினால்*
*நன்மை அல்லது தீமையின் மூலம் உண்மையுடனிருக்க முடியும்;*
*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*

*பிலாத்துவைப் போல நீங்களும் அவரைத் தட்டிக் கழிப்பீர்களா?*
*அல்லது அலைகள் எப்படிப் பாயினும், அவரைத் தேர்ந்து*
*கொள்வீர்களா?*
*அவரிடமிருந்து ஒளித்துக் கொள்ள அவத்தமாய்ப் போராடுகின்*
*றீர்களா?*
*இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*

*எனது நண்பரே, இயேசுவைக் குறித்து நீங்கள் என்ன செய்வீர்கள்?*
*நடுநிலையாக இருக்க உங்களால் கூடாதே;*
*ஓ நண்பரே, உமது இருதயம் ஒரு நாளிலே உங்களைக் கேட்குமே,*
*"அவர் என்னைக் குறித்து என்ன செய்வார்?" என்றே![25]*

யூதர்களுக்கும் பிலாத்துவுக்கும் முன்பாக இயேசு விசாரணைக்கு நின்றபோது, அவர்கள் அவருக்கு முன்பாக விசாரணையில் நின்றிருந்ததை அவர்கள் உணர்ந்தறியாமல் இருந்தனர். அவர்கள் தங்கள் முடிவுகளினால் இயேசுவுக்குத் தண்டனை விதித்தது மாத்திரமின்றி, தங்களையே ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுத்திக் கொண்டனர். ஒரு சில ஆண்டுகளுக்குப் பிற்பாடு, பிலாத்து தமது பதவியை இழந்து தற்கொலை செய்து கொண்டார்;[26] ஒரு சில பத்தாண்டுகளுக்குப் பிற்பாடு, எருசலேம் நகரம் அழிக்கப்பட்டது. இன்றைக்கு இயேசுவைக் குறித்த உங்கள் முடிவானது நீங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுவீர்கள் என்பதுன்மீது செயல்விளைவை ஏற்படுத்தும் (மத். 10:32, 33; 2 தீமோ. 2:12ஐக் காணவும்). நீங்கள் உங்களின் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவரில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமென்றால் (லூக். 13:3; மத். 10:32; மாற். 16:15, 16), இன்றே அதைச் செய்யுங்கள்!

குறிப்புகள்

[1]இந்தப் பிரசங்கத்திற்கு, மத். 26:57, 59-68; 27:1, 2, 11-31அ; மாற். 14:53, 55-65; 15:1-20அ; லூக். 22:54அ, 63-71; 23:1-25; யோவா. 18:12-14, 19-24, 28-40; 19:1-16 ஆகியவை வேத வசனப் பகுதிகளாக உள்ளன. [2]நமது இரட்சிப்பைக் கொண்டுவருவதற்கு இயேசு ஏன் மரிக்க வேண்டியிருந்தது என்பதை விளக்குதல் இந்த மறுப்புரைகளுக்குப் பதில் அளிக்கும் இன்னொரு அம்சமாக உள்ளது. [3]இந்த விசாரணைகளை எடுத்துரைக்கும் பாடத்தைத் தொடர்ந்து இந்தப் பிரசங்கம் பிரசங்கிக்கப்படவில்லை என்றால், இந்த விசாரணைகளை மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம். [4]ஹார்வர்ட் என்பது மாசசூட்ஸ் மாகாணத்தின் கேம்பிரிட்ஜ் நகரில் உள்ள அமெரிக்காவின் மேன்மைமிக்க சட்டப்படிப்பின் பல்கலைக்கழகம் ஆகும். [5]Raymond E. Brown, *The Death of the Messiah,* vol. 1 (New York: Doubleday, 1994), 330. [6]மிஷ்னா (இது ஆங்கிலத்தில் Mishnah அல்லது “Mishnah” என்று உச்சரிக்கப் படுகிறது) என்ற புத்தகமும் அத்துடன் (பிற்பாடு மிஷ்னாவுக்கு தரப்பட்ட விளக்கங் கள்) *[The Gemara]* கெமாரா என்ற புத்தகமும் இணைந்து *[The Talmud]* தல்மூத் என்ற புத்தகமாகத் தொகுக்கப்பட்டது, இது இன்றைய நாட்களிலும் யூதர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதாக உள்ளது. [7]இந்தப் பட்டியலானது, பின்வரும் புத்தகங்கள் உள்ளிட்ட, பல்வேறு ஆதாரமூலங்களிலிருந்து பெறப்பட்ட ஒரு தொகுப்புரையாக உள்ளது: Brown, 358-59 and Bruce Corley, “Trial of Jesus,” *Dictionary of Jesus and the Gospels,* eds. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 851. [8]பிற்பாடு லூக்கா, ஆலோசனைச் சங்கத்தின் ஒரு உறுப்பினரான அரிமத்தியாவூர் யோசேப்பு என்பவர் ‘‘யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்’’ என்று குறிப்பிட்டார் (லூக். 23:51). ஒருவேளை, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் யோசேப்பு அங்கு இல்லாதிருக்கலாம், அல்லது ஒருவேளை மாற்குவும் லூக்காவும், ‘‘மேற்கொள்ளும் பெரும்பான்மையானவர்கள்’’ என்ற கருத்தில் “எல்லாரும்” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கலாம். [9]யூதர்கள் இயேசுவை விசாரணை செய்த நிகழ்ச்சிகள் பற்றிய புதிய ஏற்பாட்டு விவரங்கள், யூதத்துவ நீதிமன்றம் எதுவும் இப்படிப்பட்ட தேவபக்தியற்ற நடக்கையில் செயல்பட்டிராது என்று வலியுறுத்துகின்ற சிலரால் அறைகூவல் விடப் பட்டுள்ளன. இந்த மறுப்பாளர்கள் நியாயமானது - ‘‘மதரீதியான’’ தீர்ப்பாயங்களினால் கூட - வேண்டுமென்றே புரட்டப்பட்ட பல தவறான நடக்கைகள் பற்றி அறியாதிருக்க வேண்டும், இது மனிதகுலத்தின் வரலாற்றையே கறைப்படுத்தியுள்ளது. சுவிசேஷ விவரங்களை எழுதியவர்கள் தேவனால் ஏவப்பட்டனர், எனவே அவர்கள் சத்தியத்தை, சத்தியத்தை மாத்திரமே பதிவு செய்துள்ளனர் என்று நான் விசுவாசிக்கின்றேன். [10]சிலர் ‘‘முறையற்றவைகள்’’ என்பதை விரும்பித் தேர்ந்துகொள்ளுகின்றனர், ஆனால் “சட்டவிரோதமானவைகள்” என்பது மிகவும் சரியானதாகக் காணப்படுகிறது.

[11]குறைந்தபட்சம் இருபத்தி ஏழு சட்டவிரோதமான செயல்கள் இருந்தன என்று சிலர் நம்புகின்றனர் (Corley, 851). [12]இந்தப் பட்டியல் அநேகமாக விரிவாக்கப்படக்கூடும். எடுத்துக்காட்டாக, மிஷ்னாவின்படி, எவரொருவரும் தாம் சாட்சியாக இருக்கக் கூடிய வழக்கில் நியாயாதிபதியாகச் செயல்பட முடியாது (சனதெரீன் 5.4), ஆனால் சனதெரீன் சங்கத்து உறுப்பினர்கள், இயேசு “தேவதூஷணம்” கூறினார் என்று சொல்லப்பட்ட விஷயத்திற்குச் சாட்சிகளாகவும் நியாயாதிபதிகளாகவும் இருந்தனர் (லூக். 22:71). [13]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 377. [14]A. N. Sherwin-White, “Pilate, Pontius,” *The International Standard Bible Encyclopedia,* rev., gen. ed.

Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:868. [15]Corley, 849. *கோர்லீ அவர்கள், ஜெர்மனியைச் சேர்ந்த தியொடொர் மொம்ஸென் என்பவரினால் எழுதப்பட்ட ஒரு பாடத்தைக் குறிப்பிட்டார், இவர் 1902ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்றார். ரோமாபுரியின் வரலாறு என்ற நான்கு தொகுதிகளால் ஆன புத்தகம் இவரது மிகச் சிறந்த நூல் என்று அறியப்பட்டுள்ளது.* [16]Walter Wangerin, Jr., *The Book of God: The Bible as a Novel* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1996), 796. [17]*குறைந்தபட்சம், பிலாத்து இயேசுவைப் பாதுகாப்பான காவலில் வைத்திருக்க வேண்டும்.* [18]*லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களில் உள்ள சில கூற்றுகள் ஏறக்குறைய ஒன்றின்மீதொன்று கவிந்துள்ளன என்பது உறுதி, ஆனால் நான் அவற்றைத் தனித்தனியே பட்டியலிட்டுள்ளேன்.* [19]*"ஆபத்து"* ["jeopardy"] *என்ற வார்த்தை அபாயம் அல்லது பேரிடர் என்பதைக் குறிக்கிறது. ஒரு விசாரணையின் விஷயத்தில், இவ்வார்த்தையானது தண்டனை விதித்தலின் அபாயத்தைக் குறிப்பிடுகிறது. அமெரிக்காவில், இரட்டை அபாயத்திற்கு எதிரான தடையானது சட்டத்தின் ஐந்தாம் அமலாக்கப் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பாக உள்ளது மற்றும் இது பெரும்பான்மையான மாகாண சட்ட விதிகளினாலும் அளிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளில் இதே போன்ற சட்ட விதிகள் உள்ளன.* [20]*பிலாத்துவுக்கு யூதர்களுடன் இருந்த ஆட்டம்கண்ட உறவுமுறையை நீங்கள் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்.*

[21]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 211. *இயேசுவைச் சிலுவையில் அறையும்படி பிலாத்து ஒப்புக்கொடுத்தபோது காலை சுமார் 6:00 மணிவேளையாகத்தான் இருந்தது என்ற உண்மையானது (யோவான் 19:14ன் மீதான குறிப்புகளை "எல்லாரும் விடையளிக்க வேண்டிய ஒரு கேள்வி" என்ற முந்திய பாடத்தில் காணவும்), இந்த முழு செயல்முறையும் பரபரப்பாகவும் துரிதமாகவும் செய்யப்பட்டன என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.* [22]*அவரது விரோதிகள் அவருக்கு எதிராக ''பொய்ச்சாட்சிகளை'' தேடினர் என்ற உண்மையானது (மத். 26:59), அவரைத் தண்டிப்பதற்கு உண்மையான சாட்சிகளைக் கண்டறிய முடியாது என்று அவர்கள் அறிந்திருந்தனர் என்பதற்கு ஆதாரமாக உள்ளது.* [23]*இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார் என்பதால் (1 கொரி. 15:3), உண்மையில் நம் எல்லாருடைய பாவங்களின் காரணமாகவே அவர் சிலுவையில் அறையப்பட்டார். இந்தப் பிரசங்கத்தில் இந்த வேளையில், அவரது விரோதிகளின் பாவம் நிறைந்த தன்மை மறுகண்ணோட்டத்தின் கீழ் உள்ளது.* [24]*நீங்கள் இயேசுவின் தெய்வீகத்துவத்திற்கு நிரூபணங்களைக் கூட்டிக் கொள்வதன்மூலம் இந்தச் சிந்தனையை விரித்துரைக்க விரும்பலாம்.* [25]Albert Simpson, "What Will You Do with Jesus?" *Songs of Faith and Praise,* comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [26]*இதைப் பற்றிய அதிகமான கருத்துக்கள், "பொந்தியு பிலாத்து (மற்றும் இயேசுவின் மரணம்)'' என்ற துணைப்பாடத்தில் கூறப்பட்டுள்ளது.*

*89*

# வெற்றியா அல்லது துன்பமா?

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #39*

VII. *இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம் (தொடர்ச்சி).*
- H. *வெள்ளிக்கிழமை*: இயேசுவினுடைய மரண நாள் (தொடர்ச்சி).*
  - 8. *யூதாஸின் மரணம்: தற்கொலை (மத். 27:3-10; அப். 1:18, 19).*
  - 9. *இயேசுவின் மரணம்: சிலுவையில் அறையப்படுதல்.*
    - a. *சிலுவைக்குப் பயணம் (மத். 27:31ஆ-34; மாற். 15:20ஆ-22; லூக். 23:26-33; யோவா. 19:17).*
    - b. *சிலுவையில் முதல் மூன்று மணி நேரங்கள் (தொடங்கினது) (மத். 27:3-10, 31ஆ-35, 37-39; மாற். 15:20ஆ-29; லூக். 23:26-33, 38; யோவா. 19:17-22; அப். 1:18, 19).*

### அறிமுகம்

அப்போஸ்தலரான யோவான், இயேசு செய்தவைகள் எல்லாவற்றையும் "ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாது ..." என்று கூறினார் (யோவா. 21:25). இதே போன்ற வகையில், கிறிஸ்துவின் வாழ்வில் நடந்த ஒரே ஒரு நிகழ்ச்சியைக் குறித்து எழுதப் பட்டுள்ள யாவற்றையும் கொள்வதற்கு உலகில் மிக அரிதாகவே இடம் உள்ளது: சிலுவையில் அவரது மரணம். அந்த ஒரு சில மணிநேரங்களினால் ஏவப்பட்டுள்ள புத்தகங்களும் கட்டுரைகளும், பிரசங்கங்களும் பாடல்களும், வரைபடங்களும் மற்றும் மாபெரும் கலைப்படைப்புக் களும்தான் எத்தனை எத்தனை!

இயேசுவின் வாழ்வில் ஒவ்வொரு விஷயமுமே அவரது மரணத்தைச் சுட்டிக்காண்பித்து, அதை எதிர்பார்த்திருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ளும்போது, சிலுவையில் செயல்வலிவானது திகைக்கச் செய்வதாக இருப்பதில்லை (மத். 1:21; லூக். 1:31; 2:30, 35ஐக் காணவும்[1]). எண்ணற்ற வேளைகளில், அவர் தமது மரணத்தை முன்னுரைத்தார் (மத். 16:21; 17:22, 23; லூக். 18:31-33ஐக் காணவும்). உண்மையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்குப் பல மாதங்களுக்கு முன்னதாகவே, அவர் "அவர்

எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி[னார்]" (லூக். 9:51), அங்கு தாம் மரிக்கவிருந்ததை அவர் அறிந்திருந்தார். கொல்கொதாவில் கிறிஸ்துவின் ஆறுமணி நேரமானது (மாற். 15:25, 33, 34, 37) அவரது ஊழியத்தின் உச்சகட்ட வேளையாக இருந்தது.[2]

முந்திய இரு பகுதி பாடத்தில் நாம், யூதர்களின் வேண்டுகோளுக்குப் பிலாத்து தயக்கத்துடன் இணங்கி இயேசுவுக்குச் சிலுவை மரணத்தைக் கட்டளையிட்டதைக் கண்டோம். இயேசு விசாரணை செய்யப்பட்ட போது, ஏதோ ஒரு வேளையில், யூதாஸ் - இயேசுவைக் காட்டிக் கொடுத்திருந்தவன் - தற்கொலை செய்துகொண்டான். இந்தப் பாடமானது அந்த நிகழ்ச்சியில் தொடங்கி பின்பு சிலுவையில் கிறிஸ்துவினுடைய வரலாற்றை எடுத்துரைக்கும். அந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பினிமித்தம், இதுவும் இன்னொரு இரு பகுதிப் பாடமாக இருக்கும்.

இந்த எடுத்துரைப்பில், யூதாஸின் மரணமும் இயேசுவின் மரணமும் நேரெதிராக ஒப்பிடப்படும். பல நேரெதிர்ப் பண்புகள் குறிப்பிடப்படக் கூடும். யூதாஸ் நான்றுகொண்டு செத்தான்; இயேசு சிலுவையில் அறையப் பட்டு மரணமடைந்தார். யூதாஸ் தனது சொந்தக் கைகளினாலேயே செத்தான்; இயேசு மற்றவர்களின் கரங்களினால் மரித்தார். யூதாஸ் தனது மனச்சாட்சியினால் குற்றம் உணர்த்தப்பட்டான், இயேசு யூதர்களினால் ஆக்கினைக்குட்பட்டு பிலாத்துவினால் தண்டனை விதிக்கப்பட்டார். இருப்பினும், யூதாஸின் மரணம் ஒரு *துன்ப* நிகழ்ச்சியாக இருக்கையில், இயேசுவின் மரணம் ஒரு *வெற்றி*யாக இருந்தது: யூதாஸ் மனம்வருந்தாத சுயகொலைகாரனாக மரித்தான், ஆனால் இயேசு தேவனுடைய மாசில்லாத குமாரனாக மரித்தார். நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்படுகையில், பின்வரும் கேள்வி கேட்கப்படும்: "உங்கள் மரணம் ஒரு வெற்றியாக இருக்குமா அல்லது ஒரு துன்பமாக இருக்குமா?"

## துன்பம் (மத். 27:3-10; அப். 1:18, 19)

நிகழ்ச்சிகளின் வரிசைத் தொடரில் யூதாஸின் மரணம் பற்றிய விவரத்தை எவ்விடத்தில் வைப்பது என்று நமக்கு உறுதியாய்த் தெரிவ தில்லை. மத்தேயு 27, இந்த வரலாற்றை "... சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசுவை ... தேசாதிபதியாகிய பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்" (வ. 1, 2) என்ற நிகழ்ச்சிக்குப் பின் உடனடியாக வைக்கிறது. - மற்றும் அது ஒருவேளை இந்த நிகழ்ச்சி நடந்த வேளையாக இருக்கலாம். இருப்பினும், யூதாஸ், "அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டு வந்தபோது," அவர்கள் அப்போது பிலாத்துவின் நியாயாசனத்தின் முன்பாக இருக்கவில்லை, ஆனால், "தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில்" இருந்தனர் (வ. 3, 5). ஒருவேளை, இயேசுவை மரணத்திற்கு உட்படுத்த ஆளுநர் ஒப்புக்கொண்ட பின்பு, ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில்,[3] பிரதான ஆசாரியர்கள் தங்கள் காலைக் கடமைகளைச் செய்வதற்காக தேவாலயத்திற்கு விரைந்திருக்கலாம் - அங்கே யூதாஸ் அவர்களைக்

கண்டிருக்கலாம்.[4]

எவ்வகையிலும், இயேசு விசாரணை செய்யப்பட்டபோது ஏதோ ஒருவேளையில், "... யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்"[டான்] (வ. 3ஆ). கிறிஸ்துவுக்கு மரண தண்டனை தரப்பட்டது என்ற உண்மையானது யூதாஸுக்குத் திகைப்பாய் இருந்திருக்க வேண்டும். அவன் ஒருவேளை, இயேசு குற்றமற்றவராக இருந்ததால் (வ. 4), கைது செய்யப்படுவதால் அவருக்குத் தீங்கெதுவும் ஏற்படாது - அதே வேளையில் தான் முப்பது வெள்ளிக்காசுகளைப் பெற்றுக் கொண்டு பணக்காரனாகி விடலாம் - என்று நினைத்திருக்கலாம்.[5] இருப்பினும், இயேசு மரிப்பார் என்பது தெளிவானபோது, யூதாஸ் தாமதமாக ஒரு உணர்வு நிலையை/மனச்சாட்சியின் உறுத்தலை வளர்த்துக் கொண்டான்.

யூதாஸ் தன்னை இந்த வேலைக்கு அமர்த்தியவர்களைத் தேவாலயத்தில் கண்டு, இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்குத் தனக்குத் தரப்பட்ட பணத்தை அவர்களிடத்தில் திருப்பித்தர முயற்சி செய்தான் (வ. 3ஆ), ஆனால் அவர்கள் அதை [திரும்பப் பெற்றுக்கொள்ள] மறுத்துவிட்டனர்.[6] அவன், "குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ் செய்தேன்" என்றான் (வ. 4அ). அதற்கு அவர்கள் "எங்களுக்கென்ன, அது உன்பாடு!" என்று அலட்சியமாகக் கூறினார்கள் (வ. 4ஆ). காட்டிக் கொடுப்பவர்கள் தாங்கள் யாருக்குப் பணிபுரிகின்றார்களோ, அவர்களால் எவ்வித மாறுதலுமின்றி அவமதிக்கப்படுகின்றனர்.

குளிர்ந்த, கல்லான இருதயங்களினால் திருப்பி விரட்டப்பட்ட யூதாஸ், அந்தப் பணத்தைக் குளிர்ந்த கல்தரையில் வீசியெறிந்துவிட்டு "புறப்பட்டுப் போனான்" (வ. 5அ) - ஆனால் அவன் எங்கு செல்ல முடியும்? யூதத்துவ உயர் அதிகார வர்க்கத்தினர் அவனைப் புறக்கணித்து விட்டனர், அவனால் மற்ற அப்போஸ்தலர்களை முகமுகமாய் சந்திக்க இயலாது. எனது சிந்தையில், யூதாஸ் எருசலேம் நகரத்தின் தெற்கு மதில்களுக்கு வெளிப் புறத்தில் இருந்த குயவனின் நிலத்தைச் சென்று சேரும் வரையில், அந்த நகரத்தின் தெருக்களினூடே தெற்கு நோக்கி தள்ளாடிய நிலையில் செல்லுவதை, என்னால் கற்பனை செய்து காண முடிகிறது.[7] அங்கே அவன், "நான்றுகொண்டு செத்தான்" (வ. 5ஆ).

யூதாஸ் சென்ற பின்பு, பிரதான ஆசாரியர்கள் அந்த முப்பது காசுகளைக் கொண்டு என்ன செய்வது என்று கலந்து ஆலோசனை செய்தனர். அவர்கள், "இது இரத்தக்கிரயமானதால், காணிக்கைப் பெட்டியிலே இதைப் போடலாகாது" என்று கூறினர் (வ. 6). இதைக் குறித்துப் பழைய ஏற்பாட்டின் ஒழுங்குமுறை எதுவும் இல்லை, எனவே அவர்கள் மனிதர் களால் ஏற்படுத்தப்பட்ட தங்கள் சட்டங்களில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். அவர்களின் தயக்கத்தைக் குறித்து, J. W. மெக்கார்வீ அவர்கள் விளக்கம் அளித்தார்:

> அவர்களுடைய மனச்சாட்சியானது வினோதமானதாக இருந்தது ... கர்த்தருடைய பணத்தை எடுத்து அதை ஒரு இரத்தத்திற்காகச் செலவிட்டிருந்தனர், ஆனால் அவ்வாறு செலவிட்ட பின்பு அதைத்

> திரும்பவும் போடமுடியாதிருந்தனர்! மேலும் அவர்களுடைய ஒப்புக்கொள்ளுதல் வினோதமானதாக இருந்தது. யூதாஸுக்குக் கொடுக்கப்பட்ட பணமானது ஒரு உண்மையான குற்றவாளியைக் கைது செய்வதற்கென்று சரியான வகையில் செலவிடப்பட்டிருந்தது என்றால், அது நியாயமான பணமாக இருந்தது, அது இரத்தக் கிரயமாக இருந்ததே இல்லை.[8]

அதிகாரிகள் அந்தப் பணத்தை, "குயவனின் நிலம்" ஒன்றை வாங்கப் பயன்படுத்துவதென்று தீர்மானித்தனர் (வ. 7அ). "குயவனின் நிலம்" என்பது அநேகமாக, குயவர் ஒருவருக்குக் களிமண் கிடைக்கும் ஆதாரமூலமாக இருந்திருக்கலாம்.[9] அப்படிப்பட்ட நிலமானது வேளாண்மைத் தொழிலுக்குத் தகுதியற்றதாக இருந்ததால், அது நியாயமான/குறைவான விலையில் வாங்கப்படக்கூடும். யூதத்தலைவர்கள், "அந்நியரை அடக்கம் பண்ணுவதற்கு" (வ. 7ஆ) பயன்படுத்துவதற்காக அந்த நிலத்தை வாங்கினர்.[10] "அந்நியர்" என்பது அநேகமாக, எருசலேமுக்கு வந்திருக்கையில் மரித்துப் போகும் யூதரல்லாதவர்களைக் குறிக்கிறது. புறஜாதியார் யூதக் கல்லறையில் வரவேற்கப்பட மாட்டார்கள்.

மத்தேயு, ஏவுதல் பெற்ற பின்வரும் விளக்கத்தைக் கூடுதலாகக் கூறினார்: "இதினிமித்தம் அந்த நிலம் இந்நாள் வரைக்கும் இரத்தநிலம் என்னப்படுகிறது" (வ. 8). அதாவது, அந்த நிலம் "இரத்தக் கிரயமான" (வ. 6) பணத்தைக் கொண்டு வாங்கப்பட்டதால் "இரத்த நிலம்" என்று அழைக்கப்பட்டது. "இந்நாள் வரைக்கும்" என்ற சொற்றொடரானது இந்த நிகழ்ச்சி நடைபெற்ற வேளைக்கும், இதை மத்தேயு பதிவு செய்த வேளைக்கும் இடையில் சற்றுக்காலம் கடந்திருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது (இது அநேகமாக, சுமார் முப்பது ஆண்டுகளாக இருக்கலாம்).

மத்தேயு தமது வழக்கப்படியே, இந்த நிகழ்ச்சியானது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் என்றும் குறிப்பிட்டார்:

> இஸ்ரவேல் புத்திரரால் மதிக்கப்பட்டவருக்குக் கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை அவர்கள் எடுத்து, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்திற்காக அதைக் கொடுத்தார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று (வ. 9, 10).

வசனம் 9 மற்றும் 10ன் வார்த்தைகள் எரேமியாவின் புத்தகத்தில் காணப்படுவதில்லை, ஆனால் அவைகள் சகரியாவின் புத்தகத்தில் உள்ள வார்த்தைகளுக்கு ஒப்பானவைகளாக உள்ளன (சக. 11:12, 13). இந்த முறையற்ற குறிப்பிடுதலுக்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. எரேமியா இவ்வார்த்தைகளைப் பேசியிருந்து, பிற்பாடு இவற்றை சகரியா எழுதியிருக்கலாம்.[11] குயவன் ஒருவன் பற்றிய எரேமியாவின் வார்த்தைகளினால் (எரே. 18:1-6; 19:1-13) மற்றும் அவர் ஒரு நிலத்தை வாங்கிய உண்மையினால் (எரே. 32:9) செல்வாக்குச் செலுத்தப்பட்ட நிலையில், சகரியா ஏவுதலினால் பேசியதால், எரேமியா இவ்விடத்தில் குறிப்பிடப்

பட்டிருக்கலாம்.[12]

மத்தேயு சுவிசேஷம் மாத்திரமே யூதாஸின் மரணத்தைப் பதிவு செய்துள்ள ஒரே சுவிசேஷ நூலாக உள்ளது; ஆனால் இதைப் பற்றி லூக்கா பிற்பாடு அப். நடபடிகள் புத்தகத்தில் யூதாஸுக்குப் பதிலாக இன்னொருவரை நியமிக்கும் நிகழ்ச்சி தொடர்பாகக் குறிப்பிட்டார்:

> "... இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக் குறித்து ... ." (அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான், அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது) (அப். 1:16-19).

விமர்சகர்கள், இவ்விரு விவரங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பதாகத் தாங்கள் உய்த்து உணர்ந்தவற்றைப் பற்றிக்கொண்டுள்ளனர்: (1) ஆசாரியர்கள் நிலத்தை வாங்கியதாக மத்தேயு கூறினார் (மத். 27:7), யூதாஸ் அதை வாங்கியதாக லூக்கா கூறினார் (அப். 1:18). (2) யூதாஸ் நான்று கொண்டு செத்ததாக மத்தேயு கூறினார் (மத். 27:5), யூதாஸ் "தலைகீழாக விழுந்ததினால்" செத்ததாக லூக்கா கூறினார் (அப். 1:18). (3) அந்த நிலம் இரத்தக் கிரயத்தைக் கொண்டு வாங்கப்பட்டதால் "இரத்த நிலம்" என்று அழைக்கப்பட்டதாக மத்தேயு கூறினார் (மத். 27:6, 8), அதில் யூதாஸின் இரத்தம் சிதறியதால் அது அப்பெயரைப் பெற்றது என்று லூக்கா கூறினார் (அப். 1:18, 19). இருப்பினும் இவ்விரு விவரங்களையும் இணைவித்தல்/ இசைவித்தல் என்பது கடினமானதாக இருப்பதில்லை:

- ஆசாரியர்கள் யூதாஸின் பணத்தைக் கொண்டு, அந்த நிலத்தை வாங்கியதால், இந்த வாங்குதல் என்பது செயல் வகையில் அவனுடையதாகவும், நிலம் அவனுடையதாகவும் இருந்தது.
- அநேகமாக யூதாஸ், குயவனின் நிலத்தில் இருந்த ஒரு மரத்தில் தூக்கிலிட்டுக் கொண்டிருக்கலாம். இறந்துபோன ஒருவனுடைய உடலைத் தொடுதல் என்பது சடங்காச்சார ரீதியாக யூதர்களுக்கு அசுத்தமானதாக இருந்ததால், எவரொருவரும் அவனது உடலைத் தொட்டிருக்கமாட்டார்கள் (விசேஷமாக, பண்டிகையின்போது அவர்கள் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள்). ஏதோ ஒருவேளையில், யூதாஸின் கைவிடப்பட்ட, அழுகிப்போன உடலானது கீழே விழுந்து வயிறு வெடித்து வயலில் சிதறியிருக்கும்.[13]
- அந்த நிலம், "இரத்த நிலம்" என்று அழைக்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றை மத்தேயு கொடுத்தார்; இன்னொன்றை லூக்கா கொடுத்தார்.

இவ்விரு சுவிசேஷ விவரங்களையும் ஒன்று கலத்தல் என்பது, யூதாஸின் மரணம் ஒரு துன்பம் என்று மேலும் வலியுறுத்துகிறது. இயேசு, "... எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனு

ஷனுக்கு ஐயோ!; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும்'' என்று கூறியிருந்தார் (மத். 26:24). தேவனிடம் ஒரு ஜெபத்தில் கிறிஸ்து, யூதாஸை ''கேட்டின் மகன்'' (யோவா. 17:12) - அதாவது, "அழிவிற்கென்று பாழான ஒருவன்" என்று குறிப்பிட்டிருந்தார். பிற்பாடு பேதுரு, "யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் [தனக்குச் சொந்தமான இடத்துக்கு; NIV] போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்தி லும் இந்த அப்போஸ்தலப் பட்டத்திலும் ..." என்று உரைத்தார் (அப். 1:25). தனக்குரிய நற்பண்பினிமித்தம்[14] கர்த்தரால் தேர்ந்துகொள்ளப்பட்டிருந்த யூதாஸ் தனது வாய்ப்புக்களை வீணடித்து சுயத்தினால் குற்றப்படுத்தப்பட்ட காட்டிக்கொடுத்தவனாக இறந்தான்.

யூதாஸ் தற்கொலை செய்து கொள்ளாதிருந்தால் என்னவாகியிருக்கும்? பிற்பாடு அவன் மன்னிப்புக் கேட்டிருந்தால் என்னவாகியிருக்கும்? இயேசு தம்மை மறுதலித்த பேதுருவை ஏற்றுக்கொண்டது போலவே, இவனையும் (யூதாஸையும்) திரும்ப ஏற்றுக்கொண்டிருப்பார்[15] என்று நான் நம்புகின் றேன். யூதாஸ் ஏன் தன்னைத் தேவனுடைய இரக்கத்தின்மீது விழச் செய்யாதிருந்தான்? இதற்கான பதிலானது மத்தேயு 27:3ல் "மனஸ்தாபப் பட்டு'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையினால் கருத்தாக தெரிவிக்கப்படலாம்: "... யூதாஸ் ... அவர் மரணாக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு ... ."

KJV மற்றும் RSV ஆகிய வேதாகமங்கள், யூதாஸ் "மனந்திரும்பினான்" [repented] என்று கூறுகின்றன, ஆனால் இவ்விடத்தில் உள்ள கிரேக்க வார்த்தையானது மனந்திரும்புதல் என்பதற்கான வழக்கமான வார்த்தை யாக இருப்பதில்லை. மனந்திரும்புதலுக்கான வார்த்தையான, *metanoeo* என்பது மனதில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கிறது.[16] இதை ஒரு மனிதருக்கு நடைமுறைப்படுத்தும்போது, இது பொதுவாக, இருதயத்தில் ஏற்படும் தனிச்சிறப்பான மாற்றத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. இருப்பினும், மத்தேயு 27:3ல் *metamellomai* என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, இது செய்யப்பட்ட செயலுக்காகக் கவலை கொண்டிருத்தல்[17] ஆனால் இருதயத்தில் உணர்ந்து மனந்திரும்புதலில் குறைவுபடுதல்[18] என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. NASB வேதாகமத்தில் இவ்வார்த்தை, "felt remorse" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மெக்கார்ட் அவர்களின் மொழிபெயர்ப்பில் இது "filled with regret"[19] என்றுள்ளது. NCV வேதாகமத் தில் "was very sorry" என்றுள்ளது.

யூதாஸின் மனச்சாட்சி அவனை வதைத்தது ஆனால் அது அவனை மாற்றவில்லை. அவன் துக்கத்தினால் மூழ்கடிக்கப்பட்டான், ஆனால் மனம் வருந்தவில்லை. அவன் தனது விசுவாசத்தைக் கைவிட்டு தனது இருதயத் தைக் கடினப்படுத்திய நிலையில், நம்பிக்கையிழந்து போனான். வதைக்கப் பட்ட அவனது மனமானது, தனது இக்கட்டான நிலையை விட்டு வெளியேற மரணத்தைத் தவிர வேறெந்த வழியையும் காணாதிருந்தது.[21] யூதாஸின் தற்கொலையில், ஒரு வீணாக்கப்பட்ட வாழ்வு துன்பகரமான முடிவுக்கு வந்து சேர்ந்தது.

# வெற்றி
## (மத். 27:31-35, 37-39; மாற். 15:20-29; லூக். 23:26-33, 38; யோவா. 19:17-22)

இது யூதாஸின் வரலாற்றை விட்டு இயேசுவின் வரலாற்றுக்குத் திரும்பும் நேரமாக உள்ளது. நாம் எடுத்துரைப்பை விட்டு வந்தபோது, அவரைச் சிலுவையில் அறைவதற்குத் தயாரிப்புப் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருந்தன: அறிவுறுத்தல்கள் தரப்பட வேண்டியிருந்தது, மரண தண்டனை நிறைவேற்றத்திற்குப் படைவீரர்கள் நியமிக்கப்பட வேண்டியிருந்தது (யோவா. 19:23; மத். 27:54ஐக் காணவும்), ஒரு அடையாளப் பலகை மேல் விலாசம் எழுதப்பட வேண்டியிருந்தது (மத். 27:37), மற்றும் தவிர்க்க இயலாத எழுத்துப் பணிகள் முடிக்கப்பட வேண்டியிருந்தது.[22] காலை 9:00 மணிக்கு முன்பு ஏதோ ஒரு வேளையில்,[23] இவை யாவும் தயாராயிற்று, மற்றும் ஊர்வலமானது வடக்கு நோக்கித் தொடங்கிற்று.[24]

### ஊர்வலம்

பொறுப்பாளியாயிருந்த நூற்றுக்கு அதிபதி (மத். 27:54ஐக் காணவும்) அந்தக் குழுவை வழிநடத்திச் சென்றிருக்கக் கூடும். அவரைத் தொடர்ந்து, மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சென்றனர்: இயேசுவும், மற்ற இரு குற்றவாளிகளும் (லூக். 23:32). அவர்களுக்குப் பின்னால் படைவீரர்கள் அவர்களை விரட்டிச் சென்றனர். பின்னால், இந்தப் பேரழிவினால் ஈர்க்கப்பட்ட வழக்கமான கூட்டம் இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி, அநேகர் துன்ப நிகழ்ச்சியைக் காணும் ஆர்வத்தினால் வெளியே வந்தனர், ஆனால் பெண்களில் சிலர் அழுதனர் (லூக். 23:27).

வழக்கம்போல, இந்தப் பயணம் இயேசு "தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு" (யோவா. 19:17) செல்லுதலுடன் தொடங்கிற்று. "முழுச் சிலுவையின் எடையானது அநேகமாக 300 பவுண்டுகளுக்கு (136 கிலோ கிராம்களுக்கு) மேல் இருந்ததால், 75 முதல் 125 வரையான பவுண்டுகள் (34 முதல் 57 வரையான கிலோகிராம்கள்) எடையுள்ள குறுக்குச்சட்டம் மாத்திரம் சுமந்து செல்லப்பட்டிருக்க வேண்டும்."[25] இயேசு, தாம் நடக்க வேண்டியிருந்த தூரம் முழுவதும் இந்தப் பாரத்தைச் சுமந்து செல்ல இயலாதவராக இருந்தார். உறக்கமற்ற இரவு, தொடர்ந்து துன்புறுத்தப் பட்டது மற்றும் ரோமர்களால் சவுக்கடிபட்டது ஆகியவற்றிற்குப் பின்பு, அவர் வலிவிழந்து போயிருக்க வேண்டும்.[26] படைவீரர்கள் பதில் ஆள் ஒருவரைக் கண்டறிய வேண்டியிருந்தது: "சிரேனே ஊரானும், அலெக்சந் தருக்கும் ரூப்புக்கும் தகப்பனுமாகிய சீமோன் என்னப்பட்ட ஒருவன் நாட்டிலிருந்து அவ்வழியே வருகையில், அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி அவனைப் பலவந்தம்பண்ணினார்கள்" (மாற். 15:21).

சிரேனே என்பது (இப்போது லிபியா என்னப்படுகிற) வடக்கு மத்திய ஆப்பிரிக்காவில் உள்ள சிரேனிக்கேயா மாகாணத்தின் தலைநகராயிருந்தது. சிரேனிய யூதர்களுக்கு எருசலேமில் ஒரு ஜெப ஆலயம் இருந்தது (அப். 6:9).

சீமோனைப் படைவீரர்கள் பற்றிப்பிடித்த வேளையில்[27] அவர் நகருக்குள் தேவாலயத்தில் காலை ஜெபம் செய்வதற்காக வந்துகொண்டிருந்து இருக்கலாம். அது எவ்வளவு அதிர்ச்சியாக இருந்திருக்க வேண்டும்!

சீமோனின் இரு மகன்களுடைய பெயர்களை மாற்கு குறிப்பிட்டார் என்ற உண்மையானது, அவர் தமது வாசகர்கள் அந்தப் பெயரைப் புரிந்துணர வேண்டும் என்று எதிர்பார்த்ததைச் சுட்டிக்காண்பிக்கிறது. ரூப் என்பவர், ரோமர் 16:13ல் பவுலினால் குறிப்பிடப்பட்ட ரூப் என்பவராக இருக்கலாம். சிரேனேயின் யூதர்கள் [சிலர்] ஒருவேளை, பெந்தெகொஸ்தே நாளில் மனம்மாற்றப்பட்டிருக்கலாம் (அப். 2:10, 37, 41). பிற்பாடு, சிரேனியக் கிறிஸ்தவர்கள் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பரப்பினார்கள் (அப். 11:20).

[சிலுவையின் குறுக்குச் சட்டமாகிய] மரக்கட்டை கிறிஸ்துவின் தோள்களிலிருந்து சீமோனின் தோள்களுக்கு மாற்றப்பட்ட பின்பு ஊர்வலம் முன்னோக்கி நகர்ந்தது (லூக். 23:26).[28] கூட்டம் நிறைந்த தெருக்களில், பண்டிகைக்கு வந்திருந்த திருப்பயணிகள் நிறைந்திருந்த தெருக்களில் ஊர்வலம் மெதுவாகச் சென்றிருக்கும். ஓரிடத்தில் - அநேகமாக அந்தக் குழுவினர் சற்றே ஓய்ந்திருக்க வேண்டியிருந்த இடத்தில் - இயேசு, அழுதுகொண்டிருந்த பெண்களை நோக்கிப் பேசுவதற்குச் சற்றே பலத்தைத் திரட்டிக் கொண்டார்:

> ‘‘எருசலேமின் குமாரத்திகளே,[29] நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். இதோ, மலடிகள் பாக்கியவதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்களும் பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்கள் வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை நோக்கி: எங்களை மறைத்துக் கொள்ளுங்களென்றும் சொல்லத்தொடங்குவார்கள். பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கு என்ன செய்ய மாட்டார்கள்?’’ என்றார் (லூக். 23:28-31).

இயேசுவின் வார்த்தைகள், வரவிருந்த முற்றுகையையும் எருசலேமின் முற்றான அழிவையும் (கி.பி. 66-70) குறிப்பிட்டன. பேரழிவான அந்த நிகழ்ச்சியானது, பிள்ளைகளை உடையவர்களுக்கு இரு மடங்கு கடினமானதாக இருக்கும்.[30] வசனம் 30, ஓசியா 10:8ல் இருந்து வந்த ஒரு மேற்கோளாக உள்ளது, இது நம்பிக்கையிழந்த மனிதர்கள் ஏதாவது ஒருவகையான பாதுகாப்பிற்காகக் கதறுவதாயிருந்தது.

கிறிஸ்துவின் கூற்றில் உள்ள கடைசி வாக்கியமானது, ரோமாபுரியார், ‘‘பச்சை மரத்தையே’’ (இயேசுவையே) இவ்விதமாய் நடத்தினால், ‘‘பட்டமரத்துக்கு’’ (எருசலேமுக்கு) என்ன செய்வார்கள் என்பதைக் கற்பனைச் செய்யும்படி மறைமுகமாய் உணர்த்திற்று. இதை இன்னொரு வகையில் நினைத்துப் பாருங்கள்: ரோமாபுரிக்கு எதிராகக் கலகம் எதுவும் செய்யாது, ஒன்றுமறியாதவராக இருந்த இயேசுவையே அவர்கள் இவ்வாறு செய்தால், எருசலேம் நகரத்தின் குடிகள் உண்மையில் (60களில் நடந்தது

போன்ற) அப்படிப்பட்ட கலகத்தினால் குற்றப்பட்டு இருக்கும்போது, அவர்களுக்கு இன்னும் பயங்கரமான விஷயங்களை ரோமாபுரியார் செய்வார்கள். கிறிஸ்துவின் ஒப்பீடானது, பச்சை தாவரங்கள் உயிருடன் உள்ளன ஆனால் காய்ந்த தாவரங்கள் செத்திருக்கின்றன என்ற உண்மையின் அடிப்படையில் அமைந்திருந்தது: அவர் ஆவிக்குரிய வகையில் உயிருடன் இருந்தார், அதே வேளையில் - நடைமுறை நோக்கங்கள் எல்லாவற்றிலும் - எருசலேம் நகரம் மரித்திருந்தது.[31]

**அடைவிடம்**

தெருக்களின் கூட்டத்தினால் ஊர்வலம் நின்றிருந்ததென்றால், அது விரைவில் தன் வழியே செல்லத் தொடங்கிற்று. சிலுவையில் அறையப் படுதலுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு இடமே அதன் அடை விடமாக இருந்தது: "எபிரெயு பாஷையில் கொல்கொதா என்று சொல்லப் படும் கபாலஸ்தலம்[32] என்கிற இடம்" (யோவா. 19:17; மத். 27:33; மாற். 15:22; லூக். 23:33அ-வைக் காணவும்). இந்த இடம், இலத்தீன் மொழியில் "கல்வாரி" என்று அறியப்பட்டிருந்தது (லூக். 23:33அ; KJVயில் காணவும்).[33]

கொல்கொதா என்ற இடம் "நகர வாசலுக்குப் புறம்பே" (எபி. 13:12), "நகரத்திற்குச் சமீபமாயிருந்தது" (யோவா. 19:20), இது மிகவும் பயணம் செய்யப்பட்ட ஒரு சாலையோரத்தில் இருந்தது என்பது தெளிவு (மத். 27:39; மாற். 15:29ஐக் காணவும்). இது நகரத்தின் மதிலுக்கு வடப்புறத்தில் மதிலை ஒட்டி, வடக்கில் இருந்து எருசலேமுக்குள் செல்லும் சாலைகளில் ஒன்றிற்கு மிகவும் நெருக்கமாக இருந்தது என்று பெரும்பாலானவர்கள் நம்புகின்றனர். இது அநேகமாக, எடுப்பான ஒரு இடத்தில், அநேகமாக ஒரு உயர்ந்த மேட்டில் இருந்திருக்கும், ஏனெனில் ரோமர்கள் சிலுவையில் அறையப் படுதல் என்பதைக் கீழ்ப்படியாமையை ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கும் எவருக்கும் ஒரு பொருளறி பாடமாக்குவதை நோக்கங் கொண்டிருந்தனர். அங்கு நேராக நிரந்தரமாய் நிறுத்தப்பட்ட மூன்று மரத்தூண்கள் தங்களிடத் தில் அறையப்படவிருக்கும் அடுத்த குற்றவாளிகளுக்காக ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தன.[34]

ஆண்டுகளினூடே, கொல்கொதா இருந்த இடமாக இரண்டு இடங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. நான்காம் நூற்றாண்டில், "பரிசுத்த கல்லறை யின் தேவாலயம்" என்ற கோவில் கட்டப்பட்ட இடம் பாரம்பரியமாக [கொல்கொதா என்று] குறிப்பிடப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், சார்லஸ் கோர்டன் என்பவர் ஒரு மாற்று இடத்தை முன்மொழிந்தார்,[35] இது "கோர்டனின் கல்வாரி" (அல்லது "பசுமை மலை") என்று அறியப்படுகிறது, இது தமஸ்கு வாயிலுக்கு வடகிழக்கில் கால்மைல் தூரத்தில் உள்ளது.[36] அந்த இடம் எங்கிருந்தாலும், அது ஏன் "கபால ஸ்தலம்" என்று அழைக்கப்பட்டது என்பதற்கான காரணத்தை நாம் நிச்சயமாகக் கூற இயலாது. கோர்டனின் கல்வாரியில் உள்ள ஒரு பாறைவடிவமானது ஒரு மண்டை ஓட்டைப் போன்று இருப்பதாகச் சிலர் நம்புகின்றனர், ஆனால் இந்த இடமானது மரணத்தின் இடமாக இருந்ததால் அந்தப் பயங்கரமான பட்டப்பெயர் கொடுக்கப்பட்டு இருக்கலாம்.

**சிலுவையில் அறைதல்**

*கடைசியில் ஊர்வலமானது தனது அடைவிடம் சென்று சேர்ந்தது. கைதிகளிடமிருந்து உடைகள் உரிந்துகொள்ளப்பட்டன,[37] அவர்களுக்கு கசப்புக்கலந்த காடி என்ற, உணர்வை மரத்துப்போகச் செய்யும் பானம் தரப்பட்டது (மத். 27:34; மாற். 15:23).[38] வேதனையை மறக்கச் செய்யும் அந்தப் பானத்தை இயேசு ருசிபார்த்த பின்பு, அதைக் குடிக்க மனதில்லா திருந்தார் (மத். 27:34). அவர் பாடுகளின் பாத்திரத்திலிருந்து தாம் பானம் பண்ணுகையில் தமது உணர்வுகள் மழுங்கிப்போவதை அனுமதிக்க மறுத்திருந்தார் (யோவா. 18:11ஐக் காணவும்).*

*பின்பு, ‘‘அவர்கள் … அங்கே அவரையும் குற்றவாளிகளையும்’’ சிலுவையில் அறைந்தனர் (லூக். 23:33). சிலுவையில் அறையப்படுதல்களைக் கண்டிருந்த தொடக்க கால வாசகர்கள், அந்த ஒரு சில வார்த்தைகளில் எவ்வளவு அதிகமான விஷயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன என்பதைப் புரிந்துகொண்டிருந்தனர். சிலுவையின் மரச்சட்டங்கள் தரையில் வைக்கப் பட்டன. முரட்டுதனமான கைகள், கைதிகளைத் தரையில் தள்ளி அவர்களின் கைகளைச் சட்டங்கள்மீது இழுத்து வைத்தன. தண்டனையை நிறைவேற்றுபவர்[39] ஒரு கையை இழுத்து, அதைச் சட்டத்துடன் பற்றிக் கொண்டு, அதே வேளையில் அந்தக் கையின் மணிக்கட்டின்மீது[40] ஒரு நீண்ட ஆணியை அடிக்கச் சரியாக வைப்பார். செயல்திறன்மிக்க சில அடிகளில் அவர் அந்த ஆணியை, நடுங்கும் சதைகளினூடே மரத்தின்மீது செலுத்துவார். பின்பு அவர் இன்னொரு கையைப் பற்றிப் பிடித்து மீண்டும் அதே செயலைச் செய்வார். கைதி, இந்த ஆணிகளால் மரத்துடன் பிணைக்கப்பட்ட பின்பு, மரமும் கைதியும் படைவீரர்களால் உயர்த்தப் பட்டு, இந்தக் குறுக்குச் சட்டமானது நேராக நிற்கும் மரத்தூணுடன் பிணைக்கப்படும். குறுக்குச் சட்டம் சரியாக வைக்கப்பட்ட பின்பு, குற்றவாளியின் முழங்கால்கள் வளைக்கப்பட்டு அவரது பாதங்கள் (அல்லது கணுக்கால்கள்) நேராக நிற்கும் மரத்தூணுடன் ஆணிகளால் அடித்து இறுக்கப்படும் (லூக். 24:39, 40ஐக் காணவும்).[41]*

*பல்வேறு வகையான சிலுவைகள் பயன்படுத்தப்பட்டன, இவற்றில்* Tau cross *என்பதும் உள்ளடங்குகிறது, இது ஆங்கில பெரிய எழுத்தான* “T” *யைப் போன்றிருந்தது மற்றும் இலத்தீன் சிலுவையானது இன்னும் நன்கு பழக்கப்பட்ட* t *வடிவத்தில் இருந்தது.[42]* Tau cross*ன் விஷயத்தில், குறுக்குச் சட்டமானது நேராய் நிற்கும் மரத்தூணின் உச்சியில் பிணைக்கப்பட்டது. இலத்தீன் சிலுவையைப் பொறுத்தமட்டில், குறுக்குச் சட்டமானது நேராய் நிற்கும் மரத்தூணின் முன்புறம், அதன் உச்சிக்கு அருகில் பிணைக்கப் பட்டது.* “Tau cross *என்பவை கிறிஸ்துவின் காலத்தில் பலஸ்தீனத்தில் ரோமர்களால் விரும்பித் தேர்ந்துகொள்ளப்பட்டன,” ஆனால் “சிலுவையில் அறையும் செயல்முறைகள் குறிப்பிட்ட புவியியல் பகுதிக்குத் தக்கவாறு அடிக்கடி மாறின.”[43] ஏவுதல் பெற்றிராத தொடக்க காலப் பாரம்பரியத்தின் படி, இயேசு ஒரு இலத்தீன் சிலுவையில் அறையப்பட்டார். பெயர் விலாசம் ஒன்று இயேசுவின் தலைக்குமேல் பொருத்தப்பட்டது என்ற உண்மை யானது (மத். 27:37; லூக். 23:38; யோவா. 19:19ஐக் காணவும்) அந்தப்*

பாரம்பரியக் கூற்றை ஆதரிக்கலாம்.

*“அப்பொழுது, அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு கள்ளர் அவரோட கூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள்” (மத். 27:38; மாற். 15:27ஐக் காணவும்).* இது, மேசியா “அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்[படுவார்]” என்ற *ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது (ஏசா. 53:12; லூக். 23:33; மாற். 15:28ஐக் காணவும்). மத்தேயு 27:38ல் “கள்ளர்” என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது யோவான் 18:40ல் பரபாஸை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையின் பன்மை வடிவ மாக உள்ளது. இந்த வார்த்தையில் வன்முறை உள்ளீடானதாக இருக்கிறது.*[44] இந்த இரு “கள்ளர்களும்” பரபாஸ் ஈடுபட்டிருந்த அதே கலகத்தில் *ஈடுபட்டிருந்திருக்கலாம். மையத்தில் இருந்த அந்த சிலுவையானது, மக்கள் கும்பல் “இவனை [இயேசுவை] அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும்!” (லூக். 23:18) என்று கூக்குரலிடுவதற்கு முன்பு வரையிலும் அந்தக் கெடுமதிவாய்ந்த குற்றவாளிக்கு [பரபாசுக்கு] ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கவும் சாத்தியக்கூறுள்ளது.*

*மூன்று கைதிகளும் அவர்களின் சிலுவைகளில் பொருத்தி வைக்கப் பட்ட பின்பு, தண்டனை நிறைவேற்றுபவர் நிகழ்த்த வேண்டிய கடைசிப் பணி ஒன்றிருந்தது: அவர்களின் தலைகளுக்கு மேலாகப் பெயர்விலாசங் களை ஆணியில் அடித்துப் பொருத்துதல். பெயர்விலாசங்கள் என்பவை அந்த மனிதர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அறிவித்தல் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன (மத். 27:37; மாற். 15:26ஐக் காணவும்). இயேசுவுக்கு மேல் வைக்கப்பட வேண்டிய பெயர்க்குறிப்பை பிலாத்து தானே கூறியிருந்தார்: “இவன் இயேசு நசரேயன், யூதருடைய ராஜா”*[45] இந்த வார்த்தைகள் “எபிரெயு, கிரேக்கு, லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது” *(யோவா. 19:20).*

Myrwhyh Klm yrxnh xwCy

Iesus Nazarenus Rex Iudæorum

'Ihsouvß ὁ Nazwraivoß
ὁ Basileu«ß twvn 'Ioudai/wn

*எபிரெயு மொழி யூதத்துவ விசுவாசத்தின் மொழியாக இருந்தது, லத்தீன் மொழி ரோமருடைய சட்டத்தின் மொழியாக இருந்தது, மற்றும் கிரேக்க மொழி எல்லாராலும் பேசப்பட்ட பொதுவான மொழியாக இருந்தது. அவ்வழியே கடந்து சென்றவர்களில் பெரும்பாலானவர்கள், இம்மூன்றையும் இல்லாவிடினும், இவற்றில் ஏதாவது ஒரு மொழியை யாவது வாசிக்க முடிந்தது.*

பிரதான ஆசாரியர்கள் மறுப்புரைத்தனர்.[46] அவர்கள் பிலாத்துவிடம், " 'யூதருடைய ராஜா' என்று நீர் எழுதாமல், 'நான் யூதருடைய ராஜா' என்று அவன் சொன்னதாக எழுதும்" என்றார்கள் (யோவா. 19:21). இருப்பினும் ஆளுநர், வார்த்தையமைப்பை மாற்ற மறுத்துவிட்டார். அவர், "நான் எழுதினது எழுதினதே" என்று பதில் அளித்தார் (யோவா. 19:22). இது ஒரு சிறிய வெற்றியாக இருந்தபோதிலும், பிலாத்து அநேகமாக இதைத் துய்த்து அனுபவித்திருப்பார்.

அது உதயத்திற்கும் நண்பகலுக்கும் இடைப்பட்ட நேரமாக இருந்தது (மாற். 15:25). மூன்று மனிதர்கள் ரோமர்களின் சிலுவையில் ஆணியடிக்கப் பட்டிருந்தனர். கொல்கொதாவில் இங்கும் அங்குமாக, ரோமப்படை வீரர்களும், யூதத்துவ உயர் அதிகாரிகளும், தெய்வபக்தியற்ற கூட்டமும், கிறிஸ்துவின் பின்பற்றாளர்களில் ஒரு சிலரும் சிதறியிருந்தனர் (யோவா. 19:25). இயேசுவின் துன்பம் மற்றும் அவரது மரணம் ஆகியவற்றிற்கான காட்சியானது ஆறுமணி நேரங்களுக்கு அமைக்கப்பட்டிருந்தது.

நாம் இந்த வரலாற்றை இப்பாடத்தின் இரண்டாவது பகுதியில் தொடருவோம். இப்போது நாம் முடிப்பதற்கு முன்பு, இயேசுவின் மரணமானது - யூதாஸின் மரணத்தைப் போலின்றி - வெற்றியாக இருந்தது. இது அந்த வேளையில் வெற்றியைப்போல் *காணப்படவில்லை*, ஆனால் இது பின்வரும் காரணங்களினால் வெற்றியாக *இருந்தது* ...

- இயேசு, தேவனுடைய சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணிப்பில் மரித்தார் (லூக். 22:42). தேவனுடைய சித்தத்தைச் செய்கின்ற எவரும் வெற்றியாளராகவே இருக்கின்றார் (வெளி. 2:7ஐக் காணவும்[47]).
- இயேசு, விசுவாசத்தில் மரித்தார், தம்மை உயிர்த்தெழச் செய்வதாகத் தேவன் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை அவர் காத்துக்கொள்வார் என்று நம்பி மரித்தார். அப்பொழுதும் இப்பொழுதும் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக உள்ளது (1 யோவா. 5:4).
- இயேசு, தமது கீழ்ப்படிதலுள்ள மரணத்தில், பொல்லாங்கின் சக்திகளைத் தோல்வி அடையச் செய்தார் (எபி. 2:14).
- இயேசு, தமது தியாகம் நிறைந்த மரணத்தில், நமது பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டார் - மற்றும் நமக்கு இரட்சிப்பைச் சாத்தியமாக்கினார் (ஏசா. 53:4-6; 1 கொரி. 15:3; 2 கொரி. 5:21)!
- இயேசு, தாம் செய்ய வந்த ஊழியத்தை சிலுவையில் முடித்து வைத்தார் (யோவா. 19:30).

## முடிவுரை

நான் பல சவ அடக்கங்களில் பிரசங்கித்துள்ளேன், மற்றும் இன்னும் பலவற்றில் கலந்து கொண்டுள்ளேன். அவற்றில் சில வெற்றிகளாக இருந்தன; கவலைக்குரிய வகையில் சில துன்பங்களாக இருந்தன. உங்களுடையது எவ்வாறு இருக்கும்? உங்களுடைய மரணம் யூதாஸினுடையது போல் துன்பமாக இல்லாதிருக்கலாம், மற்றும் அது நிச்சயமாக இயேசுவினுடையது போல் வெற்றியாக இராது. இருந்தபோதிலும், நீங்கள் "நீதிமான் மரிப்பது போல" (எண். 23:10) என்பதற்கும் "துன்மார்க்கனுடைய

மரணத்திற்கும்" (எசே. 33:11) இடையில் தேர்ந்துகொள்வீர்கள். நீங்கள் இப்போது வாழும் வாழ்வின் வகையானது நீங்கள் பிற்பாடு மரிக்கும் மரணத்தின் வகையைத் தீர்மானிக்கும். உங்கள் மரணம் வெற்றியாக இருக்குமா அல்லது துன்பமாக இருக்குமா?

## குறிப்புகள்

இந்த இரண்டு பாகப் பாடத்தின் பகுதிகளைத் தனித்தனியே நீங்கள் பயன்படுத்தினால், இந்த எடுத்துரைப்பிற்குப் பின்பு பிரசங்கிப்பதற்கு உங்களுக்கு ஒரு பிரசங்கம் தேவைப்படும்.

**யூதாஸைப் பற்றிப் பிரசங்கித்தல்**

யூதாஸின் குணத்தைப் பற்றிய படிப்பு ஒரு சாத்தியக்கூறாக உள்ளது. நமது பாடங்களில் யூதாஸைப் பற்றிக் கூறப்பட்டுள்ள யாவற்றையும் நீங்கள் சேகரித்துக் கொண்டால், நீங்கள் ஒரு பிரசங்கத்திற்கும் அதிகமான கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டும். யூதாஸின் காட்டிக் கொடுத்தலையும் பேதுருவின் மறுதலித்தலையும் நேரெதிராக ஒப்பிடுதல் என்பது இன்னொரு விருப்பத் தேர்வாக உள்ளது, இதில் மனந்திரும்புதல் மற்றும் மனம்வருந்துதல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டை வலியுறுத்தலாம்.

யூதாஸினால் பேசப்பட்ட, "நான் பாவம் செய்தேன்" என்ற மூன்று வார்த்தைகள் (மத். 27:4ஐக் காணவும்), மனந்திரும்புதலுக்கான ஒரு பிரசங்கத்திற்குத் தொடக்க இடமாகப் பயன்படுத்தப்படுதல் என்ற இன்னொரு அணுகுமுறையாயும் உள்ளது. வேதாகமத்தில் ஒரு சில மக்களே "நான் பாவம் செய்தேன்" என்று அறிக்கையிட்டனர். அவர்களில், பார்வோன் (யாத். 9:27; 10:16), பாலாம் (எண். 22:34), ஆகான் (யோசு. 7:20), சவுல் அரசர் (1 சாமு. 15:24, 30; 26:21) மற்றும் யூதாஸ் (மத். 27:4) ஆகியோர் உள்ளனர். கேள்வியெழுப்பப்படக்கூடிய இந்தப் பாத்திரங் களுக்கு நேரெதிரான வகையில், இவ்வார்த்தைகள் தாவீதினாலும் (2 சாமு. 12:13; 24:10), ஊதாரி மகனாலும் (லூக். 15:21) பேசப்பட்டும் உள்ளன. இந்தப் பிந்திய அறிக்கைகள், அவ்வறிக்கை செய்தவர்களைத் தேவனிடத்தில் நெருக்கமாகக் கொண்டுவந்து சேர்த்திருக்கையில், முந்தியவைகள் அவ்வாறு செய்யாதது ஏன் என்பதற்கு வலியுறுத்தம் கொடுங்கள்.

**சிலுவையைப் பற்றிப் பிரசங்கித்தல்**

சிலுவையில் அறையப்படுதல் பற்றிய நமது படிப்பை நாம் இன்னும் முடித்திராது இருந்தாலும், இயேசுவின் மரணம் என்பதன்மீதான ஒரு பொதுவான பிரசங்கத்தைப் பிரசங்கித்தலானது ஒரு கூடுதலான பிரசங்கத் திற்கான மாறுபட்ட அணுகுமுறையாக உள்ளது. இந்த எடுத்துரைப்பின் அறிமுகப் பகுதியில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதுபோல், சிலுவையின் மீதான பிரசங்கக் கருத்துக்களுக்குப் பஞ்சம் எதுவும் இருப்பதில்லை. நான் ஒரு இளம் பிரசங்கியாராக இருந்தபோது, "அங்கே அவர்கள் அவரை

*சிலுவையில் அறைந்தார்கள்”*[48] என்பது எனக்கு மிகவும் பிரியமான பிரசங்க மாக இருந்தது. ஆண்டுகளினூடே நான் வேறு எந்தத் தலைப்பையும் விட அதிகமாக, இயேசுவின் மரணம் என்ற தலைப்பின்மீது போதித்து, பிரசங்கித்து எழுதியுள்ளேன். எனது முதல் புத்தகங்களில் ஒன்றுக்கு *“இயேசு கிறிஸ்து, சிலுவையில் அறையப்பட்ட அவர்”*[49] என்று தலைப்பிடப்பட்டது. இந்தத் தலைப்பு, 1 கொரிந்தியர் 2:2ல் பவுலின் வார்த்தைகளிலிருந்து வந்தது: “இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.” சிலுவையின்மீதான பிரசங்கித்தலுக்கு மற்ற கருத்துக்கள் இந்த இரு பகுதி பாடத்தின் இரண்டாம் பகுதியின் முடிவில் குறிப்புகள் என்ற உட்தலைப்பின் கீழ் தரப்படும்.

சிலுவையைச் சித்தரிக்கும் பாடங்களுக்குத் தயார் செய்வதற்கு, இந்த வாரங்களின்போது, இந்த எடுத்துரைப்புக்களுக்கு முன்பு லூக்கா 23:26-56ஐ ஒரு நாளைக்கு இருமுறை வாசித்தல் என்பது மிகச் சிறந்த வழிமுறைகளில் ஒன்றாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]இயேசு இரட்சகராக இருப்பார் என்பதைக் குறிப்பிடுவதற்கு மாத்திரமே பல குறிப்புகள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, “இயேசு” என்றால் “யேகோவா இரட்சிக்கிறார்” என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இயேசு இரட்சிக்கும் *வழி* என்பது அவரது மரணத்தின் மூலம் என்பதாகவே உள்ளது (ரோமர் 5:10). [2]பல ஆண்டுகளின் முயற்சிகள் எவ்வாறு ஒரு சில மணிகள், நிமிடங்கள் அல்லது நொடிகளில்கூட உச்சகட்டத்தை அடைய முடியும் என்று நீங்கள் விவரிக்க விரும்பினால், ஒலிம்பிக் விளையாட்டுகளுக்காகப் பயிற்சி மேற்கொள்பவர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் பல ஆண்டுகளாகப் பயிற்சி செய்கின்றனர், ஆனால் விளையாட்டுக்களில் அவர்களின் நிகழ்ச்சிகள் வழக்கமாக ஒரு சில நிமிடங்களில் அல்லது ஒரு சில நொடிகளில்கூட முடிந்து விடுகிறது. [3]முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, இந்தத் தயாரிப்புகளுக்குப் பல மணிநேரமாயிற்று என்பது உறுதி. [4]பிற்பாடு, பிரதான ஆசாரியர்கள் கொல்கொதாவில் இருந்தனர் (மத். 27:41). அவர்கள் ஓரிரு மணி நேரத்திற்குத் தேவாலயத்திற்குத் திரும்பியிருந்தார்களென்றால், அதற்குப் பின்பு அவர்கள் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட இடத்திற்குச் சென்றனர். [5]யூதாஸ் என்ன நினைத்தான் என்று நாம் உறுதியாய் அறிய இயலாது. மற்ற சாத்தியக்கூறுகளும் கருத்தாய்த் தெரிவிக்கப்பட்டுள்ளன. [6]வசனம் 4 மற்றும் 5ல், அவர்களின் மறுப்பு மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. [7]பிற்பாடு பிரதான ஆசாரியர்களால் வாங்கப்பட்ட குயவனின் நிலத்தில் யூதாஸ் நான்றுகொண்டான் என்பது தெளிவு (இது இப்பாடத்தின் பிற்பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ளது). இந்த நிலம் இருந்ததாக, நான்காம் நூற்றாண்டில் இருந்து பாரம்பரியமாய்க் கூறப்பட்டு வருகிற இடமானது, எருசலேமுக்குத் தெற்கில் உள்ள ஹின்னோம் பள்ளத்தாக்கின் கிழக்கு முனையாக இருந்துள்ளது. (இயேசுவின் கடைசிமணி வேளைகளின் பாதைகளாகக் கருத்துத் தெரிவிக்கப்படுபவை அடங்கிய எருசலேம் நகரின் வரைபடத்தில் காணவும்.) [8]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914),

721. [9]சிலர், இது ஒரு குயவரிடமிருந்து வாங்கப்பட்ட நிலமாக மாத்திரம் இருந்தது என்று நினைக்கின்றனர், இது அவருக்குக் களிமண்ணைக் கொடுத்திருக்கலாம் அல்லது கொடுத்திராதிருக்கலாம். மற்றவர்கள், "குயவனின் நிலம்" என்பது அந்த நிலத்தின் பெயராக மாத்திரம் இருந்தது, அது உண்மையில் ஒரு குயவருடன் எவ்வாறேனும் சம்பந்தப்பட்டிருக்கலாம் அல்லது இல்லாது இருக்கலாம் என்று நினைக்கின்றனர். [10]அமெரிக்காவில், புதைப்பதற்கு ஒருவருமின்றி, அரசாங்கத்தினால் சடங்கெதுவும் இல்லாது புதைக்கப்படுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள கல்லறைகளைக் குறிப்பிட ''குயவனின் நிலம்'' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்துதல் என்பது பொதுவான வழக்கமாக உள்ளது.

[11]எரேமியாவின் வார்த்தைகள் பாபிலோனிய அடிமைத்தனத்திற்கு முன்பு கூறப்பட்டிருந்தன, சகரியாவின் வார்த்தைகள் பாபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பின்பு கூறப்பட்டிருந்தன. இருப்பினும், எரேமியாவினால் பேசப்பட்டு ஆனால் எழுதப்படாதிருந்த சில வார்த்தைகள் அடுத்த தலைமுறைக்குக் கூறப்பட்டிருக்கலாம் - அல்லது ஒருவேளை, அவற்றைப் பரிசுத்த ஆவியானவர் சகரியாவுக்குத் தெரிவித்திருக்கலாம். [12]மற்ற சாத்தியக்கூறுகளையும் குறிப்பிட முடியும். தொடக்க காலப் பிரதியாளர் ஒருவர், தாம் அறியாத வகையில் "சகரியா" என்பதை "எரேமியா" என்று மாற்றியிருக்கக் கூடும் என்று மெக்கார்வீ அவர்கள் நினைத்தார். எபிரெய மொழியில், இதற்கு இரண்டே இரண்டு எழுத்துக்களை மாத்திரம் மாற்றுதல் தேவைப்பட்டது (McGarvey and Pendleton, 721-22). [13]இது அந்த உடைமையின் மதிப்பை இன்னும் குறைவாக்கி, இது ஏன் முப்பது வெள்ளிக்காசுகளுக்கு மாத்திரம் வாங்கப்பட முடிந்தது என்று விளக்க உதவுகிறது. [14]யூதாஸ் தனது காட்டிக்கொடுக்கும் திறனுக்காக அல்ல ஆனால் சீஷனாயிருக்கக்கூடிய சாத்தியக் கூறினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டான். [15]இயேசு யூதாஸின்மீது ஒரு "ஐயோவை" உச்சரித்திருந்தாரே என்று எவரேனும் மறுப்புத் தெரிவித்தால், அவருக்கு நான், நியாயத்தீர்ப்பு பற்றிய தேவனுடைய உச்சரிப்புகள், உண்மையான மனந்திரும்புதலின்பேரில் திருப்பிக் கொள்ளப்படக் கூடியவையாய் இருந்தன என்பதை நினைவூட்டுகின்றேன். நினிவே நகரம் அழிக்கப்படும் என்ற யோனாவின் தீர்க்கதரிசனம் இதற்கு ஒரு உதாரணமாக உள்ளது (யோனா 3:4): மக்கள் மனந்திரும்பியபோது, தேவன் அந்த நகரத்தை அழிக்காமல் விட்டுவிட்டார் (யோனா 3:5-10). [16]''மனந்திரும்புதல்'' (*metanoeo*) என்பது ''பின்பு'' (*meta*) என்பதற்கான வார்த்தையை "சிந்தனை" (*noema*)என்ற வார்த்தையுடன் இணைத்துப் பெற்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது "பிந்திய சிந்தனை'' என்று நேரடியான அர்த்தம் கொண்டுள்ளது மற்றும் இது ஒருவருடைய சிந்தித்தலில் ஏற்படும் மாறுதலைக் குறிக்கிறது. மனந்திரும்புதல் என்பது வாழ்வில் மாற்றத்தை விளைவிக்கிறதான (அப். 26:20), "மனதில் ஏற்படும் மாற்றம்" என்பதாக உள்ளது (மத். 21:29; எபி. 12:17ஐக் காணவும்). மனந்திரும்புதல் என்பது பொதுவாக, "*பாவத்தைப் பற்றி* மனதில் ஏற்படும் மாற்றம்" - அதாவது பொதுவாகப் பாவம் செய்வதை நிறுத்துவதற்கான ஒரு முடிவு மற்றும்/அல்லது குறிப்பிட்ட பாவத்தைச் செய்வதை நிறுத்த உறுதிப்பாடு கொள்ளுதல் - என்பதைக் குறிக்கிறது. மனந்திரும்புதல் என்பது தேவனுக்கேற்ற துக்கத்தின் விளைவாக உள்ளது. (2 கொரி. 7:10க் கவனிக்கவும்: "தேவனுக்கேற்ற துக்கம்" என்பது ஒருவரின் பாவத்தின் விளைவுகளினால் ஏற்பட்ட "லௌகிக துக்கத்துடன்'' நேரெதிராக ஒப்பிடப் படுகிறது.) [17]இந்தக் கிரேக்கச் சொற்றொடரானது, "கவலை கொள்ளுதல்" என்பதற்கான வார்த்தையுடன் ''பின்பு'' என்று அர்த்தப்படும் முன்னிடைச் சொல்லை இணைத்துப் பெற்ற கூட்டுச்சொல்லாக உள்ளது. இது ஒரு நிகழ்ச்சி நடந்த ''பின்பு'' அதைக் குறித்து ''கவலைப்படுதல்'' அல்லது அக்கறை கொள்ளுதல்

*என்பதைக் குறிக்கிறது.* [18]*2 கொரிந்தியர் 7:10ன் இரண்டு "துக்கங்களையும்" ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [19]Hugo McCord, *McCord's New Testament Translation of the Everlasting Gospel* (Henderson, Tenn.: Freed-Hardeman University, 1988), 40. [20]The *Amplified Bible என்ற வேதாகமத்தில் metamellomai என்ற வார்த்தையின் பெருக்கமானது கிரேக்க வார்த்தைகளின் படிப்பு பற்றிய பல புத்தகங்களில் இருந்து வந்துள்ளன, அவற்றில்* Marvin R. Vincent and Richard C. Trench *ஆகியோரால் எழுதப்பட்ட புத்தகமும் உள்ளடங்குகிறது.*

[21]*தற்கொலை பற்றி [ஆராய்ச்சிப்] படிப்புகளை நடத்தியுள்ளவர்கள், தற்கொலைக்கு ஆளாகின்றவர்கள் சுயதுன்புறுத்தலான மரணத்தை தங்களுடைய ஒரே தேர்வாயிருப்பதாகக் காண்கின்றனர் என்று கூறுகின்றார்கள். இரக்கம் நிறைந்த தேவன்மீது விசுவாசம் கொண்டவர்கள், தங்களுக்கு இன்னொரு விருப்பத் தேர்வு இருப்பதை அறிகின்றனர்: தங்களின் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்புக்காகத் தேவனிடத்தில் கெஞ்சிக் கேட்டு, புதிதாய் மீண்டும் தொடங்குதல்.* [22]*ரோமாபுரியின் அதிகாரிகளால் நடத்தப்பட்ட விசாரணைகள் பற்றி எழுதப்பட்ட அறிக்கைகள் ரோமாபுரிக்கு அனுப்பப்பட வேண்டியதாக இருந்தன.* [23]*தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய இடத்தைச் சென்று சேர்வதற்கு நேரம் ஆகியிருக்கும், இயேசு காலை சுமார் 9:00 மணிக்குச் சிலுவையில் அறையப்பட்டார் (மாற். 15:25).* [24]*கொல்கொதா என்ற இடம் நகரத்தின் வடதிசையில் இருந்தது பற்றிய தோராயமான குறிப்பை, இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் உள்ள கலந்துரை யாடலில் காணவும்.* [25]William D. Edwards, Wesley J. Gabel, and Floyd E. Hosmer, "On the Physical Death of Jesus Christ," *Journal of the American Medical Association* (21 March 1986): 1459. [26]*அவர் - பலஸ்தீனம் முழுவதும் நடந்திருந்ததின் உறுதித் தன்மையால் தெளிவாக்கப்பட்ட வகையில் - உறுதி வாய்ந்த உடலைப் பெற்றிருந்தார், ஆனால் நம்மைப் போலவே அவரும் பசி, தாகம் முதலிய மாம்சத்தின் பலவீனங்களுக்கு உட்பட்டவராயிருந்தார் (யோவா. 1:14அ; எபி. 4:15ஐக் காணவும்).* [27]*ரோமாபுரியின் சட்டத்தின்படி, படைவீரர்கள் தங்களுக்கு உதவி செய்யும்படி குடிமக்களை வற்புறுத்தும் உரிமை கொண்டிருந்தனர் (மத். 5:41).* [28]*சிலுவைக்கு இயேசு நடந்து சென்றதாகப் பாரம்பரியமாகக் கூறப்படும் வழியொன்று* (Via Dolorosa) *உள்ளது. ஆனால் மிகச் சரியான வழி எதுவென்று நாம் அறிவதில்லை. ரோமாபுரியை எதிர்ப்பதன் விளைவுகளைக் குறித்து ஒரு காட்சி உதவியாயிருக்கும்படிக்கு, மரணதண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்குச் சுற்றுவழியாகக் கொண்டு செல்லுதல் என்பது ரோமப்படை வீரர்கள் அடிக்கடி கடைப்பிடிக்கும் வழக்கமாக இருந்தது.* [29]*இவர்கள் கலிலேயாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றியிருந்த பெண்கள் அல்ல (மத். 27:55), ஆனால் எருசலேமின் குடிகளாய் இருந்தனர். இந்தப் பெண்கள் இயேசுவின் சீஷிகளாய் இருந்தார்களா அல்லது குற்றமற்றவர் என்று பலரும் அறிந்த ஒருவரின் மரணம் குறித்துக் கலக்கம் கொண்டவர்களாக மட்டும் இருந்தார்களா என்று நாம் அறிவதில்லை.* [30]*பிள்ளைகள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்பது விதியாக உள்ளது (சங். 127:3), ஆனால் இயேசு ஒரு விதிவிலக்கைப் பற்றிப் பேசினார்.*

[31]*நீங்கள் விரும்பினால், இந்த விவரிப்பை விரிவாக்க முடியும்: ஒரு நெருப்பானது, ஒரு பசுமையான மரக்கிளையை எரிப்பதற்குப் போதுமான அளவு பெரிதாகவும் வெப்பமானதாகவும் இருக்குமென்றால், அது ஒரு காய்ந்த மற்றும் செத்துப்போன மரக்கிளைக்கு என்ன செய்யும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.* [32]*Cranion என்பது, "கபாலம்" என்பதற்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது. கபாலத்தைக் குறிப்பதற்கு மருத்துவர்கள்,* "cranium" *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர்.* [33]*"கல்வாரி"* ("Calvary") *என்ற (இலத்தீன் வல்கேட்டில்*

இருந்து வந்த) வார்த்தையானது KJVயில் ஒரே ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் இது நவீன மொழிபெயர்ப்புக்கள் பலவற்றில் காணப்படுவதில்லை. இருந்தபோதிலும் இது இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பலரால் "விரும்பித் தேர்ந்து கொள்ளப்படுகிற குறிப்புப் பெயராக'' உள்ளது. [34]உலக வரலாற்றின்படி, நேராய் நிற்கும் மரச்சட்டத்தை (the *stipes)* நிரந்தரமாகத் தரையில் ஊன்றி வைத்திருப்பதும், குறுக்குச் சட்டத்தை (the *patibulum)* கைதி சுமந்து கொண்டு, சிலுவையில் அறையும் இடத்திற்கு வருவதும் வழக்கமாக நடைமுறையில் இருந்தது (Edwards, Gabel, and Hosmer, 1458-59). [35]கோர்டனின் நாட்களில் பாரம்பரியமாய் கல்வாரி என்று கூறப்பட்ட இடமானது நகரத்தின் மதில்களுக்கு *உட்புறம்* இருந்தது என்பது அவர் அதைப் புறக்கணித்தமைக்கான ஒரு காரணமாக இருந்தது. அதே பகுதியானது கிறிஸ்துவின் நாட்களில் நகரத்திற்குப் *புறம்பே* இருந்தது என்பதை அவர் உணர்ந்தறியவில்லை. இவ்விரு இடங்கள் பற்றிய புதைபொருள் ஆராய்ச்சியின் ஆதாரங்கள் குறித்த ஒரு கலந்துரையாடல் பின்வரும் புத்தகத்தில் தரப்பட்டுள்ளது: John McRay, *Archaeology and the New Testament* (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 206-17. [36]கொல்கொதா என்ற இடம் ஒரு மலையின்மீது இருந்ததாக வேதாகமம் கூறவில்லையென்றாலும், ''கல்வாரி மலை'' என்பது அடிக்கடி பயன்படுத்தப்படக் கூடிய சொற்றொடராக உள்ளது. இயேசு கோர்டனின் கல்வாரியில் மரித்தார் என்று பொதுவாகப் பற்றிக் கொள்ளப்பட்டுள்ள கண்ணோட்டத்தின் விளைவாக இந்தச் சொல்லாக்கம் ஏற்பட்டிருக்கலாம். [37]படைவீரர்கள் தங்களுக்குள் இயேசுவின் உடைகளைப் பங்கிட்டுக் கொண்டனர் (மத். 27:35). இந்த நடைமுறையை உலக வரலாறு உறுதி செய்கிறது, மற்றும் சங்கீதம் 22:18ன் கடைசி வரிகள் அநேகமாக இந்தச் செயல்முறையையே குறிக்கிறது. [38]இந்த பானமானது, அக்கறையுள்ள யூதப் பெண்களால் தயாரிக்கப்பட்டு, யூதர்களுக்கு ஒரு சலுகை என்ற வகையில் ரோமர்களால் அனுமதிக்கப்பட்டிருந்தது என்று சிலர் நினைக்கின்றனர். காடியில் கசப்புக் கலக்கப்பட்டது என்று மத்தேயு கூறினார், அதே வேளையில் திராட்ச ரசத்தில் வெள்ளைப்போளம் கலக்கப்பட்டது என்று மாற்கு கூறினார். கசப்பான இவ்விரு பொருட்களுமே அந்தக் கலவையில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். வெள்ளைப்போளம் என்பது இதற்கு முன் நமது பாடத்தில் - ஞானிகளின் பரிசுப் பொருட்கள் தொடர்பாக (மத். 2:11) மற்றும் இயேசுவின் உடலை அடக்கம் செய்ய ஆயத்தம் செய்வது தொடர்பாக (யோவா. 19:39) - குறிப்பிடப்பட்டது. மற்ற பயன்பாடுகளுடன் வெள்ளைப்போளமானது குறிப்பிட்ட மருந்துகளிலும் பயன்படுத்தப்பட்டது. [39]தண்டனை நிறைவேற்றுபவர் என்று ஒருவர் வேத வசனத்தில் திட்டவட்ட மாகக் குறிப்பிடப்படவில்லை, ஆனால் குற்றவாளிகளை சிலுவையுடன் சேர்த்து ஆணியடித்தலுக்குக் குறிப்பிட்ட நிபுணத்துவம் அவசியமாயிருந்தது: அந்த வேலை சரியாகச் செய்யப்படவில்லையென்றால், உடலின் பாரமானது கைகளின்மீது சுமத்தப்படுகையில், ஆணியின் தலைப் பகுதிகள் சதையைக் கிழித்துக்கொண்டு புறப்பட்டுவிடும். தண்டனை நிறைவேற்றுபவர் என்பவர், நான்கு படைவீரர்களில் அந்த வேலையை செய்யும்படி குறிக்கப்பட்ட ஒருவராயிருந்திருக்கலாம் (யோவா. 19:23ஐக் காணவும்). [40]''ஆணிகள் பொதுவாக உள்ளங்கைகளுக்கு மாறாக மணிக்கட்டுக்களிலேயே செலுத்தப்பட்டன" என்பதை, கிடைக்கும் புதைபொருள் ஆராய்ச்சிச் சான்றுகள் சுட்டிக்காண்பிக்கின்றன (Edwards, Gabel, and Hosmer, 1459). புதிய ஏற்பாடு, இயேசுவின் "கைகளில்" ஆணியால் ஊடுருவப்பட்ட சுவடுகள் இருந்தன என்று குறிப்பிடுகிறது (யோவா. 20:25, 27; லூக். 24:39, 40ஐக் காணவும்), ஆனால் ''மணிக்கட்டு" என்பது கையின் ஒரு பாகம் என்று பழங்காலத்தவர்

*வழக்கமாய்க் கருதினார்கள்* (Edwards, Gabel, and Hosmer, 1462).

[41]*முழங்கால்களின் நிலைப்பாடு பற்றி மாறுபாடுகள் இருந்தன, - நேராய் நிற்கும் மரச்சட்டத்தில் சிறிய மரத்தாங்கிகள் ஆணியடித்துப் பொறுத்தப்பட்டிருத்தல் அல்லது இல்லாதிருத்தல், மற்றும் கயிறு முதலிய தாங்கும் பொருட்கள் போன்றவை - ஆனால் இந்த மாறுபாடுகள் பற்றிய எந்தக் குறிப்புகளும் வேதாகமத்தில் தரப்படுவதில்லை.* [42]X*- வடிவச் சிலுவை என்பது இன்னொரு மாறுபட்ட வகையாக இருந்தது.* X*-வடிவச் சிலுவையில், குற்றவாளியின் தலைக்குமேல் விலாசப்பலகையை வைக்க முடியாது என்பதால், இயேசுவின் மரணதண்டனையில் இவ்வகையான சிலுவை பயன்படுத்தப்படவில்லை என்று நாம் அறிகின்றோம்.* [43]Edwards, Gabel and Hosmer, 1458. [44]*இவ்வார்த்தையானது பலவந்தமாய்க் களவு செய்தல் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது, இது ''திருடன்'' என்பதற்கான கிரேக்க வார்த்தையான kleptes என்பதற்கு எதிரானதாக உள்ளது, இதிலிருந்தே நாம்* "klep-tomaniac" *என்ற வார்த்தையைப் பெறுகின்றோம்* (W. E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words*, ed. John R. Kohlenberger III with James A. Swanson [Minneapolis: Bethany House Publishers, 1984], 973). [45]*முழு எழுத்துப் பதிவுறுவும் நான்கு சுவிசேஷ விவரங்களை இணைவித்து மறுகட்டுமானம் செய்விக்கப்பட்டதாக உள்ளது (மத். 27:37; மாற். 15:26; லூக். 23:38; யோவா. 19:19).* [46]*அவர்கள் சிலுவையின் அருகில் இருந்தபடியினாலும், பிலாத்து அங்கு இராத படியினாலும், ஒருவேளை அவர்கள் பிலாத்துவுக்குச் செய்தி அனுப்பியிருக்கலாம் மற்றும் அவர் அதற்குப் பதில் அனுப்பி இருக்கலாம். இந்த நிகழ்ச்சியானது சிலுவை யில் அறையப்படுதல் வரை குறிப்பிடப்படாதிருப்பினும், அவர்கள் இந்த மேல் விலாசத்தை பிலாத்துவின் அரண்மனையில் முதன்முதலில் பார்த்தபோதே மறுப்புத் தெரிவித்திருக்கலாம்.* [47]*வெளி. 2:7ல் உள்ள "ஜெயங்கொள்ளுதல்" என்ற வார்த்தை "வெற்றி" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினை வடிவமாக உள்ளது.* [48]David Roper, *"The Day Christ Came (Again)" and Other Sermons* (Dallas: Christian Publishing Co., n.d.), 15-28. *இந்தப் பிரசங்கம் பற்றிய சுருக்கமான குறிப்புகள் இந்தப் பாடத்தைத் தொடர்ந்து தரப்பட்டுள்ளன.* [49]David Roper, *Jesus Christ and Him Crucified* (Arvada, Colo.: Christian Communications), 1976.

*90*

# சிலுவையில் தொங்கிய கள்ளன் பற்றிய விஷயம் என்ன?

## மத். 27:38-44; லூக். 23:39-43, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கையில், தமக்கு அடுத்துத் தொங்கிக்கொண்டிருந்த இரு கள்வர்களில் ஒருவனுக்கு, அந்த நாளில்தானே தம்மோடே அவன் பரதீசில் இருப்பான் என்று வாக்குத்தத்தம் செய்தார். இயேசு தமது வாக்குத்தத்தத்தைக் காப்பாற்றினார் என்று-அதாவது, அவன் [கள்ளன்] மரித்தபோது, லாசருவைப் போன்றே, ஆபிரகாமின் மடிக்கு எடுத்துச் செல்லப்பட்டான் என்று-நாம் நம்புகின்றோம் (லூக். 16:22). இந்த உண்மையானது, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு இரட்சிப்பின் வழியைப் போதிப்பதற்காக இவ்விபரம் தரப்பட்டுள்ளது என்று நிரூபிப்பது இல்லை.*

*இந்தக் கள்ளனைப் பற்றி மிக ஏராளமான விஷயங்கள் யூகிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, இவன் "அந்நியனாயிருந்த பாவி" என்று மக்களில் பலர் யூகிக்கின்றனர். ''அந்நியனாயிருந்த'' என்ற சொற்றொடரானது, குடிமகனாயிராத ஒருவர் என்று அடிப்படையில் அர்த்தப்படுகிறது; இது தேவனுடைய இராஜ்யத்தில் குடிமகனாயிராத சிலரைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு வேதவசனங்களில் சில வேளைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளது (எபே. 2:19ஐக் காணவும்). இந்த நிலைப்பாட்டைப் பற்றிக்கொண்டுள்ளவர்கள், கள்ளனுக்கு அருளப்பட்ட இரட்சிப்பு, ''அந்நியராயிருக்கும் பாவிகளுக்கு'' - அதாவது, கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு - ஒரு முன்னுதாரணத்தை அமைக்கிறது என்று நம்புகின்றனர். இருப்பினும், இந்தக் கள்ளன், "அந்நியனாயிருந்த பாவி" என்ற வகைப்பாட்டில் இருக்கவில்லை, ஆனுல் ''தேவனுடைய பிள்ளையாய் இருந்து தவறு செய்கின்றவர்'' என்ற வகைப்பாட்டில் இருந்தார். பின்வருவதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்: இவனைச் சிலுவையில் அறைந்தது யார்? ரோமர்கள். ரோமர்கள் ரோமக்குடிமகன்களைச் சிலுவையில் அறைந்தனரா? இல்லை.[1] அவர்கள்*

யாரைச் சிலுவையில் அறைந்தனர்? தரப்பட்ட ஒரு சுற்றுவட்டாரத்தில் இருந்த கீழ்ப்படியாமையுள்ள குடிகளைச் சிலுவையில் அறைந்தனர். அந்தக் குறிப்பிட்ட பகுதியில் இருந்த குடிகள் யூதர்களாக இருந்தனர். இந்தக் கள்ளன் ஒரு யூதன் என்று நாம் பாதுகாப்புடன் யூகிக்க இயலும். இன்னொரு கள்ளனுக்கு இவன் கூறிய வார்த்தைகளான - "நீ தேவனுக்குப் பயப்படுகிற தில்லையா?'' - என்பது இவன் ஒரு யூதன் என்பதைச் சுட்டிக் காண்பிக்கின்றன. புறஜாதியாரில் பெரும்பான்மையானவர்கள் ஒரே "தேவன்" என்பதற்குப் பதிலாக "தேவர்கள்" என்று குறிப்பிட்டிருப்பார்கள். இருப்பினும் இவன் கீழ்ப்படிதலுள்ள யூதனாக இருந்திருக்கவில்லை; இவன் பத்துக் கட்டளைகளில் குறைந்தபட்சம் ஒன்றையாவது மீறியிருந்தான் (யாத். 20:15). இருந்தபோதிலும், இவன் ஒரு யூதனாகவே இருந்தான். அது இவனைத் தேவனுடைய பிள்ளையாக்கியிருந்தது, ஏனென்றால் - இயேசுவின் மரணம் வரையிலும் - யூதர்கள் [மாத்திரம்] தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர் (உபா. 7:6ஐக் காணவும்). கள்ளனுக்கு அருளப்பட்ட இரட்சிப்பு என்பது, இன்றைய நாட்களில் எவ்வகையிலாவது உதாரணமாய் பயன்படும் என்றால், அது கிறிஸ்தவரல்லாதவர் அல்ல ஆனால் தவறு செய்கின்ற கிறிஸ்தவர் எவ்வாறு பாவமன்னிப்பைக் கண்டடைய முடியும் என்பதற்கானதாக மாத்திரம் உள்ளது.

மேலும் இந்தக் கள்ளன் ஞானஸ்நானம் பெறவில்லை என்றும் யூகிக்கப்பட்டுள்ளது. இவன் யோவான் ஸ்நானனின் ஊழியம் சில ஆண்டுகள் முன்னதாக தொடங்கியிருந்த இடத்திற்கு அண்மையில் மரித்திருந்தான். யோவானின் தொடக்கக் காலப் பிரபலத்தன்மை பற்றி மத்தேயு பின்வருமாறு எழுதினார்: "அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (மத். 3:5, 6). அந்த பகுதியில் வாழ்ந்தவர்களில் பலர், யோவானால் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். பிற்பாடு அதே பொதுவான பகுதியில் இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கியபோது, அவரும் அவரது சீஷர்களும் யோவானைக் காட்டிலும் அதிகமானவர்களை ஞானஸ்நானப்படுத்தினர் (யோவா. 4:1; 3:26ஐக் காணவும்). விஷயம் இவ்வாறு இருந்தது என்றால், ஏதாவது ஒரு வேளையில் இந்தக் கள்ளன் யோவானாலோ அல்லது இயேசுவின் சீஷர்களாலோ ஞானஸ்நானப்படுத்தப்பட்டிருப்பான் என்பது சாத்தியமானதாக இருப்பதில்லையா?[2] அவ்வாறு நடந்ததா இல்லையா என்பது முக்கியத்துவமற்றதாக உள்ளது. ஆனால் வேதாகம வசனப்பகுதியின் மீது ஏற்படுத்தப்படும் விவாதம் யூகத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்படக்கூடாது.

இந்தக் கள்ளன் ஞானஸ்நானம் பெற்றானா இல்லையா என்பது முக்கியத்துவமற்றது என்று நான் கூறுவது ஏன்? முன்பே குறிப்பிடப்பட்டபடி, இவனது இரட்சிப்பு என்பது இன்றைய நாட்களில் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு ஒரு உதாரணமாய் இருப்பதை நோக்கங் கொண்டிருக்கவில்லை. அந்த உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கான மூன்று

காரணங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள என்னை அனுமதியுங்கள்.

## பழைய நியாயப்பிரமாணம் நீக்கப்படுவதற்கு முன்பே இவன் இரட்சிக்கப்பட்டிருந்தான்

கள்ளனின் வரலாற்றை இன்றைய நாட்களில் கிறிஸ்த வரல்லாதவர்களின் மனமாற்றத்திற்கான உதாரணமாகப் பயன்படுத்துதல் என்பது 2 தீமோ. 2:15ல் போதிக்கப்படும் ஒரு கொள்கையை மீறுவதாக உள்ளது: "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பதாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." பழைய உடன் படிக்கையின் (பழைய ஏற்பாட்டின்) காலத்துடன் தொடர்புடையது எது மற்றும் புதிய உடன்படிக்கையின் காலத்துடன் தொடர்புடையது எது என்று வேறுபடுத்திக் காணுதல் என்பது, சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிப்பதற்கான ஒரு வழிமுறையாக உள்ளது.

இயேசுவின் மரணம், பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையிலான பிரிவினைக்கோடாயிருக்கிறது என்று வேதாகமம் போதிக்கிறது. கொலோசெயருக்குப் பவுல், "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லா வற்றையும் உங்களுக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து'' (கொலோ. 2:13, 14) என்று எழுதினார். இந்த அப்போஸ்தலருடைய சிந்தையில் இருந்த முறைமைகள் பற்றிக் கேள்வியொன்று இருந்திருக்கும் என்றால், அவர் 16ம் வசனத்தில் பல வகைப்பாடுகளைப் பட்டியலிட்டார்: "போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகைநாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களை யுங்குறித்தாவது.'' "ஓய்வுநாள்'' என்ற சொற்றொடரானது, பவுல் தமது கூற்றில் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் உள்ளடக்கினார் என்பதை நிரூபிக்கிறது; ''ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக'' என்பது பத்துக்கட்டளைகளில் ஒன்றாக இருந்தது (யாத். 20:8).

''கையெழுத்தைக் குலைத்து'' மற்றும் ''அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து" என்ற சொற்றொடர்கள், நியாயப்பிரமாணம் நீக்கப்பட்டுவிட்டன என்பதற்கான பலத்த சொற்றொடர்களாக உள்ளன. அது எப்போது நடைபெற்றது? "சிலுவையின் மேல் ஆணியடித்து" என்ற வார்த்தைகளை கவனியுங்கள், இது கிறிஸ்து கழுவேற்றப்பட்ட மரத்துண்டிற்கான குறிப்பல்ல, ஆனால் அதற்கு மாறாக, இயேசுவின் மரணத்திற்கான மறைமுகமான குறிப்பாக உள்ளது. இயேசு மற்றும் இயேசு மாத்திரமே பழைய உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவற்றையும் கடைப்பிடித்து அதை நிறைவேற்றினார். அவரது [உலகப்பிரகாரமான]வாழ்வின்

முடிவின்போது, அது (பழைய உடன்படிக்கை) நிறைவேற்றப்பட்ட (முடிக்கப்பட்ட) ஒரு ஒப்பந்தம் ஆயிற்று. பழைய உடன்படிக்கையானது இயேசுவின் மரணத்தில் "எடுத்துப்போடப்பட்டுவிட்டது."

அதே வேளையில், புதிய உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. எபிரெயர் 9:15ல், இயேசு "புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார்" என்று அந்த நிருபத்தை எழுதியவர் கூறினார். பின்பு அவர், புது உடன்படிக்கை அமுலுக்கு வருமுன்னதாக மாற்றம் அடைய வேண்டியிருந்தது என்ன என்பதைப் பற்றி விளக்கம் அளித்தார்: "ஏனென்றால் எங்கே மரணசாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டானபின்பே மரணசாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே" (எபி. 9:16, 17). இந்த ஒப்பீடானது ''கடைசி உயில் மற்றும் உடன்படிக்கை'' என்று அழைக்கப்படும் விசேஷித்த உடன்படிக்கை" (அல்லது ஒப்பந்தம்) என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. "கடைசி உயில் மற்றும் உடன்படிக்கை" எப்போது அமுலுக்கு வருகிறது? அந்த உயிலை ஏற்படுத்தியவர் மரிக்கும்போதுதான் - அதற்கு முன்பு அல்ல. வேதாகமப்பிரதிகள் பலவற்றில் மத்தேயு எழுதிய சுவிசேஷத்திற்கு முன்பாகப் பின்வரும் வார்த்தைகள் உள்ளன: "The New Testament of Jesus Christ" ["இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு"]. இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு எப்போது அமுலுக்கு வந்தது? அவர் மரித்தபோது. கிறிஸ்துவின் மரணம் பழைய ஏற்பாட்டுக் காலத்தின் முடிவாகவும் புதிய ஏற்பாட்டுக் காலத்தின் தொடக்கமாகவும் இருந்தது.

இந்தக் கள்ளன், பழைய நியாயப்பிரமாணம் எடுத்துப் போடப்படுவதற்கு முன்பு மன்னிக்கப்பட்டபடியால், இவன் இன்றைய நாட்களில் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கு அருளப்படும் இரட்சிப்பு என்ற விஷயத்திற்கு உதாரணமாக இருப்பதில்லை. இயேசு மரிப்பதற்கு ஒரு சில மணிகள் முன்னதாக இவனுக்குப் பரதீசு வாக்களிக்கப்பட்டது என்பது உண்மையே, ஆனால் அந்த வாக்குத்தத்தமானது இன்னமும் சிலுவையின் "பழைய ஏற்பாட்டுப் பகுதியின்போதே" தான் தரப்பட்டிருந்தது.

புதிய ஏற்பாடு மற்றும் கடைசி உயில் மற்றும் ஏற்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான ஒப்பீட்டை இன்னும் விரிவாக்க முடியும். உயிலை எழுதியவரின் உடைமைகளைப் பிரித்தளித்தல் என்பதே ஒரு உயிலின் முக்கிய நோக்கமாக உள்ளது. உயிலை எழுதியவர் மரித்த பின்பு, உயிலின் அளிப்புகளில் இருந்து மக்கள் பயனடைய வேண்டும் என்றுல், அவர்கள் அந்த உயிலின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாக வேண்டும். உயிலை எழுதியவர் உயிரோடு இருக்கும் வரையில், அவர் தாம் விரும்புகின்ற எந்த அடிப்படையிலும் தமது உடைமைகளைப் பிரித்தளிக்கலாம்..

ஏவுதல் பெற்ற பதிவேடுகளைப் பொறுத்த மட்டில், இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது, பாவங்களை மன்னிப்பதற்குத் தமக்கிருந்த அதிகாரத்தை ஒரு சில முறைகள் மாத்திரமே செயல்படுத்தி இருந்தார்: திமிர்வாதம் பிடித்தவனைக் குணமாக்கியபோது (மத். 9:2-6), விபசாரத்தில்

பிடிபட்ட பெண்ணிடத்தில் (யோவா. 8:3-11) மற்றும் சிலுவையில் தொங்கிய கள்ளனிடத்தில். இவையாவும் இயேசு தமது "கடைசி உயிலும் ஏற்பாடும்'' அமுலுக்கு வருவதற்கு முன்பு தமது ஆவிக்குரிய உடைமைகளைப் பிரித்தளித்த செயலுக்கு உதாரணங்களாக உள்ளன. இவற்றில் எதுவும், இன்றைய நாட்களில் கிறிஸ்தவரல்லாத ஒருவர் இரட்சிக்கப்படுவார் என்பதற்கான அடிப்படையை நிலைநாட்ட முயற்சி செய்யும் வகையில் பயன்படுத்தப்படக்கூடாது.

## பிரதான கட்டளையைக் கிறிஸ்து கொடுப்பதற்கு முன்பே இவன் இரட்சிக்கப்பட்டிருந்தான்

இயேசுவின் சொந்த ஊழியத்தின்போது, அவர் இரட்சிப்பிற்கு அவசியமானவைகள் பற்றிக் குறிப்புகள் ஏற்படுத்தியிருந்தார். எடுத்துக்காட்டாக, அவர் புதிய பிறப்பைப் பற்றியும் (யோவா. 3:3, 5) மனமாற்றத்தின் அவசியம் பற்றியும் (மத். 18:3) பேசினார். அவர் விசுவாசத்தின் அவசியம் (யோவா. 8:24), மனந்திரும்புதலின் இன்றியமையாமை (லூக். 13:3) மற்றும் அறிக்கையிடுதலின் முக்கியத்துவம் (மத். 10:32) ஆகியவை பற்றி வலியுறுத்தினார். இருந்தபோதிலும், அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவை நிறைவேறும் வரையிலும் அவர் பிரதான கட்டளையைத் தந்திருக்கவில்லை. அது அவரருளும் இரட்சிப்பிற்கான நிபந்தனைகளை உச்சரித்தது: தேவனுடைய கிருபையை தனதாக்குவதற்காக மனிதர்கள் செய்ய வேண்டியவை யாவை.

> "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத். 28:19, 20).

> "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற். 16:16).

> எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது (லூக். 24:46, 47).

ஒரு சட்டமானது நடந்து முடிந்ததைப் பாதிப்பதாக இருக்க முடியாது என்பது ஒரு அடிப்படைச் சட்டவியல் கொள்கையாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டின் சட்டக் கொள்கையின் பகுதி 1, பிரிவு 9ல் பின்வரும் அளிப்பு

உள்ளடங்கியிருக்கிறது: "No ... ex post facto Law shall be passed"[3] ["நடந்து முடிந்தது பற்றிய சட்டம் எதுவும் இயற்றப்பட/விதிக்கப்படக் கூடாது"]. சட்டப்பூர்வமான அமைப்பு ஒன்று இன்றைய நாட்களில் ஒரு சட்டத்தை இயற்றினால்/விதித்தால், ஒரு தனிநபர் அந்த சட்டத்தை நேற்று மீறிநடந்தார் என்பதற்காக அவர்மீது வழக்குத் தொடரமுடியாது என்பது அந்த அளிப்பின் நடைமுறைப் பயன்பாடாக உள்ளது. அவ்வாறே, பிரசித்தி பெற்ற இந்தக் கள்ளன், பிரதான கட்டளை தரப்படுவதற்கு முன்பு மரித்தான், எனவே அதன் நிபந்தனைகள் இவனுக்கு நடைமுறைப்படாதிருந்தன. இருந்தபோதிலும், அவைகள் நமக்கு நடைமுறைப்படுகின்றன. இந்தக் கள்ளன், ஞானஸ்நானம் பெறத்தேவையில்லாதிருந்தான். ஆனால் நாம் ஞானஸ்நானம் பெறுவது அவசியமாக உள்ளது. பின்பு ஏன் மக்கள் இவனது இரட்சிப்பை, இன்றைய நாட்களில் நாம் ஞானஸ்நானம் பெறுவது அவசியமில்லை என்பதற்கு நிரூபணமாக பயன்படுத்த முயற்சி செய்கின்றனர்?

ஒருவேளை, பின்வரும் விவரிப்பு உதவியாய் இருக்கும்: உங்கள் வருமான வரியைச் செலுத்துவதற்கான காலம் கடந்துபோய், நீங்கள் வருமான வரித்துறையினரால் அழைக்கப்பட்டிருந்தால் எப்படியிருக்கும்? வருமான வரி அலுவலர் உங்களிடத்தில், "நீங்கள் உங்கள் வரியைச் செலுத்த வேண்டும். நல்ல குடிமகன்கள் தங்கள் பாகத்தைச் செய்கின்றனர்" என்று கூறுகின்றார். அதற்கு நீங்கள், "ஆனால், ஜார்ஜ் வாஷிங்டனைப் பற்றிய விஷயம் என்ன? அவர் வருமான வரி செலுத்தவில்லையே, மற்றும் அவர் ஒரு நல்ல குடிமகனாகத்தானே இருந்தார்? ஆப்ரஹாம் லிங்கனைப் பற்றிய விஷயம் என்ன? அவர் வருமான வரி செலுத்தவில்லை, அவரும் கூட நல்ல குடிமகன் என்றே அறியப்பட்டிருந்தார். இவ்விரு மாபெரும் மனிதர்களும் நல்ல குடிமகன்களாக இருந்துகொண்டே வரிசெலுத்தாமல் இருக்கமுடிந்தது என்றால், நானும் அவ்வாறே செய்ய முடியுமே." அந்த அலுவலர் உங்கள்மீது மனம் ஈர்க்கப்படுவார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? ஒருவேளை அவர், "அதை நான் ஒருபோதும் நினைத்துப் பார்க்கவில்லை! சரிதான், நீங்கள் வரி செலுத்தவேண்டாம்" என்று கூறுவார் என்று நினைக்கின்றீர்களா? அந்த அலுவலர், வருமான வரி செலுத்துவதற்கான அமலாக்கத்தைக் கொண்டுள்ள, 1913ல் இயற்றப்பட்ட [அமெரிக்க நாட்டுச் சட்டத்தின்] பதினாறாம் சரத்தைச் சுட்டிக்காண்பிப்பார். எனவே அந்தச் சட்டம் - திருவாளர், வாஷிங்டன் மற்றும் திருவாளர். லிங்கன் உட்பட - அந்தக் காலகட்டத்திற்கு முன்பு வாழ்ந்தவர்களுக்கு நடைமுறைப் படுவதில்லை, ஆனால் அது நமக்கு [இன்றைய நாளில் வாழும் அமெரிக்கர்களுக்கு] நடைமுறைப்படுகிறது. இந்தக் கள்ளன், பிரதான கட்டளையில் இயேசு தாம் அருளும் இரட்சிப்பிற்கான நிபந்தனைகளைக் கொடுப்பதற்கு முன்பு இரட்சிக்கப்பட்டதால், நாம் ஞானஸ்நானம் பெறாதிருப்பதற்கு இந்தக் கள்ளனை ஒரு சாக்குபோக்காகச் சுட்டிக்காண்பிக்க முடியாது.

## உண்மை நிலையில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்கு முன்பே இவன் இரட்சிக்கப்பட்டிருந்தான்

பவுலைப் பொறுத்த மட்டில், மூன்று திறவுகோல் நிகழ்ச்சிகள் சுவிசேஷத்தின் ("நற்செய்தியின்") இருதயம் போன்ற மையப்பகுதியாக இருந்தன: இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல். அவர் கொரிந்தியர்களுக்குப் பின்வருமாறு எழுதினார்:

> *அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக் கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.*
>
> *நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங் களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து (1 கொரி. 15:1-4).*

மரணம், அடக்கம் மற்றும் உயிர்தெழுதல் ஆகியவற்றின் விளைவானது, இந்தக் கள்ளனுக்குப் பரதீசு வாக்களிக்கப்பட்ட வேளையில் இயக்கத்தில் அமைவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இயேசு இன்னமும் மரித்திராதிருந்தார். அவரது அடக்கமும் உயிர்த்தெழுதலும் இன்னமும் எதிர்காலத்தில் நடைபெற வேண்டியிருந்தன. கர்த்தர் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழும் வரைக்கும் சுவிசேஷம் ''உண்மை நிலையில்'' பிரசங்கிக்கப்பட இயலாதிருந்தது. கிறிஸ்து பரத்துக்கேறி, பத்து நாட்களுக்குப் பின்பு வந்த (முதல்) பெந்தெகொஸ்தெ நாளில் அப்போஸ்தலரான பேதுருவினால் இது முதன் முறையாக இதன் முழுமைத் தன்மையுடன் பிரசங்கிக்கப்பட்டது (அப். 2:23, 24, 32, 36).

இன்றைய நாளில் அற்புதமான இந்தச் சுவிசேஷம், இரட்சிப்புக்குத் தேவபெலன் உள்ளதாக இருக்கிறது (ரோம. 1:16). இது இல்லாமல் நாம் இரட்சிக்கப்பட முடியாது. இதற்கு நேர்மாறாக, இந்த கள்ளன் இச்சுவிசேஷம் வெளிப்படையாக அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே மரித்திருந்தான். இவன் சுவிசேஷத்தின் முழு வரலாற்றையும் கேள்விப்படும் வாய்ப்புக் கிடைப்பதற்கு முன்பாகவே வாழ்ந்து மரித்துவிட்டான். ஆகையால் இவனது இரட்சிப்பு இன்றைய நாட்களில் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டிய கிறிஸ்தவர் அல்லாத வர்களுக்கு உதாரணமாய் இருப்பதில்லை (1 பேது. 4:17; 2 தெச. 1:8).

## முடிவுரை

இந்தக் கள்ளன் இரட்சிக்கப்பட்ட விதமாக இரட்சிக்கப்படுவதற்குப்

பலர் விரும்புகின்றனர். சிலர், ‘‘அந்தக் கள்ளன் கெட்டிக்காரனாய் இருந்தான்! அவன் வாழ்க்கையைத் தான் விரும்பியபடியெல்லாம் வாழ்ந்தான் - மற்ற மக்களிடத்தில் அனுகூலம் ஏற்படுத்திக்கொண்டும் கூட வாழ்ந்தான் - ஆனால் அதன் பின்பு, தான் மரிப்பதற்குச் சற்று முன்பாக. அவன் மனந்திரும்பினான், கர்த்தர் அவனை இரட்சித்தார். நானும் அவ்வாறே இரட்சிக்கப்பட விரும்புகின்றேன்!’’ என்று கூறுகின்றனர். சத்தியத்தைக் கற்றுக்கொண்டதற்குப் பின்பு சத்தியத்திற்குக் கீழ்ப்படிதலைத் தள்ளிப்போடுதல் என்பதை வேதாகமம் உபதேசிப்பதோ அல்லது ஊக்குவிப்பதோ இல்லை. பவுல், “இதோ இப்பொழுதே ‘அனுக்கிரககாலம்,’ இப்பொழுதே ‘இரட்சணிய நாள்” ’ என்று எழுதினார் (2 கொரி. 6:2ஆ).

யாரேனும் ஒருவர், தமது மரணத்திற்குக் கொஞ்சம் முன்பு வரைக்கும் மனந்திரும்புதலைத் தள்ளிப்போட முடிவுசெய்கின்றாரென்றால். பின்வரும் பலவிஷயங்களில் எதுவேண்டுமென்றாலும் நடக்கக்கூடும்: முதலாவது, அவர் அந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு கர்த்தர் வரக்கூடும். இரண்டாவது, அந்த நபர் எதிர்பாராத விதமாக மரிக்கக்கூடும். மூன்றாவது, கர்த்தர் வராதிருப்பினும், எதிர்பாராத விதமாக மரணம் சம்பவிக்காதிருப்பினும், அந்த நபரின் இருதயம் அனேகமாக, மனந்திரும்புவது சாத்தியமில்லை என்று அவரே காணக்கூடிய அளவுக்குக் கடினமாகி விடலாம் (எபி. 6:6ஐக் காணவும்). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் தமது வாசகர்களிடத்தில், “இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்” என்று வேண்டுகோள் விடுத்தார் (எபி. 4:7அ). நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார் என்பதை அறிந்தபின்பு அதைச் செய்வதற்குக் காலம் தாழ்த்த வேண்டாம்.

இந்தக் கள்ளன் மரித்த சிலுவையின் பக்கத்தில் இருந்து நமது கண்களைத் திருப்பி, நமது இரட்சகர் நமக்காக மரித்த, நடுவில் இருந்த சிலுவையை நோக்கி நமது கவனத்தைக் குவிப்போம். நாம் உண்மையிலேயே அவர் மீது அன்புகூர்ந்தால், நாம் செய்யும்படி அவர் கேட்டுக்கொண்டுள்ளதை நாம் செய்வோம் (யோவா. 14:15). அவருக்கு கீழ்ப்படிவதைத் தள்ளிப்போடுவதற்குச் சாக்குப்போக்குகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்க மாட்டோம். மாறாக, அன்பும் நன்றியுணர்வும் பொங்கிப்பெருகும் இருதயங்களுடன் அவரிடத்தில் நாம் சரணடைவோம்.

---

குறிப்புகள்

[1]“நான் ஒரு குடிமகன்.” அப். நட. 6 என்ற புத்தகத்தில் பக்கம் 213ல் உள்ளது. [2]விஷயம் அப்படியிருந்தால், இந்தக் கள்ளன் யோவான் அல்லது இயேசு ஆகிய இருவரில் எவராவது போதித்ததை கேள்விப்பட்டிருப்பான் என்றாகிறது. இது இயேசுவின் இராஜ்யம் பற்றி இந்தக் கள்ளன் கூறிய வார்த்தைகளுக்கு விளக்கம் தர உதவும். [3]*Grolier Multimedia Encyclopedia*, 1999., s. v. “Constitution of the United States.”

# படிப்பு உதவிகள்

# “என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்”

## (ஞாயிறு காலை ஆராதனை ஊழியம்)

*பாடல்.*

**ஜெபம்.**

***குறிப்புரைகள்:***

பல ஆண்டுகளுக்கு முன்பு, “நீங்கள் அங்கே இருக்கின்றீர்கள்” என்று அழைக்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியானது புகழ்பெற்று விளங்கிற்று. ஒவ்வொரு வாரமும், வரலாற்றுப்பூர்வமான சில நிகழ்ச்சிகள் மறுபடியும் நடித்துக் காண்பிக்கப்பட்டன, அதைக் காண்பவர் உண்மையில் அந்த நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டது போலவும், நடிப்பில் செயல் வலிவையும் உணருவார். இதைப் போன்ற ஒன்றுதான், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும், நாம் கர்த்தருடைய பந்தியைச் சுற்றிலும் வந்தமரும்போது நடைபெறுகிறது. C. A. பிரவுன் அவர்கள் பின்வரும் வார்த்தைகளினால் அந்தக் கருத்தைப் படம்பிடித்துக் காண்பித்தார்:

> சற்றுக் காலத்திற்கு முன்பு நான், விசுவாசத்தின் இறகுகளைக் கொண்டு இடைப்பட்ட நூற்றாண்டுகளைக் கடந்து, “பரிசுத்த பூமிக்கு” சென்று பார்வையிட்டேன். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அந்த நாட்டின் - “பாலும் தேனும் ஓடிய அந்த” நாட்டின் - நீளத்தை அளந்தேன். தாண் முதல் பெயர்செபா வரையிலும், ஆபிரகாமும், ஈசாக்கும், யாக்கோபும் ஒரு காலத்தில் வாழ்ந்திருந்த அந்தப் பூமியை நான் ஆய்வு செய்தேன். கிறிஸ்து பிறந்தபோது தூதர்கள் பாடியதை வாயடைத்தவனாக கேட்டு புதிதாகப் பிறந்த அரசரினிமித்தம் வியப்புற்றேன்.
>
> இயேசு நன்மை செய்கிறவராயும் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்த எல்லா இடங்களுக்கும் நான் நடந்து சென்றேன். அவருடைய அற்புதமான ஜீவன் தரும் வார்த்தைகளை நான் கேட்டு, அவர் மரித்தவர்களைப் பரிவிரக்கத்துடன் உயிர்ப்பித்ததைக் கண்டேன். கலிலேயாக் கடற்கரையில் அவரது அடிச்சுவடுகளில் நான் நடந்து சென்று, அவர் காற்றையும் கடலையும் கடிந்துகொண்டு அலைகளை அமர்த்தியைக் கண்டேன். நான் அவருடன் ஏழைகள் மற்றும் சிறுமைப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் சென்று, அவர்களுக்கு அவர், வரவிருந்த ராஜ்யத்தின் மகிழ்வலைச் செய்திகளைப் பிரசங்கிக்கக் கேட்டேன்.
>
> யூதாஸ் தனது எஜமானரை ஒரு சில வெள்ளிக்காசுகளுக்காகக் காட்டிக் கொடுத்ததை, சீற்றம் வருத்தம் என்ற உணர்வுகள் கலக்க உற்றுநோக்கினேன். அவர்கள் நமது கர்த்தரைப் பிலாத்துவின் அரண்மனையிலிருந்து வெளியே நடத்திச் சென்றதை ஏக்கத்துடன் கவனித்தேன், பாவமற்ற ஒருவருக்கெதிராகப் பொய்ச் சாட்சிக்காரர்

*கள் சாட்சி கூறியதை நான் கேட்டேன். பிரபுவின் மாண்புமிகுந்த நெற்றியில் போர்வீரர்கள் முள்முடியைச் சூட்டியதையும் பரிசுத்த மான முகத்தில் அவர்கள் காரி உமிழ்ந்ததையும் கண்டேன். இயேசு வின் இரத்தத்திற்காகக் கும்பலானது கூச்சலிட்டதைக் கேட்ட நான், அவர்கள் அவரைச் சிலுவையில் அறைய அவசரமாக இழுத்துச் செல்லுகையில் அவர்களை நான் பின்தொடர்ந்தேன். நடுங்கும் அவரது மாம்சத்தினூடாகப் போர்வீரர்கள் ஆணியை அறைந்து அவரை மரத்துடன் பிணைக்கையில் எழுந்த சுத்தியல் சத்தங்களைக் கேட்டேன், ஆனால் சிலுவையின்மீது கிடத்தப்பட்டிருந்த அவரிட மிருந்து ஒரு முறுமுறுப்பையும் நான் கேட்கவில்லை.*

*மரியாளின் ஆத்துமாவை "பட்டயம் ஊடுருவுகையில்" நான் அப்பெண்மணியின் முகத்தில் மனக்கலவரத்தையும் துயரத்தையும் கண்ணுற்றேன், மற்றும் தேவகுமாரன், "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார் களே" என்று கூறியதைக் கேட்டேன். நகர வாயிலுக்குப் புறம்பே அந்த நாளில் ஊடுருவிய பயங்கரமான காட்சியினால் சூரியன் இருண்டு மறைந்ததையும் இயற்கை மூலங்கள் கலகம் ஏற்படுத்தியதையும் நான் கண்டேன். உயிரற்ற உடலை [சிலுவை] மரத்திலிருந்து எடுத்த மென்மையான கரங்கள் அதை ஒரு புதிய கல்லறையில் அன்போடு வைத்ததை நான் கவனித்தேன்.*

*மூன்றாம் நாள் காலையில், நான் பயபக்தியுடன் கல்லறைக்குள் உற்றுநோக்கி, "அவர் இங்கே இல்லை, அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். வாருங்கள், கர்த்தர் வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பாருங்கள்" என்று அகமகிழ்வுடன் கூறப்பட்ட வார்த்தை களைக் கேட்டேன். சீஷர்களுடன் நான் ஒலிவமலைக்கு ஏறிச் சென்று இயேசு பிதாவினிடத்தில் திரும்பவும் ஏறிச் சென்றதைக் கண்டேன். தூதர்கள், "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று கூறியதைக் கேட்டேன்.*

*ஆம், நான் அங்கிருந்தேன். நான் புதிய ஏற்பாட்டில் விரிவாகச் சித்தரிக்கப்பட்ட அற்புதமான அந்தக் காட்சிகளை மறுபடியும் வாழ்ந்து பார்த்தேன். நான் அங்கிருந்தேன் - ஏனெனில், நீங்கள் காணுங்கள், கடந்த கர்த்தருடைய நாளிலே, நான் கர்த்தரை அவரது பந்தியில் சந்தித்தேன், "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று கூறியபோது அவர் கட்டளையிட்டவாறே நான் அதை செய்தேன்.[1]*

*கர்த்தருடைய இராப்போஜனமானது நமது கிறிஸ்தவ அனுபவத்திற்கு அத்தியாவசியமானதாக உள்ளதென்று விசுவாசித்த நிலையில், நாம் நமது ஆராதனை ஊழியத்தை, இந்த நினைவுகூரும் விருந்தை மையங் கொண்டதாக்குவோம். வேதாகமம் போதிக்கின்றவற்றை நாம் பகிர்ந்து கொள்ளுகையில், கர்த்தருடைய பந்தியின் ஆராதனையைப் பற்றி மக்கள் சிலவேளைகளில் கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்க முயற்சி செய்வோம்.[2]*

*கர்த்தருடைய இராப்போஜனமானது ஏறக்குறைய இரண்டாயிரம்*

*ஆண்டுகளுக்கு முன்பாக இயேசுவினால் ஏற்படுத்தப்பட்டது. கிறிஸ்து மரிப்பதற்குச் சிலமணி நேரங்கள் முன்னதாக, கிறிஸ்துவும் அவரது அப்போஸ்தலர்களும் பஸ்கா விருந்தை உண்டபோது இது ஏற்படுத்தப் பட்டது. இதற்கான வேதாகமரீதியான விவரங்கள் மத்தேயு 26, மாற்கு 14, லூக்கா 22 மற்றும் 1 கொரிந்தியர் 11 ஆகிய அத்தியாயங்களில் காணப் படுகின்றன. 1 கொரிந்தியர் நிருபத்திலிருந்து இவ்வசனப்பகுதி வாசிக்கப் படுகையில் பயபக்தியுடன் கவனியுங்கள்.*

***வேத வாசிப்பு: 1 கொரிந்தியர் 11:23-29.***

***பாடல்.***

***குறிப்புரைகள்:***

*மனிதர்கள் மிக விரைவில் மறந்து விடுகின்றனர்! இந்தக் காரணத் தினால்தான் நாம், நமது நினைவுகளைக் கிளறிவிடுவதற்காக சிலைகள் மற்றும் சடங்குகள் போன்ற நினைவுச் சின்னங்களை[3] நிலைநாட்டுகின் றோம். வாஷிங்டன் DCயில் உள்ள வாஷிங்டன் நினைவுச் சின்னமும் லிங்கன் நினைவகமும் நன்கு அறியப்பட்ட இரண்டு நினைவுச் சின்னங் களாக உள்ளன. இந்திய இளவரசர் ஒருவரால் தனது மனைவியின் நினைவாகக் கட்டியெழுப்பப்பட்ட தாஜ்மஹால் என்பது உலகப் புகழ்பெற்ற ஒரு உதாரணமாக உள்ளது. தேவனுடைய நன்மைத்தனத்தை நமக்கு நினைவூட்டுகின்ற வானவில் (ஆதி. 9:8-17), தேவன் யாக்கோபுடன் இருக்கின்றார் என்பதை அவருக்கு நினைவுபடுத்துவதை நோக்கங்கொண்ட வைகளாயிருந்த யாக்கோபின் கற்கள் (ஆதி. 28:10-22), மற்றும் எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் விடுதலையானதை நினைவுகூரும் வகையில் ஆசரிக்கப்பட்ட பஸ்கா பண்டிகை (யாத். 12:14) போன்றவை உட்படப் பல நினைவுச் சின்னங்களைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. இன்றைய நாட்களில், நாம் அன்பானவர்களுக்கு அவர்கள் நினைவுகூரப் படும்படி கல்லறைகளில் கல்லறைக் கற்களைக் கட்டியெழுப்புகின்றோம். மக்கள் விரைவில் மறந்து விடுவார்கள் என்பதைப் புரிந்துகொண்டிருந்த இயேசு, எல்லாவற்றிலும் மாபெரிய நினைவுச் சின்னமாகிய கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தினார்.*

*அந்த நினைவுச் சின்னத்திற்கு அவர் விரும்பிய, எந்த ஒரு பொருளையும் தேர்ந்தெடுத்திருக்க முடியும். சலவைக்கல், விலையுயர்ந்த உலோகங்கள், விலைமதிப்பற்ற ஆபரணங்கள் - ஆகிய யாவையும் பயன் படுத்தப்பட்டிருக்க முடியும், ஏனெனில் அவர், கட்டியெழுப்பப்பட்ட மிக விலையுயர்ந்த நினைவுச் சின்னங்கள் யாவற்றிற்கும் பாத்திரராகவே இருக்கின்றார். இருப்பினும், அவர் பூமியின் மிகச் சாதாரணமான இரண்டு பொருட்களைத் தேர்ந்து கொண்டார்.*

*(1) அப்பம். "அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: 'நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது' என்றார்" (மத். 26:26). அப்பம் என்பது அநேகமாக உலகிலுள்ள உணவு வகைகளில் மிகவும் சாதாரணமானதாக உள்ளது; ஏறக்குறைய எல்லா இடங்களிலும் உள்ள*

எல்லாருமே அப்பத்தை உண்ணுகின்றனர். ஏறக்குறைய எல்லா அப்பங்களுக்கும் கோதுமையே அடிப்படையான உட்பொருளாக உள்ளது, இது பூமியின் மிகச் சாதாரணமான தானியங்களில் ஒன்றாக உள்ளது.

கிறிஸ்து எவ்வகையான அப்பத்தைப் பயன்படுத்தினார்? இதைப் பற்றித் தகவல் அறிவிக்கப்படாதவர்கள், கர்த்தருடைய இராப் போஜனத்தை ஆசரிக்கும்போது, உப்பு பிஸ்கட்டுகளையும்,[4] ஃபிரென்ச்சு அப்பங்களையும்,[5] அல்லது மற்ற புளிப்பேறிய ரொட்டிகளையும் பயன் படுத்துகின்றனர். இருப்பினும் கிறிஸ்து, இந்த இராப்போஜனத்தை பஸ்கா பண்டிகையின்போது ஏற்படுத்தினார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (மத். 26:19). அந்தப் பண்டிகையின்போது, வீட்டிலிருந்த எல்லாப் புளித்தமாவும்[6] நீக்கிப்போடப்பட்டது (யாத். 12:15); பண்டிகை யின்போது புளிப்பில்லாத அப்பம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டது (யாத். 12:8). இதுவே கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தப் பயன்படுத்தப்பட்ட அப்பமாக இருந்தது. புளிப்பில்லாத அப்பம் என்பது இயேசுவின் சரீரத்தைப் பிரதிநித்துவப்படுத்தத் தகுதி வாய்ந்ததாக உள்ளது: புதிய ஏற்பாட்டில், புளித்தமா என்பது பாவத்தின் நிலை பிறழ்ந்த செல்வாக்கைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது (1 கொரி. 5:8ஐக் காணவும்). புளிப் பில்லாத அப்பம் என்பது கிறிஸ்துவின் பாவமற்ற உடலுக்குப் பொருத்த மான அடையாளமாக உள்ளது (எபி. 4:15).[7]

(2) *திராட்ச ரசம்.*

> பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; ... இதுமுதல் இந்தத் திராட்சப் பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத். 26:27-29).

அந்தக் காலத்திலும் இடத்திலும், "திராட்சப் பழம்" என்பது திராட்சக் கொடியின் கனியைக் குறித்தது. கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிய வேதவசனப் பகுதிகளில், "wine" என்பதற்கான கிரேக்க வார்த்தை (oinos) பயன்படுத்தப்படவில்லை, ஆனால் அதற்கு மாறாக, திராட்சச் சாற்றினைக் குறிக்கிற "திராட்ச ரசம்" என்ற சொற்றொடரே பயன்படுத்தப்பட்டது என்பது கவனிக்கப்படலாம். திராட்சப் பழங்களும் சாதாரண உணவு வகையாகவே உள்ளன; திராட்சப்பழம் என்பது, கோதுமையைப்போன்று உலகளாவியதாக இல்லாவிட்டாலும், பெரும்பாலான ஊர்களில் இதை வாங்க முடியும்.[8] மீண்டுமாக, "திராட்ச ரசம்" என்பது ஐக்கிய ஆராதனையின் இந்தப் பாகத்திற்குப் பொருந்தக்கூடியதாக உள்ளது. பெரும்பாலான திராட்ச ரசத்தின் சிகப்பு நிறமானது[9] ஒத்த நிகழ்வா யிருப்பினும் இல்லாதிருப்பினும், இயேசுவின் இரத்தத்தைக் குறிப்பதற்கு ஏற்புடையதாக உள்ளது என்று நம்மில் பலருக்குக் கருத்தை உறுதியாக கொடுத்துள்ளது.

இயேசு, புளிப்பில்லாத அப்பம் மற்றும் திராட்ச ரசம் என்ற இரண்டு

எளிய பொருட்களைக் கொண்டு இந்த எளிய நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தினார். துரதிர்ஷ்டவசமாக, இது சிலருக்கு மிகவும் எளியதாக உள்ளது, அவர்கள் ஐக்கிய விருந்தின் கருத்தை அற்புதமான உற்பத்திப் பொருளாக்கியிருக்கின்றனர். "திருப்பலி" என்று அழைக்கப்படும் விரிவான சடங்கு ஒன்று பரிணமித்துள்ளது, இந்தச் சடங்கின்போது, அப்பமானது இயேசுவின் உண்மையான சரீரமாகவே மாறிவிடுவதாகவும் திராட்ச ரசமானது இயேசுவின் உண்மையான இரத்தமாகவே மாறிவிடுவதாகவும் உரிமைகோரப்படுகிறது. (அப்பொழுதும் இந்தப் பொருட்கள் அப்பம் மற்றும் திராட்ச ரசமாகவே காணப்படுவதாகவும் அவை போன்றே சுவையுள்ளவையாகவும் உள்ளன என்று இவர்கள் ஒப்புக்கொள்ளு கின்றனர், ஆனாலும் இவை கர்த்தரின் உண்மையான மாம்சமாகவும் இரத்த மாகவும் உள்ளன என்று இவர்கள் வலியுறுத்துகின்றனர்.) இந்த நிலைப்பாட்டைத் தற்காப்பதில், இவர்கள் "இது என் சரீரமாயிருக்கிறது" மற்றும் "இது என் இரத்தமாயிருக்கிறது" என்று இயேசு கூறியதைச் சுட்டிக் காண்பிக்கின்றனர் (மத். 26:26, 28).

வேதாகமத்திற்கு விளக்கம் அளிப்பதில் பொது அறிவு வேண்டப் படுகிறது. இயேசு தமது சீஷர்களுக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த படியால் - அவரது சரீரம் தக்கவகையில் இருந்தது மற்றும் அவரது இரத்தக்குழாய்களில் இரத்தம் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது - அவர், அந்த அப்பமும் திராட்ச ரசமும் தமது உண்மையான மாம்சமாகவும் இரத்த மாகவும் இருந்தன என்று அர்த்தப்படுத்தியிருக்க முடியாது. இவ்விடத்தில் அவர், தாம் அடிக்கடி பயன்படுத்தியிருந்த பேச்சின் உருவகம் ஒன்றைப் பயன்படுத்தினார். அவர், "நானே திராட்சக் கொடி" என்றும் "நானே வாசல்" என்றும் கூறினார் (யோவா. 15:5; 10:9).[10] அவர், தாம் உண்மையான திராட்சக்கொடி என்றோ (அவரிடத்தில் திராட்சப்பழங்கள் பழுத்துத் தொங்கவில்லை) அல்லது அவர், தாம் உண்மையான கதவு என்றோ (அவர் ஒரு கீலின்மீது அசைவாடிக் கொண்டிருக்கவில்லை) அர்த்தப்படுத்தவில்லை. மாறாக அவர், தமக்கும் திராட்சக் கொடிக்கும், தமக்கும் கதவிற்கும் இடையில் ஒத்ததன்மையின் கருத்துக்கள் இருந்தன என்று அர்த்தப் படுத்தினார்.

பேச்சின் இந்த உருவகம் சாதாரணமானதாக உள்ளது. நான் உங்களிடத்தில் ஒரு புகைப்படத்தை காண்பித்து, "இது என் மனைவி" என்று சொன்னால், நீங்கள் அந்தப் படமே எனது மனைவி என்று நினைக்க மாட்டீர்கள். அந்தப் புகைப்படமானது எனது மனைவியைப் பிரதிநிதித்து வப்படுத்துவதாக உள்ளது என்று நீங்கள் புரிந்துகொள்வீர்கள். அது போலவே, அப்பமும் திராட்ச ரசமும், நமது கர்த்தருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துபவைகளாக உள்ளன.

இயேசு, மிகவும் அழியாத நினைவுச் சின்னங்களை ஏற்படுத்த மிகவும் அழியப்படக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தினார். காலப்போக்கில் கற்கள் கரைந்து விடுகின்றன, விலையுயர்ந்த உலோகங்கள் அரிபடுகின்றன, ஆபரணங்கள் களவுசெய்யப்படக்கூடும், ஆனால் கோதுமையும் திராட்சப் பழமும் தொடர்ந்து இருக்கும். நாம் இந்த நினைவுச் சின்னத்தைப்

*பார்வையிடுவதற்கு, எருசலேமுக்கோ அல்லது மற்ற தொலைதூர இடத்திற்கோ திருப்பயணம் மேற்கொள்ளத் தேவையில்லை; இது யாவருக்குமே எளிதில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது கட்டுபடியாகக் கூடியதாக உள்ளது; ஏழைகளும்கூட இந்த இரண்டு எளிய பொருட்களை யும் வாங்க முடியும். இந்த நினைவுச் சின்னமானது தூய்மையான, தெய்வீகத்துவமான, ஏவுதல் பெற்ற நுண்ணறிவுக்கு ஒரு உதாரணமாக உள்ளது.*

*பாடல்.*

***ஜெபம்.***

***குறிப்புரைகள்:***

*மக்கள் கர்த்தருடைய இராப்போஜனம் பற்றிக் கேள்விகள் கேட்கின்றனர். எடுத்துக்காட்டாக, அவர்கள், "இறுதி விருந்து"* ("Eucharist"), *"திருப்பலி"* ("mass"), *"திருவருட்சாதனம்"* ("sacrament") *போன்ற சொற்றொடர்களைக் கேட்டு, "இந்தச் சடங்கு என்னவென்று அழைக்கப் பட வேண்டும்?" என்று வியப்படைகின்றனர். வேத வசனத்தில் இந்தச் சடங்கைக் குறிப்பிடும் நான்கு சொற்றொடர்கள் உள்ளன: "கர்த்தருடைய இராப்போஜனம்" (1 கொரி. 11:21); "அப்பம் பிட்குதல்" (அப். 2:42; அப். 20:7ஐக் காணவும்); "ஐக்கியம்" (1 கொரி. 10:16[11]) மற்றும், "கர்த்தருடைய போஜனபந்தி" (1 கொரி. 10:21). நாம் வேதாகமச் சொற்றொடராக்கத்தில் நிலைத்திருத்தலே நல்லது (1 பேது. 4:11).*

*ஒருவேளை, "நாம் எப்பொழுது இதில் பங்கேற்க வேண்டும்?" என்பது மிகவும் பொதுவாகக் கேட்கப்படக்கூடிய கேள்வியாக உள்ளது. இயேசு இந்த நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தியபோது, "ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதெல்லாம் ... அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று கூறினார் (1 கொரி. 11:26), இதில் அவர் எத்தனை நாட்களுக்கு ஒருமுறை என்பதையோ அல்லது எப்பொழுது என்பதையோ கூறவில்லை. ஆகையால் சிலர், தாங்கள் விரும்பும்போதெல்லாம் இதில் பங்கேற்கலாம் என்று முடிவு செய்துள்ளனர். அருகில் உள்ள ஒரு ஊரில் இருக்கும் சபையானது அதன் அறிவிப்புப் பலகையில் பின்வரும் செய்தியைக் கொண்டுள்ளது: "ஞாயிற்றுக்கிழமை - பரிசுத்த ஐக்கிய விருந்து [வேளை]; புதன்கிழமை - பரிசுத்த ஐக்கிய விருந்து [வேளை]; வியாழக்கிழமை மற்றும் விடுமுறை நாட்கள் - பரிசுத்த ஐக்கிய விருந்து [வேளை]."*

*"எப்பொழுது?" என்ற கேள்விக்கு, வேதாகமரீதியான பதிலானது தொடக்க கால சபையாரின் உதாரணத்தில் காணப்படுகிறது: கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் ''வாரத்தின் முதல் நாளிலே'' (அப். 20:7) பங்கேற்றனர், இது தொடக்க கால சபையாருக்கு பொது ஆராதனைக் கூடுகைக்கான விசேஷித்த நாளாக இருந்தது (1 கொரி. 16:1, 2). வாரத்தின் முதல்நாள் தவிர வேறு எந்த நாளிலாவது ஐக்கிய விருந்தில் பங்கேற்பதற் கான வேதாகம முன்னுதாரணம் எதுவும் இருப்பதில்லை. வாரத்தின் முதல்நாள் (இதை நாம் ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கின்றோம்)*

கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த நினைவுகூருதல்களைக் கொண்டுள்ளது: வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்து, அந்த நாளிலே தமது சீஷர்களுக்குத் தரிசனமானார் (மத். 28:1-6 மற்றும் மீண்டும் யோவா. 20:26ல்). வாரத்தின் முதல்நாளில் சபை நிலைநாட்டப்பட்டது (அப். 2:1-4; லேவி. 23:15, 16).

வேதாகம ரீதியான தகவலானது, தொடக்க கால சபையார், ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்ற னர் என்றும் சுட்டிக் காண்பிக்கிறது: அவர்கள் "வாரத்தின் முதல்நாள் தோறும்" கூடிவந்தனர் (1 கொரி. 16:2)[12] மற்றும், அவர்கள் "அப்பம் பிட்கும்படி" (அப். 20:7) அவ்வாறு கூடிவந்தனர். ஒவ்வொரு கர்த்தருடைய நாளின் ஆராதனையும், ஐக்கிய விருந்து ஊழியத்தை மையங்கொண்டிருந் தபடியால், [கர்த்தரின் பந்தியை] அவர்கள் வாரந்தரமாக ஆசரித்திருக்க வேண்டும். இந்த முடிவு, சபையின் தொடக்க நூற்றாண்டுகளின்போது வாழ்ந்த ஏவுதல் பெற்றிராத கிறிஸ்தவ எழுத்தாளர்களால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.[13] வரலாற்றாளரான ஜான் லாரன்ஸ் மோஷெய்ம் என்பவர், "கிறிஸ்தவ ஆராதனை என்பது கீர்த்தனைகள், ஜெபங்கள் மற்றும் வேதவசனங்களிலிருந்து வாசித்தல், மக்களுக்கு நிகழ்த்தப்பட்ட ஒரு உரை [பிரசங்கம்] ஆகியவற்றைக் கொண்டிருந்தது, மற்றும் இது கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தலுடன் முடிந்தது" என்று எழுதினார்.[14]

"இந்த நினைவுச் சின்னம் *யாருக்காக* நோக்கங்கொண்டிருந்தது?" என்பது தகுதிவாய்ந்த இன்னொரு கேள்வியாக உள்ளது. திராட்ச ரசமானது "பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற" அவருடைய "இரத்தத்தை" பிரதிநிதித்துவப்படுத்திற்று என்று கூறினார் (மத். 26:28). ஆகையால் இது, அந்த இரத்தத்தினால் கிரயம்கொள்ளப்பட்ட மன்னிப்பை அனுபவித்துள்ளவர்களுக்கு விசேஷித்த தனிச்சிறப்புடையதாக உள்ளது (அப். 2:38; 20:28; வெளி. 1:5, 6). மேலும், இராப்போஜனம் என்பது ராஜ்யத்தின் அமைப்பாக உள்ளதென்று இயேசு சுட்டிக்காண்பித்தார் (மத். 26:29). சபையே ராஜ்யம் என்பதாக இருப்பதால் (மத். 16:18, 19), இந்த நினைவுச் சின்னமானது கர்த்தருடைய சபையின் உறுப்பினர்களுக்கானதாக உள்ளது. விஷயம் இதுவாக இருக்கையில், உலகின் சில பாகங்களில், கிறிஸ்த வர்கள் மாத்திரமே ஐக்கிய விருந்தின் ஆராதனைக்கு அழைக்கப்படுகின்ற னர். பெரும்பாலான உள்ளூர்களின் சபைகள், 1 கொரிந்தியர் 11:28ஐ இந்த சூழ்நிலைக்கு நடைமுறைப்படுத்தலாம் என்று நம்புகின்றன: "எந்த மனு ஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து."[15] ஆகையால் அவர்கள், ஐக்கிய ஆராதனைக்கு வந்துள்ள ஒவ்வொருவரும் அதில் பங்கேற்பதா இல்லையா என்பதை அவர்கள் ஒவ்வொருவருமே முடிவு செய்ய அனுமதிக்கின்றனர்.

*பாடல்.*

***குறிப்புரைகள்:***

நாம் இப்போது எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமான கேள்விக்கு வருகின்றோம்: "கர்த்தருடைய இராப்போஜனத்தின் *நோக்கம்* என்ன?" மீண்டுமாகச் சிலர், தேவனுடைய ஏற்பாட்டின் "எளிமை" என்பதைக்

*கொண்டு திருப்தி அடைவதில்லை (2 கொரி. 11:3) மற்றும் இவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு மாயத்தன்மையான ஆசீர்வாதங்களைக் குறிப்பிடுகின்றனர். பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுதல் என்பதே இதில் பங்கேற்றலின் நோக்கம் என்றுகூடச் சிலர் போதிக்கின்றனர்.*

*முன்பே குறிப்பிடப்பட்டபடி, புதிய ஏற்பாட்டின் கூற்றின்படியாக கர்த்தருடைய இராப்போஜனம் என்பது ஒரு நினைவுகூரும் ஊழியமாக உள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் - படங்கள் மற்றும் பிற நினைவுப்பொருட்கள் என்ற - பத்திரமாய் வைக்கும் பொருட்களைக் கொண்டுள்ளோம், இவை, சிறப்பான மக்களையும் சிறப்பான நிகழ்ச்சி களையும் நாம் நினைவுகூருவதற்கு உதவுகின்றன. அதே போன்று, நாம் கர்த்தரையும் அவரது பலிகளையும் நினைவுகூருவதற்காக அவரது பந்திக்கு வருகின்றோம். இந்த ஐக்கிய விருந்தில் பங்கேற்கும்போது நாம், ஐந்து விதமான கண்ணோக்குடையவர்களாக இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது:*

- *நாம் சிலுவையைப் பின்னோக்கிப் பார்த்து இயேசு நமக்காகச் செய்தவற்றை நினைவுகூரவேண்டும்.*
- *இப்பொழுது பரலோகத்தில் உள்ள இயேசுவை, நாம் மேல்நோக்கிப் பார்க்க வேண்டும். கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதி னால் நாம், அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததையும் தமது பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்றதையும் உறுதிப்படுத்துகின்றோம். எனவே ஐக்கியவிருந்தின் ஆராதனையானது, கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் இருப்பதையும், நமக்காகப் பரிந்து பேசுவதையும் உறுதிப்படுத்துகிறது (ரோமர் 8:34).*
- *நாம் கிறிஸ்துவின் வருகைக்காக முன்னோக்க வேண்டும். "கர்த்தர் வருமளவும்" நாம் அவரது மரணத்தைத் தெரிவிக்கின்றோம் என்று பவுல் எழுதினார் (1 கொரி. 11:26). ஒரு கருத்தில், ஐக்கிய விருந்தின் ஆராதனையானது அவரது மறுவருகைக்கான வாக்குறுதியாக உள்ளது. அதில் பங்கேற்பதில் நாம், அவருடன் ஐக்கியவிருந்தில் அமரப்போகும் நிகழ்ச்சியான பரலோக ராஜ்யத்தில் நடைபெறவிருக்கும் ''மாபெரும் திருமண விருந்தின்'' முன் சுவையைக் கொண்டுள்ளோம் (வெளி. 19:7, 9).*
- *நாம் சக கிறிஸ்தவர்களை வெளியே நோக்க வேண்டும். நாம் ''ஆசீர்வாதத்தின் பாத்திரத்திலும்'' மற்றும் ''அப்பத்திலும்'' பங்கேற்கும்போது (1 கொரி. 10:16) கிறிஸ்துவுடன் மட்டுமின்றி, ஒருவர் மற்றவருடனும் ஐக்கியவிருந்தைப் பகிர்ந்து கொள்ளு கின்றோம். ''அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமா யிருக்கிறோம்" (1 கொரி. 10:17).*
- *நாம் ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்து அறிகையில், நாம் உள்ளாகக் கண்ணோக்க வேண்டும். "எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்திலே பானம்பண்ணக்கடவன்" (1 கொரி. 11:28).*

*அற்புதமான இந்த நினைவு நிகழ்ச்சிக்கு நாம் எவ்வாறு ஆயத்தமாக*

வேண்டும்? பொதுவான தயாரிப்பும் அதே வேளையில் விசேஷித்த தயாரிப்பும் அவசியமாக உள்ளன. பொதுவாக நாம், சர்வ வல்லவருக்கான நமது ஆராதனை யாவற்றிற்காகவும் ஆயத்தம் செய்ய வேண்டியது போலவே கர்த்தருடைய இராப்போஜனத்திற்கும் ஆயத்தம் செய்ய வேண்டும். கொரிந்தியர்களிடத்தில் பவுல், ''நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே''[16] என்று கூறினார் (1 கொரி. 10:21). சனிக்கிழமையன்று அவர்கள் ஒரு விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்ட மாம்சத்தைப் புசித்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமையன்று அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்கும்படிக்கு வருதல் என்பது பொருத்தமற்றதாக இருந்திருக்கும். அதுபோலவே நாம், கிறிஸ்துவின் கொள்கைகளுக்குச் சீர்பொருத்தமான வாழ்வை நடத்துவதற்கு மிகச்சிறப்பான அளவுக்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

பங்கேற்றலுக்கும் நாம் ஒரு விசேஷித்த ஆயத்தத்தை மேற்கொள்ள வேண்டும். நான், நமது இருதயங்களை ஆயத்தம் செய்து, நம்மையே சிந்தையின் சரியான அமைவுக்குள் இடுதலைக் குறிப்பிடுகின்றேன். 1 கொரிந்தியர் 11ல் பவுல் என்ன எழுதினார் என்பதை நினைவில் வையுங்கள்:

> இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணு கிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான் (வ. 27-29).

KJVயில், ''அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்ற உணர்வுள்ள வனாயிருப்பான்'' என்றுள்ளது. நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, இராப்போஜனத்தில் பங்கேற்பதற்கு ''பாத்திரராயிருத்தல்'' என்பதன் அவசியம் பற்றிச் சிலவேளைகளில் குறிப்பு ஏற்படுத்தப்பட்டது - ஆனால், KJVயில் "worthy" என்ற வார்த்தையல்ல, "worthily" என்ற வார்த்தையே உள்ளது. இங்கு நமது பண்பைப் பற்றிய குறிப்பு இருப்பதில்லை, ஆனால் அப்பத்திலும் திராட்ச ரசத்திலும் நாம் எவ்வாறு பங்கேற்கின்றோம் என்பதைப் பற்றியே குறிப்பு இருக்கிறது. NASBயில் "Unworthy *manner*" என்றுள்ளது. நம்மில் எவரும் ஐக்கிய விருந்தில் பங்கேற்கப் பாத்திரமானவர் களாய் இருப்பதில்லை, ஆனால் கர்த்தருடைய இராப்போஜனம் எதைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதில் கவனத்தைக் குவித்து பாத்திரமான ஒரு வகையில் நாம் யாவரும் அதில் பங்கேற்க முடியும்.

*ஐக்கியவிருந்து ஆராதனையின்போது இயேசுவின் பலியின்மீது தங்கள் சிந்தைகளைக் குவிக்கும் வழிமுறைகளில், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த வழிகளை மேம்படுத்தியுள்ளனர். நாம் மேற்கொள்ளக் கூடிய ஐந்து வழி கண்ணோக்குப் பற்றி நாம் ஏற்கனவே கருத்துத் தெரிவித் தோம். இங்கு வேறு சில கருத்துகளும் இருக்கின்றன. சிலர் தங்கள் சிந்தைகளில் சிலுவையைச் சித்தரித்துக் கொண்டு கிறிஸ்துவின் துன்பத்தை மனரீதியாக மீண்டும் செயல்படச் செய்கின்றனர். சிலர் சிலுவையின் தனிச்சிறப்பின்மீது - அது தங்களுக்கும் மற்றும் தாங்கள் நேசிக்கின்றவர் களுக்கும் என்னத்தை அர்த்தப்படுத்துகிறது[17] என்பதன்மீது கவனம்குவிக் கின்றனர். சிலர் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் பற்றிய வசனப்பகுதிகளை வேதாகமத்தில் இருந்து வாசிக்கின்றனர். சிலர், கர்த்தர் நமக்காக என்ன செய்தார் என்பதை வெளிப்படுத்துகின்ற மாபெரும் கீர்த்தனைகளின் வார்த்தைகளை வாசிக்கின்றனர். எந்த இரு மக்களும் ஒன்றுபோல் இருப்பதில்லை; ஒவ்வொருவருமே சற்றே மாறுபட்ட அணுகுமுறையைக் கொண்டிருப்பார்கள்.[18] ஐக்கியவிருந்தின்போது நமது சிந்தைகளை ஒருமுகப்படுத்த நாம் எந்த வழிமுறையைப் பயன்படுத்தி னாலும், நாம் அந்த வேளையை, கர்த்தருடைய பலியின்மீது நமது சிந்தைகளை மேம்படுத்தியவர்களாய்ச் செலவிட வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.*

***கர்த்தருடைய இராப்போஜனம்.***

***விருப்பத் தேர்வு: காணிக்கை பற்றி சுருக்கமான குறிப்புகள்.***

***காணிக்கை.***

***முடிவுக் குறிப்புரைகள் மற்றும் அழைப்பு:***

*ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் கர்த்தருடைய இராப்போஜனத் தில் பங்கேற்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. ஐக்கிய விருந்து ஆராதனையைத் தவறவிடும்படி நாம் தேர்ந்துகொள்ளுகையில் ...*

- *நாம் கிறிஸ்துவின் கட்டளையொன்றைப் புறக்கணிக்கின்றோம். இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (யோவா. 14:15; யோவா. 15:14ஐக் காணவும்).*
- *நாம் கர்த்தரை நினைவுகூருவதற்கான ஒரு வாய்ப்பைத் தவற விடுகின்றோம். அவர், "... என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார் (1 கொரி. 11:24).*
- *நாம் அவரது மரணத்தை அறிவிக்கும் ஒரு வாய்ப்பைப் புறக்கணிக்கின்றோம். நாம் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம், நாம் கிறிஸ்துவின் மரணத்தைத் தெரிவிக்கின்றோம் என்று அவரே கூறினார் (1 கொரி. 11:26).*
- *நாம் இயேசுவின் இரத்தம் நமக்குச் சிறிதளவே அர்த்தப்படுகிறது என்று குறிப்பிடுகின்றோம். நம்மையே நாம், "தன்னைப் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணு"கின் றவர்களின் (எபி. 10:29) குழுவிற்குள் வைக்கின்றோம்.*

- நாம் மற்றவர்களுக்கு, விசேஷமாக விசுவாசத்தில் புதியவர்களாய் இருப்பவர்களுக்கு மோசமான உதாரணங்களாக இருக்கின்றோம். ஒரு விசுவாசி இடறுவதற்கு நாம் காரணமாயிருந்தால், நமது கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி கடலின் ஆழத்தில் மூழ்கடித்தல் நமக்கு நலமாயிருக்கும் என்று கிறிஸ்து கூறினார் (மத். 18:6).
- நாம் மற்றவர்களிடத்தில், நமது தேவபக்தியானது உறுதிப்பாடு உள்ளதற்குப் பதிலாக வசதிக்கேற்றதாக உள்ளது என்று அறிவிக்கின்றோம். நாம் நமது முன்னுரிமைகள் தவறானவைகளாக உள்ளன, நாம் முதலாவது விஷயங்களை முதலாவது இடத்தில் வைக்கக் கற்றுக்கொள்ளவில்லை என்று செயல்விளக்கப் படுத்துகின்றோம் (மத். 6:33).

நாம் பரிசுத்தவான்களோடு ஆராதிப்பதைப் புறக்கணித்து, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்க தவறுகின்றபோது, நாம் நமது சகோதர சகோதரிகளுடனும் - மற்றும் தேவனுடனும் - இந்த விஷயத்தை சரியாக்கிக் கொள்வது அவசியமாயிருக்கிறது (எபி. 10:25, 26; யாக். 5:16).

நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், "கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதில் நான் ஒழுங்குமுறையின்றி இருந்துள்ளேனா?" என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அப்படியிருந்திருந்தால், தவறை அறிக்கையிட்டு, மற்ற கிறிஸ்தவர்கள் உங்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள், மற்றும் மன்னிக்கும்படி தேவனிடம் விண்ணப்பியுங்கள் (அப். 8:22; 1 யோவா. 1:9). நீங்கள் கிறிஸ்தவரல்லாதவராயிருந்தால், கிறிஸ்து உங்களுக்குத் தரக்கூடிய யாவையும் உங்களுக்குத் தேவை, இதில் அவருடன் வாராந்தர ஐக்கியத்தில் இருந்து வருகிற பலமும் உள்ளடங்குகிறது. நீங்கள் அவரை விசுவாசித்து உங்கள் வாழ்வை மாற்றிக்கொள்ள மனவிருப்பத்துடன் அவருக்குள் ஞானஸ்நானம் (முழுக்காட்டப்படுதல்) பெறும்படி உங்களை வற்புறுத்த என்னை அனுமதியுங்கள் (கலா. 3:26, 27; மாற். 16:15, 16; அப். 2:38). நீங்கள் எவ்வழியிலாவது கர்த்தருக்குப் பதில்செயல் செய்ய வேண்டும் என்று நினைத்தால், இப்பொழுதே அதைச் செய்வதற்கான வேளையாக உள்ளது.

**அழைப்புப்பாடல்.**
**முடிவுப்பாடல்.**
**முடிவு ஜெபம்.**

## குறிப்புகள்

பாடல்கள், ஜெபங்கள், வேத வசன வாசிப்புகள் மற்றும் குறிப்புரைகள் யாவும் ஒரு ஆலோசனை என்ற வகையில் மாத்திரமே உள்ளன; நீங்கள் ஆராதிக்கும் இடத்தில் உள்ள ஊழியத்திற்குத் தக்காற்போன்று இதை நீங்கள் தழுவியமைத்துக் கொள்ளலாம். ஆராதனையின்போது பாடும் பாடல்கள் சிலுவையை அல்லது கர்த்தருடைய இராப்போஜனத்தை மையங்கொண்டிருக்க வேண்டும். ஐக்கியவிருந்தை அளிப்பதற்கு முன்பு

ஜெபங்களில் வழிநடத்துகின்ற சகோதரர்கள், அப்பம் மற்றும் திராட்ச ரசம் பற்றிய தங்கள் சொந்தக் குறிப்புரைகளைக் கூடுதலாகத் தர விரும்பலாம்.

---

குறிப்புகள்

[1]Adapted from “I WasThere,” weekly bulletin, 10th and Francis church of Christ, Oklahoma City, c. 1956-60. [2]One source used for this sermon was George W. DeHoff, *Gospel Sermons* (Murfreesboro, Tenn.: Dehoff Publications, 1953), 168-82. [3]எனது உரையைக் கேட்பவர்களுக்கு நன்கு பழக்கமான பல நினைவுச் சின்னங் களை நான் பட்டியலிட்டுள்ளேன். நீங்கள் வாழும் இடத்திற்குத் தக்கவகையில் இதை நீங்கள் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [4]அமெரிக்காவில் நாங்கள் தட்டையான, சதுரமான உப்பு பிஸ்கட்டுகளை வாங்கமுடியும், அவற்றில் யீஸ்டு இருக்கும். இதையும் இதற்கு அடுத்த (‘‘ஃபிரென்ச்சு அப்பங்கள்’’ என்ற) பொருளையும் நீங்கள் வாழும் இடத்திற்குத் தக்காற்போல் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [5]‘‘ஃபிரென்ச்சு அப்பங்கள்’’ என்பது உலகில் நான் வாழும் பகுதியில், நீண்ட குறுகலான அப்பங்களாக உள்ளன. [6]புளித்தமா என்பது மாவைப் பொங்கியெழும்பச் செய்கிற, அதிலும் விசேஷமாக நொதிக்கச் செய்கிற யீஸ்டு அல்லது டார்ட்டர் கிரீம் போன்றதாக உள்ளது. [7]நீங்கள் பயன்படுத்துகின்ற அந்தக் குறிப்பான புளிப்பில்லாத அப்பம் பற்றி ஒரு குறிப்பைக் கூடுதலாகத் தர நீங்கள் விரும்பலாம். சில கிறிஸ்தவர்கள் தாங்கள் சொந்தமாகவே இதைச் செய்கின்றனர். அமெரிக்காவில் பல சபைகள், பஸ்கா உணவின்போது யூதர்கள் பயன்படுத்துவதற்காகப் பையில் அடைத்து விற்கப்படும் புளிப்பில்லாத வேஃபர்களாகிய மாட்சோ என்ற வகையான அப்பத்தைப் பயன்படுத்துகின்றன. [8]திராட்சப்பழமோ அல்லது திராட்ச பழ இரசமோ வாங்கப்பட முடியாத இடத்தில் வசிப்பவர்கள் வழக்கமாக, உலர்ந்த திராட்சப்பழங்களை (கிஸ்மிஸ் பழங்களை) வாங்கி அவற்றைத் தண்ணீரில் ஊறவைத்து அதிலிருந்து திரும்பவும் திராட்ச ரசத்தை உண்டாக்குகின்றனர். [9]இது, சிவப்புத் திராட்ச ரசம் மாத்திரமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவதாக இருப்பதில்லை. எந்த நிறமுள்ள திராட்ச ரசமும் போதுமானதாயிருக்கும், ஆனால் சிவப்பு நிறமுள்ளதைப் பயன்படுத்தவே பலர் விரும்பித் தேர்ந்து கொள்ளுகின்றனர். அமெரிக்காவில் வெல்ச்சின் திராட்ச ரசம் என்பது கொன்கார்டு திராட்சப்பழங்களில் இருந்து செய்யப்படுகிறது, இது மிகவும் புகழ்பெற்றதாக உள்ளது. [10]இந்தப் பேச்சுருவகத்திற்குப் புதிய ஏற்பாட்டில் பல உதாரணங்களைக் காணமுடியும் (லூக். 8:11; 1 கொரி. 10:4 ஆகியவற்றைக் காணவும்).

[11]KJVயில் “ஐக்கியம்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை யானது “பொதுவாய்க் கொண்டிருத்தல்” என்று அர்த்தப்படுகிறது. ஆகையால், NASB வேதாகமமானது, 1 கொரிந்தியர் 10:16ல் இந்த வார்த்தையை, “a sharing” என்று மொழிபெயர்த்துள்ளது. [12]KJVயில் “வாரத்தின் முதல் நாளில்” என்று மாத்திரம் உள்ளது; ஆனால் ஒவ்வொரு வாரமும் ஒரு முதல் நாளைக் கொண்டுள்ளதால், இந்த அறிவுறுத்தலானது ஒவ்வொரு முதல் நாளுக்குமானதாக உள்ளது. இதற்கேற்ற பழைய ஏற்பாட்டு இணைவு ஒன்றிற்கு, யாத்திராகமம் 20:8ஐக் காணவும். “ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக” என்பது ஒவ்வொரு வாரத்தின் ஏழாம் நாளும் பரிசுத்தமானதாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்திற்று. [13]இந்த எழுத்தாளர்களில் ஜஸ்டின் மார்ட்டியரும் இருந்தார் (*Apology* 1.67). [14]John Laurence Mosheim, *An Ecclesiastical History, Ancient and Modern,* trans. Archibald Maclaine, vol. 1 (New York: Harper & Brothers, 1871), 303. [15]சந்தர்ப்பப் பொருளில்

இவ்வசனப்பகுதி "யார்" என்பதைவிட "எவ்வாறு" என்பதையே குறிப்பிடுகிறது, ஆனால் விரிவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். [16]"பேய்களுடைய பாத்திரம்" என்பதும் "பேய்களுடைய போஜனபந்தி" என்பதும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைக் குறிப்பிட்டது. [17]கர்த்தருடைய இராப்போஜனமானது எனக்கு விஷயங்களைக் கண்ணோக்கில் இடுகிறது. நான் சிறிய பிரச்சனைகளைப் பற்றி மன இறுக்கம் அடைகின்றேன், ஆனால் ஐக்கிய விருந்தானது உண்மையில் முக்கியமானது என்ன என்பதை எனக்கு நினைவூட்டுகிறது. [18]பந்தி வழங்கப்படுகிறபோது நாம் சிலுவையைப் பற்றிய பாடல்களைப் பாடலாம் அல்லது ஏற்புடைய வசனங்களை உரக்க வாசிக்கலாம் என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இப்படிப்பட்ட செயல்கள் சிலருக்கு வேத வசனரீதியில் பங்கேற்பதற்குக் கவனம் செலுத்த உதவக்கூடும், ஆனால் இது மற்றவர்களின் கவனத்தைச் சிதறச் செய்யும். கர்த்தருடைய பந்தியில் பங்கேற்றல் என்பது தனிப்பட்ட விஷயமாக உள்ளது - இது கர்த்தருடன் தனிப்பட்ட ஐக்கியம் கொள்ளுதலாக உள்ளது - இது எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதற்கு எவரொருவரும் பிறருக்குக் கட்டளையிட முடியாது. ஐக்கியவிருந்து அமைதியில் பரிமாறப்படும்போதுதான் சிறப்பாக அமைகிறது. அதன்மூலமாக ஒவ்வொருவரும் அவரது அல்லது அவளது சொந்த வழிமுறையில் கர்த்தருடன் ஐக்கியம் கொள்ள முடியும்.

# யோவான் 14–17ஐப் பற்றிய கூடுதல் விளக்கவுரைகள்

***14:1:*** இந்த வசனத்தில், ''விசுவாசமாயிருங்கள்'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது சுட்டிக்காட்டு வினை யாகவோ அல்லது கட்டளை வினையாகவோ இருக்கக்கூடும். இவ்வசனப் பகுதியானது, "நீங்கள் தேவன்மீது விசுவாசம் கொள்ளுங்கள்; நீங்கள் என்மீதும் விசுவாசம் கொள்ளுங்கள்" (சுட்டிக்காட்டு வினை) என்றோ அல்லது "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாச மாயிருங்கள்" (கட்டளை வினை) என்றோ மொழிபெயர்க்கப்பட முடியும்.

***14:2:*** "Dwelling places" (NASB), "mansions" (KJV) *மற்றும்* "rooms" (NIV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, வாழ்வதற்கான ஒரு இடத்தைக் குறிக்கிறது. இது, 14:23ல் ''வாசம் பண்ணுவோம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை பரலோகத்தின் நிலைப்புத் தன்மையை வலியுறுத்துகிறது. (பரலோகம் என்பது ஒரு கூடாரமல்ல, ஆனால் ஒரு வசிப்பிடமாக உள்ளது.) "அநேக வாசஸ்தலங்கள்" உள்ளன என்ற உண்மையானது கர்த்தருடைய அளிப்பின் போதுமான தன்மையைச் சுட்டிக்காண்பிக்கிறது.

***14:8:*** பிலிப்பு, யாத்திராகமம் 33:20ல் தேவனுடைய வார்த்தைகளைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம்: "நீ என் முகத்தைக் காண மாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது!"

***14:9:*** இயேசு, "தேவன்மீது ஒரு முகத்தை வைத்தார்" என்று கூறப் பட்டுள்ளது. நாம் கிறிஸ்துவைப் பற்றி அதிகமாய்க் கற்றுக் கொள்ளுகின்ற போது தேவனுடைய பண்பைப் பற்றி அதிகமாய்க் கற்றுக் கொள்ளு கின்றோம்.

***14:22:*** "(ஸ்காரியோத்தல்லாத) யூதா" என்பவர் "யாக்கோபின் மகனான யூதா" என்றும் "ததேயு" என்றும் அறியப்பட்டார். இந்த யூதா, ராஜ்யத்தைப் பற்றிய தமது தவறான கருத்தான, இயல்பான இப்பூமியில் அரசியல் ரீதியான ராஜ்யத்தை ஆள்பவராக மேசியா இருப்பார் என்ற கருத்தினால் குழப்பப்பட்டிருந்தார். விஷயம் அதுவாக இருந்தால், இயேசு உலகத்துக்குத் தம்மை வெளிப்படுத்த விரும்பாதது ஏன்?

***14:26; 16:13:*** இவ்விரு வசனங்களும் முழு புதிய ஏற்பாட்டின் ஏவுதலைத் தொடுகின்றன: ஆவியானவர், இயேசு அப்போஸ்தலர்களுக்குப் போதித்திருந்தவற்றை (சுவிசேஷ விவரங்களை) அவர்களின் சிந்தைகளுக் குக் கொண்டுவருவார், ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு எல்லாவற்றை யும் (நடபடிகள் மற்றும் நிருபங்கள்) போதிப்பார், மற்றும் வரவிருந்த விஷயங்களை (வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகம்) அவர் வெளிப் படுத்துவார்.

***14:28:*** கிறிஸ்து, "... என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்று கூறியபோது, அவர் தமது தெய்வீகத்தையோ அல்லது பிதாவுடனான

தம் சமானநிலையையோ மறுக்கவில்லை (யோவா. 10:30ஐக் காணவும்). மாறாக, அவர் தமது பூமிக்குரிய நிலை பற்றிப் பேசினார்; அவர் மனித வடிவெடுப்பதற்காக குறிப்பிட்ட சில தெய்வீக முன்னுரிமைகளை விட்டுக் கொடுத்திருந்தார் (பிலி. 2:6-8). அவர் பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்ற போது, அவர் இவ்வுலகத்தின் வரையறைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு தமது முந்திய மகிமையை மீண்டும் பெற்றுக் கொண்டார் (யோவா. 17:5; பிலி. 2:9-11).

***14:30; 16:11:*** "உலகத்தின் அதிபதி" என்பவன் சாத்தானாக இருக்கின்றான். சாத்தானுடன் கிறிஸ்துவின் தீர்மானமான யுத்தம் சிலுவையில் நடந்தது (யோவா. 12:31, 32; எபி. 2:14ஐக் காணவும்). சாத்தான், நாம் பாவம் செய்ததாகக் குற்றம் சாட்டக்கூடும் என்பதால் அவன் நம்மை யுத்தத்தில் வெல்லக்கூடும், ஆனால் இயேசு பாவம் எதுவும் கொண்டிருந்ததில்லை (எபி. 4:15). கிறிஸ்து உண்மை நிறைவுடன், "அவனுக்கு [சாத்தானுக்கு] என்னிடத்தில் ஒன்றுமில்லை"[1] என்று கூறமுடிந்தது. உலகத்தின் அதிபதியானவன், "கிறிஸ்துவின்மீது அதிகாரம் செலுத்துவதற்குத் தன்னை அனுமதிக்கும் உரிமையையோ அல்லது காரணத்தையோ காண்பதில்லை."[2]

***15:1:*** இயேசு "மெய்யான திராட்சச் செடியாக" இருந்தார், "மற்ற திராட்சச் செடிகள் யாவும் அதன் பிரதியாயிருந்த மூலமான திராட்சச் செடியாக இருந்தார்."[3] பழைய ஏற்பாட்டில் திராட்சச் செடி என்பது இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு அடையாளமாக இருந்தது (சங். 80:8; ஏசா. 5:1-7; ஏரே. 2:20, 21; எசே. 15:1-8; 19:10-14; ஓசியா 10:1).

***15:2:*** தேவன் "சுத்தம்பண்ணும்" செயல்முறை என்பது அவர் தமது பிள்ளைகளை அன்புடன் ஒழுங்குக்குட்படுத்துவதைக் கூறுகின்ற இன்னொரு வழிமுறையாக உள்ளது (எபி. 12:4-13ஐக் காணவும்).

***15:15:*** சட்டப்படி, அடிமைகள் விளக்கம் எதுவுமின்றி வேலைகளில் நியமிக்கப்பட்டனர். இதற்கு நேர்மாறாக, நண்பர்கள் சிலவற்றைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படும்போது, ஏன் அதைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குப் பொதுவாகக் கூறப்படுகிறது. தேவனுடைய வெளிப்படுத்துதலை இயேசு தமது அப்போஸ்தலர்களிடத்தில் பகிர்ந்து கொண்டதால், அவர்களை அவர் தமது நண்பர்கள் என்று அழைத்தார்.

***15:20அ:*** யோவான் 13:16ஐக் குறிக்கிறது.

***15:22, 24:*** இயேசு, தாம் வராதிருந்தால் யூதர்களிடத்தில் பாவமிராது என்று கூறவில்லை. நாம் யாவரும் பாவம் செய்கின்றோம் (ரோமர் 3:23), மற்றும் அறியாத்தன்மை என்பது பாவத்திற்கான சாக்குப்போக்காயிருப்பதில்லை (அப். 17:30). இயேசு அவர்கள் மத்தியில் பிரசங்கித்தல் மற்றும் அற்புதங்கள் நிகழ்த்துதல் ஆகியவற்றைச் செய்யாதிருந்தால், அவர்கள் அவரைப் புறக்கணித்தல் என்ற குறிப்பிட்ட பாவம் இல்லாதவர்களாய் இருந்திருப்பார்கள் என்று கிறிஸ்து கூறினார். அவர் அவற்றைச் செய்திருந்ததால், அவர்கள் சாக்குப்போக்குச் சொல்ல இடமற்றிருந்தனர்.

***15:25:*** இவ்விடத்தில் சங்கீதம் 35:19; 69:4 ஆகியவற்றிலிருந்து மேற்கோள் காண்பிக்கப்படுகிறது.

***15:26, 27:*** அப்போஸ்தலர்கள் இரட்டை சாட்சிகளைக் கொடுப்பார்

கள்: அவர்கள் தனிப்பட்ட வகையில் தாங்கள் உற்றுநோக்கியவற்றைப் பற்றிச் சாட்சிகளாயிருப்பார்கள் (வ. 27; அப். 1:22ஐக் காணவும்), மற்றும் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் சாட்சியைப் பகருவார்கள் (வ. 26).

***16:5, 6:*** பேதுரு, ''ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்?'' என்று கேட்டிருந்தார் (யோவான் 13:36), மற்றும் தோமா அவரது (இயேசுவின்) அடைவிடம் பற்றி வியப்புற்றிருந்தார் (யோவான் 14:5). ஆகையால் இயேசு, “எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை” என்று கூறியபோது, அவர் ஒரு கேள்வியைக் கேட்டல் என்பதை விட அதிகமானவற்றைப் பற்றிப் பேசினார். ஒருவேளை அவர், வார்த்தைகளை அவர்கள் கூறியிருந்தபோது, “எங்கே” என்பதில் அல்ல, ஆனால் அவர் போகின்றார் என்ற உண்மையில் மாத்திரமே அவர்களின் ஆர்வம் இருந்தது. அவர் புறப்பட்டுச் செல்லுகின்றார் என்ற குறிப்பானது அவர்களின் இருதயத்தை வருத்தத்தினால் நிறைத்தது.

***16:20:*** இயேசுவின் மரணத்தில் உலகம் களிகூர்ந்தது (லூக். 22:5ஐக் காணவும்), அதே வேளையில், அவர்மீது அன்புகூர்ந்தவர்கள் அழுதனர் (யோவா. 20:11).

***16:21, 22:*** ஒரு குழந்தை பிறத்தல் என்பது வேதனையை உண்டாக்கு கிறது, ஆனால் பிற்பாடு அந்தப் பிறப்பு மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறது. அதுபோலவே, கிறிஸ்துவின் மரணம், அவரைப் பின்பற்றியவர்களுக்கு முதலில் பெரும் வருத்தத்தைக் கொண்டு வந்தது, ஆனால் இப்போது அவரது மரணம் உலகத்தைச் சந்தோஷத்தினால் நிறைத்துள்ளது.

***16:23:*** அந்த வேளையில், அப்போஸ்தலர்கள் கேள்விகளினால் நிறைந்திருந்தனர் (13:36; 14:5, 8); ஆனால் இயேசு தேவனிடத்திற்கு ஏறிச் சென்ற பின்பு, அவர்கள் இனியும் அவரிடம் கேள்விகள் கேட்கத் தேவை யிராது. அவர்கள் அறிய வேண்டிய ஒவ்வொன்றையும் தேவன் (பரிசுத்த ஆவியானவர் மூலமாக) அவர்களுக்குக் கூறுவார்.

***16:26, 27:*** இயேசு அவர்களுக்காகப் பிதாவினிடத்தில் வேண்டு கோள்களை ஏற்படுத்துவதில்லை என்று அவர் கூறவில்லை. பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி, அவர் நமக்காகப் பரிந்துபேசுகின்றவராய் இருக்கின் றார். மாறாக, அவர்களுக்கு உதவும்படி பிதாவை அவர் இணங்கச் செய்தல் அவசியமற்றதாயிருக்கும் என்று அவர் வலியுறுத்தினார் - ஏனென்றால், அவர்கள்மீது பிதா அன்புகூர்ந்துள்ளாரே. அன்பில்லாத தேவன் என்ற தவறான கருத்தானது, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட (மரியாள் மற்றும் குறிப்பிட்ட “புனிதர்கள்” உள்ளிட்ட) பல்வேறு “பரிந்துரையாளர்களை” எண்ணிக்கையில் பெருகச் செய்தலை விளைவித்துள்ளது, தேவனுடைய பிள்ளைகளுக்கு அவர் உதவுவதற்கு, இவர்கள் அவரை இணங்கச் செய்ய வேண்டும் என்று மனிதர்கள் போதித்துள்ளனர். என்ன ஒரு திகைக்கச் செய்யும் போதனை!

***16:32:*** தனிமையாயிருத்தல் என்பது பயங்கரமானதாக உள்ளது; ஆனால் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் உண்மையில் தனிமையாயிருப்ப தில்லை, ஏனெனில் அவரது பிதா எப்போதும் அவருடன் இருக்கின்றார் (2 தீமோ. 4:16-18உடன் ஒப்பிடவும்).

***17:2:*** *வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் தேவன், இயேசுவுக்குக் கொடுத்தார் (மத். 28:18).*

***17:3:*** *நித்திய ஜீவன் என்பது, தேவனோடும் இயேசுவோடும் நித்தியம் முழுவதிலும் இருத்தல் என்று விவரிக்கப்படலாம், அதே வேளையில் நித்திய மரணம் என்பது தேவனிடமிருந்தும் இயேசுவிடம் இருந்தும் நித்தியம் முழுவதற்கும் பிரிக்கப்பட்டிருத்தல் என்று விவரிக்கப்படலாம் (2 தெச. 1:9ஐக் காணவும்). ஒரு கருத்தில், நாம் தேவனையும் இயேசுவையும் "அறிய" (அவர்களுடன் ஒரு நெருங்கிய உறவைக் கொண்டிருக்க) முடிவதால், நாம் இப்போதே நித்திய ஜீவனைக் கொண்டிருக்க முடியும். (இருப்பினும், நாம் இந்த பூமியில் வாழ்கின்ற காலத்தில் அந்த உறவைத் துண்டித்து விட, அதனால் அந்த ஆசீர்வாதத்தை இழந்துபோகச் சாத்தியக்கூறுள்ளது [யோவா. 15:6ஐக் காணவும்].)*

***17:11, 14, 16:*** *அப்போஸ்தலர்களைப் போலவே, நாமும் "உலகத்தில்" இருக்கின்றோம் (வ. 11) ஆனால் நாம் "உலகத்தாராக" இருப்பதில்லை (வ. 14, 16).*

***17:12:*** *"கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை'' என்ற உறுதிப்பாடு, அவர் மரித்த போது, அப்போஸ்தலர்களில் பெரும்பான்மையானோர் மரிக்க மாட்டார்கள் என்ற முன்னுரைத்தலாக இருந்தது (யோவா. 18:8, 9ஐக் காணவும்). யூதாஸ்தான் "கேட்டின் மகன்" என்பவனாக இருந்தான். "கேடு" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது, "அழிவு" என்ற கருத்தைக் கொண்டுள்ள கிரேக்கக் கூட்டுவார்த்தையாக உள்ளது. யூதாஸ், கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த தனது பாவத்திலிருந்து மனந்திரும்பத் தவறியதால் நித்திய அழிவிற்கு (அதாவது நரகத்திற்கு) வீழ்ச்சியுற்றான்.*

***17:17அ, 19:*** *''பரிசுத்தமாக்குதல்'' என்றால் ''பிரித்து வைத்தல்'' என்றாகிறது. நாம் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்கள் ஆகும்போது, அந்த வசனத்தின்மூலமாகத் தேவனுடைய ஊழியத்திற்கென்று "பிரித்து வைக்கப்" படுகின்றோம் (1 கொரி. 6:11ஐக் காணவும்).*

***17:18:*** *தேவன் தமது குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பியிருந்தார் (17:3, 8, 21, 23, 25ஐக் காணவும்), கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களை அனுப்பினார். ''அப்போஸ்தலர்'' என்ற வார்த்தை ''அனுப்பப்பட்டவர்'' என்று அர்த்தப்படுகிறது.*

---

குறிப்புகள்

[1]நாங்கள் வாழும் இடத்தில், "அவருக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்று நாங்கள் கூறுவதுண்டு. NIV வேதாகமம் "He has no hold on me" என்று கூறுகிறது. [2]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 666. [3]Author unknown, quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 355.

# தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்து

## *(யோவான் 5:30-47)*

*"யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில் நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது. என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சிகொடுத்திருக்கிறார்; ... வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக் கிறவைகளும் அவைகளே. ... உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை ... . பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான். நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள், அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள்?" (யோவா. 5:36-47).*

## அறிமுகம்

*நீங்கள் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, உங்கள் வாழ்வின் பின்வரும் நிகழ்ச்சிகள் முன்னுரைக்கப்பட்டிருந்தன என்று உங்களிடம் நான் கூறினால் எப்படியிருக்கும்?: நீங்கள் பிறக்கவிருந்த காலம், நீங்கள் பிறக்கவிருந்த இடம், உங்கள் குடும்பப் பின்னணி, உங்கள் பண்பு, உங்கள் வாழ்வில் பல்வேறு நிகழ்ச்சிகள், நீங்கள் மரிக்கவிருக்கும் விதம் பற்றிய ஒரு விரிவான சித்தரிப்பு. சாத்தியமற்றதாகக் காணப்படுகிறதா? ஆம் மனிதனுக்கு இது சாத்தியமற்றதுதான், ஆனால் தேவனுக்கு இது சாத்திய மானதே. இயேசுவின் வாழ்வு பற்றிய வரலாறு அவர் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே எழுதப்பட்டிருந்தது!*

## பழைய ஏற்பாட்டுத்
## தீர்க்கதரிசனங்களின் வலிமை

*இயேசு தமது தெய்வீகத்துவத்திற்கான நான்கு சாட்சியங்களைக் குறிப்பிட்டார் (யோவா. 5:30-47). அவற்றில் ஒன்றாக உள்ளது வேதவாக்கியங்கள்[1] ஆகும். பழைய ஏற்பாடு, மேசியாவைப் பற்றித் தொடர்ந்து குறிப்புகளை ஏற்படுத்திற்று; இயேசு, தாமே அந்த மேசியா என்று உரிமைகோரினார் (லூக். 24:25-27). அந்த உரிமைகோருதல் எவ்வளவு துணிச்சலானது என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். யூதர்கள் ஒன்றுமறியா தவர்களாய் இருந்ததில்லை; அவர்கள் வேதவாக்கியங்களை அறிந்திருந்*

தனர். அவர்கள் மேசியாவை எதிர்பார்த்துக் கண்ணோக்கியிருந்தனர். எந்த ஒரு நடிப்பாளரின் வாழ்வையும் அவர்கள் பரிசோதிக்கக் கூடியவர்களாக இருந்தனர். இயேசு, மேசியாவுக்கு முன் அமைவிக்கப்பட்டிருந்த எந்த ஒரு நிபந்தனையையும், தாம் நிறைவேற்றுவதாக உரிமைகோரினார், மற்றும் அவரது உரிமைகோருதலை அவர்களால் மறுத்துரைக்க முடியாதிருந்தது. இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியம் பற்றிய தீர்க்கதரிசனங்களில் ஒன்றே ஒன்று மாத்திரமாவது நிறைவேற்றப்படாதிருந்தது என்று அவர்கள் கண்டறிந்து இருந்தால், அது அவரது உரிமைகோருதல்களை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கும்.

பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்பு, அப்போஸ்தலர்கள் தங்கள் பிரசங்கித்தலைத் தொடங்குகையில், அவர்கள் அதே உரிமைகோருதலை ஏற்படுத்தினர்: இயேசுவே மேசியாவாக இருந்தார். அப்போதும்கூட கற்றறிந்த யூதர்கள், அந்த உரிமைகோருதலை மறுக்க முடியாதிருந்தனர். இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார் - மற்றும் இருக்கின்றார். இயேசு நிறைவேற்றிய எல்லாத் தீர்க்கதரிசனங்களையும் வெறும் மனிதர் எவரும் நிறைவேற்றியிருக்க முடியாது; எந்த ஒரு வஞ்சனையாளரும் யூதர்களை முட்டாளாக்கியிருக்க முடியாது. கையாளுவதற்கு நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்களும் ஒவ்வொரு உரிமைகோருதலையும் வேத வாக்கியங்களுடன் ஒப்பிடுவதற்கு நூற்றுக்கணக்கான கல்வியாளர்களும் இருக்க, வஞ்சனையாளர் ஒருவர் தவறில் பிடிபடாதிருத்தல் என்பது சாத்தியமற்றதாக இருந்திருக்க வேண்டும்.

மற்றும், தீர்க்கதரிசனத்தின் பல விஷயங்கள் இயேசுவின் கட்டுப் பாட்டின்கீழ் இருந்ததில்லை: அவரது முன்னோர்கள் பற்றிய விவரங்கள், அவர் எங்கே பிறக்கவிருந்தார் என்ற விவரம், அவர் பச்சிளங் குழந்தையாக இருந்தபோது எகிப்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட விவரம் [போன்றவை]. இப்படிப்பட்ட முன்னுரைத்தல்களின் நிறைவேற்றமானது முயன்று செய்யப்படக்கூடாதவைகளாய் இருந்தது. இயேசு யாராயிருக்கின்றார் என்பதற்காக[வே] நாம் அவரை ஏற்றுக்கொண்டாக வேண்டும்!

## பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம்

மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் ஆதியாகமம் 3:15 மற்றும் 12:3ல் இருந்து தொடங்குகின்றன. காலங்களின் இருளினூடே மனிதர்கள் வகைப்படுத்திய இவ்விதமான வசனப்பகுதிகள், மனிதர்களை இரட்சகரின் வருகைக்கு எதிர்பார்த்துக் காத்திருக்கச் செய்தன.

நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் மேசியாவைப் பற்றி உரைத்தன, ஆனால் நமது கருத்தை ஏற்படுத்துவதற்குப் பின்வரும் உதாரணங்கள் போது மானவைகளாய் உள்ளன. கிறிஸ்து, தாம் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பாக எழுதப்பட்ட வேதவாக்கியங்களை நிறைவேற்றினார்.

**காலம்**

மேசியாவின் ராஜ்யம் எப்போது நிலைநாட்டப்படும் என்று, அதன் காலத்தைப் பழைய ஏற்பாடு குறிப்பிடுகிறது. தானியேல் 2:44 வசனமானது, ரோமாபுரிப் பேரரசு என்ற நான்காவது உலக ராஜ்யத்தைப் பற்றி "அந்த இராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார் ..." என்று குறிப்பிடுகிறது. லூக்கா 2:1, இயேசுவின் பிறப்பு பற்றிய விவரங்களுடன் தொடங்குகிறது, இது ரோமப்பேரரசரான அகுஸ்து இராயர் என்பவரால் கட்டளையிடப் பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பற்றிய குறிப்பினால், காலத்தைத் திட்டவட்டமாகச் சுட்டிக்காண்பிக்கிறது.

தானியேல் 9:25ம் வசனம், "... எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுத்துவதுமுதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும் ..." என்று உறுதியாகக் குறிப்பிடுகிறது. இவ்வசனப்பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ள வாரங்களைக் கணக்கிடுவதற்கான முயற்சிகள் கடினமான கேள்விகளை எழுப்பினாலும், பொதுவான கருத்து தெளிவாக உள்ளது: ஒரு பிரதானமான நிகழ்ச்சி வந்து கொண்டிருந்தது. இந்த நிகழ்ச்சியானது, "மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற் கும், தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும்" உரியதாக இருந்தது (தானி. 9:24). நீல் பிரையர் அவர்கள் கூறியபடி, "இந்த விஷயங்கள் மேசியாவினால் மட்டுமே கொண்டு வரப்படக் கூடியவைகளாயிருந்தன."[2]

மல்கியா 3:1ல் கர்த்தர் தமது ஆலயத்திற்குத் தீவிரமாய் வருவார் என்று தீர்க்கதரிசி சுட்டிக்காண்பித்தார். இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கிய போது ஏரோதினால் தேவாலயம் திரும்பக் கட்டுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

**கிறிஸ்துவின் வம்சவழி**

ஆதியாகமம் 22:18ல் தேவன் ஆபிரகாமுக்கு, "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று வாக்குத்தத்தம் செய்தார். ஆபிரகாமின் பேரனான யாக்கோபு (இஸ்ரவேல்) தமது மகன்களை ஆசீர்வதிக்கையில், "சமாதான கர்த்தர் [shiloh] வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவது இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதுமில்லை; ..." என்று தீர்க்கதரினம் உரைத்தார் (ஆதி. 49:10). எரேமியா 23:5, 6ல் நாம், "... தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து ..." என்று வாசிக்கின்றோம். மேசியாவின் வம்ச வழியானது, ஆபிரகாம், யூதா மற்றும் தாவீது ஆகியோரை உள்ளடக்க வேண்டியதாக இருந்தது. மத்தேயு 1ல் உள்ள வம்சாவழி அட்டவணையை ஆய்வு செய்துபாருங்கள்: வசனம் 2, 3 மற்றும் 6 ஆகியவை இயேசுவின் முன்னோர்களில் ஒரு பகுதியினராக ஆபிரகாம்,

யூதா மற்றும் தாவீது ஆகியோரைப் பட்டியலிடுகிறது. இயேசு ஆபிரகாமின் (கலா. 3:16), யூதாவின் (எபி. 7:14), மற்றும் தாவீதின் (2 தீமோ. 2:8) வழித்தோன்றலாக இருந்தார் என்பதை மற்ற வசனப்பகுதிகள் உறுதி செய்கின்றன.

**கிறிஸ்துவின் பிறப்பிடம்**

இந்த தீர்க்கதரிசனம் மீகா 5:2ல் தரப்பட்டிருந்தது: "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, ... இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது." யூதக் கல்வியாளர்கள் இந்த முன்னுரைத்தல் பற்றி அறிந்தவர்களாக, மேசியா எங்கு பிறப்பார் என்று ஏரோது கேட்டபோது அவருக்குப் பதில் அளிக்கக் கூடியவர்களாக இருந்தனர் (மத். 2:5, 6). இயேசு எங்கு பிறப்பார் என்று தீர்க்கதரிசி கூறியிருந்தாரோ அங்கேயே அவர் மிகச் சரியாகப் பிறந்தார் (லூக். 2:4-6).

**கிறிஸ்துவின் வாழ்வு**

மேசியாவின் வாழ்வு பற்றிய பல உண்மைகள் பழைய ஏற்பாட்டில் தரப்பட்டுள்ளன. இவைகள் இயேசுவின் வாழ்வில் நிறைவேற்றப்பட்டன. மேசியா "எகிப்திலிருந்து அழைக்கப்பட" வேண்டியவராக இருந்தார் (ஓசியா 11:1; மத். 2:13-15ஐக் காணவும்). அவர் எதிர்ப்பான சூழ்நிலையின் கீழ் வளருவார் (ஏசா. 53:2; மத். 2:19-23; யோவா. 1:46ஐக் காணவும்). அவரது ஊழியத்திற்கு முன் எலியாவைப் போன்ற ஒருவர் அவருக்கு வழியை ஆயத்தம் செய்வார் (ஏசா. 40:3; மல். 3:1; மத். 17:10-13; மாற். 1:2-4; லூக். 1:17 ஆகியவற்றைக் காணவும்). அவர் தமது ஊழியத்தில் மிகுந்த நன்மைகளைச் செய்வார் (ஏசா. 35:5, 6; மத். 11:2-5; லூக். 7:21, 22ஐக் காணவும்). இருந்தபோதிலும் அவர் வெறுக்கப்பட்டு, புறக்கணிக்கப் படுவார் (ஏசா. 53:3; யோவா. 1:11; 15:18, 24ஐக் காணவும்).

**கிறிஸ்துவின் கடைசி வாரம்**

ராஜா ஒருவர் கழுதையின்மீதேறி வருவதை சகரியா விவரித்தார், இது வெற்றிப் பிரவேசத்தின் விவரிப்பான முன்னுரைத்தலாக இருந்தது (சக. 9:9; மாற். 11:1-10). இந்தத் தீர்க்கதரிசி கர்த்தருடைய வீட்டில் குயவனுக்கு எறியப்படும் முப்பது வெள்ளிக்காசுகளைப் பற்றியும் உரைத்தார்; இது, யூதாஸ் கிறிஸ்துவைக் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சியின் தொடர்பாக நிறைவேறிற்று (சக. 11:12, 13; மத். 26:14, 27:5-7ஐக் காணவும்). இயேசுவை மரணத்திற்கு வழிநடத்திய நிகழ்ச்சிகளின் வேதனைமிக்க விவரங்களை ஏசாயா கொடுத்தார் (ஏசா. 50:6; 53:7; அப். 8:32-35ஐக் காணவும்).

**கிறிஸ்துவின் மரணம்**

மேசியா "அறுப்புண்டு போவார்" - இது ஒரு வன்முறையான மரணத்தை மறைவாய்க் குறிக்கிறது (ஏசா. 53:8; தானி. 9:26) - மற்றும் கைவிடப்படுவார் (சங். 22:1, 6-8, 16-18) என்று பழைய ஏற்பாடு கூறிற்று.

*அவர் ஈட்டியால் குத்தி ஊடுருவப்படுவார் (சங். 22:16; சக. 12:10), ஆனால் அவரது எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படாது (சங். 34:20). இவை யாவும் இன்னும் மற்ற தீர்க்கதரிசனங்களும், இயேசுவின் மரணத்தில் பிரமிக்கத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டன (யோவா. 19:23, 24, 34, 36, 37ஐ வாசிக்கவும்).*

**கிறிஸ்துவின் அடக்கம்**

*கிறிஸ்துவின் அடக்கம் பற்றிய சூழ்நிலைகளும்கூட அவரது பிறப்புக்கு முன்பாகவே முன்னுரைக்கப்பட்டிருந்தன. அவர் துன்மார்க்கரோடே மரிக்க வேண்டியிருந்தது, ஆனால் செல்வந்தரோடே அடக்கம் செய்யப் படுவார் (ஏசா. 53:9). இந்த விவரங்களும்கூட நிறைவேற்றப்பட்டிருந்தன. மத்தேயு 27:57-60ல் உள்ள விவரங்களை வாசிக்கவும்.*

## *முடிவுரை*

*இவைகளும் இன்னும் மற்ற தீர்க்கதரிசனங்களும், நமது விசுவாசத்தைப் பெலப்படுத்துவதற்குத் தகவல்களின் கருவூலத்தை அளிக்கின்றன. இயேசு தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்று நாம் உண்மையிலேயே விசுவாசிக்கின்றோமா? ஆம் என்றால் நாம் அந்த விசுவாசத்தின்படி செயலாற்றுவோமாக! (மத். 7:21; லூக். 6:46ஐ வாசிக்கவும்.)*

---

*குறிப்புகள்*

[1]*மற்ற மூன்று விஷயங்களாக தேவன், யோவான் மற்றும் அற்புதங்கள் ஆகியவற்றை இயேசு குறிப்பிட்டார்.* [2]Neale Pryor, "A Prayer & Its Answer," in "Daniel, 2," *Truth for Today* (June 2001): 51.

# கெத்செமனே தோட்டம்:
# ஒரு எடுத்துரைப்பு அணுகுமுறை

"எடுத்துரைப்புப் பிரசங்கம்" என்பது வரலாற்றை மாத்திரம் கூறுவதாயிருந்து, கவனிப்பவர்கள் ஏறக்குறையத் தங்கள் சொந்த நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த அனுமதிக்கிறது. வேதவாக்கியங்களின் சில பகுதிகள் எடுத்துரைப்பு அணுகுமுறையை நாடிக் கூவுகின்றன; தோட்டத்தில் இயேசு என்பது அப்படிப்பட்ட ஒரு பகுதியாக உள்ளது. கெத்செமனேயின் வரலாற்றுக்கு நீங்கள் இந்த அணுகுமுறையை முயற்சி செய்யத் தீர்மானித்தால், இந்த நிகழ்ச்சியைக் கையாளக்கூடிய வேதாகமப் பாடத்திலும் பிரசங்கத்திலும் நீங்கள் பயன்படுத்தக்கூடிய கருத்துக்களைக் காண்பீர்கள். பின்வருபவை கூடுதலாகச் சிந்தையைத் தூண்டுபவைகளை அளிக்கின்றன.

நீங்கள் மேல்வீட்டில் நடந்த காட்சிகளை மறுகண்ணோட்டமிடுவதன் மூலம் தொடங்கக்கூடும். இவைகள் கெத்செமனேயின் உணர்வுகளுக்குச் செயலூக்கம் அமைக்கின்றன.

இயேசுவும் சீஷர்களும் மேல்வீட்டை விட்டுப் புறப்பட்டு, எருசலேமின் குறுகிய தெருக்களின் வழியே நடந்து சென்றதைக் கற்பனை செய்து பாருங்கள்: "நகரம் உறங்கிக் கொண்டிருந்தது. எல்லாம் அமைதியாயிருந்தது, அதே வேளையில் களைப்படைந்த திருப்பயணியொருவர் தமது பாயின்மீது இளைப்பாறுபவரின் பெருமூச்சு இங்கு இருக்கிறது, அங்கு தமது இல்லம் செல்ல துரிதப்படும் அலைந்து திரிபவரின் விரைவான காலடிகள் அல்லது காலவன் தனது காவல் சுற்றுகளில் நடக்கும் அளவான மிதிவைப்புகள் இருந்தன."[1]

"கெத்செமனேக்குச் செல்லும் வழியில் அவர்கள் கெதரோன் ஆற்றைக் கடந்தனர், இப்போது அது குளிர்காலத்து மழையினால் பெருகியிருந்தது, மற்றும் பஸ்கா பண்டிகைக்குக் கொல்லப்படும் மிருகங்களின் இரத்தத்தினால் சிவப்பு நிறமாகியிருந்தது."[2] தேவாலயத்தில் தகனபலி செலுத்தும் பீடத்திலிருந்து கெதரோன் ஆற்றுக்குச் செல்லும் வாய்க்கால் ஒன்றிருந்தது, அந்த வாய்க்காலின் வழியாக, பஸ்கா ஆட்டுக்குட்டிகளின் இரத்தம் வெளியே வடிந்து ஓடும்படி செய்யப்பட்டது. இயேசு கெதரோன் ஆற்றைக் கடந்தபோது அது, பலிசெலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டிகளின் இரத்தத்தினால் இன்னமும் சிகப்பாக இருந்திருக்கும்; அவ்வாறு அவர் கடந்து சென்றபோது, அவரது சொந்த பலி பற்றிய விரிவான நினைவு அவரது சிந்தையில் ஏற்பட்டிருக்கும் என்பது உறுதி."[3]

அவர்கள் கெத்செமனே தோட்டத்தினுள் நுழைந்தபோது, "அங்கு ஒரு முழுநிலா இருந்தது, அந்தத் தோப்புமுழுவதும் மென்மையான ஒளியால் முழுக்காட்டப்பட்டிருந்தது." "அந்தப் பழைய, மரவண்ண அடிமரமும் சாம்பல் வண்ண இலைகளும், கரணைகளும் கொண்டிருந்த மரங்கள்."[4] "பழமையான மரங்களின் பசுமையான இலைகளை மெல்லிய தென்றல்

*தாலாட்டியது."[5] "அந்த மரங்கள் மே மாதத்திற்குப் பின்னர்தான் பூக்கும் என்றாலும், கடந்த வசந்தகாலத்து அறுவடையிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் கல் செக்கின்மீது ஒட்டியிருந்ததின் நறுமணம் இன்னமும் காற்றில் தவழ்ந்து கொண்டிருந்தது."[6]*

*இயேசுவின் இடத்தில் உங்களை வைத்து அவரது உள்ளான மனக் கலக்கத்தைக் கற்பனை செய்ய முயற்சித்துப் பாருங்கள். நீங்கள் தரையின் மீது கிடந்து, இறுகலான மண்மீது உங்கள் முகத்தை அழுத்தி (அந்தப் பகுதியின் மேல்மண்ணைத் தளர்த்தி), உங்கள் இருதயத்தைத் தேவனிடத் தில் ஊற்றுகின்றீர்கள். உங்கள் புலன்கள்/கருத்தறிவுகள் யாவற்றையும் பயன்படுத்துங்கள்: நீங்கள் என்னத்தைக் கேட்கின்றீர்கள்? நீங்கள் என்னத்தைக் காண்கின்றீர்கள்? நீங்கள் என்னத்தை உணர்ந்து நுகருகின்றீர் கள்? "அவரது மூக்கின் உச்சி இடைவெளியில் வியர்வை பெருகிற்று. அது அவரது கண்களுக்குள் திவலைகளாகச் சிதறி, எரிந்து இரத்தமாகக் கெட்டியாகித் தரையில் விழுந்தது."[7]*

*அடுத்ததாக, களைப்படைந்துபோன சீஷர்களின் இடத்தில் இருப்பதாக நினைத்துப் பாருங்கள். நீங்கள் தூக்கத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றீர்கள் - அதில் தோல்வியடைந்து கொண்டிருக்கின்றீர்கள். அவர்கள் இருந்த இடத்திற்குத் திரும்பி வந்த கிறிஸ்து, "அவர்களின் உடல்கள் மரத்தின் அடிப்பகுதியில் சாக்குமூட்டைகளைப் போன்று கிடந்தன. சுலபமான மூச்சானது மெதுவாய் வெளியிடப்பட்டதிலிருந்து, அந்த மூவரும் உறங்கிக் கொண்டிருந்ததை இயேசு அறிந்தார்."[8]*

*தூதன் தரிசனமானதற்குப் பின்பு கர்த்தர்மீது வந்திருந்த அமைதியைக் காட்சிப்படுத்திக் காணுங்கள். இது நடைபெற்றபோது அவரது முகநாடி எவ்வாறு மாறியிருக்கும்? இயேசு மூன்றாவது முறையாக சீஷர்களிடத்தில் திரும்பி வந்தபோது, வியர்வையால் கரைபடிந்திருந்த தமது உடைகளில் அவர் எவ்வாறு காணப்பட்டார்? குளிர்ந்த இரவுக் காற்றினால் அவர் நடுங்கிக் கொண்டிருந்தாரா? இப்போது அவரது குரல் எவ்வாறு தைரியத்தைச் சித்தரித்தது?*

*கடைசியில், தோட்டத்தில் நெறித்து வழிந்த கும்பலைக் காணுங்கள்: "தோப்பினூடே கும்பலுடையது போன்று ஒலித்த அமைதியாக்கப்பட்ட சத்தம் வருகிறது. இரவில் கரும் புகையினூடே சுருளான தலையாட்டம் போட்டுக்கொண்டு தீவட்டிகள் குதித்து வந்தன."[9] அவர்களைச் சந்திக்கக் கர்த்தர் தைரியமாய் முன்சென்றதைச் சித்தரித்துப் பாருங்கள். அவர் - உங்களுக்காகவும் எனக்காகவும் - மரிக்கத் தயாராயிருந்தார்.*

---

*குறிப்புகள்*

[1]A. M. Fairbairn, *Studies in the Life of Christ* (London: Hodder and Stoughton, 1889), 245. [2]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 199. [3]William Barclay, *The Gospel of John*, rev. ed., vol. 2, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 221. [4]S. D. Gordon, *Quiet Talks About Jesus* (New York:

Fleming H. Revell Co., 1910), 231. [5]Jamie Buckingham, *The Nazarene* (Ann Arbor, Mich.: Servant Publications, 1991), 187. [6]Ken Gire, *Moments with the Savior* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1998), 325. [7]Walter Wangerin, Jr., *The Book of God: The Bible as a Novel* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1996), 785. [8]Ibid., 786. [9]Gire, 331.

# இயேசுவின் கடைசி மணிவேளைகளின் பாதைகளாகக் கருத்துத் தெரிவிக்கப்படுபவை




**எருசலேம்**

## வரலாறு

கெதரோன் ஆறு

பாலங்கள்/வாயில்கள்

கெத்செமனே தோட்டத்தில் மரங்கள்,
ஒலிவ மலையின் அடிவாரத்தில்

நிலத்தின் உயர்ந்த பகுதி

நகரத்தின் மேடான இடத்திற்குப் படிகள்

இயேசுவின் நாட்களில் எருசலேமின் மதில்கள்

இன்றைய நாட்களில் பழைய எருசலேம்
நகரின் மதில்கள்

## இயேசுவின் பயணப் பாதைகள்:

...1... மேல் அறைக்கு
...2... கெத்செமனே தோட்டத்திற்கு
...3... அன்னா, காய்பா வீடுகளுக்கு
...4... சனதெரீன் சங்கத்திற்கு
...5... பிலாத்துவினிடத்திற்கு
...6... ஏரோதிடம், திரும்பவும் பிலாத்துவிடம்
கடைசியில் கொல்கொதாவுக்கு

## வரலாற்றுப் பின்னணி -

# பொந்தியு பிலாத்து

# [மற்றும் இயேசுவின் மரணம்]

கிரேட்டஸ் என்பவர் பற்றி நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டு இருக்கின்றீர்களா? மார்செல்லஸ் என்ற பெயர் உங்களுக்குப் பழக்க மானதாக இருக்கிறதா? "இவர்கள் இருவரும் யாரென்றே எனக்குத் தெரியாது!" என்று நீங்கள் கூறலாம். பிலாத்துவைப் பற்றிய விஷயம் என்ன? நிச்சயமாகவே நீங்கள் இவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கிரேட்டஸ் என்பவர் பிலாத்துக்கு முன்பாகவும் மார்செல்லஸ் என்பவர் பிலாத்துக்குப் பின்பாகவும் யூதேயாவின்மீது ரோம ஆளுநர்களாய் இருந்தனர் என்பது ஆர்வத்திற்குரியதாக உள்ளது - இவ்விருவருமே பிலாத்துவைக் காட்டிலும் மேன்மையான ஆளுநர்களாய் இருந்தனர். நாம் பிலாத்துவை நினைவில் வைத்திருப்பது ஏன்? ஏனென்றால் இவருக்கு முன்பாக ஒரு வெள்ளிக்கிழமையன்று இயேசு நின்றார்.

பிலாத்துவைப் பற்றி நாம் அறிகின்றவற்றில் பெரும்பான்மையானவை சுவிசேஷ விவரங்களில் இருந்தும், இவரது ஆளுநர்த்துவத்தைப் பற்றி ஃபிளேவியஸ் யோசிப்பஸ்[1] என்ற யூத வரலாற்றாளரால் எழுதப்பட்ட பதிவேட்டில் இருந்தும் வருகின்றன. இருப்பினும், இவரைப் பற்றிய வேத ரீதியான, வரலாற்று ரீதியான மற்றும் புதைபொருள் ஆராய்ச்சி ரீதியான மற்ற குறிப்புகளும் உள்ளன. இந்த ஆதாரமூலங்களில் இருந்தும், நமது கர்த்தரின் மரணத்தைக் குறிப்பிடுகிற மற்ற சில ஆதாரமூலங்களில் இருந்தும் இந்தத் துணைப்பாடத்திற்குக் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன.

## புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள்

பிலாத்துவைப் பற்றி, ரோமர்களால் இயேசு விசாரிக்கப்பட்ட நிகழ்ச்சி தொடர்பானவற்றில் உள்ள குறிப்புகள் தவிர (மத். 27; மாற். 15; லூக். 23; யோவா. 18; 19), புதிய ஏற்பாட்டில் இந்த ரோம ஆளுநர் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவான வசனப்பகுதிகளே உள்ளன. இவர், யோவான் ஸ்நானன் தமது ஊழியத்தைத் தொடங்கியபோது ஆளுநராயிருந்தார் (லூக். 3:1). "பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்திருந்தான்" என்பது பற்றிய அறிக்கையானது பரப்பப்பட்டிருந்தது (லூக். 13:1) - இது ஒருவேளை (இந்தப் பாடத்தில் பிற்பாடு விவரிக்கப் படவிருக்கும்) ஒரு கலகத்தை அடக்கும் முயற்சியாக இருந்திருக்கலாம். அப்போஸ்தலர்களுடைய பிரசங்கத்தில், பிலாத்து இயேசுவின் மரணத் திற்குத் திட்டமிடக்கூடியவர்களில் பிலாத்துவும் உள்ளடங்கியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டார் (அப். 4:28; 13:28; 3:13ஐக் காணவும்). இயேசு கிறிஸ்துவினால் "பொந்தியு பிலாத்துவின் முன்பாக" ஏற்படுத்தப்பட்ட "நல்ல அறிக்கையை"ப் பற்றி பவுல் எடுத்துரைத்தார் (1 தீமோ. 6:13).

J. G. வோஸ் அவர்கள், புதிய ஏற்பாட்டுப் பதிவு பற்றிப் பின்வரும் தொகுப்புரையைக் கொடுத்தார்: இது, "பிலாத்துவை வெறுப்பு மனப்பான்மையும் தேவநம்பிக்கையின்மையும் உடைய - கடினமான தலையைக் கொண்ட ரோமன், ஆனால் பாரம்பரியமாகக் கனப்படுத்தப் பட்ட ரோம ஒழுக்க நெறிகள், நீதி மற்றும் நேர்மை ஆகியவற்றில் குறைவுடையவன் என்று சித்தரிக்கிறது. பிலாத்து, நீதியைப் பரிபாலனம் செய்பவராயிருப்பதைக் காட்டிலும் உடன்பாடு மற்றும் நேரத்திற்கு ஏற்றாற்போல் நடந்து கொள்ளுதல் ஆகியவற்றில் அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தார்."[2]

## ஃபிளேவியஸ் யோசிப்பஸ்
## (கி.பி. 37-கி.பி. 93க்குப் பின்பு)

பிலாத்து ஆளுநர் பதவியில் இருந்தபோது நடைபெற்றதாக யோசிப்பஸ் என்பவர் எழுதிய மூன்று நிகழ்ச்சிகள், யூதர்களுடன் பிலாத்து வுக்கு இருந்த உறவின் நிலையற்ற தன்மையை வெளிச்சமாக்குகின்றன. (1) பிலாத்து ஒரு இராணுவ அணியை எருசலேமுக்கு அனுப்பியபோது, அந்தப் படையானது பேரரசரின் உருவங்களைக் கொண்டிருந்த கொடிகளைப் பயன்படுத்திற்று, இது யூதப்பிரமாணத்திற்கு, யூதேயாவில் இதற்கு முன்பு இருந்த ரோம நடைமுறைக்கும் நேரெதிரானதாக இருந்தது. யூதர்களுடன் ஏற்பட்ட ஒரு மோதலுக்குப் பின்பு, பிலாத்து அந்தச் சின்னங்களை அகற்றச் செய்தார்.[3] (2) பிலாத்து, எருசலேமுக்குள் தண்ணீர் கொண்டுவரும் வாய்க்கால் ஒன்றைக் கட்டுவதன்மூலம் யூதர்களின் வெறுப்புணர்வைச் சரிக்கட்டுவதற்கு முயற்சி செய்தார். இருப்பினும் அந்தத் திட்டத்திற்குத் தேவாலய நிதி பயன்படுத்தப்பட்டது என்று கண்டறியப் பட்டபோது, வன்முறை செயல்விளக்கப்படுத்தப்பட்டு, கலகக்காரர்கள் கொல்லப்பட்டனர்.[4] (இந்த நிகழ்ச்சி லூக். 13:1க்கான காட்சியமைவை அளிப்பதாகச் சிலர் நினைக்கின்றனர்.) (3) பிலாத்து தமது பதவியின் பத்தாம் மற்றும் கடைசி ஆண்டில், சமாரியாவில் ஆயுதபாணிகளாயிருந்த ஒரு கும்பலை அடக்குவதற்குப் படையைப் பயன்படுத்தினார். அந்தக் குழுவினர் கலகம் செய்யும் நோக்கம் கொண்டிருந்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லையென்றாலும், அவர்கள் மறைமுகமாய் தாக்கப்பட்டனர். அந்த மோதலில் பலர் இறந்துபோனார்கள், மற்றும் அந்தச் சண்டையில் உயிர் பிழைத்த கலகக்காரர்களில் பலருக்கு மரணதண்டனை நிறைவேற்றப் பட்டது. சமாரிய அலுவலர்கள், பிலாத்துவிற்கு அடுத்த மேல்பதவியில் இருந்த சீரியாவின் ஆளுநரிடத்தில் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர் பிலாத்துவைப் பதவியினின்று நீக்கி, ஒரு விசாரணையில் ஆஜராகும்படி ரோமாபுரிக்குத் திருப்பி அனுப்பினார்.[5]

நமது தற்போதைய படிப்பைப் பொறுத்தமட்டில் ஒருவேளை, மாபெரும் ஆர்வமானது, யோசிப்பஸ் என்பவரின் *Testimonium Flavianum* (இயேசுவைப் பற்றிய அவரது "சாட்சியம்") என்பதைப் பற்றியதாக இருக்கலாம். இந்த வரலாற்றாளரின் வார்த்தைகள் பிற்பாடு கிறிஸ்தவர்

களால் அலங்கரிக்கப்பட்டன என்று பலர் நினைக்கின்றனர், ஆனால் கூற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியானது யோசிப்பஸ் என்பவரால் எழுதப்பட்டது என்பதைப் பெரும்பாலானவர்கள் ஒப்புக்கொள்ளு கின்றனர் - இதில் பின்வரும் வாக்கியமும் உள்ளடங்குகிறது: "... எங்கள் மத்தியில் இருந்த முதன்மையான மனிதர்களின் ஆலோசனையின்பேரில், பிலாத்து அவருக்குச் சிலுவை மரணத்தைத் தீர்ப்பிட்டபோது, முதலில் அவரை நேசித்தவர்கள் அவரைக் கைவிடாதிருந்தனர்."[6]

## பைலோ (சி. கி.மு. 20-சி. கி.பி. 50)

யூதத் தத்துவ ஞானியான, அலெக்சாந்திரியாவின் பைலோ என்பவர், பிலாத்துவை எல்லா வகையான குற்றமும் செய்ததாகக் குற்றப்படுத்தினார். இறையியலாளர்கள் உயர்வுநவிற்சியில் கூறியதாகப் பெரும்பாலான கல்வியாளர்கள் நம்புகின்றனர், ஆனால் ஆளுநரைப் பற்றிய இவரது வார்த்தைச் சித்தரிப்பானது பல அம்சங்களில் வேதாகம ரீதியான மற்றும் வரலாற்று ரீதியான பதிவுகளுக்கு ஒத்ததாக உள்ளது. பைலோ என்பவர், பிலாத்துவின் "மோசடிகள், அவரது அகம்பாவமான செயல்கள், அவரது அபகரித்தல் [சொத்துக்களை பலவந்தமாகக் கைப்பற்றுதல்], மக்களை அவமானப்படுத்தும் அவரது பழக்கம், அவரது கொடுமையான குணம், மற்றும் விசாரணையின்றி தண்டனைத் தீர்ப்பின்றி மக்களை அவர் தொடர்ந்து கொன்று குவித்தது, மற்றும் ஒருபோதும் முடிவடையாதிருந்த கொடையாக எடுத்துக்கொள்ளும் அவரது மிகுந்த பொருளாசையுள்ள மனிதத்துவமற்ற தன்மை" ஆகியவை பற்றி எழுதினார்.[7]

பிலாத்து யூதர்களுடன் கொண்டிருந்த நிலையற்ற உறவு பற்றிய ஒரு நிகழ்ச்சியைப் பைலோ பதிவு செய்தார். ஆளுநர், பேரரசருக்கு வெளித் தெரியும் வகையில் அர்ப்பணித்தலைச் சித்தரித்த கேடகங்களை எருசலேமில் தாம் தங்கியிருந்த இடத்தின் சுவர்களில் தொங்க விட்டிருந் தார். இதனால் கோபமடைந்த யூதர்கள் திபேரியு இராயனுக்கு ஒரு மறுப்பை அனுப்பினர். அந்தக் கேடகங்களை செசரியாவில் இருந்த அகுஸ்துவின் கோவிலுக்கு மாற்றும்படி திபேரியு கட்டளையிட்டார்.[8]

## நானாவித வரலாற்றுக் குறிப்புகள்

யூதத்துவ பாபிலோனிய தல்மூத் என்ற புத்தகம் இயேசு "பஸ்கா அன்று மாலை தொங்க விடப்பட்டார்"[9] என்று குறிப்பிடுகிறது மற்றும் (எதிர் பார்க்கப்படுகிறபடியாகவே) அவரைத் தீர்ப்பிட்டது பற்றி யூதத் தலைவர் கள் நியாயப்படுத்தினர் என்பதை வலியுறுத்துகிறது.

கி.பி. 115 மற்றும் 117 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் எழுதிய, இலத்தீன் வரலாற்றாளரான டேசிட்டஸ் என்பவர் கிறிஸ்தவர்களைப் பற்றிப் பின்வரும் குறிப்பை எழுதினார்: "அவர்கள் இந்தப் பெயரைக் கிறிஸ்து விடமிருந்து பெற்றனர், அந்தக் கிறிஸ்து என்பவர் திபேரியுவின் ஆளுகையில் பொந்தியு பிலாத்து என்ற தேசாதிபதியினால் மரண தண்டனை விதிக்கப்பட்டார்."[10]

மாரா பார் செராப்பியன் என்பவர் தமது மகனுக்கு சீரியாவின் மொழியில் எழுதிய கடிதம் ஒன்று இயேசுவைப் பின்வரும் வார்த்தைகளினால் குறிப்பிட்டது: "இந்த யூதர்கள் தங்களின் ஞானமுள்ள அரசரை மரண தண்டனைக்கு உட்படுத்தியதால் ஆதாயமடைந்த அனுகூலம் என்ன? அதற்குப் பின்பு உடனே அவர்களின் ராஜ்யம் ஒழிக்கப்பட்டது ... அந்த ஞானமுள்ள அரசரும் மரித்தவராகவே இருந்து விடவில்லை; அவர் தாம் கொடுத்திருந்த போதனையில் வாழ்ந்தார்."[11] இந்த ஆதாரமூலத்தின் தேதி நிச்சயமற்றதாக உள்ளது, ஆனால் இது கி.பி. 73ம் ஆண்டு வாக்கிலேயே எழுதப்பட்டிருக்கலாம்.

1961ல் பிலாத்துவைப் பற்றிய முதல் புதைபொருள் ஆதாரம் கண்டறியப்பட்டது. செசரியாவில் இருந்த ரோம அரங்கம் ஒன்றில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒரு கல்லைக் கண்டுபிடித்தனர், அதில் "பொந்தியு பிலாத்து, யூதேயாவின் தேசாதிபதி" என்று செதுக்கப்பட்டிருந்தது.[12]

## ஏவுதல் பெற்றிராத கிறிஸ்தவ எழுத்தாளர்கள்

ஓரிகன் அவர்கள் உட்பட, ஏவுதல் பெற்றிராத, தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் பலர் பிலாத்துவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். ஜஸ்டின் மார்ட்டியர் மற்றும் தெர்த்துல்லியன் ஆகியோர், இயேசுவை விசாரணை செய்தது பற்றிய ரோம நீதிமன்றத்தின் அலுவலகப் பதிவேட்டைக் குறிப்பிட்டுள்ளனர்,[13] ஆனால் அவர்கள் இந்தப் பதிவேட்டை உண்மையிலேயே கண்டிருந்தார்களா இல்லையா என்பது தெளிவற்றதாக உள்ளது.[14]

நம்மில் பலருக்கு, பிலாத்துவின் கடைசி நாட்கள் மாபெரும் தனிப்பட்ட ஆர்வத்திற்குரியதாக உள்ளன. இந்த ஆளுநர் (இந்தப் படிப்பில் முன்னதாக, "ஃபிளேவியஸ் யோசிப்பஸ்" என்ற உட்தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டபடி) ரோமாபுரிக்குத் திரும்ப வரும்படி அழைப்பிக்கப்பட்டபோது, இவர் டேசிட்டஸ்ஸின் மரணத்திற்குப் பின்பு அங்கு சென்று சேர்ந்தார். அடுத்து என்ன நடந்தது என்பதற்கு வரலாற்றுப்பூர்வமான ஆதாரம் எதுவும் நமக்கில்லை, ஆனால் இவர் தம்மீதான விசாரணை முடிந்த பின்பு, தற்கொலை செய்துகொண்டார் என்ற மிகப்பரவலாகப் பேசப்பட்ட பாரம்பரிய வரலாற்றை ஈசுபியஸ் பதிவு செய்துள்ளார்.[15] பிந்திய பாரம்பரியங்கள், இவர் காயுவின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 37-41), தாம் நாடு கடத்தப்பட்டிருந்த இடமான காவ்ல் (இப்போது பிரான்ஸ்) என்ற நாட்டில் வியன்னா அல்லொப்ரொகம் என்ற இடத்தில், தற்கொலை செய்துகொண்டார் என்று கூறின. இந்த ஆளுநரின் மரணத்தை தெய்வீக நீதி என்று ஈசுபியஸ் குறிப்பிட்டார்.[16]

*குறிப்புகள்*

[1]Josephus *Antiquities of the Jews* 18.2.2; 18.3.1-2; *Wars of the Jews* 2.9.2-4. [2]J. G. Vos, "Pilate, Pontius," *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* gen. ed, Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 4:792. [3]*Antiquities of the Jews* 18.3.1; *Wars of the Jews* 2.9.2, 3. [4]*Wars of the Jews* 2.9.4. [5]*Antiquities of the Jews* 18.4.1, 2. [6]*Antiquities of the Jews* 18.3.3. [7]Philo *Legatio ad Galium* 38. [8]Philo *De legatione ad Galium* 299-305. [9]*Mishnah*, Sanhedrin 43a, quoted in Bruce Corley, "Trial of Jesus," *Dictionary of Jesus and the Gospels,* eds. Joel B. Green and Scot McKnight (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 842. [10]Tacitus *Annals* 15.44.

[11]Quoted in Corley, 842. [12]John McRay, *Archaeology and the New Testament* (Grand Rapids, Mich.: Baker Book House, 1991), 203-4. [13]Justin Martyr *Apology* 1.35; 1.48; Tertullian *Apology* 5.2; 21.24. [14]*பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, அறியப்படாத எழுத்தாளர் ஒருவரால் "பிலாத்துவின் நடபடிகள்" என்று உரிமைகோரக் கூடிய ஏவுதல் பெற்றிராத, வசீகரத்தன்மையுள்ள/மனதை ஈர்க்கும் பதிவேடு ஒன்று எழுதப்பட்டது.* [15]Eusebius *Ecclesiastical History* 2.7. [16]Ibid.